ஓம்


ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

திருவாய் மலர்ந்தருளிய

உபதேச ரத்நங்கள்

ஸ்ரீ சுப்ரமண்ய சிவம்

மொழிபெயர்த்தது.




மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை

87, தம்புசெட்டி வீதி, சென்னை.

1925

விலை ரூபா 2

[All Rights Reserved]



ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

முன்னுரை

நெடுங்கடல் சூழ்ந்த இந் நிலவுலகில் தோன்றிய மானிடர்கள் அடையவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கனுள், வீடே (முத்தியே) சிறந்ததாகும். வீடு என்பது உலகப் பற்றினை யொழித்து, நித்தியப் பொருளாகிய ஏக வஸ்துவோடு ஐக்கிய மாதலாம். மனிதன் எத்தனை ஜன்மங்களை எடுத்தாலும், முத்திப்பேற்றினை யடைந்தால் மரத்திரந்தான் அவனுடைய ஆத்மா கடைத்தேறும். அப் பேரின்ப வாழ்வை அடையாதவன், திரிலோகாதிபதியா யிருந்தாலும், கோடீசுவரனு யிருந்தாலும், முடிமன்னனு யிருந்தாலும், அஷ்டமா சித்திகளைச் செய்யக்கூடிய மஹாசித்தனு யிருந்தாலும் சிறப்படையமாட்டான். அவனுக்குத் துக்க நிவர்த்தியும், பிரம்மானந்தப் பிராப்தியு முண்டாகமாட்டா. இங்ஙனம் முத்தியானது மானிடர்க் கின்றியமையாத ஓர் சிறந்த பொருளா யிருந்தும், பெரும்பான்மையும் உலக மாந்தர்கள் அதனை யடைய முயற்சிப்பதில்லை. அவர்கள், 'தேகமே நித்தியமானது; போகமே பேரின்பம்!' என்னும் எண்ணமுடையவர்களாய், இவ்வுற்றைச் சரீரத்தைச் சுமந்து, விட்டிற் பூச்சி விளக்கினிடத்திலே வீழ்ந்து மடிவதுபோல, உலக போகங்களிலே மயங்கி வீழ்ந்து பல ஜன்மங்களெடுத்து, ஜனன மரண மென்னுஞ் சக்கரத்திற் சிக்குண்டு சுழன்று சுழன்று துயருறுகின்றனர். எத்தனையோ கோடி ஜன்மங்களாக இவர்களிடம் படிந்து விருத்தியடைந்துவந்த இந்த மனோவாசனையானது இவர்களை மேன்மேலும் அதன் போக்கிலேயே இழுத்துச் செல்கின்றது. அந்தப் போக்கினின்றும் திரும்பி மனதை வென்று, உண்

மைப் பொருளை உணர்ந்துகொள்வதற்கு இவர்களிடம் சக்தி யில்லை.

இவர்கள் உண்மை ஞானத்தை உணர்ந்துய்ய வேண்டு மானால், பெரியோர்களாற் செய்யப்பட்டிருக்கும் ஞான நூல்களையும், யோக நூல்களையும் நன்கு ஆராய்ந்து, பக்தியோகம், ஞானயோகம் முதலியவற்றை அனுஷ் டித்து, ஆத்ம விசாரணை செய்து, ஏகவஸ்து இன்னதென்ப தை அறிய முயற்சி செய்யவேண்டும். அங்ஙனம் முயற்சி செய்து மனித வடிவத்தில் ஒவ்வொரு அங்கத்தையும் நீக்கிப்பார்க்கும்போது, முடிவில் ஏதோ ஒன்று இருக்கின்ற தென்பதும், அதுவே ஏக வஸ்து வென்பதும் விளங்கும். அந்த வஸ்துவை அனுபவத்தில் அறிந்தவுடன், இந்த மனிதர்கள் எண்ணிறந்த துன்பங்களினின்றும் நீங்கி, ஏக வஸ்துவோடு ஐக்கியமாகி நித்தியானந்த சுகத்தை அடை வார்கள். எனினும், இக்காலத்தில் அத்தகைய இவ் வுண் மைமார்க்கத்தையுணர்ந்து, பேரின்பத்தை அடைபவர்களைக் காண்பது மிக அரிதாயிருக்கின்றது. வேதாந்த நூல்களை யும், உபநிஷத்துக்களையும் நன்றாகப் படித்துணர்ந்து, வே தாந்தப் பிரசங்கங்கள் புரிந்து பிறரைப் பிரமிக்கும்படி செய்யத்தக்க அநேகம் பண்டிதர்கள் இருப்பார்கள். ஆனால், அவர்கள் உண்மைப்பொருளை உணர்ந்த ஞானிகளாகமாட் டார்கள்; வெறும்புத்தகப்பூச்சிகளேயாவார்கள். மனதைஒரு நிலைப்படுத்தி, ஆத்ம வஸ்துவினிடத்திலே ஒன்றச்செய்து, பிரஹ்மநிஷ்டானுபூதி யடைந்து, நித்தியானந்த சுகஸ்வ ரூப மூடையவராய், எவ்வித அவஸ்தையிலும் ஒரே படித் தானவராய், திடஞான முள்ளவரா யிருக்கின்றவர்களே உண்மை ஞானிகளாவார்கள்; இவர்கள் மிக அருமையாகத் தோன்றுவார்கள். இத்தகைய ஞானிகள் இருக்குமிடத்

தைச் சுற்றி ஒரு யோசனை தூரத்திலுள்ள ஜீவராசிகள் எல்லாம் உயர்ந்த பதவியடைந்துவிடு மென்பது வேத சம்மதம். இத்தகைய பிரஹ்மஞானிகளிலே, சுமார் 38 வருஷங்களுக்குமுன் சமாதி கூடிய ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் என்னும் மஹாத்மாவும் ஒருவர்; இவரை ஓர் அவதார புருஷ ரென்றே சொல்லவேண்டும்.

இவர், 1834வது பிப்ரவரிமீ 20வது புதவாரத்தன்று வங்காளநாட்டின் ஹூக்ளி ஜில்லாவைச் சேர்ந்த காமார்புகுர் (கர்மகார புஷ்கரம்) என்னும் கிராமத்தில், க்ஷுதிராம் சட்டோபாத்தியாயர் என்னும் வங்கால பிராஹ்மணருக்கும், அவருடைய பத்தினியாகிய, சந்திர மணி தேவிக்கும், ஸ்ரீவிஷ்ணு மூர்த்தியின் வரப்பிரசாதத்தால் அவதரித்தவர்; இவருக்கு ஸம்ஸ்கிருத விற்பத்தி அதிக மில்லை எனினும், இவர் மஹா புத்திமான்; ஒரு விஷயத்தை ஒரு முறை சொன்னமாத்திரத்தில் கவனப்படுத்திக்கொள்ளும் ஏக சந்தக்ராஹி; சிறு பருவத்திலேயே சாதுக்களுடன் பழகி இந்து மத இரகசியங்களைத் தெரிந்துகொண்டவர்; இவருக்குப் பதினாறு வயதானபோது, இவருடைய தந்தையார் இவருக்கு உபநயனஞ் செய்வித்துக் கல்வி கற்பிக்குமாறு இவரைப் பள்ளிக்கூடத்துக் கனுப்பினர். அந்தப் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொடுத்த சாதாரணப் படிப்பு இவருக்குப் பிடிக்கவில்லை. அதனால், இவர் சிறிது காலத்துக்குள் அப் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறி, கல்கத்தாவுக்குச் சமீபத்திலிருக்கும் தக்ஷிணேசுவரம் என்னும் ஸ்தலத்திலுள்ள காளி கோவிலுக்கு அர்ச்சகராக அமர்ந்து, சாக்ஷாத் ஸ்ரீ தேவியை ஆராதித்துப் பாடியும் ஆடியும் பஜனை செய்து, பார்த்தோர் பிரமிக்கும்படி தெய்வபக்தியி லீடுபட்டிருந்தார். இவருடைய பந்துக்களில் சிலர், இவருடைய

செய்கைகளைப் பார்த்துவிட்டு, 'ஓகோ! இவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது!' என்று தப்பாகக் கருதினர்கள். அப்போது, பெரிய வைத்திய மொருவர் இவருடைய உண்மை நிலையை உணர்ந்து, 'இவர் தெய்வ பக்தியிலீடுபட்டிருக்கின்றார்; இவர் சிறந்த யோகியுமாவர்; இவருக்குப் பிடித்திருப்பது ஞானப் பைத்தியம்; அதை மாற்றுவதற்கு மருந்தில்லை!' என்று கூறினர். அதன்மேல், மேற் கூறியபடி தப் பபிப்பிராயங்கொண்ட பந்துக்களெல்லாம் இவருடைய ஞான நிலையை உணர்ந்துகொண்டு, இவரிடத்தில் மிக்க மரியாதை யுடையவர்களா யிருக்கத் தலைப்பட்டார்கள். இவர் மேற் கூறியபடி பக்தி மார்க்கத்திலிருந்து வரவர, இவரிடத்தில் ஞானம் அதிகரித்தது. அவ்வாறு ஞானமார்க்கம் தோன்றவே, இவர் அந்தக் காளி கோவிலின் அர்ச்சக வேலையைவிட்டுப் பன்னிரண்டு வருஷங்கள்வரையில் யோகாப்பியாசம் செய்துவந்தார். அப்போது இவருக்கு ஸ்ரீ விவேகாநந்தர் முதலிய அநேகம் சிஷ்யர்கள் ஏற்பட்டார்கள். அவர்களுக்கு இவர்செய்த ஞானோபதேசங்களும், காட்டிய அற்புதங்களும் பலவுள. ஒரு சமயம் இவர் யோகாப்பியாசத்திலிருந்தபோது, இவருடைய சிஷ்யர்களில் ஒருவர் ஆயிரத்தைந்நூறு ரூபா விலை மதிப்புள்ள ஒரு போர்வையை இவர்மீது போர்த்தினர். இவர் அதைப் பார்த்து, "ஆ! இதனால் எனக்குப் பிரஹ்ம ஞானம் உதயமாகுமா? கந்தைக்கும் இதற்கும் வித்தியாசமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லையே!" என்று அதை உடனே எடுத்தெறிந்துவிட்டார். மற்றொரு சமயத்தில், தோதாபுரி என்னும் சன்னியாசி ஒருவர் இவரைப் பார்க்க அங்கே வந்திருந்தார். அவர், தமக்கு முன்னே எப்போதும் நெருப்பை வளர்த்துக்கொண்டிருப்பது வழக்கம். அச் சமயத்தில், ஒரு மனிதன் அந் நெருப்பில் தன்

னுடைய ஹுக்காவைக் கொளுத்தினன்; அதைப் பார்த்துத் தோதாபுரி கோபங்கொண்டார். உடனே ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரைப் பார்த்து, 'ஐயா! ஹுக்காவை அக்கினியிற் கொளுத்தினவனும் ஒரு பிரஹ்மந்தானே; அவனுக்கும் அக்கினிக்கும் பேதமில்லையே; அப்படியிருக்க நீர் ஏன் அவன்மீது கோபங் கொள்ளுகிறீர்?'' என்று கேட்டார். இந்தக் கேள்வியால் தோதாபுரிக்கு நல்ல ஞானம் உண்டாயிற்று; அதனால், அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணர் முன்னிலையில், ''இன்று முதல் என் கோபத்தை விட்டுவிட்டேன்!'' என்று கூறினர். இன்னும் இவருடைய ஆத்ம ஞானத்தைப்பற்றிய கதைகளும், அற்புதச் செயல்களும் எத்தனையோ இருக்கின்றன. இதற்குமுன் நம்முடைய ஆபீசில் வெளியாகியிருக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச விஜயம், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் விரிவான சரித்திரம் முதலிய நூல்களில் அவற்றையெல்லாம் விளக்கமாகப் படித்துணரலாம். நிற்க, இவர் மற்ற மகான்களைக் காட்டிலும் உலகத்தவரால் கொண்டாடத்தக்க சிறப்பு வாய்ந்தவர். ஏனெனில், இவரிடத்தில் மற்றவர்களிட மிருந்ததைக் காட்டிலும் அதி விசேஷமான அருமை வாய்ந்த சில குணங்களிருந்தன. இவர், மற்ற மகான்களைப்போல் தாம் அனுபவத்திற் கண்ட பிரஹ்மானந்தத்தைத் தாம் மாத்திரம் அனுபவித்துக்கொண்டிருந்துவிடவில்லை. அதை எல்லோரும் உணர்ந்துய்யும்படி வெளியிட்டிருக்கிறார்; உலகத்தவர்கள் ஆத்ம ஞானத்தை அடைவதற்கேற்ற எண்ணிறந்த உபதேசங்களைச் செய்திருக்கிறார். இவ்வாறு பற்பல உபதேசங்களை வெளியிட்டும், அற்புதங்களைக் காட்டியும், தாம் கண்ட பிரஹ்மானந்தத்தைப் பலர்க்குப் பங்கிட்டுக் கொடுத்தும் யோக நிஷ்டையிலிருந்து, கடைசியாக 1886ஆவது ஆகஸ்டுமீ 16உ ஆதிவாரம் சித்தியடைந்தார்.

இவருடைய திருவாக்கினின்றும் வெளியான உபதேசங்கள் யாவும் சகல மதத்தினராலும் ஒப்புக்கொள்ளக் கூடியவை. ஈசுவரன், பக்தி, அவதார தத்துவம், ஞான மார்க்கம், யோக மார்க்கம், முத்திநெறி முதலிய விஷயங்களே எவரும் எளிதில் விளங்கத்தக்க உபமானங்களாலும், திருஷ்டாந்தக் கதைகளாலும் நன்குணர்த்தக் கூடியவை; வேதங்களுக்கும், உபநிஷத்துக்களுக்கும், இன்னும் உலகத்திலுள்ள சர்வ மத சித்தாந்தங்களுக்கும் வியாக்கியான ரூபமா யமைந்து, அவற்றின் கருத்தை மிகத் தெளிவாய் விளக்கிக் காட்டக்கூடியவை; உலகத்தில் பல வேறு வகைப்பட்ட மதத்தின ரிடத்துள்ள மத பேதங்களையும், வீண்தர்க்க சண்டை சச்சரவுகளையு மொழித்து, சகல மதங்களுக்கும் பொதுவான முக்கியாம்சம் இன்னதென்பதை எவர்க்கும் எடுத்துக் காட்டக்கூடியவை; கல்வி யறிவில்லாதவர்க்கும் ஆத்மஞானத்தை எளிதில் போதிக்கக்கூடியவை; நம் மஹான்கள் வெளிப்படுத்தியிருக்கும் சில ஞான யோக சாஸ்திரங்கள், சிறிய விஷயங்களையும் பல சுற்றுக்களாக விளங்காதபடி சொல்லி மனிதர் மனதை மயங்கவைப்பதுபோல், இவருடைய வாக்கியங்களில் மயங்கவைக்கும் இயற்கை இராது; அவ் வாக்கியங்கள் மிகச் சுலபமான நடையில் அமைந்தவை; பெரியவிஷயங்களையும் இலகுவான உதாரணங்களால் எவர்க்கும் எளிதில் உணர்த்தக்கூடியவை. அவற்றின் கருத்தை உணர்ந்துகொள்வதற்குத் தக்க சாஸ்திரங்களின் ஆராய்ச்சி வேண்டியதில்லை; கூரிய புத்தி வேண்டியதில்லை; சிறந்த ஆசிரியர் வேண்டியதில்லை. அவைகளெல்லாம் கற்றார்க்கும், கல்லார்க்கும், பெரியார்க்கும் சிறியார்க்கும், நல்லார்க்கும் பொல்லார்க்கும் உண்மைப் பொருளை உணர்த்தி, அவர்களை உய்விக்கத்தக்க சிறப்பு வாய்ந்தவை. "இக்காலத்தில் எவர்க்கும் எளி

தில் ஞான மார்க்கத்தை உணர்த்துவதில் இவற்றிற் கிணை யானது வேறெதுவு மில்லை!'' என்றே சொல்லலாம். இப் படி இந்த ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் அற்புதச் செய்கைகளும், சரித்திரங்களும், உபதேசங்களும் சகல மதத்தினரும் கொண்டாடக் கூடியவைகளா யிருப்பதனாலே, அவை ஆதியில் வெளிப்பட்டிருந்த வங்காளி பாஷையிலிருந்து இங்கிலீஷ், ஜர்மன், பிரஞ்சு முதலிய அன்னிய பாஷைகளிலும், இந்தியாவிலுள்ள எல்லாச் சுதேச பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுப் பலராலும் படிக்கப்பட்டும், கொண்டாடப்பட்டும் வருகின்றன. முற்கூறியபடி, நாமும் தமிழில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயம், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் வீரிவான சரித்திரம் முதலிய சில நூல்களை வெளிப்படுத்தி யிருக்கின்றோம். அவற்றோடு, சகலருக்கும் மோக்ஷ மார்க்கத்தை எளிதில் உணர்த்தத்தக்க அவருடைய உபதேசங்களையும் தெளிவான தமிழ் நடையில் வெளிப்படுத்தினால் உலகத்தார்க்கு மிக்க உதவியாயிருக்குமென்னும் ஓர் எண்ணம் எமக்குண்டாயிற்று.

அவ் விருப்பத்தைப் பூர்த்தி செய்துவைக்குமாறு சில வருஷங்களுக்கு முன் ஸ்ரீ சுப்பரமணிய சிவம் அவர்களிடத்தில் கெரிவித்தோம். அவர்கள் அவற்றை அன்னிய பாஷையிலிருந்து தமிழில் மொழி பெயர்த்துக் கொடுத்தார்கள். பின்னர், அவற்றின் கருத்துக்கள் மாறுபடாமல். அவற்றை இலக்கண வழுவின்றி எளிய நடையில் எவர்க்கும் தெளிவாக விளங்குமாறு எழுதி, ஒவ்வொரு விஷயத்திற்கும் தலைப்பெயர் அமைத்துத் தருமாறு, பற்பல உயர்ந்த தமிழ் நூல்களுக்கு ஆசிரியராகிய மதுரை ஜில்லா செம்பூர் வித்வான் ஸ்ரீமத். வீ. ஆறுமுகஞ் சேர்வையார்

அவர்களை நாம் கேட்டுக்கொள்ள, இப்பொழுது அவர்களும் அவ்வாறே அவற்றை இயற்றி உதவினார்கள். அதன் மேல், நாம் அவ் வுபதேசங்களெல்லாம் அடங்கிய இந்நூலுக்கு "ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் உபதேச ரத்தினங்கள்" எனப் பெயரிட்டு, இதனை அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கின்றோம்.

இந் நூல் உயர்ந்த பல ஞானமார்க்கங்களையும், பிற நீதிகளையும் எவர்க்கும் எளிதில் உபதேசிக்கக் கூடியதாயிருப்பதனாலும், தெளிவான தமிழ் நடையுடனும், பற்பல விளக்கங்களுடனும் அமைந்திருப்பதனாலும், இதனைப் படிப்பார்க்குச் சிறந்த ஞான மூண்டாகும்; முத்தி மார்க்கம் எளிதிற் கைகூடும்; இன்னும், இது நீதிகளை யுணராதவர்க்குச் சன்மார்க்கங்களை யுணர்த்தும்; விவேக மில்லாதார்க்கு விவேகத்தைக் கொடுக்கும்; தெய்வ தத்துவம் இன்னதென்பதை எட்டினையும் உணராமல், உணர்ந்த ஞானிகளிடம் வீண் தர்க்கமிட்டு மதச் சண்டை போட்டு நரகவாதனைக் காளாகித் திரியும் மூடருக்கு அந்த அஞ்ஞானத்தை ஒழித்து ஏக தெய்வக் கொள்கையையும், அதன் தத்துவங்களையும் உள்ளபடி உணர்த்திவிடும். ஒரு தெய்வமே அவரவர்க்குப் பல தெய்வ வடிவங்களாக விளங்குகின்ற தென்னும் தன்மையைச் சகல மதத்தினரும் ஒப்புக்கொள்ளும்படி போதிக்கும்; இல்லற, துறவற தர்மங்களையும் எளிதில் உணர்த்தும். இன்னும் இதனால் உண்டாகும் பயன்கள் பலவுள; ஆதலின், இந்நூலை மதபேதமின்றி நம் தமிழ் நாட்டிலுள்ள அனைவரும் வாங்கி வாசித்து இகபர சுகங்களை அடையுமாறு எல்லோரையும் நாம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் பிரதம சிஷ்யராகிய

ஸ்ரீ விவேகானந்த ஸ்வாமிகள்

விரிவான சரித்திரம்.

[27 அத்தியாயம் 520 பக்கம்: உயர்ந்த இலிட்டு பயிண்டு]

தூதனமான உருவப் பட்டத்துடன்: விலை ரூபா 2

இச் சரித்திரத்தில் ஸ்வாமிகளைப் பற்றி இதுவரையில் தமிழில் வெளிவராத அநேக அற்புத சம்பவங்கள் எடுத்துக் காட்டப் பட்டுள்ளன. இதிலடங்கிய முக்கிய விஷயங்களாவன:— (1) ஸ்ரீ விவேகானந்தருக்குத் துறவற வாசனை இரத்தத்திலேயே ஊறிக் கிடந்த தென்பதற்கு இவர் முன்னோர்களின் குணங்களே சாக்ஷியாயிருத்தல், இவர் பாட்டனார் துர்க்காசரண தத்தர் மிகுந்த செல்வமிருந்தும் தமது 25-வது வயதில் மனைவி மைந்தனை விட்டுத் துறவு பூணல் (2) இவர் தகப்பனார் விசுவநாத தத்தர் மஹா கல்விமான், துறவிகளிடத்தும் சாதுக்களிடத்தும் அத்தியந்த பிரியமுடையவர், தாயார் புவனேசுவரி இராமாயண பாரதங்களைப் பாராமல் ஒப்புவிக்கும் சக்திவாய்ந்த உத்தமி, அவ் வுத்தமி ஆண் மகவு வேண்டி ஸ்ரீ காசி விசுவநாதரைப் பூஜித்தல், பகவான் சொப்பனம் சாதித்தல் (3) நரேந்திரர் (ஸ்ரீ விவேகானந்தர்) ஜனனம், குழந்தையின் முக லக்ஷணமும், அற்புத குணங்களும் (4) இளமையிலேயே சாதுக்களிடத்தில் பிரியம், ஜீவ காருண்ணியம், யோகிகள்போல் நிஷ்டைசெய்தல், நிஷ்டையில் கிருஷ்ண சர்ப்பம் சீறிவருதல், வித்தியாரம்பம், பள்ளிக்கூடத்தில் துஷ்டத்தனம், அபார ஞாபக சக்தி, விவாகத்தில் வெறுப்பு, ஜோதிஷ சாஸனம் (5) விளையாட்டு நாட்கள், ஜாதி வித்தியாசமின்மை, தலுக்க மாமாவினிடத்தில் சிநேகம், ஆங்கில பாஷையைக் கற்கத் தொடங்கல் (6) பாலப்பருவம், பிதாவுடன் தர்க்கம் செய்தல், மாதாவைப் பூஜித்தல், நரேந்திரரின் 20-வது வயதில் பிதாவின் மரணம் (7) பாலியகுண விசேஷங்கள், படிப்பிலும் விளையாட்டிலும் முதன்மை, 14-வது வயதில் பிரபல பண்டிதருடன் சம்பாஷணை. .....(26) விக்ரஹ ஆராதனையின் உண்மைப் பொருளை விளக்கல், ஆள்வார் மஹா ராஜாவின் நாஸ்திக குணத்தை மாற்றல் (27) கேத்ரி மஹா ராஜா சிஷ்யராதல், நாடகப்பெண்ணின் பாடலால நரேந்திரர் பேதபுத்தி நீங்கி சமபாவ உணர்ச்சியடைதல்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசரத்தினங்களின்

விஷய அட்டவணை

அத்தியாயம்	விஷயம்	பக்கம்
1	ஆத்மஞானம்	1
2	ஈசுவரன்	18
3	மாயை	36
4	அவதார புருஷர்கள்	42
5	ஈசுவரனும், ஜீவனும்	52
6	ஈசுவரனும், ஈசுவர பக்தர்களும் ...	56
7	குரு	60
8	மதபோதகர்	72
9	மதமும், புத்தகப் படிப்பும்	84
10	மூமூட்சுக்களின் பேதங்கள்	98
11	ஈசுவரப்பிரீதி	101
12	ஆத்மீக வாழ்க்கையின் விதங்கள் ...	110
13	சாது சங்கம்	128
14	ஈசுவரார்ப்பணம்	132
15	உலகப்பற்றின்மை	135
16	விக்கிரக ஆராதனை	138
17	விசுவாசம்	142
18	வைராக்கியம்	149
19	ஞானப்பியாசத்தின் விடாமுயற்சி ...	154
20	ஞானவாழ்க்கைக்கு இடையூறுகள் ...	162

அத்தி பாயம்	விஷயம்	பக்கம்
21	பெண்ணாசையும் பொன்னாசையும் ...	166
22	அகங்காரம்	179
23	உணர்வின் தன்மையும், ஆத்மீக வாழ்க்கையும்	204
24	நிஷ்டை	207
25	பக்தி	209
26	ஈசுர கருணை	231
27	சுவானுபூதி நிலைமை	240
28	முத்தி	249
29	ஞானியின் ஏக திருஷ்டி	254
30	ஆத்மஞானமும், ஜனசமூகக் கோட்பாடுகளும்	262
31	பக்தர்களின் இலக்ஷணம்	267
32	சன்னியாசியின் இலட்சியங்கள் ...	278
33	மனிதர்களின் பேதங்கள்	282
34	இல்லறவாசிகளுக்குரிய நற்போதனை ...	289
35	உலக பந்தமும், ஆத்மஞானமும் ...	306
36	சித்திகள்	330
37	கர்ம நியதி	337
38	மதங்களின் சமத்துவ நிலை	341
39	இக்காலத்திற் கேற்ற மார்க்கம் ...	355
40	பல வகையான உபதேச வாக்கியங்கள் ...	359
41	உதாரணக் கதைகள்	472

ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் குருமூர்த்தியாகிய

ஸ்ரீ ராமகிருஷ்ணை பரமஹம்ஸர்

விரிவான சரித்திரம்.

[41 அத்தியாயம்: 703 பக்கம்: ஸ்வாமிகளின் திருவுருவப் படத் துடன்] உயர்ந்த கிலிட்டு பயிண்டு: விலை ரூபா 2.

இதிலடங்கிய விஷயங்கள்:

1. பீடிகை. 2. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஜனனம். 3. ஸ்ரீ ராம கிருஷ்ணர் வாலிபப் பருவம். 4. ஸ்ரீ ராமகிருஷ்ணர் விவாஹம். 5. ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு சாக்ஷாத் தேவி தர்சனம். 6. ஸ்ரீ ராம கிருஷ்ணரின் யோக, ஞான அப்பியாசம். 7. ஸ்ரீ ராமகிருஷ்ணர் பொன்னுசையை ஜயித்தது. 8. ஸ்ரீ ராமகிருஷ்ணர் கடிந்தவம் புரிந்தது. 9. ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குத் தோதாபுரி என்னும் மஹாத் மா தர்சனம் தந்ததும், ஞானோபதேசம் செய்ததும். 10. "ஏகம் சத்: விப்ரா பெருதா வதந்தி." (உள்ளது ஒன்றே; பெரியோர் அதனைப் பலவிதமாகக் கூறுவர்). 11. ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிற மதங்களை ஆராய்ச்சி செய்தது. 12. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் தர்ம பத்னியாகிய ஸ்ரீ சாரதா தேவியார் அவருக்குப் பக்தியுடன் தொண்டு புரிந்து வந்தது. 13. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஸ்வாநுபவம். 14. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய புண்ணிய யாத்திரை. 15. ஸ்ரீ ராம கிருஷ்ணர் சிஷ்யராகிய ஸ்ரீ விவேகாநந்தர் [நரேந்திரர்] ஜனனம். 16. குரு சிஷ்ய சம்வாதம். 17. "நீங்கள் ஈசுவரனைப் பார்த்தது ண்டா?" 18. குரு ஸ்பர்சம். 19. சிஷ்ய வாத்ஸல்யம். 20. ஸ்ரீ ராமகிருஷ்ணர் குண விசேஷங்களின் பெருமை. 21. ஸ்ரீ ராம கிருஷ்ணருடையசிஷ்யவர்க்கங்கள். 22. நரேந்திரருடைய (ஸ்ரீவிவே காநந்தருடைய)குரு பக்தி. 23. ஸ்ரீ ராமகிருஷ்ணர் மத போதனை கள். 24. ஸ்ரீ ராமகிருஷ்ணரும், நரேந்திரரும். 25. ஸ்ரீ ராமகிரு ஷ்ணரின் விசேஷ ஞான்ம். 26. ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரருக்கு ஸ்வாதபூதி உபதேச மருளிச்செய்தது. 27. ப்ரஹ்ம சமாஜ மத ஸ்தாபகராகிய கேசவச் சந்திரஸேனருக்கும், ஸ்ரீ ராமகிருஷ்ண ருக்கும் சம்பாஷணை. 28. ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு ஜீவகாருண்ய மே சிவபூஜை. 29. ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது வியாதிகாலத்தில் சிகிச்சை செய்யவந்த டாக்டர் மஹேந்திரலால் சர்க்காருடன் செய்த அரிய சம்பாஷணைகள். .....40. "தானே வருவான்". 41. ஸ்ரீ ராமகிருஷ்ணர் மஹா சமாதி.

ஓம்

பரப்ரஹ்மணேநமஃ

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

அருளிச்செய்த

உபதேசரத்தினங்கள்

1-வது அத்தியாயம்

ஆத்மஞானம்

1. ஈசுவரத்தன்மை:

இரசம் பூசப்பட்ட கண்ணாடியிலே ஒருவனுடைய பிரதிபிம்பம் எப்படித் தோற்றுகிறதோ அப்படியே, பிரமசாரியத்தினாலே தம்முடைய சக்தியையும், பரிசுத்தத் தன்மையையும் காப்பாற்றி வைத்திருக்கின்றவருடைய உள்ளத்திலே, சர்வ சக்தியையுடைய ஈசுவரனது மகிமை தங்கிய பிரதிபிம்பம் தோற்றும்.

2. ஆத்மாவின் தன்மை:

சர்ப்பமானது, தன்னுடைய சட்டையினின்றும் எப்படி வேறு யிருக்கிறதோ அப்படியே, ஆத்மாவும் சரீரத்தினின்றும் வேறு யிருக்கிறது.

3. ஞானம், அஞ்ஞானம் ஆகியவற்றின் தன்மை:

ஞானமானது, ஒருவனை ஒற்றுமையிற் புகுவிக்கும்; அஞ்ஞானமோ வேற்றுமையிற் செலுத்தும்.

4. பிரமத்தைப்பற்றிய ஆராய்ச்சி:

ஒரு திருடன், ஓர் இருட்டறைக்குள் பணத்தைத் திருடப் புகுந்தால், அங்குள்ள பல பொருள்களையுந் தடவிப் பார்ப்பான்; அங்ஙனம் பார்க்கும்போது ஒரு மேஜை தன் கைக்கு அகப்பட்டால், ''நாம் விரும்பியது இஃதன்று'' என்று அதனை விட்டு மேலுந் தடவுவான்; பின்னர் ஒரு நாற்காலி அகப்பட்டால், ''நமக்கு வேண்டியது இதுவு மன்று'' என்று அதனையுந் தள்ளிவிட்டு மீண்டும் தடவிப் பார்ப்பான். இப்படியே அவன் மேலும் மேலும் ஆராய்ந்து பார்த்துத் தன் கையில் தென்படும் விருப்பமற்ற பொருள்களை யெல்லாம் தள்ளிக்கொண்டே போய் முடிவில் பணப் பெட்டி கையிலகப்பட்டால், ''இதோ அகப்பட்டது நமக்கு வேண்டியது'' என்று சந்தோஷமடைவான். இதைப்போல, பிரமஞ்ஞானியும் பிரமத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யப் புகுந்து தன் புத்தியிற் றோன்றும் அநித்தியப் பொருள்களை யெல்லாம் தள்ளி நித்தியப் பொருளாகிய பிரமத்தை யடைவான்.

5. ஈசுவரத்தன்மையைக் காணும் விதம்:

ஸ்ரீராமகிருஷ்ணர், ''எவனுக்கு இங்கே ஈசுவரன் இருக்கின்றானோ அவனுக்கு அங்கும் அவன் இருக்கின்

ரூன்'' என்று தமது ஹிருதயத்தைச் சுட்டிக் காட்டிக் கொண்டே சொல்வது வழக்கம். ஆதலின், தனக்குள்ளே ஈசுவரனைக் காணுதவன், வெளியில் அவனை ஒருபோதும் காணவேமாட்டான். எவன், அவனைத் தனது ஆத்மாவாகிற க்ஷேத்திரத்திற் காண்கின்றானோ அவன்றான், அவனைப் பிரபஞ்சமாகிற க்ஷேத்திரத்திலுங் காண்பான்.

6. நான் என்பதின் தன்மை:

ஆத்மனே! உன்னுடைய ஆத்மாவை முதலில் நீ தெரிந்துகொள்; அங்ஙனம் அறிந்தால், பின்னர், அநாத்மாவையும், ஆத்மா அநாத்மா ஆகிய இரண்டிற்கும் தலைவனான ஈசுவரனையும் அறிவாய். ''நான் என்பது யார்? என்னுடைய கையா? காலா? மாமிசமா? இரத்தமா? ஜீவ்வா'' என்று ஆழ்ந்து ஆலோசனை செய்து பார். அப்போது, ''நான் என்னும் ஒருவஸ்து இல்லை'' என்பதை நீ தெரிந்துகொள்வாய். வெங்காயத்தின் தோலை உரிக்க உரிக்க, மேலும் மேலும் பல தோல்களே வெளிப்பட்டு முடிவில் ஒரு வித்தும் அகப்படாமற் போவதுபோல, 'நான்' என்பதைப் பகுத்துப் பார்த்தால் முடிவில் அஃதில்லாமலே போய்விடும்; அந்தப் பாகுபாடுகளினுடைய கடைசி முடிவு ஈசுவரனே யாவன்; 'நான்' என்பது நசிக்குமாறுல் தெய்வீகமென்பது தானே வெளிப்படும்.

7. மனுஷ்யத்தன்மை நீங்கும் விதம்:

புஷ்பத்திலிருந்து காய் வெளித் தோற்றுங்கால், அம்மலரின் இதழ்கள் எப்படித் தாமாகவே விழுந்துவிடுகின்

றனவோ அவ்விதமே, ஈசுவரத்தன்மை விளங்கும்போது மனுஷ்யத்தன்மையானது தானே நீங்கிவிடும்.

8. சரீர வியாபாரமும் பிரமசக்தியும்:

மனுஷ்ய சரீரமானது ஒரு பாண்டத்தைப் போன்றும், மனம் புத்திமுதலிய அந்தக்கரணங்களும், மற்ற இந்திரியங்களும், அந்தப் பாண்டத்தி லிடப்பட்ட ஜலம், அரிசி, காய்கறிகள் முதலியவைகளைப் போன்றும் இருக்கின்றன. அப்பாண்டத்தை நெருப்பின்மீ தேற்றினால், அந் நெருப்பானது அப்பாண்டத்திற்குச் சூட்டை யுண்டாக்கி, அச்சூடு, பாண்டத்திலுள்ள மற்ற வஸ்துக்களிலும் வியாபிக்கிறது; அதன்மேல், எவரேனும் அவற்றைத் தொட்டால், பாண்டத்திற்கோ, ஜலத்திற்கோ, மற்ற வஸ்துக்களுக்கோ உஷ்ணம் சொந்த மில்லாவிட்டாலும், நெருப்பின் வியாபகத்தால் அவை, தொட்டவருடைய கையைச் சுடுகின்றன. இது போலவே பிரம சக்தியானது, இந்திரியங்களோடு கூடிய மனுஷ்ய சரீரத்திற் கலந்து நின்று அவ் விந்திரியங்கள் இயங்கித் தொழில்களை நடத்தும்படி செய்கிறது. அந்த சக்தியானது தொழிலற்று நிற்குங்காலத்தில் இந்திரியங்களும் தொழில் செய்யாது நின்றுவிடுகின்றன.

9. ஞானத்தின் பாகுபாடு:

ஞானமானது: குடும்பஸ்தர்களிடத்தும், பக்தர்களிடத்தும், அவதார புருடர்களாகிய ஆத்மஞானிகளிடத்தும், அளவிலும் குணத்திலும் வெவ்வேறு வகையாக விகற்பப்படும். எப்படியெனில், குடும்பஸ்தருடைய

அறிவானது அவ்வளவு விசேஷ சக்தியை யுடையதன்று; அஃது, ஓர் அறையின் உட்பக்கத்துக்கு மாத்திரம் பிரகாசத்தைக் கொடுக்கும் ஒரு தீபத்தின் சோதியை நிகர்க்கும். பக்தருடைய ஞானமானது, மூன்னதைக்காட்டிலும் மேலான சத்தியை யுடையதாகும்; அதனை, ஒரு அறையின் உட்பக்கத்திலும் வெளிப்பக்கத்திலும் பிரகாசத்தைப் பரப்புகின்ற சந்திரனுடைய ஒளிக்கு ஒப்பிடலாம். அவதார புருஷனுடைய ஞானமோ எல்லாவற்றிலும் மேலான சக்தியை யுடையது; அதனை, உலகத்திற் பரவிக்கிடக்கும் இருள் மூழுவதையும் நீக்குகின்ற சூரியனுக்கு நிகராகச் சொல்லலாம். இத்தகைய ஞானம் பெற்ற அவதார புருஷர்கள், எத்தனையோ யுகங்களாகக் குவிந்து கிடக்கும் அஞ்ஞானவிருளை நீக்கும் ஞானசூரியராவர்.

10. கலியுகத்தில் ஞானயோகம் மிகவும் கஷ்டமெனல்:

இந்தக் கலியுகத்தில் ஞானயோகம் சித்திப்பது மிகவும் கஷ்டமாகும். ஏனெனில், மனிதனுடைய ஜீவிப்பு, அன்னத்தோடு சார்ந்ததா யிருக்கின்றது; "அன்னகதப் பிராணः" என்பதால் இஃதுணரப்படும்; மேலும், மனுஷ்ய ஆயுள் மிகவும் குறைவா யிருக்கின்றது; இஃதன்றியும், ஆத்மஞானத்தோடு கலந்துகொண் டிருக்கின்ற தேகபுத்தியை நீக்கிக்கொள்வது கடினமா யிருக்கின்றது. ஆதலின், ஆத்மஞானத்தையடைய விரும்புவோர், மிக்க பிரயாசையின் பேரில்தான் அடையவேண்டும். அதனை எப்படி அடைவதெனில்,- "நான் சரீரமன்று; அகண்ட வஸ்துவாகிய பர

மாத்மாவும் ஈசனும் ஒன்றே; நான் சரீரமன் றுகையினாலே, சரீர தர்மங்களாகிற பசி, தாகம், பிணி, ஜனனம், மரணம் முதலியவற்றிற் குட்பட்டவனல்லன்'' என்னும் நிச்சயத் தைக்கொண்டு அடையவேண்டும். சரீர தர்மங்களுக் குட் பட்டவன் எப்பொழுதும் ஞானியாகான்; அப்பேர்ப்பட்ட வன் ஞானியென்று சொல்வானானால், அஃது எப்படி யிருக் குமெனில், முட்செடியினாலே தேகமெல்லாம் கிறப் பெற்று உதிர மொழுகிக்கொண்டிருக்கும் ஒருவன், ''என் உடம்பு முள்ளால் கிறப்படவில்லை; சௌக்கியமாகவே யிருக் கிறது'' என்று சொல்லிக்கொள்வதுபோன் றிருக்கும். இத்தகையவார்த்தை பயனற்றதாகும்; ஞானத்தை அடைய வேண்டுமானால், ஆத்மாவை வருத்துகின்ற தேகவியாபாரங் களென்னும் முட்கள், ஞானக்கிளையினாலே எரித்துச் சாம்ப ராக்கப்படவேண்டும்.

11. அகண்ட ஞானியின் தன்மை:

மனிதனுடைய பாதத்தில் ஒரு முட்பாய்ந்து முறிந்து விட்டால், அவன் மற்றொரு முள்ளால் அதனைக் குத்தி யெடுத்துவிட்டுப் பின்னர், இரண்டு முட்களையும் தூரத் தில் எறிந்துவிடுவான். இதுபோலவே, ஒருவனிடத்தில் குடிகொண்ட அஞ்ஞானத்தை அவன் தன்னுடைய ஞானத் தைக் கொண்டே நீக்கவேண்டும். இந்த ஞானமும் அஞ் ஞானமும் அவித்தையிலேயே அடங்கியுள்ளன. அகண்ட ஞானத்தை அடைகிறவன், எல்லா துவைதங்களினின்றும் நீங்கி முத்தியை அடையும் இயல்பினை யுடையவனாகையி

ஞேலே, அவன் மூடிவில் ஞானம், அஞ்ஞானம் ஆகிய இரண்டையுமே தள்ளிவிடுவான்.

12. ஞானம் இன்னதென்பது:

ஞானத்தின் இயல்பாவது யாதெனில், "ஏ ஈசுர! நீ ஒருவனே இப்பிரபஞ்சத்தில் கர்த்தா; நான், உன்னிடத் தள்ள கருவிகளில் ஒரு தாழ்ந்த கருவியாவேன்; இங்கே எதுவும் என்னுடையதன்று; எல்லாம் உன்னுடையதே; நானும், எனது குடும்பமும், எனது ஐசுவரியமும், என் புண்ணியங்களும் ஆகிய எல்லாம் உன்னுடையனவே" என ஏகபாவனே செய்தலாம்.

13. ஞானயோகம் இன்னதென்பது:

ஞானயோக மென்பது யாதெனில், ஞானியானவன், ஞான மார்க்கத்திலே ஈசுவரனுடன் ஒன்றுதலாம்; அதாவது: அகண்ட வஸ்துவாகிய பிரமத்தை அனுபவத்தில் அடைதலாம். இவ்வாறு, ஞானி பிரமத்தை எவ்வாறடைவானெனில், மித்தியா வஸ்துக்களே, "நித்திய வஸ்து இஃதன்று! இஃதன்று!!" என்று ஒன்றன்பின் ஒன்றுகத் தள்ளி, கடைசியில், நித்தியாநித்திய வஸ்துக்களின் விசாரங்களெல்லாம் நீங்க, பிரமவஸ்துவைச் சமாதியிலே அனுபவிக்கின்ற ஸ்திதியை அடைவான்.

14. விவேக விசாரணையின் முடிவு:

கற்பூரமானது எரிக்கப்பட்டால், அதில் சாம்பலும் தோற்றுது. அதுபோல், விவேக விசாரணே முடிவடைந்து,

மிகச்சிரேஷ்டமான சமாதியைப் பெற்றால், 'நான்' என்பது மில்லை; 'நீ' என்பது மில்லை, 'பிரபஞ்சம்' என்பதுமில்லை. ஏனென்றால், அந்தக்காரணங்கள், அகண்ட பிரமத்தினிடத்திலேயே லயமாய்விடும்.

15. நித்தியானந்த மேய்தும் விதம்:

ஈசுவரத்துவம் வெளிப்படுவதற்கு முன், மனுஷ்யத்துவம் நசிக்கவேண்டும்; ஈசுவரத்துவத்தினும் மேலான பிரமவஸ்து தரிசனம் உண்டாவதற்கு முன்னே அந்த ஈசுவரத்துவமும் மரித்தல் வேண்டும். அங்ஙனம் மரித்த ஈசுவரத்துவத்தின் மார்பின்மேல் ஆனந்தமாதா அன்பு நடனஞ் செய்வாள்.

16. ஜீவாத்மா: பரமாத்மாவை அடையும் விதம்:

தண்ணீருக்குள் ஒரு ஜாடியை வைத்தால் அதன் உள்ளும் புறமும் நீரே வியாபித்திருக்கும்; அதுபோலவே, ஈசுவரனிடத்தில் கலந்த ஜீவனுடைய உள்ளும் புறமும் சச்சிதானந்தமாகிய ஆத்மாவைத் தரித்துக்கொண்டிருக்கும்.

17. ஞானியினிடத்தில் பந்தம் சேராதென்பது:

ஜீவனும், ஜகத்தும் பிரமவஸ்துவேயென்று அனுபவத்தால் அறிந்தவனை நன்மை தீமை ஆகிய இருவினைகளும் பந்திக்கமாட்டா.

18. ஆத்மஞானி இன்னவனென்பது:

தான் உயிரற்ற சரீரத்தைப்போலவிருந்து ஐம்புலன் களையும் அடக்கி, உலகப்பற்றை ஒழித்தவன் எவனோ அவனே பிரமக்ஞானியாவான்.

19. பிரமமே எல்லாமென்பது:

ஒரு பிராமணன் பூஜை புரியுங் காலத்தில், வைதிகன் எனப்படுவான்; அவனே சமையலறையுட் புகுந்து சமை யல் செய்யுங் காலத்தில், சமையற்காரன் எனப்படுவான். இதேபோல, பிரமவஸ்துவானது வேதாந்திகளிடத்தே பிரமம் என்று வழங்கப்படுகிறது; யோகிகளிடத்தில் ஆத்மா என்று கூறப்படுகிறது; பக்தர்களிடத்தில் பகவான் என்று கூறப்படுகிறது.

20. பிரமவஸ்துவானது எங்கும் வியாபக மாயினும் ஒன்றிலும் பற்றின்றி யிருக்குமென்:

காற்றானது, நல்ல கெட்டனவாகிய கந்தங்களோடு கலந்து அவற்றைக் கொண்டு சென்றாலும், அவற்றினிடத் தே எப்பொழுதும் பற்றாதிருப்பதுபோல, அகண்ட வஸ்து வானது எங்கும் வியாபகமாயிருப்பினும் ஒன்றிலும் பற் றாது நிற்கும்.

21. ஜீவாத்மா: பரமாத்மாவில் கலக்கு மியல்பு:

ஒரு பறவையின் கூடானது அழிக்கப்பட்டபோது, அப் பறவையானது ஆகாயத்திற் பறந்தோடிவிடுவது போல, சரீரஞ்சடமும், பகிர்முக உலகபிரக்ஞையும் மனத்தி

னின்றும் நீங்க அழித்துவிடப்பட்டபொழுது, ஜீவாத்மாவானது, பரமாத்மாவாகிய ஆகாயத்திற் பறந்து சமாதியிலே யமைடைந்துவிடும்.

22. அகண்டவஸ்துவின் நிலைமை:

அகண்ட வஸ்துவானது, எல்லா லக்ஷணங்களையுங் கடந்ததாயும், மாயையுடன் சம்பந்தப்பட்ட எல்லாவற்றிற்கும் அதீதமாயுமிருக்கும் இயல்பினையுடையது.

23. பிரமமே, பிரமாநுபூதி யடையுமென்பது:

அகம் அழிக்கப்பட்டுவிட்டால் ஜீவன் நசித்துவிடும்; அங்ஙனமாகச் சமாதியிலே, பிரமாநுபூதி யுண்டாகும்; அப்போது பிரமாநுபூதியை அடைவது, பிரமவஸ்துவேயாம்; ஜீவனன்று.

24. ஒரே வஸ்துவே பிரபஞ்ச வடிவமானதென்பது:

மெழுகினால் பல வடிவங்கள் ஆக்கப்பட்டாலும் எல்லாம் மெழுகேயன்றி வேறொன்று மில்லாததுபோல, ஒரே வஸ்துவானது பல ஜீவப்பிராணிகளுடன் கூடிய பிரபஞ்ச வடிவத்தைத் தரித்துக்கொண்டிருக்கிறதென்பதையும்; பிரபஞ்சமானது மனிதர்கள், மிருகங்கள், தருக்கள் முதலிய பல பேதங்களாகக் காணப்படினும் எல்லாம் ஏகவஸ்துவே யென்பதையும் நான் உணர்ந்தேன்.

25. ஏகவஸ்துவின் உயர்வு:

ஒன்றை அறிந்துகொண்டால் எல்லாவற்றையும் அறியலாம். ஒன்றை முதலில் எழுதி அதன் பின்னே பல சுன்

எங்களை பெழுதினால் இலட்சங் கோடிகளாகின்றன; அவற்றில் முதலில் இருக்கும் ஒன்றை எடுத்துவிட்டால் மற்ற எண்ணங்க ளிருப்பினும் ஒருவித எண்ணிக்கையு மில்லாமற் போம். ஒன்று என்ற எண் இருப்பதனாலே மற்ற அநேகமாகிய எண்ணிக்கைகளுக்கு மதிப்பு ஏற்படுகின்றது. முதலாவது ஏற்படுவது ஏகம்; பின்னர் ஏற்படுவது அநேகம். இதுபோலவே, முதலாவது ஈசுவரத்துவம் ஏற்படும்; பின்னர் ஜீவனும், ஜகத்தும் ஏற்படும். ஏகத்துவத்தினாலேயே மற்றவைகட்கு மதிப்புண்டு; அஃதின்றேல் மற்றவையு மின்றாம்.

26. ஈசுரன் சரீராதிகளில் கலந்திருக்கும் விதம்:

நான், ஈசுரனே எல்லாமென்று அவனைப் பார்க்கின்றன். மானிட வடிவங்களும், மற்றப் பிராணிகளும் சித்தை யசைத்துக்கொண்டும், கைகால்களை ஆட்டிக்கொண்டு மிருக்கும், தோலால் மூடப்பட்ட வடிவங்களாக எனக்குத் தோற்றுகின்றன. எனினும், ஈசுரன் இவற்றினுள்ளே இரகசியமாகக் கலந்திருக்கின்றனென்பது எனக்குத் தெரியும்.

27. ஸத்தை அறியும் மார்க்கம்:

சித்தைக் கைப்பற்றினால் ஸத்தை யறியலாம்; உலகில் நடக்கும் ஒவ்வொரு செய்கையைக் கொண்டும் சித்தியத்தை யறிவதற்கு முயற்சி செய்யவேண்டும்.

28. பிரபஞ்சம் அநித்தியவஸ்து என்பது:

உலகம் ஒரு பிரமையேயன்றி நிலைத்த பொருளன்று. ஏனெனில், கற்பூரம் எரிந்தால் மிச்சம் எதுவுமில்லாமற் போவதுபோல் விவேக விசாரணையின் முடிவில் இதுவும் ஒன்று மில்லாமற் போகிறது. இது, சாம்பலையேனும் மிச்சமாக வைத்து எரிந்துபோகின்ற விறகுக் கட்டையைப் போன்றதுமன்று. விவேக விசாரணை முடிவடையும்பொழுது உத்தமோத்தமமான சமாதி அடையப்படும். அப்போது, 'நான்' என்பதுமில்லை, 'நீ' என்பது மில்லை, பிரபஞ்சமுமில்லை.

29. தனக்குள் இருக்கும் வஸ்துவை அறியாத்தன்மை:

ஒரு மனிதன் நடு ராத்திரியில் எழுந்து சுருட்டுப் பற்றவைக்க விரும்பிக் கையில் ஒரு விளக்கை எடுத்துக் கொண்டு பக்கத்து வீட்டுக்குப் போய்க் கதவைத் தட்டி, அவ் வீட்டுக்காரனை யெழுப்பி அவன் வந்தவுடன், "சுருட்டுப் பற்றவைக்கவேண்டும்; உன்னிடம் ஒரு விளக்கிருந்தால் கொடு" என்று கேட்டால், அவன் இவனைப் பார்த்து நகைத்து, "ஏ பைத்தியக்கார மனிதனே! விளக்கு உன் கையிலேயே இருக்கின்றதே; அதில் சுருட்டைப் பற்றவைத்துக்கொள்ளலாகாதா? இதற்காக என்னை எழுப்பி ஏன் வீண் சிரமம் உண்டுபண்ணினாய்? இஃதென்ன மதியீனம்!" என்று பரிகசிப்பான். இதேபோல் ஒருவன் தனக்குள்ளேயே இருக்கும் நித்தியப் பொருளைத் தெரிந்து

கொள்ளாமல் அங்கு மிங்கும் அதனைத் தேடி அலைந்தால் விவேகிகள் அவனைப் பார்த்து நகைப்பார்கள்.

30. உண்மை ஞானம்:

ஈசுரன் வெளியே வெகு தூரத்தில் இருப்பதாகத் தோற்றுகிறவரையில் அஞ்ஞானமானது நீங்காது. அவன் உள்ளே இருக்கின்ற னென்பதை அநுபவத்தில் அறிவதே உண்மை ஞானமாம்.

31. பரிசுத்த மனமே ஆத்மவஸ்து என்பது:

உலக பந்தத்தில் கட்டுப்பட்ட மனத்தால், ஈசுவரனை அநுபவத்தில் அடைதல் முடியாது. பரிசுத்த மனத்தினாலேயே அவரை அடைதல்கூடும். பரிசுத்த மனமே பரிசுத்த யுக்தியாகும்; பரிசுத்த யுக்தியே பரிசுத்தமான (அதாவது: பந்தமற்ற) ஆத்மாவாகும். அந்த ஈசுவரன், முடிவுள்ள யுக்தியினாலாவது, சிற்றின்பத்தன்மையுடன் கூடிப் பொன்னில மாதரிடத்திற் பற்றுள்ளதும் முடிவுள்ளதும் பந்தத்திற் குட்பட்டதுமான மனத்தினாலாவது அறிய முடியாதவர். மனமானது, தன்னுடைய சிற்றின்பத் தன்மையினின்றும் நீங்கி, நற்பழக்கத்தினாலே பரிசுத்தம் பண்ணப் பெற்றுப் பந்தமற்ற ஆத்மாவுடனே ஒன்றாய்விடுதல்கூடும். பண்டைக் காலத்து மகரிஷிக ளெல்லோரும் இவ்விதமாகவே பரிசுத்தம் பண்ணப்பட்ட மனத்தினால் பந்தமற்ற ஆத்மாவாகிய ஈசுவரனைத் தரிசித்தார்கள். இன்னும் அவர்கள், பரிசுத்த மனமே ஆத்மவஸ்து என்பதையுங் கண்டார்கள்.

32. ஆத்மா எதனிடத்தும் பற்றற்றதென்பது:

ஆத்மாவானது எதனிடத்தும் பற்றுதலுடையதன்று. புகையால் சுவரின் மேற்பாகத்தைத்தான் கரியாக்க முடியும்; அதனுள் சிருப்பவற்றைக் கரியாக்குதல் இயலாது; இதைப்போல, சுகம்-துக்கம், பாபம்-புண்ணியம் முதலிய வைகளெல்லாம், சரீரத்தையே தாமாகக் கருதிக்கொள்கின்றவர்களைப் பாதிக்குமேயன்றி ஒருபொழுதும் ஆத்மாவை எவ்விதத்தாலும் பாதிக்கமாட்டா.

33. பேதரகிதமான ஆத்மவஸ்துவை, பேதசகிதமான ஜீவனுகக் கருதும் பிரமை எப்படி வந்ததென்பது:

ஒருவன், ஆத்மவஸ்துவே யாவுமாம் என்பதை உணராத தன்மையால் தன்னை வேறொருவனுக நினைக்கிறன்; அதனுலேயே ஆத்மவஸ்துவை ஜீவனுகக் கருதும் பிரமை யேற்பட்டது. இந்தப் பேதங்களெல்லாம் உண்மையல்லவென்றும், இவை பிரமையென்றும் கருதவேண்டும். தனிவடிவத் தன்மையெல்லாம் அழிக்கப்பட்டுவிட்டால் மனிதன், சமாதியிலே அகண்ட ஞானஜ்யோதியை அடைவான். அப்பொழுது, 'இது பிரமையா? பிரமையன்று? — உண்மையா? உண்மையன்று?' என்பனபோன்ற கேள்விகளெல்லாம் அமைதி யடைந்துவிடும்.

34. நித்தியானந்த மடையும் விதம்:

நித்தியானந்தத்தின்மீதும், நித்தியஞானத்தின்மீதும் நிஷ்டை செய்யவேண்டும்; அவ்வாறு செய்யின், செய்பவ

இக்கும் ஆனந்த முண்டாகும். ஆனந்தமானது உண்மையில் நித்தியமானதே; ஆனால், அஃது அஞ்ஞானத்தினால் மூடப்பெற்று மறைபட்டுக் கிடக்கின்றது. மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு இந்திரியங்களினிடத்தே பற்றற்றிருக்கின்றானோ அவ்வளவுக் கவ்வளவு ஈசுவரனிடத்தே பக்தி அதிகமுள்ளவனாவான்.

35. ஞானியும் பக்தனும்:

ஞானியினுடைய ஹிருதயத்திலே ஓடுகின்ற ஞானமென்னும் கங்கையானது ஒரே மார்க்கத்தில் ஓடும்; அவனுக்குப் பிரபஞ்ச முழுதும் ஒரு கனவுபோலவே தோற்றும். அவன் எப்பொழுதும் தனது ஆத்மாவினிடத்திலேயே கலந்திருப்பான். பக்தனுடைய ஹிருதயத்திலுள்ள அன்பென்னும் கங்கையோ எப்பொழுதும் ஒரே மார்க்கத்தில் ஓடாது; அதற்கு ஏற்றத் தாழ்ச்சியுண்டு. பக்தன் அழுவான், சிரிப்பான், ஆடுவான், பாடுவான், தான் எண்ணிய பொருளை யடைதற்கு விரும்புவான். அவன், கண்ணீரில் மிதக்கும் பனிக்கட்டிபோன்று ஈசுவரனுடைய வாரிதியிலே கீந்துவான், சில சமயங்களில் மூழ்குவான், சில சமயங்களில் மேலே இளம்புவான்.

36. ஈசுவரனைச் சமீபிப்பதற்குத் தக்கபடி பக்தியும் அதிகரிக்குமென்:

ஸ்ரீ ராதையானவள், ஸ்ரீ கிருஷ்ணனை எவ்வளவுக் கெவ்வளவு நெருங்கியிருந்தாளோ அவ்வளவுக் கவ்வளவு அவர் சரீரத்தினின்று மூண்டாகிய திவ்யகந்தத்தை அனுப

வித்துக்கொண்டிருந்தாள். இதைப்போல ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு ஈசுவரனைச் சமீபிக்கின்றானோ அவ்வளவுக் கவ்வளவு அவரிடத்து அதிகமான பக்தியை யுடையவனுவான்.

37. ஞானமும், அஞ்ஞானமுங் கேடு மிஞ்சி நிற்பது இன்னதென்பது:

ஞானம், அஞ்ஞானம் ஆகிய இரண்டும் நசிக்குமிடத்தில் எஞ்சியுள்ளது யாதெனில், 'நித்திய சுத்தபோதரூபம்' என்று வேதங்களிற் கூறப்படும் அகண்டவஸ்து ஒன்றேயாம்.

38. ஞானமும், பக்தியும்:

ஈசுவராராதனை இரண்டு வகைப்படும்: அவற்றுள் ஒன்று, ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியம்; மற்றொன்று ஈசுவரனை சகுண வடிவத்திலே தரிசிப்பதாம். இவற்றுள் முந்தியது ஞானம்; பிந்தியது பக்தி.

39. ஈசுவரதரிசனம் இன்னகாலத்தில் உண்டாகுமென்பது:

மனமும் புத்தியும் பரஸ்பர சம்பந்தத்திற்குள்ளே கட்டுப்பட்டிருக்கும்வரையில் ஈசுவரன் அவற்றிற்கு அதீதமானவராகவே யிருப்பர்; அவை பரிசுத்தம் செய்யப்பட்டுவிட்டால், அவர் அவற்றினிடமாகத் தாமே பிரசன்னமாவர். மனத்தை அசுத்தப்படுத்துவது ஆசையாம். இருதயத்திலே அவித்தையானது அசாசாட்சி புரிகிறவரையில்

மனமும் புத்தியும் பரிசுத்தமாகா; அப்பொழுது அவை ஒன்றிற்கொன்று வித்தியாச முள்ளனவாகவே அறியப் படுகின்றன. ஆயினும், அவை பரிசுத்த மடையும்போது ஒன்றுகச் சைதன்யத்திலே லயமாய்விடுகின்றன. அப்பொழுது சைதன்ய சொரூபியாகிய ஈசுவரன் பிரசன்னமாவர்.

40. ஆத்மன் எப்பொழுது முக்தனுவானென்பது:

ஆத்மன் எப்பொழுது முக்தனுவானெனில், 'நான்' என்பது இல்லாமற் போகும்பொழுதேயாம். 'நான்' என்பதும், 'எனது' என்பதும் அஞ்ஞானமாகும். 'நீ' என்பதும் 'உனது' என்பதும் ஞானமாகும்.

41. ஞானப்பிரகாசம்:

ஆயிரம் வருடங்களாக இருள் சூழ்ந்திருந்த ஓர் அறைக்குள் ஒரு விளக்கைக் கொண்டுபோனால் அஃது அவ்விருளை எப்படி ஓட்டிப் பிரகாசப்படுத்துமோ, அதேபோல ஞானதீபமானது ஜீவனிடத்திலே உண்டாய்விடின் எத்தனையோ யுகங்களாக நிறைந்திருந்த அஞ்ஞானத்தை நீக்கி உண்மைப்பொருளை விளக்கிக் காட்டும்.

ஆத்மஞானம் முற்றுப்பெற்றது.

2-வது அத்தியாயம்

ஈ சு வ ர ன்



42. ஈசுவரன் வடிவமுள்ளவராயும், வடிவமற்றவராயு மிருக்கின்றார் என்பது:

மணியடிக்கும்பொழுது 'டிங் டிங்' என்ற பல சப்தங்க ளுண்டாகின்றன. இவை யுண்டாகும்போது கண்ணுக்குப் புலனாகாவிடினும் ஒவ்வொரு நாதத்தையும் ஒவ்வொரு வடிவமாக உணருகிறோம். சப்தங்கள் அடங்கியவுடன் நம க்கு ஒலிவடிவம் புலப்படுவதில்லை. இதேபோல் ஈசுவர னுடைய வியாபகத்தன்மை விளங்கும்போது அவர் ரூபமுள்ள வராகவும், அஃதில்லாதபோது ரூபமில்லாதவராகவு மிரு ப்பர்.

43. ஈசுவரன் எங்கு முளன் என்பது:

ஈசுவரன் எல்லா மனிதர்களிடத்திலும் இருக்கின்றார்; ஆயினும், எல்லோரும் அவரைக் காண்பதில்லை; அதனா லேயே அத்தகையினர் துக்கத்தை அடைகின்றனர்.

44. ஈசுவரனே எல்லோருக்கும் ஞானகுரு என்பது:

ஒவ்வொரு குழந்தையும், 'அம்புலிமாமாவா' என் றழைத்து விளையாடுவதற்குப் பொதுவாக எங்கும் சந்திரன் வியாபித் திருப்பதுபோல ஈசுவரன், எல்லா மனித வர்க்கத் தாரும் ஞானத்தை அடைவதற்குத் தகுதியாக எல்லோருக்

கும் பொதுவாக ஞானகுருவாய் எங்கும் வியாபித்திருக்கின்றார்.

45. ஈசுவர தரிசனமாகாததற்குக் காரணம் அஞ்ஞானமே என்பது:

ஆகாயத்தில் அநேகம் நக்ஷத்திரங்கள் இருக்கின்றன; அவற்றை நாம் இராக்காலத்தில் பிரத்தியக்ஷமாகப் பார்க்கிறோம்; ஆனால், அவை பகற்காலத்தில் நம் கண்களுக்குப் புலனாவதில்லை. இதற்குக் காரணம் சூரியப்பிரகாசமே. சூரியப்பிரகாசம் அதிகரித்தவுடன் நக்ஷத்திரங்களின் தோற்றம் மறைந்துபோகின்றது. இதுபோலவே, ஈசுவரன் எங்கும் வியாபகமாயிருக்கின்றார்; ஞானோதயமாகுங் காலத்தில் அவர் தோற்றுவார்; அஞ்ஞான மிருங்காலத்தில் அவர் தரிசனமாவதில்லை. அதனால், ஈசுவரன் இல்லையென்று கூறிவிடலாகாது.

46. ஈசுவரன் பெருமையை உணராததற்குக் காரணம்:

சூரியன், பூமியைக்காட்டிலும் அநேகம் பங்கு பெரிதானது; ஆயினும், அது நெடுந்தூரத்திலிருப்பதனாலே, ஒரு சிறிய வட்டவடிவமாகத் தோற்றுகின்றது. அதேபோல, ஈசுவரன் எவரினும், எவையினும், பெரியவர்; ஆயினும், நாம் அவருக்கு நெடுந்தூரத்திலிருக்கிறோம்; அதனாலேயே நாம் அவருடைய உண்மைப் பெருமையை உணரும் சக்தியற்றவர்களாயிருக்கின்றோம்.

47. ஈசுவரன்: மாயையால் மறைக்கப்பட்டிருக்கும் விதம்:

புற்களும், பாசியும் நீரின்மேற் படர்ந்துள்ள ஒரு குளத்தில் விளையாடும் மீன்கள், வெளியில் நின்று பார்ப்பவர் கண்களுக்குத் தெரிவதில்லை. அதுபோலவே, மாயையால் மறைக்கப்பட்ட மனிதனுடைய ஹிருதயமாகிற தடாகத்தில் வசிக்கும் ஈசுவரன், மாயையை விலக்கும் சக்தியற்றவர்களுக்குப் புலப்படாமல் உள்ளே விளையாடுகின்றார்.

48. ஈசுவரனை அறிய ஆரம்பிக்கும்போது அடையுந் தன்மை:

ஈசுவரன், அகண்டமும் நித்தியமுமான பிரமவஸ்துவும் பிரபஞ்சத்திற்குப் பிதாவுமாவர்; சுத்த சச்சிதானந்த சொரூபமாகிய அந்த அகண்ட பிரமமானது, நாம் பிரயாசைப்பட்டு சூழ்ந்து, அதன் சொரூபமாகிய கரைகாண முயற்சிக்கின்ற எல்லையற்ற பெருஞ் சமுத்திரம்போன் றிருக்கின்றது. அதனிடையே சூழ்ந்கியிருக்கின்ற நாம், ஜீவாபுருஷவடிவமுள்ள ஈசுவரனை அறியத் தொடங்கும்போழுது, அச்சமுத்திர அலைகளால் கரையை நோக்கி ஒதுக்கப்பட்டதுபோல் சாந்தி அடைகிறோம்.

49. ஈசுவரன் மகிமை:

ஈசுவரன் ரூபமற்றவராயும், ரூபமுள்ளவராயும், விளங்குகின்றார்; இவ்விரண்டு தன்மைகளைக் கடந்தும் நிற்கின்றார். அவருடைய மகிமை அளவிடற்கரிதாம்; அவருடைய

உண்மைத் தன்மை அவருக்கேதான் விளங்கும்; மற்றையர்க்கு விளங்காது.

50. பிரமவஸ்துவினுடைய தோற்றமே ஈசுவர வடிவமா மென்பது:

தண்ணீர் இறுகிப் பனிக்கட்டியாவதுபோல, சர்வ வியாபகமாயும், ரூபரகிதமாயு மிருக்கின்ற பிரமவஸ்துவினுடைய தோற்றமே சர்வசக்தி வாய்ந்த ஈசுவரனுடைய பிரத்தியக்ஷ வடிவமா யிருக்கின்றது. அவ்வடிவம் உண்மையாகவே கெட்டியாக்கப்பட்ட சச்சிதானந்தமாகும். பனிக்கட்டியானது தண்ணீரின் ஒரு பாகமாகி—தண்ணீரிலேயே இருந்து—பின்னர் அதனிடமே உருகிக் கலந்துவிடுகிறது போல, வடிவமுள்ள கடவுளும்: வடிவமற்ற கடவுளுடைய தன்மையிலிருந்து தோன்றி, அதனிடத்தே யிருந்து, முடிவில் அதனிடமே லயமாகி மறைந்து விடுகின்றார்.

51. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் தன்மை:

தூரத்திலிருந்து பார்க்கும்போது சமுத்திரஜலமானது நீலநிறமாயிருக்கும். அதன் சமீபத்தில் நெருங்கி அதிற்கொஞ்சம் கையிலெடுத்துப் பார்த்தால் அது சுத்தமாயும் வெண்மையாயு மிருக்கும். அதேபோல, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும் தூரத்திலிருந்து பார்க்கும்போது, நீலமேக வண்ணமுடையவராகத் தோற்றுவார். உண்மையில் அவர் அந்நிறமுடையவரல்லர்; அவர் அழுக்கற்றவர்; நிறமற்றவர்; அகண்ட வஸ்துவானவர்; அவர் சமீபத்தில் நெருங்கினால் அவருடைய பரிசுத்தத்தன்மை விளங்கும்.

52. பிரமம் எப்படிப்பட்ட தென்பது:

பிரமம் எப்படிப்பட்டதென்றால், அது மனிவாக்குக் கெட்டாதது. சமுத்திரத்தை எப்பொழுதும் பாராத ஒருவன், "சமுத்திரம் எப்படி யிருக்கும்?" என்று கேட்டால், அவனுக்கு, "அது ஒரு நீர்ப்பரப்பு; எங்கும் தண்ணீராகவே யிருக்கும்" என்றுதான் சொல்ல முடியும்; அதன் இயற்கை வடிவத்தை அவனுக்கு எவ்விதத்தாலும் காட்ட முடியாது. அதேபோல, "பிரமம் எப்படிப்பட்டது?" என்று கேட்பவர்க்கு, "அது மனிவாக்குக் கெட்டாதது" என்றுமட்டுந்தான் விடை பகரமுடியும்; அதை அனுபவத்தால் கண்டபின்னரே அதன் உண்மை வெளிப்படும்.

53. ஈசுவரன் சரீரத்தில் வசிக்கும் விதம்:

ஒரு குழாயினுள்ளே ஒரு குச்சியிருப்பதுபோல, ஈசுவரன் சரீரத்திற்குள்ளே வசிக்கிறார்; அப்படி வசிப்பினும் அவர் சரீரத்தினின்று வேறாயிருக்கின்றார்.

54. ஈசுவரன் அநேக வடிவங்களை அடையும் விதம்:

ஒரு நாடக மேடையில் ஒரு மனிதன் பல வேடங்களைத் தாங்கி நடிப்பதுபோல, ஈசுவரனும் உலகத்திலே அநேக வடிவங்களாகத் தோற்றுகின்றார்.

55. ஈசுவரன் எல்லோரையும் பார்க்கும் விதம்:

போலீஸ்காரன் எவன்மீது தனது விளக்கைத் திருப்புகிறானோ அவனை, அப் போலீஸ்காரனால் பார்க்க முடியும்;

போலீஸ்காரனை ஒருவரும் பார்த்தல் முடியாது; அவ் விளக்கை அவன் தன்மேல் திருப்பிக்கொண்டால் மாத்திரந்தான் எவரும் அந்தப் போலீஸ்காரனைப் பார்ப்பார்கள். அதுபோலவே, ஈசுவரன் எல்லோரையும் தம்முடைய ஞான ஒளியால் பார்க்கிறார்; எனினும், அவரை மற்றையர் காண்பதரிது; அவர் தமது கிருபையினாலே எவருக்குப் பிரசன்னமாகிறாரோ அவனாற்றான் அவரைப் பார்க்க முடியும்.

56. நாராயணனே எல்லாமென்பது:

ஸ்ரீ ராமகிருஷ்ணர், 'ஒவ்வொரு வஸ்துவும் நாராயணனே' என்று கூறுவது வழக்கம். அதேபோல், மனிதவர்க்கத்தாரும் நாராயணனே; மிருகவர்க்கங்களும் நாராயணனே; மகாத்மாவும் நாராயணனே; சாமானியனும் நாராயணனே; இன்னும் உலகத்திலுள்ளவைகளெல்லாம் நாராயணனே; ஸ்ரீ நாராயணமூர்த்தியே உலகத்திற் பல விதங்களாகப் பொருந்தி லீலை புரிகின்றார். எல்லா வஸ்துக்களும் அவருடைய வெவ்வேறுவித வடிவங்களாயமைந்து அவரது பெருமையை விளக்குவனவேயாம்.

57. சூஸ்திராத்மாவையே அடைய வேண்டுமெனல்:

இந்தப் பிரபஞ்ச முழுவதும் சூஸ்திராத்மாவாகிய நாரீனிடத்திலே கோக்கப்பட்டிருக்கின்றது; ஆதலின், இந்தப் பிரபஞ்சத்தை விரும்பாமல் இதனூடே இரகசியமாக அமைந்திருக்கும் சூஸ்திராத்மாவை அடைய விரும்பவேண்டுமென்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு சமயத்தில், "ஒரு மாலையிற்சமயங் விருக்கும் நாரானது சுற்றிலுமுள்ள புஷ்பங்களுமாவதுபோ

கப்பட்டிருப்பதுபோலப், பிரபஞ்சத்தால் சூஸ்திராத்மா தொடுக்கப்பட்டிருக்கின்றதாதலின், அப்புஷ்பங்களோப்போன்ற பிரபஞ்சம் எனக்கு வேண்டியதில்லை; அதனடியே யிருக்கும் நாரைப்போன்ற சூஸ்திராத்மாவையே நான் அடைய விரும்புகின்றேன்'' என்று திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றனர்.

58. ஈசுவரனே ஜீவனுகவும் ஆத்மாவாகவும் தோன்றியுள்ளானென்பது:

எல்லாம் ஈசுவரனிடத்திலேயே அமைந்துள்ளன; இதற்கு உதாரணமாக ஒரு கதை கூறுவாம்: ''ஸ்ரீ ராமர் ஒருசமயம் தம்முடைய குருவின் உபதேசத்தால் ஞானபரிபக்குவமடைந்து, உலகத்தைத் துறந்துவிடத் துணிவுகொண்டார். அதனை யுணர்ந்த தசரதர் அவருக்குப் புத்திகூறும்படி வசிஷ்டரை அவரிடமனுப்பினர். வசிஷ்டர் ராமரை நோக்கி, 'இராம! நான் கேட்கும் வினாவிற்கு விடை கூறிவிட்டுப் பின்னர் துறவை நாடு!' என்றனர். இராமர் அவ்வாறே சம்மதித்தார். அதன்மேல் வசிஷ்டர், 'உலகம் ஈசுவரனிடத்தினின்றும் வேறுனதா? அப்படி வேறு யிருந்தால் நீ உலகத்தைத் துறந்துவிடலாம்' என்றார். இராமர் இம்மொழிகளை ஆராய்ந்து பார்த்தார்; அவருக்கு, 'ஈசுவரனே ஜீவனுகவும் ஜகத்தாகவும் தோன்றியிருக்கின்றான்' என்பது தோன்றிற்று. அதனால் அவர் தமதெண்ணத்தை விடுத்து போற்றிருந்தார்.''

கிறேனே அ

59. விவேக விசாரணை:

விவேக விசாரணையானது பகுத்துப் பார்ப்பது, தொகுத்துப் பார்ப்பது என்று இருவகைப்படும். இவற்றுள் முதலாவது, மனிதனைக் காட்சியிலிருந்து அகண்ட ப்ரஹ்மத்துக்கு இட்டுச்செல்லும்; இரண்டாவது, அகண்ட ப்ரஹ்ம வஸ்துவானது எப்படிப் பிரபஞ்சமாகத் தோற்றுகிறதென்பதை மனிதனுக்கு அறிவிக்கும்.

60. ஈசுவரனே எல்லாம் செய்கிறார் என்பது:

திருடனைத் திருடும்படி தூண்டுதல் செய்பவரும் ஈசுவரனே; அதே சமயத்தில் திருடனுக்கு விரோதமாக வீட்டுக்காரனுக்கு ஜாக்கிரதையை உண்டாக்குபவரும் ஈசுவரனே.

61. பக்தன், ஈசுவரனை இரண்டுவிதமாகக் காண்பானென்பது:

பக்தனானவன், தனது பக்தி மார்க்கத்தின் ஒரு படியிலே ஈசுவரனை வடிவமுள்ளவராகக் கண்டு திருப்தியடைவான்; மற்றொரு படியிலே அவரை வடிவமில்லாதவராகத் தரிசித்துத் திருப்தியடைவான்.

62. சகுண ப்ரஹ்மத்தின் இயல்பு:

சிற்சில சமயங்களில் ஈசன் சட்டையுடனும், சில சமயங்களில் சட்டையில்லாமலும் இருப்பதுபோல, ப்ரஹ்மவஸ்துவானது சில சமயங்களில் நிர்க்குணமாயும், சிலசமயங்களில் சகுணமாயும் இருக்கும். சகுண ப்ரஹ்மமாவது:

சக்தியுடனே கூடிய ப்ரஹ்மவஸ்துவாம். இது இந்த சக்தி யுடனே கூடியிருக்கும்போது ஈசுவரன் எனப்படும்.

63. ஈசுவரனுடன் நேர்நின்று பேசலாமென்பது:

ஈசுவரன், ரூபத்துடனே ப்ரத்யக்ஷமாகக்கூடியவர். நாம் நம்முடைய அரிய நண்பனைக் கண்டு சம்பாஷிப்பது போல, அவரைக் கண்டு ஸ்பரிசித்து அவருக்கு நேராக நின்று பேசலாம்.

64. ஈசுவரனிடத்திலிருந்தே எல்லாம் உற்பத்தியாகின்றன வென்பது:

ஒரு கனியிலிருக்கின்ற ஓடு, சதை, வித்து முதலிய எல்லாம் அதன் மரத்தினுடைய ஆதிவித்து ஒன்றி லிருந்தே உற்பத்தியாதல்போல, ஒரே ஈசுவரனிடத்தி லிருந்தே சராசரப் பொருள்களும், சைதந்யப் பொரு ளும், ஜடப்பொருளும் ஆகிய எல்லா சிருஷ்டிகளும் உற் பத்தியாகின்றன.

65. ஏகவஸ்து தவிர மற்றவை நிலையல்லவென்பது:

குருவானவர் சிஷ்யனுக்கு உபதேசிக்கும்பொழுது இரண்டு விரல்களை மேலே தூக்கிக் காட்டி, 'ப்ரஹ்மம், மாயை' என்று த்வைதத்தைக் குறிப்பிட்டுக் காட்டினர்; பின்னர் ஒரு விரலைத் தாழ்த்திக்கொண்டு, மாயை மறை ந்து போகிறபோது 'அகண்ட ப்ரஹ்மமாகிய ஏகவஸ்து தவிர பிரபஞ்சத்தில் எதுவும் நிலை நிற்பதில்லை' என்று

குறிப்பிட்டார். இவ்வுபதேசத்தால் அத்துவைதத்தின் நிலை யைத் தெரிந்துகொள்ளலாம்.

66. ஈசுவரனிடத்தில் விருப்பத்திற்குத் தக்கபடி பலன் சித்திக்குமென்பது:

கற்பக விருக்ஷத்தி னீழலில் உட்கார்ந்திருக்கும் ஒரு மனிதன், தான் ஓர் அரசனாக வேண்டுமென்று விரும்பி னால், ஒரு நிமிஷநேரத்தில் அவ்வாறே அரசனாய்விடுவான்; அடுத்த நிமிஷத்தில் அவன், ஓர் அழகிய பெண் தனக்கு வேண்டுமென்று நினைத்தால் உடனே அந்தப் பெண் பக் கத்தில் நிற்பாள். அவன் மேலும், அந்த விருக்ஷத்தின் அற்புத குணங்களைப் பரிசோதிக்க விரும்பி, ஒரு புலி யானது வந்து தன்னை விழுங்கவேண்டுமென்று நினைத்தால், அடுத்த நிமிஷத்திலேயே புலியின் வாயிலகப்பட்டுக்கொள் வான். இதைபோல், வேண்டியவற்றை யெல்லாந் தரத்தக்க ஈசுவரனிடத்தில் எவன், "ஏ ஈசுர! எனக்கொன்றும் கிடை த்திலதே" என்று கூறுகிறானோ அவன் உண்மையாக ஒன் றையும் அடையமாட்டான். எவன், "ஏ ஈசுர! எனக்கு நீ எல்லாவற்றையும் கொடுத்திருக்கின்றாய்" என்று கூறு கிறானோ அவன் சகல நன்மைகளையு மடைவான்.

67. மனிதன், ஈசுவரனிடத்தில் லயப்பட்டதற்குத் தக்கபடி சுகமடைவானென்பது:

ஈசுவரனிடத்திலே மனிதனவன் மிதமிஞ்சி லயப் படுவானானால், எவ்வித துன்பமு மடையமாட்டான்.

68. ஈசுவரன் வடிவமுற்றவராயும் வடிவ மற்றவராயு மிருக்கிறா ரென்பதைத் தெரிந்துகொள்ளு முபாயம்:

ஜகந்நாத க்ஷேத்திரத்திற்குப் போயிருந்த ஒரு சந்நியாசி 'ஈசுவரன் வடிவமுள்ளவரா வடிவமில்லாதவரா?' என்பதைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு விக்கிரகத்தின் சமீபத்திற் போய் அதனைப் பரீக்ஷிக்கத் தொடங்கி, தமது தண்டை யெடுத்து, 'அது விக்கிரகத்தைத் தொடுகிறதா இல்லையா?' என்று இடது பக்கத்திலிருந்து வலதுபக்கம் செலுத்தினர்; கொஞ்சநேரம்வரை அவர் எதையும் பார்க்க முடியவுமில்லை, தண்டினால் எதையும் உணர முடியவுமில்லை. ஆகனால் அவர், 'ஈசுவரன் வடிவமற்றவர்' என்று தீர்மானித்துக்கொண்டார். பின்னர் அவர், அத்தண்டை வலப் பக்கத்திலிருந்து இடப்பக்கமாகச் செலுத்தினர். அப் போது அது விக்கிரகத்தை ஸ்பரிசித்தது. அதனால் அவர், 'ஈசுவரன் வடிவமற்றவராயும், வடிவமுற்றவராயும் இரு விதமா யிருக்கின்றார்' என்பதைத் தெரிந்துகொண்டார். இதனாலேயே ஈசுவரனுடைய இருவித நிலைமைகளையு மறிந்துகொள்ளலாம்.

69. ஈசுவரனைத் தரிசித்தாலொழிய அவனுடைய நிலை மைகளை உணர முடியாதெனல்:

ஈசுவரனைத் தரிசிக்காதவன், அவருடைய நிலைமை களை உணரும் ஆற்றலுடையவ னாகமாட்டான்.

70. பக்தர்களின்பொருட்டு ஈசுவரன் அவரவரிஷ்டப்படி பல வடிவங்களாகத் தோற்றுவ ரென்பது:

தனக்கு இச்சையான ஒரு நிறச்சாய மிட்டுக்கொண் டிருக்கும் சாயக்கார னொருவன், தன்னிடம் சாயமிடவந்த

வாடிக்கைக்காரன் ஒருவனைப் பார்த்து, "உன் துணிக ருக்கு எந்த நிறச் சாய மிடவேண்டும்?" என்று கேட்டு, அவன், "சிவப்பு தோய்க்கவேண்டும்" என்று சொன்னால், தனது சாயத் தொட்டியிலே சிவப்பே தோய்த்துக் கொ டுப்பான்; மற்றொருவன், "மஞ்சட்சாய மேற்றவேண்டும்" என்று சொன்னால், மஞ்சட்சாயமே தோய்த்துக் கொண்டு வந்து கொடுப்பான். இப்படியே ஒவ்வொருவ ரிஷ்டப்படி யும் அவன் பல வேறு சாயங்களை இட்டுக் கொடுப்பான். இவற்றை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ஒருவன், சாயக்காரனை நோக்கி, "நண்ப! எனக்கு எந்த நிறத்திலும் பிரியமில்லை; உனக்கு எந்த நிறம் பிரியமோ அந்த நிறத்தி லேயே என் துணியை நனைத்துக்கொடு" என்றால், அவன் அப்படியும் தோய்த்துக் கொடுப்பான். இவ்வளவுக்கும் ஒரே தொட்டிதான் உபயோகிக்கப்படும். இதேபோல, எந்தன்மையுள்ள ஈசுவரன், பக்தர்களுடைய இஷ்டப் படி பலவிதவடிவ முள்ளவராகவும், வடிவ மில்லாதவராக வும் பிரசன்னமாவர். ஆயினும், அவர் எதிலும் கட்டுப்பட் டவரல்லர்.

71. ப்ரஹ்மத்திற்கும், சக்திக்கும் உள்ள வித்தியாசம்:

ப்ரஹ்மத்திற்கும், சக்திக்கும் உள்ள வித்தியாச மானது பேதமற்ற வித்தியாசமாம். அக்கினியும் அதன் உஷ்ண சக்தியும் ஒன்றாக விளங்குதல்போல, ப்ரஹ்மமும் சக்தியும் ஒன்றேயாம். பாலும் அதன் வெண்மை நிற மும் ஒன்றுதல்போல, ப்ரஹ்மமும் சக்தியும் ஒன்றேயாம்.

இரத்தினமும் அதன் பிரகாசமும் ஒன்றுதல்போல, ப்ரஹ்மமும் அதன் சக்தியும் ஒன்றேயாம்.

72. சக்தி பல வேறுவகைத் தோற்றமுடைய தாகுமேனல்:

சக்தியின் தோற்றங்கள் வெவ்வேறு தொழில்களினுலே வித்தியாசப்படும். ஈசுவரன் எல்லாப் பிராணிகளிலும் அந்தர்ப்பூதமாயிருக்கிறார். அவரில் வித்தியாசமின்று. வித்தியாசமானது தோற்றத்திற்றான் உள்ளது. ஜகன்மாதாவே அநந்த சக்தியாம். அவளே அனந்தமாத் தோற்றியிருக்கும் ஏகவஸ்துவுமாம். அவளே ஸ்தூலசக்தி, புத்தி சக்தி, புண்ணியசக்தி, ஞானசக்தி முதலாகிய அநேக சக்திகளையுடைய ஜகத்தாகவும், ஜீவனுகவும், வேறுபட்டு நிற்கின்றாள். இந்த ஜகன்மாதா வேதாந்தத்திலே கூறப்பட்ட ப்ரஹ்ம சக்தியே யன்றி வேறல்லள்.

73. நிச்சலன ப்ரஹ்மமும், சலன சக்தியும்:

நிச்சலன ப்ரஹ்மமும், சலன சக்தியும் ஒன்றேயாம். அகண்ட சச்சிதானந்தமாயுள்ள அவரே சர்வஜ்ஞாதாவாயும், சர்வ சைதந்நியமாயும், சர்வானந்தமாயுமுள்ள ஜகன்மாதாவாம். மணியும் அதன் ஒளியும் ஒன்றே யாதலால் மணியை நினைக்காமல் ஜோதியை மாத்திரம் நினைக்க முடியாது. அதேபோல, ப்ரஹ்மத்தை நினைக்காமல் சக்தியை நினைக்க முடியாது.

74. சக்தியின் தன்மை:

தெய்வீக மாதாவாகிய சக்தி ஏகமாயும், அநேகமாயும், ஏகத்துக்கும் அநேகத்துக்கும் அதீதமாயு மிருக்கிறாள்.

75. அகண்ட சச்சிதானந்தமே சக்தியாய் விளங்குகின்றதென்பது:

சிருஷ்டி, திதி, சம்ஹாரம் முதலிய தொழில்கள் உள்ளவிடத்திலே வித்தியாசக்தி விளங்கும். இச்சக்தியே அகண்ட சச்சிதானந்தமாம். அசைந்தாலும் அசைவற்றிருந்தாலும் தண்ணீர், தண்ணீரே யாவதுபோல, நித்திய வித்தியா சக்தியாயிருந்து பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்து, மற்றைய தொழில்களைப் புரிந்தாலும் புரியாவிட்டாலும், அகண்ட சச்சிதானந்தமாகிய ஏகவஸ்து, என்றும் களங்கமற்றதாம்.

76. ப்ரஹ்மவஸ்து எதிலும் பற்றுடையதன்றென்பது:

ப்ரஹ்ம வஸ்துவானது நன்மையினிடத்தோ தீமையினிடத்தோ சம்பந்த முடையதன்று. ஆனால், அது ஒரு தீபத்தினுடைய ஒளி எங்கும் வியாபித்திருப்பதுபோல வியாபித்திருக்கின்றது. ஒரு தீபத்தின் வெளிச்சத்தில் நல்ல புராணமும் படிக்கலாம்; தீத்தொழில்களையும் செய்யலாம். இதேபோல, ப்ரஹ்மவொளி பரவியவிடத்தில் நன்மையும் நடக்கும், தீமையும் நடக்கும். எனினும், தீப வெளிச்சத்தில் நடக்கும் செய்கைகள் அதனைச் சாராததுபோல, ப்ரஹ்மவொளி வியாபித்தவிடத்தில் நடப்பவைகளும் அதனைச் சாரா. இன்னும் அந்த ப்ரஹ்மமானது ஸர்ப்பத்தைப்போன்றுமிருக்கின்றது. ஸர்ப்பத்தின் வாயிலுள்ள விஷப்பைகளிலே நஞ்சு நிறைந்திருக்கின்றது. எனினும், அதனால் ஸர்ப்பத்திற்கு ஒன்றும் தீங்கில்லை. அதை

நெருங்கிய மனிதர்க்கே தீங்குண்டு. அதேபோல, ப்ரஹ்ம தத்தினிடத்திலே கொடுஞ்செயல்கள் வியாபித்திருப்பினும் அதற்கொன்றும் தீங்கில்லை. அவற்றைச் செய்யும் மனிதர்க்கே தீங்குண்டாம்.

77. பரமாத்மா செயற்கையாலடையும் அபிதானங்கள்:

பரமாத்மா, சிருஷ்டி முதலிய தொழில்களைச் செய்யாதவராகவும், சமுசாரம் செய்யாதவராகவும், நிஷ்கிரியராக நினைக்கப்படுகிறபொழுது ப்ரஹ்மம் அல்லது புருஷன் என்ற பெயரால் அழைக்கப்படுவார். சிருஷ்டி முதலிய தொழில்களைச் செய்பவராக நினைக்கப்படுகிறபோது சக்தி அல்லது மாயை, அல்லது பிரகிருதி என்னும் நாமங்களால் அழைக்கப்படுவார்.

78. கடவுள் பலவிதமாகப் பிரசன்னமாகும் விதம்:

"நான்" என்பது உள்ளவரையில் வடிவமுள்ள கடவுள் பலவித மகிமைகளின் மூலமாக ஜீவனுகவும் ஜகத்தாகவும் பிரசன்னமாவர்.

79. கடவுள் தோற்றங்களின் மகிமை:

வடிவமுள்ள கடவுளிடத்தில் நம்பிக்கை வைப்பவர்கள் மார்க்கம் தப்பானதென்று அத்துவைதிகள் கூறுகிறுப்பாராக. ஈசுர வடிவமுள்ள தோற்றங்கள் உண்மையிற் குறைந்தவைகளல்ல; சரீரம், மனம், பகிர்முக உலகம் ஆகியவற்றைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு உண்மையானவைகளே.

80. ஈசுவரத்தன்மையைப்பற்றிய அபிப்பிராயம்:

ஈசுவரனை வடிவமற்றவரென்றும் தியானிக்கலாம்; வடிவங்களுடன் கூடிய ஒரு வஸ்துவாகவும் தியானிக்கலாம். ஆனால், இவற்றுள் ஒன்றுதான் சரி, மற்றது தப்பு என்று சொல்லிவிடக்கூடாது. இவ்விரண்டில் அவரவர்கள் அபிப்பிராயப்படி எதை வைத்துக்கொண்டாலும் ஈசுவரனை அனுபவத்தில் அடையும்போது எல்லாம் தெளிவாகிவிடும்.

81. ப்ரஹ்மஞானம்:

அகண்டமானதும், பந்தமற்றதுமான ப்ரஹ்ம வஸ்துவானது சமாதியிற்றான் அநுபூதியாக அடையப்படும். பின்னர் சர்வம் மௌனமாம். பிரமை அல்லது அப்பிரமை, ஞானம் அல்லது அஞ்ஞானம் இவற்றைப்பற்றிய பேச்சுக்களெல்லாம் அடக்கப்பட்டுவிடும். அதன்மேல் சத்தொன்று மாத்திரமே எஞ்சி நிற்கும். உப்பாற் செய்யப்பட்ட பொம்மையானது அகண்ட சமுத்திரத்தில் போடப்பட்டால் அது கரைந்து அச்சமுத்திரத்துடன் லயமாய்விடும். பொம்மை உருவம் காணப்படாது. இவ்வுதாரணத்தைக்கொண்டு மேற் கூறியதைத் தெரிந்து கொள்க. இதுவே ப்ரஹ்மஞானம்.

82. ப்ரஹ்மத்தின் தன்மை:

பிரஹ்மம்: ஞானத்துக்கும் அஞ்ஞானத்துக்கும், நன்மைக்கும் தீமைக்கும், தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் அதிதமாயும், மேற்பட்டு முள்ளது.

83. ஈசுவரானுபூதியும், அவருடைய சிருஷ்டியும்:

முன்னர் ஈசுவரானுபூதியும், பின்னர் அவருடைய சிருஷ்டியுமாம். இது ராம மந்திரத்தால் உணரப்படும். "ராம" என்ற மந்திரமானது வால்மீகிக்கு உபதேசிக்கப் பட்டபோது அதைத் தலைகீழாக மாற்றி, "மாரா" என்று தொடங்கும்படி அவர் போதிக்கப்பட்டார். ஈசுவரானுபூதி முன்னென்பதையும், சிருஷ்டி பின்னென்பதையும் விளக்குதற்கே இங்ஙனம் ஏற்பட்டது. "மாரா" என்பதற்குப் பொருளாவது: மா – ஈசுவரன், ரா–ஜகத், என்பதாம். இதனுனே ஈசுவரன் முன் என்பதையும், பிரபஞ்சம் பின் னென்பதையும் உணர்ந்துகொள்க.

84. அகண்ட ப்ரஹ்மமும் ஈசுவரனும் ஒன்றே என்பது:

அகண்ட ப்ரஹ்மமும், வடிவமுள்ள ஈசுவரனும் ஒன்றே. இவற்றுள் ஒன்றை நம்பினுல் மற்றதையும் நம்பு இறதாக ஏற்படும். அக்கினி அதனுடைய உஷ்ண சக்தியி னின்றும் வேறு பிரிக்க முடியாது; அதன் சக்தியும் அவ் வாறும். சூரியகிரணங்கள் அதனின்றும் வேறு பிரிக்க முடி யா; அதேபோல், சூரியனுமாம். வெண்மை நிறத்தைப் பாலினின்றும் வேறுக்கல் முடியாது; அதேபோல் பாலும் அந் நிறத்தினின்றும் வேறுகாது. இவ் வுதாரணங்களைப் போலவே நிர்க்குண ப்ரஹ்மம் சகுண ப்ரஹ்மத்தினின் றும் வேறுபிரிக்க முடியாது. சகுண ப்ரஹ்மமும் அவ் வாறே நிர்க்குண ப்ரஹ்மத்தினின்றும் பிரிக்க முடியாது.

85. ஈசுவரனுடைய சகுணத்திற்கும் நிர்க்குணத்திற்கும் உதாரணம்:

எங்கும் சமமாகவுள்ள நீர்ப்பரப்பில் சில விடங்களில் தண்ணீரானது குளிர்ச்சியினாலே உறைந்துவிடும்; மறு படியும் அது சூட்டினால் உருகித் தண்ணீராகிவிடும். இதே போல், நீர்ப்பரப்புக்குச் சமானமாகிய ப்ரஹ்மத்தினிடத்திலே, பக்தனுடைய பக்தியாகிய குளிர்ச்சியினால் பனிக்கட்டி போன்ற சகுணவடிவங்கள் ஏற்படும். பின்னர் அவை, நிர்விகற்ப சமாதிக்கு இட்டுச் செல்கின்ற ஞான விசாரத்தால் இன்மையாம். அப்பொழுது 'நான் நான்' என்று சொல்கின்ற அகமானது அடியோடொழிந்துபோகும்.

86. பக்தனுக்கும் ப்ரஹ்மஞானிக்கும் ஈசுவரன் தோற்றும் விதம்:

பக்தனுக்கு ஈசுவரன் பல வடிவங்களாகப் பிரசன்ன மாகிறார்; சமாதியிலே ப்ரஹ்மஞான நிலையை அடைகின்றவனுக்கு அவர் நிராகாரமாய், நிர்ப்பந்தமாய் உள்ள நிர்க்குண ப்ரஹ்மமாவர். இங்குத்தான் ஞானத்துக்கும் பக்திக்கும் ஒற்றுமை பேற்படுகிறது.

87. ஈசுவரன் வடிவங்கள் எடுத்தற்கு உதாரணம்:

அக்கினிக்குக் குறிப்பிட்டுக் காட்டும்படியான வடிவம் ஒன்று மில்லையாயினும் அது சுடராக எரியும்போது பல் வேறு வடிவங்களாகத் தோற்றுகின்றது. அதேபோல வடிவமற்ற ஈசுவரனும் சில சமயங்களிலே பல வடிவங்களை யெடுத்துக்கொள்கின்றார்.

3-வது அத்தியாயம்

மாயை

88. மாயைக்கும் ப்ரஹ்மத்திற்கும் உதாரணம்:

சலிக்கின்ற பாம்பைப்போன்றும், சலனமற்ற பாம்பைப்போன்றும் மாயையும், ப்ரஹ்மமும் அமைந்துள்ளன. சலன சக்தியே மாயையாம்; நிச்சலன சக்தியே ப்ரஹ்மமாம்.

89. இதுவுமது:

சமுத்திர ஜலமானது ஒரு சமயத்திலே அமைதியாயும், மற்றொரு சமயத்திலே அலைகளோடு கொந்தளித்துக் கொண்டு மிருப்பதுபோல ப்ரஹ்மமும், மாயையும் அமைந்துள்ளன. அமைதியான நிலைமையிலுள்ள சமுத்திரம்போன்றது ப்ரஹ்மம்; அசையும் நிலைமையிலுள்ள சமுத்திரம்போன்றது மாயை.

90. பிரஹ்மத்துக்கும் சக்திக்கும் உள்ள சம்பந்தம்:

பிரஹ்மத்துக்கும் அதன் சக்திக்குமுள்ள சம்பந்தமானது, அக்கினிக்கும் அதன் உஷ்ணத்துக்கும் உள்ள சம்பந்தம் போன்றதாம்.

91. மாயை தோன்றி மறையும் விதம்:

களங்கமற்ற ஆகாயத்திலே ஒரு மேகம் திடீரென்று தோன்றி அவ்வாகாய முழுவதையும் மறைத்து அந்தகாரப்படுத்திவிடும். பின்னர் அது திடீரென்று காற்றினால் கலைக்

கப்பட்டும் போகும், இவ்விதமே மாயையும் பிரக்ஞையாகிய தெளிந்த ஆகாயத்திலே திடீரென்று தோன்றி அதை மறைத்து, பிரத்தியக்ஷ பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்து ஈசுவரனுடைய சுவாசத்தினாலே மறுபடியும் கலைக்கப்பட்டுப் போகிறது.

92. மாயை யில்லாவிடில் ப்ரஹ்மத்தை யறிய முடியாதேனல்:

பிரமத்தை வெளிப்படுத்துவது மாயையேயாம். மாயை யில்லாவிட்டால் எவரும் பிரஹ்மத்தை யறிதல் முடியாது. சக்தியை அறியாமல் அவரை அறிதற்கு மார்க்கமில்லை.

93. மாயை தானே நீங்கும் விதம்:

ஒரு திருடன், மனிதரால் கண்டு பிடிக்கப்பட்ட பொழுது, அவன் தானே ஓடுவதுபோல, மாயையினுடைய தன்மையைக் கண்டுபிடித்தால் அது தானே நீங்கிவிடும்.

94. மாயையின் தோற்றமும், நீக்கமும்:

ஹரியென்பவன் சிங்கத்தின் தலையைத் தன் தலையில் மாட்டிக்கொண்டு தன் சகோதரிக்கு விளையாட்டுக் காட்டும் பொருட்டு அவளிடம் சென்று பயங்காரமாகக் கூச்சலிட்டு வாளினால், அவள் அவனைச் சிங்கமென்றே நினைத்துப் பயந்து ஓடென்று கதறுவாள். அவன் உடனே அவ்வேஷத்தை நீக்கிவிடுவானாகில், அவள் அவனைத் தன்னுடைய சகோதரனென் றறிந்து, "ஆ! என்னருமைச் சகோதரனே?" என்று ஆச்சரியித்து அவன் சமீபத்திற் சென்று சந்தோ

ஷிப்பாள். இதுபோலவேதான் மாயையினுடைய அநிர்வசனீயசக்தியும். இதனால் பிரஹ்மம் மூடப்பட்டிருக்கும் போது பிரஹ்மத்தின் உண்மைச் சொரூபத்தை யுணராமல் மனிதர்கள் என்னமோவென்று நினைத்து மயக்கமாகப் பல விஷயங்களைச் செய்வார்கள். எனினும், அம் மாயை யாகிற திரை பிரஹ்ம வஸ்துவினிடமிருந்து நீக்கப்படுகிற பொழுது அம்மனிதர் தங்கள் சொந்த அந்தராத்மாவைப் பார்ப்பார்கள்.

95. மாயை தோன்றி மறைவதற்குத் தக்க உதாரணம்:

ஒரு சமயத்தில் களங்கமற்றிருந்த ஆகாயமானது திடீரென்று மேகங்களால் மூடப்பெற்று மறுநிமிஷத்தில் காற்றினால் அம்மேகங்கள் கலைந்து ஆகாயம் பரிசுத்தமானதை, ஒரு பரமஹம்சர் பார்த்து, "இப்படியேதான் மாயையும் தோன்றி மறைகிறது" என்று ஆனந்தித்துக் கூத்தாடினார். இவர் கண்டபடியே மாயையும் முன்னர் இருந்ததில்லை; பின்னர் பிரஹ்மமாகிய தெளிந்த ஆகாயத்திலே திடீரென்று தோன்றிப் பிரபஞ்ச மூழுவதையும் சிருஷ்டித்து, அதே ப்ரஹ்மத்தினுடைய சுவாசத்தினாலே மறுபடியும் கலைக்கப்பட்டுவிடுகிறது.

96. ஈசுவரனைக் காண மாயையை நீக்கவேண்டுமெனல்:

பாசத்தினாலும், புற்களினாலும் நெருக்கமாக மூடப்பட்டுள்ள ஒரு குளத்தைக் கண்டால் மனிதர், அதில் தண்

னீர் இல்லையென்றே நினைப்பார்கள்; அந்தப்பாசத்தை நீக்கினால் தண்ணீர் தெரியும். இதேபோல், மாயையாகிற படலத்தினால் கண்கள் மூடப்பட்டிருப்பதால் எங்கும் வியாபகமாயிருக்கிற ஈசுவரனைக் காண முடிகிறதில்லை. அவரைப் பார்க்கவேண்டுமானால் கண்களினின்றும் மாயையாகிற படலத்தை நீக்கிவிடவேண்டும்.

97. மாயை நீங்கினால் ஈசுவரன் பிரத்தியக்ஷமாவ ரேனல்:


சூரியனை மேகம் மறைப்பதுபோல, பிரஹ்மத்தை மாயையானது மறைத்திருக்கின்றது. மேகம் நீங்கியவுடன் சூரியன் தோற்றுவதுபோல, மாயை நீங்கியவுடன் ஈசுவரன் பிரத்தியக்ஷமாவார்.

98. இன்னவர்தாம் ஈசுவரனைப் பார்ப்பவரேனல்:

தண்ணீரோடு கலந்த பாலை வேறு பிரிக்கக்கூடிய சக்தி, அன்னப்பறவை யொன்றனுக்கே யுண்டு; மற்ற பறவைகட்கில்லை. இதேபோல், மாயையோடு கலந்திருக்கும் ஈசுவரனை அம்மாயையினின்றும் வேறு பிரித்துப் பார்க்கும் சக்தி பரமஹம்ஸர்களுக்குத்தான் உண்டு. சாதாரண மனிதர்களுக்கு அந்த சக்தி ஏற்படாது.

99. மாயையை நீக்கி ஈசுவரனைத் தரிசித்தற்கு விளக்கமான உதாரணம்:

இராமரும், இலட்சுமணரும், சீதையும் காட்டிற்குச் சென்ற காலத்தில் இராவணன் மூதலினும், சீதை நடுவினும்,



இலட்சுமணர் பின்னுமாகச் சென்றார்கள். அப்போது இலட்சுமணர் இராமரை எப்பொழுதும் பூரணமாகப் பார்க்க முடியாமல் கவலையடைந்து, தாம் இராமரைப் பார்த்தற்கு இடையூறு யிருந்த சீதையை நோக்கி ஒரு பக்கமாக ஒதுங்கிச் செல்லும்படி பிரார்த்தனை செய்து, அவள் ஒதுங்கிய வுடனே இராமரைத் தரிசித்து மகிழ்ந்தார். இவ்வுலகத்திலே ப்ரஹ்மம், மாயை, ஜீவன் ஆகியவற்றின் அமைப்பும் இப்படித்தான். மாயை நீங்காதவரையில் சிருஷ்டிக்கப்பட்டது (அதாவது: ஜீவன்) சிருஷ்டித்தவரை (அதாவது: ஈசுவரனை) பார்த்தல் முடியாது.

100. மாயை பக்தனை வருத்தாதென்பது:

பூனையானது, தன் குட்டிகளைப் பற்காளினாலே கௌவி யெடுக்கும்போது அக் குட்டிகளுக்குத் துன்ப முண்டாகாது. ஆயினும், ஒரு எலியானது அப்பூனையாற் பிடிக்கப் பட்டால் உடனே மரணமடையும். இதைபோல், மாயையானது பக்தனைப்பற்றினும் ஒன்றும் செய்யாது; மற்றையரைப் பற்றினால் அழித்துவிடும்.

101. சிவமுஞ் சத்தியுங் கூடினாலே சிருஷ்டியாமென்பது:

உலர்ந்த களிமண்ணை மாத்திரங்காண்டு எந்தக் குயவனும் ஒரு பாண்டத்தைச் செய்தல் இயலாது; அதனோடு தண்ணீரைச் சேர்த்தால் மாத்திரம் அமையும். இதைபோல், சிவமும் சக்தியும் (அதாவது ஞானமும் வன்மையும்)

கூடினால் மாத்திரமே சிருஷ்டி யுண்டாகும். சக்தியின் உதவி யின்றிச் சிவமாத்திரம் சிருஷ்டிசெய்ய முடியாது.

102. மாயையினாலேயே ப்ரஹ்மஞானமும் மோக்ஷமும் சித்திக்குமெனல்:

மாயையினால பிரஹ்மஞான லாபமும், மோக்ஷமும் நமக்குச் சித்தியாகின்றன; மாயை யின்றேல் அவற்றை அநுபவித்தற்குக் கனவுகூடக் காணமுடியாது. மாயையி லிருந்தே துவைதமும், பரஸ்பரத்தன்மையும் இளம்புகின் றன; மாயைக்கப்பால் போக்தா, போக்கியம் என்றவைகள் இல்லை.

103. மாயையை அறிந்தவிதம்:

"மாயையைப் பார்க்கவிரும்பி நான் ஒருதினம் ஒரு தரிசனம் கண்டேன்; ஒரு சிறு துளி மெல்ல விரிந்து ஒரு பெண் ஆயிற்று. அப்பெண் பெரிய ஸ்திரீயாய் ஒரு குழந் தையைப் பெற்றாள். அக்குழந்தை பிறந்தவுடனே அவள் அதை யெடுத்து விழுங்கிவிட்டாள். இப்படியே அவளுக்கு அநேகம் குழந்தைகள் பிறந்து அவை அவளால் விழுங் கப்பட்டன. அப்பொழுது அவளை மாயையென்று நான் அறிந்தேன்."

104. மாயை இன்னதென்பது:

மாயை யென்பது, ஆத்ம ஞானவிவிருத்திக்குத் தடை யாகின்ற அந்தகாரமேயாம்.

4-வது அத்தியாயம்

அவதார புருஷர்கள்

105. அவதார புருஷர்கள் தோன்றும் விதம்:

சமுத்திரத்தினின்றும் அலைகள் எப்படி யுண்டாகின்றனவோ அப்படியே பிரஹ்மத்தினின்றும், இராமர், கிருஷ்ணர் முதலியவர்களைப்போன்ற அவதார புருஷர்கள் தோன்றுவார்கள்.

106. இதுவுமது:

அகண்ட சச்சிதானந்தமாகிற விருக்ஷத்திலே இராமர்கள், கிருஷ்ணர்கள், புத்தர்கள், கிறிஸ்துக்கள் முதலியவர்களாகிய எண்ணற்ற கிளைகள் உற்பத்தியாகி யிருக்கின்றன. அவர்களாகிய அக்கிளைகளினின்று ஒன்றிரண்டு (ஒருவர் இருவர்) அடிக்கடி கீழே யிறங்கி இவ்வுலகிற்கு வந்து பிரமாண்டமான மாறுதல்களையும், குழப்பங்களையும் உண்டுபண்ணுகிறார்கள்.

107. அவதார புருஷர்களின் தெய்வத் தன்மையை அறிவார் சிலரே என்பது:

பகவான் இராமச்சந்திரர், இவ்வுலகத்துக்குள் வந்திருந்த காலத்தில், அவர் ஈசுவரனுடைய அவதாரமென்பதை, ஏழு ரிஷிகள்தாம் உணர்ந்தார்கள். இதேபோல், ஈசுவரன் இவ்வுலகத்தில் அவதரிக்கின்றபொழுதெல்லாம் அவருடைய தெய்வீகத்தன்மையைச் சிலர்தாம் உணரமுடியும்.

108. சமீபத்திலுள்ளவர்கள், மகான்களுடைய மகிமையை உணராரென்பது:

தீபத்தின் அடியிலே எப்பொழுதும் அதன் நிழலிருக்கும்; அது சமீபத்திலிருந்தாலும் விளக்கின் பிரகாசம் அதில் பிரவேசிப்பதில்லை. இதேபோல், ஒரு மகாத்மாவின் சமீபத்திலே யுள்ளவர்கள் அவருடைய மகிமையை உணராரர்கள். தூரத்திலுள்ளவர்கள்தாம் அவருடைய ஆத்மப் பிரகாசத்திலும், அசாதாரண சக்தியிலும் இரம்மிய மடைவார்கள்.

109. அவதார புருஷர்களின் தோற்றங்கள்:

யானைக்கு வெளியிலும், உள்ளிலும் தந்தங்களிருப்பதுபோல ஸ்ரீ இராமர், கிருஷ்ணர் முதலியவர்களைப்போன்ற தெய்வீக புருஷர்களுக்கு வெளித் தோற்றமும் உள் தோற்றமு முண்டு. அவர்கள் வெளித்தோற்றத்தில் எல்லாருடைய பார்வைக்கும் சாதாரண மனிதர்களைப்போலவே ஒழுகுவார்கள். அவர்களுடைய ஆத்மாக்கள் கர்மபூமிக்கப்பால் வெகுதூரத்திலே அமைதியடைந்திருக்கும்.

110. ஓர் ஈசுவரனே பல அவதார புருஷர்களாகிறாரென்பது:

ஒரே ஈசுவரன்தான், ஜனனசாகரத்திலே மூழ்கி, ஓரிடத்திலே இளம்பி, 'கிருஷ்ணன்' எனப் பெயர் பெறுகிறார். அவரே மற்றொருசமயம் மூழ்கி மற்றோரிடத்தில் இளம்புமபொழுது, 'கிறிஸ்து' எனப்படுகிறார்.

111. ஈசுவரன் சில சமயங்களில் பிரயாசையின்பேரி லும், சில சமயங்களில் இலகுவாகவும் காணப்படுகிறரென்பது:

வெயிற் காலத்திலே ஜலமானது கிணற்றில் அதிக மான ஆழத்திலிருந்து மிகுந்த பிரயாசையின்பேரில் எடுக் கப்படுகிறது. மழைக்காலத்தில் தண்ணீர் எவ்விடத்தும் சுலபமாகக் கிடைக்கிறது. இதுபோலவே ஈசுவரன், சாதா ரண காலங்களில், ஜபதபங்களின் மூலமாக அதிகப் பிர யாசையின்பேரில் அடையப்படுகிறார்; அவதார காலங்களில் அவதார புருஷர்களின்மூலம் அவர் எங்கும் சுலபமாகக் காணப்படுகிறார்.

112. அவதார புருஷர்கள் மனுஷவர்க்கத்தாரை ஈடேற்றும்பொருட்டே பிறவித் துன்பத்தை அனுபவிக்கிறார்களெனல்:

ஒரு விசித்திரம் பொருந்திய இடமானது, உயர்ந்த சுவரால் சூழப்பட்டிருந்தது. வெளியிலுள்ள மனிதர்க ளுக்கு அவ்விடத்திலுள்ள விசித்திரம் இன்னதென்றே தெரியாது. ஒரு சமயம் நான்கு மனிதர்கள் கூடி அக் கோட்டைக் குள்ளிருக்கும் விநோதத்தை இன்னதென் றறியக் கருதி உயர்ந்தவோ ரேணியைச் சாத்தி அச் சுவ ரின்மே லேறினர்கள். முதல் மனிதன் மேலேறி உள்ளே எட்டிப் பார்த்தவுடன் அங்குள்ள அதிசயங்களைக் கண்டு, 'ஹா! ஹா!! ஹா!!!' என்று சிரித்துக்கொண்டே இந்தப் பக்கம் திரும்பாமல் உள்ளே குதித்துவிட்டான். இரண்டா

வது மூன்றாவது மனிதர்களும் அவ்வாறே குதித்தோடிட் டார்கள். நான்காவது மனிதனோ மேலேறினவுடன் அக் கோட்டைக்குள் ஓர் அழகிய சோலையிலே மிக்க ருசியுள்ள பழங்கள் நிறைந்த அநேகம் விருக்ஷங்களிருக்கக் கண்டு, தனக்கு உள்ளே பாய ஊக்கமுண்டாகியும் அவ்வாறு செய் யாமல் கீழே யிறங்கிவந்து வெளியிலிருந்த எல்லா ஜனங் களுக்கும் அங்குள்ள விநோதங்களைத் தெரிவித்தான். இது போலவே பிரஹ்மமானது மேற்கூறியபடி சுவரினாற் சூழப் பட்ட தோட்டத்திற்குச் சமானமா யிருக்கின்றது. அதைத் தரிசிக்கிறவன் உலகத்தை மறந்து அதிலே லயமாகும்படி அதை நோக்கி வேகமாகச் செல்வான். பரிசுத்த புருஷர்க ளும், முக்தாத்மாக்களும் அவ்வகுப்பைச் சார்ந்தவர்களே. மனிதவர்க்கத்தாரை இரக்ஷிக்கும் இரக்ஷகர்களோ ஈசுவர னைத் தரிசிப்பவர்களே யாயினும், அந்தத் திவ்ய தரிசனத் தின் ஆனந்தத்தைப் பிறருக்கும் பங்கிட்டுக் கொடுக்கக் கருதி நிர்வாண மடையாமல், உலகத்திலேயே மீண்டும் பிறந்து மறுபிறப்புத் துன்பங்களை அனுபவித்துக்கொண்டு மயக்கிடைப்பட்ட டுழல்கின்ற மனிதர்க்கு ஞானத்தை உப தேசிக்கிறார்கள்.

113. அவதார புருஷர்கள் தோன்றுவதற்குக் காரணம்:

அவதார புருஷர்கள் ஈசுவரனுடைய தூதரேயாவர். இன்னும் அவர், பராக்கிரமசாலியாகிய ஓர் அரசனுடைய பிரதிநிதி போன்றவர். தன்னுடைய ஆளுகைக் குட்பட்ட ஒரு தேசத்தில் எங்கேனும் கலகமுண்டானால் அரசன்

அதனை யடக்குவதற்குத் தனது பிரதிநிதியை அனுப்புவதுபோல, உலகத்தில் எந்தப் பாகத்திலேனும் தர்ம க்ஷீணம் ஏற்பட்டால் அதனை இரக்ஷித்து விருத்தி செய்வதற்காக ஈசுவரன் அங்கே அவதார புருஷர்களை அனுப்புவார்.

114. சித்த புருஷர்களும், அவதார புருஷர்களும்:

சித்த புருஷர்கள், அநேககாலமாக மண்ணால் மூடப்பட்டிருக்கும் பழங்கிணற்றைத் தூர்வை யெடுத்துச் சுத்தப்படுத்தி உபயோக முடையதாகச் செய்யும், ஒரு புராதன சின்ன பரிசோதகர் போன்றவராவர். அவதார புருஷர்களோ, முன்னே தண்ணீரில்லாத ஓரிடத்திற்கூட நூதனமாக ஒரு கிணற்றைத் தோண்டுகின்ற ஒரு யந்திர சாஸ்திரி போன்றவராவர். புராதன சின்ன பரிசோதகர் உள்ளே ஜலமுள்ள பாழ்ங்கிணற்றைச் சுத்திகரித்து உபயோகமுள்ளதாகச் செய்வதுபோல, சித்தபுருஷர்கள், முன்னமே மோக்ஷ இச்சையுண்டாய் அதனை யடையச் சில காரணங்களால் தடைப்பட்டிருப்பவர்களுக்கு அத்தடையை நீக்கி எளிதில் மோக்ஷம் கைகூடச் செய்வார்கள். ஒரு யந்திர சாஸ்திரி, முன் ஜலமில்லாத விடத்தில் நூதனமாக ஒரு கிணற்றை உண்டாக்குவதுபோல அவதார புருஷர்கள் மோக்ஷவிருப்பே இல்லாதவர்களுக்கும் முத்திமார்க்கத்தைக் காட்டி அவர்களை இரக்ஷிப்பார்கள்.

115. அவதார புருஷர்கள் மானிடரைக் கரையேற்றும் விதம்:

ஒரு பெரிய கப்பலானது, தன் பின்புறமாகத் தொடுக்கப்பட்ட படகுகளை இழுத்துக்கொண்டு ஆழமான சமுத்திர

த்தைக் கடந்து அக்கரை சேர்வதுபோல, ஓர் அவதார புருஷர் அவதரித்து, அநேகம் அடியார்களைச் சுலபமாக மாயா சமுத்திரத்திற் கப்பாலுள்ள அபயஸ்தானத்திற் கழைத்துச் செல்வார்.

116. சித்தபுருஷர்களும், அவதார புருஷர்களும் ஜனங்களை இரக்ஷிக்கும் விதம்:

மேல் வெள்ளம் அதிகரித்துப் பெருகும்பொழுது பெரிய நதிகளிலும், சிற்றாறுகளிலும், ஏரி குளங்களிலும், மற்ற நிலங்களிலும் நிறைந்து எல்லாவிடங்களையும் ஜலமய மாக்கிவிடும். மழைஜலமோ, தான் வழக்கமாகச் செல்கின்ற கால்வாய்களின் மூலமாகமாத்திரம் ஓடிவிடும். இவைபோ லவே, ஓர் அவதார புருஷர் தோன்றியபொழுது எல்லோ ரும் அவருடைய கிருபையால் இரக்ஷிக்கப்படுவார்கள். சித்தர்களோ மிகுந்த கஷ்டப்பட்டுத் தவஞ்செய்து தங்களை மாத்திரந்தான் இரக்ஷித்துக்கொள்வார்கள்.

117. இதுவுமது:

ஒரு பெரிய கட்டையானது நதியின் வெள்ளத்திலே மிதந்து சென்றால், அதில் நூற்றுக் கணக்கான பக்ஷிகள் உட்கார்ந்தாலும் ஜலத்தில் அமிழாமல் அவற்றை யெல் லாம் கொண்டுசெல்லும். அதில் மிதக்கும் ஒரு புல்லானது தன்மேல் ஒரு காக்கை யுட்கார்ந்தாலும் அமிழ்ந்துவிடும். இவைபோலவே, ஓர் இரக்ஷகர் தோன்றினால் அவரால் அநேகர் மோக்ஷத்தை யடைவார்கள். சித்தபுருஷர் மிகுந்த கஷ்டப்பட்டுத் தங்களை மாத்திரந்தான் இரக்ஷித்துக்கொள்ள முடியும்.

118. அவதார புருஷர்கள் மனிதர்களை ஈசுவர சந்நிதானத்துக்குக் கொண்டு செல்லும் விதம்:

புகை வண்டியின் இயந்திரமானது தன் பின்புறத்தே மாட்டப்பட்ட எத்தனையோ பாரவண்டிகளையெல்லாம் தான் முன்னமைந்து இழுத்துச் செல்லும். இதுபோலவே, நம் மிரக்ஷகர்களும்: பெரும்பாப மூட்டைகளைச் சுமந்துகொண்டிருக்கும் எத்தனையோ மனிதர்களையும் சர்வேசுவரனுடைய சந்நிதானத்துக்குக் கொண்டு செல்வார்கள்.

119. ஒரு மகாத்மா, தன் பந்துக்களால் கௌரவிக்கப்படாததற்குக் காரணம்:

ஒரு செப்படி வித்தைக்காரனுடைய பந்துக்கள், அவனது வித்தையைப்பற்றி ஆச்சரியப்படுவதில்லை. மற்ற ஜனங்களே அவன் வித்தை செய்புங்காலத்தில் அதை விழித்தகண் விழித்தபடியே அதிசயித்துப் பார்த்துக் கொண்டு நிற்பார்கள். இதேபோல், ஒரு மகாத்மா தம் பந்துக்களால் கௌரவிக்கப்படார்; அன்னியராலேயே நன்கு மதிக்கப்படுவார்.

120. மகாத்மா தூரதேசத்திலேதான் கொண்டாடப்படுவா ரென்பது:

வஜ்ரவதுல விருக்ஷத்தின் வித்துக்கள் அதனடியில் விழாமல் வெடித்துக் காற்றினாலே வெகு தூரத்திற் கொண்டு போகப்பட்டு அங்கே வீழ்ந்து வேரூன்றி முளைத்தெழுகின்றன. அவைபோலவே, ஒரு மகாத்மாவினுடைய உண்மை அவர் சொந்த தேசத்தில் வெளிப்படுவதில்லை;

தூரதேசத்திற்றான் வெளிப்படும்; அவர் அங்கேதான் கொண்டாடப்படுவார்.

121. அவதார புருஷர் எதற்கும் சுலபமாக விடையளிப்பா ரென்பது:

அவதாரபுருஷரிடத்தே வினவப்படும் கேள்விகளில் எதுவும் விடையற்ற கேள்வியன்று. சம்சாரத்தைப்பற்றியும், ஆத்மாவைப்பற்றியு மூள்ள மிகக் கடினமும் குழப்பமான கேள்விகளுக்கெல்லாம் அவர்கள், அவை உலகத்திலே மிகவும் சாதாரணமான விஷயங்களைப்போல விடையளித்துவிடுவார்கள். அவர்களுடைய வியாக்கியானங்களோ ஒரு சிறு குழந்தையும் அறியும்படி மிகத் தெளிவாயிருக்கும். அவர்கள் திவ்ய ஞான சூரியராவர். அவருடைய ஒளியானது, எத்தனையோ யுகங்களாகக் குவிந்திருக்கும் அஞ்ஞானவிருளைத் தூரத்திவிடும்.

122. அவதார புருஷர்களும் சந்திர சூரியப் பிரகாசமும் சமமெனல்:

சில வேளைகளில் சந்திர சூரியப் பிரகாசங்கள் ஒன்று சேர்ந்தாற்போன்ற பிரத்தியேகமான வொரு சேர்க்கைப் பிரகாசந் தோன்றுகின்றது. பக்தி, ஞானம் ஆகிய இரண்டும் சேர்ந்த சைதந்நியதேவர் போன்ற பிரத்தியேக அவதார புருஷர்கள் இதற்குச் சமானமாவார்கள். அந்தப் பிரகாசமானது ஆகாயத்தில் சூரியனும், சந்திரனும் ஏககாலத்தில் தோன்றியதுபோன்றிருக்கின்றது. இதேபோல, ஞானமும் பக்தியுமுள்ள அவதார புருஷர்களின் காட்சியா

னது, மேற் கூறியபடி, ஒரு பிரத்தியேகமான காட்சியாய் விளங்குகின்றது.

123. மகாத்மாக்கள் நம்மைப்போல சரீரம் பெற்றவர்களாயிருப்பினும், அவர்களைச் சாமானியராகக் கருதலாகாதென்பது:

இராமர், சீதை, கிருஷ்ணர், இராதா முதலியவர்களின் சரித்திரங்கள் வீண் உவமானக் கதைகளே யென்றும், அவர்கள் உண்மையில் அச்சரித்திரங்கட்குச் சம்பந்தப்பட்டவர்களல்ல சென்றும் நினைத்தல் கூடாது. அவர்களின் சரித்திரங்கள் உண்மையே. அவர்கள் நம்மைப்போலவே மாம்சமும் இரத்தமு முள்ள மனித வடிவங்களையே பெற்றிருந்தார்கள். எனினும், அவர்கள் தெய்வீகத் தன்மை பொருந்தியவர்களா யிருந்தார்கள். அதனாலேயே அவர்களுடைய வாழ்க்கைகள் சரித்திர சம்பந்தமாகவும் உபமான ரூபமாகவும் கூறப்படுகின்றன.

124. அவதாரபுருஷர்கள் தன்மையும், சாதாரண ஜீவர்கள் தன்மையும்:

பாண காட்சியில், ஒருவிதமான பூந்தொட்டியானது தோன்றிச் சிறிது நேரத்திற் கொருமுறையாகப் பற்பல மூறைகளில் பல்வேறு விதமான புஷ்பங்களைத் தோற்றுவிக்கும். இதேபோல, அவதார புருஷர்களும் தோன்றிப் பற்பல அற்புதங்களை விளைவித்துக்கொண்டிருப்பார்கள். இன்னும் அந்தப் பாண வேடிக்கையில் மற்றொருவிதப் பூந்தொட்டி தோன்றுவதுண்டு; அது கொளுத்தப்பட்டால்

சிறிது நேரம் எரிந்து திடீரென்று அவிந்துபோய்விடும். இதுபோலவே, சாதாரண ஜீவர்கள் நெடுங்காலம் பக்தி யனுஷ்டானங்களைப் புரிந்து சமாதி யடைந்துவிடுவார்கள். அவர்கள் திரும்பி வருவதில்லை.

125. ஈசுவரனை அறிதல் எளிதன்றென்பது :

ஈசுவர சொரூபத்தைப் பரிபூரணமாக அறிதல் நம்மால் இயலாது. அவரை நாம் உண்மைப்பொருள் என்று உணரக் கூடுமானால் அதுவே போதும்.

126. ஈசுவரத்தன்மையில் சிறிது பாகத்தை யுணர்ந்தாலும் முற்றும் உணர்ந்ததுபோலாகுமெனல் :

ஒரு மனிதன் கங்காநதியின் ஓரிடத்தில் வந்து ஜலத்தைத் தொடுவானானால், அதன் உற்பத்தியிலிருந்து முகத்துவாரம் வரையில் ஸ்பரிசித்தவன்போல, "நான் புண்ணிய நதியைத் தரிசித்து ஸ்பரிசித்துப் பாக்கியவந்தனானேன்" என்று களிப்படைவான். அதேபோல, ஈசுவரத்தன்மையில் சிறிது பாகத்தை யுணர்ந்தாலும் முழுதும் முணர்ந்ததுபோலாம்.

127. ஈசுவரனை இன்னரிடத்தில் உணரலாமென்பது :

ஈசுவரனை அறிவேண்டுமானால் அவரை அவர்க்குரிய மனிதனிடத்திலேயே தேடவேண்டும்; வேறெந்த வஸ்துவைக்காட்டிலும் மனிதனிடத்திற்றான் அவருடைய தெய்வீகத்தன்மை அதிகமாக விளங்குகிறது. ஈசுவர பக்தியாலே தொந்தளிக்கின்ற ஹிருதயத்தை யுடையவனும், ஈசு

வரனிடத்திலேயே வசித்திருப்பவனும், அவருடைய பக்தி பினாலே பித்துப்பிடித்தவனுமாகிய ஒரு மனிதன் கிடைப் பானுவென்று சுற்றிப் பார்க்கவேண்டும். அத்தகைய மனிதனிடத்திலேயே ஈசுவரன் பிரசன்னமாவார்.

5-வது அத்தியாயம்
ஈசுவரனும், ஜீவனும்

128. ஈசுவரனே உண்மை வஸ்துவென்பது :

ஈசுவரனே உண்மையானவர்; ஜீவனுகவும் ஜகத்தாகவு மூள்ள அவருடைய தோற்றங்களெல்லாம் உண்மையல்ல; அநித்தியமானவைகளே.

129. பெத்தாத்மாவும் ஈசுவரனும் :

பெத்தாத்மா மனிதன்; பந்தமற்ற ஆத்மா ஈசுவரன்.

130. ப்ரஹ்மம் துன்புறும் விதம் :

ப்ரஹ்மமானது, பிரகிருதியின் ஐந்து ஜடப்பொருள்களுடன் சம்பந்தப்படுவதினல் துன்புறுகின்றது.

131. ஜீவாத்மாவுக்கும், பரமாத்மாவுக்கும் உள்ள சம்பந்தம் :

ஒரு நீர் மட்டத்தின்மேல் ஒரு பலகையானது குறுக்காகப் போடப்பட்டால் அந்நீரானது இரண்டாகப் பிரிக்கப்பட்டாற் போன்று தோற்றுவதுபோல, அகண்ட வஸ்துவானது மாயா உபாதியினுலே ஜீவாத்மாவினின்றும் வேறு

பிரிக்கப்பட்டதுபோலத் தோன்றுகிறது. உண்மையில் அவை யிரண்டும் ஒன்றேயாம்.

132. ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றென்பது :

தண்ணீரும், அதன் குமிழியும் ஒன்றே; குமிழியானது நீரிலேயே பிறந்து, நீரிலேயே மிதந்து, முடிவில் அந் நீரிலேயே லயமாகிறது. அதுபோலவே, ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஒன்றும். அளவில் மாத்திரந்தான் வித்தியாசமுண்டு. ஒன்று முடிவுள்ளது, கட்டுப்பட்டது; மற்றொன்று அகண்டமானது. ஒன்று சார்புள்ளது, மற்றொன்று ஸ்வதந்திரமானது.

133. ஒருவன் ஈசுவரனின்றியிருத்தல் முடியாதென்பது :

தீபமானது எண்ணெயின்றி எரியாது; அதேபோல், ஒருவன் ஈசுவரனின்றி யிருத்தல் முடியாது.

134. ஈசுவரன் மனிதனிடத்திலே சம்பந்தப்பட்டிருக்கும் விதம் :

காந்தமானது இரும்பினிடத்திலே சம்பந்தப்படுவதுபோல, ஈசுவரன் மனிதனிடத்திலே சம்பந்தப்பட்டிருக்கிறார். அப்படியானால் ஏன் ஈசுவரன் மனிதனை ஆகருஷிக்கிறதில்லை யென்றால், அதற்குக் காரணங் கூறுவாம்: மண்ணாலே கெட்டியாக மூடப்பட்டுள்ள இரும்பானது காந்தத்தின் ஆகருஷண சக்தியால் அசைக்கப்பட மாட்டாது. அதேபோல, மாயையினாலே கெட்டியாக மூடப்பட்டுள்ள ஜீவன், ஈசுவரனுடைய ஆகருஷணத்தை உணர்வதில்லை.

இரும்பில் மூடியிருக்கும் மண்ணைத் தண்ணீரால் சுத்தமாகக் கழுவிவிட்டால் அவ்விரும்பு, காந்தத்தால் இழுக்கப்படும்; அதேபோல், ஆத்மாவானது இடைவிடாத ஜபதபங்களாலே மாயையாகிற மண்ணைக் கழுவிவிட்டால் அப்போது அது சீக்கிரமாகவே ஈசுவரனால் ஆகருஷிக்கப்படும்.

135. ஜீவன், ஈசுவரனிடத்திலே லயமாகும் விதம்:

ஜீவன் மூடிவுள்ள ஒரு வஸ்து; ஈசுவரன் அகண்டமானவர். மூடிவுள்ள ஜீவனானது, அகண்ட வஸ்துவில் எப்படி லயமாகிறதெனில், ஓர் உப்புப் பொம்மையானது சமுத்திரத்திலே வீழ்ந்து அதன் ஆழத்தைக் காண முயற்சித்தால் அதிலேயே கரைந்து லயமாய் விடுவதுபோல, ஜீவன், ஈசுவரனுடைய அளவை அறிதற்கு முயற்சித்துத் தனது வேற்றுமைத் தன்மை நீங்கி அவரிடத்திலே லயமாய்விடும்.

136. ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியத்திற்குத் தக்க உதாரணம்:

கடிகாரத்திலுள்ள மணிமுள்ளும், நிமிஷமுள்ளும் பார்வைக்கு வேற்றுமையுடையன போலத் தோற்றினும் அவை ஒவ்வொரு மணி நேரத்திற்கு ஒருமுறை ஒன்று சேர்வதுபோல, ஜீவாத்மாவும், பரமாத்மாவும் சம்பந்தப்படத் தக்கனவாம். அதுகூலமான சந்தர்ப்பங்கள் நேரிடும் பொழுதெல்லாம் அவை ஐக்கியமாதல் கூடும்.

137. ஈசுவரனுலேயே ஜீவனுக்கு மதிப்புண்டென்பது:

ஒன்று என்ற எண்ணுடனே சுன்னங்கள் சேர்க்கப்பட்டால் எவ்வளவு உயர்ந்த எண்ணிக்கைகளும் ஏற்படும்.

முதலிலுள்ள ஒன்றை எடுத்துவிட்டால் எத்தனைச் சுன்னங்க ளிருப்பினும் ஒருவிதமான எண்ணையும் காட்டமுடியாது. இதுபோலவே, ஜீவன், ஒன்றையுள்ள ஈசுவரனைப் பற்றிக் கொண்டிருக்கும் வரையில் அதற்கு மதிப்புண்டு; இல்லையேல், ஒருவித மதிப்பு முண்டாகாது. எனெனில், இங்கே எல்லா வஸ்துக்களும் ஈசுவர சம்பந்தத்தினாலேயே மதிப்பைப் பெறுகின்றன.

138. ஜீவனானவன் எல்லாவற்றையும் ஈசுவரனுக்காகவே செய்தால் இலாபத்தை அடைவானென்பது:

ஜீவனானவன் ஏகவஸ்துவாயிருக்கிற ஈசுவரனைப் பற்றிக்கொண்டு அவருக்காகவென்றே எல்லா வேலைகளையும் செய்வானானால் மேன்மேலும் அதிக இலாபத்தையே அடைவான்; அவன், ஈசுவரனை மதிக்காமல் எதையும் தனக்கென்றே, தன்னுடைய சொந்தப் புகழுக்காகச் செய்வானாயின் எப்பயனையும் அடையமாட்டான்.

139. ஈசுவரனே எல்லாமாவரெனல்:

ஈசுவரனே மானிடவடிவங்களை எடுத்து உலகில் விளையாடிக்கொண்டிருக்கிறார்; அவர் ஒரு பெரிய செப்படி வித்தைக்காரன் போன்றவர்; ஜீவனும் ஜகத்துமாயுள்ள இந்த மித்தியா காட்சியே அவருடைய செப்படி வித்தையாம். செப்படி வித்தைக்காரனாகிய ஈசுவரனே உண்மை; செப்படி வித்தையாகிய ஜகத்து பொய்யே.

6-வது அத்தியாயம்

ஈசுவரனும், ஈசுவர பக்தர்களும்

140. பக்தர்கள் சமர்ப்பிப்பவைகளை ஈசுவரன் திருப்தியுடன் ஏற்றுக்கொள்வா ரென்பது:

பூஸ்திதியுள்ள ஒருவனிடத்தே ஓர் ஏழைக் குடியானவன் ஒரு சிறிய வெகுமதியைக் கொண்டுவந்தால் அவன் மிக்க தனவந்தனாயினும் அதனைச் சந்தோஷத்துடனே ஏற்றுக்கொள்வான். அதுபோலவே, ஈசுவரனும், மிக்க பெரியவராயும், சர்வசக்தி வாய்ந்தவராயு மிருந்தபோதிலும் உண்மையான ஹிருதயத்தையுடைய பக்தன் சமர்ப்பிக்கும் சொற்பமானவைகளையும் மிக்க சந்தோஷத்துடனும், திருப்தியுடனும் ஏற்றுக்கொள்வார்.

141. ஈசுவரன் மனிதனுடைய பாவங்களைப் போக்கும் விதம்:

புழுதியிற் புரண்டு தேகத்தை அழுக்காக்கிக்கொள்வது குழந்தையினுடைய சுபாவம்; ஆயினும், அப் பிள்ளையின் தாய் எப்பொழுதும் அதனை அழுக்காயிருக்கும்படி விடுவதில்லை. அடிக்கடி அதனைக் குளிப்பாட்டிச் சுத்தப்படுத்திக்கொண்டே யிருப்பாள். இதுபோலவே, பாவஞ் செய்வது மனிதனுடைய சுபாவமாயினும், ஈசுவரன் அவனுடைய பாவங்களைப் போக்கும் மார்க்கங்களை சிருஷ்டிப்பா ரென்பது நிச்சயம்.

142. ஈசுவரன் அவரவர் விருப்பத்திற்குத் தக்கபடி விளங்குவா ரென்பது :

ஒரே காயைச் சிலர் குழம்பாகவும், சிலர் கறியாகவும் ஆக்கப் பிரியப்படுகிறார்கள். அதுவும் அவரவர் இஷ்டம் போலக் குழம்பாகவோ கறியாகவோ அமைகின்றது. இது போல, ஜகந்நாதன் ஒருவரேயாயினும் தமது உபாசகர்களுடைய வெவ்வேறு விதமான இஷ்டங்களின்படி வெவ்வேறு விதங்களாகப் பிரசன்னமாவர். இவற்றுள் ஒவ்வொரு ஈசுவர வடிவத்தை ஒவ்வொருவர் சொந்தமாகப் பாவித்து, அவரவரும் தங்கள் தங்களுடையதையே பெரிதென் றெண்ணுவார்கள். அந்த ஈசுவரன் சிலருக்கு ஒரு பிரியமுள்ள எஜமானனாகவோ, அன்புள்ள பிதாவாகவோ, அருமையான மாதாவாகவோ, ஓர் அத்யந்த நண்பனாகவோ இருக்கிறார். வேறு சிலருக்கு ஒரு விசுவாசமுள்ள புருஷனாகவோ, கடமை தெரிந்த புத்திரனாகவோ இருக்கிறார்.

143. மகாத்மாக்களும் சாதாரண மனிதர்களும் :

தெய்வீகத் தன்மை பொருந்திய மகாத்மாக்கள், ஈசுவரனுக்கு நெருங்கிய பந்துக்களும், நண்பர்களும், தோழர்களு மாகின்றார்கள். சாதாரண மனிதர்களெல்லோரும் அவருக்கு வெளிக்குழாத்தின ராகின்றார்கள். அவர்கள் ஈசுவரனுடைய வெறும் சிருஷ்டிகளாம்.

144. மனிதன் தன்னுடைய நோக்கத்திற்குத் தக்கபடி ஈசுவரனிடத்தில் பயனடைவா னென்பது :

ஈசுவரன், தம்மை நாடி வந்தவர்களுக்கெல்லாம் அவர்கள் விரும்பியபடி கேட்டதையெல்லாம் கொடுக்கின்ற ஒரு

தெய்வீக கற்பக விருக்ஷம்போன் றிருக்கின்றார். ஒரு மனி தன், தன்னுடைய நிஜைப்புக்குத் தக்கவாறு அவரிடத்திற் பயனடைவான். உதாரணமாக: ஒரு ஏழை மனிதனுடைய புத்திரன் தன் முயற்சியினாலே உயர்ந்த நீதி ஸ்தலத்தில் ஒரு நியாயாதிபதியாகி "நான் இப்பொழுது மிகவும் உயர் ந்த படியிலேறிச் சந்தோஷமா யிருக்கின்றேன்; எல்லாம் எனக்குத் திருப்திதான்" என்று நினைக்கிறான். அப்பொழுது ஈசுவரனும் அவனை நோக்கி, "என்றும் நீ இந் நிலைமையி லேயே இரு" என்று கூறுகிறார். பின், நியாயாதிபதியா யிருந்த அவன், வேலையிலிருந்து நீங்கி உபகாரச் சம்பளம் பெற்ற காலத்தில் தன்னுடைய முற்கால நிலைமையை ஆரா யப் புகுந்து, ஆக்மலாபமான காரியம் ஒன்று மில்லாமை யால், தன் காலமெல்லாம் வீணுப்ப் போனதை யுணர்ந்து, "அந்தோ! நான் என்ன செய்தேன்! காலத்தை வீணுகக் கழித்துவிட்டேன்" என்று வருந்துகிறான். அத்தருணத் தில் ஈசுவரனும் அவனைப் பார்த்து, "ஐயோ! நீ என்ன காரியம் செய்துவிட்டாய்!" என்று கூறுகிறார்.

145. சாதுக்களுடைய உள்ளத்திலேயே திவ்யசோதி பிரதிபலிக்கு மேனல் :

சூரிய வெளிச்சமானது எங்கும் ஒரே தன்மையாய் வியாபிக்கின்றது. எனினும், அது, பரிசுத்த நீரிலும், கண் ணுடியிலும், மற்ற பளபளப்பான வஸ்துக்களிலும்தான் பிரதிபலிக்கும். மற்ற விடங்களில் பிரதிபலிக்காது. இதைப் போலவே திவ்ய ஜோதியானது, பக்ஷபாதமின்றி எங்கும்

வியாபகமா யிருந்தாலும் பரிசுத்தமாகிய சாதுக்களுடைய களங்கமற்ற இருதயங்களிற்றான் நன்றாகப் பிரதிபலிக்கும்.

146. ஈசுவரனும், அவருடைய வாக்குகளும், பக்தர்களும் ஒன்றே யென்பது :

ஈசுவரனும், அவருடைய வாக்குகளும், அவருடைய பக்தர்களும் ஒன்றும்.

147. உண்மைப் பக்தன் ஈசுவரனைத் தரிசிக்கும் விதம் :

உண்மைப் பக்தன், ஈசுவரனை எப்படித் தரிசிக்கிறானென்றால், பிருந்தாவனத்திலுள்ள இடைச்சிகள் ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலே ஜகந்நாதனைக் காணுமல் தங்களுடைய சொந்த கோபாலனையே பார்த்ததுபோல, அவரை நெருங்கிய பந்துவாகவே தரிசிக்கிறான்.

148. மனிதன், ஈசுவரனுடனே ஐக்கியமாதல் சாத்தியமா மெனல் :

ஒரு வீட்டிலுள்ள பழைய வேலைக்காரனொருவன், நெடுநாட்களாகக் குடும்பத்திலுள்ள ஒருவனுகவே கருதப் பட்டுவந்தாலும், ஒரு சமயத்தில் அந்த வீட்டெஜமானன், அவனுடைய வேலைத் திறமைக்காகச் சந்தோஷப்பட்டுத் தன்னுடைய கௌரவம் வாய்ந்த ஸ்தானத்திலே அவனை உட்காரவைத்து, அன்றுமுதல் தனக்கும் அவனுக்கும் வித்தியாசமில்லையென்றும், எல்லோரும் தனக்குக் கீழ்ப்படிந்து நடப்பதுபோலவே அவனுடைய உத்தரவுக்கும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டு மென்றும், அப்படி நடக்காத

வர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும், தன்னைச் சுற்றியு மூள்ளவர்களுக்குக் கட்டளையிட்டு, அவனுக்கும் தனக்கும் வித்தியாசமில்லாமற் செய்துவிடவுங் கூடும். இதுபோல வே, மனிதனும் பக்தி மேலீட்டால் ஈசுவரனுடனே அகண்ட ஐக்கிய நிலைமையை அடைவது சாத்தியமாம்.

149. பக்தன், ஈசுவரனை "மாதா" என்றழைப்பதில் ஏன் திருப்தியடைகிறானெனல் :

ஈசுவரபக்தன் ஈசுவரனே மாதாவென் றழைப்பதில் மிகவும் ஆனந்தமடைகிறான். ஏனெனில், குழந்தை மற்றை யரைக்காட்டிலும் தாயாரிடத்தே உரிமை பாராட்டி அவளை மாதாவென் றழைப்பதில் மிகவும் திருப்தி யுடையதாம். ஆகையினாலே, மாதாவாகிய ஈசுவரனிடத்தில் குழந்தை யாகிய பக்தன் அங்ஙனம் உரிமை பாராட்டுகிறான்.

7-வது அத்தியாயம்

குரு

150. ஈசுவரனே பிரபஞ்ச குருவென்பது :

யார், யாருடைய குருவென்றால், ஈசுவரன் ஒருவரே பிரபஞ்சத்துக்கெல்லாங்குருவும், வழிகாட்டியு மாவர்.

151. குருவைச் சாதாரண மனிதனாகக் கருத லாகாதெனல் :

தன்னுடைய குருவை, சாதாரண மனிதனாகக் கருது கிறவன், தன் ஜெபதபங்களினால் ஒரு பயனையும் அடைய

மாட்டான்; ஆதலின், நாம், நம்முடைய குருவைச் சாதாரண மனிதனைக் கருதுதல் கூடாது. சிஷ்யனுனவன் ஈசுவரனைப் பார்ப்பதற்கு முன்னே, ஈசுவரப்பிரகாசத்தின் முதலாவது தரிசனத்தில் குருவையே பார்க்கிறான்; பின்னர், அந்தக் குருவே ஆச்சரியமாக ஈசுவரவடிவமாக வேற்றுருப்பெற்று ஈசுவரனைக் காண்பிக்கிறார். அப்போது, சிஷ்யன் எந்த வரத்தைக் கேட்டாலும் ஈசுவரத்துவம் அடைந்த குருவானவர் அவனுக்கு விரும்பிய எல்லாவற்றையும் அளிக்கிறார்; அவனை நிர்வாணமென்னும் உயர்ந்த ஆனந்த பதவிக்குக் கொண்டு செல்லுகிறார். இன்னும் அவன், ஈசுவரனிடத்தில் உபாசக சம்பந்தம் வைத்து, அவைத ஸ்திதியிலேயிருக்க விரும்பினால் அதையும் அவனுக் களிக்கிறார்.

153. சிஷ்யன் குருவின்மேல் குற்றம் கூறலாகாதென்பது:

வங்காள பாஷையிலே குருவுக்குக் கீழ்ப்படியவேண்டுமென்பதைப்பற்றி, "என்னுடைய குரு சாராயக்கடைக்குச் சென்றபொழுதிலும் பரிசுத்த நித்தியானந்தரேயாவர்." "என்னுடைய குரு குடியர்களும், பாவிகளும் கூடுகின்ற அசுத்தமானவிடத்திற்குச் சென்றாலும் எனக்கு அவர் பரிசுத்தமான சொந்தக் குருவேயாவர்" என்ற பழமொழிகள் வழங்குகின்றன. ஆதலின், இம்மொழிகளை ஆராய்ந்து சிஷ்யன் தன்னுடைய குருவின்மேல் ஒருபோதும் குற்றங் கூறாதிருக்கவேண்டும். குரு சொல்வதற்கெல்லாம் தடை சொல்லாமல் அவன் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

153. குருமார்கள் எளிதில் அகப்படுவார்கள், சிஷ்யர்கள் அகப்படுவதுதான் அரிதென்பது :

"குருமார்கள் நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் அகப்படுவார்கள்; சிஷ்யர்கள் தாம் கிடைப்பதரிது" என்று ஒரு பழமொழி வழங்குகின்றது. இதன் தாத்பரிய மென்னவெனில், "நற்புத்தி புகட்டக்கூடியவர்கள் பல ருண்டு; ஆனல், அதைப் பின்பற்றுகிறவர்கள் சிலரே யாவர்" என்பதாம்.

154. குரு மத்தியஸ்த ரென்பது :

விவாகத்தை முடிக்கும் மத்தியஸ்தன் நாயகியையும் நாயகனையும் ஒன்று சேர்த்து வைப்பதுபோல, குருவான வர் மனிதனையும் ஈசுவரனையும் ஒன்று சேர்க்கிறார். அத னல் இவர் ஒரு மத்தியஸ்தராவர்.

155. குருவின் நல்லுபதேசத்தைமட்டுங் கவனித்தல் வேண்டுமேயன்றி, அவருடைய ஒழுக்கத்தைப் பற்றிக் கவனிக்க லாகாதெனல் :

ஒருவன் தன்னுடைய குருவின் ஒழுக்கத்தைப்பற்றி வெறுத்துப் பேசிக்கொண்டிருக்கும்போது, இராமகிருஷ் ணர் அவனை நோக்கி, "இந்த வீண் பேச்சில் என் உனது காலத்தைச் செலவழிக்கிறாய்? முத்தை யெடுத்துக்கொண்டு சிப்பியைத் தள்ளிவிடுவதுபோலக் குருவினுல் உபதேசிக் கப்பட்ட மந்திரத்தை மாத்திரம் நீ தியானஞ் செய்; அவ ருடைய மனுஷியத்தன்மையின் தோஷங்களைப்பற்றி நீ

கவனிக்காதே; முத்தைக் கவனிப்பாரேயன்றிச் சிப்பியின் கோணலைப்பற்றிக் கவனிப்பா ரொருவருமிலர்" என்று கூறினர். இதனாலேயே, "நாம் குருவின் நல்லுபதேசத்தை மட்டும் கவனிக்க வேண்டுமென்பதும், அவர் நடத்தையைக் கவனிக்கலாகா தென்பதும் ஏற்படும்.

156. ஈசுவரனை அடைதற்கு ஒரே குருவின் உபதேசத்தைப் பின்பற்ற வேண்டுமேனில் :

ஒருவன் அன்னிய தேசத்துக்குப் போனால், மார்க்கந் தெரிந்த ஒரு வழிகாட்டியினுடைய சொல்லைக்கொண்டே அவன் கூறிய நேரான ஒரே மார்க்கத்தைப் பின்பற்றிப் போகவேண்டும். அப்படிச் சென்றால்மாத்திரந்தான் சுலபமாக அத்தேசத்திற்குப் போய்ச் சேரலாம். பலர் சொல்லும் பலமார்க்கங்களைப் பின்பற்றினால் குறித்தவிடம் போய்ச் சேரமுடியாமல் குழப்பத்தை யடைதல் கூடும். இதுபோலவே, ஈசுவரனைச் சேரும் மார்க்கத்தை ஒரு குருவினுடைய சொற்படி நடந்தால் சுலபமாக ஈசுவரனை யடைந்துவிடலாம்; மெய்யான மார்க்க முணராத பலபேருடைய உபதேசத்தைக் கேட்டால் தர்க்கதிகளிற் சேர ஏதுவண்டாகும். இதை உத்தேசித்துத்தான் பெரியோர், 'எதையெதையோ சொல்லும் பலபேரையுங் குருவாகக் கொள்ளாமல், பிரத்தியேகமாக ஞானத்தை உபதேசிக்கும் ஒருவரை மாத்திரம் குருவாகக் கொள்ளவேண்டும்" என்று கூறியிருக்கின்றனர்.

157. தானுகவே ஈசுவரனை அடையக்கூடியவனுக்கு குரு அவசியமில்லையெனல் :

எவன், ஆழ்ந்த பிரார்த்தனையுடனும், உண்மையுடனும், மிக்க ஆவலுடனும் தானுகவே ஈசுவரனை அணுகுவானை அவனுக்கு குரு அவசியமில்லை. ஆயினும், ஜீவன்களுக்கு அத்தகைய நிலைமை யேற்படுவது அருமை. ஆதலால், ஒவ்வொருவருக்கும் குரு அவசியமாக வேண்டியிருக்கிறார். ஆனல், குரு ஒருவராகவே யிருத்தல்வேண்டும். ஆயினும், உபயகுருமார்கள் அநேகர் ஏற்படுதல் கூடும். இவர்களிடமும் ஒவ்வொரு விஷயத்தைத் தெரிந்துகொள்ள முடியும். எவரிடத்தி லிருந்தாவது ஏதேனும் ஒரு விஷயம் அறியப்பட்டால் அவர் ஓர் உபயகுருவாவர். மகா அவதூதருக்கு இத்தகைய குருமார்கள் இருபத்து நான்குபேர்கள் உண்டு.

158. அவதூதர் சிற்சில விடங்களில் சிற்சில விஷயங்களைக் கண்டு குருபாவனை செய்தவிதம் :

ஒரு சமயம் ஒரு நகரத்தில் கலியாண மாப்பிள்ளையும் பெண்ணும் ஊர்வலம் வந்தார்கள். அப்போது அநேகம் மேளதாளங்களும் வேடிக்கைகளும் நடந்தன. இந்த வேடிக்கைகள் நடந்துகொண்டுவந்த விடத்திற்குச் சமீபத்தில் ஒரு வேடன் அவற்றைச் சிறிதும் கவனிக்காமல் ஒருபக்ஷியை அம்பா லெய்யக் குறிவைத்துப் பார்த்து அதிலேயே தன் முழுக் கவனத்தையும் செலுத்திக்கொண்டிருந்தான். அத்தருணத்தில் அவதூதர் அவனுடைய மனவொற்றுமை

யின் நிலையைக் கண்டு, 'நிஷ்டையின் தன்மை இதுவேயாம்' என்று தெளிந்து, உடனே அவனிடம் சென்று நமஸ்கரித்து, அவனை நோக்கி, "ஐயா! நீர் இப்பொழுது பக்ஷியை எய்யும் விஷயத்தில் எப்படி மனதை ஒரே தன்மைத்தாக வைத்துக்கொண்டிருந்தீரோ இப்படியே நிஷ்டையில் மனதை வைக்கவேண்டு மென்பதை நான் உம்மிடத்தில் தெரிந்துகொண்டேன்; ஆதலின், நீர் எனக்குக் குருவானீர்" என்று சொன்னர்.

மற்றொரு சமயத்தில் ஒரு செம்படவன் ஒரு குளத்திலே தூண்டில் போட்டு மீன் பிடித்துக்கொண்டிருந்தான். அப்போது அந்த மார்க்கமாகச் சென்ற அவதூதர் அவனிடத்தே சென்று, "சகோதர! காசிக்குச் செல்லும் வழி யெது?" என்று வினவினர். அப்போது மீன், தூண்டில் முள்ளாக் கௌவும் அறிகுறி தோன்றியபடியால் அவன் சிந்தை அதை விட்டு வேறெதிலும் செல்லவில்லை. அதனால் அவன் அவருக்கொன்றும் பதில் கூறாமல் தூண்டிலின் மிதப்பிலேயே கண்ணுயிருந்து மீன் சிக்கியவுடன் அதை வெளியே எடுத்துவிட்டுப் பின்னர் அவதூதரைத் திரும்பிப் பார்த்து, "ஐயா! நீங்கள் வினவியதென்ன?" என்று கேட்டான். அவதூதர் அதற்குமுன் அவன் மனம் ஒன்றுபட்டிருந்த நிலைமையை நோக்கி, "பரமாத்மாவைத் தியானிக்கும் பொழுது இப்படித்தானிருக்கவேண்டும்" என்று தெளிந்துகொண்டு, அவனை நோக்கி, "சகோதர! நான் காசிக்கு வழி யாதென்று கேட்டேன்; நீ உன் எண்ண முழுவதையும்

தூண்டிலில் வைத்துக்கொண்டிருந்தபடியால் என் கேள்வி உன் செவியில் நுழையவில்லை; இதனால் நான், 'பிரமத் தியானத்தில் இப்படித்தான் மனதை வைக்கவேண்டும்' என்பதைத் தெரிந்துகொண்டேன்; ஆகையால், எனக்கு நீ குரு'' என்றார்.

மற்றொரு சமயத்தில், ஒரு கொக்கானது, தண்ணீர் ஓரத்திலிருந்து, அங்கே வந்த ஒரு மீனைப் பிடிப்பதற்குச் சமயம் பார்த்து அதனையே நோக்கிக்கொண்டிருந்தது. அத்தருணத்தில் ஒரு வேடன் அக் கொக்கை அம்பாலெய்வதற்கு அதன் பின்புறத்தே நின்றுகுறி பார்த்தான். கொக்கு, மீனின்மேலிலேயே கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தபடியால், வேடன் அவ்வாறு தன் உயிரைப் போக்க நின்றதும் அதற்குத் தெரியவில்லை. அவதூதர், அக் கொக்கின் நிலைமையைப் பார்த்து, 'இப்படியே தியானத்திலிருக்கும்போதும் வேறெதிலும் சிந்தை செல்லாதிருக்க வேண்டும்' என்று துணிந்து, உடனே அக் கொக்கினிடம் சென்று நமஸ்கரித்து, ''நீ மீனைப்பற்றிய சிந்தனையால் பின்னே வேடன் நிற்பதையும் உணராமலிருக்கின்றாய்; இதனால் நான் 'தியானத்தில் இப்படித்தானிருக்கவேண்டும்'' என்பதை உணர்ந்தேன்; ஆதலால், நீ எனக்குக் குரு'' என்று கூறினர்.

பின்னொரு சமயத்தில் ஒரு பருந்தானது ஒரு மீனைக் கௌவிக்கொண்டு பயந்து செல்ல, அந்த மீனை அதனிடத்தினின்றும் பிடுங்கிக்கொள்ளும்பொருட்டுத் திரளான

காக்கைகளும், வேறு பருந்துகளும் 'காகூ' என்று கத்திக்கொண்டு அதனைப் பின்தொடர்ந்து, அதன்மீது பாய்ந்து பாய்ந்து சூழ்ந்தன. அது எத்தப்பக்கஞ் சென்றும் அங்காங்கே அவைகள் சூழ்ந்து அதற்கு மிகுந்த தொந்தரவை புண்டாக்கின. அதனால் எவ்வழியிலும் அந்தத் தொந்தரவை விட்டு நீங்க முடியவில்லை. இந்தத் தொந்தரவுக்கு அஞ்சி அந்தப் பருந்தானது மீனைக் கீழே எறிந்து விட்டது. அதனை மற்றொரு பருந்து கௌவிற்று. உடனே பறவைகள் மூன்றின பருந்தைவிட்டு இரண்டாவது மீனைக் கௌவியபருந்தைப் பின்தொடர்ந்தன. முதலாவது பருந்து யாதொரு தொந்தரவு மில்லாமல் ஒரு மரத்திற் போய் நிம்மதியாய் உட்கார்ந்திருந்தது. அதனுடைய நிலைமையை அவதூதர் பார்த்தவுடனே, "இப்போது இந்தப் பருந்திருக்கும் நிலைமையானது உலக பந்தத்தைத் தாங்குபவர்களுடைய தொந்தரவையும், அதனை விட்டவர்களுடைய சௌக்கியத்தையும் நன்கு விளக்கிக் காட்டுகின்றது; இதனிடம் நாம் இவ்விஷயங்களைத் தெரிந்துகொண்டோம்; ஆதலின், இது நமக்குக் குருவாம்" என்று அதைப் பார்த்து நமஸ்கரித்து, "ஏ பருந்தே! மனிதனானவன், தான் சுமந்து செல்கின்ற உலக ஆசைகளாகிய சுமையை எறியாமலிருக்கிறவரையில் அவன் உலக துன்பக்கவினின்றும் நீங்கிச் சாந்தியடைய முடியாதென்பதை உன்னிடம் தெரிந்துகொண்டேன்; ஆதலின் நீயே எனக்குக் குரு" என்று கூறினர். இப்படியே அவர் ஒவ்வொரு விஷயத்தைத் தெரிந்துகொண்ட ஒவ்வோரிடத்தையும் குருஸ்தானமாகக் கொண்டார்.

159. ஈசுவரனை அறியச் சிரத்தை யுள்ளவனுக்கு ஈசுவரன் குருவை அனுப்புவாரென்பது:

ஈசுவர இரகசியங்களை யறிவதற்கு ஒருவன் உண்மையில் சிரத்தை யுள்ளவனானால், அவனுக்கு ஈசுவரன் உண்மையான சற்குருவை அனுப்புவார்; ஆதலின், உண்மையான பக்தன் குருவைக் காணவேண்டுமே யென்று கவலைப்பட வேண்டியதில்லை.

160. சற்குருவுக்கு நிந்தனையால் குறைவுண்டாகாதென்பது:

பரிசுத்தமான கங்காநதியில், மனிதர் அநேகம் குப்பைகளையும், கெட்ட வஸ்துக்களையும் போடுகின்றனர். அப்படி எவ்வளவு நிஷ்டூரமான வஸ்துக்களை யிட்டாலும் கங்கையானது தன்னுடைய பரிசுத்தத்தன்மையில் குறைவு படுகிறதில்லை. இதேபோல, சற்குருவும், அற்பநிந்தனைகளினாலும் கண்டனங்களாலும் குறைவை யடையமாட்டார்.

161. குருவினுடைய கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமெனல்:

குருவின்மேல் எவரேனும் குறை கூறினால், அதைக் காதுகொடுத்துக் கேட்கலாகாது. அவர், நம்முடைய மாதா பிதாக்களைக் காட்டினும் மிகப்பெரியவர். நம் கண்ணெதிரே நம் மாதா பிதாக்களை ஒருவர் நிந்தித்தால் நாம் சும்மா இருப்போமா? உடனே அவர்களைக் கண்டிப்போமல்லவா? அதேபோல், நம்முடைய குருவை ஒருவர் நிந்திக்கும்

போது அவரோடு போராடியேனும் குருவினுடைய கௌரவத்தைக் காப்பாற்றவேண்டும்.

162. மனுஷ்ய குருவின் தன்மையும், தெய்வ குருவின் தன்மையும்:

மனுஷ்ய குரு, செவியிலே பரிசுத்த மந்திரத்தை உபதேசிப்பார்; தெய்வகுரு, ஆத்மாவுக்குள்ளே சக்தியைப் புகுத்துவார்.

163. குருவினிடம் மந்திரோபதேசம் பெற்றுச் சாந்தியடையும் விதம்:

கடலின் அடியிலே உள்ள முத்துச் சிப்பியானது, ஸ்வாதி நக்ஷத்திரம் உச்சத்திலிருக்கும்போது பெய்யும் மழை ஜலத்தைக் கிரகித்துக்கொள்வதற்கு நீரின்மேலே இளம்பி அச்சமயத்தில் வருகிறது. அப்படி வந்து அம் மழைத்துளி ஒன்றை அடைகிறவரையில் தனது மேலோட்டைத் திறந்து வைத்துக்கொண்டு மிதக்கிறது. மழைத் துளி தனக்குக் கிடைத்தவுடன் அது கடலின் அடியிலுள்ள தண்ணீருப்பிடத்திற்குச் சென்று, அம்மழைத் துளியிலிருந்து தனக்குள் ஒரு முத்து உண்டாகிறவரையில் அங்கேயே அமைதியுடன் இருக்கின்றது. அதுபோலவே, மூமுட்சுக்கள், சற்குருவினிடமிருந்து மந்திரோபதேசம் பெறவிரும்பிப் பற்பலவிடங்களுக்கு யாத்திரை செய்து சற்குரு எதிர்ப்பட்டபோது சர்வ பந்தங்களையும் நிச்சயமாகத் தகர்த்தெறியவல்ல மந்திரோபதேசத்தைப் பெற்று, உடனே ஜனசமூகத்தினிடமிருந்து விலகித் தமது ஹிருதய

நய ஆழிக்குள்ளே தழைந்து உபசாந்தி அடைகிறவரை யில் அமைதியா யிருப்பார்கள்.

164. சாந்தமுள்ள குருவைச் சாமானியராகக் கருதலாகாதெனல்:

குரு, சாந்தமுள்ளவரா யிருத்தலே உத்தேசித்து, அவரை, 'வித்வானுக அதாவது: சாஸ்திரங்களில் போதிக் கப்பட்டுள்ள உண்மைகளே நன்றுயறிந்தவராகத் தோன்ற வில்லையே' என்று கவலைப்படலாகாது; அவர் பற்று நீங்கி யவராயினும், சம்சார ஞானத்திலே ஒருபொழுதும் குறை ந்தவராகார். எல்லா விஷயங்களையும் அறிந்து நன்மை தீமை களைப் பிரித்துக் காட்டக்கூடிய சக்தி அவருக்குண்டு; கிரந்தங்களிலே கூறப்பட்டுள்ள ஞானமெல்லாவற்றிலும் பெரிதான திவ்யஞானம் அவருக்குண்டு.

165. உலகத்து மனிதரைக்காட்டினும் துறந்தோருக்கு உலக காரியங்களின் உணர்ச்சி அதிகமுண்டென்பது:

சதுரங்க ஆட்டத்தில் விளையாடுகிறவர்களைக்காட்டி லும் பக்கத்திற் பார்த்துக்கொண்டிருப்பவர்களே காய்கள் சரியாய் வைக்கப்படவேண்டிய விதத்தை அறிந்து கூறு வார்கள். விளையாடுகிறவர்களோ அந்த விளையாட்டின் ஆனந்தத்திலேலே, காய்கள் ஒழுங்காக வைக்கவேண்டிய விதத்தை நன்றாக ஆராய்ந்தறிவதில்லை. அடிக்கடி ஏமாந்து போவார்கள். இதேபோல், உலகத்து மனிதர்கள், உலக காரியங்களில் தாங்களே மிகவும் சமர்த்தர்கள் என்று எண்ணிக்கொண் டிருக்கிறார்களே யன்றி, உண்மையில்

அவற்றில் சாமர்த்திய மடைவதில்லை. இவ்வுலக வஸ்துக்களாகிய பணம், கௌரவங்கள் இந்திரிய சுகங்கள் முதலியவற்றில் அவர்கள் மூழ்கிக் களித்துக் கிடக்கின்றமையாலே உலக காரியங்களைச் செவ்வனே நடத்தும் விதத்தை உணர சாமற்போகிறார்கள். உலகத்தைத் துறந்த பெரியோர்களோ அதனிடத்துப் பற்றின்றித் தெளிவடைந் திருப்பதனாலே உலக காரியங்களை நன்கு அறிந்து, நன்மை தீமைகளை ஆராய்ந்து, உண்மைப்பொருளை உணர்வார்கள். உலகத்தைப்பற்றிய எந்த விஷயங்களிலும் அவர்கள் உலகத்து மனிதரைக்காட்டிலும் தீர்மானமான அபிப்பிராயம் கூறக்கூடும். ஆதலின், ஈசுவரனையே தியானித்து ஈசுவரனைத் தரிசித்துப் பரிசுத்தமான வாழ்க்கையிலிருக்கும் அவர்களுடைய வார்த்தைகளிலே நம்பிக்கை வைக்கவேண்டும். ஒரு மனிதன் சட்டப்படி நியாயந் தெரிந்துகொள்ள வேண்டுமானால், அந்தத் தொழிலேயுள்ள வக்கீல்களுடன் கலந்து ஆலோசனை செய்வான். அதேபோல், உண்மையான விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் தெருவில் திரியும் வீண் மனிதர்களுடைய யோசனையைக் கேளாமல் மேலான குருவின் யோசனையைக் கேட்கவேண்டும்.

166. ஈசுவரத்தன்மையைக் கூறுவதற்கு அதனை யறிந்த பரிசுத்த புருஷர்களே தக்கவரெனல்:

சாஸ்திரமானது பந்தப்பட்ட அறிவைப்பற்றியே கூறுகிறது. பந்தமற்ற விடத்தைப்பற்றிய எந்தச் சமாசாரத்தையும் கூறுவதில்லை. ஈசுவரனைத் தரிசித்து அனுபவத்தில்

அறிந்துள்ள பரிசுத்த புருஷர்களாலேயே அத்தகைய சமரசம் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. 'ஈசுவரன் இத்தகையவர்' என்று கூறுவதற்கு அவர்களே தகுந்தவர்கள். இதை ஜனங்கள் கவனிக்கிறதில்லை.

8-வது அத்தியாயம்

மதபோதகர்

167. மதபோதகரிடத்தே ஈசுவரன் அடையாள மிருக்க வேண்டுமேனல்:

மிகவும் தாழ்ந்த ஒரு மனிதனிடத்தில் அரசனுடைய முத்திரை அடையாளமிருந்தால் அவனுடைய சொல்லும் ஜனங்களால் மதிப்போடு கேட்கப்படும்; அந்த அடையாளத்தைக்கொண்டே அவன் பெரிய அதிகாரஞ் செலுத்தி, ஆங்காங்கே உண்டாகும் குழப்பங்களையும் கலகங்களையும் அடக்கி ஜனங்களை ஒரு வழிப்பட்டு நடக்கும்படி செய்து விட முடியும். இதுபோலவே, ஏ மதபோதகரே! நீர் உலகத்தில் ஜயமடையவேண்டுமானால், ஈசுவரனுடைய அருள் அடையாளத்தை முதலில் அடையவேண்டும்; உமக்கு இந்த அருள் கிடைக்காதவரையில் உம்மை உலகத்தில் ஒருவரும் மதிக்கமாட்டார்கள்; நீர் உம்முடைய ஆயுள் முழுவதும் போதனை செய்தாலும் அதனால் உம்முடைய ஆவி வீணே செலவாகுமேயன்றி ஒருபயனு மேற்படாது.

168. போதகரிடத்தில் பரிசுத்தமிருந்தால் மதிப்பு தானே ஏற்படுமென்பது:

சுகந்தமுள்ள புஷ்பம் மலர்ந்தபோது, தேனீ தானுகவே அந்தப் புஷ்பத்தினிடம் வந்து சேரும். மிட்டாய் வர்க்கங்கள் நிறைந்திருக்கு மிடத்திற்கு எறும்பு தானுகவே வந்து சேரும். எவரும் இவற்றை அழைக்கவேண்டிய அவசியமேயில்லை. இதேபோல, ஒருவன், பரிசுத்தத் தன்மை நிறைந்தவனுக இருந்தால் அவனுடைய செல்வாக்கு எங்கும் பரவும். உண்மையை நாடும் எல்லோரும் இயற்கையிலேயே அவனுல் ஆகருஷிக்கப்படுவார்கள். அவன், தான் சொல்வதைக் கேட்பதற்கு ஜனங்கள் வேண்டுமே யென்று அவர்களைத் தேடிக்கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை.

169. ஈசுவரனைத் தரிசித்தவரே அவருடைய இலக்ஷணங்களை விளக்கமாகச் சொல்லக்கூடுமென்பது:

உலகத்தில் அநேகர் பனிக்கட்டியைப்பற்றிக் கேட்டு மாத்திரமிருப்பார்கள்; அதனைப் பார்த்தேயிருக்கமாட்டார்கள்; சிலர் அதைப் பார்த்திருப்பார்கள்; ஆனல், சுவைத்து உருசியை அறிந்திருக்க மாட்டார்கள். சிலர், அதன் உருசியையும் அறிந்திருப்பார்கள்; இவர்கள்தாம் அதைப் பற்றி முழு விவரத்தையும் சொல்ல முடியும். இவர்களைப் போலவே, அநேகம் மதபோதகர்கள் ஈசுவரனுடைய இலக்ஷணங்களைப் படித்துமாத்திரமிருப்பார்கள்; தங்கள் வாழ்க்கையில் ஒரு சமயத்திலேனும் அவற்றைச் சிறிதும் அனு

பவத்தில் அறிந்திருக்கவே மாட்டார்கள். அநேகர் அவற்றைப் பார்த்திருப்பார்கள்; ஆனல், அவற்றின் உண்மைப் பொருள் இன்னதென்று உணர்ந்திருக்கமாட்டார்கள். சிலர், அந்த இலக்ஷணங்களின் மெய்ப்பொருளைச் சந்தேகமற உணர்ந்திருப்பார்கள். இவர்கள் ஒரு சமயத்தில் ஈசுவரனுடைய தாசர்போலவும், மற்றொரு சமயத்தில் நண்பர்போலவும், பின்னொரு சமயத்தில் பக்தர்போலவும், ஈசுவரனுடைய சம்சர்க்கத்தை வெவ்வேறுவித தன்மைகளிலும், சம்பந்தங்களிலும் அனுபவித்துள்ளவராவார்கள். இவர்களே ஈசுவர இலக்ஷணங்களே இன்னின்னவை யென்று சொல்லக்கூடியவர்கள்.

170. பரிசுத்த மதபோதகர் போதனைகள், ஈசுவர சிம்மாதனத்திலிருந்தே வந்தவையாகு மென்பது:

ஒரு வீட்டின் மேலிருந்து, புலிமுகம்போலச் செய்து வைக்கப்பட்ட குழாயின் வழியாக விழுகின்ற மழை ஜலமானது, பார்வைக்கு அக் குழாயிலிருந்து வருவதுபோலத் தோற்றினும் உண்மையில் அது ஆகாயத்திலுள்ள மேகத்திலிருந்து வந்ததேயாம். இதேபோல், பரிசுத்த மதபோதகருடைய வாக்கிலிருந்து வரும் வார்த்தைகளும், பார்வைக்கு அவர்களிடமிருந்து வருவனவாகத் தோற்றப்படினும் உண்மையில் ஈசுவர சிம்மாசனத்திலிருந்தே வெளிவருவனவாம்.

171. சொற்ப ஞானானுபவமுள்ள மதபோதகரின்தன்மை:

சொற்பஞானானுபவ முடையவர்கள், பெரியமத போதகராகப் பிரயத்தனப்படுவது எப்படியிருக்குமெனில், ஒரு

வனுக்குப் போதுமான ஆகாரத்தைமட்டு முடைய ஒருவன், நூறுபேர்களை விருந்துக்கழைப்பதுபோன் றிருக்கும்.

172. உண்மைப் போதகன் தன்மை:

விசேஷ ஞானானுபவ மில்லாத ஒருவன் ஆங்காங்குச் சென்று பிறருக்குப் போதிப்பதைக் காட்டினும் அக்கால மெல்லாம் ஈசுவரனை உபாசித்துக்கொண் டிருப்பானானால் அதுவே போதும். இவ்வாறு மோக்ஷமடைதற்கு முயல் கின்றவனே உண்மைப் போதகனாவான். இத்தன்மையுள்ள வனிடத்தே நாலாபக்கங்களிலுமிருந்து நூற்றுக் கணக் கான ஜனங்கள் உபதேசம் பெறவேண்டித் தாமே வந்து சேருவார்கள்.

173. உண்மைப் போதகரிடத்தில் உபதேசம் பெற ஜனங்கள் தாமே வந்து கூடும் விதம்:

இருளில் நெருப்பின் அல்லது விளக்கின் பிரகாச மானது வெளிப்பட்டவுடனே எங்கிருந்தோ விட்டிற்பூச்சிக ளெல்லாம் அதனிடத்தே வந்து குவிகின்றன. இவற்றை எவரும் அழைப்பதில்லை. இவைபோலவே, பரிபூரணரான ஞான வொளியையுடைய மதபோதகரிடத்தே, அவர்கள் சொல்வதைக் கேட்கும்பொருட்டு எங்கிருந்தோ எண் ணிறந்த மனிதர்கள் தாமேவந்து கூடுவார்கள்.

174. ஈசுவரனிடமிருந்து அதிகாரம் பெறுமல் போதிப்ப தால் பயனில்லையென்பது:

மிட்டாய் அல்லது சர்க்கரை யிருக்குமிடத்திற்கு எறும்புகள் தாமாகவே வருகின்றன. இதுபோல, ஞான இனி

மையையுடைய மதபோதகரிடத்தில் பக்தர்கள் தாமாகவே வந்து சேர்வார்கள். ஆதலின், போதகர், ஞானமாகிய திக் திப்பு நிறைந்த கற்கண்டாக முயற்சி செய்யவேண்டும். அங்ஙனம் செய்தால் அப்போதகராகிய கற்கண்டினிடத்தே பக்தர்களாகிய எறும்புகள் தாமே வந்துசேரும். ஈசுவரனிடமிருந்து போதகர் அதிகாரம் பெறுமல் போதித்துக் கொண்டுபோனால் அப்போதனை சக்தியற்றதாயிருக்கும். அப் போதனையைக் கேட்க எவரும் வார். ஒருவன், முதலில் பக்தியினாலோ அல்லது வேறு உபாயங்களினாலோ ஈசுவரனை யடையவேண்டும்; பின்னர் ஈசுவரனிடமிருந்து அதிகாரம் கிடைக்கும். அவ்வாறு கிடைத்த பின்புதான் அவன் பற்பல விடங்கட்கும் சென்று மதத்தைப் போதித்தல் முடியும்.

175. உண்மைப் போதகன்:

உண்மை ஞானமாகிய ஒளியினாலே பிரகாசிப்பவன் எவனோ அவனே உண்மைப் போதகனாவன்.

176. சில போதகர்கள் அன்பினாலேயே போதிக்கின்றனரென்பது:

நிறைகுடத்தில் சத்தமிருப்பதில்லை. இதுபோல் பரிபூரணமானவர்கள் ஒன்றும் பேசார். ஆனால், நாரதர், சுகதேவர் முதலியவர்கள் ஏன் அப்படியில்லையெனில், அவர்கள் சமாதி அனுபவம் அடைந்த பின்னரும், மனிதவர்க்கத்தாரிடத்தே தமக்கேற்பட்ட அன்பினாலும், தயையினாலுமே அநேகபடிகள் கீழே யிறங்கிவந்து போதித்தார்கள்.

177. பிரசங்கம் செய்வதற்குமுன் ஈசுவரனை மனதில் இருத்திக்கொள்ளவேண்டுமேனல்:

போதகர்கள், பிரசங்கம் செய்வதற்குமுன் தம் முடைய ஹிருதயமாகிய கூேத்திரத்தில் ஈசுவரனைப் பிர திஷ்டை செய்யவேண்டும். முதலில் அவரை அனுபவத்தில் அறிந்துகொள்ளவேண்டும். பேச்சுக்களும், பிரசங்கங்க ளும், மற்றவைகளும் பின்னே ஏற்படுமாறு செய்யலாம். இவ்வாறு ஈசுவரனை அறியாதவர்கள் ஈசுவரனையும், பிர மத்தையும்பற்றிச் சாதாரணமாகப் பேசிவிடுவார்கள். அவர் கள் எப்பொழுதும் உலக வஸ்துக்களிடத்தில் பற்றுதலுள் ளவர்களா யிருப்பார்கள். அவர்களுடைய பிரசங்கம், கோவி லுக்குள்ளே பூஜிப்பதற்கு ஈசுவரனில்லாதிருக்க பூஜைக் குச் சங்கூதுவதுபோலிருக்கும்.

178. இதுவுமது:

ஒரு கிராமத்திலே பத்மலோசனன் என்னும் ஒரு வாலிபன் இருந்தான். அவன், அக்கிராமத்தார்களால் பாதோ என்று பரிகாசமாக அழைக்கப்பட்டு வந்தான். அவ்வூரில் ஒரு புராதன கோவில் பாழாகிக் கிடந்தது. அத னுள்ளே ஈசுவரனுடைய விக்கிரகம் இல்லை. மரங்களும் செடிகளும் வளர்ந்து அக்கோவிலை மூடிக்கொண்டிருந்தன. வெளவால்களுக்கும் பக்ஷிகளுக்குமே அக்கோவில் வாச ஸ்தானமாயிருந்தது. அப்படியிருக்க ஒருநாள் திடீரென்று அந்தக் கோவிலிலிருந்து மணியோசையும், சங்குநாதமும் கேட்டன. அவற்றைக் கேட்டதும் ஜனங்களெல்லோரும்

அங்கே ஓடி,"இதிலே எவனோ ஓர் ஈசுவரபக்தன் ஈசுவரப் பிரதிஷ்டை செய்திருக்கக்கூடும்; அவன் உள்ளேயிருந்து பூஜை பண்ணக்கூடும்" என்று நினைத்து, கதவு திறக்கப் பட்டவுடன் 'விக்கிரகத்தைப் பார்க்கலாம்' என்று கைகூப் பிக் காத்துக்கொண்டு நின்றார்கள். அப்போது அந்த ஜனங் களில் ஆத்திரக்காரனொருவன் கோவிலின் கதவைத் திறந்தான். அங்கே பாதோ என்பவன் மணியடித்துச் சங் கத்தை முழக்கிக்கொண்டிருந்தான். மூலஸ்தானம் முன் போலவே யிருந்தது. பின்னர், அந்த மனிதன் பாதோவை நோக்கி, "ஏ பாதோ! உனது கோவிலில் மகாதேவருடைய விக்கிரக மில்லை; நீ இக்கோவிலை மெழுகிச் சுத்தஞ் செய்யவு மில்லை; இங்கே இரவும் பகலும் பதினொரு வெளவால்கள் கூச்சலிடுகின்றன; நீ ஏன் சங்கத்தொனி செய்து பிரயோ சனமில்லாமல் இவ்வாறு ஒரு கலகத்தை உண்டாக்கினாய்?" என்று கேட்டான். இதுபோலவே, ஈசுவரனே மனதில் பிர திஷ்டை செய்யாமல் பிரசங்கத்தொனி செய்வதால் பிர யோசனமில்லை. ஹிருதயமாகிய கேஷேத்திரத்திற்குள்ளே ஈசுவர விக்கிரகத்தைப் பிரதிஷ்டிக்க விரும்பினாலும், அவ னை அனுபவத்தில் அறிய விரும்பினாலும் முதலாவது ஹிரு தயத்தைச் சுத்தஞ் செய்யவேண்டும். மனம் பரிசுத்தம் பண்ணப்பட்டபொழுது ஈசுவரன் தாமாகவே வந்து அதில் அமர்வார். பரிசுத்தமற்ற மனமாகிய கோவிலில் இருக்கும் பதினொரு வெளவால்கள் எவையெனில், ஞானேந்திரிய மைந்தும், கருமேந்திரிய மைந்தும், மனமொன்றுமாம். இவற்றுள் ஏற்படும் அசுத்தங்களை நீக்கினால் ஈசுவரன் இருக்

தற்கு அவ்விருதயம் தகுதியுடையதாகும். இவ்வாறு ஈசுவரனே முதலில் மனதில் பிரதிஷ்டை செய்துகொண்டுதான் பின்னர் பிரசங்கமும், போதனையும் செய்யவேண்டும்.

179. ஈசுவராக்ஞை பெற்றவரே போதிக்கத் தக்கவரென்பது:

மனிதர்களில் அநேகர் ஈசுவர பக்தியிலே ஆழ்ந்து லயமாய்விடுவதற்கு விரும்பார்; விவேகத்தையாவது, வைராக்கியத்தையாவது பெரிதெனப் பாராட்டார்; பக்தி சாதனங்கள் செய்வதற்கும் முன்வரார்; தங்கள் சட்டைப்பையிலே உள்ள ஒரு சிறு புத்தக அறிவைமாத்திரம் வைத்துக்கொண்டு பிரசங்கம் செய்ய அல்லது போதிக்கப் புறப்பட்டு விடுகிறார்கள். ஆ! ஆ!! இது ஆச்சரியம்! பிறருக்குப் போதிப்பது மிகக் கடினமான காரியம். ஈசுவரனே அடைந்த பின்னர் அவரிடமிருந்து ஆக்ஞை பெறுகிறவரே போதிக்க அருகராவார்.

180. ஒரே ஈசுவரப்பிரகாசம் அநேக மதபோதகர்களாகிய விளக்குகள் மூலம் பிரகாசிக்கிறதென்பது:

காந்த வெளிச்சமானது, ஒரே இடத்திலுள்ள ஜீவப் பிரகாசத்தால் வெவ்வேறு இடங்களைப் பிரகாசிக்கச் செய்கிறது. ஜீவப்பிரகாசம் பொதுவாயுள்ள ஒரு தொட்டியிலிருந்து உண்டாகிறது. இதுபோலவே, எல்லாக் காலங்களிலும், தேசங்களிலுமுள்ள மதபோதகர்கள் அநேக தீபங்கள்போன்றிருக்கின்றார்கள். இந்தத் தீபங்களின் மூலமாக சர்வசக்தி வாய்ந்த ஈசுவரனுடைய ஓர் உற்பத்திஸ்தான

கத்திலிருந்து ஆத்மப் பிரகாசமானது இடைவிடாமல் ஓடிக் கொண்டேயிருக்கிறது.

181. ஈசுவர பக்தர்களுக்கும், புஸ்தகப் படிப்பாளிகளுக்கும் உள்ள வித்தியாசம்:

ஒரு பணக்கார வியாபாரியினுடைய களஞ்சியத்திலிருந்து தானியம் விலைக்கு அளக்கப்படும்பொழுது, எவ்வளவு அளந்தாலும் தானியம் சீக்கிரம் குறைவுபடாமல் கெடுகாலைக்கு வந்துகொண்டேயிருக்கும். ஒரு சிறு வியாபாரியினிடமுள்ள தானியமோ சீக்கிரம் செலவாகிவிடும். இதுபோலவே ஈசுவரபக்தர்கள் புதியவையும், ஞான மடங்கியவையுமான நிஜப்புக்களிலே ஒருபொழுதும் குறைவுமிருப்பார்கள்; பக்தியற்ற புத்தகப் படிப்பாளிகள் அவற்றிற் குறைவுற்றிருப்பார்கள்.

182. ஞானமடையாதவன், ஒருவனை உய்விக்கத் தொடங்கினால் துன்பமே உண்டாகுமென்பது:

ஒருதினம் நான், பஞ்சவடியினருகிற் சென்றுகொண்டிருக்கையில் தவளை யொன்று பயந்து கத்தும் சத்தத்தைக் கேட்டேன். அது ஒரு பாம்பினால் பிடிக்கப்பட்டிருக்கவேண்டுமென்று யூகித்தறிந்துகொண்டே போய் கெடுநேரங் கழித்து நான் அவ்வழியாகத் திரும்பிவந்தேன். அப்பொழுதும் அத்தவளையின் சத்தம் கேட்டது. உடனே நான் சத்தமுண்டான விடத்தை யணுகிப் பார்க்க ஒரு நீர்ப்பாம்பு ஒரு தவளையைக் கௌவிக்கொண்டு விழுங்கவும் முடியாமல் விடவும் முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தது. தவளை

பட்ட அவஸ்தைக்கும் அளவில்லை. அத் தவளையை ஒரு நாகம் கௌவியிருந்தால் தவளையின் வாயிலிருந்து மூன்று சத்தங்களுக்கு மேல் வெளிப்படாமல் வெகு சீக்கிரமாக விழுங்கி அதனை மௌனமடையச் செய்துவிடும். இந்த நீர்ப்பாம்பினிடம் அகப்பட்டதால் அதற்கும் அவஸ்தை - இப் பாம்புக்கும் மிகுந்த கஷ்டம். இதுபோலவே, ஞான வல்லமை யடையாத ஒருவன், தனது மூடமான நிலைமையில், மற்றொருவனை உய்விக்கும் பாத்தியதையை எடுத்துக் கொள்ளுவானுனால் இருவருக்கும் துன்பமே அதிகரிக்கும். சிஷ்யனுடைய அகக்கிராந்தியும் போகாது; உலக பந்தங்களும் சேதிக்கப்படா. இன்னும், ஒருவன், குருவாயிருத்தற்குத் தகுதியற்றவனிடத்திலே சிஷ்யனுனால் அவன் ஒரு பொழுதும் முக்தியடைவதில்லை. தகுந்த குருவுபதேசத்தாலோ ஜீவனுடைய அகக் கிராந்தியானது மூன்றே சத்தங்களில் மரித்துவிடும்.

183. மதபோதகர் மூன்றுவித மாவரேனல்:

உலகத்தில் வைத்தியர்கள் மூன்றுவிதமாயிருப்பதுபோல, மதபோதகர்களும் மூன்றுவிதமாயிருக்கிறார்கள். எவ்வாறெனில், ஒருவகுப்பு வைத்தியர், தங்களை அழைத்தவிடத்திற்குச் சென்று, வியாதியஸ்தனைப் பார்த்து, அவனுடைய நாடிகளை ஆராய்ந்து, அவசியமான மருந்துகளை எழுதி அவனிடம் கொடுத்து அவற்றை அவன் சாப்பிடும்படி கூறுவார்கள். அவ் வியாதியஸ்தன் அம் மருந்துகளை உண்ணமறுத்துவிட்டால் அந்த வைத்தியர்கள் அதற்கு

மேல் அவ் வியாதியஸ்தனைப்பற்றிச் சிரம மெடுத்துக் கொள்ளமாட்டார்கள். இவர்கள், வைத்தியர்களுக்குள்ளே மிகத் தாழ்ந்த வகுப்பினராவார்கள். இதேபோல், சில மத போதகர்கள், தங்கள் போதனைகள் மதிக்கப்படுகின்ற விஷயத்திலும், அனுபவத்தில் கொண்டுவரப்படுகின்ற விஷயத்திலும் கவனம் செலுத்துவதேயில்லை. மற்றொரு வகுப்பு வைத்தியர்கள், வியாதியஸ்தருக்கு மருந்தைச் சொல்லுவதோடுமாத்திரம் விட்டுவிடுவதில்லை. அந்த வியாதியஸ்தர் மருந்து சாப்பிடப் பின்வாங்கினால் அவர்கள் அதிலுள்ள நன்மைகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களை அம் மருந்தைச் சாப்பிடும்படி செய்வார்கள். இவர்கள் நடுத்தரமானவர்கள். இதேபோல், மற்றொருவகுப்பு மத போதகர்கள் போதனை செய்வதோடு விட்டுவிடாமல், தர்மம், ஈசுவரபக்தி, சத்தியம் ஆகிய இம் மார்க்கங்களிலே மற்ற ஜனங்கள் எப்படியாவது நடக்கும்படி செய்வார்கள். பின்னொருவகுப்பு வைத்தியர்கள், வியாதியஸ்தனுக்கு நன்மைகளை எடுத்துச் சொல்லியும் அவன் கேட்காவிட்டால், அவனைப் பலாத்காரம் செய்யத்தொடங்கி, அவனுடைய மார்பின்மீது தங்களுடைய முழந்தாளை வைத்து அழுத்திக் கொண்டு அவன் வாயில் மருந்தைக் கஷ்டப்பட்டாவது செலுத்துவார்கள். இதுபோலவே இன்னொருவகை மத போதகர்கள், தங்கள் சிஷ்யர்கள், ஈசுவர மார்க்கத்திலே செல்லும்பொருட்டு அவர்களைப் பலாத்காரமும் செய்வார்கள். இவர்கள் மிக உயர்ந்த வகுப்பைச் சார்ந்தவர்களாவார்கள்.

184. ஈசுவரன் விஷயத்தில் பேசும் பேச்சை அறிந்து பேசவேண்டுமெனல் :

பிரசங்கம் செய்வதில் வல்லுநராகிய ஒருவர் ஒரு சமயத்திலே ஒரு ஹரி சபையிலே பிரசங்கம் செய்து கொண்டிருக்கும்போது "ஈசுவரன் ரசமற்றவர்; நமது சொந்த ஹிருதய ரசத்தினாலே அவருக்கு ரசமூட்டி அவரை ரசப்படுத்தவேண்டும்" என்று சொன்னார். அவர், ஆனந்தம், அன்புமுதலிய தெய்வ லக்ஷணங்களையே ரசமென்று கூறியிருக்கலாம். இவ்வாறு சொல்வது தகாது. ஈசுவரனை ரசமற்றவர் என்று சொல்வது முழுமூடத்தனம். அவர் இவ்வாறு கூறியதனால், தாம் சொன்னதை இன்னதென்றே உணராமல் பேசினரென்பதும், நித்திய அன்புக்கும் ஆனந்தத்துக்கும் அறிவுக்கும் உற்பத்தி ஸ்தானமாகிய அந்த பரமாத்மாவை அவர் ஒருபொழுதும் அனுபவத்தில் அறிந்திருக்கமாட்டா ரென்பதும் விளங்குகின்றன.

185. குதர்க்கப் பிரசங்கிகளுக்குப் பதிலுரைக்க முடியாதென்பது :

பிரசங்கித்தலையே தமக்குரிய தொழிலாகக் கொண்ட் ஒருவர், தாம், மதப்பிரசங்கம் செய்த காலங்களிலெல்லாம், கேட்பவர்களுடைய ஹிருதயங்களிலே அதிகமான பக்தியுணர்ச்சிகளை உண்டாக்க வல்லுநரா யிருந்தார். ஆனால், அவரிடத்தில் சிறிதும் ஒழுக்கமில்லை. அதனால் ஒருதினம் நான் அவருடைய இவ்வியல்பினை நோக்கி வருத்தமுற்று, அவரை நோக்கி, "உம்முடைய வாழ்க்கையோ மிகவும்

அயோக்கியத்தனமான வாழ்க்கையா யிருக்கின்றதே; இத் தகைய நீர், பல மனிதர்களுடைய ஹிருதயங்களிலே பக்தி யுணர்ச்சியை உண்டாக்குவ தெவ்விதம்?" என்று வினவ, அவர் வணங்கி, "சுவாமி! தடைப்பம் இகழத்தக்க வஸ் துவா யிருந்தபோதிலும், வீட்டிற்குள்ளும், தெருவிலு முள்ள குப்பைகளைத் தள்ளிச் சுத்தம் செய்கின்றதன்றோ?" என்றார். அவருக்குப் பதில் கூற என்னால் முடியவில்லை.

9-வது அத்தியாயம்

மதமும், புத்தகப் படிப்பும்

186. புஸ்தகப் படிப்பில் ஒன்றுமில்லை யென்பதும், அனுபவமே சிறந்த தென்பதும்:

பரிசுத்த கிரந்தங்களைப் படிப்பதனால்மாத்திரம் தெய் வீக அன்பை அடைதல் முடியாது. நம் இந்துக்களின் பஞ்சாங்கங்களிலே இவ்வருஷத்தில் இன்ன இன்ன காலங் களில் இவ்வளவு இவ்வளவு மழை பெய்யுமென்ற விஷயங் கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆயினும், அந்தப் பஞ்சாங் கத்தைக் கசக்கிப் பிழிந்தாலும் ஒரு துளி ஜலங்கூடக் காண முடியாது. அப் பஞ்சாங்கங்களிற் கூறிய காலத்தை எதிர் நோக்கியிருந்தால் மழை பெய்வதை உணரலாம். இதேபோல், பரிசுத்த கிரந்தங்களிலே அநேகம் நன் மொழிகள் காணப்படினும் அவற்றை வாசிப்பதனால் மாத் திரம் மத விசுவாசம் உண்டாய்விடமாட்டாது. அக்கிரந்

தங்களிற் கூறப்பட்டிருக்கும் உண்மைகளை அனுபவத்தில் அனுஷ்டித்தால் மாத்திரந்தான் அஃதுண்டாகும்.

187. ஈசுவரனிடத்தில் ஹிருதயத்தை நிலைநிறுத்த வேண்டுமெனல் :

'கீதா' என்னும் வார்த்தையை 'கீதா! கீதா!! கீதா!!!' என்று பன்முறை வேகமாகச் சொன்னால் அது, 'தாகீ! தாகீ!!' என்று மாறிவிடும். 'தாகீ' என்பதற்குப் பொருளாவது: 'நீங்கள் விட்டுவிடுங்கள்' என்பதாம். இதனாலே அந்தக் கீதா என்னும் வார்த்தையானது நம்மைத் துறந்து விடச் சொல்வதாக அறிகிறோம். ஆகவின், உலக பந்தத்தில் அகப்பட்டுள்ள மனிதர்களே! நீங்கள் உலக பந்தத்தைத் துறந்துவிடுங்கள்; எல்லாவற்றையும் தியாகம் செய்துவிட்டு ஈசுவரனிடத்திலே உங்கள் இருதயத்தை நிலைநிறுத்துங்கள்.

188. ஈசுவரனை யறிந்தவன் அமைதியா யிருப்பான் எனல்:

ஈசுவரனை அறியாதவன்றான் 'கடவுளே! கடவுளே!!' என்று உரக்கக்கூவி யழைத்துக்கொண்டிருப்பான்; இதனால் அவன் ஈசுவரனை அறியாதவனென்று நிச்சயமாகத் தெரிந்துகொள்ளலாம். ஈசுவரனை அறிந்தவன் அமைதியடைந்து உபசாந்தி பெற்றிருப்பான்.

189. ஞானியே பரமானந்த மடைவானெனல் :

ஒரு தோட்டத்திற்குள்ளே இரண்டு நண்பர்கள் சென்றார்கள். அவர்களுள் உலக அறிவு மிகுந்தவன் அங்குள்ள

புகுந்தவுடனே, 'அத் தோட்டத்தில் எத்தனை மாமரங்கள் இருக்கின்றன?' என்றும், 'அத்தோட்டம் என்ன விலைக்குப் போகும்?' என்றும் ஆராய்ந்துகொண் டிருந்தான். மற்றொரு தோழன், அத்தோட்டத்திற்குச் சொந்தக்காரனிடம் சென்று, அவனுடன் சிநேகம் செய்து, அவனுடைய அனுமதியின்பேரில் ஒரு மாமரத்தினடியிற் சென்று சில கனிகளைப் பறித்துத் தின்றான். இவ்விருவருள் அறிவுள்ளவன் எவன்? பழம் பறித்துத் தின்றவனன்றே? இவர்களைப் போலவே, புத்தியில் கர்வ மடைந்துள்ளவன், 'சிருஷ்டியென் உண்டாயிற்று?' 'எங்கிருந்து வந்தது?' என்று சிருஷ்டியை ஆராய்ந்து அதைக் கண்டுபிடிப்பதிலேயே சுறுசுறுப்பா யிருந்து காலத்தை வீணுகக் கழிப்பான். ஞான மூள்ளவனே சிருஷ்டி கர்த்தாவுடன் விநயமாக நட்புச் செய்துகொண்டு அவரால் கொடுக்கப்படும் பரமானந்தத்தை அனுபவிப்பான்.

190. ஈசுவரனைப்பற்றிய சாஸ்திரங்களை எடுத்துரைப்பதின் தன்மை:

ஈசுவரனைப்பற்றிக் கூறும் சாஸ்திரங்களை எடுத்துரைப்பது எதை நிகர்க்குமெனில், காசிமாநகரத்தை ஒரு படத்தில்மட்டும் பார்த்துவிட்டு மற்றொருவனுக்கு அதன் விவரத்தை எடுத்துரைப்பதை நிகர்க்கும்.

191. பேசுவதுபோல் நடப்பது கடினமெனல்:

வாயினால், ''டோ ரே மி பா ஸோல்'' என்ற தொனியினைச் சுலபமாகக் கூறிவிடலாம். ஆயினும், இந்த நாதஞ்

களை ஒரு வாத்தியத்தில் உண்டாக்குவது கஷ்டம். இது போலவே, ஒரு மதத்தைப்பற்றிய விஷயங்களை வாயினல் பேசுவது சுலபம். அந்தப்படி நடந்து காட்டுவது கடினம்.

192. ஒருவன், தன் மதக்கோள்கைகளைப்பற்றிப் போராடிக்கொண்டிருக்கும் வரையில் உண்மை காணமுடியா தென்பது:

தேனீயானது ஒரு புஷ்பத்தினுள்ளேசென்று தேனைப் பருகி உருசி யுணராதிருக்கும்வரையில் இதழ்களுக்கு வெளியே 'பஸ்' என்று சத்தமிட்டுச் சுற்றிப் பறந்து கொண்டே திரியும். புஷ்பத்தினுள்ளே நுழைந்து தேனைப் பருகஆரம்பித்துவிட்டால் சத்தமிடாமல்அடங்கித் தேனின் சுவையை அனுபவிக்கும். இதுபோலவே, ஒருவன், தன் மதக் கோட்பாடுகளைப்பற்றிப் பேசிப் பலபேரிடம் போராடிக்கொண்டிருக்கும்வரையில் மதத்தின் உண்மைப்பொருளாகிய அமிர்தத்தைப் பருக முடியாது. அவன் உண்மையை உணர்ந்துவிடுவானனல் அமைதி யடைந்துவிடுவான்.

193. ஈசுவரனை நேருங்காதவரையில் அவருடைய இரகசியங்களை அறிய முடியாதேனல்:

சந்தைகூடு மிடத்திற்கு வெகுதூரத்தில் ஒருவன் இருப்பானனல் அவனுக்கு, 'ஹோ' என்னும் தெளிவற்ற சப்தமொன்றே கேட்டுக்கொண்டிருக்கும். அவன், சந்தையைச் சமீபித்து அதற்குள் நுழைந்துவிடுவானனல் அங்கே பல ஜனங்கள் பலவிதமான வியாபாரங்கள் செய்கிறார்களென்றும், ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான சப்த

மிடுகிறார்களென்றும் அங்குள்ள இரகசியங்களை யெல்லாம் விவரமாகத் தெரிந்துகொள்வான். இதுபோலவே, ஒருவன் ஈசுவரனுக்கு வெகுதூரத்திலே யிருக்கிறவரையில் யுக்தி, நியாயம், தர்க்கம் முதலிய கூச்சல்களுக்கும் குழப்பங்களுக்கும் நடுவில்தான் இருப்பான். ஈசுவரனைச் சமீபித்து விட்டால் எல்லாம் நீங்கிவிடும். அவனுக்குத் தெளிவான பார்வை யுண்டாகும். தெய்வ ரகசியங்களெல்லாம் அவனுக்குத் தோற்றும்.

194. உண்மைஞான முண்டானபின் வீண் ஆரவார மிராதெனல்:

அடுப்பிலிருந்து கொதிக்கின்ற நெய்யிலே மாவை அகப்பையால் மொண்டு தோசையாக வார்த்தால் அதில் முதலில் பெருஞ்சப்த முண்டாகும். அது கொஞ்சம் கொஞ்சம் வேகவேகச் சத்தமும் சிறிதுசிறிதாக அடங்கிக்கொண்டேவரும். முழுதும் வெந்துவிட்டால் சப்தமே யில்லாமல் நின்றுவிடும். இதேபோல், ஒருவனுக்கு அறிவு குறைவா யிருக்கும்வரையில் அவன் தர்க்கஞ் செய்துகொண்டும், பிரசங்கித்துக்கொண்டும், போதனை செய்துகொண்டும் ஆரவாரத்துடன் திரிவான். அவனுக்கு உண்மை ஞான மாகிய பரிபூரணத்துவம் ஏற்பட்டுவிட்டால் அந்த வீண் ஆர்ப்பரிப்பெல்லாம் நீங்கிவிடும்.

195. ஆத்மஞான மில்லாத பிரசங்கியின் தன்மை:

ஆத்மஞான மில்லாமல் பிரசங்கம் செய்கிறவன், தன்னிடம் வைக்கப்பட்ட வேறொருவனுடைய சொத்தைச்

செலவு செய்பவனே நிகர்ப்பான். ஏனெனில், அவன் போதிக்கும் விஷயங்கள் அவனுடைய அனுபவத்திற் கண்டவைகளல்ல; மற்றொருவர் சொல்லக் கேட்டுத் தெரிந்து கொண்டவைகளே.

196. பந்த முள்ளவர்க்கு எச்சமயத்திலும் உலக அறிவே மிகுமென்பது:

இனியானது, தனக்கு மனிதரால் கற்றுக்கொடுக்கப் பட்ட 'ராதா - கிருஷ்ணு' என்பன போன்ற சொற்களை அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கும். ஆயினும், அது ஒரு பூனையால் பிடிக்கப்பட்டபொழுது 'என்னைப் பூனை பிடித்துக் கொண்டது' என்று சொல்லமாட்டாது. தன் ஜாதி இயற் கைப்படியே 'கிச்சுக் கிச்சு' என்று கத்தும். இதேபோல், உலக அறிவு மிகுந்துள்ள மனிதர்கள் சிற்சில சமயங்களில் ஹரிநாமத்தை ஜெபிப்பார்கள்; உலகத்திலே நல்ல மதிப்பு கிடைக்குமென்ற நம்பிக்கையுடனே அனேகம் தர்மகைங் கரியங்களைச் செய்வார்கள். ஆயினும், துரதிர்ஷ்டம், துக் கம், வறுமை, மரணம் முதலியவைகள் நெருங்கிய சமயத் தில் மேற்கூறிய பகவானையும் தர்மச்செய்கைக ளெல்லா வற்றையும் மறந்துவிடுவார்கள்.

197. பக்தி சாதனத்திலுலேயே ஈசுவரனைப் பார்க்க முடியுமெனல்:

கஞ்சா என்ற வார்த்தையை ஒரு மனிதன், ஆயிரம் முறைகள் கூறினாலும் அவனுக்குக் கஞ்சா வெறி யேறாது;

கஞ்சாவை வாங்கித் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்துத் தண்ணீரில் கலக்கிக் குடித்தால்மாத்திரந்தான் அதன் போதை யுண்டாகும். இதேபோல் ஒருவன், 'ஏ கடவுளே! கடவுளே!!' என்று உரக்கக் கூவுவதால் ஈசுவரனைப் பார்க்க முடியாது. பக்தி சாதனங்களை ஒழுங்காக அப்பியசித்து வந்தால் மாத்திரந்தான் ஈசுவரனைப் பார்த்தல் முடியும்.

198. உண்மை யுணர்ந்த ஞானி அதிகம் பேசா னென்பது:

பக்தி சாதனங்களை அப்பியசித்து ஒருசிறிதேனும் ஈசுவரனது உண்மைச் சொரூபத்தை உணராத மனிதர்கள் மதவிஷயமான பேச்சுக்களை அளவற்றுப் பேசுவார்கள். மதவிஷயங்களை நன்குணர்ந்து பக்தி சாதனங்களை அப்பியசித்து வந்த ஞானியானவன், அதிகமாகப் பேசமாட்டான்.

199. சரஸ்வதி தேவியிடமிருந்து வரும் பிரகாசத்தின் தன்மை:

ஜகன்மாதாவாகிய சரஸ்வதி தேவியிடமிருந்து வருகிற பிரகாசத்தின் ஒரு கிரணத்துக்கு, பண்டிதர்கட்குள் மிகச் சிறந்தவனையும், நசுக்கப்பட்ட பூப்புழுப்போல இழிந்தவனுக்கித் தலைவணங்கச் செய்யும் சக்தியுண்டு.

200. ஈசுவரனை யறிகின்ற வித்தையே சிறந்ததெனல்:

நாம் ஈசுவரனை யறிகின்ற வித்தையே பரவித்தையாம். சாஸ்திரங்கள், தத்துவஞானம், தர்க்கம், இலக்கணம்

முதலியவைகளெல்லாம் மனத்தைக் குழப்பிவிட்டு அதற்குச் சுமையாக ஏற்படக்கூடியவை.

201. பேசுவதுபோல் விஷயங்களை உணர்வோர் சிலரே யென்பது :

நமக்குள்ளே பண்டிதர்க ளெனப்படுவோர், அகண்ட வஸ்துவாகிய பிரமத்தைப்பற்றியும், ஞானயோகம் தத்துவ ஞானம் முதலியவற்றைப்பற்றியும் அதிகமாகப் பேசுவார்கள். ஆனால், அவற்றை அனுபவத்தில் அறியார்கள். அவ்வாறு அறிந்தவர்கள் மிகச் சிலரேயாவர். உண்மையை உணராதவர்களுடைய பேச்சுக்களெல்லாம் உலர்ந்தவை; ஒன்றுக்கும் பயன்படாதவை.

202. பக்தியின் தன்மையைக் காட்டும் ஓர் உதாரணக் கதை :

சைதன்ய தேவர், தக்ஷணதேசத்திலே யாத்திரை செய்தபொழுது ஓரிடத்தில் ஒரு பண்டிதர் கீதை வாசித்துக்கொண்டிருந்தார்; அவர் பக்கத்தில் ஒரு பக்தன் அதனைக் கேட்டுக் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தான். அவனுக்கு எழுத்து வாசனையே இல்லை; கீதையில் ஒரு சுலோகத்தைக்கூட அவனால் இரசித்தல் முடியாது. அத்தகைய அவன், கண்ணீர் விட்டதைப் பார்த்தவுடன், தேவர், அவனை நோக்கி, "நீ ஏன் கண்ணீர் விடுகின்றாய்? எழுத்து வாசனையை நீ உணரமாட்டாயே; அப்படியிருக்க உனக்கு இந்தக் கீதை வாசிப்பைக் கேட்டதால் என்ன விஷயம் தெரிந்தது?" என்று வினவ, அவன், "கீதையின் ஒரு வார்த்தை

யைக் கூட நான் அறியேன் என்பது உண்மையே; ஆயினும், இதைக் கேட்டவுடனே, குரு கேஷத்திரத்திலே ஒரு இரதத்தின்மீது அருச்சுனன்முன், பிரபுவாகிய ஸ்ரீ கிருஷ்ணன் உட்கார்ந்து சிறந்த கொள்கைகளடங்கிய கீதையை உபதேசிப்பதை நான் என் மனக் கண்ணால் பார்க்கிறேன். அதனாலேதான் என் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகுகின்றது'' என்றான். இந்த மனிதன் எழுத்தென்பதையே அறியாதவனாயினும் ஈசுவரனிடத்திலே பரிசுத்த பக்தியைச் செலுத்துதலாகிய வித்தையை உடையவனாயிருந்தான். அதனாலேயே அவன் அவரை அனுபவத்தில் அறிந்தான்.

203. கர்வமுடையவனுக்கு ஈசுவரஞானம் சித்தியாதெனல் :

தன்னுடைய வித்தையைப்பற்றிக் கர்வமடைகிறவனுக்கும், தனது ஐசுவரியத்தைப்பற்றிக் கர்வமடைகிறவனுக்கும் ஈசுவரஞானம் உண்டாகமாட்டாது; இப்பேர்ப்பட்டவர்களை நோக்கி, ''ஓரிடத்தில் ஒரு மகானிருக்கிறார்; அவரைப் பார்க்க நீ வருகிறாயா?'' என்று கேட்டால், அவர்கள், சாக்குப் போக்குகள் கூறி ''வரமுடியாது'' என்று சொல்லிவிடுவார்கள். அத்தகைய ஒருவரைப் பார்ப்பது தமக்கு அகௌரவமென்றும், தாங்கள் மிகவும் பெரிய மனிதரென்றும் அவர்கள் அகங்காரிப்பான் எண்ணத்தை வைத்துக் கொண்டிருப்பதினாலேயே அவ்வாறு சொல்ல ஹேதுவுண்டாகிறது. இந்தக் கர்வமானது அஞ்ஞானத்திலிருந்தே உண்டாகிறது.

204. புத்தக ஞானத்தைக்காட்டினும், கேள்விஞான மும், அனுபவ ஞானமும் சிறந்தனவென்பது:

புத்தகங்களைப் படிப்பதன்மூலமாகவே ஈசுவர ஞானத்தை அடையலா மென்று சிலர் நினைக்கிறார்கள். அது சரியான அபிப்பிராய மன்று; காசியைப்பற்றிப் படிப்பதைப் பார்க்கினும் அந்த நகரத்தை நேரிற் கண்ட ஒருவர் வாக்கினால் கேட்பது சிறந்ததாகும்; காசியை நேரில் காண்பது இதினும் மிகச் சிறந்ததாம். இவைபோல, ஈசுவர ஞானத்தை அடைவதற்குப் புஸ்தகங்களைப் படிப்பதைக் காட்டினும் அதனை யறிந்தவர்மூலம் கேட்டலே சிறந்தது. புஸ்தகங்களை வெறுமனே படிப்பதால் பயனில்லை: குருவின் வாயிலிருந்து வெளிவரும் உண்மைகளைக் கேட்டால் அவை நன்றாக உள்ளத்திற் பதியும். பிரத்தியக்ஷாதி பவமாக அந்த ஞானத்தை உணர்தல், கேள்வியினும் மிகச் சிறந்ததாம்.

205. நித்திய வஸ்துவைப் பார்க்கும் விதம்:

நிர்க்குண வஸ்துவே, நம்மைச் சுற்றிலுமுள்ள எல்லா வஸ்துக்களாகவும் ஆகியிருக்கிறது. முடிவுள்ள ஆத்மாவாகவும், காட்சியுலகமாகவும் தோன்றுகிறது அதுவே. இந்தச் சத்திய வஸ்துவைப் பார்ப்பதற்கு உள்ளே ஆத்மாவானது எழுப்பப்படவேண்டும். ஒருவன் அதை ஒரே சத்தியமாகப் பார்ப்பதற்கு சக்தியற்றவனாயிருந்தால், அந்த சக்தியைப் பெறும்வரையில் வஸ்து விசாரணை செய்து, 'இது அன்று! இது அன்று!!' என்று அதனைப் பகுத்தறிதல்

வேண்டும். அங்ஙனமறியாமல், "அவரே எல்லாமா யிருக்கிறார் என்று நான் சந்தேகமின்றிக் கண்டுவிட்டேன்" என்று அவன் வெறுமனே பேசுவதாற் பயனில்லை. ஈசுவர கிருபையினாலே நித்தியவஸ்துவை அறியும் சக்தி எழுப்பப் படவேண்டும். ஆத்மீக விழிப்பு சமாதியினாலே பின்தொடரப்படுகிறது. இந்த ஸ்திதியிலே மனிதன் தனக்குச் சரீரம் இருக்கிறதென்பதை மறந்துவிடுகிறான். பெண், பொன் முதலிய உலக வஸ்துக்களிடத்தேயுள்ள எல்லாப் பற்றுக்களையும் ஒழித்துவிடுகிறான். ஈசுவர சம்பந்தமான வார்த்தைகளைத் தவிர வேறு வார்த்தைகளை விரும்புகிறதில்லை. உலக விஷயங்களைப்பற்றிக் கேட்கும்படி நேர்ந்தால் துன்புறுகிறான். உள்ளேயுள்ள ஆத்மா விழிப்படைந்துகொண்டால் அடுத்தபடியில் விசாட்புருஷனை அறியும். ஆத்மாவை அனுபவத்தில் அறிவது ஆத்மாவேயாம்.

206. ஈசுவரனைச் சமீபித்தால் கேள்வி, விவகாரம் முதலியன அடங்கிப்போமெனல்:

ஒரு வீட்டிலே விருந்துக்குப் பல ஜனங்கள் வந்து கூடினால் அவர்களால் இடப்படும் பெருஞ் சத்தம் முதலில் உண்டாகும். அவர்கள் போசன முண்ணத் தொடங்கும் வரையில் அக்கூச்சல் உண்டாகிக்கொண்டே யிருக்கும். இலைபோட்டு எல்லோரும் உட்கார்ந்துவிட்டால் இறைச்சலில் மூக்காற்பங்கு நின்றுவிடும். பின்னே மிட்டாய் வர்க்கங்கள் பரிமாறப்பட்டவுடனே இன்னும் கொஞ்சம் சத்தமடங்கும். இவ்வாறே ஒவ்வொரு வஸ்துவும் பரிமாறப் பரி

மாற இறைச்சலும் சிறிது சிறிதாக அடங்கிச் சாப்பிட்டு முடிந்தவுடன் முடிவில் எல்லாச் சந்தடிகளும் ஒடுங்கிவிடுகின்றன. அதன்மேல் விருந்தாளிகள் கூச்சலிடாமல் மனத் திருப்தியோடு உறங்கச் செல்கிறார்கள். இதேபோல, ஈசுவரனிடத்தில் மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு நெருங்குகிறானோ அவ்வளவுக் கவ்வளவு கேள்வி கேட்பதும், நியாயம் பேசுவதும் குறைவுபடும். பின்னர் உறங்குவதற்கு அதாவது, சமாதியில் ஆண்டாகும் ஆனந்தத்தைத் அனுபவித்தற்கு நேரம் வந்துவிடும். அப்போது மனிதன் சமாதியிலே இவ்ய தரிசனத்துடனே ஒன்றுகக் கலந்துநிற்பான்.

207. கிரந்தங்கள் ஈசுவர மார்க்கத்தைக் கூறினாலும் அனுஷ்டானத்தைப்போலச் சிறந்தவை யாகாவேனல் :

பரிசுத்தமான சாஸ்திரங்க ளெல்லாம் ஈசுவரமார்க்கத்தையே குறிக்கின்றன. எனினும், அவற்றால் பயனில்லை; அவற்றிற் கூறப்படும் மார்க்கத்தை உணர்ந்து, ஆத்மா ஈசுரனுடனே ஏகாந்தத்தில் லயமடைதற்குரிய அனுஷ்டானத்தைச் செய்தலே சிறந்ததாம்.

208. ஈசுவரானுபூதியை யடையும் மார்க்கத்தைத் தெரிந்துகொள்ளும்வரைதான் கிரந்தங்கள் அவசிய மென்பது :

சில வஸ்துக்களை வாங்கி யனுப்பும்படி ஒருவனுக்கு அவனுடைய கிராமத்திலிருந்து ஒருகடிதம் வந்தது. அதை

அவன் ஓரிடத்தில் வைத்துவிட்டு இரண்டு தினங்கள் சென்று அவ் வஸ்துக்களை வாங்குதற்குக் கடைக்குப் போம்போது தேடினான். அக்கடிதத்தை வைத்தவிடம் அவனுடைய ஞாபகத்திற்கு வராததால் அது அகப்படவில்லை. கடிதத்தில் எழுதப்பட்டிருந்த வஸ்துக்களையும் அவன் மறந்துவிட்டதால் அவற்றை மீண்டும் பார்த்துத் தெரிந்துகொள்வதற்கு அக்கடிதம் அவனுக்கு அவசியமாக வேண்டியிருந்தது. அதனால் அவன் அதைப் பன்முறை தேடித்தேடிக் கவலைப்பட்டான். நெடுநேரஞ் சென்று அக்கடிதம் ஓரிடத்திலிருந்து அவன் கைக்கு அகப்பட்டது. உடனே அவன் சந்தோஷமடைந்து அதைப் பிரித்துப் பார்த்து அதில் எழுதப்பட்ட வஸ்துக்களைத் தெரிந்துகொண்டான். பின்னர் அக்கடிதம் அவனுக்கு அவசிய மில்லையென்று தெரிந்தது. அதனால் அவன் அதை எறிந்துவிட்டு உடனே கடைக்குப் போய் அதில் எழுதப்பட்டிருந்த சாமான்களை வாங்கி அனுப்பினான். இதில் கடிதம் அவனுக்கு எவ்வளவுவரையில் அவசியப்பட்டதென்பதைக் கவனித்தால் அதிலுள்ள விஷயத்தைத் தெரிந்துகொள்ளும் வரையிற்றானென்பது ஏற்படும். இதுபோலவே, பரிசுத்த கிரந்தங்கள் ஈசுவரானுபூதியை அடைவதற்குரிய உபாயத்தைப்பற்றிக் கூறுவதுவரையில்தான் உபயோகப்படும். அம் மார்க்கத்தைத் தெரிந்துகொண்ட பின்னர் அஃது அவசியமில்லை. பின்னர் அனுபூதியை அடைதற்கு முயற்சிப்பதே அவசியமாம்.

209. ஒருவனுக்கு உலகப்பற் றிருக்கிறவரையில் சாஸ்திரங்களைப் படித்தாலும் ஞான மூண்டாகாதெனல் :

மனிதன் எவ்வளவு புஸ்தகப் படிப்புடையவனு யிருந் தாலும், தனக்கு உலகப்பற் றிருக்கும்வரையில், பெண்ணை யும் பொன்னையும் நேசிக்கும் சுபாவ மிருக்கும்வரையில், அவனுடைய படிப்பு அவனுக்கு ஞானத்தையாவது மோக்ஷத் தையாவது கொடுக்காது.

210. ஈசுவரபக்தியுள்ளவருடைய எண்ணத்தை எப்பொழுதும் ஈசுவரன் பூர்த்திசெய்வா னென்பது :

சில ஜனங்கள் சில புஸ்தகங்களைப் படித்துவிட்டுத் தப்பான வழிகளையும் மூடநம்பிக்கைகளையும்பற்றிப் பேசித் தாங்களே மெத்தப் படித்தவர்களென்று கர்வ மடைவார் கள். இவர்களுக்கு ஒரு பயனுமில்லை. உண்மையான ஈசு வர பக்தரோ வீண் கர்வமான வழிகளில் பிரவேசிக்கா மல், அன்புள்ள ஈசுவரன் தனக்கு எப்பொழுதும் உதவி செய்யத் தயாராயிருக்கிறா னென்பதை ஆராய்ந் துணர்ந்து கொண் டிருப்பான். ஈசுவரன் மூடனில் அவனுடைய எண் ணத்தைப் பூர்த்தி செய்வார்.

211. வித்வான்கள் உண்மைஞானம் அடையமுடியாத தற்குக் காரணம் :

பருந்துகளும், கழுகுகளும் ஆகாயத்தில் எவ்வளவு மேலே பறந்தாலும் அவற்றின் கண்கள் அழுகின பிணங்

கள் எங்கே யிருக்கின்றன' என்று பிணங்கள் கிடக்கு மிடத்தையே ஆராய்வனவா யிருக்கும். இதுபோலவே, இடம்பமான வித்வான்கள் எவ்வளவு சாஸ்திரங்களைக் கற் றிருந்தபோதிலும், எத்தனை பிரசங்கங்கள் புரிந்தபோதி லும் அவர்களுடைய மனம் உலக வஸ்துக்களினிடத்தி லேயே பற்றுதலுள்ளதா யிருக்கும். அதனாலேயே அவர் கள் உண்மை ஞானத்தை அடைவதில்லை.

212. ஈசுவரனை அடைந்தவன் ஆனந்த மெய்துவா னென்பதற்குத் தக்க உதாரணம்:

ஒரு குடத்தில் ஜலம் நிரம்புகிறபொழுது 'டெக்! டெக்!!' என்ற சப்தம் கேட்கும். அது நிரம்பியவுடனே அச் சத்தம் நின்றுவிடும். அதுபோலவே, ஈசுர ஆராய்ச்சியில் குறைவுற்ற மனிதன் வீண் தர்க்க ஆரவாரங்கள் நிறைந்த வனா யிருப்பான். அவ்வீசுரனைக் கண்டவனோ மௌன மூற்று ஆனந்தத்தை அடைவான்.

10-வது அத்தியாயம்

முமுட்சுக்களின் பேதங்கள்

213. பக்தர்களுக்குள்ளே முற்றத் துறந்தவரிடத்தில் மாசிராதென்பது:

சட்டியிலிட்டு வறுக்கப்படுகின்ற நெல்முதலிய தானி யங்களில் வெடித்துச் சட்டியைவிட்டு வெளியே குதித்து

வீழ்கின்ற சில தானியங்களே சிறிதும் ஈரமின்றி கன்றுக வறுபட்டனவாம். சட்டிக்குள்ளிருக்கும் தானியங்கள் வறுக்கப்பட்டிருந்தாலும் ஒவ்வொன்றிலும் சிறிது ஈர மிருக்கும். அவ்வாறு ஈரமிருப்பதற்கு ஏதேனும் ஓரடை யாளந் தோன்றும். இவற்றைப்போலவே, பக்தர்களுக் குள்ளே அடியோடு உலகைத் துறந்து வெளியேறுகின்ற சிலரே சிறிதேனும் மாசில்லாத பரிபூரணராவர். உலகிலிருக் கின்ற பக்தர்களுக்கோர பக்தி யெய்தி யிருந்தாலும் அவர்க ளுடைய ஓழுக்கத்திலே ஏதேனும் ஒரு குறைவு இருந்து கொண்டுதானிருக்கும்.

214. ஞானமார்க்கத்தை அனுஷ்டிக்கும் முமுட்சு வுக்கும், பக்தி மார்க்கத்தை அனுஷ்டிக்கும் முமுட்சுவுக்கும் உள்ள பேதம்:

குரங்குக் குட்டியானது தன் தாயைக் கையினால் பல மாகக் கட்டிக்கொள்ளும். பூனைக்குட்டியினால் தன் தாயைக் கட்டிக்கொள்ள முடியாது. அது, தன் தாய்வைத்த விடத்தி லேயே இருந்துகொண்டு தனக்கு வேண்டியதைச் செய் யும்படி தாயிடம் பரிதாப முகங்காட்டிக் கத்தும். தாய் அதன் குறிப்பை யுணர்ந்து அதனை வெவ்வே றிடங்கட்கு அழைத்துச் செல்லும். குரங்குக்குட்டி தன் சொந்தப் பலத்தைக் கொண்டு தாயைக் கட்டிக்கொண் டிருப்பது போலே தாயின் உதவியின்றித் தன் சொந்த பலத்தினாலே தாய் செல்லுமிடங்களுக் கெல்லாம் செல்லும். இவற்றைப் போலவே, ஞானமார்க்கத்தை யனுஷ்டிக்கிற முமுட்சு

வானவன் மோக்ஷமடைதற்குத் தனது சொந்த முயற்சியையே கொண்டிருப்பான். பக்தி மார்க்கத்தை அனுஷ்டிக்கின்ற முமுட்சுவோ ஈசுவர தயையை எதிர்பார்த்து அவரிடத்தே தன்னைத் தியாகம் செய்துவிடுவான்.

215. வாலிபத் துறவிகளுக்கும், சம்சார ஞானிகளுக்கும் உள்ள பேதம்:

காலையிலே கடைந்தெடுக்கப்பட்ட வெண்ணையானது மிகவும் சிறந்ததாம்; சூரியோதயமானபின் கடைந்தெடுக்கப்பட்ட வெண்ணெய் அவ்வளவு சிறந்ததன்று. இவை போலவே, வாலிபத் துறவிகள் மிகச் சிறந்தவராவர்; சம்சார ஞானிகள் அவ்வளவு சிறந்தவராகார்.

216. உயர்ந்த முமுட்சுக்கள் இளமையிலேயே உயர்ந்த ஸ்தானங்களுக்குச் சென்றுவிடுவார்களென்பது:

"ஹரிமம்" என்னும் ஒருவகைப் பக்ஷிகள் ஆகாயத்திலே மிகுந்த உயரத்தில் வசித்துக்கொண்டிருக்கும். அவை ஒருபொழுதும் பூமிக்குவருவதேயில்லை; அவைமுட்டைகளையும் ஆகாயத்திலேயே இட்டுப் பூமியின் ஆகருஷண சக்தியால் அம் முட்டைகள் இழுக்கப்பட்டுக் கீழ் நோக்கிவரும் பொழுது கூடவே தொடர்ந்து மத்தியிலே அவற்றைப் பிளந்துக் குஞ்சுகளை வெளிப்படுத்திவிடும். குஞ்சுகள் வெளிப்பட்டவுடன் கீழ் நோக்கி யிறங்கித் தாங்கள் கீழே விழுவதாகத் தெரிந்துகொண்டவுடனே தங்கள் போக்கைச் சொந்த முயற்சியினாலே மாற்றி மேலே பறந்து

போய்விடும். இவைபோலவே, சுகதேவர், நாரதர், ஏசு, சங்கராச்சாரியர் முதலியவர்களைப்போன்ற புருஷர்கள், தாங்கள் இளமையிலேயே உலக வஸ்துக்களினிடத்துள்ள எல்லாப் பற்றுக்களையும் நீக்கி, ஞானமும் திவ்ய ஜோதியும் நிறைந்துள்ள உயர்ந்த ஸ்தானங்கட்குச் செல்வார்கள்.

11-வது அத்தியாயம்

ஈசுவரப்பிரீதி

217. மாயையினின்றும் விடுதலைக்கு ஈசுவரப்பிரீதியை அடையவேண்டுமென்பது:

மாயா பந்தங்களி
உபாயங்களை அனு
இடைவிடாது அ
செலுத்தினால் ஈசு
கத்தைக் காட்டுவ

218. ஈசுவர

உலகத்திலுள்
'புத்திரன் பிறக்கவி
பெருகவிட்டு அழு
அடையவில்லையே'
இவ்வாறு 'ஈசுவ

பேரும்பான்மையோர் துக்கப்படுவதில்லை. இதனாலேயே ஈசுவரனைக் காண்பவர் அருமையா யிருக்கின்றார்கள். 'ஈசுவரனைக் காணவேண்டும்' என்று அழுகின்றவனெவனோ, அவனைத் தேடுகின்றவனெவனோ அவனே அவ்வீசுவரனைக் காண்பான்.

219. ஈசுவரனைக் காணவேண்டுமென்று தீவிர முயற்சி செய்வார்க்கு நிச்சயமாக ஈசுவரதரிசன முண்டாகுமென்பது:

மேலே, 'ஈசுவரனை விரும்புகிறவன் அவரைக் காண்பான்' என்று சொன்னதில் சந்தேகமேயில்லை. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஜீவிய காலத்தில் இதனைப் பரீக்ஷித்துப் பார்க்கலாம். 'ஈசுவரனைக் காணவேண்டும்' என்று உண்மையான ஆத்திரத்துடனே முயற்சி செய்தால் மூன்று தினங்களுக்குள்ளே நிச்சயமாக அவரைத் தரிசித்து ஜெயமடையலாம்.

220. இந்தக் கலியுகத்திலும் மனிதர் மூன்று தினங்களுக்குள் ஈசுவரகிருபையைப் பெற்றுக்கொள்ள முடியுமெனல்:

மனிதருக்கு இந்தக் கலியுகத்திலே 'ஈசுவரனைத் தரிசிக்கவேண்டும்' என்ற தீவிரதரமான அவா மூன்று தினங்கள் உண்டானாலும் போதும். இந்த அவாவினாலேயே மனிதன் நிச்சயமாக ஈசுவர கிருபையை அடைந்துவிட முடியும்.

221. ஈசுவரனிடத்தே விருப்பம் வைக்கும் விதம்:

உலகப்பற்றுள்ள உலோபி யொருவனுக்குப் பொன்னிடத்தே எவ்வித ஆசையுண்டாகுமோ அவ்வித ஆசையை மனிதர் ஈசுவரனிடத்திலே வைக்கவேண்டும்.

222. ஏகாக்கிர சித்தமும் ஈசுவரப்பிரீதியு முடையவனே சீக்கிரத்தில் ஈசுவரனைக் காண்பா னென்பது:

எவனுக்கு ஏகாக்கிர சிந்தையும் ஈசுவர அனுபவும் அதிகரித்திருக்கின்றனவோ அவனே சீக்கிரத்தில் ஈசுவரனைக் காண்பான்.

223. முழு எண்ணத்தோடு அழைப்பவனுக்கு ஈசுவரன் தரிசனை கொடுக்காம லிராரென்பது:

ஒரு மனிதன் முழு நம்பிக்கையோடு ஈசுவரனை அழைக்கும்பக்ஷத்தில் அவர் உடனே வாமலிருக்கமாட்டார்.

224. ஈசுவரபக்தி, தானே அவரை அடைவிக்குமென்ல்:

குழந்தைக்குத் தாயிடம் பாலுண்ணவேண்டுமென்ற விருப்பமும் பசியும் உண்டாகுங்காலத்தில் அவ்விருப்பமும், பசியும், தாயினுடைய அன்புமே அக்குழந்தையைத் தூக்கத்தினின்று மெழுப்பிவிடும். இவைபோலவே, ஈசுவரனை அடையவேண்டுமென்ற விருப்ப முடையவனுக்கு அவ்விருப்பமும், ஈசுவரனுடைய அன்புமே அவனை ஈசுவரனிடத்தில் சேர்த்துவைக்கும்.

225. கெடாத அன்பும், அசையாத நம்பிக்கையு முண்டாக முயற்சிக்கவேண்டு மென்ல்:

ஈசுவரனிடத்தில் எப்பொழுதும் கெடாத அன்பும், அசைக்க முடியாத நம்பிக்கையும் உண்டாகவேண்டுமெ

ன்று மனிதர் ஜகன்மாதாவை நோக்கிப் பிரார்த்தனை செய்யவேண்டும். அவ்வாறு செய்யின் அவை கைகூடும். அவற்றுல் ஈசுவர கிருபையைப் பெறலாம்.

226. ஜகன்மாதாவின் அன்பைப் பெறும் விதம்:

ஒரு ஸ்திரீக்குப் பல குழந்தைகளிருந்தால் அவள் ஒரு குழந்தைக்கு ஒரு பவளத் துண்டையும், மற்றொரு குழந்தைக்கு ஒரு பொம்மையையும், இவ்விதமே எல்லாக் குழந்தைகளுக்கும் ஒவ்வொரு வஸ்துக்களையும் கொடுத்து அவற்றை விளையாடச் செய்துவிட்டுத் தன் வீட்டு வேலையைப் பார்த்துக்கொண்டிருப்பாள். குழந்தைகள் தாயை மறந்து தங்கள் விளையாட்டு வஸ்துக்களில் மனதைச் செலுத்திக்கொண்டிருக்கும். இப்படி யிருக்கும்போது ஒரு குழந்தை தாயை நினைத்து விளையாட்டு வஸ்துவை எறிந்து விட்டு அவளிடம் சென்று, 'அம்மா! அம்மா!!' என்று கூவி யழுதால் உடனே அவள் அக் குழந்தையை அன்புடன் எடுத்துக் கொஞ்சுவாள். இதுபோலவே, உலக மாயையிற் சிக்கி ஜகன்மாதாவை மறந்திருக்கும் மனிதர்களை அவள் கவனிக்கமாட்டாள். அம்மாயைகளைத் துறந்து அவளைத் தியானித்தால் அவள் உடனே வந்து அவ்வாறு அன்புடன் நினைப்பவர்களை எடுத்து ஆதரிப்பாள்.

227. உண்மைப் பக்தியுடையவர் ஈசுவரனை எளிதில் அடைவார்கள் என்பதும், வெளிப்பக்தி யுடையவர்கள் அவரை அடைதற்கு அநேக யுகங்கள் செல்லுமென்பதும்:

"இந்த ஜென்மத்திலேயே நான் எனது ஈசுவரனைக் காணவேண்டும்; மூன்று நாட்களில் அவரைக் காணவேண்

மெம்; அவருடைய நாமத்தை நான் ஒருமுறை உச்சரித்த மாத்திரத்திலேயே நிச்சயமாக அவரை என்னிடம் இழுத்துக் கொள்ளுவேன்" என்ற ஈசுவரப் பிரீதியை மிகவும் கொள்பவனுல் ஈசுவரன் வெகு சீக்கிரத்தில் ஆகருஷிக்கப் பட்டு அறியப்படுவார். வெளிக்குமட்டும் பக்தி செலுத்து சிறவர்களுக்கு ஈசுவரனைக் கண்டுவிட்டதாக ஒரு வீண் எண்ணம் மாத்திரம் உண்டாகும். அவ்வா றுண்டான போதிலும் அவர்கள் ஈசுவரனைக் காணுதற்கு அநேக யுகங்கள் செல்லும்.

228. தம்மிடத்தே பிரீதியுள்ளவனுக்கு வேண்டியதை ஈசுவரன் கொடுப்பா ரென்பது:

எதையேனும் விரும்பி யழுகின்ற குழந்தையின் விருப்பத்தைத் தாயானவள் தடையின்றி நிறைவேற்றுவாள். இதேபோல, ஈசுவரனும் பக்தியிலேலே தம்மை யடைய வேண்டுமென்று அழுகின்ற முழுமுட்சுவாகிய மைந்தன் எதற்காக அழுகின்ருனே அதை ஈசுவரன் அவனுக்குக் கொடுப்பார்.

229. ஈசுவர அவாவை யுடையவன் ஆகாரம் முதலிய வற்றை நினைக்கமாட்டானெனல்:

ஈசுவரனே யடையவேண்டுமென்ற பேரவாவுடன் அவரிடத்தே சதாகாலமும் சென்றுகொண்டிருக்கும் மனத்தை யுடையவன், ஆகாரம், பானம் முதலியவற்றை நினைக்கவே மாட்டான்.

230. ஈசுவரப் பிரீதியுள்ளவன் தன் மதத்திலிருந்த படியே அவரை அடைவானேனல்:

அதிக தாகமுள்ள ஒருவன், தனக்கெதிர்ப்பட்ட நதியின் ஜலம் சேறாயிருந்தாலும் அதைத் தள்ளிவிடமாட்டான்; சுத்த ஜலம் பெறவேண்டி ஒரு கிணற்றை வெட்ட ஆரம்பிக்கவும் மாட்டான். கூடியவரை முயன்று அந்த ஜலத்தையே சுத்திகரித் தருந்துவான். இதேபோல, உண்மையான ஈசுவரப் பிரீதியுடையவன், தான் இருப்பது இந்துமதமா யிருந்தாலும், வேறு எந்தமதமா யிருந்தாலும் அந்த மதத்தைத் தள்ளிவிடமாட்டான். தனக்கென்று ஒரு புதிய மதத்தை உண்டுபண்ணிக்கொள்ளவும் மாட்டான். தானிருக்கும் மதத்திலிருந்துகொண்டே ஈசுவரனை அடையும் வழியைக் கண்டு அடைவான். உண்மையான ஈசுவரப் பிரீதியுள்ளவனுக்கு மத விகற்பமில்லை.

231. ஜகன் மாதாவைத் துதிக்கும் விதம்:

"ஏ ஜகன்மாதாவே! நான் மனிதர்களிடமிருந்து கௌரவத்தை அடைய விரும்பவில்லை; தேகசுகத்தை விரும்பவில்லை; கங்காநதியும், யமுனையும் என்னும் ஒன்றுப்சேர்வதுபோல என் ஆத்மா என்னும் உன்னில் கலந்திருந்தால் போதும்; தாயே! நான் பக்தியில்லாதவன்; யோகமில்லாதவன்; ஏழை; நட்பில்லாதவன்; எனக்கு எவருடைய துதியும் அவசியமில்லை; என்னுடைய மனம் எப்பொழுதும் நின் பாதகமலங்களிலே பற்றிநின்றால் போதும்."

232. ஒருவர், ஈசுவரனை அடையும் மார்க்கத்தை ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் தெரிந்துகொண்டது:

ஒருவர் பல முயற்சிகளைச் செய்தும் ஈசுவரனை அடைய முடியாமல் ஒருசமயம் "நான் ஈசுவரனைத் தேடுவதிலேயே பதினைந்து வருடங்கள் முயன்றேன்; ஒவ்வொருவர் சொல்லும் புத்திகளையும் கேட்டேன்; பரிசுத்த ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்றேன்; அநேகம் சாதுக்களையும் மகான்களையும் தரிசித்தேன். இவ்வாறே செய்துகொண்டுவந்து எனக்கு ஐம்பத்தைந்து வயதும் கழிந்துவிட்டது. இதுவரை நான் ஈசுவரனைக் காணும் மார்க்கங்களில் ஒன்றையுங் கண்டிலேன்" என்று விசனித்தார். அப்போது ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரைப் பார்த்து, "ஈசுவரனைக் காண வேண்டுமென்னும் அவாவுடையவனே அவரைக் காண்பான்; இதை உண்மையாக நான் கூறுகிறேன்; இதில் உறுதி கொள்ளும்" என்று கூறினர்.

233. குழந்தையைப்போல ஈசுவரனிடத்தில் நடந்து கொள்கிறவனுக்கு அவர் அவசியந் தரிசனங் கொடுப்பா ரென்பது:

தாயாரிடத்தில் குழந்தையானது அழுது தொந்தரவு செய்து விளையாட்டுக் கருவிகளும் துட்டும் வேண்டுமென்று கெஞ்சிக் கேட்பதுபோல, ஈசுவரனைத் தனக்குரியவ ரென்றெண்ணி, அவரைத் தரிசிக்க வேண்டுமென்னும் பேராவலுடனே ஒரு கபடற்ற குழந்தைபோல உள்ளுருகுகின்றவன் முடிவில் அவசியம் ஈசுவர தரிசனத்தை அடைவான்

இத்தகைய ஈசுவராபேக்ஷை மிகுந்த முமுட்சுவுக்குத் தரிசனங் கொடுக்காமலிருக்க ஈசுவரனால் முடியாது.

234. பக்தன், மனம் உருகி அழைத்தால் மாத்திரம் ஈசுவரன் பிரசன்ன மாவாரென்பது :

ஸ்ரீ கிருஷ்ணனுடைய அற்புதச் செயல்கள் விளங்கும் நாடகம் நடத்தப்படுகிற காலத்தில், பக்க மேளக்காரரால் பாடப்படும் கிருஷ்ண ஸ்தோத்திரங்களுடன் நாடகம் ஆரம்பிக்கப்படும். அந்த ஸ்தோத்திரங்கள் கிருஷ்ணனை மெய்யாக அழைக்கும் நோக்க முடையனவல்ல வாதலின், அப்பொழுது கிருஷ்ண வேஷக்காரன் வருவதில்லை. அவன் இவற்றைக் கவனியாமலே நாடகமேடைக் குள்ளிருப்பவர்களோடு பேசிக்கொண்டிருப்பான். முதலிற் பாடிய கோஷ்டம் நின்று நாரதரால் கிருஷ்ணன் அழைக்கப்படவேண்டிய சந்தர்ப்பம் வந்தவுடனே நாரதர்வேடந் தரித்தவன் நாடக மேடையில் வந்து மெய்யாகவே கிருஷ்ணனை அழைப்பது போல வீணாகானத்துடன் கிருஷ்ண ஸ்தோத்திரங்களைப் பாடி கிருஷ்ணனை யழைப்பான். உடனே கிருஷ்ணவேடந் தரித்தவன் அப்பாடல்களைக் கேட்டு, 'இனி ஆலசியமாயிருக்கலாகாது,' என்று நாடகமேடையில் நாரதர் வேஷக்காரனுக்கு முன்னே வந்துவிடுவான். இதுபோலவே, பக்தன் மனவுருக்க மில்லாமல் வாயினல்மாத்திரம் 'ஏ ஈசுவரா! வா' என் றழைப்பதால் ஈசுவரன் வரவேமாட்டார். பக்தன் எப்பொழுது வீண் கூச்சல்களையெல்லாம் விட்டு மனமுருகி அன்பு வெள்ளம் பொங்க ஈசுவரன் வரவேண்டு

மென்னும் மெய்ப் பேரவாவுடனே அவரைக் கூப்பிடு கிறானே அப்பொழுதுதான் அவனுக்கு ஈசுவரன் தரிசனங் கொடுப்பார். அத்தருணத்தில் அவர் வராமலிருக்கவே மாட்டார்.

235. ஈசுவரனிடத்தில் செலுத்தும் அன்பு இத் தன்மைத்தாயிருக்க வேண்டுமெனல்:

ஒரு பதிவிரதை தன் புருஷனிடத்தில் செலுத்தும் அன்பு எத்தன்மைத்தோ அத்தன்மைத்தான அன்பும், ஒரு போர்சைக்காரனுக்குப் பொற்குவியலினிடத்தே எத் தகைய அன்பு செலுத்தப்படுகின்றதோ அத்தகைய அன் பும், உலகினர்களால் உலக விஷயங்களில் செலுத்தப்படும் அன்பு எத்தகையதோ அத்தகைய அன்பும் ஆகிய இம் மூன்றையும் ஒன்றுகச் சேர்த்தால் எப்படி யிருக்குமோ அப்படிப்பட்ட அன்பே ஈசுவரனிடத்தில் செலுத்தத் தக்க தாம். இத்தகைய அன்பைச் செலுத்தினால் அவரை நிச்ச யமாக அடையலாம்.

236. ஈசுவரனை யடையவேண்டிய பிரயத்தனத்திற் கோர் உதாரணம்:

ஒரு தினம் ஏசுகிறிஸ்துவானவர் கடற்கரையில் உலா விக்கொண்டிருக்கும்போது ஒருபக்தன் அவரிடம் சென்று "பிரபுவே! ஒருவன் ஈசுவரனை எவ்வகைப் பிரயத்தனத் தால் அடைதல் கூடும்" என்று வினவினன். உடனே ஏசு கிறிஸ்து அவனை அழைத்துக்கொண்டுபோய்க் கடல் நீரில் அமிழ்த்திச் சிறிது நேரஞ்சென்று வெளியிற் தூக்கிவிட்டு

அவனை நோக்கி, "நீ கடல் நீருக்குள் மூழ்கி யிருக்கும் போது எவ்வித நிலைமையை அடைந்திருந்தாய்" என்று கேட்டார். அவன், 'என் வாழ்நாளின் கடைசி நிமிஷம் வந்துவிட்டதென்று நான் நினைத்தேன்; அப்பொழுது என்னுடைய நிலைமை மிகவும் அபாயகரமாயிருந்தது," என்று கூறினான். அதன்மேல் ஈசுவரனவர் அவனை நோக்கி, "இப்பொழுது ஒரு மூச்சு அடங்கியதற்காக உனது ஹிருதயம் எவ்வளவு பிரயாசைப்பட்டதோ அவ்வளவு பிரயாசைப் படவேண்டும் ஈசுவரனை யடைதற்கு; இவ்வளவு பிரயாசை யெடுத்துக்கொண்டால் நீ, பிதாவாகிய ஈசுவரனைத் தரிசிப்பாய்" என்றார். ஆதலின், ஈசுவரதரிசனம் மிகுந்த பிரயாசையின்றிக் கிட்டாது.

12-வது அத்தியாயம்

ஆத்மீக வாழ்க்கையின் விதங்கள்

237. வணக்கமேஒருவனைப் பெரியோனுக்கு மென்பது:

எப்பொழுதும் தலைவணங்கி நிற்கும் மரத்தில் பழங்கள் நிறைந்திருக்கும். இதுபோல, வணக்கமுள்ளவனிடத்திலே பெருந்தன்மை குடிகொண்டிருக்கும்.

238. வணக்கமுள்ளவன் தன்மையும், கர்வியின் தன்மையும்:

கனத்த வஸ்துக்களையுடைய தராசுத் தட்டுக் கீழே தாழும்; ஒன்று மில்லாத தட்டு மேலே இளம்பும். இவை

போலவே, மேலான சக்தியும், மிகுந்த சமர்த்து முள்ள மனிதன் எப்பொழுதும் வணக்க முள்ளவனு யிருப்பான். ஒருசக்தியு மில்லாத வீணனே கர்வமுடையவனுய்த் தலை நிமிர்ந்து திரிவான்.

239. குழந்தைபோல கபடற்றவனுக்கே ஞானம் சித்திக்குமேனல்:

ஒருமனிதன் சிறு குழந்தையைப்போலக் கபடற்றவனு யிருக்காதவரையில் அவனுல், திவ்ய பிரகாசத்தை அடை தல் முடியாது. ஆதலின், ஞானத்தை அடைய விரும்பு வோர் உலகஞாபகத்தை யெல்லாம் மறந்து, உலகப் பற்று ஒன்றையுமே அறியாத ஒரு குழந்தையைப்போ லாய்விட வேண்டும்; அப்படி யானற்றன் சத்திய ஞானத்தை அடையலாம்.

240. ஈசுவரனைத் தியானஞ் செய்யும் விதம்:

வீட்டுக்குள் ஒருவரு மறியாத ஒரு மூலையிலே, அல் லது ஏகாந்தமான காடுகளிலே, அல்லது சொந்த ஹிருதய மாகிய கூஷேத்திரத்திலே ஈசுவரனைத் தியானஞ் செய்தல் வேண்டும்.

241. கர்வத்தை ஒழிக்கவேண்டு மேனல்:

பெருங் காற்றி லகப்பட்ட எச்சிலிலைபோலப் பறந்து போகும்படி வீண் கர்வத்தையெல்லாம் ஒழித்துவிடல் வேண்டும்.

242. ஹிருதயசுத்தி யுள்ளவர்களே ஈசுவரனைக் காண்பார்க ளென்பது:

மாசு படிந்த கண்ணாடியில் எப்பொழுதும் சூரிய பிம்பம் பிரதிபலிக்காது; பரிசுத்தமான கண்ணாடியில் பிரதிபலிக்கும். இவைபோல, மாயைக் குட்பட்டவர்களுடைய ஹிருதயத்திலே ஈசுவரனுடைய மகிமை எப்பொழுதும் தோற்றாது. பரிசுத்த முள்ளவர்களுடைய உள்ளத்திலே ஈசுவரத் தோற்ற முண்டாகும். ஆதலின், ஈசுவரனைக் காணிக்க விருப்ப முள்ளவர்கள் பரிசுத்த மனதுடன் இருத்தல் வேண்டும்.

243. மனிதன், தன்னுடைய நினைவின்படியே ஆய்விடுவோ னென்பது:

தன்னை ஒரு ஜீவனென்று நினைக்கிறவன் எப்பொழுதும் ஜீவனுகவே யிருந்துவிடுவான். ஈசுவரனென்று கருதுகிறவன் ஈசுவர னுய்விடுவான்.

244. ஆசையுள்ளவரையில் ஈசுவரனைத் தரிசிக்க முடியாதெனல்:

அணுவளவு ஆசையிருந்தாலும் ஈசுவரனைத் தரிசிக்க முடியாது. ஆதலின், சிறிய ஆசைகளை நிறைவேற்றி மனத்தைத் திருப்தி செய்துகொண்டு, பெரிய ஆசைகளை நியாயயுக்திகளினுலும், விவேக விசாரத்தினுலும் கண்டித்துத் துறந்துவிட வேண்டும்.

245. உண்மை யில்லாவிடில் ஈசுவரனைக் காண முடியாதெனல்:

ஒருவன் உண்மையைப் பேசிக்கொண்டிருந்தால் மாத்திரந்தான் ஈசுவரனைக் காணுதல் முடியும். அங்ஙனம் பேசாவிடில் உண்மைக்கு ஆத்மாவாயுள்ள ஈ முடியாது.

246. செத்தாரைப்போன் றிருப்பவனே னென்பது:

எவன் செத்த பிரேதத்தைப்போல ஆ லாம் ஒழித்து அடங்கியிருக்கின்றானே அவ மத்தில் உண்மை மனிதனுவான்.

247. சாஸ்திரக் கேள்வியும் ஈசுவரத் தியானமு மனிதர்க்கு அவசியம் வேண்டுமெனல்:

வேதங்களையு வேண்டும்; அவற் வேண்டும்; ஈசுவர னில் உச்சரிக்கவேண

248. பிரார்த்த

மனிதன், தன் றும்படி உண்மையு டனே ஈசுவரனி அவ்வாறு செய்யப்ப கொள்ளப்படும்.

249. ஈசுவர பூசனையே உயர்ந்த ஞானத்துக்கு இட்டுச் செல்லு மென்பது :

பணிவிடைக்காரன் எஜமானனைப் பூஜிப்பதுபோல வும், நாயகி நாயகனைப் பூஜிப்பதுபோலவும் முதலில் ஈசுவரனைப் பூஜித்தல்வேண்டும். இந்தப் பூஜனையானது விரைவில் ஏகத்துவமாகிற ஞானத்துக்கு இட்டுச் செல்லும்.

250. ஈசுவரனை அடைதற்கு, ஈசுவர பக்தர்களுடனே சகவாசம் செய்யவேண்டு மெனல் :

ஒரு மனிதன், பெரிய அரசனொருவனைக் காண வேண்டுமாயின் அவ்வரசனது வாயில் காப்பாளரும், சிம்மாசனத்தைக் காப்பவர்களும் ஆகிய வேலைக்காரர்களைச் சினேகஞ் செய்துகொள்ளவேண்டும். இதுபோல, ஈசுவரனிடத்திலே செல்லவேண்டுமானால் அவனுடைய பக்தர்களாகிய ஞானிகளுக்குப் பணிவிடை செய்து நெடுநாள்வரை அவர்களுடனே சகவாசஞ் செய்தல்வேண்டும்.

251. உலகபந்தத்தில் அகப்படாமல் ஜாக்கிரதையாயிருக்கவேண்டு மெனல் :

ஆழமான ஒரு கிணற்றருகே நிற்கும் ஒருவன் அதற்குள் வீழ்ந்துவிடாமல் எப்பொழுதும் ஜாக்கிரதையாயிருப்பதுபோல, உலகில் வசிக்கும் மனிதன் உலகமாயைகளிலே அகப்பட்டுக்கொள்ளாதபடி எப்பொழுதும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். உலகபந்தமாகிய கிணற்றுக்குள்ளே ஒருமுறை வீழ்ந்துவிட்டவன் காயமடையாமலும் அழுக்குறாமலும் அதினின்றும் வெளியேற முடியாது.

252. ஈசுவரனைப் பற்றிக்கொள்ளும் விதம்:

மீன் பிடிக்கும் ஒருவன், ஒருகுளத்திலே நல்ல மீனைப் பிடிக்க விரும்பினால், அதற்குமுன் அதிலே மீன் பிடித்தவர்களிடம் சென்று, அதிக ஆவலுடனே, "இந்தக் குளத்திலே பெரிய மீன்கள் இருக்கின்றனவா?" என்று விசாரிக்க அவர்கள் 'ஆம்; இருக்கின்றன' என்றால், இவன், 'அவைகளுக்கு என்ன இரை போடலாம்?' என்று வினவ அவர்கள் இரையின்தன்மைத்தையும் சொல்வார்கள். இவன் அவர்களிடமிருந்து எல்லா விவரங்களையும் தெரிந்துகொண்டவுடனே அக்குளத்திற்குச் சென்று அவர்கள் சொன்ன இரையையே இட்டுத் தூண்டிலை எறிந்துவிட்டுப் பொறுமையுடன் காத்துக்கொண்டிருந்து ஒரு பெரிய மீனைப் பிடித்துவிடுவான். இதுபோலவே, ஈசுவரனை அடைய விருப்பமுள்ள ஒருவன், முன்னே அவரை அடைந்திருக்கின்ற மகாத்மாக்களாகிய மகரிஷிகளிடத்தே சென்று ஈசுவரனைப் பற்றுதற்காம் சகல விவரங்களையும் தெரிந்துகொண்டு, அவர்களுடைய வார்த்தையில் நம்பிக்கைவைத்து, தனது சொந்த ஹிருதயமாகிய குளத்திலே பக்தியாகிய ஆகாரத்தை மனமென்னும் தூண்டிலில் மாட்டி அதனாலே ஈசுவரனாகிய பெரிய மீனைப் பிடித்துக்கொள்வான். இவ்வாறு பிடிப்பதற்கு உற்ற காலத்தை நோக்கிப் பொறுமையுடனே காத்திருக்கவேண்டும். அப்படியிருந்தால் மாத்திரந்தான் மேற்கூறியபடி ஈசுவரனாகிய மீனைப் பிடிக்கலாகும்.

253. மனிதசரீரங்கள் ஈசுவரனுடைய பொக்கிஷசாலிகளே யென்பது :

ஒரு வெறும் பெட்டியைப்பற்றி எவரும் கவலை யெடுத்துக்கொள்வதில்லை. விலை யுயர்ந்த ஆபரணங்களும் ஆடைகளும் திரவியமும் நிறைந்த பெட்டியை மிகவும் ஜாக்கிரதையாகக் காப்பாற்றுவார்கள். இதேபோல், சரீரமானது பயனற்றதும், அநித்தியமுள்ளதுமா யிருந்தாலும் அதில் ஈசுவரன் வசிக்கின்றமையினாலே பக்தர்களும், மகான்களும் அதைக் காப்பாற்றும் விஷயத்தில் மிக்க கவலை யெடுத்துக்கொள்ளுகிறார்கள். சரீரங்களெல்லாம் ஈசுவரனுடைய பொக்கிஷசாலியாம்.

254. பக்தி அனுஷ்டானங்களைச் சாந்தத்தோடு செய்துகொண்டு போகவேண்டுமெனல் :

சேறுனது அடியிலே படிந்து சிறிது ஜலம் மேலேயிருக்கின்ற ஒரு வற்றிய குளத்தில் ஒருவன் சுத்தஜலம் பருகவேண்டுமானால் ஜலத்தில் மூர்ட்டித்தனமாகக் கையைபோட்டுக் கலக்காமல் எட்டவிருந்துகொண்டு தெளிந்தஜலத்தை மெல்ல கரகித்துக்கொள்வான். அப்படியின்றி அவன் தடித்தனமாக அதில் கையைப் போட்டுக் கலக்குவானால் அடியிலிருந்த சேறுனது மேலே கிளம்பி ஜலமெல்லாம் சேறுகிவிடும். இதுபோல, மனிதனுடைய மூளை பரிசுத்தமாயிருக்கவேண்டுமானால் திடமான விசுவாசத்துடனே மனிதன், பக்தி யனுஷ்டானங்களை மெல்லச் செய்து

கொண்டு போகவேண்டும். பயனற்ற சாஸ்திர தர்க்கங்களி லும், நியாயங்களிலும் சக்தியை வீணாகச் செலவு செய் தால் மூளையானது கலங்கிவிடும்.

255. ஈசுவரனை உரக்கக் கூப்பிடவேண்டியதில்லை என்பது:

நாம் ஈசுவரனை உரக்கக்கூவி அழைத்துப் பி செய்தால் மாத்திரந்தான் அவர் அப்பிரார்த்தனை பாரென்று நினைக்கவேண்டாம். நாம் மெதுவான டும், மனதிற்குள்ளும் அவரைப் பிரார்த்தனை செ நமக்குப் பிரியமான எவ்விதத்தில் அவரைப் பிரார், லும் அப் பிரார்த்தனையானது அவருக்குக் கேட்குட எறும்பின் கால் இடறும் சப்தத்தைக்கூட அவர் கே

256. ஆரம்ப விசுவாசத்திற் செய்யவேண்டியதும், தீவிர விசுவாசத்தில் செய்யவேண்டியதும்:

ஒரு செடியானது சிறிதாயிருக்கும்போது ஆடு மாடு முதலியவை தின்றுவிடாமல் வேலியிட்டு வேண்டும். அது பெரிய மரமானவுடன் அதற் காவலும் வேண்டியதில்லை. அப்போது அதனடியி மாடு முதலியவைக ளெல்லாம் நிழலுக்குத் தங்கி றும்; அதன் இலைகளைத் தின்றும் பசியைத் தீர்த்து வனவாம். இதுபோலவே, மனிதனுக்கு விசுவா ஆரம்பமாக உண்டா வியவகாரங்கள் முத

விடாமல் அதனைக் காப்பாற்றி வளர்த்துவரவேண்டும். அது பலப்பட்டவுடனே இவ்வகைக் காவல் வேண்டியதில்லை. அப்போது தீயர்கள் அணுகினாலும், தீச்செயல்கள் சேரினும், அவ் விசுவாசத்தைக் குறைத்தல் முடியாது. அந்தப் பரிசுத்தமான விசுவாசத்தினாலே அவர்களும் அவைகளும் தங்கள் தூர்க்குணம் நீங்கிப் பரிசுத்தத் தன்மையை அடைய ஏதுவுண்டாகும்.

257. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வழக்கச்சொல்:

தம்முடைய சிஷ்யர்களை நோக்கி, ஸ்ரீ ராமகிருஷ்ணர் "நான் இடும் கட்டளைகளுக்கு நீங்கள் பரிபூரணமாகக் கீழ்ப்படிந்து நடக்க உங்களால் முடியுமா? நான் கூறுவதில் பதினாறில் ஒரு பங்கேனும் நீங்கள் அனுபவத்தில் கொண்டுவந்துவிட்டால் உங்களுக்கு மோக்ஷம் கிடைப்பது நிச்சயமென்று உண்மையாக நான் கூறுவேன்." என்று சொல்வது வழக்கம். ஆதலின், இங்குக் கூறப்படும் உபதேசங்களின்படி நடப்பது உத்தமம்.

258. மனிதன் தானுகவே உலகமாயையிற் சிக்கிக் கொள்கிறனென்பதும், அதினின்றும் விடுபடு மார்க்கமும்:

கம்பிளிப்பூச்சியானது தன்னிடத்தினின்று முண்டாகின்ற நூலினாற் செய்யப்பட்ட கூண்டில் தானே சிக்கிக் கொள்கிறது. பின்னர் அது வண்ணத்திப் பூச்சியாக மாறினவுடன் கூண்டைத் திறந்துகொண்டு வெளியேறிக் காற்றையும் வெளிச்சத்தையும் அனுபவிக்கிறது. இது

போலவே, உலகிற் பிறந்த மனிதன் தன் ஆசையாகிய வலையிலே தானுகவே அகப்பட்டுக்கொள்ளுகிறான். பின்னர் விவேகம், வைராக்கியம் ஆகியவைகள் உண்டானுல் மாயையாகிய வலையைக் கிழித்தெறிந்து வெளியேறுகிறான்.

259. மனத்தை நிலைநிறுத்துவதற்கோர் மார்க்கம் :

ஒரு வர்த்தியின் சுடரிலே மனத்தை நிறுத்தினுல் அது ஏகாக்கிரப்பட்டுவிடும். இதுவே மனத்தை ஏகாக்கிரப்படுத்துவதற்குச் சுலபமான வழியாம். அந்த வர்த்தியின் உள்ளே யிருக்கின்ற நீலநிறமான பாகமானது காரண சரீரம்போலாம்; நீலநிறச்சுடரை மூடியிருக்கும் பிரகாசமானது சூக்ஷுமசரீரம் போலாம். அதற்கு வெளிப்பாகம் ஸ்தூலசரீர மெனப்படும். ஆதலின், வர்த்திச்சுடரின் உள்ளேயிருக்கும் நீலநிற பாகத்தின்மீது மனத்தை நிறுத்துவதனுல் ஏகாக்கிரசித்தம் எளிதில் ஏற்பட்டுவிடும்.

260. தீய எண்ணங்கள் வராமல் தடுக்கும் விதம் :

ஒரு வீட்டிலே ஜனங்கள் விழித்துக்கொண்டிருந்தால், அங்கே திருடன் நுழைய முடியாது. அதேபோல, மனிதன் ஜாக்கிரதையா யிருந்தால் தீய எண்ணங்கள் அவன் மனத்தினுள்ளே புகுந்து அதிலுள்ள நன்மைகளைத் திருடிக்கொள்ள முடியாது.

261. மாயையை நீக்கும் விதம் :

நீரின்மீதுள்ள பாசத்தை ஒரு பக்கமாக ஒதுக்கினுல் அது மீண்டும் வந்து தண்ணீரை மூடிக்கொள்ளும். பாசத்

தை ஒதுக்கி அதனைரத்தில் மூங்கில் தட்டிகள் செய்து கட்டிவிட்டால் மீண்டும் பாசம் நீரின் பாகத்திற்கு வருதல் முடியாது. இதுபோல மனிதர், மனத்திலுள்ள மாயையை ஒரு சமயம் ஒதுக்கினால் அது அப்படியே ஒதுங்கிநிற்கா மல் மீண்டும் மனத்தை மூடி வாதனை செய்யும். அந்த மாயையை ஒதுக்கியவுடன் ஹரிருதயத்தைச் சுற்றி பக்தி, ஞானம் ஆகிய வேலிகளை ஏற்படுத்திவிட்டால் அம்மாயை எப்பொழுதும் உள்ளே வரமாட்டாது. இவ்விதம் மாயை ஒதுக்கப்பட்டால் ஈசுவரன் மனுஷ்ய திருஷ்டிக்குப் பிர சன்னமாவார்.

262. பிற தெய்வங்களை இகழலாகாதெனல்:

ஒரு பதிவிரதையான பெண், தன் புருஷனிடத்தே அதிக விசுவாச முள்ளவளா யிருந்தாலும் அதனை மனதில் பிரத்தியேகமாக உறுதிப்படுத்தி வைத்துக்கொண்டு தன் மாமனார், மாமியாரையும் இகழாமல் அவர்களுக்கும் வேண் டிய பணிவிடைகளைச் செய்துவருவாள். இதேபோல் மனி தர், தம் இஷ்ட தேவதையினிடத்து பக்தி அதிக மிருந்தா லும் அதனை உறுதியாக மனத்தில் வைத்துக்கொண்டு, பிற தேவதைகளையும் இகழாமல் கௌரவப்படுத்தவேண் டும். அவையெல்லாம் ஒரே சக்தியைத்தான் குறிப்பிடும். ஆகலின், தெய்வங்களில் பேத சிந்தனை வைக்கலாகாது. அங்ஙனமின்றித் தாம், தம்முடைய மனதிற்கிசைந்த ஒரு தெய்வத்தைக் கற்பித்துக்கொண்டு அதுதான் தெய்வமென் றும், மற்றைய தெய்வங்களெல்லாம் தெய்வமல்லவென்றும்

தெய்வபேதம் பாராட்டித் தாங்களே கேரில் உண்மைத் தெய்வத்தைக் கண்டவர்கள்போல் பாமரருக்கிடையில் பிற தெய்வங்களே இகழ்ந்து பிரசங்கங்கள் புரிந்தும், பிற தெய்வங்களின் பெயரும் தங்கள் ஓட்டைச் செவியில் விழக் கூடாதென்று அந்த அழுக்குப்படிந்த காதை மூடிக்கொண்டு பக்திமான்களைப்போல பகல்வேடம் தரித்து அகத்தில் சிறிதும் தெய்வபக்தியில்லாமல் பிறர் மதிக்கும் நோக்கம் ஒன்றையே கொண்டு திரிவோர் முழுமூடராவார். உலகத்தில் பதர்கள் இவரே; எரிவாய் நிரயமும் இவர்கள் வரவையே எதிர்பார்த்திருக்கும். அஞ்ஞானத்திற்கு லக்ஷிய மாவார் இவரே. இத்தகைய அறிவிலிகள் எப்பொழுதுமே தெய்வத்தன்மை இப்பேர்ப்பட்ட தென்பதை உணரவே மாட்டார்கள்.

263. உலகத்தைத் துறந்தால்மாத்திரம் ஞானிக்குப் பரிசுத்த முண்டாகுமெனல் :

தயிரைக் கடைந்து வெண்ணெ யெடுத்தபின் அதை மோருடனே போட்டுவைத்திருந்தால் அதன் உருசி சிறிது குறைந்துபோகும். அதை யெடுத்தவுடனே வேறு பாத்திரத்திலுள்ள சுத்த ஜலத்தில் போட்டுவைத்தாற்றான் அதற்குச் சுவையும் மணமும் அதிகப்படும். இதுபோலவே, மனிதன் ஞானத்தை அடைந்தாலும் உலகத்தாருடனே கலந்திருப்பானேல் அவன் மீண்டும் களங்கமுள்ளவ னாய்விடுவான்; உலகத்தைத் துறந்து வசித்தால் மாத்திரந்தான் பரிசுத்த முள்ளவனாவான்.

264. மனத்தை அடக்கும் விதம் :

ஒரு யானையைத் தன் இச்சையின்படி செல்ல விட்டு விட்டால் அது மரங்களையும், செடிகளையும் சிதைத்துக் கொண்டு மூர்க்கத்தனமாகச் செல்லும்; பாகன் அதன்மேல் இருந்து ஈட்டியினாலே அதன் மண்டையில் மோதி அதை அடக்கிக் கொண்டுபோனால் அது, அவ்விதக் துஷ்டத்தனங்களெல்லாம் செய்யாமல் அமைதியாகப் போகும். இதுபோலவே மனமும், மனிதனால் அடக்கப்படாவிட்டால் வீண் எண்ணங்களிற் புகுந்தலையும். விவேகமாகிற ஈட்டியினாலே அதனைக் குத்தி அடக்கினால் அது அமைதியடைந்துவிடும்.

265. ஜபத்தினால் பயனுண்டென்பது :

ஜபங்கள் செய்வதினாலே உண்மையில் பயனுண்டாகும். மனமும், வாக்கும் ஒன்று சேர்ந்து ஒரு வஸ்துவைப் பற்றிச் சிந்தித்தால் அச்சிந்தனை நிறைவேறும். அவை ஒன்று படாவிட்டால் எதுவும் நிறைவேறாது. எப்படியெனில், "ஈசுவரா! எல்லாம் உன்னுடையனவே" என்று வாயினாற் கூறிக்கொண்டு, அதே சமயத்தில் அவற்றையெல்லாம் தன்னுடையனவாக மனதில் சிந்தித்தால் ஒரு பயனு முண்டாகாது. காரியசித்தி யாகவேண்டுமென்றால் மனமும் வாக்கும் ஒன்றுபடவேண்டும்.

266. காமக் குரோதாதிகள் கெட்டவையாயினும் ஈசுவரனிடத்தில் செலுத்தப்பட்டால் அவை நல்லவையா மென்பது :

காமக் குரோதாதி குணங்களெல்லாம் உலகமுகமாகவும், உலகவஸ்துக்களின் முகமாகவும் செலுத்தப்படுகிற

வரையில் அவை மனிதர்க்குச் சத்துருக்களைப்போலக் கெடுதியைச் செய்யக் கூடியவைகளா யிருக்கின்றன. ஆயினும், அவை ஈசுவரமுகமாகச் செலுத்தப்பட்டால் நண்பர்களைப்போல இனிமை செய்யக்கூடியவை யாகின்றன. எப்படியெனில், உலக வஸ்துவின்மேற் செலுத்தப்படும் காமமானது ஈசுவரனிடத்திற் செலுத்தப்பட்டால் அது அவ்வாறு செலுத்திய மனிதனை ஈசுவரனிடத்தே அழைத்துச் செல்லும்; கோபமானது, 'ஈசுவரன் பிரசன்ன மாகவில்லையே' என்ற விஷயத்தில் செலுத்தப்பட்டால் அதுவும் அவ்வாறே ஈசுவர தரிசனத்தை யுண்டாக்கும். இவ்வாறே ஒவ்வொன்றும் செலுத்தப்படும்போது ஒவ்வொன்றினாலும் ஈசுவரானுக்கிரக முண்டாகும். இத்தக் குணங்களை எப்பொழுதும் அழித்தல் முடியாது. ஆதலின், இவற்றை நல்வழியில் திருப்பித் தான் பலன்பெற வேண்டும்.

267. உடைகளினால் ஒருபயனு மில்லாவிட்டாலும் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருகுண மிருக்கின்ற தென்பது:

சந்நியாசிகள் காஷாயம் தரித்துக்கொள்வதினாலும், வேறு உடைகளை அணிந்துகொள்வதினாலும் பயனொன்றுமில்லை. ஆனால், இவைகளில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருகுண மிருக்கின்றது. எவ்வாறெனில், காஷாயந் தரித்துக்கொண்டால் மனத்தில் பரிசுத்த எண்ணங்களுண்டாகின்றன; பழைய செருப்புக்களையும் கிழிந்த உடைகளையும் தரித்துக்கொண்டால் மனத்திலே தாழ்ந்த நினைவுகள் உண்

டாகின்றன. உயர்ந்த ஆடையாபரணங்களை யணிந்துகொண் டால் கர்வமும், இடம்பமும், அவற்றால் தீயகாரியப் பிர வேசமும் உண்டாகின்றன. ஆதலால், ஞானமார்க்கத்தை அடைய விரும்புவோன் தாழ்ந்த ஆடைகளையே அணிந்து கொள்ளவேண்டும்.

268. மனத்தை ஈசுவரனிடத்திற் செலுத்தும் விதம்:

ஊசித் துவாரத்திலே ஒரு நூலைப் புகுத்த விரும்பி னால் அதன் பக்கத்தில் கவராகப் பிரிந்துகொண்டிருக்கும் இழைகளையெல்லாம் நீங்கிவிட்டு நூனியைக் கூர்மையாக்கிக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்துகொண்டு நூழைத் தால் மாத்திரந்தான் அது அந்த ஊசியின் துவாரத்திலே சுலபமாகச் செல்லும். அதுபோலவே, மனத்தை ஈசுவர னிடத்திலே ஒருதன்மைத்தாகச் செலுத்தவிரும்பினால் பல விதமாகப் பரவுகின்ற ஆசைகளையெல்லாம் நீக்கிப் புத்திக் கூர்மையையும், வணக்கத்தையும், எளியதன்மையையும் பெறவேண்டும்.

269. பக்தியனுஷ்டானங்களைச் செய்கிறவர்களுக்கு குரு சகாயமும், இஷ்டதேவதை துணையும் வேண்டுமெனல்:

சொக்கட்டான் ஆட்டம் ஆடப்படும்போது அதில் ஆடப்படும் காய்கள் எல்லாக் கட்டங்களிலும் புகுந்து முடி வில் மத்திய இடத்துக்குச் செல்லவேண்டும். அவ்வாறு அவ் விடத்திற்போய்ச் சேர்ந்துவிட்டால் பின் அவற்றிற்குத் திரு

ம்பவேண்டிய வேலையில்லை. மத்திய இடத்துக்குப் போய்ச் சேருமுன் ஒவ்வொன்றும் ஒவ்வொருசமயங்களிலும் எதிரி காய்களினால் அடிக்கப்பட்டுத் திரும்பி வந்துவிடும். இப்படியே பன்முறையும் திரும்பித் திரும்பி வந்து அவை நடுவிடத்தைச் சேர நெடுநேரஞ் செல்லும். ஆனால், இரண்டு காய்கள் ஜதை சேர்க்கப்பட்டுவிட்டால் அவை பெரும் பான்மையும் பிற காய்களால் அடிக்கப்படாமல் எளிதில் குறித்தவிடம் போய்ச் சேரும். இதுபோல, உலகில் பக்தியனுஷ்டானங்களைத் தொடங்குகிறவர்கள் குருவின் சகாயத்தையும், இஷ்டதேவதையின் துணையையும் பெற்றுக் கொண்டால் இடையில் நிகழும் கஷ்டங்களுக் குட்படாமல் அவர்களுடைய அனுஷ்டானங்கள் எளிதில் நிறைவேறும்.

270. மனமானது எப்பொழுதும் [illegible]
நிறுத்தப்பட் டிருக்கவேண்

உலக நினை
கும்படி அவற்
நீக்கத்தகுந்த கா
வேண்டும். மனட
யே நிறுத்தப்பட்

271. பக்தி

பக்தன், தல
தரித்து, பஜனை
கருவிகளை வைத்

அவன், தாழ்மையான விஷயங்களை நினைக்கமாட்டான்; கெட்ட பாட்டுக்களைப் பாடவு மாட்டான். இடம்பமான உடைகளை உடுத்திஞல் அவன், இழிவான எண்ணங்கள் எண்ணவும், அருவருப்பான பாடல்களைப் பாடவும் கூடும்.

272. வார்த்தையும் நினைப்பும் ஒன்றுபடவேண்டுமெனல்:

மனத்திலுள்ளது எதுவோ அதையே வெளியிற் சொல்லவேண்டும். மனத்தை உலக விஷயங்களிற் செலுத்திக்கொண்டு, 'ஈசுவரன் எனக்குச் சொந்தமாய்விட்டார்' என்று வாயிஞற் சொல்வதால் ஏப்பயனு மில்லை. மனத்தை ஈசுவரனிடத்திற் செலுத்திஞல் மாத்திரம் அந்தவார்த்தை சொல்லலாம்.

273. ஈசுவரபக்தன் எல்லாவற்றையும் துறந்துவிடுகிறு னென்பது:

இரவில் விட்டிலானது விளக்கைப் பார்த்துவிட்டால் உடனே அதனிடத்துச் செல்லும்; மீண்டும் இருட்டிற்குத் திரும்புகிறதில்லை. எறும்பானது சர்க்கரைக்குவியலைக் கண்டால் அதனிடத்தே சென்று அதன் சுவையையே அனுபவித்து மரித்துவிடும். இவை இவ்வாறு செய்தற்குக் காரணம் இவற்றிற்கு விளக்கின் பிரகாசத்திலும், சர்க்கரையின் சுவையிலும் உண்டாகும் ஆனந்தமேயாம். இதுபோலவே, உலக விஷயங்களை விட்டு ஈசுவரனிடத்தே திரும்பிய மனத்தையுடைய பக்தன் அங்கே யுண்டாகும் ஆனந்தத்திஞல்

உலக விஷயங்களை முற்றத் துறந்துவிடுகின்றான். மீண்டும் அவன் உலகத்திற்குத் திரும்புவதில்லை.

274. ஞானசாதனங்களை அப்பியசிக்காமல் கத்துவதாற் பயனில்லை யென்பது:

பாலில் இருக்கும் வெண்ணெயை விரும்பி, "ஏ வெண்ணெயே! வா, வா" என்று கூப்பிட்டால் அது கைக்கு வராது; பாலைக் காய்ச்சித் தயிராகச் செய்து அதைக் கடைந்தால் மாத்திரம் வெண்ணெயெடுக்கமுடியும். இதுபோலவே, ஈசுவரனைத் தரிசிக்க விரும்பினால் ஞானசாதனங்களை அப்பியசிக்கவேண்டும். அவ்வாறு செய்யாமல் 'ஏ கடவுளே! ஏ கடவுளே!!' என்று உரக்கக் கூவுவதால் பயனில்லை.

275. ஜீவன் சுத்த மடைதற்குரிய சாதன நிலைகள்:

ஜீவன் சுத்த மடைதற்குரிய சாதன நிலைகள் ஆறும். அவையாவன:

முதலாவது: சாதுசங்கம். அதாவது, பரிசுத்த புருஷர்களுடைய சகவாசமாம்.

இரண்டாவது: சிரத்தை. அதாவது, ஆத்மீகசம்பந்தமான விஷயங்களிலே நம்பிக்கையும், விசுவாசமும் வைத்தலாம்.

மூன்றாவது: நிஷ்டை. அதாவது, தனது இலட்சியத்தினிடத்திலே ஏகாக்கிர பக்தியைச் செலுத்துதலாம்.

நான்காவது: பாவம் (ஹாவம்). அதாவது, ஈசுவராதியானத்திலே பேச்சற்று லயித்து நிற்றலாம்.

ஐந்தாவது: மகாபாவம் (மகாஹாவம்). அதாவது, மேற் கூறிய பாவத்தை அதிகரிப்பித்தலாம். பக்தன் சில சமயங்களில் சிரிப்பதும், சில சந்தர்ப்பங்களில் அழுவதும், பித்தனைப்போல சரீரப்பிரக்ஞையே இல்லாதிருத்தலும் இதன் செய்கைகளாம். இந்த நிலைமை ஜீவனுல் அடிக்கடி அடையப்படமாட்டாது. ஆனுல், மகாபுருஷர்களாலோ, அவதார புருஷர்களாலோ அடையப்படும்.

ஆறுவது: பிரேமை. அதாவது, ஈசுவரனிடத்திலே மிகவும் அதிகரித்த பக்தியைச் செலுத்துதலாம். இது, மகாபாவத்துடன் சேர்ந்தே உண்டாகும். இந்த நிலைக்கு இரண்டு அடையாளங்க ளுண்டு. அவற்றுள் ஒன்று, இவ்வுலக மறதி; மற்றொன்று, சொந்தச் சரீரத்துடனே தன்னை மறத்தல். இந்த நிலை, ஈசுவரனுக்கு முன்னே பக்தனை நேராகக் கொண்டுபோய் விட்டுவிடும்.

13-வது அத்தியாயம்

சாதுசங்கம்

276. சாதுக்கள் சகவாசத்தால் விவேகமுண்டாகும் விதம்:

ஈரமான விறகும் நெருப்பின்மேல் வைக்கப்பட்டால் சீக்கிரம் உலர்ந்துவிடும். பின்னர் அதில் அக்கினிபற்றித் தீவிரமாக எரியும். இதுபோலவே, உலகினர் சாதுக்களுடனே சகவாசஞ் செய்தால் அவர்களுடைய ஹிருதயங்களி

இள்ள ஆசையாகிய ஈரம் உலர்ந்துவிடும். அதன்மேல் விவேகமென்னும் அக்கினியானது அவற்றில் உறுதியாய்ப் பற்றியெரிந்து பிரகாசிக்கும்.

277. ஞானிகள் சகவாசம் ஆத்மீக அபிவிருத்திக்கு அவசியமானவைகளில் ஒன்றென்பது :

பரிசுத்த புருஷர்கள், அல்லது ஞானிகளுடைய கூட்டுறவானது ஆத்மீக அபிவிருத்திக்கு அவசியமான விஷயங்களில் முக்கியமான ஒன்றும்.

278. சாதுசங்கம் கோடியவரையும் நல்லவராக்கு மெனல் :

ஒரு ஜமீன்தாருடைய வேலைக்காரன், தனியாக நாட்டிற்குச் சென்றால், குடித்தனக்காரர்களைப் பலவிதத்திலும் கஷ்டப்படுத்துவான்; அத்தகைய கொடுங் குணமுடைய அவன், தன் எஜமானனுக் கெதிரில் வந்துவிட்டால் தன்னுடைய கெட்ட செய்கைகளை மாற்றிக்கொண்டு எஜமானனிடத்தில் தன்னை நல்லவனாகக் காட்டிக்கொள்ள வேண்டுமென்று நினைத்து அங்கே வரும் குடித்தனக்காரர்களுக்கு நன்மையே செய்வான்; அவர்களுடைய குறைகளை யெல்லாம் நன்றாக விசாரிப்பான். எல்லோருக்கும் பக்ஷபாதமின்றி நியாயங்கொடுக்க முயற்சிப்பான். எஜமானனுடைய பயத்தினாலும், சுற்றியிருப்பவர்கள் அவமதிப்பார்களென்ற பயத்தினாலுமே கொடியனாகிய அவ்வேலைக்காரனும் நல்லவனாய்விடுகிறான். அதுபோலவே, சாதுக்களுடைய சங்கமா

னது கொடியவர்களிடத்தும், பயத்தையும், பக்தியையு முண்டாக்கி அவர்களை நல்லவராக்கிவிடும்.

279. சாதுசங்கம் மயக்கத்தைப் போக்கிவிடுமேன்பது :

சாதுசங்கமானது அரிசிக் கழுநீர் போன்றது. ஏனெனில், கழுநீரானது மனிதருடைய மயக்கத்தைப் போக்கிவிடும். அதுபோலவே, சாதுக்களின் சங்கமானது, வீண் ஆசைகளாகிய சாராயத்தைப் பருகினவர்களுடைய மயக்கத்தைப் போக்கிவிடும்.

280. சாதுக்களுடைய சங்கத்தால் மனத்தைப் பலப்படுத்த வேண்டுமேனல் :

அடுப்பிலுள்ள நெருப்பானது பிரகாசமாயிருக்கும் பொருட்டும், அவிந்துபோகாமலிருக்கும்பொருட்டும் அதனை அடிக்கடி ஒரு கோலினால் கிண்டிவிடவேண்டும். அப்படிச் செய்தாற்றான் அது பிரகாசமாயெரிந்துகொண்டிருக்கும். அதேபோல், மனமானது ஞானமார்க்கத்தில் தீவிரமாயிருக்கும்படி அதனை, சாதுக்களுடைய சங்கத்தினால் பலப்படுத்தவேண்டும்.

281. மனமானது சாதுசங்கத்தால் பரிசுத்தமான நிலைமையில் வைக்கப்பட வேண்டுமேனல் :

கொல்லன், தனது உலைக்கூட்டத்தின் நெருப்பைத் துருத்தியால் ஊதி அவியாமல் வைத்துக்கொள்வதுபோல, மனமானது சாதுசங்கத்தின் உதவியினாலே சுத்தமாக வைக்கப்படவேண்டும்.

282. நல்லோர் சேர்க்கையால் பரிசுத்தமான மனத்தை மீண்டும் அசுத்தமாகாமல் காப்பாற்றிக் கொள்ளும் விதம்:

ஒரு யானையை நன்றுகக் கழுவிச் சுத்தப்படுத்தி அதன் இஷ்டம்போல் திரியும்படி விட்டுவிட்டால் அது கண்டகண்ட விடங்களில் திரிந்து உடம்பையெல்லாம் குப்பையாக்கிக்கொள்ளும். அதனைக் குளிப்பாட்டியவுடனே வெளியே போகாமல் கூடத்தில் கட்டிவிட்டால் அது சுத்தமாகவே யிருக்கும். இதுபோலவே, நல்லோர்களுடைய கூட்டுறவால் மனதை ஒருமுறை சுத்தப்படுத்திக்கொண்டு உலகத்தவருடனே கலந்து திரிந்தால், முதலில் அடைந்த மனப் பரிசுத்தமானது வெகு சீக்கிரத்தில் கெட்டுவிடும். அவ்வாறு பரிசுத்தமடைந்த மனதை ஈசுவரனிடத்திலே நிறுத்திவைத்திருந்தால் அம்மனத்தில் எப்பொழுதும் மாசு சேராது.

283. பிரமவஸ்துவைப் பார்க்கவேண்டுமானால் சாது சங்கத்தோடு சேரவேண்டுமெனல்:

உலகமாதாவாகிய உமாதேவியானவள் மலையரசன் மகளாக அவதரித்த காலத்தில், பர்வதராஜன், "வேதங்களிலே கூறப்படும் பிரஹ்ம வஸ்துவைக் காண்பிக்கவேண்டும்" என்று அவளிடம் கேட்க, அவள் பர்வதராஜனை நோக்கி, "ஏ பிதாவே! பிரஹ்மவஸ்துவைப் பார்க்கவேண்டுமானால் உலகப்பற்றை அடியோடு அறுத்த பரிசுத்த புருஷர்கள

ருடைய சங்கத்திலே சேர்ந்து வசிக்கவேண்டும்'' என்று கூறினர். ஆதலின், பிரஹ்மவஸ்துவை அறியவேண்டுமானால் சாதுசங்கத்தைச் சாரவேண்டும்.

14-வது அத்தியாயம்

ஈசுவரார்ப்பணம்

284. எல்லாவற்றையும் ஈசுவரனிடத்தில் ஒப்புவித்து விட்டால் துன்பமில்லை யேனல்:

மனிதன் எல்லாவற்றையும் ஈசுவரனிடத்தில் ஒப்புவித்துவிடவேண்டும். தன்னையும் அவர்க்கே அர்ப்பணம் செய்யவேண்டும். அவ்வாறு செய்யின் மனிதனுக்குத் துன்பமில்லை. அந்நிலைமையில் மனிதன் 'எல்லாம் ஈசுவரனுடைய இச்சையினாலேயே செய்யப்படுகின்றன' என்பதை அறிந்து கொள்வான்.

285. எல்லாவற்றையும் ஈசுவரார்ப்பணம் செய்த உண்மைச் சாதுக்களையும் வேடச் சாதுக்களையும் காணும் விதம்:

பொன்னையும், பித்தளையையும் உரைகல்லில் உரைத்து, 'இது பொன்' 'இது பித்தளை' என்று கண்டுகொள்வதுபோல, துன்பமும் நிந்தனையுமாகிய உரைகல்லிலே உரைத்துப் பார்த்து உண்மையான சாதுவையும், வேடச் சாதுவையும் தெரிந்துகொள்ளலாம். எப்படியெனில், உண்

மைச்சாது தனக்குத் துன்பமும் நிந்தனையும் வந்தகாலத்தில் எல்லாவற்றையும் ஈசுவரார்ப்பணம் செய்துவிட்டு ஆனந்தமாகவே யிருப்பான். வேடதாரியோ கஷ்டப்படுவான்.

286. பாபியும் தன்னை ஈசுவரார்ப்பணஞ் செய்தால் பரிசுத்த மடைவானேனல்:

கலங்கல் ஜலத்தையுடைய ஒரு குளமானது தன்னுடைய நீரை எவரும் விரும்பி மொண்டு குறைக்காவிட்டாலும் சூரிய வெப்பத்தால் சிக்கிரத்தில் வறண்டு பரிசுத்தமடையும். இதேபோல், எவராலும் விரும்பப்படாத ஒரு பாபியும் தன்னை ஈசுவரார்ப்பணம் செய்துவிடுவானுனல் சிக்கிரம் அவரால் பரிசுத்தம் செய்யப்படுவான்.

287. ஈசுவரார்ப்பணத்தைப்பற்றிக் கூறும் மார்க்கம் சிரேஷ்டமான தென்பது:

ஈசுவரார்ப்பணத்தைபற்றிக் கூறும் 'பா—கலாமா' என்னும் மார்க்கம் மிகச் சிரேஷ்டமானது; இதைக்காட்டிலும் சுலபமானதும், பந்தோபஸ்துள்ளதுமான மார்க்கம் வேறெதுவுமில்லை. 'பா-கலாமா' என்பதற்கு, 'ஈசுவரனுடைய விருப்பத்திற்குத் தன்னை அர்ப்பணம் செய்துகொள்வது' என்றும், 'எதுவும் என்னுடையது' என்ற பிரக்ஞையே இல்லாதிருத்தல், என்றும் பொருளாம்.

288. பரிபூரண நம்பிக்கையின் லட்சணம்:

மனிதன் தனக்குள்ள எல்லாக் கவலைகளும் நீங்கத் தன்னை ஈசுவரனுக்கு அர்ப்பணஞ் செய்து ஒப்புக்கொடுத்தல் எதற்குச் சமானமெனில், பகல் முழுவதும் வேலைசெய்து

இளைத்த ஒருவன் தன் வேலைகளையெல்லாம் முடித்துக் கொண்டு மாலை நேரத்தில் வீட்டிற்கு வந்து ஒரு தலையணையிலே சாய்ந்து சுருட்டுப் பிடித்துக்கொண்டு ஒரு மனதுடன் கவலையற்றிருத்தல் போன்றதாம்.

289. ஈசுவரனையே நம்பியிருப்பவர்களுடைய செய்கைகளெல்லாம் ஈசுவரசம்மதமாகவே நிறைவேறுமென்பது:

உலர்ந்துபோன சருகுகள், தங்கள் சுயேச்சையாக ஒன்றுஞ் செய்யாமல் காற்றின் வயப்பட்டு அங்குமிங்குஞ் சுழன்றுவதுபோல, ஈசுவரனையே நம்பியிருப்பவர்கள் தங்கள் சொந்த முயற்சியினால் ஒன்றுஞ் செய்யாமல் ஈசுவரனுடைய இச்சைப்படியே நடப்பார்கள்.

290. ஈசுவரார்ப்பணஞ் செய்வதற்குத் தக்க உதாரணம்:

ஒரு காலத்தில் ஸ்ரீ சாதையானவள் ஆயிரம் துவாரங்களுள்ள குடத்தில் ஜலம் மொண்டு ஒருதுளி ஜலம்கூடச் சிந்தாமல் கொண்டுவந்துவைத்துத் தன்னுடைய பதிவிரதாதர்மத்தைக்காட்டினாள். அவள் தன்னை ஸ்ரீகிருஷ்ணனுக்கே அர்ப்பணஞ் செய்து, எல்லாம் அவருடைய செய்கையென்றே உறுதிபூண்டு வந்ததனாலேயே அந்த இள்ளிக்குடத்திலும் ஜலம் சிந்தாதிருந்தது. அவள் அவ்வாறு ஜலம் கொண்டுவந்தபோது அதைக் கண்டவர்களெல்லோரும் அதிசயித்து, "இத்தகைய பதிவிரதாசிரோமணியை இதற்குமுன் நாம் கண்டதில்லை; இனிமேலும் காணப்போகிறதில்லை" என்று அவளைக் கொண்டாடினார்கள். அப்போது சாதை அவர்களை

நோக்கி, "என்னை ஏன் புகழ்கின்றீர்கள்? கிருஷ்ணருக்கே எல்லாப் பெருமையும்; எல்லாம் அவருடைய மகிமையே" என்று கூறினாள். இவளைப்போலவே எல்லாவற்றையும் ஈசுவரார்ப்பணம் செய்யவேண்டும். அங்ஙனம் செய்வாரிடத்தே அதிசயச் செயல்களைக் காணலாம்.

15-வது அத்தியாயம்
உலகப்பற்றின்மை

291. மனிதன் உலகில் இருந்தாலும் உலகினனாகக் கூடாதெனல்:

"சர்ப்பத்தின்முன் தவளையை ஆடச்செய்; ஆனால், சர்ப்பம் அத்தவளையை விழுங்கும்படி விட்டுவிடாதே" என்று ஒரு பழமொழியுண்டு. இதன் கருத்தாவது: "சர்ப்பத்தின் முன்னே தவளையை ஆடும்படி விட்டாலும் பாம்பு அதனை விழுங்கும்படி விட்டுவிடலாகாது; இதுபோல, உலகத்தில் திரிந்தாலும் உலகப்பற்றி லகப்பட்டுக் கொள்ளலாகாது" என்பதாம். ஆதலால், இக்கருத்தின்படி மனிதர் உலகில் இருந்தாலும் உலகினரென்று சொல்லும்படி உலக விஷயங்களில் அழுந்திவிடக்கூடாது.

292. முழுட்சு உலகத்திலிருந்தாலும் உலகம் அவனிடத்தி லிருக்கலாகாதெனல்:

ஒரு பூடகானது நீரின்மே லிருக்கலாம்; ஆனால், ஜலம் பூடகின்மே லிருக்கலாகாது. அங்ஙனமிருந்தால் பூடகு முழு

இப்போய்விடும்: இதேபோல, முழுமூட்சு உலகத்தி லிருக்க லாம். ஆனால், உலகம் அவனிடத்தி லிருக்கலாகாது. அப்படி யிருந்தால் அவன் உலகபந்தத்தி லகப்பட்டுக் கெட்டுப் போவான்.

293. உலகப்பற்றை ஒழிக்கும் விதம்:

மனிதன் தன்னுடைய குடும்பக் கவலைகளைத் தன்னுடையனவல்ல வென்றும், கடவுளுடையனவே யென்றும், தான் அவருடைய அடிமையாள னென்றும், அவருடைய ஆக்ஞைக் குட்பட்டு நடத்தற்கே இங்குவந்தவ னென்றும் எப்பொழுதும் கருதிக்கொள்ளவேண்டும். இவ்வெண்ணம் உறுதி யடைந்துவிட்டால் மனிதனுக்குத் தன்னுடையதென்று சொல்லும் பற்று ஒன்றுமே யிராது.

294. உலகத்தில் பற்றின்றி ஈசுவரனிடத்தில் பற்று வைக்கவேண்டுமெனல்:

ஒரு வேலைக்காரி, தன்னுடைய எஜமானனுடைய வீடு தனக்குச் சொந்த மன்றென்பதையும், தனக்கு வேறே வீடு சொந்தமாயிருக்கிற தென்பதையும் நன்குணர்வாள் என்றும், தான் அங்கே வேலைக் கமர்ந்திருப்பதை உத்தேசித்து அந்த எஜமானனுடைய வீட்டை 'இது எங்கள் வீடு' என்னும், எஜமானனுடைய குழந்தையைக் கையில் வைத்துக்கொண் டிருக்கும்போது, 'எங்கள் ஹரி' என்றும் கூறுவாள். ஆனால், அவளுடைய எண்ணமெல்லாம் தன் சொந்த வீட்டினிடத்திலும், சொந்தப் பிள்ளையினிடத்திலு

மே இருக்கும். இவனைப்போலவே மனிதர் உலகத்திலிருந்து எல்லாவற்றையும் செய்தாலும் அவற்றில் அகப்பற்றின்றிச் சொந்தமாகிய ஈசுவரனிடத்திலே பற்று வைக்க வேண்டும். இப்படியே நான் என்னிடம் வருபவர்களிடம் உலகிலே யிருந்தாலும் உலகினரா யிராதபடிக்கும், உலகில் பற்றின்றி வசிக்கும்படிக்கும், எல்லாவற்றிற்கும் உற்பத்தி ஸ்தானமாகிய ஈசுவரனிடத்திலே மனதைச் செலுத்தும் படிக்கும், பக்தியுண்டாகச் செய்யவேண்டுமென்று ஈசுவரனிடம் பிரார்த்திக்கும்படி கூறுகிறேன்.

295. முக்தன் உலகில் வசித்தாலும் அவனை உலக விஷயங்கள் பற்றுவென்பது:

மீன்குத்திக் குருவியானது மீனைப் பிடிக்கும்போது தண்ணீரில் நன்றாய் மூழ்கி எழுகின்றதாயினும், அதன் இறகுகளில் தண்ணீர் ஒட்டுவதில்லை. இதுபோல, முக்தன் உலகத்தில் வசித்தாலும் உலகப் பற்றுக்கள் அவனைத் தொடாதமாட்டா.

296. உலகிலிருந்துகொண்டே பற்றை நீக்கியவனுடைய தன்மை:

தாமரையிலை தண்ணீரிற் கிடந்தாலும் அதில் தண்ணீர் ஒட்டுவதில்லை. இதுபோலவே, மனத்துறவுடைய மனிதன் உலகத்தில் வசித்தாலும், உலக சம்பந்தமான பொருள்களினாலே பாதிக்கப்படமாட்டான்.

16-வது அத்தியாயம்
விக்கிரக ஆராதனை

297. விக்கிரகங்கள் ஈசுவரஞாபகத்தை உண்டாக்குகின்றனவென்பது:

மரத்தினாற் செய்யப்பட்ட ஒரு பழமும், ஒரு யானையும் மனிதனுக்கு உண்மையான பழத்தையும், யானையையும் ஞாபகப்படுத்துகின்றன. இவைபோல, மனிதரால் உபாசிக்கப்படுகிற விக்கிரகங்கள் அவருக்கு உருவமற்றவரும், நித்தியருமாகிய ஈசுவரனை ஞாபகப்படுத்துகின்றன.

298. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒருகாலத்தில், விக்கிரக விரோதியாயிருந்த கேசவச்சந்திரசேனரைப் பார்த்து, "விக்கிரகங்களை நீங்கள் ஏன் மண்ணாகவும், கல்லாகவும், நினைக்கிறீர்கள்? இவற்றில் நித்தியமாயும், ஆனந்த நிறைவாயும், சர்வஞாதாவாயுமுள்ள மாதா இருக்கின்ற தென்று ஏன் நினைத்தல்கூடாது?" என்று கூறினர். இதனால் விக்கிரகங்களை இகழலாகா தென்பது புலப்படும்.

299. விக்கிரகங்களை ஈசுவரத்துவ முள்ளவையென்று பாவிப்பவன் ஈசுவரத்தன்மையடைவா னென்பது:

தன்னால் பூஜிக்கப்படும் விக்கிரகங்கள் உண்மையில் ஈசுவரத்துவ முள்ளவையென்று திடமாகச் சிந்திப்பவன் ஈசுவரத்தன்மையை அடைவான். அவற்றை, 'மண்ணும், கல்

லும், வைக்கோலும் தவிர வேறில்லை' என்று நினைப்பவன் எவ்வித நன்மையையும் அடையமாட்டான்.

300. வடிவமுள்ள வஸ்துவில் முதலில் மனத்தைச் செலுத்தினால் பின்னர் வடிவமற்ற வஸ்துவில் எளிதிற் செலுத்தலா மென்பது:

ஒருவன் சிறிய எழுத்துக்களை எழுதக் கற்றுக் கொள்ளுமுன் பெரிய எழுத்துக்களை எழுதிப் பழகவேண்டும். அப்பழக்கத்தின்பின் சிறிய எழுத்துக்களைச் சுலபமாக எழுதப் பழகிக்கொள்ளலாம். இதேபோல், மனிதன் முதலில் வடிவமுள்ள விக்கிரகங்களினிடத்தே மனத்தைச் செலுத்தி மனத்தை ஏகாக்கிரகப்படுத்திக்கொண்டு பின்னர் வடிவமற்ற ஈசுவரன்மீது அதனை நிலைநிறுத்தப் பழகவேண்டும். அவ்வாறு செய்யின் மனம் ஈசுவரனிடத்தே சுலபமாக நிலைநிற்கும்.

301. இதுவுமது:

வில்வித்தை பழகுவோன் முதலில் பெரிய வஸ்துக்களைக் குறிவைத்துப் பாணத்தை எய்வான். அந்தக் குறியைப் பன்முறை தவறுமல் எய்யும் பழக்கம் வந்துவிட்டால் பின்னர் அவன் சிறிய வஸ்துக்களைக் குறிவைத்து எய்யப் பழகி அதில் தேர்ச்சி யடைவான். இதுபோலவே, மனதை வடிவமுள்ள விக்கிரகங்களின்மீது நிலைநிற்கும்படி செய்து, பின்னர் வடிவற்ற ஈசுவரன்மீது பற்றும்படி செய்யவேண்டும். அப்போது அது சுலபமாகப் பற்றும்.

302. க்ஷேத்திரங்களின் மூலமாகவே ஈசுவரனை எளிதிற் பார்க்கமுடியு மென்பது:

பசுவின் பாலானது இரத்தமயமாய் அதன் தேக முழுதும் வியாபித்திருக்கின்றது. எனினும், அதன் காதையாவது, வாலையாவது, காலையாவது பிடித்துக் கசக்கிப் பாலைக் கறக்க முடியாது. அதன்பால் மடியிலிருந்துதான் பாலைக் கறக்க முடியும். இதுபோலவே, ஈசுவரன் உலக மெங்கும் வியாபித்திருந்தாலும் அவரை எவ்விடத்திலும் எளிதில் பார்த்துவிட முடியாது. பக்தர்களால் வணங்கப்படுகின்ற பரிசுத்த க்ஷேத்திரங்களிலேதான் அவரை எளிதிற் பார்க்க முடியும். அங்கே அவர், அடியார்களுக்குத் தரிசனங் கொடுத்தற்குச் சித்தமாயிருப்பார்.

303. விக்கிரகம் ஆத்மாவின் தோற்றமே யென்பது:

விக்கிரகமானது மண்ணால் ஆக்கப்பட்டிருப்பினும் நன்முக ஆராயுமிடத்து அது மண்ணால் ஆக்கப்படவில்லை யென்றும், ஆத்மாவினாலே ஆக்கப்பட்டிருக்கிறதென்றும் விளங்கும். ஆதலின், விவேகமுள்ள மனிதன் விக்கிரகங்களின் மூலம் ஈசுவரனைத் தரிசிக்கும்பொழுது அவ்விக்கிரகங்களெல்லாம் ஆத்மாவினுடைய தோற்றமே யென்று அனுபவத்தில் அறிந்துகொள்ளலாம்.

304. வெவ்வேறு வடிவமான விக்கிரகங்கள் வெவ்வேறு மனிதர்களுக்குப் பொருந்துமாறு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன வென்பது:

ஒரு சிஷ்யன் மண்ணால் செய்யப்பட்ட பலவகையான விக்கிரகங்கள் ஏற்பட்டிருப்பதைக் குறித்து, 'இத்தனை விதி

மான விக்கிரகங்கள் ஏன் ஏற்பட்டன?' என்று பேசிக்கொண்டிருந்தான். அச்சமயத்தில் அவனுடைய குரு அவனை நோக்கி, "நீ, மண்ணால் செய்யப்பட்ட பல விக்கிரகங்களைப் பற்றிக் கெட்ட அபிப்பிராயப்படுகிறாய்; அவைகள் ஏற்பட்டதற்குத் தக்க காரணம் உண்டு. நீ அதைத் தெரிந்துகொள்ளாததனாலேயே இவ்வாறு பேசுகின்றாய்; அந்தப் பற்பல விதமான விக்கிரகங்களும் வெவ்வேறு கொள்கைகளையுடைய மனிதர்க்கு வெவ்வேறு வகைகளாக ஏற்பட்டிருக்கின்றன" என்று கூறினார். இதனால் பலவகையான விக்கிரகங்களின் அவசியத்தைப்பற்றித் தெரிந்துகொள்ளலாம்.

305. விக்கிரகங்களைப் பலவிதமாக ஏற்படுத்தியதற்குக் காரணம்:

ஒரு தாய்க்கு நாலைந்து குழந்தைகளிருந்தால், அவள் அவரவர்க்குத் தக்கபடி ஆகாரம் சமைத்துக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறாள். அதனால் அவளிடத்தில் ஒரு பெரிய மீன் அகப்பட்டால் அவள் அதைப் பலபாகமாகச் செய்து ஒரு பிள்ளைக்கு மீன் புலவு செய்து கொடுப்பாள். ஜீரண சக்தியில்லாத மற்றொரு குழந்தைக்கு மீன் குழம்பு செய்து கொடுப்பாள். மற்றக் குழந்தைகளுக்கும் அவரவர்க்குப் பொருத்தமான பதார்த்தங்களைச் செய்து கொடுப்பாள். அவ்வாறு செய்வதால் எல்லாப் பிள்ளைகளும் வெவ்வேறு வகையில் ஒரே வஸ்துவின் சாரத்தை அனுபவித்துத் திருப்தியை அடைகின்றன. இதுபோலவே, மனிதர்களின் பற்பல வகைக் கொள்கைகளுக்குத் தக்கபடி பெரியோர்

பற்பல விதமான விக்கிரகங்களை ஏற்படுத்தியிருக்கின்றனர். அவ்வாறு ஏற்பட்ட விக்கிரகங்களை மனிதர் பலவிதமாக வணங்கி ஒரே தெய்வத்தின் அருளைப் பெற்றுத் திருப்தி படைகிறார்கள். விக்கிரகங்கள் பலவகையாயினும் அவற்றில் வியாபகமாயிருக்கும் தெய்வம் ஒன்றே.

17-வது அத்தியாயம்

விசுவாசம்

306. ஆத்மஞான மடைதற்கு, ஈசுவர வாக்கியத்தில் உறுதியான விசுவாச மிருந்தால் போதுமெனல்:

மற்றொரு மனிதனை, ஒருவன் கொல்லவேண்டு மென்றால் அவனுக்குக் கத்தி, வாள் முதலிய பல ஆயுதங்கள் வேண்டும். அவன் தன்னைத் தானே கொலைசெய்துகொள்வதற்கு ஒரு குண்டூசி போதும். இதேபோல், ஒருவன் பிறருக்கு ஆத்மஞானத்தை உண்டாக்குவதற்கு அநேக சாஸ்திரங்களைப் போதிக்கவேண்டும். தான் அதை அடைவதற்கு ஈசுவர வாக்கியத்தில் தனக்கு உறுதியான விசுவாச மிருந்தால் போதும்.

307. விசுவாசமுடைய மனிதன் சர்க்கரைப்பாகு போல்வா னென்பது:

நன்றாக எரிகின்ற நெருப்பிலே சர்க்கரைப் பாகைக் காய்ச்சினால் அதில் மண்ணும் அழுக்கும் உள்ளவரையில் அது புகையும்; அவை நீங்கிவிட்டால் புகையாது; சத்தமு

மிராது. அப்போது பாகானது கலப்பற்றதாய் மிகவும் ருசியுள்ளதாகிப் பொங்கும். இவ்வாறு அது சுத்தியடைந்து ருசி பெற்றபின் மனிதருக்கும் தேவருக்கும் விருப்பமுள்ளதாகிவிடும். இதேபோல், மனிதன் ஈசுவரபக்தியால் தன்னுடைய அழுக்கையெல்லாம் போக்கி, அவரிடத்தே வைக்கும் விசுவாசமென்கிற சுவையை யுடையவனாய்விட்டால் ஈசுவரன் விரும்பத்தக்கவனாய்விடுவான்.

308. விசுவாசமே நித்தியானந்தத்திற்கு ஆதிகாரணமென்பது:

பார்வதிதேவி ஒரு சமயத்தில் மகாதேவரை நோக்கி, "ஏ ஈசுவரா! நித்தியானந்தத்திற்கு ஆதிகாரணமாயிருப்பது எது?" என்று வினவ, மகாதேவர், "அதற்கு முதற்காரணம் விசுவாசமே" என்று மறுமொழி கூறினர். ஆதலின், நாம் உலகத்தில் உண்டாகியிருக்கும் அநேகம் வகுப்புக்களில் எந்த வகுப்பிலிருந்தாலும் அந்த அந்த வகுப்புக்களுக்குரிய அனுஷ்டானங்களையும் தர்மங்களையும் விசுவாசத்துடனே செய்யவேண்டும். அவ்வாறு செய்யின் நித்தியானந்த முண்டாகும்.

309. விசுவாசத்துடன் தன்னை ஈசுவரனுக்கு அர்ப்பணஞ் செய்பவன் விரைவில் ஈசுவரனை அடைவானென்பது:

கபடற்ற விசுவாசத்துடனே ஈசுவரனுடைய சித்தத்துக்குத் தன்னை அர்ப்பணஞ் செய்பவன் விரைவில் ஈசுவரனிடத்தே சேருங்கிவிடுவான்.

310. விசுவாசம் அற்புதங்களைச் செய்யுமென்பதும், கர்வம் எமனுக்கு மென்பதும்:

தன்னுடைய குருவுக்கு அனந்தசக்தி மீண்டென்று உறுதியான விசுவாசங் கொண்டிருந்த ஒரு சிஷ்யன் ஒரு தினம் அந்தக் குருவின் நாமத்தை ஒரே மனதாக விசுவாசத்துடன் உச்சரித்துக்கொண்டே ஒரு நதிப் பிரவாகத்தின் மீது நடந்தான். தன்னுடைய குருவுக்கு எல்லா சக்தியு முண்டென்று அவன் உறுதியான விசுவாசத்தை மனத்தில் நிலை நிறுத்திய காரணத்தால் தண்ணீரில் அமிழாமலே சென்றுவிட்டான். அவனுடைய குரு இந்த அதிசயத்தைப் பார்த்து, ''என்னுடைய நாமத்துக்கு இவ்வளவு அதிசய சக்தியிருக்கிறது; அஃது இவ்வளவு பெரிதாயிருக்குமென்று நான் இதற்குமுன் அறியேன்'' என்று நினைத்து அகங்கரங்கொண்டு, ''நம்முடைய நாம சக்தியினால் சிஷ்யன் தண்ணீரில் நடக்கும்போது நாம் நடக்க முடியாதா'' என்று, 'நான் பெரியன், நான் பெரியன்' என்ற நினைவுடனே நதியில் இறங்கி நடக்க முயன்றார். உடனே அவர் தண்ணீரில் மூழ்கிவிட்டார். அந்தச் சிஷ்யனுக்கோ நீந்தவும் தெரியாது; அப்படி யிருந்தும் அவன் குரு விசுவாசத்தினால் அவ்வாறு நீரில் நடந்தான். குரு பெரியவரா யிருந்தாலும் 'நான்' என்ற அகங்காரத்தை வைத்தபடியால் ஜலத்திலே மூழ்கினார். இதனால் விசுவாசத்தின் உயர்வையும் கர்வத்தின் தாழ்வையும் தெரிந்துகொள்ளலாம். விசுவாசமானது பல அற்புதங்களைச் செய்யும். கர்வமானது மனிதனுக்கு எமனோபோன்று துயர்செய்யும்.

311. விசுவாசமே ஜீவிதம், சம்சயமே மரணமென்பது:

ஒரு மனிதன், நீர் நிறைந்த ஓர் ஆற்றைக் கடக்க விரும்பி ஒரு மகாத்மாவினிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்துக்கொண்டான். அவர் அவன் கரத்தில் ஒரு சட்டையைக் கொடுத்து, "நீ இதைக் கையில் வைத்துக்கொண்டு நதியில் இறங்குவாயானால் இது உன்னைத் தண்ணீரில் அமிழ்த்திவிடாமல் அக்கரை கொண்டுபோய்ச் சேர்க்கும்" என்று கூறினர். அவன் அவ்வாறே அதனைக் கையில் வைத்துக் கொண்டு நதியில் இறங்கி நடந்தான். அஃது அவனை நீரில் அமிழ்த்தாமல் கொண்டு சென்றது. அவன் நதியின் மத்தியில் சென்றவுடனே 'இந்தச் சட்டையில் என்ன இருக்கின்றது என்று பார்க்கவேண்டும்' என்ற ஓர் எண்ணம் அவனுடைய மனத்தில் உதித்தது. அங்ஙனமே முடிக்கவே அவன், அதனைத் திறந்தான். அதற்குள்ளே ஒரு துண்டுக் காகிதத்தில் குருவானுடைய பரிசுத்த நாமம் எழுதப்பட்டிருந்தது. அதைக் கண்டவுடனே அவன், 'இதுதானு இதிலிருந்தது!' என்று அதனை இகழ்ந்து கூறினான். இவ்வாறு கூறியவுடனே அவன் ஆற்றில் மூழ்கிவிட்டான். குருவான் பெயரால் சித்திகள் நடைபெறுவது விசுவாசத்தினாலேதான். அதில் விசுவாசம் வைக்காவிட்டால் நன்மைக்குப் பதில் தீமையே உண்டாகும். விசுவாசம் ஜீவிப்பைத் தரும்; சம்சயம் மரணத்தைத் தரும்.

312. விசுவாசக் குறைவால் நேரும் பயன்:

மூற்காலத்திலிருந்த அரசனொருவன் பிரம்மஹத்தி செய்துவிட்டு, 'அந்தப் பாவம் நீங்குவதற்குஎன்ன பிராயத்

சித்தம் செய்யவேண்டும்?' என்பதைத் தெரிந்துகொள்வதற்கு ஒரு முனிவரின் ஆச்சிரமத்துக்குச் சென்றான். அப்போது அம்மகாரிஷி வெளியிற் சென்றிருந்தார். அவருடைய குமாரர் அங்கேயிருந்தார். அவர் அரசனைக் கண்டு, அவனிடம் விஷயத்தை விசாரித்துத் தெரிந்துகொண்டு, "ஈசுவரனுடைய திருநாமத்தை நீ மூன்று முறை ஜபித்தால் உன்னுடைய பாவம் நிவர்த்தியாய்விடும்" என்று சொன்னார். அத்தருணத்தில் வெளியிற் சென்றிருந்த முனிவர் வந்து தம் புத்திரர் கூறியதை விசாரித்தறிந்து, அவரை நோக்கி, "ஈசுவரனுடைய திருநாமத்தை ஒரு முறை உச்சரித்தாலே லட்சக்கணக்கான ஜன்மங்களிற் செய்த பாபங்கள் அந்த நிமிஷத்திலேயே நீங்குமே; அப்படியிருக்க, ஏ மூடா! அந்த நாமத்தை மூன்று முறை உச்சரிக்கும்படி நீ கூறியிருக்கின்றாய்; இதனால் நீ ஈசுவரவிசுவாசத்தில் குறைவுற்றிருக்கின்றாயென்பது விளங்குகின்றது; இவ்வாறு நீ விசுவாசம் குறைந்தவனாயிருந்ததற்காகச் சண்டாளனாகப் பிறக்கக்கடவாய்" என்று சபித்தார். அந்த மகாரிஷி புத்திரர் அவ்வாறே இராமர் காலத்தில் குகனாகப் பிறந்தார். இதனால் ஈசுவரவிசுவாசத்தில் குறைவு பண்ணலாகாதென்பதை உணரலாம்.

313. ஈசுவரனைப் பார்க்க விரும்பினால் இன்னவை செய்யவேண்டுமென்பது:

ஈசுவரனைப் பார்க்க விரும்பினால், அவருடைய நாமத்தைத் திட விசுவாசத்துடனே ஜெபிக்கவேண்டுமென்றும், அவ்வாறு ஜெபித்தால் பயனுண்டென்றும் உறுதியாக நம்பு

வேண்டும்; நித்தியத்திலிருந்து அநித்தியத்தைப் பகுத்தறிய முயற்சி செய்யவேண்டும்.

314. விசுவாச முள்ளவனும், அஃதில்லாதவனும் அடையும் பயன்:

விசுவாச முடையவனுக்கு எல்லாம் உண்டு; அஃதில்லாதவனுக்கு ஒன்றுமே யில்லை.

315. விசுவாசத்தினாலே பெருங்காரியத்தையும் செய்து முடிக்கலா மெனல்:

ஸ்ரீராமச் சந்திரமூர்த்தி, இலங்கைக்குச் செல்லும் பொருட்டுச் சமுத்திரத்தைத் தாண்டுவதற்கு வானரசேனைகளைக்கொண்டு அணை கட்டுவித்துச் சென்றார். அவருடைய சேவகராகிய அனுமாரோ ராமர்மீது கொண்ட விசுவாசத்தின உறுதிப்பாட்டாலே ஒன்று மில்லாமல் சமுத்திரத்தைத் தாண்டிவிட்டார். இது விசுவாசத் திடத்தினாலே ஏற்பட்டது. நம்பிக்கையினாலே ராமதூதராகிய அனுமார் தம் எஜமானராகிய ராமர் செய்ததைக்காட்டிலும் பெருங்காரியத்தைச் செய்தார். இவ்வுதாரண மொன்றினாலேயே விசுவாசத்தின் உயர்வைத் தெரிந்துகொள்ளலாம்.

316. மனோபாவனைப்படியே மனிதன் ஆய்விடுவான் என்பது:

வைத்தியத்தில் விசுவாசமுள்ள வைத்தியர்கள், தங்களிடம் வரும் வியாதியஸ்தர்களை, 'எமக்கிப்போது வியாதியில்லை' என்று திடமான விசுவாசத்துடன் கூறச் செய்

கிறார்கள். வியாதியஸ்தர்கள் அப்படியே தங்களுக்கு வியாதி யில்லையென்று நினைத்துத் திடசித்தத்துடன் கூறுகிறார்கள். உடனே வியாதி தீர்ந்துவிடுகிறது. இருபாலார்க்கும் ஏற்படும் திடமான விசுவாசத்தினாலேயே இவ்வாறு சௌக்கியம் ஏற்படுகிறது. ஆதலின், மனிதன் தன்னைப் பலமற்றவனென்று நினைத்துக்கொண்டால் வெகு சீக்கிரத்தில் அப்படியே ஆய்விடுவான். ஏராளமான சக்தியுடையவனென்று நினைத்துக்கொண்டால் அப்படியே பெரியசக்தியுடையவனுவான். எல்லாவற்றிற்கும் விசுவாசமே காரணம்.

317. விசுவாசமுள்ள மனது துன்பங்களால் அசைவுறுதெனல்:

கல்லானது எத்தனை வருஷங்கள்வரை தண்ணீரிற் கிடப்பினும், அதிலே தண்ணீர் ஊடுருவிச் செல்லமாட்டாது. ஒரு களிமண் உருண்டையைத் தண்ணீரிற் போட்டால் வெகு சீக்கிரத்தில் அதனுள் தண்ணீர் பிரவேசிக்க அது இளகிச் சேறுகிவிடுகிறது. இவைபோலவே, திடவிசுவாசமுள்ளவர்களுடைய ஹிருதயமானது துன்பங்களினிடையே அகப்பட்டாலும் சலன மடையாது. விசுவாசக் குறைவுள்ள ஹிருதயம் சிறிய கலக்கத்திற்கும் சலன மடைந்துவிடும்.

318. எவ்வளவு உலகவிஷயங்களில் மூழ்கியிருந்தாலும் விசுவாசமுள்ளவன் அதனைக் கைவிடானென்பது:

சக்கிமுக்கிக் கல்லானது எத்தனை வருஷங்கள் நீரிற் கிடந்தாலும் தனக்குள்ளிருக்கும் நெருப்பை ஒருபோதும்

இழந்துவிடமாட்டாது. இரும்பிலுல் எந்தச் சமயத்தில் அதைத் தட்டினாலும் அதிலிருந்து நெருப்பு வெளியே கிளம்பும். இதுபோலவே, ஈசுவரனிடத்தில் உண்மையான விசுவாசம் வைத்த பக்தன், உலக ஆபாசங்களின் னிடையே மூழ்கியிருந்தாலும் தன் விசுவாசத்தை இழந்துவிடமாட்டான். ஈசுவரனுடைய திருநாமத்தைக் கேட்டமாத்திரத்தி லேயே அவன் அப்படியே மெய்ம்மறந்துவிடுவான்.

18-வது அத்தியாயம்
வைராக்கியம்

---

319. வைராக்கியமின்றி ஞானம் அடைய முடியா தென்பது:

வைராக்கியமும், விவேகமு மில்லாத மனத்தினை யுடையவர்கள் பரிசுத்த சாஸ்திரங்களைப் படிப்பதால் பய னில்லை. விவேகமும் வைராக்கியமு மின்றி ஞானவிருத்தி யடைதல் முடியாது.

320. வைராக்கியம் தீய மார்க்கங்களிற் செல்லாமல் தடுக்குமென்பது:

கூச்சமுள்ள ஒரு குதிரையின் கண்களுக்குக் கண்மூடி கட்டாவிட்டால் அது நேரே செல்லமாட்டாது. இது போலவே, உலகினனுடைய மனமும், விவேகம் வைராக்கி யம் ஆகிய கண்மூடிகளைப் பக்கத்திற் கட்டிக் காவல் செய்யா

விட்டால் நேர்வழியிற் செல்லமாட்டாது. அவற்றை இட்டால் இடறித் தீய மார்க்கங்களில் வீழ்ந்துவிடாமல் நன் மார்க்கங்களிற் செல்லும்.

321. ஈசுவரனை அடைதற்குச் செய்யவேண்டியது இன்னதென்பது:

ஒருவன் ஈசுவரனை அடையவேண்டுமானால், இடைவராக்கியத்துடனே சரீரத்தையும், மனத்தையும், ஈசுவரியத்தையும் தியாகம் செய்யவேண்டும்.

322. வைராக்கியத்தின் வகை:

வைராக்கியமானது இரண்டு வகைப்படும்: அவை, தீவிரவைராக்கியம், மந்தவைராக்கியம் என்பனவாம். அவற்றுள் தீவிர வைராக்கியமாவது, ஒரே இரவில் ஒரு பெருங் குளத்தைத் தோண்டி அதில் நீரை நிரப்புவது போன்றதாம். மந்தவைராக்கியமோ மிகவும் தாமதமுள்ளது; அஃது இன்ன காலத்தில் பூர்த்தியடையு மென்பது தெரியாது.

323. தீவிர வைராக்கியத்திற்கு ஓர் திருஷ்டாந்தம்:

ஒரு மனிதன் ஒற்றை உடையை உடுத்திக்கொண்டு ஸ்நானத்திற்குப் புறப்பட்டான். அப்பொழுது, 'ஒருவர் உலகைத் துறந்து சந்நியாசியாவதற்குச் சில தினங்களாகப் பிரயத்தனப்பட்டுக்கொண் டிருக்கிறார்' என்று அவன் கேள்விப்பட்டான். அவ்வாறு கேள்விப்பட்டமாத்திரத்திலே, சன்னியாசித்துவமே சிறந்ததென்று அவன் மனத்தில் தோன்றியது. உடனே அதனிடத்தே அவனுடைய மனம் தீவிர

மாகப் பற்றியது. 'அதைக் கொள்ளவேண்டும்' என்று திட வைராக்கியம் கொண்டான். அந்த வைராக்கியத்தால் அவன் உடனே சந்நியாசியாகி, தான் கட்டியிருந்த ஒற்றை வஸ்திரத்துடனே வெளியேறிப் போய்விட்டான். பின்னர் திரும்பி வீட்டிற்கு வரவேயில்லை. இதுவே தீவிர வைராக்கியத்திற் குரிய திருஷ்டாந்தமாம்.

324. தியாகத்தன்மை யுண்டானால் மாத்திரந்தான் உலகபந்தத்தினின்றும் நீங்க முடியுமெனல்:

ஈசுவராநுபவத்திலே மனிதனுக்குத் தியாகத்தன்மை யுண்டானால் மாத்திரந்தான் அவன் பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை முதலிய பற்றுக்களை நீக்கிக் கொள்ளக்கூடும். அவ்வாறு நீக்கிக்கொண்டால்தான் அவன் உலகபந்தங்களெல்லாவற்றினின்றும் நிவிருத்தியடையமுடியும்.

325. ஈசுவரனிடத்தே லயித்த ஹிருதயத்திற்குள் மோக்ஷதரிசனம் தோன்றுமெனல்:

இதயமாகிற ஈசுவரஸ்தானம் ஆசையென்னும் காற்றினால் அசைவுற்றுத் துன்ப மடைந்துகொண்டிருக்கும் வரையில் அதிலே ஈசுவரப் பிரகாசத்தைப் பார்த்தல் முடியாது. அமைதியாயும், மெய்ம்மறந்தும் ஈசுவரனிடத்திலே லயித்திருக்கிற ஹிருதயத்தில்தான் மோக்ஷதரிசனம் தோன்றும்.

326. பாபஜீவன் ஆத்மீக அனுஷ்டானத்திற்குத் தகுந்த தாகாதெனல்:

எண்ணெயில் நனைக்கப்பட்ட காகிதத்தில் எழுதுதல் முடியாது; ஆயினும், எண்ணெய்பட்ட காகிதத்தில் சீமைச்

கண்ணுமண்ணைப் பூசி அதைச் சுத்தப்படுத்தினால் அதில் மையினால் எழுதலாம். இதைப்போல பாபம், இடம்பம் முதலியவற்றால் கெடுக்கப்பட்ட ஜீவன் ஆத்மிக அனுஷ்டானத்துக்குத் தகுந்ததாகாது. ஆயினும், அந்த ஜீவன் தியாகத்தினாலே சுத்திகரிக்கப் பெற்றால் ஞான அபிவிருத்திக்குத் தகுந்ததாகும்.

327. முதலில் தியாகஞ் செய்தவனே ஞானபி விருத்திக்குத் தக்கவனுவா னென்பது:

ஒருவகை விஷப்பூச்சி யுண்டு. அது கடித்தாலிட்டால் கடித்தவாயில் முதலில் மஞ்சளை நெருப்பில் வாட்டி அதனால் சூடு போடவேண்டும். அப்படிச் சுட்டபின்பு மற்ற மருந்துகளை உபயோகிக்கவேண்டும். இவ்வாறு மஞ்சளால் சுடாமல் வேறு எந்த மருந்தை உபயோகித்தாலும் சௌக்கியமுண்டாகாது. இதுபோலவே, பெண்ணாசையும், பொன்னாசையுமாகிற பூச்சியானது ஒருவனைத் தீண்டிவிட்டால் அவன் முதலில் தியாக மென்னும் அற்புத சக்தியைத் தன்னில் உண்டாக்கிக் கொள்ளவேண்டும். பின்னர் எவ்வித ஞானானுஷ்டானங்களையும் செய்யலாம். அவற்றால் ஞானம் அபிவிருத்தியடையும். முதலில் தியாகஞ் செய்யாதவன் ஞானபிவிருத்திக்கு யோக்கியனுகான்.

328. உலக இன்பம் முதலில் சுகமாயிருந்து பின்னர் துன்பத்தைக் கொடுக்குமேனல்:

தினவெடுக்கின்ற ஒரு படையைச் சொறியும்போது முதலில் சுகமாயிருக்கும். அதிகமாகச் சொறிந்து சொறிய அது பின்னர் எரிச்சலையும் துன்பத்தையுங் கொடுக்கும்

இதுபோலவே, இவ்வுலக சுகங்களும் முதலில் மிகவும் இனிமையைக் கொடுத்துப் பின்னர் சகித்தற்கும் கிளைத்தற்கும் முடியாத வேதனையை அளிப்பனவாம்.

329. ஆசையை நீக்கிவிடுவதே அறிவுள்ள செய்கை என்பது:

முட்களும், கற்களும் நிறைந்த ஒரு காட்டிலே ஒரு மனிதனால் நடக்கமுடியாது. அவன் அந்தக் காட்டில் நடக்க வேண்டுமானால் அந்தக் காடு முழுமையும் தோலைப் பரப்ப வேண்டும்; அல்லது கால்களுக்குச் செருப்பிட்டுக் கொள்ள வேண்டும். ஆனால், இவ்விரண்டில் காடுமுழுவதும் தோலைப் பரப்புவது முடியாதகாரியம். கால்களிற் செருப்பிட்டு நடப்பதே எளிதான மார்க்கம். ஆதலின், அறிவுடையோர் இந்த எளிதான மார்க்கத்தையே கண்டு செய்து அக்காட்டைக் கடப்பார்கள். இதுபோலவே, எண்ணற்ற விருப்பங்களும் துன்பங்களும் நிறைந்த இவ்வுலக மாயையைக் கடக்க வேண்டுமானால் மனத்தில் நிகழும் விருப்பங்களை யெல்லாம் நிறைவேற்றி அம்மனத்தைத் திருப்திசெய்து கொள்ள வேண்டும்; அல்லது, அவற்றையெல்லாம் அடியோடு விட்டு விட வேண்டும். ஆனால், இவ்விரண்டில் விருப்பங்களை யெல்லாம் நிறைவேற்றி மனத்தைத் திருப்தி செய்துகொள்வது அசாத்தியமான காரியம். ஏனெனில், அவற்றை நிறைவேற்றச் செய்யும் ஒவ்வொரு முயற்சியிலும் வெவ்வேறு புதிய விருப்பங்கள் கிளர்ப்பிக்கொண்டே யிருக்கும். ஆதலின், ஒருவன் அவ் விருப்பங்களை அடியோடு நீக்கிவிடுதலே சுலபமாம். இதுவே அறிவுடையோர் செய்கையாம்.

19-வது அத்தியாயம்

ஞானப்பியாசத்தின் விடாமுயற்சி

330. ஞானனுஷ்டானங்களைப் பொறுமையுடன் செய்பவன் ஈசுவரனைக் காண்பது நிச்சயமெனல்:

மீன் பிடிப்பவன், பெரிய மீனொன்றைப் பிடிக்க விரும்பினால் தூண்டிலில் இரையைக் கோத்து நீருக்குள் போட்டுவிட்டு அந்த மீன் வந்து கௌவும் வரையில் பொறுமையுடன் நெடுநேரமாகக் காத்துக்கொண்டிருப்பான். முடிவாக அவன் எண்ணிய மீன் ஒரு சமயத்தில் அவனுக்கு அகப்படும். இதுபோலவே, அனுஷ்டானங்களைப் பொறுமையுடனே செய்துகொண்டு வருகின்ற பக்தன், கடைசியில் தன்னுடைய ஈசுவரனை நிச்சயமாகக்காண்பான்.

331. பல கஷ்டங்களை அனுபவித்த பிறகுதான் ஈசுவர தரிசன முண்டாகு மெனல்:

'சவசாதனம்' என்னும் பயங்கரமான ஒரு செய்கையினாலே காளிகா தேவியைப் பிரசன்ன மாகும்படி செய்யும் ஒருவித கிரியையுண்டு. இதனை இரண்டுபேர் சேர்ந்து ஒரு சமயம் செய்யத் தொடங்கினார்கள். இரவின் முற்பாகத்திலே ஒருவனுக்குப் பயங்கரமான காட்சிகள் தோன்றின; அவற்றைக் கண்டதே அவன் பயந்து பைத்திய மடைந்து விட்டான். மற்றொருவனுக்கோ பின்னிரவில் ஜகன்மாதாவின் தரிசன முண்டாயிற்று. அப்பொழுது அவன் மகிழ்ச்சி

யடைந்து, அவளை நோக்கி, "தாயே! என்னுடு சேர்ந்து இக்கிரியையைச் செய்த அவனுக்கு மாத்திரம் என் பைத்தியம் பிடித்தது?" என்று கேட்டான். அதற்குத் தேவி, "ஏ குழந்தாய்! நீயும் அவனைப்போல் பல ஜன்மங்களில் பன்முறை பைத்திய மடைந்தவன்தான்; அப்படி அடைந்து இப்பொழுதுதான் முடிவாக என் தரிசனத்தைக் கண்டாய்; அவனும் இவ்வாறு பன்முறை பைத்தியமுற்றுப் பின்னர் இஷ்டசித்தியை அடைவான்; இத்தகைய காரியங்களைப் பன்முறை கஷ்டப்பட்டுத்தான் நிறைவேற்றவேண்டும்; முடிவில்தான் சுகம் கிடைக்கும்" என்று கூறினுள். ஆகலின், பக்தி அனுஷ்டானங்களினுல் பல கஷ்டங்களை அடைந்த பின்புதான் சுசுவர தரிசன முண்டாகும்.

332. இதுவுமது:

புதிதாகப் பிறந்த கன்றினுல் நிற்க முடியாது; அது பன்முறை வீழ்ந்து வீழ்ந்து எழுந்து அதன்மேல் உறுதியாக நிற்கும் நிலைமையை அடைந்துவிடுகிறது. இது போலவே, பக்தி மார்க்கத்தில் அநேகத் தவறுதல்கள் அடிக்கடி யுண்டாகும். கடைசியாகத்தான் ஜயம் கிடைக்கும்.

333. ஞானுனுஷ்டானங்களை நடத்திக்கொண் டிருப்பதால் உண்டாகும் நிலைமை:

பாற் பாத்திரத்தின் கீழே நெருப்பு எரிந்துகொண் டிருக்கும் வரையில் அதிலுள்ள பாலானது கொதித்து மேலெழும்பிப் பொங்கிக்கொண்டிருக்கும். அக்கினியை

நீக்கிவிட்டாலோ பால் அமைதி அடைந்துவிடும். இது போலவே, புதிய முழுமுட்சுவானவன் ஞானுஷ்டானங்களை நடத்திக்கொண்டிருக்கிறவரையில் அவனுடைய ஹிருதயமானது உற்சாகத்தினால் பொங்கிக்கொண்டிருக்கும்; அவற்றை விட்டுவிட்டால் அமைதி யடைந்துவிடும்.

334. அனுஷ்டானத்தில் அடையவேண்டிய பொறுமைக்குத் தக்க உதாரணம்:

கொல்லனுடைய பட்டடையானது சம்மட்டியினால் எவ்வளவு அடிக்கப்பட்டபோதிலும் இருந்த இடத்தை விட்டுச் சிறிதும் நகர்வதில்லை. இதுபோல், ஞானுஷ்டானங்களை யுடையவர்கள், தங்களுக்கு எத்தனை இடையூறுகள் நேர்ந்தாலும் அவற்றைச் சகித்துக்கொண்டு பொறுமையுடனிருக்கவேண்டும்.

335. மனம் பிரமத்தைப்பற்றி நிற்கும் வரையில் மனிதனுக்கு அபாயமில்லை யென்பது:

கப்பலிலுள்ள திசைகாட்டிக் கருவியானது உண்மையான வடக்குத் திக்கை நோக்கி யிருக்கும்வரையில், கப்பலானது வழி தவறி அபாயத்திற் குள்ளாகமாட்டாது. இதுபோல, மனிதனுடைய மனமானது (ஜீவிதமாகிற கப்பலின் திசையறி கருவியானது) எப்பொழுதும் சலனமின்றி பரப்பிரமத்தை நோக்கிக்கொண்டிருந்தால், ஜீவிதமாகிற கப்பல் எல்லா அபாயங்களினின்றும் தப்பித்துக்கொள்ளும்.

336. ஈசுவரனை அடைய விரும்புகிறவர்கள்
உண்மையை உணர்ந்த ஒருவன் சொல்லும்
மார்க்கத்தையே உறுதியாகப் பின்பற்ற
வேண்டுமேனல்:

கல்கத்தாவுக்குச் செல்வதற்குப் பல வழிகளுண்டு. சந்தேகப்பட்ட மனதையுடைய ஒருவன், தூரத்திலேயுள்ள கிராமத்திலிருந்து கல்கத்தாவுக்குப் போகப்புறப்பட்டு ஒரு மார்க்கத்தைப் பற்றிப் போய் வழியிலெதிர்ப்பட்ட ஒருவனிடத்திலே "எந்த வழியாகச் சென்றால் கல்கத்தாவுக்குச் சீக்கிரம் போய்ச் சேரலாம்?" என்று கேட்பான். அவன் ஒரு வழியைக் காட்டி, "இந்த மார்க்கமாகப் போ" என்பான். சந்தேகி அவ்வழியே திரும்பிச் சிறிதுதூரம் சென்றபின், மற்றொருவனை எதிரே பார்த்தால், அவனிடத்தில், "கல்கத்தாவுக்குச் சரியான வழி இதுதானே?" என்று கேட்பான். அவன், "இல்லை, இல்லை; நீ வந்தவழியே திரும்பிச் சென்று உனக்கு இடது பக்கத்திலுள்ள பாதையில் நட" என்பான். சந்தேகி அப்படியே நடந்து மூன்றாவது எதிர்ப்பட்ட ஒருவனிடம், "கல்கத்தாவுக்கு நேரான வழி எது?" என்பான். அவன் வேறொரு வழியைக் காட்டுவான். இப்படியே சந்தேகி, கண்ட கண்டவர்கள் சொல்லும் வழிகளிலெல்லாம் புகுந்து அலைந்து நாளைக் கழிப்பான். கல்கத்தாவுக்குப் போய்ச் சேரவேமாட்டான். சந்தேக மனமில்லாத விவேகி, யோக்கியன் ஒருவனால் காண்பிக்கப்பட்ட ஒரு வழியை உறுதியாகப் பற்றி எளிதில் கல்கத்தாவுக்குப்போய்ச் சேருவான். இதுபோல, ஈசுவரனை யடைய விரும்புகிறவர்கள்,

உறுதியாக, உண்மை யறிந்த ஒருவர் சொல்வதையே பின் பற்றவேண்டும்.

337. பிரமத்தை அடையும்வரையில் சிறிது சிறிதாக அதற்குரிய பல முயற்சிகளையும் செய்ய வேண்டுமேனல்:

சமுத்திரத்தில் நீந்த விரும்புகிறவன், சிறு பள்ளங்களி லும், குளங்களிலும் பல நாட்கள் நீந்திப் பழகவேண்டும்; இவ்வாறு நீந்தி நல்ல பழக்க முண்டான பிறகு சமுத்தி ரத்தில் நீந்தவேண்டும். இதுபோலவே, பிரமசாகரத்தில் நீந்த விரும்புகிறவன் முதலில் அதற்குரிய சிறிய முயற்சி களை யெல்லாம் பலநாளும் செய்து, அதில் நீந்தும் பழக் கத்தைப் பூரணமாக அடைடவேண்டும். அதன்பின்புதான், அந்த பிரமசாகரத்தில் நீந்த முடியும்.

338. சிதறிய மனத்தை ஒன்றுசேர்ப்பது கடினமேனல்:

காகிதத்தில் வைத்துச் சுருட்டிக் கட்டப்பட்டிருக்கும் கடுகுகள், அக் கட்டவிழ்ந்து நாலா பக்கங்களி லும் சிதறி விட்டால் அவற்றை ஒன்று சேர்ப்பது மிகவும் கஷ்டம். இதுபோல, மனிதனுடைய மனமானது உலக விஷயங்க ளில் பிரவேசித்து நாலா பக்கங்களிலும் ஓடி அலையத் தலைப்பட்டுவிட்டால் அதைச் சேர்த்துப் பிடித்து ஏகாக் கிரப்படுத்துவது மிகவும் கஷ்டம்.

339. உண்மைப் பக்தன் எப்பொழுதும் உற்சாகத்தை இழக்கமாட்டா னென்பது:

பரம்பரையாகப் பயிர்த்தொழில் செய்யும் குடியான வன், பன்னிரண்டு வருஷங்கள் மழை பெய்யாதிருந்தாலும்

தன் உழுதொழிலே விடவேமாட்டான். நூதனமாகப் பயிர்த் தொழில் செய்யப் புகுந்தவன், நன்றாக மழை பெய்து கொண்டிருக்கும்போதே ஒரு சமயத்தில் பெய்யத் தவறி விட்டாலும் தளர்ச்சியடைந்து உழுந்தொழிலே ஒழித்தே விடுவான். இதுபோல், உண்மைப் பக்தன், வாழ்நாள் முழுதும் முயற்சி செய்து ஈசுவரனை அடையத் தவறிவிட்டாலும் அம் முயற்சியில் தளர்ச்சியடையமாட்டான்; மேலும், ஈசுவரனை யடைவதற்கே முயற்சி செய்வான். மற்றவனை சொற்ப இடையூறு வந்தாலும் ஊக்கங் குன்றிவிடுவான்.

340. பரிபூரண பக்தியுள்ளவன் நிச்சயமாக ஈசுவரனை அடைய முடியுமெனல்:

புருஷனிடத்திலே பரிபூரண விசுவாசமுள்ள பதிவிரதா ஸ்திரீயானவள், அவனுடனே என்றும் (மரணத்தின்பின்கூட) ஒன்றுகூடி யிருப்பதுபோல, இஷ்ட தேவதையினிடத்திலே உறுதியான பக்தி வைத்திருப்பவன், நிச்சயமாக ஈசுவரனுடன் ஐக்கியத்தை அடைவான்.

341. ஜபதபங்கள் இன்னகாலத்தில் அவசியமென்பதும், இன்னகாலத்தில் அவசியமில்லை யென்பதும்:

"பித்தளைப் பாத்திரமானது, தினந்தோறும் தேய்த்துச் சுத்தி செய்யப்படாவிட்டால் துருப்பிடித்துவிடும்; இதுபோல, ஒருவன் ஈசுவரனைத் தினந்தோறும் தியானிக்காவிட்டால் அவனுடைய இருதயம் அழுக்கடைந்துவிடும்" என்று தோதாப்பூரி சொல்வது வழக்கம். இதற்கு ஸ்ரீ

ராமகிருஷ்ணர், ஒரு சமயத்தில் அவரை நோக்கி, "பாத் திரமானது பொன்னு லாக்கப்பெற்றதா யிருந்தால் இனந் தோறும் அதைக் சுத்தி செய்யவேண்டிய அவசியமில்லை. இதுபோல, சுகவரை யடைந்தவனுக்கு ஜபதபங்களின் உதவி அவசியமில்லை" என்றார். ஆதலின், சாதாரண மனி தன் மன சுத்தியின்பொருட்டு ஜபதபங்களை அனுஷ்டிக்க வேண்டும். சுகவரை யடைந்தவன் அவற்றை அனுஷ்டிக்க வேண்டியதில்லை.

342. அன்பும், பக்தியும் எப்பொழுதும் நன்மையாகவே யிருக்குமென்பது:

நீ ஜீவிக்கிறவரையில் அன்பினுடைய இரகசியங்களை யும், பக்தியினுடைய இரகசியங்களையும் இனந்தோறும் அறிந்துகொள். அவ்வாறு அறிந்துகொள்வது எப்பொழு தும் உனக்கு நன்மையாகவே யிருக்கும்.

343. சமாதானம் நிலைத்திராததற்குக் காரணம்:

சில சமயங்களில்மாத்திரம் நமது ஹிருதயத்தில் சமர தானம் உண்டாகிறது; ஆனால், அது நெடுநேரம்வரை நிலைத்திருப்பதில்லை. எனென்றால், மூங்கில் நெருப்பானது அடிக்கடி ஊதிக்கொண்டிராவிட்டால் அணைந்துவிடும். இது போல, ஹிருதயத்தி லுண்டாகும் சமாதானம் என்னும் ஞானக்கனியானது நிலைபெற்று எரிந்துகொண்டிருக்க வேண்டுமானால் இடைவிடாது பக்தியை அனுஷ்டிக்க வேண்டும். அங்ஙனம் செய்யாதகனாலேயே அது நிலைத்து நிற்காமல் போகிறது.

344. மனத்தைக் கட்டாயத்தின்மீதுதான் ஒரு வழியில் நிலைநிறுத்தவேண்டு மென்பது:

நீகிரோவனுடைய சோமம் மிகவும் சுருண்டது. அதை நேரே நிறுத்தவேண்டுமானால் நமக்கு இஷ்டமான நோம் வரையிலும் இழுத்துப் பிடித்துக்கொண் டிருக்கவேண்டும்; அதை விட்டுவிட்டால் அது மறுபடியும் சுருண்டுகொள்ளும். இதுபோல, மனத்தை நோன வழியில் உறுதியாக நிறுத்த வேண்டுமானால், அதைக் கட்டாயத்தின்பேரில்தான் நிறுத்தவேண்டும். அவ்வாறு நிறுத்தி யிருக்கும்வரையில் அது கற்பனையுடைய வேலைகளைச் செய்யும்; கொஞ்சம் அதைக் கவனியாமல் அஜாக்கிரதையாக இருந்துவிட்டாலும் அது நியாய மார்க்கத்தினின்றும் தவறிவிடும்.

345. பக்தியை இடைவிடாது வைத்திருத்தலே சிறப்புடைத்தா மென்பது:

ஒரு மட்பாண்டத்திலே தண்ணீரை நிரப்பி அதை ஒரு மேடையின்மீது தனியாக வைத்துவிட்டால் சில தினங்களுக்குள்ளாகவே அதிலுள்ள ஜலமெல்லாம் வற்றிப் பாண்டமெறும் பாண்டமாய்விடும். ஆனால், அப்பாண்டத்தைத் தண்ணீருக் குள்ளேயே அமிழ்ந்திருக்கும்படி வைத்துவிட்டால், அஃதங்கே உள்ளவரையில் அதில் தண்ணீர் வற்றாது நிரம்பியேயிருக்கும். இதுபோல, ஒருவன் ஒருசமயத்தில் ஈசுவர பக்தியினுலே தன் ஹிருதயத்தை நிரப்பிவைத்துக் கொண்டு, பின்னர் இதர விஷயங்களிலே பிரவேசித்தால் (அதாவது: ஈசுவரனை மறந்துவிட்டால்) சிறிதுகாலத்திற் குள்ளேயே அந்தப் பக்தியெல்லாம் நீங்கி ஹிருதயம் வெ

நம் ஹிருதயமாய்விடும். ஆகல், அவன், எப்பொழுதும் தனது ஆனந்தம் நிறைந்த ஹிருதயத்தைப் பரிசுத்தமான சுவர பக்தியிலும், விசுவாசத்திலும் அமிழ்த்தி வைத்துக் கொண்டே யிருந்தால், அது, பரிசுத்த பக்தியாகிற திவ்ய ஆவேசத்தினலே எப்பொழுதும் நிரம்பித் ததும்பிக்கொண் டே யிருக்கும்.

346. கஷ்டத்தின்பேரில்தான் ஞான முண்டாக வேண்டு மென்பது.

ஆழ்ந்த சமுத்திரத்தி னடியிலிருக்கும் முத்துக்களை யெடுக்க வேண்டுமானல், மனிதன் எத்தனையோ ஆபத்துக் களை அடையவேண்டும். கடலில் மனிதன் ஒரு முறை மூழ்கி யெழுந்து முத்துக்கள் அகப்படாவிட்டால் பின்னும் பன்முறை கஷ்டப்பட்டு மூழ்கி மூழ்கி யெழவேண்டும். இவ்வாறு செய்துகொண்டே வந்தால் முடிவில் ஒரு சமயம் முத்து அகப்படும். கடலில் ஒரு முறை மூழ்கி யெழுந்த தில் முத்துக்கள் கிடைக்காவிட்டால் அதனுலேயே கடலுக் குள் முத்துக்கள் இல்லையென்று எவரும் கருதிவிடமாட் டார்கள். இதுபோல, ஞானமானது இவரென்று உண்டாய் விடமாட்டாது. பன்முறை கஷ்டப்பட்டுத்தான் உண்டாக வேண்டும்.

20-வது அத்தியாயம்
ஞானவாழ்க்கைக்கு இடையூறுகள்

347. இன்னவிடத்தில் ஈசுவரன் பிரசன்னமாகாரெனல்;

விரோதமும், பயமும், கோழைத்தனமும் குடிகொண் டிருக்கிற மனத்திலே ஈசுவரன் எழுந்தருளமாட்டார்.

348. மனம் இப்படி யிருந்தால்தான் ஈசுவர தரிசன மாகுமேனல்:

மனம் எத்தன்மையான ஸ்திதியிலிருந்தால் ஈசுவர தரிசன முண்டாகுமெனில், அது, பரிபூரணமாய் அமைதி யடைகிறபொழுதே அந்த ஈசுவரன் தரிசிக்கப்படுகிறார். மனமாகிற கடலானது ஆசையென்னும் காற்றினாலே அலைக் கப்படுகிறபொழுது அதிலே ஈசுவரன் பிரதிபலிக்கமாட் டார்.

349. மனம் தீய வாசனைகளில் இருக்கும்போது அடையும் நிலைமை:

மனமானது தீய வாசனைகளின் மத்தியில் வசிக்கும் போது, பறையர்களுடைய குடிசையிலே வசிக்கும் ஒரு பிராஹ்மணனைப் போலவும், ஒரு பெரிய நகரத்தில் மிக வும் தாழ்ந்த விலைமாதர் வீதியில் வசிக்கும் ஒரு பிரபுவைப் போலவும் இருக்கும்.

350. மனிதன் எப்படி நினைக்கிறானே அப்படியே ஆய்விடுவோ னென்பது:

"நான் மண்ணிற் புரளுகின்ற பூப்புழுப்போன் றிருக் கின்றேன்" என்று அநேகர் மிகவும் தாழ்மையாகத் தங்க ளைத் தாழ்த்திக் கூறிக்கொண்டு எப்பொழுதும் அவ்வாறே தாழ்மையாக நடந்து வருகின்றார்கள். இவ்வாறு நடப்பதி னால் அவர்கள் எப்பொழுதும் அந்தப் புழுவைப்போன்று தாழ்ந்தவர்களாகவே ஆகிவிடுகிறார்கள். மனிதன் எப்படி

நினைக்கிறானே அப்படியே ஆய்விடுவான். ஆதலின், எப் பொழுதும் மனிதனுடைய உள்ளத்தில் ஏக்கமானது நுழை யக் கூடாது. அது மனிதனது அபிவிருத்திக்குப் பெரிய சத்துருவாகும்.

351. ஆசையுள்ள வரையில் மோக்ஷம் சித்திக்கா தென்பது:

ஒரு நூலின் நுனியிலே ஓர் இழை பிரிந்திருந்தாலும் அது ஊசித் துவாரத்தினுள்ளே நுழைதல் முடியாது; அது போல, மனிதனிடத்திலே சிறிதேனும் ஆசையிருந்தால் அவன் மோக்ஷ பூமியிலே பிரவேசித்தல் முடியாது.

352. ஒருவனுக்கு ஆசை யில்லாவிட்டாலும் அவனுடைய மனமானது உலகப் பொருள்களைக் கண்டால் அவற்றிலே சிறிது செல்லுமென்பது:

அஜீரண வியாதியினாலே ஒருவன் துன்புற்று ஆகாரத் தை விரும்பாதிருந்தாலும் கல்ல மிட்டாய் வர்க்கங்களையும், உருசியான அன்னபதார்த்த வகைகளையும் கண்டால் அவ னுடைய நாவிலே நீர் ஊறும். அதுபோல, ஒருவனுக்கு உலகப் பொருள்களிலே அணுவளவும் ஆசை யில்லாவிட் டாலும், பணத்தையும், மனத்தை உலக விஷயங்களிலே செல்லும்படி தூண்டிவிடத்தக்க மற்றப் பொருள்களையும் அவன் பார்த்தால் அவனுடைய மனமானது சிறிது அவ ற்றை நாடும்.

353. பிறரை நிந்திப்பதிலோ புகழ்வதிலோ காலத்தை வீணைகக் கழிக்கலாகா தென்பது:

பிறருடைய நற்குணங்களையும் தீக்குணங்களையும்பற்றி நிந்திப்பதிலோ புகழ்வதிலோ தர்க்கஞ் செய்வதில் காலத்தைக் கழிப்பவன், தனது காலத்தை வீணே செலவழிக்கின்றவனுவான். ஏனெனில், அந்தக் காலமானது, தன்னைப் பற்றியாவது, பரமாத்மாவைப்பற்றியாவது நிந்திப்பதிலே செலவழிக்கப்படுகிறதில்லை; பயனின்றிப் பிறரைப்பற்றிச் நிந்திப்பதிலேயே செலவழிக்கப்படுகின்றது.

354. ஜீவன், பேரின்பத்தை இழந்துவிடுகின்ற விதம்:

நெல் நிறைத்திருக்கும் பெரிய களஞ்சியங்களின் வாசல்களிலே எலிகள் உள்ளே நுழையாமல் அவற்றைப் பிடிப்பதற்காகப் பொறிகள் வைக்கப்படுகின்றன; அவற்றில் எலிகள் வந்து சிக்கிக்கொள்ளும்படி சோறு முதலிய ஆகாரங்கள் வைக்கப்படுகின்றன. அவற்றின் வாசனையிலே எலிகள் அவற்றைத் தின்ன விருப்புக்கொண்டு சென்று அந்தப் பொறிகளிலே சிக்கி உயிரிழக்கின்றன. இப்படியே, உலகத்தில் மிகவும் சிறந்த, இலட்சக் கணக்கான சுகங்கள் ஒன்று சேர்ந்தால் எவ்வகை ஆனந்தம் ஏற்படுமோ அவ்வகை ஆனந்தமாகிய பேரின்பவீட்டின் வாசலிலே ஜீவன் இருந்தும் அதனை அனுபவிக்காமல், அதற்கிடையூறாக விருக்கும் உலக சிற்றின்பங்களிலே மயக்குண்டு, மாயையாகிற பொறியிலே சிக்கி அதிலேயே மரித்துவிடுகின்றது.

21-வது அத்தியாயம்
பெண்ணாசையும், பொன்னாசையும்

355. ஈசுவரனிடத்தே சேர விருப்பமுள்ளவர்கள் பெண் விருப்பையும், தன விருப்பையும் ஒழிக்கவேண்டுமேனல்:

பக்தியில் அபிவிருத்தி யடைந்து ஈசுவரனிடத்திற் போய்ச் சேர்வதற்குச் சிறிதேனும் விருப்பமுடையவர்கள், முக்கியமாகப் பெண்ணாசையும் பொன்னாசையுமாகிய வலைகளிற் சிக்கிக்கொள்ளாமல் தங்களைத் தாங்களே இரட்சித்துக்கொள்ளவேண்டும். இல்லையேல் அவர்கள் ஒருபோதும் பரிபூரணத்துவத்தை அடைதல் முடியாது.

356. உலகத்தில் வசிக்கும் மனிதர், பெண் பொன் ஆசைகளில் அகப்படாமல் ஜாக்கிரதையாயிருக்கும் விதம்:

விஷப்பாம்புகள் நிறைந்த வீட்டிலே குடியிருக்கும் மனிதர்கள் எப்பொழுதும் ஜாக்கிரதையாயிருந்து வருவதுபோல, ஸ்திரீகளும் தனமும் நிறைந்த உலகத்திலே வசிக்கும் மனிதர்கள் பெண்ணாசையும், பொன்னாசையுமாகிய மயக்கங்களிலே அகப்பட்டுக்கொள்ளாமல் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

357. ஞானுப்பியாசியினிடத்தில் சிறிது மாசிருந்தாலும் அவன் முயற்சிகள் பாழ்படுமென்பது:

தண்ணீர் நிறைந்த ஒரு பாத்தியினடியிலே ஒரு சிறிய துவாரமிருந்தாலும் அதன் வழியாகத் தண்ணீர் முழுவ

தும் போய்விடும். இதுபோல, ஞானப்பியாசியினிடத்தில் பெண் பொன்னாசைக ளென்கிற உலக அழுக்கு சிறிதிருந்தாலும் அவனுடைய முயற்சிகளெல்லாம் பயனின்றிப் போய்விடும்.

358. பெண், பொன் விருப்புள்ளவன் பக்திமார்க்கத்தினின்றும் தவறுவானென்பது நிச்சயமெனல்:

ஜ்வரம் அதிகரித்து ஜன்னி பிறந்து துன்பமுற்றுக் கொண்டிருக்கும் ஒரு மனிதனருகில், குளிர்ச்சியான தண்ணீர்க் குடங்களும், மிகவும் உருசியான குழம்பு, பதார்த்தம் ஆகியவை நிறைந்த பாத்திரங்களும் வைக்கப்பட்டிருந்தால், மிகுந்த தாகமுள்ள அந்த வியாதியஸ்தன், 'தண்ணீரைக் குடிக்கவேண்டும்' என்றும், 'அந்தக் குழம்பு பதார்த்தம் ஆகியவற்றை வாயிலிட்டு உருசி பார்க்கவேண்டும்' என்றும் எழுகின்ற அவாவைக் குட்படாமலிருக்க முடியாது. அதுபோலவே, பெண் மாயையாகிய தாபஜ்வரம் மிகுந்து, தனதானிய விருப்பாகிய ஜன்னி மேலிட்டிருக்கும் ஒருவன், ஸ்திரீ கூட்டங்களுக்கும், தன தானியம் முதலிய ஐசுவரியங்களுக்கு மிடையில் வைக்கப்பட்டால், ஸ்திரீ மயக்கத்தினும், பொருளாசையினும் உட்படாமலிருக்க முடியாது. அவன் பக்தி மார்க்கத்தினிருந்து தவறுவானென்பது நிச்சயம்.

359. பெண்ணாசையும், பொன்னாசையும் நீங்காத வரையில் ஈசுவரனைத் தரிசிக்க முடியாதெனல்:

[illegible]கமுழுவதையும் பாவத்தில் மூழ்கச் செய்திருப்பவை பெண்ணும், பொன்னுமே. ஸ்திரீயை ஜகன் மாதா

வாகக் கருதிவிட்டால் அப்பொழுது அவள் நிராயுதபாணி யாய் விடுகிறாள் (அதாவது: அவளால் உன்னைக் கெடுத்தல் முடியாது). பெண்ணிடத்தும், பொன்னிடத்துமுள்ள ஆசை யானது அழிக்கப்படாதவரையில் நீ ஈசுவரனைத் தரிசித்தல் முடியாது.

360. ஸ்திரீ சகவாசத்திலேலே நற்போதனைகள் மனதிற் பதியாவென்பது:

நித்தியானந்தர் ஒரு சமயத்தில் ஸ்ரீ சைதன்யரை நோக்கி, "நான் போதிக்கும் போதனைகளெல்லாம் மனித ருடைய மனத்திலே பிரத்தியக்ஷமான பயன்களை ஏன் உண்டாக்குகிறதில்லை" என்று வினவினார். அதற்கு, ஸ்ரீ சைதன்யர் மறுமொழி கூறியதாவது:—"அவர்கள் ஸ்திரீ களுடனே சகவாசம் செய்வதனாலே உயர்ந்த போதனைகளைப் பின்பற்ற முடிகிறதில்லை; உலகிலே மனம் அழுந்தி யிருப் பவர்க்கு மோக்ஷம் கிடையாது" என்பதே.

361. பெண் மயக்கைப்பற்றி ஒரு சிலேடைக் கேள்வி:

எல்லாவற்றையும் விழுங்கியிருப்பது மாயையா? அல் லது மேலே (ஸ்திரீ) யா?

362. உலக பந்தத்தை யுடையவர்கள் பெண்ணாசை, பொன்னாசை ஆகியவற்றை விடமுடியாதெனல்:

உலகத்திலே பந்தப்பட்டுள்ள ஜீவர்கள், பெண்ணும் பொன்னும் ஆயிரக்கணக்கான அவமானங்களை யுடைந் தாலும் அவற்றை விட்டு ஈசுவரனிடத்திலே சிங்கு உதறுனத் தைச் செலுத்துதல் முடியாது.

363. ஒருமுறை ஈசுவரனை யடைந்தவனிடத்தே பெண்ணைசை சேராதென்பது:

மிகுந்த வைராக்கியத்தினாலே ஒருவன், ஒருமுறை ஈசுவரனை அடைந்துவிட்டானானால், அப்பொழுது அவனுக்கு ஸ்திரீயினிடத்திலுள்ள அளவுக்கு மிஞ்சிய பற்றுதல் நீங்கிவிடும். பின்னர் அவனுக்கு அவனுடைய சொந்த மனைவியினிடத்திலிருந்துகூட அபாயம் ஏற்படமாட்டாது. ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வான சக்தியையுடைய இரண்டு காந்தங்கள் ஓர் இரும்புக்குச் சமமான தூரத்திலே வைக்கப்பட்டால், அவற்றுள் மிகுந்த சக்தியுடையதுதான் அவ்விரும்பை விரைந்து இழுத்துக்கொள்ளும். இதுபோல, ஈசுவரன் அதிக சக்தியுடையவர்; ஸ்திரீ மாய்கை குறைந்த சக்தியுடையது. ஆதலின், ஈசுவரன் தம்மிடத்தே சமீபத்தவனை ஸ்திரீ சக்தியால் இழுக்க விடமாட்டார்; தம் சக்தியால் தம்மிடத்தே விரைந்து இழுத்துக்கொள்ளுவார்.

364. ஸ்திரீ சகவாசத்தால் சிற்றின்ப நினைப்புச் சிறிதாவது உண்டாகாமலிராதெனல்:

புகை நிறைந்த ஓர் அறைக்குள், ஒரு மனிதன் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் அவன் சரீரத்தில் சிறிதாவது புகைபடிந்து கறுப்புநிறத்தை உண்டாக்காமலிராது. இதுபோல, ஒருவன், எவ்வளவு சாமர்த்தியத்தோடும், ஜாக்கிரதையுடனும் இருந்தாலும், அவன் ஸ்திரீகளுடன் சகவாசம் செய்துகொண்டிருப்பானானால், கொஞ்சமாவது சிற்றின்ப நினைப்பானது அவன் மனத்தில் உண்டாகாமலிராது.

365. பணத்தை லட்சியம் பண்ணக் கூடாதேனல்:

பணமானது, ரொட்டியும் வெண்ணெயும் போன்ற வஸ்துக்களைத்தான் தேடிக்கொடுக்கும்; நிலைத்த இன்ப வஸ்துக்களைத் தேடிக் கொடுக்கமாட்டாது. ஆதலால், அதையே நமக்கு லட்சியமாகக் கருதக் கூடாது.

366. உலகத்தில் பெண்ணுசையும் பொன்னுசையும் மனிதர்களை வசப்படுத்திக்கொண்டிருக்கின்றன வென்பது:

பெண்ணுசையும், பொன்னுசையும் மனிதர்களை உலக மயக்கத்திலே அழுத்தி ஈசுவரனுக்கு வெகு தூரத்திலே வைத்துக்கொண்டிருக்கின்றன. இதனாலே மனிதரில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மனைவியர் நல்லவர்களாயிருந்தாலும் கெட்டவர்களாயிருந்தாலும் அவர்களை ஸ்தோத்திரம் செய்கிறார்கள்.

367. ஆத்மா, பெண்ணிடத்தும் பொன்னிடத்தும் பற்றுள்ளபோதிருக்கும் நிலைமையும், பற்றில்லாதபோதிருக்கும் நிலைமையும்:

பெண்ணுசையினும், பொன்னுசையினும், மனமானது அழுந்தியிருக்கும்போது ஆத்மா தேனுடனே ஒட்டிக் கொண்டிருக்கும் பச்சைப் பாக்கைப்போன் றிருக்கிறது; அவற்றில் அழுந்தாதிருக்கும்போது தேனுடனே ஒட்டாமல் உள்ளே வேறாயிருக்கும் உலர்ந்த பாக்கைப் போன்றிருக்கின்றது.

368. மனமானது பெண்ணுசையாலும், பொன்னுசை யாலும் சமநிலையை விட்டுத் தவறுமென்பது:

தராசுத் தட்டுக்கள் இரண்டிலும் சமமான பொருள் கள் இருக்கும்போது தராசின் முள்ளானது நடுவில் நேரே சாயாமலிருக்கும்; ஒரு தட்டில் அதிக கனமான பொருள் சேர்ந்தால் உடனே தராசின்முள் ஒருபக்கம் சாய்ந்துவிடும்; இதுபோலவே, மனமானது களங்கமற்ற நிலையிலிருக்கும் வரையில் சமநிலையைவிட்டுச் சாயாது; அதில் பெண்ணுசை யும், பொன்னுசையுமாகிய கனம் சேரும் பக்ஷத்தில் உட னே அது சமநிலையைவிட்டுத் தவறி ஈசுவரனிடத்திலிரு ந்து விலகிச் சென்றுவிடும்.

369. ஸ்திரீகளிடத்தில் நம்பிக்கை வைக்கலாகாது எனல்:

கிருகஸ்தர்களே! ஸ்திரீயினிடத்திலே அளவுக்கு மிஞ் சிய நம்பிக்கை வைக்காமல் ஜாக்கிரதையா யிருங்கள்; அவர் கள் கபடமாக உங்களிடத்திலே, தங்கள் அதிகாரத்தை ஸ்திரப்படுத்தி விடுகிறார்கள்.

370. மனிதன், தனது ஜீவிதத்தை ஸ்திரீயினிடத்திலே தியாகஞ் செய்துவிடுகிறானெனல்:

குரங்கானது, தனது ஜீவித முழுவதையும், குரங் காட்டியினுடைய காலடியிலேயே தியாகம் செய்துவிடு வதுபோல, மனிதனும் தன்னுடைய ஜீவிப்பை அழகிய ஸ்திரீயினுடைய காலடியிலேயே தியாகஞ் செய்துவிடு கிறான்.

371. பெண்ணையும் பொன்னையும்பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு சமயம் கூறிய மொழிகள்:

ஒரு தினம், பெரிய வியாபாரி யொருவன், ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்து, அவருக்கு நேரிடக்கூடிய செலவுகளுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளுமாறு, அதிகப்பணம் தருவதாகவும், அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், நல்ல எண்ணத்துடன் வேண்டினன். அவன் அவ்வாறு நல்ல மனதுடன் வேண்டியும் ஸ்ரீ ராமகிருஷ்ணர், அவ்வார்த்தைகளுக்கு மறுமொழியாக அவனை நோக்கி, "அன்பனே! உன்னுடைய பணம் எனக்கு வேண்டாம்; ஏனெனில், நான் அதை ஏற்றுக்கொண்டால் எப்பொழுதும் என் மனமானது அதனிடத்திலேயே சென்றுகொண்டிருக்கும்" என்றார்.

அதன்மேல் அந்த வியாபாரி, ஸ்ரீ ராமகிருஷ்ணரை நோக்கி "அப்படியானால் நான் அந்தப்பணத்தைத் தங்களுடைய பந்துக்களில் ஒருவரிடம் கொடுத்துவைத்து அதன்மூலம் தங்கள் செலவு நடக்கும்படி செய்கிறேன்" என்றான். அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர், "அதுவும் கூடாது; அது முந்தியதைக் காட்டிலும் மிக மோசமான காரியம்; அதனால், 'இன்னாரிடத்தில் நம்முடைய பணம் இருக்கிறது' என்ற எண்ணம் எப்பொழுதும் என் மனத்தில் இருந்துகொண்டே யிருக்கும்" என்றார்.

பின்னரும் அந்த வியாபாரி, ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்தில், "மனம், பணத்தில் பற்றிலைதானே தவறுண்டாகும்; மனமானது எண்ணைப்போன்றிருந்தால் அது பெண்ணை

சையும் பொன்னாசையுமாகிய நீரின்மீது ஒட்டாமல் மிதந்து கொண்டிருக்கும்; உங்கள் மனமோ பற்றற்றது; ஆகவின், இதனை ஏற்றுக்கொள்ளலாம்; அவ்வாறு ஏற்றுக்கொண்டாலும் தங்கள் மனம் அப்பணத்தினிடம் செல்லாது'' என்று அவருடைய உபதேச மொழிகளிலேயே ஒன்றுகிய மேற்கூறிய வார்த்தையை எடுத்துச் சொல்லித் தான் கொடுக்கும் பணத்தை ''ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்'' என்று ஒரே பிடிவாதமாகக் கூறினன். அதற்கும் ஸ்ரீ ராமகிருஷ்ணர், ''நீ சொல்வது உண்மைதான்; ஆயினும், எண்ணெயானது, நெடுநேரம் வரை தண்ணீரில் மிதந்தால், சேர்க்கைக் கிடமாகிற மேல்மட்டம் நாற்ற மெடுத்துவிடுகிறது. அதுபோலவே, மனமும், பெண்ணாசையும் பொன்னாசையுமாகிய நீரின்மேல் மிதந்துகொண்டிருந்தால், நெடுங்காலச் சேர்க்கையால் அது நிச்சயமாகக் கெட்டு நாற்ற மெடுத்துவிடும்; ஆகையால், இது கூடாது'' என்றார்.

372. துறவைப்பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறிய ஓர் திவ்ய மொழி:

ஒரு தினம், பிரபுவாகிய ஒரு மார்வாடி ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்து, ''சுவாமி! நான் எல்லாவற்றையும் துறந்துவிட்டேன்; ஆயினும், ஈசுவரனைத் தரிசிக்க முடியவில்லையே; இதற்குக் காரணமென்ன?'' என்று வினவினன். அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர், அவனை நோக்கி, ''உன் மனமானது தோலினால் செய்யப்பட்ட எண்ணெய்க்குடம் போன்றது: தோற்குடத்திலுள்ள எண்ணெயையெல்லாம் ஊற்றிவிட்டா

னும் அதைச் சுற்றிலும் ஓசங்களிலெல்லாம் சிறிது எண்ணெயாவது ஒட்டிக்கொண்டிருக்கும்; எண்ணெய் வாசனையும் கடைசி வரையில் அதில் இருந்துகொண்டேயிருக்கும். அதுபோலவே, உன்னுடைய மனமும் இன்னும் சரியான பக்குவத்தை யடையாமல் அந்த எண்ணெய்க் குடம்போன்றிருப்பதால் அதில் உலகவாசனையிருக்கிறது'' என்றார்.

373. பெத்தாத்மாக்கள் முத்தியடைகிற விதம்:

மனமானது, இந்திரிய விஷயங்களினின்றும் நீங்கிவிட்டால் அது ஈசுவரனிடத்தே சென்று அவர்மீதே நிலை நிறுத்தப்படுகிறது. பெத்தாத்மாக்கள் இவ்விதமாகவே முத்தியடைகிறார்கள்.

374. ஒரு சிஷ்யன் 'ஆசை நீங்கவில்லை' என்று கேட்ட கேள்விக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறிய விடை:

ஒரு சிஷ்யன், பக்தி நிஷ்டையிலேயே தனது வாழ்நாளைக் கழித்துக்கொண்டிருந்தான். ஆனால், பழய வாசனையால் பெண்விருப்புமுதலிய நினைப்புக்கள் அவனுடைய மனதிலே அடிக்கடி கிளம்பிக்கொண்டிருந்தன. அதனால் அவன் ஒருசமயம் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்து, ''சுவாமி! எனக்கின்னும் உலக ஆசை ஒழியவில்லை; இதை ஜெயிப்பதெப்படி?'' என்று வினவினான். அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர், அவனை நோக்கி, ''ஒருவன் ஒரு நாயைச் செல்வமாக வளர்த்துவந்தான்; அவன் அதைத் தன்னுடைய கைகளாலே தூக்கிக் கொஞ்சி அதன் முகத்தில் முத்தமிட்டு

விளையாடுவது வழக்கம். அப்படி யிருக்கும்போது அறி வுள்ள ஒருவன் அவனுடைய மூடத்தனத்தைப் பார்த்து "நாய்க்கு இவ்வளவு இடங் கொடுக்கக்கூடாது" என்று கூறி னான். அது, நாயை வளர்த்தவனுக்கு நியாயமாகத் தெரிந் தது. அதனால் அவன் நன்றாக யோசித்துப் பார்த்து, 'இது புத்தியற்றதும் அருவருப்புள்ளதுமான மிருகந்தானே; என்றைக்காவது இதை நாம் கொஞ்சிக்கொண் டிருக்கும் போது இது நம்மைக் கடித்துவிடவும் கூடும்; ஆதலால், இந்த மதியற்ற செய்கையை விட்டுவிடவேண்டும்' என்று தீர்மானித்து, மடியிலிருந்த நாயைத் தூக்கிக் கீழே யெறி ந்துவிட்டு, 'இனிமேல் இதனோடு விளையாடுவதில்லை' என்று உறுதி செய்துகொண்டான். ஆனால், நாயானது தன் னுடைய எஜமானன் புத்தி மாறுபட்டிருப்பதை நன்றாய்த் தெரிந்துகொள்ளவில்லை; அதனால் அது மறுபடியும் அவன் தன்னை யெடுத்து விளையாட வேண்டுமென்ற நோக்கத் துடன் அடிக்கடி அவனிடம் ஓடிற்று. அவ்வாறு போகும் பொழுதெல்லாம் எஜமானன் அதனை அடித்தான். அதன் மேல் நாயானது, எஜமானன், தன்மீதிருந்த விருப்பத்தை ஒழித்துவிட்டா னென்பதை உணர்ந்து அவனிடம் செல்வ தை நிறுத்திவிட்டது. இதுபோலவே, உன்னுடைய தன் மையும் ஆகும். நீ உலக ஆசையாகிய நாயைப் பல தினங்க ளாக உன் மார்பில் வைத்து விளையாடிவந்தாய்; இப்பொ ழுது அதனை விட்டுவிட்டாய்; எனினும், அது உன்னை விடாமல் தொடருகிறது; ஆயினும், அதனால் தீமையில்லை. இனிமேல் அந்த நாயைச் சமீபத்தில் நெருங்கவிடாதே

அம்மை உன்னிடம் வரும்பொழுதெல்லாம் அதை அடித்துத் துரத்து; காளைவில் அம்மையைவிட்டு நீங்கிவிடும்" என்றார்.

375. சிற்றின்பத்தை நீக்குவதால் ஏற்படும் பயன்:

மோகஷ விருப்புடையவன், சிற்றின்ப உணர்ச்சியை அடியோடு அடக்கிவிட முயற்சி செய்யவேண்டும். இதிலே ஜெயமடைந்து விடுவானானால், மேதையென்னும் பெயரையுடைய ஒரு நாடி அபிவிருத்தியாவதனால் அவன் சரீரத்தில் ஒருவித மாறுதல் ஏற்படும்; இந்த மேதையின் தொழிலானது கீழான சக்திகளை ஞானசக்திகளாக மாற்றுதலாம். ஆத்மஞானமானது இந்த மேதை நாடி உண்டானவுடனே அடையப்படும்.

376. உலக ஆசையை ஒழிக்கும் உபாயமறிந்தவன் உலகத்திலிருந்தாலும் அவை அவனை ஒன்றுஞ் செய்யாவென்பது:

விஷ ஜந்துக்களாகிய சர்ப்பங்களைச் சாதாரண மனிதர்கள் பிடிக்கப்போனால் அவை, அவர்களைக் கடிப்பது நிச்சயம்; ஆனால், காந்தத் தூளை உபயோகித்து, சர்ப்பத்தை வசப்படுத்தும் தொழிலைத் தெரிந்த மனிதருக்கு அவற்றைப் பிடிப்பது மிகவும் எளிதான காரியமாம். அவர்கள் ஏழு சர்ப்பங்களைக்கூடப் பிடித்துத் தங்கள் கழுத்திலே சுற்றிக்கொண்டு விளையாட முடியும். இதுபோல, உலக ஆசையை ஒழிக்கும் உபாய மறியாதவர்கள் அதனிடத்தே நெருங்கினால் அதனால் கஷ்டப்படுவார்கள்; அதனை அடக்

கும் உபாய மறிந்தவர்கள் அதனோடு கலந்திருந்தாலும் அவற்று லேற்படும் துன்பத்திற் குள்ளாகார்.

377. தாராள மனதுடையவர் கையில் பணம் நில்லா தென்பது:

ஒரு பாலத்தினடியில் தண்ணீரானது எப்பொழுதும் தங்காமல் ஓடிவிடும். இதுபோலவே, பணமும், தாராள மனதுடையவர்கள் கையில் தங்காது. அவர்கள் எப்பொழுதும் பணத்தைச் சேர்த்து வைக்கமாட்டார்கள்.

378. பணத்தை நல்ல விதத்தில் உபயோகிக்க வேண்டுமென்பது:

எவன், பணத்தைத் தனக்குப் பணியாளனைக உபயோகிக்கிறானோ அவனே உண்மை மனிதன்; பணத்தை நல்ல வழியில் உபயோகிக்கவேண்டும். பணத்தை இன்னவிதமாகத்தான் உபயோகிக்க வேண்டும் என்பதை அறியாதவர்கள் மனித வகுப்பைச் சார்ந்தவராகார்.

379. வீண்பெருமை நிலைநில்லாதெனல்:

தங்களுடைய ஐசுவரியத்தையும், சக்தியையும், பெருமையையும், ஜனசமூகத்திலே தங்களுக்கேற்படும் உயர்ந்த அந்தஸ்தையும்பற்றிச் சிலர் புகழ்ந்துகொள்வது உண்டு. ஆனால், இவையெல்லாம் உலகத்தில் சில தினங்கள்வரைதான் நிற்கும். மரணத்துக்குப் பின் இவற்றுள் எதுவும் நிலைநிற்காது.

380. பணக் கர்வம் பயனற்ற தென்பது:

பணத்தினாலே மனிதர் கர்வ மடைவதற்கு ஒரு காரணமுமில்லை. மாலைக்கால மானவுடனே மின்மினிப் பூச்சிகள் தோன்றி, "நாமே உலகத்திற்குப் பிரகாசத்தைக் கொடுக்கின்றோம்" என்று நினைத்துக்கொள்கின்றன; ஆனால், நக்ஷத்திரங்கள் தோன்றியவுடனே அவை தாமே கர்வமொடுங்கி மறைந்து விடுகின்றன. பின்னர் நக்ஷத்திரங்கள், "நாமே உலகத்திற்கு வெளிச்சத்தைக் கொடுக்கின்றோம்" என்று கர்வ மடைகின்றன. எனினும், சிறிது நேரத்திற்குள் சந்திரன் தோன்றியவுடனே அந்நக்ஷத்திரங்கள் ஒளி மழுங்கிக் கர்வபங்க மடைகின்றன. அதன்மேல், சந்திரன், "நாமே உலகத்திற்குச் சோதியைத் தருகின்றோம்" என்று கர்வமடைகின்றது. ஆனால், சூரியன் உதயமாவதற்கு அறிகுறியாகக் கிழக்கு வெளுத்தவுடனேயே அச்சந்திரனும் ஒளி மழுங்கி இருந்தவிடந் தெரியாமற் போய்விடுகிறது. இவைபோலவே, ஒரு மனிதன், தன்னைப் பணக்காரனென்று நினைத்துக் கர்வமடைவானானால், தன்னிலும் மிஞ்சிய ஒரு பணக்காரனைக் காணும்போது அவன் முன்னிலையில் தான் பிச்சைக்காரனைப்போலாகிவிடுவான். இப்படியே ஒவ்வொருவரும் தங்களினும் மேற்பட்டவர்களைக் காணும்போது தாழ்ந்துவிடுவார்கள். ஆதலின், தங்களைத் தனவந்தர்களென்று நினைத்துக் கர்வமடைபவர்கள் இவ்விஷயங்களை நன்றாக ஆலோசனை செய்வார்களானால், தங்களுடைய ஐசுவரியத்தையும், அதிகாரத்தையும் பற்றி ஒருபொழுதும் பெருமையாகப் பேசமாட்டார்கள்.

381. பொன்னுசையும், பெண்ணுசையும் நீக்கப்பட்டு விட்டால் மனத்தில் எஞ்சி யிருப்பது இன்னதென்பது:

பொன்னினிடத்தும் பெண்ணினிடத்தும் உள்ள பற்று மனத்தினின்றும் நீக்கப்பட்டுவிட்டால் ஜீவனிடத்தில் எஞ்சி யிருப்பது பிரஹ்மாநந்தமேயாம்.

22-வது அத்தியாயம்

அகங்காரம்

---

382. அகங்கார முள்ளவரையில் இன்னின்னவை இராவெனல்:

ஒருவனுக்கு அகங்கார முள்ளவரையில் ஞானமும், முத்தியும் சாத்தியமாகா; ஜனன மரணமும் நீங்கா.

383. அகங்காரத்தினாலேயே ஈசுவரனைப் பார்க்க முடிகிறதில்லை யென்பது:

இருவர் நெருங்கி யிருக்கும்போது ஒரு மனிதன், வஸ்திரத்தைத் தனக்கு முன்னே விரித்துப் பிடித்துக்கொண்டால், அவன் முன்போலவே எதிரில் நின்றாலும் முன்னே நிற்பவன் அவனைப் பார்க்க முடியாது. இதுபோலவே, ஈசுவரன் ஒரு மனிதனுக்குச் சமீபத்தி லிருந்தாலும் அகங்காரமாகிய திரை நடுவே யிருந்தால் அவனால் அவரைப் பார்க்க முடியாது.

384. ஸ்ரீராமகிருஷ்ணர் அகங்காரத்தைப்பற்றிக் கூறிய மொழி:

ஒருசமயம் ஒருவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரை நோக்கி, "சுவாமி! நாம் ஏன் இவ்வளவு பெத்தர்களா யிருக்கிறோம்? சுசுவமே ஏன் பார்க்க முடிகிறதில்லை?" என்று கேட்டார். அதற்கு ஸ்ரீராமகிருஷ்ணர்: "ஜீவனுக்குமாயையாவது அகங்காரமே; அவ்வகங்காரமே ஞானத்தை மறைப்பது; 'நான்' என்பது நாச மடைந்தபொழுது துன்பமெல்லாம் நீங்கி விடும். 'நான் அகர்த்தா' என்றெண்ணும் நினைப்பு ஈசுவர கிருபையினாலே உறுதிப்பட்டுவிட்டால் மனிதன் இந்த ஜன்மத்திலேயே முக்தனாய்விடுவான். அதற்கப்பால் அவனுக்குப் பயமே கிடையாது" என்றார்.

385. ஞானிகளுக்கு அகங்கார மில்லையென்பதும், அஞ்ஞானிகளுக்கு அகங்கார முண்டென்பதும்:

கீர்த்தியை நாடுகிறவர்கள் ஒரு பெரிய பிரமைக்கு உட்பட்டவராவர். சர்வலோக சம்ரக்ஷகராகிய பரமாத்மாவினுல் உலகத்தில் ஒவ்வொன்றும் ஆக்ஞாபிக்கப்படுகின்ற தென்பதையும், பெருமை யாவும் அவருக்கே யென்பதையும், வேறே எவருக்கும் உரியனவல்ல வென்பதையும், அவர்கள் மறந்துவிடுகிறார்கள். ஞானிகள் எப்பொழுதும், 'ஈசுவரா! அது நீயே; அது நீயே' என்று கூறுவார்கள். மாயைக்கு உட்பட்டவர்களாகிய அஞ்ஞானிகளோ 'அது நான், அது நான்' என்று சொல்லிக்கொள்வார்கள்.

386. அபேத வஸ்து இன்ன காலத்திற்றான் அறியப்படு மென்பது:

"எனக்கது தெரியும், எனக்கது தெரியாது" என்று ஒருவன் சொல்லிக்கொள்கிறவரையில், அவன் தன்னை யொரு மனிதனுகவே கருதிக்கொள்கிறான். எனது ஞான மாதா, "உன்னிடத்திலேயுள்ள அகம் எல்லாவற்றையும் நீ அழித்துவிடும்பொழுதுதான் அபேதமான அகண்ட வஸ்து சமாதியநுபூதியில் உன்னுல் அறியப்படும்" என்று கூறுகிறாள். ஆதலின், அகங்காரத்தை ஒழித்தல் வேண்டும்.

387. அகங்காரத்தை ஒழிப்பது கஷ்டமெனல்:

பெருங்காயம் வைக்கப்பட்ட செப்பை நூறுதரம் தேய்த்துக் கழுவினலும் அதிலுள்ள வாசனை நீங்காது; அதுபோல, எவ்வளவு முயற்சி செய்தாலும் அகங்கார மானது அடியோடு ஒழிந்துபோவது கஷ்டம்.

388. மனிதன் இன்ன காலத்திற்றான் மோக்ஷ மடைவா னென்பது:

மனிதனுடைய அகங்காரம் எப்பொழுது மரித்து நாசமடைகிறதோ அப்பொழுதுதான் அவன் மோக்ஷ மடைவான்.

389. அகங்காரம் நீக்க நீக்க மறுபடியும் மறுபடியும் உண்டாகுமெனல்:

சமாதியடைந்து அகத்தை நீக்கக்கூடியவர்கள் உலகத்தில் சிலரே யுண்டு. சாதாரணமாக அது நீங்காது; ஆல

மாத்தை வெட்டிவிட்டால் அது மறுபடியும் சில தினங்களில் தளிர்த்துவிடும். அதுபோல, விவேகத்தினாலே ஒயாமல் விசாரணை செய்து அகங்காரத்தை ஒழித்தாலும் அது மறுபடியும் மறுபடியும் திரும்பிவந்துகொண்டேயிருக்கும்.

390. அகங்காரத்தை நீக்கும் விதம்:

கிழ்ப்பட்ட பிரகிருதியுடனே மனிதன் போராடி, சுறுசுறுப்புடன் ஆத்மஞானப் பயிற்சி செய்து சமாதி நிலையை அடைந்துவிட்டால், அப்பொழுது அகங்காரமானது தன் பரிவாரங்களுடனே மறைந்துவிடும். ஆனால், சமாதி யடைவது மிகவும் கஷ்டம். அகங்காரமோ மிகப் பிடிவாத மூள்ளது. அதனாலேதான் நாம் மறுபடியும் மறுபடியும் இவ்வுலகில் பிறக்கின்றோம்.

391. பக்குவமடைந்த அகங்காரம் இன்னதென்பது:

"நான் ஈசுவரனுக்கடிமை" என்று உண்டாகிற பக்தனுடைய வித்தியா அகங்காரமானது பக்குவமடைந்த அகங்காரமாம்.

392. துஷ்டத்தனமுள்ள அகங்காரம் இன்னதென்பது:

ஒருவன் தன் எதிரிகளைச் சுட்டி, "அவர்கள் என்னை அறியார்களோ! என்னிடத்தில் எவ்வளவோ பணம் இருக்கிறது; என்னைப்போன்ற தனவந்தர் இங்கெவர் இருக்கின்றனர்? எனக்கு மிஞ்சியவர் எவர்?" என்று கூறுகின்ற 'நான்' என்னும் அகங்காரமே துஷ்டத்தனமுள்ள அகங்காரமாம்.

393. அகங்காரம் இன்னதென்பது:

அஞ்ஞானத்திலே பிறந்து அஞ்ஞானத்திலே வளர்கின்ற தமோகுணத்தின் தன்மையே அகங்காரமாம்.

394. ஒருவன் முக்தனுதல் இன்னகாலத்திலென்பது:

ஒருவன், "நான் எப்பொழுதுமுக்தனுவேன்?" எனின், 'நான்' என்பது அவனிடமிருந்து மறைகின்ற பொழுதுதான் அவன் முக்தனுவான் என்க. 'நான்' என்பதும், 'எனது' என்பதும் அஞ்ஞானமாம். 'நீ' என்பதும், 'உனது' என்பதும் உண்மை ஞானமாம். உண்மைப் பக்தன் எப்பொழுதும் ஈசுவரனை நோக்கி, "ஈசுவரா! நீயே எல்லாவற்றிற்கும் கர்த்தா; நீதான் ஒவ்வொன்றையும் செய்கிறாய்; நான் உனக்கு ஓர் யந்திரம்போன் றிருக்கிறேன்; நீ என்னை எதைச் செய்யும்படி ஏவுகிறாயோ அதை நான் செய்கிறேன்; எல்லாம் உன்னுடைய பெருமையே; இங்குள்ள வீடும், குடும்பமும் உன்னுடையவையே; நீ ஆக்ஞாபிக்கிறபடி நடக்கத்தான் எனக்கு சக்தியுண்டு" என்று கூறி அகங்காரத்தை ஒழித்து முக்தனுவான்.

395. ஈசுவரனை நேரே கண்டறிபவனுலேயே மாயாசாகரத்தைக் கடக்க முடியுமெனல்:

மனிதன், ஈசுவர தரிசனம் கிடைப்பதற்கான பாக்கியத்தைச் செய்யாத வரையில் அவனிடம், "நானே கர்த்தா" என்ற பிரமை இருந்துகொண்டே யிருக்கும்; அம்மிருக்கும் வரையில், "நான் இந்த நல்லகாரியத்தைச் செய்தேன்"

"நான் இந்தக் கெட்ட காரியத்தைச் செய்தேன்" என்ற வித்தியாச எண்ணம் இருந்துகொண்டுதானிருக்கும். துவைதம், அல்லது வேற்றுமையைப் பற்றிய இவ்வெண்ணமே உலகம் நடைபெறுவதற்குக் காரணமாகிய மாயையாம்; நியாயமார்க்கத்திலே மனிதனை அழைத்துச் செல்லும் வித்யா மாயையினிடம் அவன் அடைக்கலமாகப் புகுந்தால் ஈசுவரனை யடைதல் கூடும். ஈசுவரனை நேரில் காண்பவனை மாயாசாகரத்தைக் கடப்பான். "ஈசுவரனே கர்த்தா; நான் அகர்த்தா" என்று எண்ணுகிறவனே அச் சரீரத்திலிருந்தாலும் உண்மையில் முக்தனுவான்.

396. அகங்கார மிருக்கும்வரையில் மோக்ஷம் சித்திக்காதென்பது:

ஒரு இளங்கன்றானது பிறந்தவுடனே, "நான் இருக்கிறேன், நான் இருக்கிறேன்" என்று பொருள்படும்படி, 'ஹும், ஹை' என்று கத்துகிறது. இவ் வகங்காரத்தின் பலனை அது எருதாகியபொழுது கலப்பையிலே கட்டப்பெற்றும், பெரும் பாரங்கள் நிறைந்த வண்டியிலே கட்டப்பெற்றும், அவைகளை இழுத்துக் கஷ்டப்படுகின்றது. பசுவானபோது எப்பொழுதுங் கட்டித் தறியிலேயே கட்டப்பட்டிருக்கிறது; சில சமயங்களில் நீசரால் கொன்றும் துன்னப்படுகிறது. இவ்வளவு தண்டனைகளை யடைந்தபோதிலும் அது தனது அகங்காரத்தை விடுகிறதில்லை. அதன் தோலைப் பறையாகச் செய்து பறையர் அடிக்கும்போதுங்கூட அது 'ஹும்' (நான்) என்ற சப்தத்தையே கொடுக்கின்றது. அதன்

குடல் நரம்புகள், பஞ்சடிக்கும் வில் நாராக ஆக்கப்படுகிற வரையில் அது தாழ்மையைக் கற்றுக்கொள்கிறதில்லை. அப்படி ஆக்கப்பட்டுப் பஞ்சடிக்கும்போதுதான், அது தன்னுடைய அகங்கார சப்தத்தை ஒழித்து, ''து, ஹை'' (நீ இருக்கிறாய்) என்று சப்தமிடுகிறது. இதுபோல், மனிதன், பல கஷ்டங்களை அனுபவிக்கும் வரையில் தன் அகங்காரத்தை விடமாட்டான். அகங்காரமானது மிகவும் துன்பகரமானது; அது அழிக்கப்படாதிருக்கும்வரையில் மோக்ஷம் கிடைக்காது. மனிதன், ''நான்'' என்பதை நீக்கி, ''நீ'' என்பதற்கு இடங் கொடுக்கவேண்டும். அவன், ஆத்மஞானத்தினாலே எழுப்பப்படுகிறவரையில் இஃது அடையப்படமாட்டாது.

397. அகங்காரம் போய்விட்டாலும் அஃதிருந்த அடையாளந் தெரியுமேனல்:

தாமரை யிதழ்கள், முதிர்ந்த பருவத்தில் உதிர்ந்து விடும். ஆனல் தாமரைக் கொட்டையில் அவை யிருந்த அடையாளங்கள் மாத்திரம் போகாமலிருக்கும். இதுபோலவே, மனிதனுடைய அகங்காரமானது நீங்கிவிட்டாலும் அஃதிருந்த அடையாளங்கள் மாத்திரமிருக்கும். ஆயினும், அவைகளால் தீமையுண்டாகாது. இந்த அடையாளங்களால் காணப்படும் எளிய அகங்காரத் தோற்றமானது தாசபாவனையில் லேற்படும் அகங்காரத் தோற்றமாம்.

398. தாசபாவனையா லுண்டாகும் அகங்காரத்தால் கெடுதி யில்லையெனல்:

"நான்" என்பதைச் சிறிது அடையாளங்கூட இல்லாமல் ஒழிக்க முடியாதென்று மனிதன் தெரிந்துகொண்டால், அதை, "தாசன் நான்", "நான் ஈசுவரனுக்குப் பணியாளன்", "நான் அவருடைய பக்தன்" என்பவற்றில் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். இதனால் பயப்படுவதற்குக் காரணமொன்றுமில்லை: இனிமையான மிட்டாய் முதலிய வைகள் அஜீரணத்தை யுண்டாக்கும்; கற்கண்டுக் கட்டி அப்படிச் செய்வதில்லை. கெட்ட அகங்காரம் மிட்டாய் வர்க்கத்துக்குச் சமமானது; ஈசுவர விஷயத்தில் கொள்ளும் அகங்காரமானது கற்கண்டுக் கட்டிக்குச் சமமானது. அடிமைத் தன்மையிலும், பக்தத் தன்மையிலும், குழந்தைத் தன்மையிலும் ஏற்படும், 'நான்' என்பது நீர்ப்பரப்பிலே ஒரு கோலினால் இழுக்கப்பட்ட கோடு போன்றது. அது நெடுங்காலம் இருக்கமாட்டாது.

399. பக்குவமான அகங்காரம் இன்னதென்பது:

மனிதன், "நான்" என்பதைப்பற்றி ஆலோசித்து, அதை இன்னதென்று கண்டுபிடிக்க முயற்சி செய்தால், 'அஃது அகங்காரத்தைக் குறிப்பிடுகிற ஒரு வார்த்தை மாத்திரமேயாம்' என்பது தெரியும். அதை உதறிவிடுவது மிகவும் கஷ்டம். அப்படிக் கஷ்டமாகத் தெரியும்போது அவ்வகங்காரத்தை நோக்கி, "கொடிய நான் என்பதே! நீ எவ்வுபாயங்களினாலும் போகாவிட்டால் ஈசுவரனுக்குப் பணி

யாளுகவாவது இருந்துகொண்டிரு'' என்று கூறி, ''ஈசுவரனுக்கு நான் அடிமை'' என்னும் விஷயத்தில் அதைத் திருப்பிவிடவேண்டும். இதுதான், ''பக்குவமான நான்'' என்பது.

400. பெரியோருக்கு அகங்கார மில்லையேனல்:

ஒருவன் கர்வமடைந்தால், தான் ஈசுவரனுக்கு ஊழிய னென்றும், புத்திரனென்றும் கருதிக்கொண்டு அவ் விஷ யத்தில் கர்வப்படவேண்டும். பெரியோர்களிடத்தில் குழந் தைகளின் சுபாவம் உண்டு. அவர்கள் எப்பொழுதும் ஈசுவர னுக்கு முன் புத்திரர்களே யாவர். ஆதலின், அவர்களுக்கு அகங்காரம் கிடையாது. அவர்களுடைய பலங்களெல்லாம் ஈசுவரனுடையவையே. அவை அவருக்கே சொந்தம்; அவ னிடத்திலிருந்தே அவை வருகின்றன; அவர்களுக்குச் சொந் தமாக ஒன்றுமேயில்லை.

401. 'எல்லாம் ஈசுவரச்செயலே' என்று
நினைக்கிறவர்கள் இந்த ஜென்மத்திலேயே
முத்தி யடைவார்க ளென்பது:

எல்லாம் ஈசுவரனுடைய இச்சையினுலேயே நடை பெறுகின்றன வென்றும், மனிதன், ஈசுவரனுடைய கைக ளிலேயுள்ள ஆயுதமாத்திரமே யாவனென்றும் ஒருவன் உறுதிகொண்டு, ஈசுவரனே நோக்கி, ''எ ஈசுவரா! இங்கு நடைபெறுகின்ற யாவும் உன்னுடையவையே; நீ உன் வேலைகளைச் செய்கிறாய்; 'அவற்றை நான் செய்கிறேன்' என்று மனிதர்கள் சொல்லுகிறார்கள்'' என்று தனது அகங்

காரத்தை ஒழிப்பானுனால் அவன் இந்த ஜன்மத்திலேயே முத்தி யடைந்துவிடுவான்.

402. முத்தி இன்ன காலத்தி லுண்டாகு மென்பது:

ஒருவனுடைய 'நான்' என்னும் தன்மை மறைந்து ஜீவன் ஈசுவரனிடத்தே ஐக்கியமாகும்பொழுதுதான் அவனுக்கு முத்தி யுண்டாகும்.

403. அகங்காரமே ஜீவனுடைய உண்மைத் தன்மையை மறைத்திருக்கிறதென்பது:

ஜீவனுடைய உண்மைத்தன்மை, நித்திய சச்சிதானந்த சொரூபமே. அகங்காரமே எல்லா உபாதிகளையும் உண்டாக்கி யிருக்கிறது. அதனால் ஜீவன் தன்னுடைய சொந்தமான உண்மைத் தன்மையை மறந்துவிடுகிறான்.

404. சன்னியாசியினுடைய கர்வம் அழிவது கடினமெனல்:

உலகத்தில் மற்ற எல்லாருடைய வீண் கர்வங்கள் மெல்ல மெல்ல அழிந்துவிடக்கூடும். ஆனால், ஒரு சன்னியாசியினுடைய கர்வம் (அதாவது, தான் ஒரு மகான் என்னுள்ள கர்வமானது) அழிவது கடினம்.

405. உயர்வு, தாழ்வு என்ற வித்தியாச எண்ணத்தை ஒழித்துவிட வேண்டுமெனல்:

உலகமாதாவை நோக்கி, "தாயே! நான் என்னை நோக்கி, நான் ஒரு பிராமணன்; அதனால் நானே பெரியன்' என்

லும், வேறு மனிதர்களே நோக்கி, 'அவர்கள் தாழ்ந்த பறையர்கள்' என்றும், என்னிடம் உயர்வு தாழ்வு குறித்து வித்தியாசமாக ஏற்படும் எண்ணங்க ளெல்லாவற்றையும் அழித்துவிடு; எல்லா வடிவங்களிலும் நீயே தோன்றுகிறாய்; ஆதலின், அவர்க்கும் எனக்கும் வித்தியாசமில்லை" என்று கூறி, 'நான்' என்ற அகங்காரத்தை ஒழித்துவிடவேண்டும். அப்படி ஒழிப்போரே மேற்கதி அடைவர்.

406. மனிதன், தன்னுடைய தன்மைகளே யெல்லாம் உலோகமாதாவுக்கே சமர்ப்பிக்க வேண்டுமெனல்:

மனிதன் ஈசுவரியை நோக்கி, "தாயே! நான் யந்திரம், நீ யந்திரி; நான் ஒரு கூத்திரம், நீ ஒரு கூத்திரக்ஞன்; நான் உடை, நீ வாள்; நான் இரதம், நீ சாரதி; நீ ஆட்டுவிக்கின்றபடியே நான் ஆடுகிறேன்; நீ பேசுவிக்கின்றபடியே நான் பேசுகிறேன்; நீ நடத்துவிக்கின்றபடியே நான் நடக்கிறேன்; எதுவும் நான் அன்று, நான் அன்று; எல்லாம் நீயே" என்று சொல்லித் தன் கர்வத்தை ஒழித்துவிடவேண்டும். அவ்வாறு ஒழிப்பவனுக்கே முத்தி கிடைக்கும்.

407. அகங்காரம் இரண்டு வகைப்படுமெனல்:

அகங்காரமானது, பக்குவ மடைந்த தென்றும், பக்குவ மடையாத தென்றும் இரண்டு விதமாம். அவற்றுள், 'நான் பார்க்கின்றதும், கேட்கின்றதும், உணர்கின்றதும்

என்னுடையவை யல்ல; இந்தச் சரீரமும் என்னுடை தன்று; நான் என்றும் நித்தியன், முக்தன், சர்வக்ஞ என்ற எண்ணங்களை யுடையது பக்குவமடைந்த அகங் மாம். "இஃது என்னுடைய வீடு; இஃது என்னுடை குழந்தை; இவள் என்னுடைய மனைவி; இஃது எனடைய சரீரம்" என்ற நினைப்புக்களையுடைய அகங்கார னது பக்குவ மடையாததாம்.

408. அகங்காரத்தைப்பற்றிச் சங்கரர் கூறிய மொழி:

சங்கராசாரியரிடத்திலே ஒரு சிஷ்யன் இருந்தா அவன் அவரிடத்திலே நெடுநாட்களாகப் பணிவிடை செய் வந்தும் அவர் அவனுக்கு ஒரு உபதேசமும் செய்யவில்ல அப்படி யிருக்கும்போது ஒரு சமயத்திலே சங்கரர் த யாக உட்கார்ந் திருக்கும்பொழுது பின்னால் அவன் தான். அதனால் அவன் காலடிச் சத்தங் கேட்டது. அதை கேட்டவுடன் சங்கரர், "அங்கே யார்?" என்று கே டார். அதற்கு சிஷ்யன், "நான்தான்" என்று விடை கூ ஞன். ஆசாரியர் அதைக் கேட்டவுடனே, அவனை நோக்கி "நான்' என்பது உனக்கு அவ்வளவு சிறந்ததாயிருக்கு பக்ஷத்தில் அதை அளவில்லாமல் விரித்துக்கொள்; (அத வது பிரபஞ்சத்தை நீயென்றே நினைத்துக்கொள்); இந் நினைப்பானது உன்னை எப்பொழுதும் ஈடேறச் செய்யாது நீ ஈடேற வேண்டுமானால் இதனை அடியோடு ஒழித்துவிடு' என்று கூறினர். உடனே சிஷ்யன் அதனை நீக்கி உய்ந்தான்

409. வியஷ்டியையும் சமஷ்டியையும் வேறு படுத்துவது அகங்காரமே யென்பது:

மனிதனை உலகத்தவனுக்கிப் பெண்ணிடத்தும், பொன்னிடத்தும் பற்றுடையவனுகும்படி செய்கின்ற 'நான்' என்பது மிகக் கெட்டது; இந்த 'நான்' என்னும் அகங்காரமானது மத்தியிலிருப்பதினுலேயே வியஷ்டியும், சமஷ்டியும் வேறு படுத்தப்படுகின்றன; ஒரு நீர்ப்பரப்பின் ஊடே ஒரு கோல் போடப்பட்டால், அந்நீர் இரண்டாகப் பிரிக்கப்பட்டதுபோலத் தோன்றும்; அந்தக் கோலை யெடுத்துவிட்டால் ஒரே நீர்ப்பரப்புத்தான் இருக்கும்; இதுபோல், 'நான்' என்னும் அகங்காரமானது நீங்கிவிட்டால் வியஷ்டியும் சமஷ்டியும் ஒன்றுகிவிடும்.

410. தாழ்மை யுள்ளவருக்குத்தான் ஈசுவர கிருபை உண்டாகுமேனல்:

மழைஜலமானது உயர்ந்த நிலத்திலே ஒருபொழுதும் நிற்காது; தாழ்ந்த இடம் நோக்கியே சென்று தங்கும்; அதுபோல, ஈசுவர கிருபையானது தாழ்ந்தவர்களுடைய ஹிருதயங்களிலேதான் போய்த் தங்கும்; அகங்காரமும் கர்வமும் உள்ளவர்களுடைய ஹிருதயங்களிலே அது நிற்காமல் ஓடிவிடும்.

411. அகங்கார முள்ளவரிடத்தே பெரியோர் நெருங்க முடியாதேனல்:

ஒரு மண்பானையிலே குளிர்ந்த ஜலத்தோடு அரிசி, பருப்பு, உருளைக்கிழங்கு முதலியவை போடப்பட்டால்

அவற்றைக் கையினுல் தொடலாம்; அவற்றிலே சூடேறினுல் தொடமுடியாது; அதுபோலவே, மனிதனுடைய சரீரமாகிய மண்பாண்டத்திலே தனமும் கல்வியும், குலமும் ஜாதியும், அந்தஸ்தும் அதிகாரமுமாகிய பதார்த்தங்கள் சாந்தமென்னும் நீருடனே கலந்திருந்தால் அம்மனிதர்களிடத்தே அறிவுடையோரால் நெருங்க முடியும்; அவை அகங்காரமாகிய சூட்டுடனே கலந்திருந்தால் அவர்களிடத்தே பெரியோர் நெருங்கமாட்டார்கள்.

412. அகங்கார முள்ளவரையில் ஈசுவர தரிசன முண்டாகாதேனல்:

மேகத்தின் மறைப்பில்லாதபோது சூரியன் எங்கும் பிரகாசித்து, உஷ்ணத்தையும் வெளிச்சத்தையும் கொடுக்கும்; மேகங்கள் சூழ்ந்து அதன் கிரணத்தை மறைக்கும் பொழுது அஃதெவ்வித பிரகாசத்தையுங் கொடுக்கமாட்டாது; அது போலவே, அகங்காரமானது ஹிருதயத்திலே உள்ளவரையில் ஈசுவரன் அங்கே பிரகாசிக்கமாட்டார்.

413. அகங்காரமானது ஈசுவரனை மறைக்கின்ற மேகம்போன் றிருக்கின்றதென்பது:

அகங்காரமானது நமது பார்வைக்குத் தெரியாமல் ஈசுவரனை மறைக்கின்ற மேகம் போன்றது. குருவின் கிருபையினுலே அவ்வகங்காரம் அழிந்துவிட்டால் ஈசுவரன் பரிபூரண கிருபையோடு தரிசனந் தருவார். இவ்விஷயத்தை இராமர் படத்தின்மூலம் விளக்கமாகத் தெரிந்துகொள்ள

ரம். இராமர் படத்தில், ஈசுவரனுயுள்ள ஸ்ரீ ராமச்சந்திரர் இலட்சுமணருக்கு இரண்டு மூன்று அடி தூரத்துக் கப் பால் இருக்கிறார்; சீதை (மாயை) ஸ்ரீ ராம லட்சுமணர் ஆகிய இருவருக்கும் மத்தியி லிருந்து, ஸ்ரீ ராம தரிசனஞ் செய்ய வொட்டாமல் லட்சுமணரைத் (ஜீவனை) தடுக்கிறாள்.

414. உபாதி சேரச் சேர ஜீவனுடைய இயல்பு மாறுபடு மென்பது:

ஒருவன், நேர்த்தியான கறுப்புக் கறை பேரிட்ட வஸ் திரத்தை இடம்பாச்சாரி போல் அணிந்துகொண்டால், சந்தோஷமான பாட்டுக்கள் இயற்கையாகவே அவன் வாயி லுண்டாகும்; தள்ளாடுகின்ற கிழவன்கூட ஒரு ஜதை ஆங்கில பாதாகைகளை அணிந்துகொண்டானுனல் அவ னுக்கு ஒருவித வீண் பூரிப்பு உண்டாகும். அதனல் அவன் வாயினல் சீழ்க்கை அடிக்க ஆரம்பிப்பான்; அவன் ஒரு படிக்கட்டில் ஏறவேண்டி யிருந்தால் ஒரு துரையைப் போலப் படிக்குப் படித் தாவிச் செல்வான். இன்னும் ஒருவன் தனது கையில் ஒரு பேனுவை வைத்துக்கொண் டிருந்தால், கையில் கிடைக்கக்கூடிய எந்தக் காகிதத்தின் பேரிலும் அலட்சியமாகக் கிறுக்கிக்கொண்டே யிருப்பான். ஆதலால், இவ்வாறு உபாதி சேரச் சேர ஜீவனுடைய இயல்பு மாறுத லடைந்துகொண்டே போகும்.

415. பணமானது மிகவும் பலமுள்ள உபாதி யென்பது:

பணமானது மிகுந்த பலம் பொருந்திய உபாதியாகும்; ஒருவன் திடுமெனப் பணக்காரனுய் விட்டால் முன்னிருந்த நிலைமையை விட்டு உடனே மாறுத லடைந்துவிடுகின்றன.

416. கர்வமுள்ள விடத்தில் இழிவான செய்கை யிருக்கு மெனல்:

கர்வமடைந் திருப்பவனிடத்தில் இழிவு அவசிய மிருக்கும். காக்கையானது எவ்வளவோ சாமர்த்திய முள்ளதா யிருக்கிறது. அஃது ஒருபோதும் வலையில் அகப்படுவதில்லை; அபாயம் நேரிடுவதற்குச் சொற்ப அறிகுறி தோன்றினாலும் அது உடனே இருக்குமிடத்தை விட்டுப் பறந்துவிடும். மற்றப் பிராணிகட்கு அபாயம் வருவதைத் தெரிவித்துவிடும். இன்னும் அது மிக்க சாமர்த்தியத்துடனே ஆகாரத்தைத் திருடும். இக் குணங்களால் அது தனக்கு மிஞ்சிய சாமர்த்தியமுள்ள பிராணிகளில்லை யென்று கர்வ மடைகிறது. ஆனால், இவ்வளவு சாமர்த்தியம் அதனிடத்தி லிருந்தும் மலந் தின்னும் குணம் மாத்திரம் அதை விட்டு நீங்கவில்லை. இதனால் அதனை மிகுந்த இழிவுள்ள பிராணி யென்றே எல்லோரும் நினைக்கின்றார்கள். இதுபோல் தான் அறிவினால் மிகுந்த சாமர்த்திய முடையவனென்று கர்வ மடையும் ஒருவனிடத்தில் பலரும் அருவருக்கத்தக்க இழிவான செய்கைகள் பல தங்கியிருக்கும். ஆதலின், அகங்காரத்தால் அவனுக்கு யாதொரு சிறப்பு மில்லை.

417. கர்வம் நிறைந்த ஹிருதயத்தில் ஜபதபங்கள் ஒருவிதப் பயனையும் தரா வெனல்:

குப்பையிலாவது சாம்பலின் குவியலிலாவது தண்ணீர் விழுந்தால் அது உடனே வற்றிப்போய்விடும். இ

போல், வீண் கர்வம் நிறைந்துள்ள ஹிருதயத்தி
படும் ஜபங்களும் தபங்களும் நிலை நிற்கமாட்டா; அ
ஒரு பயனையும் உண்டு பண்ணவுமாட்டா.

418. இரண்டு சமயங்களில் ஈசுவரன் சி
என்பது:

ஒரு மனிதன் அபர்யமான வி
துப்போகும் நிலைமையி லிருக்கு
உள்ளே சென்று, வியாதியஸ்தனை
"நீ சிறிதும் கவலைப்படாதே; உ
நான் காப்பாற்றிவிடுவேன்" என்
இரண்டு சகோதரர்கள், தாயாதி வ
பூமியைப் பங்கிடத் தொடங்கி, அளவு
அந்தப் பூமியின் குறுக்கே போட்டு அதை இர
மாக்கி, "இப் பக்கம் என்னுடையது, அப் பக்க
னுடையது" என்று சொல்லும்போதும் இவை
கார்யங்களாயிரு
காசங் கொண்
களிலும் ஈசுவ

419. அ

அஜீரண
கள் கெடுதலா
அவற்றை நீக்
பார்த்த மாத்

அவன் வாயில் நீர் ஊறும். அதுபோலவே, 'நான்' என்பதையும், 'எனது' என்பதையும் பற்றிய எண்ணத்தை அடக்குவதற்கு மனிதன் பிரயாசைப்பட்டு முயற்சித்தாலும், கர்ம பூமியிலே பக்குவமடையாத அவனுடைய அகங்காரமானது வெளிப்பட்டுவிடும்.

420. எல்லாவற்றையும் ஈசுரன் பரமாகச் செய்து விட்டால் மனிதனுக்குச் சொந்தமாக ஒன்றுமிரா தெனல்:

மனிதன், தனக்குக் கவலை முதலிய உண்டாகும் போது "இக் குடும்பக் கவலைகள் என்னுடையவை யன்று; ஈசுரனுடையவையே; நான் அவருக்கு ஊழியன்; நான் அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்காகவே இங்கு வந்திருக்கிறேன்," என்று எப்பொழுதும் நினைக்க வேண்டும்; இந்த எண்ணமானது உறுதியடைந்துவிட்டால் அவனுக்குச் சொந்த மென்று அகங்கரித்துச் சொல்லும்படி ஒன்றுமே யிராது.

421. வித்யா அகங்காரத்தின் தன்மை:

மிகவும் உயர்ச்சி பெற்ற ஏழாவதாகிய சமாதி நிலத்தை யடைந்து ஈசுவர பிரக்ஞையிலே லயமாய்விட்ட சில மகாத்மாக்கள் மனுஷ்ய வர்க்கத்தாரின் நன்மையைக் கருதி அந்த ஞான பூமியிலிருந்து கீழேயிறங்கி வருவார்கள்; அவர்கள் வித்யா அகங்காரத்தை வைத்துக்கொள்வார்கள்; ஆனால், இந்த அகங்காரமானது தோற்றத்தில் மாத்திரம்

தான் இருக்கும். அது ஒரு நீர்ப்பரப்பி விடப்பட்ட கோடு போன் றிருக்கும்.

422. ஹநுமான், நாரதர் முதலியவர்கள் வித்தியா அகங் காரத்தைக் கொண்டிருந்ததற்குக் காரணம்:

ஹநுமார், ஈசுவரனை ஸகாரத்திலும் நிராகாரத்திலும் தரிசிக்கும்படியான பாக்கியத்தைப் பெற்றிருந்தார். ஆனல், அவர், "நான் ஈசுவரனுடைய ஊழியன்" என்ற அகங்கார த்தை மாத்திரம் வைத்துக்கொண்டிருந்தார். நாரதர், ஜனகர், சநந்தனர், சனத்குமாரர் முதலியவர்களும் இத் தன்மையுடையவர்களே; 'இவர்கள் பக்தி மாத்திரமே உடையவர்களா? ஞானிகள் அல்லரா?' என்று கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியதாவது: "நாரதர் முதலியவர்கள் பிரஹ்ம ஞானத்தை அடைந் திருந்தார்க ளெனினும், சிற்சுற்றிலே சலசல வென்னும் சப்தத்துடன் ஓடுகின்ற தண்ணீரைப் போன்று, ஈசுவர ஸ்தோத்ரத்தை ஆவாரத்துடன் பாடிக்கொண்டும், பேசிக் கொண்டும் இருந்தார்கள். ஞான உண்மைகளைப் பிறருக் குப் போதிப்பதற்காகவே அவர்கள் இந்த வித்தியா அகங் காரத்தை (அதாவது: ஈசுவரனிடத்திலிருந்து தாங்கள் வேறு என்று குறிக்கும்படியான ஒரு சிறு வியஷ்டித் தன்மையை) வைத்துக்கொண்டிருந்தார்கள்" என்பதே. இதனல் அவர்கள் வித்தியா அகங்காரம் கொண்டிருந்த தற்குக் காரணம் நன்கு புலப்படும்.

423. ஞானக்கினியால் எரிக்கப்பட்ட அகங்காரம் எத் தீங்கும் இழைக்காதெனல்:

கெருப்பினால் எரிக்கப்பட்ட கயிறு தனது வடிவத்தை வைத்துக்கொண்டிருந்தாலும் அதனால் எதையும் கட்ட முடியாது. அதுபோல, ஞானக்கினியினாலே எரிக்கப்பட்ட அகங்காரமும் இருப்பதாகத் தோற்றினாலும் எத் தீங்கையும் செய்யமாட்டாது.

424. ஈசுரனை அடைந்தவனுக்கும் அகங்கார அடையாளங்கள் உண்டென்பது:

தென்னமரத்தின் மட்டை பழுத்து விழுந்தாலும், அது மரத்திலே இருந்த அடையாள மிருக்கும். அது போலவே ஈசுவரனை அடைந்தவனுக்கும் அகங்கார அடையாளங்கள் (அதாவது, ஆசையினுடையவும், கோபத்தினுடையவும் அடையாளங்கள்) உண்டு. எனினும், அவனுடைய தன்மை ஒரு குழந்தையின் தன்மை போன்றது. அவனுக்கு சத்துவம், ரஜஸ், தமோ என்னும் குணங்கள் நிலையாய் நில்லாவாதலினாலே, அவனுடைய உள்ளம் ஒரு வஸ்துவை எவ்வளவு சீக்கிரத்தில் பற்றுகிறதோ அவ்வளவு சீக்கிரத்தில் விட்டுவிடவும் செய்யும். ஐந்து ரூபா மதிப்புள்ள ஒரு துணியை, காலணு விலையுள்ள ஒரு பொம்மையை வைத்து விளையாடிக்கொண்டிருக்கும் ஒரு பையனிடம் காட்டி 'இந்தத் துணிக்கு ஈடாக அந்தப் பொம்மையைக் கொடுத்துவிடு; நான் இந்தத் துணியை உனக்குக் கொடுத்துவிடுகிறேன்' என்று சொன்னால்

அவன், ''நான் இதைக் கொடுக்கமாட்டேன்; என் பிதா எனக்காக இதை வாங்கியிருக்கிறார்'' என்று தடை செய்வான்; பையனுக்கு எல்லாம் சமமே; அவனுக்கு உயர்வு தாழ்வு என்ற வித்தியாசமில்லை; ஜாதி வித்தியாசமுமில்லை; இன்னும் அவனுடைய தாயார், எவனை ஒருவனை அவனுக்குக் காட்டி 'இவன் உன்னுடைய சகோதரன்' என்று கூறிவிட்டால் அவன் தச்சனுடைய மகனுயிருந்தாலும் பையன் அவனைத் தன்னுடைய சகோதரனென்றே நினைத்து அவனுடன் ஒரே இலையில் சோறு தின்பான். அவனுக்கு விரோதமுமில்லை, சுசி அசுசியுமில்லை; அவனுடைய 'நான்' என்பதைப்பற்றியுள்ள செய்கைகள் இவ்வளவு உறுதியற்றனவாயிருக்கும். இதுபோல, ஈசனை யடைந்தவனுக்கும் அகங்கார அடையாளங்கள் இருப்பினும் அவற்றைப்பற்றிய செய்கைகள் நிலையற்றனவாயிருக்கும்.

425. அபிமான சம்ஸ்காரம் அழிந்துவிட்டாலும் சிறிது காலம்வரை கொஞ்சம் இருந்துகொண்டேயிருக்கு மென்பது:

ஒரு மனிதன், கதவைத் தாளிட்டுக்கொண்டு படுத்திருக்கும்போது தன்னை ஒருவன் துண்டு துண்டாக வெட்ட வருவதாகக் கனவு கண்டால் உடனே பயந்து அலறிக்கொண்டு எழுந்து பார்ப்பான்; அப்போது கதவு உள்ளே தாளிடப்பட்டிருக்கும்; அவ் வறையில் வேறொருவரும் இருக்கமாட்டார்கள். அப்போது அவன், தான் கண்

டது கனவென்று தெளிவான். அவ்வாறு தெளிந்தாலும் அவனுடைய ஹிருதயமானது சிறிது நேரம் வரை துடித்துக்கொண்டே யிருக்கும். இதுபோலவே, அபிமான சம்ஸ்காரமானது அழிந்துவிட்டபோதிலும் சிறிது காலம்வரையில் அதில் கொஞ்சம் இருந்துகொண்டே யிருக்கும்.

426. சமாதியிலும் சிறிது அகங்கார மிருக்கிற தென்பதும், அதுவும் பின் நீங்கிவிடு மென்பதும்:

சமாதியிலே லயப்பட்டிருக்கும்பொழுதும் சொற்ப அகங்கார மிருக்கிறது. அது, ஒரு உரை கல்லின்மீது தேய்த்தால் பரிபூரணமாகத் தேயாத தங்கத் தூளின் அணுப் போன்றது. பகிர்முகப் பிரக்ஞை யெல்லாம் மறைந்துவிட்டாலும் ஈசுவரனிடத்திலே ஆனந்த மனுபவிப்பதற்காக் அவர் சிறிது அகங்காரத்தைச் சமாதி நிலையிலும் வைத்திருக்கிறார். எனினும், சில சமயங்களில் அவர் அந்த அற்ப அகங்காரத்தை அழித்தும்விடுகிறார். இவ்வாறு அழித்தபின் இருக்கும் சமாதி நிலைதான் மிகவும் சிரேஷ்டமானது. இந் நிலைமை இத்தகையது என்பதைப் பற்றி எவரும் பேசுதல் முடியாது. அஃது ஆத்மாவை அடியோடு அவரிடத்திலே கலக்கச் செய்தலாம். இதற்கு மேல் ஆத்மாவினிடத்தில் எவ்விதப் பிரக்ஞையு மிராது. உப்புப் பொம்மையானது சமுத்திரத்தை அளக்க அதிலே புகுந்தால், சீக்கிரம் கரைந்து தண்ணீரோடு தண்ணீராய்ப் போய்விடும். அதன்மேல் சமுத்திரத்தின் ஆழம் இவ்வள வென்று சொல்வதற்கு அங்கொன்று மில்லை. இதுபோ

வே, ஆத்மா ஈசுவரனோடு கலந்துவிட்டால் பின் திரும்புவ தில்லை.

427. அகங்காரத்தைப் பற்றிக் குரு சிஷ்யரிடத்தி லுண்டான ஒருவித சம்பாஷணை:

ஒரு சமயத்தில் ஒரு குருவானவர், தம்முடைய சிஷ் யனை நோக்கி, விளையாட்டாக, "என்னிடத்தில் ஏதேனும் அகங்கார மிருப்பதாக உனக்குத் தெரிகிறதா?" என்று வினவினார். அதற்கு சிஷ்யன், "ஆம்; சிறிது இருக்கிறது; ஆனால், அது, சரீர இரட்சிப்பு, பக்தி யநுஷ்டானம், பக் தர்களுடைய சங்கத்திலே சேர்ந்திருப்பதற்குள்ள இச்சை, பிறருக்கு ஞானத்தை உபதேசிக்கவேண்டுமென்னும் விருப் பம், ஆகியவற்றை உத்தேசித்து வைக்கப்பட்டிருக்கிறது; ஆயினும், நீங்கள் எவ்வளவோ ஜபதபங்களைச் செய்த பின் அதை வைத்துக்கொண்டிருக்கின்றீர்கள்; தங்கள் ஆத்மா வின் உண்மை நிலையானது சமாதி என்னும் வார்த்தையி னுலே வர்ணிக்கக்கூடியதா யிருக்கிறது. ஆகையால், தங்க ளிடமுள்ள அகங்காரமானது பிரத்தியேகமாகத் தாங்கள் செய்த பிரார்த்தனையின் பயனுக ஏற்பட்டதென்று நான் கருதுகிறேன்" என்றான். இவற்றைக் கேட்டு குரு, "நீ சொல்வது சரிதான்; ஆனால், இந்த அகத்தை வைத்துக் கொண்டவன் நானல்லன்; என்னுடைய ஜகன்மாதாவே இதனை என்னிடம் வைத்திருக்கிறாள்; கேட்டவற்றை யெல் லாம் கொடுப்பதற்கு அவளால் முடியும்" என்றார்.

428. ஈசுவரனைத் தரிசித்தவனிடத்துள்ள அகங்காரத்தின் தன்மை:

ஈசுவரனைத் தரிசித்த உண்மை ஞானி ஒரு குழந்தை போலாய்விடுவான்; குழந்தையினிடத்தில் வியஷ்டித் தன்மை, (அதாவது, அதற்குச் சொந்தமான வேறுபட்ட தன்மை) தோன்றுவது உண்மை. ஆனால், அந்த வியஷ்டித் தன்மை ஒரு வெறும் தோற்றமேயாம்; உண்மையான தன்று. இதுபோல், ஞானியினிடத்தில் தோன்றும் அகங் காரமானது நிலையற்றதாம்.

429. சமாதி யடைந்த பின்னரும் சிலர் அகங்காரத்தை வைத்துக்கொண்டிருப்பார்கள் என்பது:

சிலர் சமாதி யடைந்த பின்னரும், பணியாளனுக்குத் தன்னுடைய தொழிலில் ஏற்படும் அகங்காரத்தைப் போன் றதும், பக்தனுக்குத் தன்னுடைய பக்தியில் ஏற்படும் அகங் காரத்தைப் போன்றதுமாகிய ஒருவித அகங்காரத்தை வைத்துக்கொண் டிருப்பார்கள். ஸ்ரீ சங்கராசாரியார் பிற ருக்கு ஞானத்தைப் போதிப்பதற்காக வித்தியா அகங்கார த்தை வைத்துக்கொண்டிருந்தார்.

430. எல்லாவற்றையும் ஈசுரார்ப்பணம் செய்பவன் ஜீவன்முத்தனுவா னென்பது:

உலகத்தில் யாவும் ஈசுரனுலே செய்யப்படுகின்றன என்னும் நம்பிக்கையானது ஒரு மனிதனுக்கிருந்தால் அவன் ஜீவன்முத்த னுய்விடுவான்; 'நான்' என்னும் அகங் காரத்தைக் கொள்பவன் ஜீவன்முத்த னுகான். உலகத்தி

லேற்படும் தொழில்க ளெல்லாவற்றையும் ஜகன்மாதா செய்கிறாள்; அவற்றை மனிதர்கள், "நான் செய்கிறேன்; நான் செய்கிறேன்" என்று சொல்கிறார்கள்.

431. பக்குவமடைந்த அகங்காரமும், பக்குவமடையாத அகங்காரமும்:

ஒருவனுக்கு, தான் எல்லோருக்கும் தலைவன் என்ற எண்ணமிருந்து அந்த எண்ணத்தோடு ஒரு வகுப்பை உண்டாக்குவானானால் அப்பொழுது அவனிடத்திலுள்ள அகங்காரமானது பக்குவ மடையாத அகங்காரமாம். ஒருவன் ஈசுவரனிடத்தில் ஆக்ஞை பெற்று அந்தக் கட்டளைப்படி ஒரு வகுப்பினரை ஏற்படுத்தி அவர்களுக்கு ஞானம் போதிக்கத் தலைப்படுவானுயின் அப்போர்ப்பட்டவனிடமுள்ள அகங்காரமானது பக்குவ மடைந்ததாம்; அதனால் தீங்கொன்றும் நேரிடாது. சுகதேவர், பகவானிடத்தில் ஆக்ஞை பெற்றே பரீக்ஷித்துவுக்கு பாகவதத்தை உபதேசித்தார். இது சம்பந்தமாக இவருக் கேற்பட்டிருந்த அகங்காரமே பக்குவமடைந்த அகங்காரத்திற்கு உவமையாம். இதனால் எவ்வித தீங்கு மில்லை யென்பது சகலருக்கும் விளங்கும்.

432. பக்தி நிலையில் உண்டாகும் அகங்காரமானது ஈசுரன் சமீபத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கு மென்பது:

மிட்டாய் வர்க்கங்களைத் தின்பதனால் ஏற்படும் கெடுதிகளை விளக்கக் கூடிய இலட்சணங்கள் கற்கண்டினிடத்தி

லில்லை. இதுபோல, ''தாசன் நான், பக்தன் நான்'' என்ற தன்மைகளில் ஏற்படும் அகங்காரமானது, சாதாரண அகங்காரத்தைப் போன்று கெடுதி செய்யத் தக்கதின்றும். இது மனிதனை ஈசுவரனுக்குச் சமீபத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கும். இதுவே, பக்தி யோகம் என்று சொல்லப்படும்.

23-வது அத்தியாயம்

உணவின் தன்மையும், ஆத்மீக வாழ்க்கையும்

433. பகற்கால ஆகாரமும், இராக்கால ஆகாரமும்:

பகற்காலத்திலே திருப்தியாக ஆகாரம் சாப்பிட வேண்டும்; இரவிலே ஆகாரத்தை அளவில் குறைந்ததாகவும் இலேசானதாகவும் கொள்ளவேண்டும்.

434. 'எல்லா விடங்களிலும் ஆகாரம் சாப்பிடலாமா?' என்பதற்குத் தக்க விடை:

ஒரு பிராமண மாணவன். ஒரு சமயத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணரை நோக்கி, ''உலகத்தில் ஒவ்வொரு வஸ்துவினிடத்திலும் ஒரே ஈசுவரன்தானே வசிக்கிறார்; அப்படியிருப்பதால் எல்லா இடங்களிலும் ஆகாரம் எடுத்துக் கொள்ளலாமே; அப்படி எடுத்துக் கொள்வதால் என்ன தீங்கு?'' என்று வினவினன். அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவனை நோக்கி, ''நீ பிராமணன்தானே?'' என்று கேட்டார். அவன், 'ஆம்' என்றான். அதன்மேல் ஸ்ரீ ராமகிருஷ்

ணர் அவனைப் பார்த்து, "அதனால்தான் நீ இவ்வித கேள்வியைக் கேட்கிறாய்; நீ ஒரு தீக்குச்சியை உரைத்து அஃதெரியும்போது அதன்மீது நன்றாக உலர்ந்த ஒரு கட்டு விறகைப் போட்டால் அந்நெருப்பு என்ன செய்யும்?" என்று கேட்டார். அதற்கு மாணவன், "அந்த விறகுக் கட்டினாலே அழுக்கப்பட்டு அந்நெருப்பு அவிந்துபோகும்" என்றான். அதன்மேல் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவனை நோக்கி, "சரி; அஃதிருக்கட்டும்; அதிகரித்த காட்டுத் தீயானது மேலோங்கி எரிந்துகொண்டிருக்குந் தருணத்தில் அதிலே பச்சை வாழை மரங்களைக் கட்டுக்கட்டாகப் போட்டால் அவை எவ்வித நிலைமையை அடையும்?" என்று கேட்டார். மாணவன், "அவை ஒரு நிமிஷ நேரத்தில் எரிந்து சாம்பலாய்விடும்" என்றான். அப்போது ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவனைப் பார்த்து, "மாணவ! இவ்விரண்டு விஷயங்களையும் நீ நன்றாக ஆசரிந்து பார்; காய்ந்த விறகானாலும் அஃது அதிகரித்தபோது சிறிய நெருப்பை அவித்துவிடும்; வாழை மரங்கள் பச்சையா யிருந்தாலும் நெருப்பு அதிகரித்த போது அஃதவற்றை எரித்துச் சாம்பலாக்கிவிடும். இவற்றைப்போலவே ஆத்மஞானம் சிறிது பெற்றவன், கண்ட கண்ட விடங்களி லெல்லாம் வித்தியாசமின்றி ஆகாரம் சாப்பிட ஆரம்பித்தால் அதனால் அவனுடைய ஆத்மஞான மானது அழிந்துவிடும். ஆத்மஞானம் அதிக முள்ளவன் எங்ஙு ஆகார மெடுத்துக்கொண்டாலும் அவனுடைய நிலைமையில் தோஷம் ஏற்படமாட்டாது. ஆகார விஷயங்களில், இந்த வித்தியாசங்களை அறிந்து நடக்கவேண்டும்"

என்று கூறினர். இதனால் இன்ன சமயத்தில் இன்ன விடத்தில் ஆகாரம் செய்யலா மென்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

435. பரிசுத்த ஆகாரமும் ஈசுரத் தியான முடையவனுக்கே பயன் படுமேன்பது:

ஒருவன், தீய எண்ணங்களை உண்டுபண்ணுத சர்தாரண மரக்கறி ஆகாரங்களைச் சாப்பிட்டுக்கொண்டு வந்தாலும், அவன் ஈசுவரத்துவத்தை அடைய விரும்பாமையின் அவ் வாகாரங்களால் அவனுக் கொன்றும் பிரயோசனமில்லை. அவ் வாகாரங்கள் மாட்டிறைச்சிபோல் அவனுக்கு அவ்வளவு கெட்டனவாம். ஆனால், ஒருவன் மாட்டிறைச்சியையே தின்றுகொண்டிருந்தாலும், அவன் ஈசுவரனையடையும் விருப்பத்தை யுடையவனா யிருந்தால் அவனுக்கு அந்த இழிவான ஆகாரமும் நல்லதாய்விடும்.

436. பக்தனுக்குத் தகுந்த ஆகாரம்:

தேகத்திற் சூடுண்டாக்காததும், மனத்தைக் கலைக்காததுமான ஆகாரமே பக்தனுக்குத் தக்கதாம்.

437. மனிதன் எதை வேண்டுமானாலும் சாப்பிடலாமா என்பதற்குத் தக்க விடை:

ஒருவர், ஸ்ரீ ராமகிருஷ்ண ரிடத்தில், "சாப்பாட்டு விஷயத்திலே மனிதன், தனக்கு என்ன கிடைத்தாலும் சாப்பிடலாமா?" என்று கேட்டார். அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர், "அது ஞான நிலைமையைச் சார்ந்திருக்கின்றது;

ஞான மார்க்கத்திலே எவ்வித ஆகாரத்தைக் கொண்டா லும் தீங்குண்டாகாது; பக்தி மார்க்கத்தில் பரிசுத்தமான ஆகாரம் வேண்டும். ஆனல், ஈசுர பக்தி யிருந்தால் மாத்தி ரந்தான் பரிசுத்த ஆகாரத்தால் பிரயோசன முண்டு; மெய் யான பக்தி யுடையவன் அசுத்த ஆகாரத்தை உபயோகித் தாலும் உயர்ந்தவனே யாவன்; பக்தி யில்லாதவன் பாலும் சோறும் தின்றலும் பிரயோசன மில்லை. ஒரு சமயத்தி லே நான், ஒரு மகமதிய குருவினிடம் உபதேசம் பெற் றேன்; அவர்களுடைய மார்க்கங்களைக் கண்டிப்பாக அனு சரித்துக்கொண்டு அநேக நாட்கள் அல்லாவின் நாமத்தை ஜபித்தேன்; அவர்களுடைய ஆகாரத்தைத் தின்றேன்; அக் காலத்திலே நான் காளி தேவியினுடைய க்ஷேத்திரத் துக்குப் போகவுமில்லை, வேறு இந்து தேவதைகளுடைய நாமங்களைக் கூறவுமில்லை; நான் இப்படியிருந்தும் என் னுடைய ஞான மார்க்கத்தில் எவ்வித குறைவும் ஏற்பட வில்லை" என்று கூறினர்.

24-வது அத்தியாயம்

நிஷ்டை

438. நிஷ்டை இன்னது செய்கிற தென்பது:

உறுதியுள்ள நிஷ்டையானது, தியானிக்கப்பட்ட வஸ்துவின் உண்மைத் தன்மையை வெளியேற்றி, நிஷ்டை செய்பவருடைய ஆத்மாவிலே புகுத்திவிடுகிறது.

439. சாத்வீகத் தன்மையுள்ளவனுடைய நிஷ்டை:

சாத்வீகத் தன்மையுள்ள மனிதன், பிறர் தன்னைப் பார்க்காதபடி அர்த்த ராத்திரியிலே திரைக்குள், தன் படுக்கையில் உட்கார்ந்துகொண்டு நிஷ்டை செய்வான்.

440. மனத்தை ஏகாக்கிரப்படுத்த வல்லமை ஏற்பட்ட பின் உண்டாகும் நிலைமை:

மனிதன் நிஷ்டை ஆரம்பத்தில் ஓர் ஏகாந்தமான இடத்தில் இருந்துகொண்டு எப்பொழுதும் தன் மனத்தை ஏகாக்கிரப்படுத்த முயற்சி செய்துகொண்டிருக்க வேண்டும். அப்படிச் செய்யாவிடில் அநேக விஷயங்கள் வந்து அதனைக் கலைத்துவிடும். பாலையும், நீரையும் ஒன்றுக வைத்தால் அவை கலந்துகொள்ளும். ஆனல், பாலானது கடையப்பட்டு வெண்ணெயாக எடுக்கப்பட்டுவிட்டால் தண்ணீரில் போட்டாலும் அதனோடு கலக்காமல் மிதக்கும். இது போலவே ஒருவன் மனத்தை ஒன்றுபடுத்த வல்லவனுய் விட்டால் அவன் எங்கே யிருந்தபோதிலும் அவனுடைய மனமானது சுற்றங்களில் ஒட்டாமல் மேலே கிளம்பி ஈசுவரனிடத்திலே உபசாந்தி அடைந்திருக்கும்.

441. யோக நித்திரையில் பலவித தரிசனங்களைக் காணலாமென்பது:

ஒரு யோகாப்பியாசியானவன், நிஷ்டை செய்துகொண்டு வரும்போதே யோக நித்திரை யென்னும் ஒருவித நித்திரை அவனுக்குண்டாகும். அப்பொழுது அவன் பலவிதமான திவ்ய தரிசனங்களைக் காண்பான்.

442. நிஷ்டை பூர்த்தியாகி மோக்ஷம் சித்திக்கும் விதம்:

ஒருவன், நிஷ்டை செய்ய உட்கார்ந்தால் உடனே அவனைச் சுற்றிலும் தெய்வ ஆகாயம் சூழும். அப்பொழுது அவனுடைய ஆத்மாவானது ஈசுவரனிடத்திலே லய மடைந்துவிடும். "நிஷ்டையிலே பரிபூரணமானவனுக்கு மோக்ஷம் அதிக சமீபத்தில் இருக்கிறது" என்பது ஒரு பழமொழி.

443. ஒருவன் ஈசுவரனிடத்தில் கலந்திருக்கவேண்டிய விதம்:

சாராயத்தில், போதைத் தன்மையானது கலந்திருப் பதுபோல ஒருவன் நிஷ்டை கூடி ஈசுவரனிடத்திலே கலந் திருக்கவேண்டும்.

25-வது அத்தியாயம்:

பக்தி

444. பரபக்தி இன்ன தென்பது:

பரபக்தியிலே, பக்தன், ஈசுவரனைத் தனக்குரிய பந்துவாகக் கருதித் தியானஞ் செய்வான். அந்த அன் பானது எதுபோன்ற தெனில், கிருஷ்ண னிடத்திலே கோபிகா ஸ்திரீகளுக்கு ஏற்பட்டிருந்த அன்பு போன்றது. அவர்கள் அவரை எப்பொழுதும் கோபி நாதனாகவே நினைத்திருந்தார்கள்; அப்படியே அவரை அழைத்தார்கள். ஜகந்நாதனாக அறியவு மில்லை, அழைக்கவு மில்லை.

445. பக்தியுள்ள மனதிற்ருன் ஈசுரச்சாயை படுமென்பது:

கண்ணுடி சுத்தமாக இருந்தாலும், அது தகுந்த வஸ்துக்களோடு சேர்த்துத் தயார் செய்யப்படாவிடில் அதில் எவ்வித ரூபத்தையும் பதிப்பிக்க முடியாது; ஆனல் அது, தக்க ரசாயண வஸ்துக்களோடு சேர்ப்பிக்கப்பட்டால் அதில் எந்த உருவத்தையும் பதியும்படி செய்துவிடலாம். அதுபோல, மனிதனுடைய ஹிருதயமும் பக்தி யென்கின்ற ரசாயண வஸ்துவோடு சேர்க்கப்பட்டால் அதில் ஈசுரனுடைய சாயை எளிதிற் படிந்துகொள்ளும்.

446. பக்தியுள்ள ஹிருதயத்தையுடைய பக்தனை நோக்கி ஈசுரன் வேகமாக வருவா ரென்பது:

மீன்களுக்கு இனிமையான இரையைத் தண்ணீரில் போட்டவுடனே அம் மீன்கள் எவ்வளவு தூரத்தி லிருந்தாலும் வேகமாக அவ் விரை யிருக்கு மிடத்திற்கு ஓடி வரும். இவற்றைப் போலவே ஈசுரனும், பக்தியும் நம்பிக்கையும் நிறைந்த ஹிருதயத்தை யுடைய பக்தனை நோக்கி அதிவேகமாக ஓடி வருவார்.

447. பக்தி யனுஷ்டானங்கள் இன்ன காலத்தில் அவசியமாம் இன்ன காலத்தில் அவசியமில்லை யென்பது:

ஈசுவரனுடைய நாமத்தைச் சொன்ன மாத்திரத்தில் எவனுடைய ஹிருதயமானது உருகிக் கண்ணீர் சொரிகின்றதோ அவனுக்கு அக் காலத்தில் பக்தி யனுஷ்டானங்கள் அவசிய மில்லை. ஈசுர நாமத்தைக் கேட்டவுடன் ஆனந்தக் கண்ணீர் பெருகாதவனுக்கு அவ்வாறு பெருகும் பக்குவத்

தை அடையும் வரையிலும் பக்தி அனுஷ்டானங்கள் அவசியம் வேண்டும்.

448. ஈசுர தரிசனத்தைக் கொஞ்சமாக அடைந்தவர்களுக்கும் அதிகமாக அடைந்தவர்களுக்கும் இன்பம் ஒரு தன்மைத்தே யென்பது:

ஒரு சர்க்கரைக் குன்றிலிருந்து சிறிது பாகத்தை யெடுத்துச் சென்ற சிறிய எறும்பும், பெரும் பாகத்தை யெடுத்துச் சென்ற பெரிய எறும்பும் சமத்துவமாகவே இன்பத்தை அடைகின்றன. இவையேபோல, ஈசுர பக்தர்களிற் பலர், ஈசுர மகிமையில் சிறிது பாகத்தைத் தரிசித்தாலும் ஆனந்தத்தில் மூழ்கி லயித்து விடுவார்கள். வேறு சிலர் ஜகந்நாதனே பிரத்தியக்ஷமாகத் தரிசித்த பின்னரே பிரமானந்த போதம் அடைவார்கள். இவர்கள் இப்படியிருந்தாலும் இவ் விரு வகையாருக்கும் ஏற்படும் ஆனந்தம் ஒரு தன்மைத்தே. இவர்கள் சமத்துவமான பாக்கிய வந்தர்களே.

449. ஈசுர பக்தர்கள் ஈசுர கிருபையை அதிகமாக அடைந்தாலும் கொஞ்சமாக அடைந்தாலும் ஆனந்தத்தில் சமமானவர்களே யென்பது:

சிலருக்கு அளவிற் கொஞ்சமான சாராயமே வெறியை உண்டாக்கி விடுகின்றது. வேறு சிலருக்கு வெறியுண்டாக வேண்டுமானால் இரண்டு மூன்று புட்டி சாராயங் குடிக்கவேண்டும். இவர்களில் சிலருக்குச் சாராயங் கொஞ்சமானாலும் சிலருக்கு அதிகமானாலும் இ

யாருக்கும் வெறியினு லேற்படும் திருப்தி ஒன்றே. இவர்க ளைப் போலவே ஈசுர பக்தர்களிற் சிலர் ஈசுர கிருபையைக் கொஞ்சமாக அடைந்தாலும் சிலர் அதிகமாக அடைந்தா லும் இரு வகையாருக்கும் ஏற்படும் ஆனந்தம் ஒன்றே.

450. ஞானத்திற்கும் பக்திக்கும் உள்ள பேதம்:

ஞானம் புருஷனைப் போன்றது; பக்தி ஸ்திரீயைப் போன்றது. ஞானமானது ஈசுரனுடைய சம்பாஷணை யறை வரையிலுந்தான் செல்லும்; பக்தியோ அவருடைய அந் தப் புரத்திற் குள்ளும் செல்லும்.

451. ஈசுர பக்தியில் மூழ்கினுல் கெடுதி யுண்டாகா தென்பது:

ஈசுர பக்தியாகிய சமுத்திரத்திலே ஆழ்ந்து மூழ்கி விடவேண்டும். அதற்குப் பயப்படக்கூடாது. அஃது அமிர்த சாகரமாம். ஆகையால், அதில் இன்ப முண்டாகுமே தவிர துன்ப முண்டாகாது. ஒரு சமயத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் விவேகாநந்தரை நோக்கி, "புத்திரா! ஈசுர பக்தி, சர்க்க ரைப்பாகு நிறைந்த ஒரு சமுத்திரம்போன் றிருக்கின்றது; நீ அச் சமுத்திரத்தில் ருசி பார்க்க வேண்டுமானுல் எப் படிப் பார்ப்பாய்?" என்று வினவினர். அதற்கு விவேகா நந்தர், "நான் ஓரத்தில் உட்கார்ந்துகொண்டுதான் ருசி பார்ப்பேன்; அதற்குள் மூழ்க மாட்டேன்; அதி லிறங்கி னுல் அமிழ்ந்தி யிறந்துபோவேன்" என்று கூறினர். அதைக் கேட்டு ஸ்ரீ ராமகிருஷ்ணர் "புத்திரா! நீ ஈசுர பக்தியாகிய சமுத்திரத்தில் மூழ்கினுல் அபாயம் கேடு மென்று பயப்படாதே; அஃது அமுதசாகரமாகும்; நீ ஈசுர

பக்தியினாலே மிகவும் பயித்தியம் பிடித்துப் போவோமோ என்று சிறிதும் நினைக்காதே'' என்று கூறினார். ஈசுர பக்தியாகிய சமுத்திரத்தில் மூழ்குவதால் அபாயமில்லை யென்பதை இந்தச் சம்பாஷணையால் உறுதியாக உணரலாம்.

452. ஈசுர பிரேமையானது சிலரால் மாத்திரமே அடையக் கூடுமென்பது:

சிலரால் மாத்திரந்தான் ஈசுர பிரேமையானது அடையக் கூடும். இத் தகையினர்கள், மற்ற மனிதர்களைக் காட்டிலும் மிகுந்த சக்தியை உடையவராவர்; ஈசுரனிடமிருந்து அதிகாரம் பெற்றவர்களும் இவர்களே; தெய்வச் சக்திகளுக்கும், மகிமைகளுக்கும் உரித்தானவர்களும் இவர்களே; இவர்கள் தனியே ஒரு வகுப்பினராவர்; சைதன்ய தேவரைப் போன்ற ஈசுராவதார மூர்த்தியர்களும், மிகச் சிரேஷ்டமான இவர்களுடைய பக்தர்களும் இந்த வகுப்பைச் சார்ந்தவர்களே.

453. பிரேமையின் இலட்சணங்கள்:

பிரேமையானது இரண்டு வகைப்படும். அவற்றுள் முதலாவது பகிர்முகப் பிரபஞ்ச மறதி; இரண்டாவது சொந்தத்தேக மறதி.

454. மார்க்கந் தெரியாவிட்டாலும் பக்தி யிருந்தால் போது மென்பது:

ஒருவனுக்கு ஈசுரனை யடைவதற்குச் சரியான மார்க்கந் தெரியாவிட்டாலும், 'ஈசுரனை யடையவேண்டும்' என்

கிற ஆசையோடு கூடிய பக்தி அதிகமாக இருந்தால் அவன் அந்த பக்தியாகிற சக்தியினாலே ஈசுரனை யடைந்துவிடுவான். ஒரு பக்தன், ஜகந்நாத க்ஷேத்திரத்திற்குப் போக வேண்டுமென்று புறப்பட்டான்; ஆனால், அவனுக்கு அங்கே செல்லச் சரியான மார்க்கந் தெரியாது. அதனால் அவன், ஜகந்நாதத்திற்குச் செல்லும் வழியை விட்டு வேறொரு மார்க்கத்தில் வெகு தூரம் சென்றுவிட்டான். அவ்வாறு செல்லவே அவன் மிகுந்த கவலை யடைந்து எதிரே சந்தித்த ஒவ்வொருவரிடத்திலும் 'ஜகந்நாதத்திற்குச் செல்லும் வழியாது?' என்று கேட்டான். அவர்களெல்லோரும், 'நீ வந்தது சரியான மார்க்க மன்று; அதோ நேரான வழி யிருக்கிறது' என்று சரியான மார்க்கத்தைக் காட்டினார்கள். பின்னர் அந்த பக்தன் அவ்வழியைப் பற்றி ஜகந்நாத க்ஷேத்திரம் அடைந்து தன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றிக்கொண்டான். இதுபோலவே, ஒருவனுக்கு ஈசுரனை யடையும் மார்க்கம் சரியாகத் தெரியாவிட்டாலும், 'அவரை அடையவேண்டும்' என்னும் மனவுறுதி மாத்திரம் இருக்கும் பக்ஷத்தில் அவன் அந்த வழியைக் காட்டக் கூடியவர்களின் துணையைக் கொண்டாவது ஈசுரனை அடைவது நிச்சயம்.

455. பக்தியின் தன்மையும், ஞானத்தின் தன்மையும்:

பூமியின் உத்தர கோடியிலும், தக்ஷிண கோடியிலும் உள்ள சமுத்திர ஜலமானது சில பாகங்களில் சந்திர னுடைய குளிர்ச்சியால் உறைந்து பனிக் கட்டிகளாய்

விடும். அவற்றி னிடையே கப்பல்கள் அகப்பட்டுக்கொண் டால் அங்கு மிங்கும் அசைய முடியாமல் நின்றுவிடும். பின் அந்தப் பனிக்கட்டிகள் சூரிய வெப்பத்தால் உருகும்போது சமுத்திர ஜலத்தோடு ஜலமாய்க் கலந்துகொள்ளும். அவ் வாறான பின் கப்பல்கள் சமுத்திரத்தில் தடை யில்லாமல் எங்கும் செல்லும். இப்படியே பக்திமார்க்கத்தினுடைய தன்மையும், ஞானமார்க்கத்தினுடைய தன்மையும் ஏற் பட்டிருக்கின்றன. பக்தி சந்திரன் போன்றது; ஞானம் சூரியன் போன்றது. பக்தியால் சச்சிதானந்த சமுத்திரத் தின் சிறிது பாகமானது கெட்டி யாக்கப்பட்டு நாமரூபத் தோடு கூடிய தெய்வமாக வணங்கப்படுகின்றது. பக்தர்கள் இதி லகப்பட்டு அசைய முடியாமல் நின்றுவிடுவார்கள். 'பிரஹ்மைவ சத்தியம், ஜகன்மித்தியா' என்னும் ஞான சூரியன் உதயமானால் இந்தப் பேதத்தன்மையானது நீங்கி எல்லாம் ஒரே தன்மையுடையனவாம். அப்போது சச்சி தானந்த சமுத்திரத்தில் தாராளமாகச் செல்லலாம்.

456. நாரதர் முதலியவர்களும் பக்தியை அனுஷ்டித்தார்க ளென்பது:

நாரதரும், மற்ற ஆசாரியர்களும் ஞானமடைந்த பின்னரும் மனித வர்க்கத்தார் நன்மை யடையவேண்டிப் பக்தியை அனுஷ்டித்துவந்தார்கள்.

457. சிறந்த பக்தி இன்ன தென்பது:

பக்திவகைகளில் பிரதிப் பிரயோசனத்தை விரும்பாத ஒருவகைப் பக்தியுண்டு. இதுவே எல்லாவற்றிலும் சிறந்த

தாம். இஃது உண்டாய்விட்ட பின் இதற்குமேல் விரும்பத் தக்கது ஒன்றுமே யிராது. இத்தகைய பக்தியையுடைய வன், ஈசுவரனை நோக்கி, "ஏ! ஈசுவரா! எனக்குத் தனம் வேண்டாம்; கீர்த்தி வேண்டாம்; சரீர சுகமும் வேண்டாம்; வேறே எதுவும் வேண்டாம். உன்னுடைய பாதாரவிந்தங்களில் நான் பரிசுத்த பக்தியைச் செலுத்தும்படி நீ கிருபை செய்வாய்; அதுவே எனக்கு வேண்டியது" என்று கூறுவான்.

458. வைதீக பக்தி:

பக்திகளில் வைதீக பக்தி யென்று ஒருவித பக்தியுண்டு. அதாவது, சாஸ்திரங்களிற் கூறிய கிரமங்களை அனுஷ்டிக்கும் பக்தியாம். ஏற்படுத்திய எண்ணிக்கையின்படி ஈசுவர நாமத்தை ஜெபம் செய்தல், குறிப்பிட்ட காலங்களில் விரத மிருத்தல், குறிப்பிட்ட ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்தல், உபாசனைக் கென்று குறிப்பிட்ட வஸ்துக்களைக் கொண்டு உபாசித்தல் முதலியவைகள் வைதீக பக்தியில் அடங்கும். இந்த வைதீக பக்தியை நெடுங்காலம் அனுஷ்டித்து வந்தால் இது முடிவில், ஈசுவர பக்திகளில் உயர்ந்த ஒன்றாகிய ராக பக்திக்கு இட்டுச் செல்லும். இந்த ராக பக்தியின்றி மனிதன் ஈசுரனை அடைதல் முடியாது. இந்த ராக பக்தியைக் கொண்டு உலக எண்ணங்களை யெல்லாம் அடியோடு நீக்கிவிட வேண்டும். முழு மனதையும் ஈசுரன்மீது செலுத்தவேண்டும். இப்படிச் செய்தாற்றான் ஈசுரனை அடைதல் முடியும்.

459. ராகபக்தி குழந்தைப் பருவத்திலிருந்தே சிலருக்கு உண்டாகு மென்பது:

ராக பக்தியானது சிலருக்குக் குழந்தைப் பருவத்திலிருந்தே உண்டாவதுண்டு. அவர்கள் பிரகலாதனைப் போலத் தங்கள் குழந்தைப் பருவத்திலேயே ஈசுரனிடத்தில மிகுந்த ஆசையுடையவர்களாய்க் கதறுவார்கள். அவர்கள், நித்தியசித்தர்கள் என்னும் வகுப்பைச் சார்ந்தவர்கள்.

460 பக்தன், ஈசுரனை அடையும் விதம்:

விட்டிற்பூச்சியானது வெளிச்சத்தைப் பார்த்தவுடனே அதனிடத்து மாத்திரமே முழுவிருப்பத்தையும் செலுத்தி இருட்டை விட்டு வெளியேறி அதிற் போய் விழுந்து லயமாய்விடும். எறும்பானது சர்க்கரைப் பாகைப் பார்த்தால் உடனே அதிற் போய் விழுந்து லயமாய்விடும். இவற்றைப் போலவே, பக்தனும் மற்றெல்லாவற்றையும் விட்டு ஈசுரனிடத்தில் மாத்திரம் மனத்தை ஒட்டிக்கொள்ளும் படி செய்வான்.

461. செயற்கைப் பக்தியும், இயற்கைப் பக்தியும்:

ஈசுர பக்தியானது, செயற்கைப் பக்தியென்றும், இயற்கைப் பக்தியென்றும் இரண்டு விதமாம். செயற்கைப் பக்தியாவது சாஸ்திரங்களிலே கூறப்பட்ட பக்தியாம். 'நாம் குறிப்பிட்ட ஒரு விதத்திலே ஈசுரனை உபாசிக்கவேண்டும்; அல்லது ஈசுர நாமத்தை இத்தனை முறை ஜபிக்க

வேண்டும்', என்னும் நியமப்படி செய்யும் பக்தியும், இவை போன்ற பிறவும் இதைச் சேர்ந்தவைகளாம். இது, வைதீக பக்தியென்றும் சொல்லப்படும். இந்த பக்தியானது நெடுநாட் பழக்கத்தின்மேல் பிரஹ்ம ஞானத்திற்கு, அதாவது சமாதியில் உண்டாகும் அகண்ட ஞானத்துக்கு இட்டுச் செல்லக்கூடும். இவ்விதமாகவே ஆத்மாவானது பின்னர் ஒருபொழுதும் திரும்பி வராதபடி பரமாத்மாவிலே லய மடைந்துவிடும். இதுதான் சாதாரண பக்தர்களின் தன்மை. இனி, இயற்கைப் பக்தியானது வேறு விதமாம்: அது, ஈசுராவதார புருஷர்களும், ஈசுரனே வந்து தடுத்தாட்கொள்ளும் பக்தர்களுமாகியவர்களிடத்தில் அவர்கள் பிறக்கும்போது கூடவே உண்டாவதாம். அவர்களுடைய ஈசுர பக்தியானது சாஸ்திரக் கொள்கைகளினால் ஆக்கப் பெற்றதன்று. அஃது அவர்களுடைய ஆத்மாவுக்குள்ளிருந்து ஊறித் ததும்பக்கூடியது. சைதந்யர்போன்ற ஈசுராவதார புருஷர்களும், அவருக்குச் சமீபத்திலிருப்பவர்களும் சமாதியில் உண்டாகக் கூடிய அகண்ட ஞானத்தைத் தங்கள் கைக்குள்ளேயே உடைத்தானவர்கள். அவர்கள் ஆதி சமயத்தில் தங்கள் 'நான்' என்ற அகங்காரத்தை வைத்துக்கொண்டும், ஈசுரனைப் பிதாவாகவும், மாதாவாகவும், மற்றும் பலவிதமாகவும் கருதிப் பக்தி செலுத்திக்கொண்டும், கீழ்ப்படிக்கு இறங்கியும் வருவார்கள்; 'இது அன்று இது அன்று', என்று சொல்லிக்கொண்டு மேற்படிகளிலேறிப்போய்க் கடைசியாக மாடியாகிய அகண்ட ஞானநிலையையும் அடைவார்கள். இவ்வாறு அவர்கள் மேலுங்

கீழும் மாறி மாறி நடப்பார்கள்; சில சமயங்களில் மேற் கூறிய மாடியிலும் வீற்றிருப்பார்கள்; சில சமயங்களில் அதற்குக் கீழுள்ளபடிகளிலு மிருப்பார்கள். மாடியானது இந்திரிய உலகுக்கு சம்பந்தப்பட்ட அகங்காரத்தை அழிக் கின்ற சமாதி நிலைமையிலே உண்டாகும் அகண்ட ஞானநு பூதியைக் குறிப்பிடும்; படிக்கட்டுகள் காட்சி யுலகத்தை அதாவது நாம ரூப உலகத்தைக் குறிப்பிடும். மாடியை அடைந்தவுடன், அப் படிக்கட்டுகள், மனிதனுடைய இந் திரியங்களால், அகண்டத்துவத்தின் ஒரு வெளிப்பாடாக வே அறியப்படும்.

462. பக்தியினல் தன்னடக்கமும் ஈசுரஞானமும் தாமே உண்டாகு மெனல்:

மார்க்கங்களில் நடந்து பழகாத குதிரைகளின் கண் களை மூடாவிட்டால் அவை ஒரு அடிகூட எடுத்து வைக்க மாட்டா. இவைபோல, மனிதர்கள் உலக ஆசைகளை அடக் காவிட்டால் ஈசுரனை அநுபூதியில் அறிவது சாத்திய மாகாது; மனிதன் ஈசுரனைத் தரிசிக்க விரும்பினல் முத லில் பரிசுத்தனு யிருக்கவேண்டும். தன் ஆசைகளை அடக்க வேண்டும். முதலாவது தன்னடக்க முண்டானல் பின்னர் ஈசுரஞானம் உண்டாகும். மேற்கூறிய தன்னடக்கமானது பக்தி மார்க்கத்தில் எளிதி லுண்டாகும். மனிதனுக்கு ஒரு முறை ஈசுரபக்தி யுண்டாய்விட்டால் அவருடைய பரிசுத்த நாமத்தைச் சொன்ன மாத்திரத்தில் அவனுக்கு ஆநந்தத் தால் புளகாங்கிதம் உண்டாய்விடும். பின்னர் ஆசைகளை

அடக்குவதற்கு ஒரு முயற்சியும் எடுத்துக்கொள்ளவேண்டியதில்லை. அந்த அடக்கம் தானே உண்டாய்விடும். மிகுந்த துக்கத்தால் துன்புற்றிருக்கும் ஒரு மனிதன் ஒரு சண்டையில் தலையிடத் துணிவானோ? ஒரு சந்தோஷமான விருந்திற்குச் செல்ல விரும்புவானா? வேறு இந்திரிய போகங்களில் இச்சை வைப்பானா? ஒருபோதும் இவற்றில் மனதைச் செலுத்தவே மாட்டான். இதுபோலவே, ஈசுர பக்தியில் லயித்துள்ளவன் இந்திரிய போகங்களில் ஒரு போதும் நினைக்கவேமாட்டான்.

463. ஈசுரனை உபாசிப்பவனுக்கு ஒரு கெடுதியு மில்லை யெனல்:

விட்டிற்பூச்சியானது, ஒருமுறை வெளிச்சத்தைப் பார்த்துவிட்டால் பின்னர் இருட்டை நாடுகிறதில்லை; அஃது அவ் வெளிச்ச நெருப்பின்மேற் பாய்ந்து மரித்தேவிடும். இதுபோலவே, ஈசுரனை உபாசிப்பவனும் அந்த ஈசுர ஜோதியைக் கண்ட மாத்திரத்தில் உலக மயக்கமாகிய இருட்டை விட்டு அதிற் கலந்துகொள்வான். ஆனால், விட்டிலுக்குச் சம்பவித்ததுபோல அவனுக்குக் கேடு சம்பவிப்பதில்லை. அவனை ஆகருஷிக்கிற திவ்ய ஜோதியானது சுடுகின்றதுமில்லை; மரணத்தை உண்டாக்குகிறது மில்லை. அது நல்ல பிரகாசத்தோடு மென்மையாயும், குளிர்ச்சியாயும், ஆறுதலை அளிக்கக்கூடியதாயு மிருக்கின்ற இரத்தினத்தின் பிரகாசம் போன்றது; சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும் ஹிருதயத்தைப் பிரகாசிக்கும்படி செய்வது.

464. பரிசுத்தாத்மாக்களாலேயே ஈசுரனிடம் முழு மனதையும் செலுத்த முடியுமெனல்:

உலக மாயையால்' அசுத்தமாக்கப்படாத பரிசுத்த ஆத்மாக்களே, ஈசுவரனிடத்தில் பக்தி செலுத்துவதற்கு முழு மனதையும், நிலை நிலைநிறுத்துவார்கள்.

465. நம்பிக்கையின் அளவாகவே ஈசுரஞான முண்டாகு மெனல்:

ஒருவனுக்கு ஈசுவரனிடத்தில் நம்பிக்கை எவ்வளவாக இருக்கிறதோ அவ்வளவே ஈசுரசம்பந்தமான ஞானமும் உண்டாகும். அந் நம்பிக்கை குறைவான இடத்திலே அவ்வித ஞானம் அதிகமாக உண்டாகாது.

466. உலகப்பற்று குறைவதற்குத் தக்கபடி ஈசுரபக்தி அதிகரிக்கு மெனல்:

இந்திரிய வஸ்துக்களிடத்திலுள்ள பற்றுதல் எவ்வளவுக் கெவ்வளவு குறைகிறதோ அவ்வளவுக் கவ்வளவு ஈசுர பக்தி அதிகரிக்கும்.

467. ஞானியின் தன்மையும், பக்தன் தன்மையும்:

சமமான போக்கில் ஓடுகின்ற ஒரு பரிசுத்த நதியைப் போல ஞானியினுடைய ஹிருதயத்தின் தன்மையானது ஒரே போக்கை யுடையதாம். அவனுக்கு உலகமானது ஒரு சொப்பனம் போன்றதாம். அவன், வேறொரு சிந்தனையுமின்றித் தனது ஆத்மாவினிடத்திலேயே லயித்து நின்று

விடுவான். பக்தனுடைய ஹிருதயமோ அப்படி யன்று. மேடு பள்ளமான விடத்தில் ஏறியும் இறங்கியும் செல்லும் ஒரு நதிப் பிரவாகத்தைப் போன்றது. அவனுடைய ஹிருதயத்தில் ஏற்றமும் முண்டு இறக்கமும் முண்டு. அவன் சில சமயங்களில் சிரிப்பான்; சில சமயங்களில் அழுவான்; சில சமயங்களில் ஆடுவான்; சில சமயங்களில் பாடுவான். இவ்விதமாகவே பக்தனானவன் வெவ்வேறு உணர்ச்சிகளினாலே ஆட்டப்படுவான். ஈசுர சன்னிதானத்திலே யிருப்பதற்கும், அச் சன்னிதானத்தின் மகிமையை அனுபவித்தற்கும் விரும்புவான். இந்த அனுபவத்தால் உண்டாகும் ஆனந்தமாகிய சமுத்திரத்திலே, ஒரு பனிக் கட்டியானது எவ்விதம் நீரில் மேலும் கீழும் இளம்பி அமிழ்ந்து கூத்தாடுமோ அதுபோல, சில சமயங்களில் மேலே நீந்தியும், சில சமயங்களில் கீழே அமிழ்ந்தியும், மறுபடியும் மேலேறி மிதந்தும் விளையாட விரும்புவான்.

468. ஈசுர பக்தி யுண்டாகும்போது கர்மத்தியாகம் தானே யுண்டாகு மெனல்:

ஈசுர பக்தியானது ஹிருதயத்தில் அதிகரிக்கின்ற போது கர்மத்தியாகம் தானே யுண்டாகும். எனினும், ஈசுரனாலே கர்மம் செய்யும்படி ஆக்ஞாபிக்கப் பெற்றவர்கள்மாத்திரம் கர்மம் செய்யக் கடமைப்பட்டவர்களா யிருக்கின்றார்கள். பக்தியில் மிகுந்தவர்கள், அந்தப் பக்தி மிகுங் காலம் வந்தவுடன் எல்லாவற்றையும் துறந்துவிட்டு மனத்தை நோக்கி, "ஏ மனமே! வருவாயாக; நாம் ஒன்று

சேர்ந்து நம் ஹிருதயத்திலே பிரதிஷ்டிக்கப்பட்டுள்ள ஈசுரத்துவத்தைக் கவனிப்போம்; நீ ஈசுர னிடத்திலே சரணடைந்து, அவ் விஷயமாக ஏற்படும் கூச்சமும், பயமு மாகிய மூட வுணர்ச்சிகளை யெல்லாம் உதறிவிடு; நாம் ஈசுர நாமத்தைத் துதித்துக் கொண்டாடினால் அதற்காகப் பிறர் என்ன சொல்லப்போகின்றார்கள்!" என்று கூற வேண்டும்.

469. பக்தியின் இலக்ஷணம்:

ஈசுர பக்தியானது அபூர்வமான ஒன்று. மனிஷிக்குப் புருஷனிடத்திலேயுள்ள பரிபூர்ண அன்பைப்போல ஈசுர னிடத்திலே பரிபூரண பற்றுதல் இருந்தால் மாத்திரந் தான் பக்தி ஏற்படும். இத்தகைய பரிசுத்த பக்தியை அடைதல் மிகவும் அருமை. ஈசுரனிடத்திலே மனமும் ஜீவனும் ஐக்கியப்படுத்தப்பட்டால் மாத்திரந்தான் அப் பக்தி யுண்டாகும். இவ்விதி பக்தி நிலை ஒருவனுக் குண் டாகிவிட்டால், துப்பாக்கியால் குறி வைத்து ஒன்றைச் சுடுபவனுக்குப் பேச்சும் மூச்சும் நின்றுவிடுவதுபோல பேச்சு மூச்சுக்க ளெல்லாம் நின்றுவிடும். கும்பகம் தானே யுண்டாகி விடும்.

470. பக்தியைப் பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கும் ஒரு சிஷ்யருக்கும் நடந்த சம்பாஷணை:

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு சமயம், தம்முடைய சிஷ்யர் களுள் ஒருவரை நோக்கி, "கோபிகாஸ்திரீகளுக்கு கிருஷ் ணர் விஷயத்தில் ஏற்பட்டிருந்த பக்தி மிகவும் ஆச்சரிய

மானது; தமல விருக்ஷமானது இருண்ட நிறமாய் கிருஷ்ணனைப் போன்றிருக்கும். அதனால் அவர்கள் அந்த விருக்ஷத்தைக் கண்ட மாத்திரத்தில் கிருஷ்ணனுடைய பக்தியால் பீடிக்கப்பட்டவர்களாவார்கள்.'' என்றார். இதைக் கேட்டு சிஷ்யர், ''கௌரங்கர் விஷயமும் இப்படிப்பட்டதுதான்; அவர், தமக்கெதிரிலிருந்த ஒரு வனத்தைப் பார்த்து, அது கிருஷ்ணனுக்குரிய பிருந்தாவனம் போன்றிருந்தபடியால், அதை, பிருந்தாவன மென்றே நினைத்தார்'' என்றார். அதன்மேல் ஸ்ரீ ராமகிருஷ்ணர், ''ஆ! ஆ!! இதுவே சிறந்த பக்தி; இந்த பக்தியானது அவர்களிடம் பொங்கித் ததும்பிப் பூரணமா யிருந்தது; இவ்வகைப் பக்தியில் சிறிதேனும் ஒருவன் பெறுவானானால் அவனே மகா பாக்கியவந்தனாவான்'' என்றார்.

471. பக்தனுடைய தன்மை, குழந்தையின் தன்மை போன்றிருக்கு மென்பது:

குழந்தையினுடைய நிஷ்களங்கமான தன்மை மிகவும் சந்தோஷகரமானது. குழந்தை, உலகத்தின் ஐசுவரியங்களெல்லாம் கருதாமல் ஒரு பொம்மையையே பெரிதாக மதிக்கும். அதுபோல, ஈசுரனிடத்திலே விசுவாசமுள்ள பக்தனும் அவரை யன்றி வேறொன்றையும் மதியான். மற்றையரோ உலக சம்பந்தமான கௌரவத்தையும், ஐசுவரியத்தையுமே பெருமையாகப் பாராட்டுவார்கள். அவற்றைத் தள்ளி ஈசுரனை மாத்திரம் கருத வேண்டுமென்று நினைக்கமாட்டார்கள்.

472. பக்தியால் பாவம் நீங்கு மெனல்:

ஏ மானிடனே! ஈசுவரனுடைய பரிசுத்த நாமத்தை பக்தியுடனே பாடுவாயாக; அவ்வாறு பாடினால் ஒரு பஞ்சு மலையானது ஒரு சிறிய தீப்பொறியால் எப்படி நாசமாய் விடுமோ அப்படியே உன்னுடைய மலைபோன்ற பாவமும் நாசமாய்விடும்.

473. பயத்தினற் செய்யும் உபாசனையின் தன்மை:

'நாம் தெய்வ உபாசனை செய்யாவிட்டால் நரகாக்கினியிலே கிடந்து வேதனைப்பட வேண்டுமே' என்னும் பயத்தினால் செய்யப்படும் உபாசனையானது ஞானப்பியாசிக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது; ஆயினும், இது ஆத்ம ஞானத்தினுடைய தாழ்மையான முதற்படியைக் குறிக்கும்; இதை யுணராமல் சிலர் இதுவே எல்லா நன்மையுந் தருமென்று கருதுகின்றார்கள். இது ஆத்ம ஞானத்தின் உயர்ந்தபடியாகாது. ஆத்ம ஞானத்திலே உயர்ந்தபடி வேறொன்றிருக்கின்றது; அதாவது, ஈசுரனைப் பிதாவாக அல்லது மாதாவாகக் கருதிப் பக்தி செலுத்துதலாம்.

474. பாவ பக்தியும், பிரேமையும்:

பாவபக்தியானது மாங்காயைப் போன்றது; பிரேமையானது மாம்பழம் போன்றது.

475. பிரேமையின் தன்மை:

பிரேமையானது, சச்சிதானந்த சொரூபராகிய ஈசுவரனைக் கட்டுதற்கு ஒரு கயிறு போன்றதாம். இக் கயிற்றை

யுடைய பக்தன், ஈசுவரனைத் தனது ஆட்சிக்குள் அடக்கி வைத்துக்கொள்வான். அவன் அவரைக் கூப்பிடுகின்ற பொழுதெல்லாம் அவர் அவனிடம் வருவார்.

476. பிரேமையின் ஸ்தானம்:

மாம்சத்துக்குள்ளே எலும்புகள் இருக்கின்றனவென்றும், எலும்புக்குள்ளே மஜ்ஜை யிருக்கின்ற தென்றும், அதற்கும் அதற்குக் கீழுள்ள மற்றவற்றிற்கும் அடியில் பிரேமை யிருக்கிற தென்றும் பாரஸீக கிரந்தங்கள் கூறுகின்றன.

477. பக்தியால் கடவுள் மென்மையாக்கப்பட்டு விடுவ ரென்பது:

ஸ்ரீ கிருஷ்ணர், திரிபங்கர் (அதாவது, வெவ்வேறாக மூன்று பக்கங்களில் வளைந்தவர்) என்று பலரால் அழைக்கும்படி அத்தன்மையை அடைந்திருக்கின்றார். மென்மையான ஒரு வஸ்துவே இவ்வாறு வளையக்கூடும். கிருஷ்ணர் மெல்லிய தன்மையை அடைந்திருக்கின்றார். அதனாலேயே இவ்வாறு வளையுந் தன்மை அவருக்கேற்பட்டிருக்கிறது. அவரை மென்மை யுடையவராக்கியது பக்தியே.

478. ஈசுர சிருஷ்டியைக் கவனிக்காமல் ஈசுரனையே கவனிக்கவேண்டு மெனல்:

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு சமயம் கேசவரை நோக்கி, "பிரஹ்ம சமாஜத்தவர்கள், ஈசுவரனுடைய சிருஷ்டியின் மகிமைகளைப்பற்றி என் அதிகமாக வருணிக்கின்றார்கள்? இதனால் யாது பயன்? ஈசுரன், சூரிய சந்திர நக்ஷத்திராதி

களே யெல்லாம் செய்திருக்கிறார். எனினும், அவரை விட்டு இவற்றைச் சிந்திப்பதால் சிறந்த பயன் ஏற்படமாட்டாது. ஒருவரால் ஒரு அழகான தோட்டம் உண்டாக்கப்பட்டிருந்தால், சிலர் அதிலுள்ள சிறந்த புஷ்பங்களையும், பழங்களையும் பார்த்துச்சந்தோஷித்துக்கொண்டு ஒரு பயனுமின்றித் திரிவார்கள். சிலர், அத் தோட்டத்திற்குச் சொந்தக்காரனைத் தேடி அவனைநாடி சிநேகங் கொண்டு அச் சிநேகத்தால் தோட்டத்திலுள்ள பழங்களைத் தின்று இன்பத்தை அனுபவித்து அது தீர்ந்தவுடன் தோட்டத்தைக் கவனியாமல் தோட்டக்காரன் சேர்க்கையால் எப்பொழுதும் மனத்திருப்தியை அடைவார்கள். இதுபோலவே ஈசுர சிருஷ்டிகளைப் பெருமையாக நினைத்துத் திரிவோர் அம்மயக்கத்திலேயே அழுந்தி ஒரு பயனுமற் றிருப்பார்கள்; ஈசுரனை அடித்தவர் அச் சிருஷ்டிகளின் தன்மையை இன்னதென் றுணர்ந்து தள்ளி ஈசுரனால் எப்பொழுதும் இன்பத்தையே அடைவர்'' என்று கூறினர். ஆதலால், மித்தையாகிய தோற்றங்களை விட்டு ஈசுரனையே நாடி அவரிடம் பக்தி செலுத்த வேண்டும்.

479. மனிதர்கள் ஈசுர சிருஷ்டிகளை உயர்வாகப் பேசுதற்குக் காரணம்:

மனிதர்கள், தங்களுக்குரிய பணத்தையும், வீடுகளையும், பாத்திர பண்டங்களையும் பெரியனவாக மதிப்பதுபோல, ஈசுவரனும் தம்முடைய சொந்த சிருஷ்டிகளாகிய சூரியனையும், சந்திரனையும், நக்ஷத்திரங்களையும், மற்று

முள்ளவற்றையும் உயர்ந்தனவாகக் கருதுவா ரென்று நினைக்கிறார்கள். அதனாலேயே அவர்கள், அவருடைய சிருஷ்டிகளைப்பற்றி உயர்வாகப் பேசினால், அவருக்குச் சந்தோஷ முண்டாகு மென்று கருதி, ஈசுர சிருஷ்டிகளை உயர்வாகப் பேசுகின்றார்கள். இவ்வாறு பேசுவதில் புத்தியைச் செலுத்துவதைக் காட்டிலும் ஈசுரனிடத்தில் பக்தி கொள்ளும் விஷயத்தில் செலுத்தல் நலம்.

480. ஈசுர பக்தியில் சிறிதேனும் உள்ளவன், அவருடைய மற்ற சிருஷ்டிகளைப்பற்றிக் கவனிக்கமாட்டா னென்பது:

ஒரு சாராயக் கடையிலே ஒருவன் புகுந்து தனக்குப் போதுமான ஒரு கிண்ணம் சாராயத்தைக் குடித்துவிட்டால், அவனுக்குத் திருப்தியான லாகிரி யுண்டாகிவிடும். அதன்மேல் அவன் அங்குள்ள சாராயப் பீப்பாக்களில் உள்ள சாராயத்தை இவ்வள விருக்குமென்று அளவிடுவதி லாவது, வேறு விஷயங்களிலாவது தன் புத்தியைச் செலுத்தமாட்டான். தான் குடித்த சாராய வெறியால் பிரமை கொண்டு வீட்டிற்குச் சென்று பேசாமற் படுத்துக் கொள்வான். இவனைப் போலவே ஈசுர பக்தியில் தனக்குப் போதுமானதைக் கொண்டவன் அதிலேயே லயித்து விடுவான்; அவருடைய சிருஷ்டிகளில் தன் புத்தியைச் செலுத்த மாட்டான்.

481. தீவிர பக்தியே இக் கலிகாலத்துக் கேற்றதெனல்:

பக்திகளில் தீவிர பக்தி யென்று ஒன்றுண்டு. அதாவது: ஒருவன், காளிதேவியை நோக்கி, 'ஜயகாளி' என்று

இடை விடாமல் கத்திப் பிரமை கொள்ளுதல், அல்லது, விஷ்ணுவை நோக்கி, தூக்கிய கரங்களுடன், 'ஹரி' என்று கூவி ஸ்தோத்திரஞ் செய்துகொண்டு பித்தனைப் போன்று ஆடுதலாம். இக் கலியுகத்திலே இவ்விதமான பக்தியே மிகவும் பொருத்தமுடையது; அடக்கமான தியான விதங்களைக் காட்டினும் இதுவே சீக்கிரம் பலனைத் தரும்.

482. பக்தியிலும் மூன்றுவித குணங்கள் உண்டென்பது:

இலௌகீக நடத்தையில் எப்பொழுதும் சத்துவம், இரஜஸ், தாமஸம் என்னும் மூக் குணங்களும் அமைந் திருப்பதுபோலவே, பக்தியிலும் சாத்வீகம், இராஜஸம், தாமஸம் என்னும் குணங்கள் உண்டு. சாத்வீகம் தாழ்மை யையும், இராஜஸம் கூச்சலையும், தாமஸம் மிருக சக்தி யையு முண்டாக்கும்.

சாத்வீக பக்தி யுடையவன், தனது மதானுஷ்டானத் தை இரகஸ்யமாக நடத்துவான்; அதனால் அவன் இராக் காலத்தில் கொசுகு வலைக்குள் தன் படுக்கையி லிருந்த படியே ஈசுரனைத் தியானஞ் செய்வான். அக் காரணத்தால் அவன் காலையில் தாமதமாக எழுந்து வெளியில் வருவான்; அவன் அவ்வாறு எழுந்து வருவதைக் கண்டு அவனுடைய நண்பர்கள் அவனிடத்தி லுள்ள இரகசியத்தை உணரா மல், "இரவில் உறக்க மில்லாதிருந்ததால் இவன் இவ்வாறு சிதிலித்து எழுந்து வருகிறான்" என்று கூறுவார்கள். உலகடைய சரீர போஷணையைப்பற்றி அவனுக்குச் சிறி ஈடுபாடு இல்லையாயிராது. அவனுடைய தேக இரட்சிப்புக்குக்

கொஞ்சம் சோறும், சிறிது மரக்கறியு மிருந்தால் போதும். ஊனிலோ உடையிலோ அவனுக்கு இடம்பம் ஏற்படாது; அவனுடைய வீட்டில் பாத்திர பண்டங்கள் முதலியவற்றில் ஏற்படும் அலங்கார மொன்று மிராது; அவன் ஒரு பொழுதும் தற்புகழ்ச்சியை விரும்பவேமாட்டான்.

இராஜஸ பக்தனுக்கு சரீரத்திலே பேதத்தை உண்டாக்குகின்ற காட்சிக் குறிகளிருக்கும். கழுத்தைச் சுற்றிலும் உருத்திராக்ஷம், துளசிமணி முதலியவற்றாற் செய்யப்பட்ட மாலைகளிருக்கும்; அம் மாலைகளிலே இடையிடையில் சிற்சில பொன்மணிகளும் கோக்கப் பட்டிருக்கும்; இன்னும் அவன் பூஜா காலத்திலே பட்டை உடுத்திக்கொள்ளுதலும், இடம்பமாகவும் சிறப்பாகவும் பூஜை நடத்துதலும், ஆகிய வெளிப் பாவனைகளிலே மிகவும் விருப்புடையவனா யிருப்பான்.

தாமஸ பக்தியுடையவனுக்கு ஈசுரனிடத்தில் ஒரு மூட்டுத்தனமான விசுவாச முண்டு. திருடர்கள் மனிதர்களிடத்திலுள்ள பொருள்களைப் பலாத்காரமாகப் பறிப்பது போல, அவன் ஈசுர கிருபையை வலிதில் பெற்றுக்கொள்ள முயல்வான். அவன், "நான் ஈசுரனுடைய நாமத்தைக் கூறி விட்டேன்; இனிமேல் எனக்குப் பாவமே யில்லை; நான் அவருடைய புத்திரன்; அவருடைய ஐசுவரியத்தை அனுபவித்தற்கு பாத்தியஸ்தன் நானே" என்று ஆத்திரத்தோ

அதா

என்று

26-வது அத்தியாயம்

ஈசுர கருணை

483. ஈசுர கிருபையால் பரிசுத்த புருஷர்கள் அடையும் நிலைமையும், சாதாரண மனிதர்கள் அடையும் நிலைமையும்:

"மலேயா என்னும் இளங்காற்று வீசும்பொழுது அதனால் உரமான விருக்ஷங்களெல்லாம் சந்தன மரங்களாக மாற்றப்பட்டுவிடும்" என்றும், "உரமில்லாத மூங்கில், வாழை முதலிய விருக்ஷங்கள் மாறுதலடைவதில்லை" என்றும் பெரியோர் கூறுவார்கள். இதுபோலவே, பக்தியும், பரிசுத்தமும் உள்ள மனிதர்களிடம் ஈசுர கிருபை இறங்குகிற சமயத்தில் அவர்கள் மகாத்மாக்களாக மாறி ஈசுரத்துவம் அடைந்துவிடுவார்கள். பயனற்ற உலகினர்கள் தங்கள் இயற்கையினின்றும் மாறுதலடையாமல் நின்றுவிடுவார்கள்.

484. உலக ஆசையால் கலங்கிய மனத்தில் [illegible] ஜோதி பிரதிபலிக்காதெனல்:

கலங்கலோடு புரண்டு செல்லும் தண்ணீரில் [illegible] டத்திலே பூரணசந்திரன் நன்றாகப் பிரதிபிம்பித்துக் காண்பிதறுண்ட சாயைகளாகப் பிரதிபலிக்கும்; இதுபோல உலக ஆசைக்களிஞலும், ஆத்திரங்களாலும் கலங்கிய மனத்தில் ஈசுரஜோதி பரிபூரணமாகப் பிரதிபலிக்காது.

485. ஈசுர கிருபை எப்பொழுதும் பக்தர்கள் மீது சென்றுகொண்டிருக்கிற தென்பது:

ஒரு பரிசுத்த புருஷர், ஈசுர நாமத்தை மௌனமாக ஜெபித்துக்கொண்டே அந்த ஜபத்திற்குக் கணக்காகும்படித் தமது கழுத்தி லணியப்பட்டிருக்கும் உருத்திராக்ஷமாலையி லுள்ள உருத்திராக்ஷமணிகளை ஒவ்வொன்றாகத் தள்ளிக் கொண்டிருப்பது வழக்கம். ஒரு சமயம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரை நோக்கி, "நீ என் ஓரிடத்தையே பற்றிக்கொண் டிருக்கிறாய்? மேலே செல்!" என்று கூறினர். அதற்குப் பரி சுத்த புருஷர், "ஈசுவர கிருபையின்றி மேலேறிச் செல்ல முடியாதே" என்றார். அதைக் கேட்டு ஸ்ரீ ராமகிருஷ்ணர், "அவருடைய கிருபையாகிய இளந்தென்றல் எப்பொழு தும் உன் தலைமீது வீசிக்கொண்டிருக்கின்றது; சம்சார சாகரத்தை நீ வேகமாகக் கடக்க விரும்பினால் உனது மன மாகிய படகின், விருப்பமாகிய பாயைவிரித்துப் பந்தமாகிய கட்டை அவிழ்த்துவிடு" என்று கூறினர்.

486. சுறுசுறுப்புள்ளவர்களே ஈசுர கிருபையால் பயனடைவார்க ளென்பது:

ஈசுவர கிருபை யென்னும் காற்றானது இடைவிடா மல் எப்பொழுதும் வீசிக்கொண்டே யிருக்கின்றது. சம்சார மாகிய சாகரத்தின் நடுவிலே தங்கள் மனமாகிய கப்பலி லேறியிருக்கும் சோம்பேறிகளாகிய மானுஷிகள் அக்காற் றின் உதவிகொண்டு மனக் கப்பலை நடத்தி அச் சாகரத் தைக் கடந்து முத்தியாகிய கரை சேருவதில்லை. பலரும்

சுற்றுமுற்புமுள்ளவர்கள், அக் காற்றுத் தங்கள் மனமாகிய கப்பலில் வந்து தாக்கும்படி விருப்பமாகிய பாயை விரித்து வைத்துக்கொண்டே யிருக்கின்றார்கள். அதனால் அவர்கள் வெகு சீக்கிரமாகவே சமுசாரசாகரத்தைத் தாண்டித் தாங்கள் அடையவேண்டிய இடத்தை அடைந்துவிடுகிறார்கள்.

487. ஈசுர கிருபை தானே ஏற்படும்வரையில் முடிவான இலட்சியத்தை அடைதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கவேண்டு மெனல்:

காற்றில்லாத சமயத்தில் உஷ்ணத்தைத் தணித்துக் கொள்ள நாம் ஒவ்வொருவரும் தனித்தனியே விசிறியால் விசிறிக்கொள்கின்றோம். தனவந்தர், தரித்திரர் ஆகிய எல்லோர்மீதும் சமத்துவமாக வீசும் இளந் தென்றலானது வீச ஆரம்பித்தவுடனே நாம் விசிறியைக் கீழே வைத்து விடுகிறோம்; தென்றற் காற்றினால் நம் உஷ்ணந் தணிந்து நம் முடைய மனநோக்கம் நிறைவேறுகிறது. இதுபோல, எல்லோருக்கும் பொதுவாகிய ஈசுவர கிருபை நம்மீது ஏற்படும்வரையில் நமது முடிவான இலட்சியத்தை அடைதற்கு நாமே ஜபதபங்கள் செய்து இடைவிடாமல் முயற்சி செய்யவேண்டும். பாக்கியவசத்தினால் ஒருவருக்கு அக் கருணையாகிய உதவி கிடைத்துவிடும் பக்ஷத்தில் அவர்க்கு ஒரு முயற்சியும் தேவையில்லை.

488. ஈசுர கிருபை எல்லோரையும் ஒரேவிதமாகவே பரிசுத்தம் செய்யு மென்பது:

மீன்களில் சிலவற்றிற்குப் பலவகை முட்கள் உண்டு; சிலவற்றிற்கு ஒரே முள்தான் உண்டு. இப்படி யிருந்தா

லும் மீன் தின்பவர்கள் அவற்றிலுள்ள முட்கள் சொஞ்ச மாயினும் அதிகமாயினும் அவற்றை யெல்லாம் நீக்கிவிட்டுப் பரிசுத்தஞ் செய்தே தின்பார்கள். இவர்களைப்போலவே மனிதர்களிற் சிலர் அநேக பாவங்களைச் செய்திருந்தாலும், சிலர் சிறிது பாவத்தைச் செய்திருந்தாலும் அவர்கள் இரட்சணையடையும் பக்குவ காலம் வந்தவுடனே ஈசுர கிருபையானது அவர்க ளெல்லோருடைய பாவங்களையும் ஒரேவிதமாகவே நீக்கி அவர்களைப் பரிசுத்தம் செய்து உய்யும்படி செய்யும்.

489. குருவினிடத்தே வெறுப்புற்றுச் சென்ற முமுட்சு தன் சொந்த முயற்சியால் பயனடைய முடியாமல் மீண்டும் அவரிடத்துக்கே வந்து சேருவா னென்பது:

நடுக்கடலிற் செல்லும் ஒரு கப்பலின் பாய்மரத்தின் மேலே உட்கார்ந்து சென்ற காகமானது அவ்விடத்தை வெறுத்து வேறிடம் செல்லக் கருதி நாலாபக்கங்களிலும் பறந்து பார்க்கும்; அப்போது பாய்மரத்தைத் தவிர அதற்கு வேறொரு ஆதரவும் ஏற்படாது; அதனால் அக் காகம் பறந்து பறந்து இளைத்துப்போய் மீண்டு வந்து, 'இந்தப் பாய் மரத்தைத் தவிர நமக்கு இங்கே வேறு ஆதரவு இல்' என்று அதன்மேல் உட்கார்ந்துகொள்ளும். இது போல, சாதாரண முமுட்சு ஒருவன், தனக்கு நன்மையை அடைவேண்டு மென்ற எண்ணமும், தீர்க்காதபவமுகினால் உபதேசிக்கப்பட்ட அநுஷ்டானங்களும், அவற்றிலிருந்த நம்பிக்கையை இழ

ந்து, அவரிடத்திலே விசுவாசமற்றுத் தன்னுடைய சொந்த முயற்சியிலே தான் ஈசுரனை யடையக்கூடுமென்று நிச்சயித்து உலகத்திற்கு மீண்டும் சென்று பயனற்ற பல முயற்சிகளைச் செய்து பார்த்து ஒன்றும் பிரயோசன மில்லாமல் அயர்ந்து போய்ப் பழைய குருவினிடத்துக்கே அவருடைய கிருபையை நாடித் திரும்பி வருவான்.

490. மனிதன், திடீரென்று உயர்ந்த பதவியடைய முடியாதெனினும், ஈசுர கிருபையால் ஒரு சமயம் அடைதலும் கூடுமென்பது:

திடீரென்று ஒன்றும் நடைபெற மாட்டாது; ஒரு மனிதன் மேலான ஸ்தானத்தை அடையவேண்டி மாஞல் பல நாள் நீண்ட அப்பியாசங்கள் பல செய்யவேண்டும். பாபு துவாரகநாதமித்திரர் ஒரே நாளில் நியாயஸ்தலத்தின் அதிபதி யாய்விடவில்லை. அவர் அந்தப் பதவிக்கு வருவதற்கு அநேக வருஷங்கள் பல நீதிசாஸ்திரங்களைப் படித்து இடைவிடாமல் கடினமான வேலைகளைச் செய்துவந்தார். இந்தக் கஷ்டங்களை அனுபவிக்க இஷ்டமில்லாத வர்கள் வக்காலத்தே கிடைக்காத வக்கீல்களாகத்தான் இருக்கவேண்டும். ஆயினும், சரஸ்வதியின் கிருபையினாலே காட்டு மனிதனாயிருந்த காளிதாசன் திடீரென்று மகா கவியாக ஆய்விட்டதுபோல, ஈசுர கிருபையினாலே ஒருவன் திடீரென்று உயர்வை அடைந்துவிடவும் கூடும்.

491. பக்தனுக்கு ஈசுரன், தமது ஈசுரத்துவத்தை அளிப்பா ரென்பது:

"பக்தனவன், எப்பொழுதாவது ஈசுரனுடனே ஐக்கிய மடைவதுண்டா?" எனில், உண்டு. எப்படியெனில்,

ஒரு வேலைக்காரன் பழமைப்பட்டவனுயும், யோக்கியதை யுள்ளவனுயு மிருந்தால், அவனுடைய நல்ல நடக்கையை உத்தேசித்து எஜமானன் சந்தோஷித்து, அவனை அழைத்துப்போய்ப் பலாத்காரமாகத் தன்னுடைய ஆசனத்தில் உட்காரவைத்து மற்ற ஜனங்களெல்லாம் தனக்குக் கீழ்ப்படிந்து நடந்ததுபோலவே அவனுக்கும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்று எல்லோருக்கும் கட்டளையிட்டுவிடுவான். வேலைக்காரன் அந்தக் கௌரவத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தாலும் எஜமானன் அவனைக் கட்டாயப்படுத்தியாவது மேற்கண்டபடியே செய்தே தீருவான். அதன்பின் வேலைக்காரன் எஜமானனுடு சமத்துவமான நிலைமையை அடைந்துவிடுவான். இந்த நிலைமை அவனுடைய யோக்கியதன்மையினுலே ஏற்பட்டுவிடும். இதுபோலவே, பிரபஞ்சத்துக்குக் கர்த்தாவாகிய ஈசுரனும், தம்முடைய வேலைக்காரனுகிய பக்தன் நீண்ட காலமாகச் செய்த தபஸினுலும், பக்தியனுஷ்டானங்களினுலும் சந்தோஷமடைந்து தம்முடைய ஈசுரத்துவத்தை அவனுக்கு அளித்து விடுவார். அவன் தன்னுடைய வேலைகளாகிய தவம் முதலியவற்றை விட்டு ஈசுரனுடன் ஒன்றுகக் கலந்திருப்பதற்குப் பிரியப்படாவிட்டாலும் அவர் அவனைக் கட்டாயப்படுத்தியாவது இந்த உயர்ந்த நிலைமையில் வைத்துவிடுவார்.

492. ஈசுரன் நம்மை உலக மாயையில் வீழ்ந்து விடாதபடி காத்து இரட்சிக்கின்றபொழுதுதான் நம்மீது விசேஷமான கிருபையுடையவரென்று சொல்லப்படுவார்:

ஈசுரன் நம்மைப் போஷித்துவருவதைக் கொண்டே அவரை நாம் கிருபையுடையவர் என்று கூறுதல் கூடாது.

ஏனென்றால், உலகத்தில் ஒவ்வொரு பிதாவும் தன் குழந்தைகட்கு ஆகாரம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறான். அதுபோல, ஈசுரன் உலகத்திலுள்ள எல்லோரையும் போஷிக்கக் கடமைப்பட்டவரே. பின்னர் எப்பொழுது அவரைக் கிருபை யுடையவரென்று சொல்லவேண்டுமெனில், நாம் வழி தவறிக் கெட்ட மார்க்கத்தில் போய்விடாத படிக்கும், உலக மாயையில் வீழ்ந்து விடாதபடிக்கும் அவர் நம்மைக் காத்து இரட்சிக்கின்றபொழுதுதான் அவரை விசேஷமான கிருபையுடையவர் என்று சொல்லவேண்டும்.

493. ஈசுர கிருபையால் எத்தனையோ ஜன்மங்களாகச் செய்த பாபங்களும் தீரு மென்பது:

எத்தனையோ நூற்றாண்டுகளாக இருள் நிறைந்துள்ள ஓர் அறையில் ஒரு தீபம் கொண்டுவரப்பட்டவுடனே அந்த இருளெல்லாம் சிறிதுமின்றி நீங்கிவிடும். இது போல, ஒரு பக்தன்மீது ஈசுர கிருபையானது பட்டமாத்திரத்தில், எத்தனையோ ஜன்மங்களாகச் செய்து சேர்த்து வைக்கப்பட்ட அவனுடைய பாபங்களெல்லாம் அடியோடு நீங்கிவிடும்.

494. முபற்சி யுள்ளவரே ஈசுரனைப் பார்த்தல் கூடுமென்பது:

ஒரு கிருகஸ்தனுகிய பக்தன் ஒரு சமயம் ஸ்ரீ ராம கிருஷ்ணரை நோக்கி, "ஸ்வாமி! தாங்கள் ஈசுரனைத் தரிசித்திருப்பதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன்; ஆகையால், நானும் அவரைப் பார்க்கும்படி நீங்கள் செய்யவேண்டும்; மனிதன் ஈசுரனுடன் எப்படிப் பழக்கம் செய்துகொள்

ஸல் கூடும்? அவ் விவரத்தையும் எனக்குத் தெரிவிக்க வேண்டும்'' என்று கூறினன். அதற்கு ஸ்ரீராமகிருஷ்ணர், ''நீ கேட்டது ஈசுரனுடைய இச்சையைப் பொறுத்ததாயிருக்கிறது; ஈசுரனைத் தரிசிப்பதானால் அதற்குரிய முயற்சிகளைச் செய்யவேண்டும்; சும்மா விருந்தால் ஈசுரதரிசனம் கிட்டாது. நீ ஓர் ஏரியிலுள்ள மீனின்மேல் விருப்பங் கொண்டு அந்த ஏரிக் கரையின்மேல் சும்மா உட்கார்ந்து 'இதிலுள்ள மீன் எனக்கு வேண்டும்' என்று சும்மா விருந்தால் அந்த மீன் உன் கைக்கு வருமா! அந்த மீனைப் பிடிக்கவேண்டுமானால் நீ ஒரு கோலும், தூண்டில் முள்ளும், மீனுக்குரிய இரையும் சம்பாதித்துக்கொண்டு வந்து ஒரு தூண்டிலைச் செய்து அதில் மெ இரையைக் கோத்துத் தண்ணீருக்குள் விடவேண்டும். அப்படி விட்டால் மீன் வந்து அந்த இரையைக் கவ்வித் தூண்டிலில் சிக்கிக் கொள்ளும். அப்போது நீ கரையி லிருந்தபடியே வெகு சுலபமாக அந்த மீனைப் பிடித்துக்கொள்ளலாம். இதுபோலவே, ஈசுரனைத் தரிசிப்பதற்கும் அதற்குரிய சில காரியங்களைச் செய்யவேண்டும். அப்படி யொரு காரியத்தையும் செய்யாமல் நீ உனக்கு ஈசுரனைக் காட்டவேண்டுமென்று என்னிடம் சொல்லுகிறாய்; நீ இவ்வாறு கேட்பது, வெண்ணெயை விரும்பிய ஒருவன் அதற்குரிய ஒரு காரியத்தையும் செய்யாமல், மற்றொருவனிடத்தில் பாலைக் கடைந்து வெண்ணெயை எடுத்துத் தன் வாயில் கொண்டு வந்து வைக்கச் சொல்வது போலவும், மீனை விரும்பிய ஒருவன் அதைப் பிடிப்பதற்குரிய முயற்சி யொன்றும் செய்யாமல்

மற்றொருவனிடத்தில் அதைப் பிடித்துத் தன் கையில் வைக்கும்படி சொல்வதைப் போலவும் இருக்கின்றது'' என்று கூறினர். இதனாலேயே ஈசுவர தரிசனத்தை, அதற்குரிய முயற்சியினால் மாத்திரந்தான் அடையலாம் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

495. ஈசுர தரிசனத்துக்குரிய எல்லாக் காரியங்களையும் செய்த பின்னரே ஈசுர தரிசனம் கிட்டு மென்பது:

ஒருவன், அரண்மனையிலுள்ள அரசனைப் பார்க்க வேண்டுமானால் அரண்மனையின் எல்லா வாசல்களையுங் கடந்து செல்ல வேண்டும். அப்பொழுதுதான் அரசனைப் பார்க்க முடியும். அவன் முதல் வாசலைத் தாண்டிய வுடனேயே 'அரசன் எங்கே?' என்று தேடத் தொடங்கினால் அப்போது அதனால் அரசனைப் பார்த்தல் முடியாது; இதுபோலவே, ஈசுரனைத் தரிசிக்க விரும்புகிறவன், அவரை நெருங்குவதற்கான காரியங்களெல்லாவற்றையும் செய்து முடிக்கவேண்டும். காரியத்தின் தொடக்கத்திலேயே அவரைத் தேடினால் அவர் அகப்படமாட்டார்.

496. ஈசுரனை யடைவதற்குச் செய்யும் காரியங்களில் ஒன்றும் வித்தியாசமில்லை யென்பது:

ஈசுரனை அணுகுதற்கு இயற்றப்படும் கர்மங்களில் இன்னது கூடும், இன்னது கூடாது என்னும் நியதியில்லை. ஆதலில் ஆத்மனே! நீ ஈசுர தரிசனம் செய்ய இயற்றும் காரியங்களில் இன்னதுதான் அவனிடத்து இட்டுச் செல்லுமென்றும், இன்னது அழைத்துச் செல்லாதென்றும் அவற்

றைவிகற்பமுள்ளனவாக நினையாதே; எல்லாம் ஈசுரகிருபையைப் பொறுத்ததா யிருக்கிறது; அவரனுக்கிரகத்தைப் பெறுதற்கு நீ எக் கர்மம் புரியினும் அதனை உண்மையாகவும் மிக்க அவாவுடனும் செய்; அங்ஙனம் செய்தால் ஈசுரானுக்கிரகத்தினாலே உன்னுடைய காரியங்கள் அனுகூலமாகவே முடியும்; உன்னுடைய அனுஷ்டான நிபந்தனைகள் நிர்விக்கினமாக நிறைவேறும்; நீ ஈசுரனை யடையும் பொருட்டு உலகத்தைத் துறப்பதற்கு உன்னுடைய குடும்பக் கவலையானது இடையூறாயிருந்தால் அக் கவலை நீங்கும்படி ஈசுர கிருபையால் உன் சகோதரன் அக் குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளக் கூடும்; உன் மனைவியும் உன்னுடைய ஈசுர முயற்சிக்கு அனுகூலமாயிருப்பாள்; ஒருசமயம் ஈசுர கிருபையால் உனக்கு விவாகம் ஏற்படாமலே யிருந்து விடவும் கூடும்; எவ்விதத்திலும் நீ உலகப்பற்றுடையவனாயிருக்கமாட்டாய்; ஈசுரத்தியானத்திலேயே அழுந்தி விடுவாய்.

27-வது அத்தியாயம்

சுயானுபூதி நிலைமை

497. சமாதியிலுள்ள ஆனந்தம் இப்படிப்பட்ட தென்பது:

ஒருவன் சமாதியி லிருக்கும்போது அவனுடைய மனத்தின் நிலை எவ்வாறிருக்குமெனில், தண்ணீரை விட்டு வெளியில் பிடித்துப்போடப்பட்டுச் சிறிது நேரம் பிராண

பயத்தால் துடித்துக்கொண்டிருந்த மீனை மீண்டும் அத் தண்ணீரிலேயே எடுத்துப்போட்டால் அவ்வாறு போடப் பட்டவுடன் அம்மீனத்தகைய ஆனந்தத்தை அடையுமோ அத்தகைய ஆனந்தத்தை யுடையதாயிருக்கும்.

498. ஈசுரபாதத்தைச் சார்ந்த யோகியின் நிலை:

தத்துவ ஞானியினுடைய ஸ்பரிசவேதி யென்னும் கல்லாலே தொடப்பட்ட இரும்புக் கத்தியானது உடனே பொற்கத்தியாக மாறிவிடும்; அங்ஙனம் மாறினும் தன் னுடைய பழைய உருவத்தை வைத்துக்கொண்டேதா னிருக்கும்; அப்படி யிருந்தாலும் இரும்புக் கத்தியைப் போன்று கொடிய தொழில் செய்யும் தன்மையினின்று நீங்கிவிடும்; இதைப்போலவே, ஈசுரனுடைய பாதார விந் தத்தைச் சாரும் முயற்சியாலே ஜெயம் பெற்ற யோகி பரி சுத்த மடைவான்; அங்ஙன மடைந்தால் பூர்வ வடிவத் துடனேயே வெளித் தோற்றத்தில் காணப்படுவான்; எனி னும், அவன் அந் நிலைமை யடைந்த பின் எத்தகைய தீச் செயல்களையும் செய்யமாட்டான்.

499. சமாதி இன்ன தென்பதும் அதனை யுண்டாகும் விவேகமும்:

சமாதி யென்பது ஒன்றுருத் தன்மை; ஆத்மனே! நீ பரமாத்மாவினிட மிருந்து முதலில் இங்கே வருகிறாய்; பின்னர் அந்தப் பரமாத்மாவி னிடமே திரும்பிச் செல்கின் றாய்; உனது வியஷ்டித் தன்மை அவருடைய சமஷ்டித் தன்மையுடன் ஒன்றாய் விடுகின்றது; இதுதான் சமாதி

யென்பது. நீ மேற்கூறியவாறு பரமாத்மாவினிட மிருந்து வந்து ஞானத்தை யடைந்து புறப்பட்ட விடத்திற்கே திரும்பிச் செல்லும்போது அந்தப் பரமாத்மாவினிட மிருந்தே உன் ஞானமானது உண்டாயிற் றென்றும், ஜீவேச்வர ஜகத்துக்கள் ஒரே சக்தியின் வெவ்வேறு தன் மைகளா மென்றும் நீ உணர்கிறாய். அந்த ஜீவேச்வர ஜகத் துக்களில் ஈசுரத்துவமாகிய ஒன்றை நீ உறுதியாகப் பற் றிக்கொண்டால் அவை யெல்லாவற்றையும் அனுபவத்தில் அறிந்தவ னாகிறாய்.

500. சமஷ்டி ஞானத்தால் ஜீவன் அடையும் நிலை:

கடலிலுள்ள காந்த மலையானது, தனக்குச் சமீபத் தில் கப்பல் வந்தவுடன் அதனை யிழுத்து அதிலுள்ள இருப்பாணிகளை வெளிப்படுத்திப் பலகை முதலியவற் றைத் தனித் தனியாகப் பிரித்தெறிந்து கப்பலைத் தண் ணீருள் அமிழ்த்திவிடும். இதைப்போலவே, மனுஷிய ஜீவன் சமஷ்டி ஞானமாகிய ஈசுர சக்திக் கெதிர்ப்பட்ட பொழுது அந்தச் சக்தியானது ஒரு நிமிஷ நேரத்திலே மனிதத் தன்மைகளைப் போக்கி ஈசுவரனுடைய அகண்ட மாகிய ஆனந்த சாகரத்தில் ஜீவனை அமிழ்த்திவிடும்.

501. ஈசுர நிலைமையை அடைந்த ஜீவனின் தன்மை:

பாலானது பக்குவ மடையா திருக்கும்போது நீருட னே சேர்க்கப்பெற்றால் சுலபமாகக் கலந்துகொள்கின்றது; வெண்ணெயாக மாறிவிடும்போது தண்ணீரிற் போட்டா

ஜும் அஃ ததனோடு கலக்காமல் மேலே மிதந்துகொண்டு திற்கிறது. அதைப்போலவே, ஒரு ஜீவன் ஈசுர நிலைமையை அடைந்துவிட்டால், பக்குவமடையாத எண்ணற்ற மற்ற ஜீவர்களுடனே கலந்திருந்தாலும் அவர்களுடைய தீய சேர்க்கையினல் சிறிதும் பாதிக்கப்படமாட்டாது.

502. ஒருவன் ஈசுரனைத் தரிசித்த பின் அடையும் நிலை:

புது மணப் பெண்ணுகிய ஒரு பருவ மங்கை தனக்கு ஒரு குழந்தை பிறக்கும்வரை வீட்டுக் காரியங்களை மிகச் சிரத்தையுடன் கவனிப்பாள். குழந்தை பிறந்துவிட்டால் வீட்டிலுள்ள வேலைகளை யெல்லாம் அசட்டை செய்து விட்டுப் புதிதாகப் பிறந்த குழந்தையை எடுத்தணைத்து முத்தமிட்டுச் சீராட்டித் தாலாட்டி மிக்க ஜாக்கிரதையாக வளர்ப்பதிலேயே கவனத்தைச் செலுத்தி வருவாள். குடும்ப காரியங்களால் ஏற்படும் சந்தோஷத்தையும் பெரிதாக நினைக்கமாட்டாள். இதுபோலவே மனிதன், தான் அந்த ஞானத்தை அடைந்திருக்கும் வரையிலும் எல்லா விதக் கர்மங்களையும் செய்வதில் சிரத்தை யுடையவனு யிருப்பான்; அவன் தன் உள்ளத்திலே ஈசுர சாந்நித்தியத்தைத் தரிசித்துவிட்டால், உலக கர்மங்களில் திருப்தி படைவதை விட்டுவிடுவான்; ஈசுரனுக்குப் பணிவிடை செய்வதிலும், அவருடைய ஆக்ஞைப்படி நடப்பதிலும் சந்தோஷத்தை யடைவான். அந்தப் பரிசுத்தமான ஐக்கிய ஆனந்தத்திலிருந்து அவன் தன்னை விடுவித்துக்கொள்ளவே மாட்டான்.

503. அஞ்ஞானம் நீங்கிய பின் மனிதன் அடையும் நிலை:

தவளைக் குஞ்சினுடைய வாலிருக்கும்போது அது, தண்ணீரை விட்டு வெளியேறி நிலத்தில் சஞ்சரித்தல் முடியாது; ஆனால், அந்த வால் நீங்கிவிட்டாலோ அது நிலத்திலும் போய்ச் சஞ்சரிக்கும், நீரிலும் சஞ்சரிக்கும். அதைப் போலவே, அஞ்ஞான மிருக்கும் வரையில் மனிதன் உலகத்தை விட்டு நீங்கி ஈசுரனை யடைதல் முடியாது; ஆனால், அந்த அஞ்ஞானமானது நீங்கிவிட்டால் அவன் முக்தனாய் விடுவான்; அதன்மேல் அவன் ஈசுரனிடத்திலும் உலகிலும் சமமாகச் சஞ்சரிப்பான்.

504. ஸ்தூல தேகத்தில் பற்றில்லாதவரைத் துன்பஞ் சேரா தெனல்:

ஓர் இளந் தேங்காயின் மேல், ஆணியை அடித்தால் அந்த ஆணி மேலோட்டையுந் துளைத்து உள்ளேயிருக்கின்ற தேங்காயிலும் பாய்ந்துவிடும். முற்றியுலர்ந்த தேங்காயில் அந்த ஆணியை அடித்தாலோ, தேங்காய் ஓட்டில் ஓட்டாமல் உள்ளே விடுபட்டிருப்பதால் ஆணியானது ஓட்டில் பாய்ந்து அதனை உடைத்து உள்ளேயிருக்கும் தேங்காயில் பாயாமல் நின்றுவிடுகிறது. இதைப்போல், இயேசுவானவர் உலர்ந்த தேங்காயாயிருந்தார்; அவருடைய அந்தராத்மாவாகிய தேங்காய் ஸ்தூல சரீரமாகிய ஓட்டினின்றும் வேறாயிருந்தது; அதனால், அவர் சிலுவையில் சேர்த்து ஆணி யறையப்பெற்றபொழுதும் சரீர துன்

பங்கள் அவரைப் பாதிக்கவில்லை. அவர் சத்துருக்களுக்கு மன்னிப்புக் கேட்டார்.

505. சித்தர்களின் வகை:

உலகத்திலே காணப்படும் சித்தர்களுள், சொப்பன சித்தர், மந்திரசித்தர், ஹடசித்தர், கிருபாசித்தர், நித்திய சித்தர் என ஐந்துவகைச் சித்தர்களுண்டு. சொப்பனத்தில் ஈசுவர அருள் பெற்றுப் பரிபூரணத்துவம் அடைகின்றவர்கள் சொப்பனசித்தர்களாவர்; பரிசுத்தமான ஒரு மந்திரத்தின் உபாயத்தினாலே பரிபூரணத்துவம் அடைகின்றவர்கள் மந்திரசித்தர்களாவர்; ஏழையாயிருக்கும் ஒரு மனிதன் ஒரு புதையலைக் கண்டெடுத்ததன்மூலமாகவோ, ஒரு பணக்காரப் பெண்ணைக் கலியாணம் செய்ததன்மூலமாகவோ திடீரென்று பணக்காரனாய்விடுவதுபோலத் திடீரென்று ஒரு காரணத்தால் பரிபூரணத்துவமடைகின்றவர்கள் ஹடசித்தர்களாவர்; இப்படியே அநேக சித்தர்கள் எவ்விதமாகவோ திடீரென்று பரிசுத்தர்களாகிச் சுவர்க்கலோகமாகிய இராஜ்ஜியத்தில் நுழைகிறார்கள்; ஈசுர கிருபையாலே பரிபூரணத்வமடைகின்றவர்கள் கிருபாசித்தர்களாவர்; ஒரு மனிதன் ஒரு காட்டையோ பூமியையோ சொற்ப முயற்சியால் வெட்டிச் சீர்திருத்தும்போது பூர்வீகமான குளத்தையாவது கட்டிடத்தையாவது கண்டுபிடித்துவிடுவானானால் எவ்விதப் பிரயாசையுமின்றி அவற்றை உண்டாக்கியவனாய்விடுகிறான்; இதேபோல், சிலர் சொற்ப முயற்சியால் ஈசுரனைத் தியானிக்க ஈசுர கிருபை

யுண்டாய் அந்தப் பாக்கியவசத்தினாலே எளிதில் பரிபூரணத்துவ மடைந்துவிடுகிறார்கள். எப்பொழுதும் பரிபூரணத்துவ மடைந்துள்ளவர்கள் நித்தியசித்தர்க ளாவர்; சுரைச்செடி அல்லது பூசணிச்செடியில் புஷ்பம் தோற்றும்பொழுதே காயுடன் ஜனிப்பதுபோன்று என்றும் பரிபூரணமாயுள்ள ஆத்மாவானது பிறக்கும்பொழுதே சித்தனுப்பப் பிறக்கின்றது; அப்படிப் பிறக்கும் ஆத்மனும் பரிபூரணத்துவ மடைவதற்குச் சில முயற்சிகளைச் செய்வான்; அவனுக்கு அவை அவசியமில்லை யெனினும், அவற்றை அவன் ஏன் செய்யவேண்டு மெனில், மற்றையர் தன்னைப் பார்த்து அம் முயற்சிகளைச் செய்து பரிபூரணத்துவ மடைவதற்கே அவ்வாறு செய்வான்.

506. சித்தன் அடைகின்ற நிலைமை:

ஒருவன் சித்தனென்ற தன்மையை அடைந்துவிடும் போது பாகஞ் செய்யப்பெற்ற ஆகாரம்போலாய்விடுகிறான். உருளைக்கிழங்கோ அல்லது கத்தரிக்காயோ ஆகாரமாகச் சித்தமாகும்போது கன்றாக வெந்து சுவையோடு கூடியதாகின்றது; இதுபோலவே, மனிதனும் சித்தனுப்விட்டால் அதாவது பரிபூரணத்துவம் அடைந்துவிட்டால், அடக்கமும் வணக்கமும் உடையவனுப்விடுகின்றான். இதனாலேயே சித்தம் செய்த ஆகாரம் சித்தனுக்கு உவமையாகக் கூறப்பட்டது. இக் காரணம்பற்றியே வங்காளி பாஷையில் சித்தனுக்கும், சமைக்கப்பெற்ற ஆகாரத்திற்கும் 'சித்த' என்றே டையர் வழங்கப்படுகின்றது.

507. வியஷ்டி ஜீவன் பிரஹ்மசாகரத்தில் கலக்கும் விதம்:

பாதரசமுள்ள ஒரு பாத்திரத்தில் இடப்பட்ட ஈயத் துண்டானது சிக்கிரம் கரைந்து அதனுடன் கலந்துகொள் ளும்; அதைப்போலவே, வியஷ்டியாகிய ஜீவன் சமஷ்டி யாகிய பிரஹ்மசாகரத்தில் படிந்தபோது தன்னுடைய உலகவாழ்க்கையாகிய பந்தத்தை விடித்து அதில் ஐக்கிய மாகிவிடும்.

508. நிஷ்டையில் லயித்தவனுடைய தன்மை:

தன்னுடைய உரோமங்களில் பக்ஷிகள் கூடுகளைக் கட் டினாலும் கூட அவற்றை உணராமல், நிஷ்டையிலே தீவிர மாக இலயித்துள்ளவன், (அதாவது வெளியில் நடக்கும் எதையும் உணராமல் நிஷ்டை கூடியவன்) எவனோ அவன், உண்மையில் நிஷ்டையின் பரிபூரணத்துவத்தைச் சம்பாதி த்துக்கொண்டவனுவான்.

509. சமாதிநிலையில் ஸ்தூல உலகத்தைப்பற்றிய ஞாபகமுண்டா வென்பது:

"நிஷ்டாபரருக்குச் சமாதிநிலையிலே ஸ்தூல உலகத் தைப்பற்றிய ஞாபக முண்டா?" என்று ஒருவர், ஸ்ரீ இராம கிருஷ்ணரிடம் கேட்டபொழுது அவர், "சமுத்திரத்தினடி யில் மலைகளும், மேடுகளும், பிற வஸ்துக்களும் உள்ளன வெனினும், அவை மேலே காணப்படுவதில்லை. அது போலவே மனிதன், சமாதி நிலையில், சச்சிதானந்தமாகிய

அகண்டப் பரப்பையே பார்க்கிறான். விபஷ்டி போதமானது அந்த அகண்டப் பரப்பில் அடங்கி வெளிக்குத் தோற்ற மல் கிடக்கின்றது'' என்றார்.

510. மனிதன் உள்ளத்தில் ஈசுரன் தோன்றுவதற் கறிகுறி:

சூரியன் உதயமாகப் போவதை, அருணன் முன்னே தோற்றித் தன்னுடைய பிரகாசத்தால் தெரிவிப்பதுபோல், மனிதனுடைய உள்ளத்தில், சுயநலமற்ற தன்மையும், பரிசுத்தத் தன்மையும், நியாயமும் முன்னே தோன்றி, ஈசுரனுடைய வருகையைத் தெரிவிப்பனவாம். இத்தகைய உள்ளத்தில் ஈசுரன் எழுந்தருளுவா னென்பது திண்ணம்.

511. ஈசுரன் ஒருவனுடைய உள்ளத்தில் வருவதற்கு முன் நற்குணங்களை அங்கே அனுப்புவா ரென்பது:

ஒரு அரசன், தன்னுடைய வேலைக்காரன் தன்மீது விசுவாசங் கொண்டு தனக்குச் செய்யும் உபசரணைகளை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு அவனுடைய வீட்டிற்குச் செல்ல விரும்பினால், முதலில் அவன், தன்னை உபசரித்தற் குரிய கௌரவத்தை அடைந்துகொள்வதற்காகத் தனது அரண்மனையிலுள்ள நாற்காலிகளையும், ஆகார வஸ்துக்களை யும், தனக்கு வேண்டியவற்றையும் தானே அங்கனுப்பி விடுவான். அவ் வேலைக்காரன் தன் கௌரவத்திற்குத் தகுந்தபடி தன்னை வரவேற்று உபசரித்தற் காகவே அர சன் இவ்வாறு செய்வது வழக்கம். இதுபோலவே, ஈசுர னும் ஒருவனுடைய உள்ளத்தில் எழுந்தருளுவதற்கு முந்தி நாம் இருப்பதற்கு அவ் விருதயம் தகுதியுடையதா

யிருக்கும்பொருட்டு அங்கே அன்பு, மரியாதை, விசுவாசம் முதலியவற்றை அனுப்பிவிடுகிறார். (அதாவது: ஈசுரன் எழுந்தருளும் ஹிருதயத்தில் அன்பு முதலிய நற்குணங்கள் முந்தியே குடிகொண்டிருக்கும் என்பதாம்.)

512. ஈசுரனை அடைந்தவன் எப்பொழுதும் களங்கமற்றிருப்பா னென்பது:

இரும்பானது, ஸ்பரிசவேதியினால் (அதாவது இரசவாதத்தால்) பொன்னாக மாறிய பின்பு, மண்ணிற்குள் மறைக்கப்பட்டாலும், குப்பையில் எறியப்பட்டாலும், பொன்னாகவே யிருக்கும்; முந்தின இரும்பின் ஸ்திதிக்கு அது எப்பொழுதும் வராது. இதைப் போலவே, சர்வசக்தியுள்ள ஈசுவரனுடைய பாதார விந்தத்தை ஒரு முறை ஸ்பரிசித்தவன், உலகக் கூக்குரலுக் கிடையில் வசித்தாலும், காட்டில் ஏகாந்தத்தில் வசித்தாலும், உலக பந்த களங்கமானது அவனைப் பற்றாது. எப்பொழுதும் அவன் களங்கம் அற்றவனாகவே யிருப்பான்.

28-வது அத்தியாயம்

மு த் தி

513. எல்லோரும் ஈசுரனைத் தரிசிப்பார்களா வென்பது:

எந்த மனிதனும் எப்பொழுதும் சாப்பிடாமல் பட்டினியா யிருக்கமாட்டான். மனிதர்களிற் சிலர் காலை 9-

மணிக்குச் சாப்பிடுவார்கள்; சிலர் மத்தியானம் சாப்பிடுவார்கள்; வேறு சிலர் பிற்பகல் 2 மணிக்குச் சாப்பிடுவார்கள்; மற்றுஞ் சிலர் மாலையில் அல்லது சூரியாஸ்தமனத்துக்குப் பின் சாப்பிடுவார்கள். இதுபோலவே, எல்லா மனிதர்களும் இந்த ஜன்மத்திலாவது, அடுத்த ஜன்மத்திலாவது, பல ஜன்மங்கள் கழிந்தாவது படிப்படியாக ஈசுரனைத் தரிசித்தே தீருவார்கள். எவனும் எக்காலத்திலேனும் ஈசுரனைத் தரிசிக்காமலிருக்க முடியாது.

514. மனிதன் எப்பொழுது முக்தனுவான் என்பது:

பாக்குக்காயானது பழுத்துக் காய்வதற்கு முன் தனது சொந்தச் சாரத்தினால் தோலுடன் ஒட்டிக்கொண்டிருக்கிறது. அது பழுத்தபோது அந்தப் பசை உலர்ந்துவிடுகிறது. அப்பொழுது பாக்கு, தோலிலிருந்து விடுபட்டுவிடுகிறது. பாக்குக்காயை அப்போது ஆட்டினால் பாக்கு உள்ளே தோலுடன் ஒட்டாமலிருந்து குடுகுடுவென்று உருளும் சத்தம் கேட்கிறது. இதுபோல்வே, மனிதன் முத்தி கூடும் முதிர்ந்த நிலையை அடையும்வரையில் தனத்தினிடத்திலும் சுகத்தினிடத்திலும் உள்ள பற்றுனது அவனை உலகத்தோடு ஒட்டிக்கொண்டிருக்கச் செய்கிறது; அவன் யோகஞ் செய்து முத்தி யெய்துதற்கான பக்குவவத்தை அடைந்தபோது அவனிடத்துள்ள பற்று ஒழிந்துவிடுகிறது; அப்போதவன் உலகத்தில் ஒட்டாத் முத்தனுய்விடுகிறான்.

515. ஞானுக்கினியால் மனம் தகிக்கப்பட்டபின் உண்டாகும் நிலைமை:

ஒரு பொருளினிடத்துள்ள இயற்கைத் தன்மையை எப்போதும் மாற்ற முடியா தென்பது சாமானியருடைய அபிப்பிராயம்; அதை மாற்றிவிடலா மென்பது விவேகிகளின் அபிப்பிராயம்; விவேகிகளுடைய அபிப்பிராயமே சரியானதாம்; எப்படி யெனில், கரியை நெருப்பிலிட்டால், அந் நெருப்பினுல் அது தகிக்கப்படும்பொழுது அதன் கரிய நிறம் ஒழிந்து அது வெண்மையான சாம்பலாகிவிடுகிறது. அதைப்போலவே, ஜீவனே உலக பந்தத்தில் இழுத்துவிடுவதாகிய இயற்கைத் தன்மையுடைய மனமானது ஞானுக்கினியாலே தகிக்கப்பட்டுவிட்டால் அதன் இயற்கைத் தன்மை யொழிந்து பரிசுத்த மடைந்துவிடும். பின்னர், அது ஜீவனே உலக பந்தத்தில் கட்டுப்படுத்தும் கண்ணியாயிருக்கமாட்டாது, முத்தி வழியிற் செலுத்தக் கூடியதாகும்.

516. உலக பந்தத்தினின்றும் விடுபடுகிறவர் இன்ன ரென்பது:

ஆகாயத்தில் பறக்கவிடப்படுகின்ற இலக்ஷக்கணக்கான காற்றுடிகளுக்குள் ஒன்று அல்லது இரண்டுதான் கயிற்றை அறுத்துக்கொண்டு விடுபட்டுப் போய்விடும். இதுபோல, நூற்றுக்கணக்கான மனிதர்கள் யோக சாதனைகளைச் செய்யினும் அவர்களுள் ஒருவரோ அல்லது இருவரோதாம் உலக பந்தத்தினின்றும் விடுபடுவார்.

517. மனிதன் மாயையினின்றும் விடுபடும் சமயம் இன்ன தென்பது:

பேயால் பீடிக்கப்பட்டிருக்கும் மனிதன், எப்பொழுது தன்னைப் பேய் பிடித்திருக்கிறதென் றுணர்ந்துகொள்ளு கிறானோ அப்பொழுதே அந்தப் பேய் அவனை விட்டு நீங்கி விடுகிறது. அதுபோலவே, மாயையால் பீடிக்கப்பட்ட ஜீவன், தன்னை மாயை பற்றியிருக்கின்ற தென்று எப்போ ழுது தெரிந்துகொள்ளுகிறானோ அப்பொழுதே அம் மாயையினின்றும் விடுபட்டுவிடுவான்.

518. பிறப்பற்றவன் இன்னவ னென்பது:

வறுபட்ட தானியத்தைப் பூமியில் விதைத்தால் அது முளைப்பதில்லை. வறுபடாத தானியம் மாத்திரமே முளைக் கும். அதைப்போல, மனிதன் சித்தனாகி மரணமடைந் தால் மீண்டும் உலகத்தில் பிறக்கமாட்டான்; பரிபூரணத் துவ மடையாத அசித்தனே, தான் உலகப் பற்றொழிந்து சித்தனாகும் வரையில் மறுபடியும் மறுபடியும் பிறந்து கொண்டே யிருப்பான்.

519. மனத்தின் தன்மை:

மனமே சகலமுமா யிருக்கின்றது. மனமானது சுதந் தரத்தை யிழந்தபோது அதனை யுடைய மனிதனும் சுதந் தரத்தை யிழந்துவிடுகிறான். மனம் சுதந்தரத்துட னிருந் தால் மனிதனும் சுதந்தரத்தை யுடையவ னாகிறான். சுத்த மாக வெளுக்கப்பட்ட ஒரு துணியானது எந்தநிறச் சாயத் தில் தோய்க்கப்பட்டாலும் அந்த அந்த நிறமுடைய தாகி

விடும். அதைப்போலவே, மனதை எந்த விதத்திலும் படியச் செய்யலாம். மனிதன் ஆங்கில பாஷையைக் கற்க விரும்பினால் மனம் அதிற் படிந்து அப் பாஷையை அவன் பேசச் செய்யும். சமஸ்கிருதம் படிக்க விரும்பினால் மனம் அதிற் படிந்து அந்த ஞானத்தை அவனுக்கு உண்டாக்கும். மனமானது நீய சகவாசத்திலே வைக்கப்பட்டால் மனிதனையும் அச் சகவாசத்தில் பிரவேசிக்கச் செய்துவிடும்; பக்தர்களிடையில் செலுத்தப்பட்டால் அந்த மனது மனிதனை ஈசுரபக்தியிற் செலுத்திவிடும். அந்த மனமானது வஸ்துக்களின் நடுவில் இருக்கின்றதோ அவற்றிற்படி தன் இயற்கையை மாற்றி அவற்றைப்போலவே விடும்.

520. மனம் இடத்திற்குத் தக்கபடி விகற்பப்படுமென்பது:

மனமானது இடத்திற்குத் தக்கபடி மாறுபடும். மனிதன் மனுஷியினிடத்தில் பற்று வைக்கும்பொழுது மனமானது அதற்குத் தக்க ஒருவிதமான பற்றுடையதாயிருக்கும்; குழந்தையினிடத்தில் பற்று வைக்கும்பொழுது வேறொருவித விருப்ப முடையதாயிருக்கும். ஒரு மனிதன் ஏககாலத்தில் ஒரு பக்கத்தில் மனுஷியையும், மறுபக்கத்தில் குழந்தையையும் வைத்துக்கொண்டு பேசினால் இரண்டிடங்களிலும் வெவ்வேறு விதங்களாகச் செல்லும். ஒவ்வோரிட
வெவ்வேறு விதமாகத்
மும் மோகூமும் மன

கின்றன. மனிதன், "நான் முக்தாத்மா; நான் ஈசுரனுடைய புத்திரன்; என்னை எவரும் பந்தித்தல் முடியாது" என்று மனதில் நினைத்தால் அவன் முக்தனாய்விடுவான்; பாம்பினால் கடிக்கப்பட்ட மனிதன், திட சித்தத்தோடு "எனக்கு விஷம் கிடையாது! விஷம் கிடையாது!!" என்று மனத்தால் நினைப்பானுகில் அவனை விஷம் ஒன்றும் செய்யாதென்பது நிச்சயம்.

521. பாபத்தைப் போக்கும் விதம்:

ஏ மனிதனே! உன் வாழ்நாள் முழுவதிலும் பாபத்தைப்பற்றியும், நரகாக்கினியைப்பற்றியும் பேசிக்கொண்டிருப்பதால் ஒரு பயனு மில்லை. ஈசுர நாமத்தை இடைவிடாது ஜபித்துக்கொண்டிரு; "ஏ ஈசுரா! நான் உலகத்தில் செய்யக் கூடாத விஷயங்களைச் செய்திருக்கிறேன்; செய்ய வேண்டிய விஷயங்களைச் செய்யாமல் விட்டிருக்கிறேன்; ஆதலின், ஏ ஈசுரா! என் குற்றங்களை மன்னிப்பாயாக" என்று சொல்லிக்கொண்டே நீ ஈசுரனிடத்தில் நம்பிக்கையுடையவனுயிரு; அப்படி யிருந்தால் பாபங்களெல்லாம் உன்னைவிட்டோடும்; நீ முத்தனுவாய்.

29-வது அத்தியாயம்
ஞானியின் ஏக திருஷ்டி

522. முத்தி யடைந்த ஆத்மாவின் நிலை:

காற்றனது ஒரே காலத்தில் சந்தனகந்தம் முதலிய நறுமணத்தையும், அழுகிய பிண நாற்றத்தையும் தள்ளிக்

கொண்டு சென்றாலும் அவற்றுடன் கலப்பதே யில்லை. அதேபோல், முத்தி யடைந்த ஆத்மா உலகத்திலிருந்தாலும் அதனோடு கலப்பதில்லை.

523. உண்மையான சாதுவின் தன்மை:

ஜனக்கூட்டமுள்ள தெருவிலே ஒரு சமயத்தில் சென்றுகொண்டிருந்த சாது ஒருவர், ஒரு கொடியோனுடைய விரலை மிதித்துவிட்டார். அதனால் அக் கொடியோன் மிகக் கோபித்துச் சிறிதும் இரக்கமின்றி அந்தச் சாதுவை அடித்தான். அந்த அடியினால் அவர் பிரக்ஞையற்று விழுந்துவிட்டார். அப்போது அவருடைய சிஷ்யர்கள் அவரைத் தூக்கி உபசரித்து மிருந்த பிரயாசைப்பட்டு அவருக்குப் பிரக்ஞையுண்டாகும்படி செய்தார்கள். மஹான் சிறிது பிரக்ஞை அடைந்தவுடன் சிஷ்யர்கள் அவரை நோக்கி, "சுவாமி! உங்களுக்கு இப்போது பணிவிடை செய்பவர் யாவர்?" என்று வினவினார்கள். அதற்குச் சாதுவானவர், "என்னை அடித்தவன்தான்" என்று மறுமொழி கூறினர். ஆதலால், உண்மையான சாது, நண்பனுக்கும் பகைவனுக்கும் வித்தியாசம் பாராட்டுவதில்லை.

524. ஜகன்மாதாவே எங்கும் வியாபகமா யிருக்கிறாளென்பது:

உயர்ந்த குடும்பங்களிலுள்ள பதிவிரதா ஸ்திரீகளை நான் பார்க்கும்பொழுது, ஜகன்மாதாவே அந்தப் பதிவிரதையின் உடையைத் தரித்துக்கொண்டிருப்பதைப் பார்க்கிறேன் (அதாவது, அவளே எனக்கு ஜகன்மாதாவாகத்

தோற்றுகிறாள்); பட்டணங்களில் பகிரங்கமாகத் திரியும் வியபிசாரஸ்திரீகள், நாண மின்மையாகிய உடை தரித்துத் தங்களுடைய வெளித் தாழ்வாரங்களில் உட்கார்ந் திருப்பதை நான் பார்க்கும்பொழுது, ஜகன்மாதாவே அவர்களிடத்தில் வேறு விதமான லீலை புரிந்துகொண் டிருப்பதைப் பார்க்கிறேன்; (அதாவது, அவர்கள் எனக்கு ஜகன் மாதாவாகத் தோற்றுகிறார்கள்).

525. துறவியின் உண்மைத் தன்மை இன்ன தென்பது:

பிறர் குற்றங்களை மன்னிக்கும் குணமே, துறவியி னுடைய உண்மையான தன்மையாம்.

526. ஈசுரனிடத்தில் அழுந்திய ஆத்மாவின் நிலைமை:

ஒரு ஜாடியைத் தண்ணீருக்குள் வைத்தால் அது உள் ளும் புறமும் தண்ணீரால் சூழப்பட்டிருக்கும்; அதைப் போலவே, ஈசுர னிடத்தில் அழுந்திய ஆத்மா உள்ளும் புறமும் சர்வ வியாபகமான ஆத்மாவைப் பார்த்துக்கொண் டிருக்கும்.

527. சாந்தமும் புண்ணியமும் நிறைந்த வாழ்க்கைக்குச் செய்யத் தக்கது:

சாந்தமும் புண்ணியமும் நிறைந்த வாழ்க்கையை அடைய வேண்டுமானால், மானிட வர்க்கத்தாருடைய புகழ்ச்சியையும், இகழ்ச்சியையும் சமமாகவே கருதி அவற்றில் அலட்சியமா யிருக்கவேண்டும்.

528. ஈசுர தரிசனம் உண்டான பின் எல்லாம் சமமாகவே தோற்று மென்பது:

ஒருவன் பூமியில் ஒரு சம வெளியிலே யிருந்து பார்க்கும்போது பிரமாண்டமான விருக்ஷங்களும், சிறிய புற் பூண்டுகளும் வெவ்வேறு விதங்களாகத் தோன்
அவன் அவற்றைப் பார்த்து, "விருக்ஷங்கள் பெரியனவா யிருக்கின்றன, புற் பூண்டுகள் எவ்வ யனவா யிருக்கின்றன" என்று சொல்லுவான் ஒரு பெரிய மலையின்மீ தேறி அதன் உச்சியி அந்த மரங்களும், புற் பூண்டுகளும் நிறைந்த வ பார்ப்பானுகில் அப்போது, அவை யெல்லாம் சிறியன என்னும் வித்தியாச மில்லாமல் ஒரே தச வாய்ப் பசேலென்ற நிறத்துடன் தோன்றும். அ அவற்றில் விகற்பந் தோன்றாது. அதுபோலே மனிதன் உலக பந்தத்தில் அகப்பட்டிருக்கு அவனுக்கு மனிதர்களில் பல வித்தியாசங்கள் படும்; எப்படியெனில், ஒருவன் அரசனுகத் வான்; மற்றொருவன் தொழப்படுகைக்கும் ச காணப்படுவான்;
இன்னு மொருவன் ஈசுர தரிசனத்தை லோரும் சமமாகவே திமை யென்றும், பாசம் எற்படாத தோற்றும்.

529. சித்தர்களின் தன்மை:

ஈசுவரனிடத்தில் பூரணமாக இலயித்து அதே பிரமையைக் கொண்டிருந்த சாது ஒருவர், ஒரு சமயத்தில், இரண்டி ரஸமணியினுடையதும், ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் தங்கி யிருந்ததுமாகிய காளி கேஷத்திரத்திற்கு வந்தார். அப்பொழுது அவருக்குப் பசி மிகுந்திருந்தது; ஆகாரமும் கிடைக்கவில்லை. அப்படி யிருந்தும் அவர், எவரிடத்தும் ஆகாரம் கேட்கவில்லை. அவ்விதநிலைமையிலிருந்த அவர், ஒரு பக்கத்தில் கிடந்த எச்சில் இலையில் உள்ள நிஷேதமான ஆகார வஸ்துக்களை ஒரு நாய் புசித்துக் கொண்டிருக்கக் கண்டு அங்குச் சென்று அந் நாயைத் தழுவிக்கொண்டு, "சகோதரனே! இந்த உணவில் நீ எனக்குப் பங்கு கொடுக்காமல் நீ மாத்திரம் இதனை உண்பது தகுதியாமா?" என்று சொல்லிக்கொண்டே அந் நாயுடன் சேர்ந்து அந்த உணவுகளைப் புசித்தார். இவ்வாறு இந்த விநோதமான பந்தியிலே யிருந்து அவர் போஜனஞ் செய்து விட்டுக் காளி கோவிலுக்குள் நுழைந்து, அக் கோவிலின் நாலா பக்கங்களிலும் ஊடுருவிச் செல்லும்படி காளியின் மீது மிகுந்த பக்தியைச் செலுத்தி அவளை மெய்ம்மறந்து பிரார்த்தனை செய்துவிட்டு வெளியே சென்றார். அப்போது, ஸ்ரீ இராமகிருஷ்ணர் அவருடைய அற்புதத்தைப் பார்த்து விட்டு, உடனே தமது தாயாதி பந்து வர்க்கத்தினராகிய ஹிருதய முக்கர்ஜி என்பவரை அழைத்து, அந்த மஹானைத் தொடர்ந்து சென்று அவர் சொல்பவற்றைக் கேட்டுக்

திரும்பி வந்து தம்மிடம் சொல்லும்படி அவருக்குக் கட்டளையிட்டார். அவ்வாறே ஹிருதயர், அந்த மஹானைப் பின் தொடர்ந்து சென்றார். சிறிது தூரம் சென்ற பின், அந்த மஹான் திரும்பிப் பார்த்து ஹிருதயரை நோக்கி, "நீ ஏன் எனக்குப் பின்னே வருகிறாய்?" என்று வினவினார். அதற்கு ஹிருதயர், "சுவாமி! தங்களிடம் ஏதேனும் நல்லுபதேசம் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் வருகின்றேன்" என்றார். அதைக் கேட்டவுடன் அந்தச் சாது, அவரைப் பார்த்து, "அசுத்தமாகிய சாக்கடைத் தண்ணீரும் பரிசுத்தமாகிய கங்கா ஜலமும் உன்னுடைய திருஷ்டிக்கு எப்பொழுது வித்தியாசமில்லாமல் ஒன்றுகத் தோன்றுமோ, வீணையின் இனிய நாதமும், ஒரு ஜனக் கூட்டத்தின் விகாரக் கூச்சலும் எப்பொழுது உன் செவிக்கு வித்தியாசமில்லாமல் ஒரு தன்மையனவாய்க் கேட்குமோ அப்பொழுது நீ சத்தியமான ஞான நிலையை அடைவாய்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அதன் மேல் ஹிருதயர் திரும்பி வந்து, அம்மஹான் சொன்னதை ஸ்ரீ இராமகிருஷ்ணரிடம் சொன்னார். அதைக் கேட்டவுடன் ஸ்ரீ இராமகிருஷ்ணர், "அவரே உண்மையான ஆனந்த நிலைமையையும், அறிவின் நிலைமையையும் அடைந்தவர்; அவரைப் போன்ற சித்தர்கள் குழந்தையைப் போன்றும், பேயைப் போன்றும், பித்தனைப் போன்றும் பற்பல வேடங்களைக் கொண்டு உலவுவார்கள்" என்று கூறினார். ஆதலின், சித்தர்கள் எப்பொழுதும், எவற்றிலும் சம திருஷ்டியுடையவர்களாகவே யிருப்பார்கள்.

530. எல்லாம் ஒன்றே யென்னும் ஸ்ரீ ராமகிருஷ்ண ருடைய அனுபவமொழி:

பலியிடுவதற் கேற்பட்ட பீடமும், பலியிடப்படுகின்ற பிராணியும், பலியின் நிமித்தமாக அப் பிராணியை வெட்டு கின்றவனும் ஒரே வஸ்துவால் உண்டானதாகவே நான் அனுபவத்தில் அறிகிறேன்.

531. ஈசுரன் எங்கு மிருக்கின்ற ரென்னும் அனுபவம்:

ஈசுரன், ஒவ்வொரு மனித வடிவத்திலும் பிரவேசித்து, மஹாத்மாவின் மூலமாகவும், துராத்மாவின் மூலமாக வும், புண்ணியவான் மூலமாகவும், பாபியின் மூலமாகவும், வியக்தமாய்க்கொண்டிருக்கின்ற ரென்பதை உணர்கின்ற ஒருவித அனுபூதி நிலையை நான் இப்பொழுது அடைந் திருக்கின்றேன்; ஆகையால், நான் பற்பல விதமான ஜனங் களைப் பார்க்கும்போ தெல்லாம், "மஹாத்மாவின் வடிவத் தில் இருப்பவனும் ஈசுரனே; துராத்மாவின் வடிவத்தில் தோற்றுபவனும் ஈசுரனே; நியாயஸ்தர்களிடம் விளங்கு கின்றவனும் ஈசுரனே; அநியாயக்காரர்களின் வடிவத்தில் பிரகாசிப்பவனும் ஈசுரனே" என்று எனக்கு நானே சொல்லிக்கொள்வேன்.

532. வித்தை, அவித்தைகளின் தன்மைகளும் பிரமஞான மடையும் விதமும்:

ஈசுரனிடத்தில் வித்தை, அவித்தை என்னும் இரண்டு வித மாயைக ளுண்டு. அவை மனிதனிடத்தில் வியாபித்

கும்போது வித்தியா மாயை மிகுந்தால், அம் மனிதனை ஈசுவரனிடத்தே கொண்டு செல்லும். அவித்தியா மாயையானது மிகுந்தால், ஈசுரனை அடையும் மார்க்கத்தினின்றும் அவனை விலக்கிவிடும். ஞானம், பக்தி, வைராக்கியம், பூததயை ஆகிய இவைகளெல்லாம் வித்தியா மாயையின் அம்சங்களாம். இவற்றின் உதவியால் மனிதன் ஈசுரனை யடைதல் கூடும். இவற்றைக்கொண்டு, இவற்றுடனிருக்கும் நிலைமைக்கு மேல் ஒரு படி உயரச் சென்றால் பிரஹ்ம ஞானத்தை அதாவது ஈசுரனை அடைந்துவிடலாம்; அந்நிலையில் அவரே எல்லாமாயிருக்கிறாரென்பதை நாம் பிரத்தியக்ஷமாகப் பார்க்கலாம். அப்போது தள்ளத்தக்கது மில்லை, கொள்ளத்தக்கது மில்லை. விருப்புமில்லை, வெறுப்புமில்லை. இந் நிலையை அடைந்தபின் நான் ஒரு சமயம் வண்டியில் போய்க்கொண்டிருக்கும்போது ஒரு மாடி வீட்டின் சாளரத்துக்கு நேரே நின்ற இரண்டு தாசிகளைக் கண்டேன்; அவர்களிடத்தில் ஜகன்மாதாவின் அம்சமே எனக்குப் பிரத்தியக்ஷமாகக் காணப்பட்டது. இந் நிலைமை எனக்குண்டான பிறகு, தக்ஷிணேச்வராலயத்திலுள்ள காளிமாதாவின் பூஜைத் தொழிலை நடத்த என்னால் முடியவில்லை. அதனால் கோவில் காரியஸ்தர் என்னைத் திட்ட ஆரம்பித்தார். அதற்காக நான் சிறிதேனும் கோபித்துக் கொள்ளாமல் நகைத்தேன்.

30-வது அத்தியாயம்

ஆத்ம ஞானமும், ஜனசமூகக் கோட்பாடுகளும்

533. ஒற்றுமை ஞானத்தை அடைந்தவன் நிலையும் அடையாதவன் நிலையும்:

ஒரு கனியானது நன்முகப் பழுத்துத் தானுகவே மரத்திலிருந்து விழுந்தால், அது மிக்க சுவையுடையதாயிருக்கும். பழுக்காத காயைப் பறித்துப் பழுக்கவைத்தால் அஃதவ்வளவு உருசியுடையதாகமாட்டாது; சீக்கிரத்தில் வதங்கியும் போய்விடும். இவற்றைப்போல, ஒரு மனிதன் சமஸ்த வஸ்துக்களிலும் சமஷ்டி ஒற்றுமையாகிய ஞானத்தை அனுபவ பூர்வமாக அடைந்தபோதுதான் அவனுக்கு ஜாதிபேதம் இல்லாமற்போகும். அவன் இந்த உயர்ந்த ஞானனுபவத்தை அடையாவிடில், பிறரிடத்தில் உயர்வு தாழ்வு கருதும் சுபாவம் அவனைவிட்டகலாது. அவனைப் போன்றவர்கள் ஜாதிவித்தியாசத்தைப் பாராட்டத்தான் வேண்டும். இப்போர்ப்பட்ட அஞ்ஞான நிலையிலே ஒருவன் ஜாதிவித்தியாசங்களை யெல்லாம் மீறி முத்திமார்க்கத்தில் பிரவேசித்து வாழ்வதாகப் பாவனை பண்ணிக் கொள்வானனுல் அவன், பறித்துப் பழுக்கவைக்கப்பட்ட பச்சைக் காய்க்கு நிகராவான்.

534. ஞானம் மிகுந்தபொழுது ஜாதிவித்தியாசந் தோற்று தேனல்:

பிரசண்டமாருதம் வீசும்பொழுது அதனிடையில் அகப்பட்ட விருக்ஷங்களில் வித்தியாசந் தோற்றுது; எல்

லாம் ஒரே தன்மையான மாங்களாய்த் தெரியும்; அதாவது, அரசவிருக்ஷம் இன்னதென்றும் ஆலவிருக்ஷம் இன்னதென்றும் வேற்றுமை தோன்றுமல் இருக்கும். இதுபோலவே, உண்மை ஞானமாகிய காற்று மனிதனுக்குள்ளே அடிக்க ஆரம்பித்தால் அவனிடத்தில் ஜாதிவித்தியாசங்கள் காணப்படமாட்டா.

535. ஈசுர பக்தியிலே ஆழ்ந்தவனுடைய நிலை:

ஈசுர பக்தியில் ஆழ்ந்துள்ள ஓர் உண்மைப் பக்தன், ஒரு முதற்றரக் குடிகாரனைப் போன்று ஈசுர பித்துப் பிடித்து அதிலேயே இலயித்துத் திரிவான்; அவனிடத்தில் உயர்வு தாழ்வென்ற பாகுபாடுகள் தோற்றமாட்டா. அவனுக்கு உலக ஒழுங்குகள் அவசிய மில்லை.

536. பிரஹ்மஞான மடைந்தவனுக்கு ஜாதிவித்தியாச மில்லை யென்பது:

ஒருவனுக்கு பிரஹ்மஞானம் உண்டாய்விட்டால் சகல பந்தங்களும் தாமே நீங்கிவிடும். அந்நிலையில் பிராமணனுக்கும் சூத்திரனுக்கும், அதாவது உயர்ந்த ஜாதிக்கும் தாழ்ந்த ஜாதிக்கும் வித்தியாச மில்லை. அந் நிலையை அடைந்தவன் உயர்ந்த ஜாதியா னெனினும் அவனுக்குத் தன் ஜாதி உயர்வைக் குறிக்கும் பூணூல் அடையாளம் அவசிய மில்லை. அவன், தான் வேறு பிரஹ்மம் வேறு என்று நினைத்துக்கொண் டிருக்கிறவரையில் அவனுக்குப் பூணூல் அவசியமாம். பிரஹ்மஞானத்தை அடைந்தவனுக்கு ஜாதிவித்தியாசம் தானே நீங்கிவிடும். இதுதான் சிரேஷ்ட—

மேதவிர அதனை அடையாதவன் ஜாதிவித்தியாசத்தை ஒழிக்கக் கருதிப் பூணூலைப் பலாத்காரமாக அறுத்தெறிவது சிறப்பாகாது.

537. ஈசுர பித்துப்பிடித்தவனுக்கு உலகப் பிரக்ஞை இல்லை யென்பது:

மதுபானஞ் செய்தவன், சில சமயங்களில் தனது மேல் சட்டையைத் தலையில் மாட்டிக்கொள்வான்; வேறு சில சமயங்களில் அதனைக் காலில் கட்டிக்கொள்வான்; அவன் குடி வெறியி லிருப்பதால் அவனுக்கு ஒழுங்கு இன்னதென்பதும், ஒழுங்கீனம் இன்னதென்பதும் தெரிய மாட்டா. இதைப்போலவே, ஈசுரன் அருளாகிய அமுதத்தைப் பருகி அதிலேயே இலயித்துவிட்டவனுக்கு வெளி உலகப் பிரக்ஞை ஒன்று மிராது.

538. ஜாதிவித்தியாசமானது, பிரஹ்மஞானத்தால் தானே ஒழியவேண்டு மென்பது:

உடம்பிலுள்ள புண்ணானது ஆறி உலர்ந்துவிட்டால் மேலுள்ள பக்கானது தானே உதிர்ந்துவிடும். ஆறுவதற்கு முன் அதனை யெடுக்க ஆரம்பித்தால் புண்ணில் இரத்தம் வந்து உபத்திரவ முண்டாகும். இதுபோலவே, உண்மையில் ஒருவனிடத்தில் ஞானஒளி உண்டாகிவிட்டால் ஜாதிவித்தியாசம் தானே நீங்கிவிடும். ஞான மடையாதவர்கள் அந்த ஜாதிவித்தியாசத்தைத் தகர்த்தெறிய ஆரம்பித்தால் துன்ப முண்டாகும்.

539. ஈசுரனே அடைந்தவர்க்குக் கிரியைகள் அவசியமில்லே யென்பது:

முத்தை யீனும் சிப்பியானது மதிப்பற்றதாயினும் முத்தை யெடுத்துக் கொள்ளும்வரையில் அது பாதுகாக்கப்பட்டு முத்தை யெடுத்துக் கொண்டபின் தள்ளிவிடப் படுகிறது. அதைப்போலவே, ஈசுரனே அடைதற்கு முக்கிய சாதனங்களாயுள்ள கிரியைகள் மதிப்பற்றன வெனினும், ஈசுரனே அடையும்வரையில் அவற்றைக் கைக்கொண்டிருந்து அடைந்த பின் தள்ளிவிடவேண்டும்.

540. ஈசுர நாமத்தை உரைப்பவர்கள் பரிசுத்தர்களாவார்க ளென்பது:

அரியதகா என்னும் கிராமத்தில், கிருஷ்ணகிஷோர் என்னும் பெயருடைய ஒரு மஹா னிருந்தார். அவர், ஒரு சமயம் பிருந்தாவனத்திற்கு யாத்திரை போயிருந்தபோது, தமக்குத் தாக முண்டானதால் ஒரு கிணற்றருகில் நின்ற தாழ்ந்த ஜாதியா னொருவனே நோக்கிக் கொஞ்சம் தண்ணீர் இறைத்துத் தரும்படி வேண்டினர். அவன் அவரை நோக்கி, "சுவாமி! நான் இழிகுலத்தானதலின், பிராமணராகிய உமக்குத் தண்ணீர் எடுத்துக் கொடுப்பது தகாது" என்று சொன்னன். அதைக் கேட்டு, கிருஷ்ணகிஷோர், "நீ ஈசுர நாமத்தைக் கூறினால் பரிசுத்தமடைவாய்; ஆதலின், அதனைக் கூறிவிட்டு எனக்கு ஜலமெடுத்துக் கொடு" என்று அவனிடம் சொல்ல, அவன் அப்படியே ஈசுர

நாமத்தை உச்சரித்துவிட்டுத் தண்ணீரை யெடுத்து அவருக்குக் கொடுத்தான். வைதீகப் பிராமணராகிய அவர், அத் தண்ணீரைக் குடித்தார். இதனால் ஈசுர நாமம் எவரையும் பரிசுத்த மாக்கிவிடும் என்பது உணரப்படும்.

541. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஞானானுபவ மடைந்தபின் அவரிடம் கிருஷ்ணகிஷோர் கேட்ட கேள்வியும் அதற்கவர் சொன்ன விடையும்:

என்னிடம் பிரஹ்மஞானம் உண்டானபொழுது, பெரிய சண்டமாருதக் காற்றினால் உலகப்பொருள்க ளெல்லாம் அடித்துக்கொண்டு போகப்பட்டதுபோல என்னிடமிருந்த உலக வியவகாரங்க ளெல்லாம் அந்த ஆத்ம ஞானக் காற்றினால் அடித்துக்கொண்டு போகப்பட்டன. அப்பொழுதெனக்குப் பகிர்முகப் பிரக்ஞையே கிடையாது. என்னுடைய ஜாதிக்கறிகுறியாகிய பூணூலைப்பற்றியாவது, ஆடையைப்பற்றியாவது நான் கவனிக்கவில்லை. அப்போது பூணூலில்லாமலும், நிர்வாணமாகவும் நான் சில தினங்கள் இருந்திருப்பேன். அப்படி நான் அத்யந்த ஈசுர பிரக்ஞையில் ஆழ்ந்திருக்கும்போது பூணூல் இல்லாமல் இருந்ததற்காக அசூயை கொண்டு கிருஷ்ணகிஷோர் ஒரு சமயம் என்னிடத்தில் வந்து, "என், நீங்கள் பூணூலை அறுத்தெறிந்துவிட்டீர்கள்?" என்று கேட்டார். அதற்கு நான் "உனக்கும் இவ்வாறு ஈசுரப் பைத்தியம் பிடிக்கும்போது விஷயத்தைப்பற்றி நீயே தெரிந்துகொள்வாய்" என்று மாத்திரம் விடை பகர்ந்தேன். இதனால் ஈசுரபக்தி

யில் ஆழ்ந்துவிட்ட ஞானவான்களுக்கு உலக விசயாசங்கள் தோற்றமாட்டா வென்பது உணரப்படும்.

31-வது அத்தியாயம்

பக்தர்களின் இலக்ஷணம்

542. ஈசுர பக்தர்கள், துன்பத்தைக் கவனிக்க மாட்டார்க ளென்பது:

இருப்புப் பாதையிற் செல்லும் புகை வண்டியின் எந்திரமானது, பாரங்கள் நிறைந்த வண்டிகளின் கூட்டத்தைச் சுலபமாக இழுத்துச் செல்லும்; அப்படிச் செல்வதா லுண்டாகுந் துன்பத்தை அஃது உணர்வதில்லை. அதைப் போலவே, ஈசுரனிடத்தில் பக்தி செலுத்துகிற புத்திமான் அவரிடத்தேவைத்த பக்தியிலும் நம்பிக்கையிலும்உறுதியா யிருப்பதினல், சம்சாரத் தொல்லைகளும் கவலைகளு மாகிய யாவற்றையும் அனுபவித்துச் சகிப்பதிலும், தங்களுடன்கூட அநேகரை ஈசுவரனிடத்தில் அழைத்துச் செல்வதிலும் ஏற்படும் துன்பத்தை உணர்வதில்லை.

543. ஈசுரபக்தனுடைய இயற்கையும், குழந்தையினுடைய இயற்கையும் ஒரு தன்மையன வென்பது:

ஒரு குழந்தையினுடைய நிஷ்களங்கத் தன்மையும், ஈசுரபக்தனுடைய பரிசுத்தத் தன்மையும் ஒன்றும். குழ

ந்தையானது, உலகத்திலுள்ள ஐசுவரியங்களையும், பெருமைகளையும் உயர்ந்தனவாகக் கருதமாட்டாது; தன் விளையாட்டுக்குரிய ஒரு பொம்மையையே மேலானதாக மதிக்கும். அதைப்போலவே, ஈசுவரனிடத்தில் நம்பிக்கையுள்ள பக்தனும், உலகபோக வஸ்துக்களைச் சிறந்தனவென்று மதிக்கமாட்டான்; தான் நம்பிக்கை வைத்துள்ள ஈசுவரனையே பெரிய பொருளென்று மதிப்பான். மற்றவர்கள் அப்படி எல்லாவற்றையும் தள்ளிவிட்டு ஈசுரனை மாத்திரம் பெரிய பொருளென்று மதித்து எடுத்துக்கொள்ளமாட்டார்கள்.

544. ஈசுர பக்தன் உலக களங்கத்தில் அகப்பட்டிருந்தாலும் தனது பக்தியை விடா னென்பது:

சிகிமுகிக்கல்லானது, இலட்சக்கணக்கான வருஷங்கள் வரை தண்ணீரில் மூழ்கிக் கிடப்பினும், தன்னிடத்துள்ள நெருப்பை யிழந்துவிடாது; எந்தச் சமயத்தில் நாம் அதனை பெடுத்து இரும்பினால் அடிக்கிறோமோ அப்பொழுது அதனிடத்திலிருந்து நெருப்புப் பொறி வெளிப்படும். அதைப் போலவே, ஈசுவரனிடத்தில் திடமான விசுவாசமுள்ள உண்மைப் பக்தன், உலகத்திலிருந்து பல களங்கங்களால் சூழப்பட்டிருந்தபோதிலும், தனது ஈசுவர பக்தியையும் விசுவாசத்தையும் இழந்துவிடமாட்டான். அவன் எந்தச் சமயத்தில் ஈசுவரநாமத்தைக் கேட்கின்றானோ அந்தச் சமயத்திலேயே ஈசுவரபக்தியில் உற்சாகமுடைபவனாய்விடுவான்.

545. பக்தனுக்கு வலிமை இன்னதென்பது:

பக்தனுக்குப் பலம் எவ்விடத்தி லிருக்கின்ற தெனில், அவன் ஈசுவர புத்திரனுகையால் அவனுக்கு எல்லா வல் லமையும் அவரிடத்திலேயே இருக்கின்றது. அவன் மிகு ந்த பக்தியினல் சொரிகின்ற கண்ணீரே அவனுக்கு வல் லமை மிகுந்த ஆயுதமா யிருக்கிறது. அந்த ஆயுதத்தைக் கொண்டே அவன் உலக துன்பங்களாகிய பகைவரை வென்றுவிடுவான்.

546. ஞானியின் தன்மையும், பக்தனுடைய தன்மையும்:

ஞானி, சகலத்தையும் விட்டுத் தன்னை ஈசுவரனிடத் தில் ஒப்பித்துவிட்டவனுதலின், எதையும் ஈசுவரார்ப்ப ணம் செய்துவிடுவான்; பக்தன், தன்னுடைய பக்தியால் ஈசுரனை அடையவேண்டிய முயற்சியி லிருப்பவனுதலின், எதையும் தன்னுடைய முயற்சியால் அடையவேண்டு மென்று பேசுவான். இவர்களின் தன்மைகளுக்கு உதாரண மாக ஒரு கதை யுண்டு: ஒரு சமயத்தில் ஒரு ஞானியும், பக்தனும் காட்டு வழியில் சென்றுகொண்டிருந்தார்கள். அவர்களுக் கெதிரில் ஒரு புலி வந்தது. அதைக் கண்ட வுடனே அவர்களுள் ஞானி, "நாம் ஓடவேண்டியதில்லை; சர்வசக்தி வாய்ந்த ஈசுவரர் நம்மை நிச்சயமாக இரட்சிப் பார்" என்றுன். பக்தனே, "நாம் ஓடிவிடுவதே நல்லது; நமது சொந்த முயற்சியினுலே செய்து கொள்ளக்கூடிய

செய்கையை ஈசுவரருக்குக் கொடுத்து நாம் அவரை ஏன் தொந்தரவு செய்யவேண்டும்'' என்று கூறினான். இக்கதையி னால் இவ் விருவரின் தன்மைகளையும் உணர்ந்துகொள்ள லாம்.

547. ஆத்மஞான மடைந்தவன் ஆசை முதலியவற்றால் பீடிக்கப்படமாட்டா னென்பது:

விஷமுள்ள சர்ப்பத்தை எவரேனும் பிடிக்கப்போனால் அஃதவரைக் கடித்துத் தொந்தரவுக் குள்ளாக்கிவிடும். எனினும், அந்தச் சர்ப்பத்தைப் பிடிக்கும் தொழிலாளி யிடத்தில் அதன் வல்லமை செல்லமாட்டாது; அவன் அதனை இலகுவில் பிடித் தடக்கிவிடுவான்; இன்னும் அநேகம் சர்ப்பங்களைத் தன் தோள்களிலும் கழுத்திலும் ஆபரணங்கள் போல அணிந்துகொள்ளுவான். அப்படி அணிந்துகொண் டிருந்தாலும் அவற்றாலோ அவற்றின் விஷத்தினாலோ அவனுக்கு எவ்வித கெடுதியும் சம்பவிக்க மாட்டாது. இதைப்போலவே, ஆத்மஞான மடையாதவர் கள் துன்ப மயமாகிய உலக பந்தத்திற் சிக்கினால் அதனால் பற்பல துன்பங்களை யடைந்து மோக்ஷ சாதனத்தை இழ ந்துவிடுவார்கள்; ஆத்மஞான மடைந்தவனை உலகத்தி னிடையில் அகப்பட்டுச் சம்சார காரியங்களைத் தாங்கிக் கொண்டிருந்தாலும், காமமும், ஆசையு மாகிற விஷயங்கள் அவனைப் பீடிக்கமாட்டா. அவன் அவற்றால் துன்ப மடைய மாட்டான். சம்சாரத்தி லிருந்தபடியே மோக்ஷ சாதனத் தை அடைவான்.

548. ஈசுவரனை ஸ்தோத்திரஞ் செய்வதில் பக்தர்கள் களைப்படையார்க ளென்பது:

ஒரு மனிதன், தன்னுடைய தேகத்திலுள்ள மேகப் படையைச் சொறியச் சொறிய அவனுக்கு அதில் ஒருவித சுகம் தோற்றிக்கொண்டே யிருக்கும்; அதனால் அவன் கையை எடுக்காமல் அதனைச் சொறிந்துகொண்டே யிருப் பான்; அதில் எவ்வளவும் அவன் இளைப்படைவதேயில்லை. அதுபோலவே; ஈசுவர பக்தர்கள் அவரை ஸ்தோத்திரம் செய்யச் செய்ய அவர்களுக்கு ஒருவிதமான உற்சாக முண் டாகிக்கொண்டே யிருக்கும். அதனால் அவர்கள் இளைப் படையாமல் இடைவிடாது அவரைத் துதித்துக்கொண்டே யிருப்பார்கள்.

549. பிறப்பறுபவன் இன்னவ னென்பது:

ஈசுவரனுடைய பெயரை உச்சரித்த மாத்திரத்திலே எவனுக்கு உரோமஞ் சிலிர்த்துக் கண்களினின்றும் தாரை தாரையாக ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றதோ அவனே கடைசி ஜன்மத்தை அடைந்தவனாகிறான். (அதாவது அந்த ஜன்மத்திற்குமேல் பிறப்பில்லாதவ னாகிறான்).

550. பிரஹ்மானந்தத்தை அடைந்த ஆத்மா உலக போகத்தை விரும்பா தெனல்:

வெண்மையான கற்கண்டுக் கட்டியை ஒரு முறை தின்று அதன் சுவையை அறிந்தவன் பின்னர், மாசடைந்து கருப்பா யிருக்கும் அதிசத்தைத் தின்ன விரும்பமாட்

டான். சௌக்கிய மிகுந்த அரண்மனையிலே ஒரு முறை படுத்துச் சுகமான நித்திரையை அடைந்த ஒருவன், பின்னர் மாசடைந்து அருவருப்பான சிறு குடிசையில் படுக்க விரும்பமாட்டான். இவர்களைப்போலவே, பிரஹ்மானந்தத்திலே இலயமாகி ஒரு முறை சுகமடைந்த ஆத்மா, பின்னர் இவ் வுலகத்துச் சாதாரண போகங்களிலே இச்சை வைக்கமாட்டாது.

551. ஞான மார்க்கத்தி லுள்ளவர்களின் நிலை:

ஞான மார்க்கத்தில் மனத்தை நிறுத்தியவர்கள், ஜன சமூகக் கட்டுப்பாடுக ளெல்லாவற்றினின்றும் நீங்கித் தனித்த ஒரு ஜாதி யுடையவர்களா யிருப்பார்கள்.

552. ஈசுவர பக்தன், தான் ஈசுவரானுபூதியால் அடைந்த ஆனந்தத்தை, உண்மைப் பக்தனிடத்திற் சொல்லக் கூச்சப்படமாட்டான் என்பது:

ஒரு குடும்ப ஸ்திரீ, தன் கணவனோடு தினந்தோறும் அந்தரங்கமாக விளையாடிச் சம்பாஷித்துக்கொண்டிருந்த விதங்களை எவரிடத்தும் சொல்லக் கூச்சப்படுவாள். அதனால் அவள் அவற்றை எவரிடத்தும் சொல்லவேமாட்டாள். ஒரு சமயம் அவை தற்செயலாய் வெளி வந்துவிட்டாலும் கூட அதன்பொருட்டு அவள் மிகுந்த வெட்கத்தையும் துக்கத்தையும் அடைவாள். இவ் விஷயத்தில் அவள் இவ்வளவு ஜாக்கிரதையா யிருந்தபோதிலும் மேற்கூறிய விஷயங்களைத் தன் அந்தரங்க தோழியினிடத்தில் கூசாமலும் ஒளிக்

காமதும் சொல்லுவாள்; அவளைக் காணவிட்டாலும் அவளிடம் சொல்லுவதற்கு ஆத்திரத்தோடு திரிவாள்; அவளைக் கண்ட நேரமெல்லாம் அவற்றை அவளிடத்திற் சொல்லிச் சொல்லிச் சந்தோஷப்படுவாள். அவளைப்போலவே, ஈசுரபக்தன், தன்னுடைய ஈசுராநுபூதியில் உண்டாகும் ஆனந்தங்களை வேறெவரிடத்தும் சொல்ல இசையா னெனினும், உண்மைப் பக்தனிடத்தில் ஒளிக்காமல் கூறுவான்; அப்படிச் சொல்வதற்கு ஆத்திரப்படுவான். அடிக்கடி அவனிடம் அவற்றைச் சொல்லிச் சொல்லிச் சந்தோஷத்தை யுடைவான்.

553. ஈசுர தரிசனஞ் செய்த ஆத்மாவின் நிலை:

அரசனை, நாயகனை அடைந்த பெண், ஒரு பிச்சைக் காரனை விரும்பமாட்டாள். அதுபோலவே, ஈசுர தரிசனத்தால் ஆனந்த மடைந்த ஆத்மா, உலக சம்பந்தமான அற்ப விஷயங்களில் ஆசை வைக்கமாட்டாது.

554. பரிசுத்த ஆத்மாக்களின் இயற்கை:

முறமானது, மென்மையானவைகளும், பயனற்றனவுமாகிய வஸ்துக்களை ஒதுக்கித்தள்ளி, கனமுள்ளவைகளும், நன்மையானவைகளுமாகிய பொருள்களைத் தன்னிடத்தே சேர்த்து வைத்துக்கொள்ளும். அதைப்போலவே, பரிசுத்த ஆத்மாக்களா யிருப்பவர்கள் பயனற்ற உலக விஷயங்களைத் தள்ளி, பயனுடைய ஈசுராநுபூதியைக் கொள்ளுவார்கள்.

555. மஹான்கள் தீமையை நீக்கி நன்மையையே கைக்கொள்வார்க ளென்பது:

சர்க்கரையும், மணலும் ஒன்றாகக் கலந்திருந்தபோதிலும் எறும்பானது மணலைத் தள்ளிவிட்டுச் சர்க்கரையை மாத்திரம் பிரித்துக்கொள்ளும். அதைப்போலவே, உலகத்தில் நன்மையும் தீமையும் கலந்திருந்தபோதிலும் பரமஹம்சர்களாகிய மஹான்கள் தீமையை நீக்கி நன்மையை மாத்திரம் கைக்கொள்வார்கள்.

556. விஷய போகங்களும், உலக சுகங்களும் இன்ன சமயத்தில் நசிக்கு மென்பது:

அகண்ட நித்தியானந்த சாகரமாகிய ஈசுரனிடத்திலேயே நிலைபெற்ற எல்லாச் சுகங்களும், சகல சந்தோஷங்களும் அடங்கியிருக்கின்றன. அவரை யடைந்தவர்கள், அவற்றைப்பெற் றின்புறுவார்கள். அப்படிப் பிரமானந்தத்தை யடைந்தபோது அவர்கள், பயனற்ற உலக சுகங்களைக் கருதமாட்டார்கள். அப்போது உலகங்களும் விஷய போகங்களும் நசித்துவிடும்.

557. ஈசுர பக்தன் ஈசுர பக்தனோடு சேர்ந்து கொள்வா னென்பது:

பசுக் கூட்டத்திலே அன்னிய மிருகமொன்று நுழைந்தால், அக் கூட்டத்திலுள்ள பசுக்க ளெல்லாம் சேர்ந்து அம் மிருகத்தைக் கொம்புகளால் குத்தியும், கால்களால் உதைத்தும் துரத்திவிடும். ஒரு பசு வந்து அக் கூட்

டத்தில் நுழைந்தாலோ அங்குள்ள பசுக்க ளெல்லாம் அதனுடன் நட்புக்கொண்டு, அதன் தேகத்தை நக்கி அதைத் தங்களுடன் சேர்த்துக்கொள்ளும். இவற்றைப் போலவே, ஒரு பக்தன், தன்னிடத்தே ஒரு துஷ்டன் வந்து சேர்ந்தால் அவனைத் தந்திரமாக விலக்கிவிடுவான். மற்றொரு பக்தன் வந்து சேர்ந்தாலோ அவனுடு நட்புக் கொண்டு அவனைத் தன்னுடன் சேர்த்துக்கொள்வான்.

558. ஈசுவர பக்தன், தனியே பக்திசெய்யப் பிரியப்படமாட்டா னென்பது:

கஞ்சாக் குடிப்பவன், தன்னைப் போன்றவர்களுடன் சேர்ந்து குடித்தால்தான் அவனுக்குத் திருப்தி யுண்டா கும். அவனைப்போலவே, ஈசுர பக்தன், தன்னைப் போன்ற பக்தர்களுடன் சேர்ந்து ஈசுரனை ஸ்தோத்திரம் செய்வதி லேயே திருப்தி யடைவான். அதனால் அவன், ஏகாந்தத் தில் வசிக்கப் பிரியப்படமாட்டான்.

559. ஈசுர பக்தனுடைய மனம் வேகு சீக்கிரத்தில் துக்கம் முதலியவற்றைக் கடந்து செல்லு மென்பது:

வேகமாக ஓடுகின்ற தண்ணீரானது சிற்சில சுழற்சிக ளில் அகப்பட்டாலும் ஆங்காங்கே சிறிது நேரம் சுழன்று விசையில் அச் சுழற்சிகளை விட்டு நீங்கித் தான் சேரவேண் டிய இடம்போய்ச் சேர்ந்துவிடும். அதுபோலவே, ஈசுர பக்தனுடைய ஹிருதயமானது, ஈசுரனிடம் வேகமாகத்

சென்றுகொண்டிருக்கும்போது இடையில் வக்கம், விசனம், அவநம்பிக்கை முதலிய சுழற்சிகளிலே அகப்பட்டாலும் சிறிது சிறிது நேரம் அவற்றில் சுழன்று வெகு சீக்கிரத்தில் அவற்றை விட்டு நீங்கி ஈசுரனிடம் போய்ச் சேருவீர்.

560. மஹாத்மாவின் மனம் தீய செய்கைக்கு உட்படாது நழுவிவிடுமேனல்:

நன்றாகப் பழுத்த மாம்பழத்தைக் கையால் பிடித்து அழுத்திப் பிசைந்தால், தோல் மாத்திரம் அந்தக் கையிலே நிற்க, கொட்டையும் சதையும் வெளியே நழுவிவிடும். அதைப்போலவே, ஈசுரபக்தியில் முதிர்ந்த ஒரு மஹாத்மா ஒரு வியபசார ஸ்திரீ பிடித்திழுத்துத் தீய செய்கைக்கு உட்படுத்த முயன்றால், அப்போது அவருடைய தேகம் மாத்திரம் அவள் கைவசப்பட்டிருக்க, மனமானது நழுவி ஈசுரனிடத்திற் சேர்ந்துவிடும்.

561. பிரமானந்தானுபூதி யடைந்தவர்களிற் சிலர் அதைத் தாங்களே அனுபவிப்பார்க ளென்பதும், சிலர் பிறரையும் அனுபவிக்கும்படிசெய்வார்க ளென்பதும்:

உலகத்தில் சிலர், உருசியுள்ள மாம்பழத்தைத் தின்று விட்டு அது பிறருக்குத் தெரியக்கூடாதென்று வாயைச் சுத்தமாகக் கழுவிவிடுவார்கள். சிலர், தங்களுக்கு அந்த மாம்பழம் கிடைத்தால் அதைத் தாங்கள் தின்பதோடு தங்களைப்போன்ற பிறருக்கும் பங்கிட்டுக் கொடுப்பார்கள். இதைப்போலவே, சில பக்தர்கள் பிரமானந்தானுபூதி

யை அடைந்து அதனைப் பிறருக்குக் காட்டாமல் தாங்களே அனுபவித்துக்கொண்டிருப்பார்கள். சிலர், அந்த ஆனந்தத்தை யடைந்தால் பிறருக்கும் அதனைக் காட்டி அவரையும் அனுபவிக்கச் செய்வார்கள்.

562. உண்மைப் பக்தன் இன்னவ னென்பது:

பிறர் அறியாமல் தனியே ஒரு காட்டிலிருக்கும் போது, ஒரு அழகிய கன்னிகை எதிர்ப்பட்டு மோகத்தை யுண்டாக்கினாலும், "நாம் தனியாகத்தானே யிருக்கிறோம்; இங்கே இவளுடன் சேர்ந்தால் இக் குற்றத்தை எவரும் உணரமாட்டார்கள்" என்ற துணிவு கொள்ளாமலும், "நாம் இதை இரகசியமாகச் செய்தாலும் ஈசுரன் உணர்ந்து கொள்வார்" என்று பயந்தும் அந்த துர்ச்செய்கையைச் செய்யாமலிருப்பவ னெவனோ, எவரு மில்லாத வீட்டில் தான் தனியே பிரவேசித்தபோது, அங்கே பொன் மூடிப் பிருந்தால், "இதனை நாம் எடுத்துக்கொண்டால் எவரும் உணரமாட்டார்கள்; பக்கத்திலும் பார்த்துக்கொள்பவர் ஒருவரு மில்லை; ஆகலின், நாம்இப் பொருளைத் தடையில்லா மல் எடுத்துக்கொள்ளலாம்" என்னும் துணிவைக் கொள் ளாமலும், "எப்படியும் இதை ஈசுரன்உணர்ந்துகொள்வார்" என்னும் அச்சத்தைக்கொண்டும் அப் பொன் மூடிப்பை எடுக்காமலிருப்பவ னெவனோ அவனே உண்மைப் பக்தன். தனியே யிருக்கும்போது இரகசியமாகக் குற்றங்களைச் செய்துவிட்டுப் பொது ஜனங்கள் மதிக்கும்படி மேலுக்கு மாத்திரம் பக்தனுடைய வேஷத்தைப் போட்டுக்கொண்டி

நடிக்கிறவன் உண்மைப் பக்தனுகமாட்டான். மௌனமும், இரகசியமுமாகிற மதமே உண்மை மதமாம். ஆடம்பர முள்ள மதங்கள் வேஷங்களாம்; பரிகாசத்துக் கிடமுள் ளவையுமாம்.

32-வது அத்தியாயம்

சன்னியாசியின் இலட்சியங்கள்

563. சாதுக்கள் சந்தேகிக்காதவண்ணம் நடந்து கொள்வார்க ளென்பது:

ஒரு மனிதன் வியாதியால் பீடிக்கப்பட்டிருந்த தன் டைய குழந்தையை யெடுத்துக்கொண்டு ஒரு மஹானிடத் சென்று, அக் குழந்தையின் வியாதி தீர ஏதேனும் தம் கொடுக்கும்படி வேண்டினன். அப்போது அவ முன்னே ஒரு சர்க்கரைக் கட்டி யிருந்தது. அதனல், காம கூறும் வைத்தியத்திற்கு மதிப்பில்லாமற்போகுமெ ன்று கருதி அவர், மறுதினம் வந்தால் குழந்தையின் வியா தி க்குப் பரிகாரம் சொல்வதாக அவனுக்குக் கூறினர். ன் அவ்வாறே சென்று மறுதினம் அவரிடம் திரும்பி ன். அப்போதந்தச் சாது அவனை நோக்கி, "நீ உன் ழந்தைக்கு இனிப்புப் பண்டங்களைக் கொடாதே; டாமலிருந்தால் பிள்ளையின் வியாதி இல்லா " என்றார். அப்போது அந்த மனிதன்

அதிசயித்து அவரை நோக்கி, "சுவாமி! இதற்குத்தானு என்னை இன்றைக்கு வரச்சொன்னீர்கள்! இதை நேற்றே சொல்லியிருக்கலாமே" என்றான். அதற்குச் சாது, "இது நீ நினைக்கிறபடி சாதாரண விஷயம்தான்; இதை நேற்றே சொல்லியிருக்கலாம்; அப்படிச் சொல்லாம லிருந்ததற்குத் தக்க காரண முண்டு: நேற்று நீ வரும்போது எனக்கெதி ரில் ஒரு சர்க்கரைக்கட்டி யிருந்தது; அஃதிருக்கும்போது நான் இந்த வைத்தியத்தைச் சொன்னால் உன்னுடைய குழ ந்தை அந்தச் சர்க்கரைக்கட்டியைப் பார்த்துவிட்டு, "இந் தச் சாது, தான் மாத்திரம் சர்க்கரைக் கட்டியை எதிரில் வைத்துத் தின்று கொண்டு நமக்கது கூடாதென்று சொல் கிறான்; ஆதலால், இவன் ஒரு வேஷதாரி" என்று நினை த்துவிடும்; அதனால் அந்த வைத்தியத்தில் உன் குழந்தை க்கு நம்பிக்கை யில்லாமற் போய்விடும்; அந்த நம்பிக்கைக் குறைவால் வியாதி தீரமாட்டது; இதை உத்தேசித்தே நான் அவ்வாறு கூறினேன்" என்று சொன்னார். அதன் மேல் அம் மனிதன் சென்று, சாது சொன்னபடியே நம்பிக்கையுடன் செய்து குழந்தையின் வியாதியைப்போக்கி னான். இதனால், சாதுக்கள், எதையும் நன்மையை உத்தே சித்தே கூறுவார்கள் என்பதை உணர்ந்துகொள்ளலாம்.

564. யோகிகளுக்குச் சொந்த வீடு அவசியமில்லை யென்பது:

சர்ப்பமானது, தனக்கென்று ஒரு வளையை உண்டாக் கிக் கொள்வதில்லை. காலியா யிருக்கும் எலி வளையிலேயே அது புகுந்து வசிக்கும். அப்படி வசித்து வரும்போது,

ஒரு வீடு, தான் வசிப்பதற்கு யோக்கிய மில்லாமற்போய் விட்டால் மற்றொரு வீட்டுக்குச் சென்றுவிடும். சன்னியாசிகளும், யோகிகளும் இந்தச் சட்டத்தைப் போன்றவர்களாகவே யிருக்கிறார்கள். இவர்கள் தங்களுக்கென ஒரு வீட்டைத் தேடிக்கொள்வதில்லை. அன்னியருடைய வீடுகளிலேயே ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு வீட்டில் வசித்துத் தங்கள் நாட்களைக் கழிப்பார்கள்.

565. பரிசுத்தமான சன்னியாச ஆச்சிரமத்திற்குத் தகுந்தவர் இன்னவ ரென்பது:

எவர், அடியோடு உலகத்தைத் துறந்துவிட்டு, "நாளைக்கு எதை உண்போம்? எதை உடுத்திக்கொள்வோம்?" என்ற விசாரமே யின்றி யிருக்கின்றாரோ, அவரே உண்மைச் சன்னியாசியாவதற்குத் தகுதியானவர். உயர்ந்த மரத்தின் உச்சியி லேறி, அவசியமான காரியத்தை முன்னிட்டுத் தன் உயிருக்காவது அவயவங்களுக்காவது அபாயம் நேரிடுமே என்னும் எண்ணம் சிறிது மின்றி அவசியமானபோது திடீரென்று கீழே குதிக்கின்றவனுடைய மனவுறுதியைப் போன்ற திட சித்தத்தை, அவர் ஈசுரனை அடையவேண்டி உலகத்தை விடுவதில் கொண்டிருக்கவேண்டும்.

566. சன்னியாசத்தைக் கொண்டவர் நல்ல பயிற்சியி லிருக்கவேண்டு மென்பது:

சன்னியாசி, அனுஷ்டிக்கவேண்டிய பயிற்சி உண்மையில் மிகவும் கடினமானது. அவர், ஜனசமூகத்துக்குக்

குருவாயிருப்பதாலும், அவர் நடப்பதைப் பார்த்து ஜனங்கள் நன்மார்க்கத்தில் நடக்கவேண்டியிருப்பதாலும், அத்தகைய கடினமான பயிற்சியை அவர் அனுஷ்டித்தே தீரவேண்டும். எப்படியெனில், அவர் ஸ்திரீகளைச் சேரக்கூடாதென்று விதியிருந்தால், ஸ்திரீகளுடைய படங்களைக்கூடப் பார்க்கக்கூடாது. அவ்வளவு கடினமாக நன்மார்க்கங்களை அனுஷ்டித்தால்தான் அவருக்குச் சிறப்புண்டு. வேடத்தில் சன்னியாசி உடை தரித்துக்கொண்டவன்கூட, உண்மைச் சன்னியாசியைப்போலவே நிராசையுள்ளவனாய் நடிப்பான். இவ்வாறு இவன் நடிப்பதையும், நாடகத்தில் இராஜாவேஷம் தரிப்பவன் அரசனைப் போன்றே நடிப்பதையும், மந்திரிவேஷந் தாங்குபவன் மந்திரியைப் போலவே நடிப்பதையும் நாம் பார்க்கிறோம். இதற்குதாரணமாக ஒரு கதை யுண்டு: ஒரு கிராமத்திலுள்ள விதூஷகன், சன்னியாசி உடை தரித்து வேடம் போட்டுக்கொண்டு அந்தக் கிராமாதிகாரியின் முன் தோன்றினன். கிராமாதிகாரி, அவனை உண்மைச் சன்னியாசி யென்றே நினைத்து அவனுக்கு ஒரு பை நிறந்த பணத்தைக் கொடுக்கப் போனன். அவன், தன்னுடைய துறவிக் கோலத்துக்குத் தக்கபடி பணத்தாசை யற்றவன்போல் நடித்து அதனை வாங்க மறுத்துவிட்டுப் போய்விட்டான். சிறிது நேரத்துக்குப் பின், அவன் சன்னியாசி வேடத்தைக் களைந்து விட்டுத் தன்னுடைய யதார்த்த வடிவத்துடன் வந்து, அந்த அதிகாரி, சன்னியாசிக் கோலத்துக்கு முன்னே கொடுக்கத் துணிந்த பணத்தைத் தனக்குக் கொடுக்கும்படி

அவனிடம் கேட்டான். அதிகாரி கொடுக்க இசையவில்லை. முன்னே விழுந்தவன், சாது உடை தரித்துக்கொண்டிருந்த பொழுது, அதிகாரி, தானே அதிகப் பணம் கொடுக்க இசைந்தும் அவன், தன்னுடைய சாது வேஷத்துக்குத் தக்கபடி அதைக் கையாலும் தொடச் சம்மதிக்காதவனாயிருந்தான். இப்போது தானே பணத்தை விரும்பக் கூடியவனாயிருந்தும் அவனுக்கது கிடைப்பது அரிதாய்விட்டது. இந் நிலைமையில் அவன் நான்கணா கிடைத்தாலும் திருப்தியடையக்கூடியவனாயிருந்தான். இதனால், நாம், சன்னியாசி வேடம் தரிப்பவனே உண்மைச் சன்னியாசிக்குரிய நிராசைத் தன்மைகளை அனுஷ்டிக்க வேண்டியது அவசியமாயிருப்பதால் உண்மைச் சன்னியாசி அவ் விஷயங்களைக் கடினமாக அனுஷ்டிக்க வேண்டுமென்பதை உணர்ந்துகொள்ளலாம்.

33-வது அத்தியாயம்

மனிதர்களின் பேதங்கள்

567. மனிதர்கள் வேவ்வேறு குணங்களை யுடையவர்களென்பது:

மனிதர்களிடத்தில், சாத்வீகம், இராஜதம், தாமதமென்னும் மூன்று குணங்களில், எது முன்னேறி நிற்கிறதோ அதற்குத் தக்கபடி மனிதர்கள் வெவ்வேறு குணங்களை யுடையவர்களாயிருப்பார்கள்.

568. ஜீவர்கள் நான்குவகையினரா யிருக்கிறார்க ளென்பது:

ஜீவர்க ளெல்லோரும் ஒரு தன்மையரே யெனினும், தங்கள் தங்களுக்குள்ள அவஸ்தையின்படி நான்குவிதமா யிருக்கிறார்கள். அவர்கள்: 1. பெத்தன் அல்லது பந்தத்தில் கட்டுப்பட்டுள்ள ஆத்மா, 2. மூமுக்ஷு அல்லது முத்தியடை வதற்குப் பிரயாசைப்பட்டுக்கொண்டிருக்கும் ஆத்மா, 3. முத்தன் அல்லது முத்தி யடைந்த ஆத்மா, 4. நித்திய முத்தன் அல்லது என்றும் முத்திப்பதவியி லிருக்கும் ஆத்மா என்பவர்களாவர்.

569. ஹிருதயத்தின் தன்மைக்குத் தக்கபடி மனிதர்கள் வெவ்வேறு வகையினராவ ரென்பது:

போளி யென்னும் பக்ஷணமானது மேலே கோதுமை மாவினால் மூடப்பட்டு ஒரே தன்மைத்தா யிருந்தாலும், உள்ளே வைக்கப்பட்டிருக்கும் பச்சைப்பயற்றின் மா, சர்க் கரை, தேங்காய் முதலிய வஸ்துக்களுக்குத் தகுந்தபடி அதில் உருசி வெவ்வேறு வகையாகத் தோன்றுகின்றது. அதைப்போலவே, மனுஷிய சரீரங்க ளெல்லாம் ஒரு தன்மையான இரத்தம் எலும்பு தோல் முதலியவற்றால் ஆக்கப்பட்டு ஒரே தன்மையினவா யிருந்தபோதிலும் மனி தர்கள், அவரவர்களுடைய ஹிருதயத்தின் தன்மைக்குத் தக்கபடி குணத்திலே வேறுபட்டவர்களாய் நல்லவர்களாக வும், கெட்டவர்களாகவும் தோற்றுவார்கள்.

570. வேவ்வேறு வகையான மனிதர்களிடத்திலும் ஈசுரன் ஒருவரே வசிக்கிறு ரென்பது:

தலையணையின் உறைகள், சிவப்பாகவும், கறுப்பாகவும், நீல நிறமாகவும், பச்சையாகவும் வெவ்வேறு நிறங்களாக்கொண் டிருக்கின்றன. ஆனால், எல்லாவற்றுள்ளும் ஒரே தன்மைத்தான பஞ்சுதான் அடைக்கப்பட்டிருக்கிறது. இவற்றைப்போலவே மனிதர்கள், அழகுடையவர்களாகவும், விகார வடிவமுள்ளவர்களாகவும், பல நிறம் கொண்டவர்களாகவும் வெவ்வேறு வகையான உருவங்களைப் பெற்றிருக்கின்றார்கள். எனினும், அவர்களெல்லோருக்குள்ளும் ஒரே ஈசுரர்தாம் வசிக்கிறார்.

571. மனிதர்கள் மூன்று வகையினரா யிருக்கின்றார்களென்பது:

ஒரு செம்படவன், மீன்களைப் பிடிப்பதற்கு ஒரு குளத்தில் வலையை வீசியபோது அதில் பல மீன்கள் அகப்பட்டுக்கொள்கின்றன. அவற்றுள் சில மீன்கள் அவ்வலையை விட்டு வெளியேறுவதற்குச் சிறிதும் முயற்சி செய்யாமல் அதற்குள்ளேயே அசைவற்றுக் கிடந்துவிடுகின்றன; சில மீன்கள் அதைவிட்டு வெளியேறக் கருதித் தங்களால் ஆனமட்டும் பிரயாசைப்பட்டுக் குதிக்கின்றன; சில மீன்கள் எப்படியோ சுலபமாக அவ் வலையை விட்டு வெளியேறி விடுகின்றன. இவற்றைப் போலவே, மனிதர்களும் மூன்று வகையினரா யிருக்கின்றார்கள். எப்படியெனில், பிரம சிருஷ்டியாகிய மாயா சம்பந்த வலைதான்ற இவ்

வுலக பந்தத்தில் அகப்பட்ட மனிதர்களுள் சிலர், அப் பந்தத்தை விட்டு வெளியேற யாதொரு முயற்சியும் செய் யாமல் பிறப்பிறப்புக்களுக்குரியவர்களாய் இவ் வுலகத்தி லேயே கிடந்துவிடுகின்றார்கள்; இவர்கள் பெத்தர்கள் என்று சொல்லப்படுவார்கள். இன்னும் சிலர், இவ் வுலக பந்தத்தை விட்டு நீங்கி முத்தியடைவதற்கு முயற்சி செய்துகொண் டிருக்கின்றார்கள்; இவர்கள் முமுக்ஷுக்கள் என்று சொல்லப்படுவார்கள். பின்னும் சிலர், உலக பந்தத் தை விட்டு இலகுவில் நீங்கி முத்தியை யடைந்துவிடுகிறார் கள். இவர்கள் முத்தர்கள் என்று சொல்லப்படுவார்கள்.

572. முத்தன், பக்தன், உலகினன் ஆகிய மூவர்களின் தன்மைகள்:

முத்தனும், பக்தனும், உலகினனும், உப்புப் பொம் மையையும், துணிப் பொம்மையையும், கல் பொம்மையை யும் போன்றிருக்கின்றார்கள்: எப்படியெனில், உப்புப் பொம்மையைத் தண்ணீருக்குள் அமிழ்த்தினால் அது கரைந்து தன்னுடைய உருவத்தை யிழந்து தண்ணீரோடு தண்ணீராய்க் கலந்துபோகிறது; அதைப்போல, முத்தனா யிருப்பவன் எங்கும் வியாபகமா யிருப்பதும், சமஷ்டி யானதுமாகிய பரமாத்மாவினிடத்திலே தனது ஆத்மா வை ஐக்கியம் செய்து அதனுடன் ஒன்றுப்க் கலந்துவிடு கிறான். துணிப் பொம்மையானது, தண்ணீரில் போடப் பட்டவுடனே ஏராளமான தண்ணீரைக் கிரகித்துக்கொ ண்டு தன்னுடைய உருவத்தை வைத்துக்கொள்ளுகின்றது;

இதைப்போலவே, ஈசுரபக்தன், எங்கும் வியாபகமாயுள்ள பிரமானந்தத்தையும் ஞானத்தையும் தனக்குள் கிரகித்துக் கொண்டு, தன்னுடைய உருவத்துடனிருந்து ஈசுரனிடத்திலே பக்தி செலுத்திக்கொண்டிருப்பான். கல் பொம்மையானது, தண்ணீருக்குள் போடப்பட்டாலும், அதைச் சிறிதும் கிரகிக்காமல் தன் இயற்கையுடன் கிடக்கும். இதைப்போலவே உலகினன், எங்கும் பிரமவியாபகமான உலகத்திலிருந்தாலும் பிரமஞானத்தைச் சிறிதும் உணராமல் தன்னுடைய மனிதத் தன்மையுடனேயே இருப்பான்.

573. எல்லா இடங்களிலும் ஒரே ஈசுரன் இருந்தாலும் அவை வெவ்வேறு விதங்களாயிருக்கின்றன வென்பது:

எல்லாத் தண்ணீரிலும் ஈசுரனே வசிக்கிறார். எனினும், எல்லாத் தண்ணீரும் குடிப்பதற்கு யோக்கியமுடையவை யாகா; ஒருவிதத் தண்ணீர் கால் கழுவுதற்கு உபயோகப்படுகிறது; மற்றொருவிதத் தண்ணீர் ஸ்நானத்திற்கு மாத்திரம் உபயோகப்படுகிறது; இன்னொருவிதத் தண்ணீர் குடிப்பதற்கும் உபயோகப்படுகிறது; வேறொருவிதத் தண்ணீர் தொடுவதற்கும் யோக்கியமில்லாமலிருக்கிறது. எல்லா இடத்திலும் ஈசுரன் ஒருவரே வசிக்கிறார். எனினும், எல்லா இடங்களும் மனிதன் பிரவேசிப்பதற்கு யோக்கியமாயிரா. நாம் சில இடங்களுக்குச் சமீபத்திற் செல்லலாம்; வேறு சில இடங்களில் நாம் உள்ளேயும்

தூழையலாம்; இன்னும் சில இடங்கள் நாம் சமீபத்திற் செல்வதற்கே யோக்கியமுள்ளவையா யிருக்கமாட்டா. இவற்றைப்போலவே, எல்லா மனிதர்களிடத்திலும் ஒரே ஈசுரன் இருக்கிறார். எனினும் நாம் எல்லோரையும் உயர்ந்தவர்களாகக் கொள்ள முடியாது; சிலரிடம் சமீபத்தில் மாத்திரம் நெருங்கலாம்; சிலரிடம் நெருங்கி அன்னியோன்னியமாகக் கலந்துறவாடலாம். பின்னும் சிலர் நாம் தூரத்திலிருந்து கூடப் பார்ப்பதற்கு யோக்கியமற்றவர்களா யிருப்பார்கள். ஆதலின், எங்கும் ஈசுர னிருந்தாலும், நாம் உயர்வாகக் கொள்ளத்தக்க குணமுடையவர்களையே கொள்ளவேண்டும். புலியினிடத்தும் ஈசுரன் வசிக்கிறா ரென்று நாம் அதனிடத்து நெருங்க முடியுமோ? முடியாது. அதைப்போல, கெட்டவர்களிடத்து ஈசுரன் வசிப்பதா யிருந்தாலும் நாம் அவர்களிடம் நெருங்கக் கூடாது.

574. எல்லாரிடத்தும் ஈசுர னிருந்தாலும் ஒவ்வோருவரும் குணத்தால் வேறுபடுவா ரென்பது:

பிராமண வகுப்பில் பலர் பிறக்கிறார்கள்; அவர்களெல்லோரும் பிறப்பால் பிராமணர்களே யாவார்கள். எனினும், அவர்களில் சிலர், மகா வித்வான்க ளாவார்கள்; சிலர், வைதீகர்க ளாவார்கள்; வேறு சிலர், சமையற்காரர்க ளாவார்கள்; பின்னும் சிலர், தாசியினுடைய வீட்டுவாயிலுக் கெதிரில், அவளுடைய தயவைப் பெறவேண்டித் தங்க ளுடைய குல்வொழுக்கங்களை யெல்லாம் விட்டு மண்ணில் கிடந்து புரளுவார்கள். இதைப்போலவே, ஈசுவர வியாப

கம் பெற்ற மனிதர்க ளெல்லோரும் ஒரே வகுப்பின ரெனி னும் தங்கள் தங்கள் குணங்களுக்குத் தகுதியாய் உயர்ந்த வர்களாகவும் தாழ்ந்தவர்களாகவும் வெவ்வேறு வகைப்பட் டிருக்கின்றார்கள்.

575. ஜாக்கிரதையாக இருக்கவேண்டிய இடங்கள் இன்னவை யென்பது:

அடக்கமின்றியும், விவேக மில்லாமலும், எப்பொழு தும் நச்சாகப் பேசிக்கொண்டே யிருக்கும் உளறுவாயனுடைய வாயாடியிடத்திலும், கபடமிக்க மனிதனிடத்திலும், செவி களிலே துளசியை அணிந்துகொண்டு, மனதில் தெய்வ பக்தி யில்லாமல் வெளிக்கு மாத்திரம் மகா பக்தனைப்போல் நடித்து எல்லோரிடத்தும் தன்னைப் பக்தனென்று காட் டிக் கொள்பவனிடத்திலும், அடிக்கடி மூக்காட்டை யிழு த்து முகத்தை மூடுகின்ற ஸ்திரீயினிடத்திலும், சரீர சௌக்கியத்துக்குக் கெடுதல் செய்யத்தக்கதாயும் - செடி கொடிகள் வளர்ந்து மேலே படரப்பட்டதாயும்-தண்ணீர்ப் போக்கின்றிக் கட்டுக்கிடையா யிருப்பதாயுமுள்ள குளத் துத் தண்ணீரிடத்திலும் நெருங்காமல் அதிக ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். இவ்விடங்களில் நெருங்கினால் கெடுதி சம்பவிக்கும்.

34-வது அத்தியாயம்

இல்லறவாசிகளுக்குரிய நற்போதனை

576. ஈசுரனைப் பற்றிக்கொண்டு உலக தர்மங்களை நடத்தவேண்டுமென்பது:

கிருகஸ்தனே! ஒரு கம்பத்தையோ, அல்லது தூணையோ பிடித்துக்கொண்டு சுற்றி விளையாடும் ஒரு சிறுபையன், அந்தக் கம்பத்தின் ஆதாவால், 'நாம் விழுந்து விடுவோமே' என்ற பயம் சிறிதுமில்லாமல், அக் கம்பத்தைப் பற்றியபடியே அதிவேகமாகச் சுற்றித் தன்னுடைய விளையாட்டை நடத்துவதுபோல, நீயும் ஈசுவரனை உறுதியாக மனதில் பற்றிக்கொண்டு உன்னுடைய இல்லற தர்மங்களை நடத்து; அவ்வாறு செய்யின், நீ எல்லா அபாயங்களினின்றும் விடுவிக்கப்படுவாய்.

577. மனிதனுடைய இரக்ஷணைக்கு வேண்டியவைகளை ஈசுரன் முந்தியே செய்திருக்கின்றாரென்பது:

"நான் எப்பொழுதும், என்னுடைய நித்திய கால கேஷேபத்தை நடத்துவதிலேயே சிந்தனை வைத்துக்கொண்டிருக்கவேண்டியவனாயிருக்கின்றேன்; அப்படியிருக்கும் போது ஈசுர பக்தி யனுஷ்டானங்களை எப்படி நிறைவேற்ற முடியும்?" என்று நீ கவலைப்படாதே. ஈசுரன் உன்னை இவ் வுலகத்திற்கு அனுப்புவதற்கு முந்தியே உன்னுடைய இரக்ஷிப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்து வைத்திருக்கின்றார். அதனால் நீ அவரிடத்தில்

சிந்தையைச் செலுத்திக்கொண்டு இல்லற தர்மங்களை நடத்திவரல் அவை செவ்வனே நடைபெறும்; உன் வேலைக்குத் தக்க கூலி தானே கிடைக்கும். இவ்வாறு உலக காரியங்களுக்கிடையில் இருந்துகொண்டு ஈசுரனிடத்தில் பக்தி செலுத்திப் பரிபூரணத்துவம் அடைகின்றவன் எவனே, அவனே உண்மையான தீர புருஷனுவான்.

578. உலக காரியங்களுக்கிடையில் இருந்தாலும் ஈசுர தியானத்துடனிருக்கவேண்டுமென்பது:

"உலக காரியங்களையும், ஈசுர சிந்தனையையும் ஏக காலத்தில் எப்படி நிறைவேற்றமுடியும்?" என்று நீ கவலைப் படாதே; மனவுறுதி மாத்திரமிருந்தால் அது மிகவும் சுலபமாக நிறைவேறும். அவ்விடத்து விற்கும் ஒரு ஸ்திரீயைப் பார்; அவள் ஒரு விஷயத்தில் மிக ஜாக்கிரதையாயிருந்துகொண்டு, பின்னும் பற்பல வேலைகளை யெல்லாம் செய்து முடிக்கிறாள். ஒரு காலால் உலக்கை யந்திரத்தை மிதித் தாட்டிக்கொண்டும், மற்றொரு கையால் உரலில் இடிக்கப்படும் அவலைத் துளாவிக்கொண்டும், அதே சமயத்தில் தன்னுடைய பிள்ளையை மார்பில் சேர்த்துக்கொண்டும், அவள் வாங்க வருபவர்களிடத்தில் அவள் விற்பனைக் குரிய பேச்சுக்களைப் பேசிக்கொண்டு மிருக்கிறாள். இப்படி அவள் பல வேலைகளைச் செய்துகொண் டிருந்தபோதிலும், அவளுடைய மனமானது, 'உலக்கை, தலையில் மோதித் தனக்கு அபாயத்தை உண்டாக்கி விடக்கூடாது' என்னும் ஒரு விஷயத்திலேயே நிலைத்திருக்கின்றது. இவளைப்போல

நீயும் பற்பல உலக காரியங்களை நடத்தினாலும் முக்கியமாக உன் மனதை ஈசுரனிடத்தில் வைத்துக்கொள். அதினின்றும் எப்பொழுதும் நழுவி விடாதே.

579. பிரமானந்தத்தை யடைவதற்கு உலக பந்தம் தடையா யிருந்தாலும் ஈசுரத் தியானத்துடனிருந்தால் அது சித்திக்கு மென்பது:

தண்ணீருக்குள் ஆழ்ந்து கிடக்கும் மூதலையானது, மேல் மட்டத்திலே நீந்தி விளையாட விரும்புகிறது; அடிக்கடி மேலே கிளம்பிப் பார்க்கிறது. அப்படிக் கிளம்பும்போதெல்லாம் வேட்டைக்காரர்கள் ஜாக்கிரதையுட னிருந்து அதைக் குறி பார்த்துச் சுட ஆரம்பித்துவிடுகிறார்கள். அதனால் அது பயந்து தன்னுடைய விருப்பத்தை அடக்கிக்கொண்டு பெரும்பாலும் தண்ணீருக்குள்ளேயே மூழ்கிக் கிடக்கிறது. அப்படிக் கிடந்தாலும், அது மேலே கிளம்பவேண்டுமென்று தனக்கிருக்கும் விருப்ப மிகுதியினாலே ஜனங்கள் அடங்கிய சமயம் பார்த்துச் சந்தோஷத்துடன் மேலே கிளம்பி, நீர்ப்பரப்பிலே நீந்தி விளையாடுகிறது. இதனுடைய இடைவிடாத் தியானமே அவ்வாறு இது குறித்த காரியத்தை நிறைவேற்றி வைக்கிறது. இதைப்போலவே, நீயும் பிரமானந்தத்தை அடையவேண்டுமென்னும் விருப்பத்துடன் உலகத்துள்ளே வசித்தால், அடிக்கடி உலகபந்தத்தை விட்டு வெளியேறிப் பிரமானந்த சாகரத்தின் மட்டத்திலே நீந்தி விளையாடக் கருதி வெளியேறப் பிரயத்தனப்படுவாய்; அப்படிப் பிரயத்தனப்

படும்போதெல்லாம் உன்னுடைய குடும்ப வாழ்வும், உலக பந்தமும், உன்னைத் தடுத்துவிடும். அதனால் நீ உலகத்திலேயே அழுந்தி யிருப்பாய். அப்படி யிருந்தாலும் நீ ஈசுவரனைத் தியானித்துக்கொண்டே யிரு; அவரிடம் உன்னுடைய துக்கங்களை யெல்லாம் சொல்லிக்கொண்டேயிரு. அப்படி யிருந்தால் ஒரு சமயத்தில் நீ அவருடைய கிருபையால் திடீரென்று உலகத்தை விட்டு நீங்கி முத்திப் பதவியை அடைந்து பிரமானந்த சாகரத்தின் மேல் மட்டத்திலே நீந்தி விளையாடுவாய்.

580. சத்தியமார்க்கத்தி லிருப்பவன், எந்த அவஸ்தையி
லிருந்தாலும் தன்னுடைய மனதை அச்
சன்மார்க்கத்தினின்றும் நழுவவிடக் கூடாதென்பது:

இந்திய நாட்டிலே கிராமாந்தரங்களில் வசிக்கும் சில பெண்கள், குளத்திற்குப் போய்ப் பல குடங்களில் தண்ணீரை மொண்டு, நாலைந்து குடங்களுக்குக் குறையாமல் நீர்க்குடங்களை ஒன்றின்மேலொன்றுகத் தலையில் அடுக்கி வைத்துக்கொண்டு ஒருவரோ டொருவர் தங்கள் தங்கள் சுக துக்கங்களைப்பற்றிப் பேசிக்கொண்டு வழியில் ஒய்யாரமாகக் கைகளை வீசிக்கொண்டு நடந்து செல்வார்கள். அவ்வாறு சென்றபோதிலும், தங்கள் தலைமீதிருக்கும் நீர்க்குடங்களிலிருந்து ஒரு துளி ஜலமாவது சிந்தாதபடி அவ் விஷயத்தில் முக்கியமாக நினைவைச் செலுத்தி வெகு ஜாக்கிரதையாக நடந்துபோவார்கள். இவர்களைப்போலவே சத்தியமார்க்கத்தில் செல்பவன் எத்தொழிலைச் செய்தா

னும் ஏதவஸ்தைப்பட்டாலும், அவனுடைய மனமானது அம் மார்க்கத்தினின்றும் நழுவாதபடி மிக்க ஜாக்கிரதை யாக நடந்துகொள்ளவேண்டும்.

581. மனிதன், தனது மனத்தை ஈசுரன்பால் செலுத்திக் கொண்டிருக்கும்வரையில் சம்சார சாகரத்தில் அழுந்தா னென்பது:

கப்பலிலிருக்கும் திசைகாட்டிக் கருவியிலுள்ள காந்த முள்ளானது எப்பொழுதும் வடக்கையே நோக்கிக்கொண் டிருக்கும். அதனால்தான் கப்பலானது, வழி தவறுமல் தான் செல்லவேண்டிய திசையை நோக்கிப் போகிறது. இதேபோல், மனிதனுடைய ஹிருதயமானது ஈசுவரனை நாடிக்கொண் டிருக்கும் வரையில் அவன் வழி தவறிச் சம்சாரசாகரத்தில் மூழ்கிவிடமாட்டான்.

582. பக்தியனுஷ்டான முடையவர்கள் பரிகசக்காரர்களை விட்டு நீங்கிவிடவேண்டு மென்பது:

ஈசுரபக்தியை அனுஷ்டித்துக்கொண் டிருப்பவர்கள், அதையும், பரிசுத்தத் தன்மையையும், பரிசுத்த ஆத்மாக் களையும் நிந்தித்துப் பரிகசிக்கிறவர்களிடம் சேராமல் அவர்களை விட்டு நீங்கிவிடவேண்டும்.

583 குழந்தைகளுக்கு ஈசுரனே பிதாவென்று கருதவேண்டு மென்பது:

ஒரு பிசபுவின் குடும்பத்தில் அவருடைய குழந்தை களை வளர்ப்பதற்காகச் செவிலித்தாய் வேலையிலிருப்பவள்,

அக் குழந்தைகளைத் தன்னுடைய குழந்தைகளைப்போல்ப் பாவித்து நேசித்து வளர்த்துவந்தபோதிலும், அக் குழந்தைகள் அவளுக்குச் சொந்தமல்ல வென்பதை அவள் நன்று யுணர்ந்திருப்பாள். அதைப்போலவே, குடும்பஸ்தர்கள் குழந்தைகளைப் பெற்று வளர்த்துவந்தபோதிலும், 'அக் குழந்தைகளுக்கு மூல பிதா ஈசுரனுகவிருப்பதால், நாம் இரட்சகர்களே தவிர பிதாக்களாகமாட்டோம்' என்று நினைத்து ஈசுரனையே அக் குழந்தைகளுக்குப் பிதாவென்று கருதியிருக்கவேண்டும்.

584. ஞானத்தையும், பக்தியையும் அடைந்தபின் உலகுக்குள் இருந்தாலும் தோஷமில்லை யென்பது:

பிரமசமாஜத்தைச் சேர்ந்த சில வாலிபர்கள் ஒரு சமயத்தில் தாங்கள், ஜனகருடைய கொள்கையைப் பின்பற்றி உலகத்தில் சற்றும் பற்றில்லாமல் வசிப்பதாக என்னிடம் கூறினர்கள். அதற்கு நான், அவர்களிடம், "நீங்கள் ஜனகர் கொள்கையைப் பின்பற்றுவதாகச் சொல்வது சுலபம்; அதன்படி நடப்பது மர்த்திரம் அருமை; மனிதர்க்குச் சரீரப் பற்று ஒழிதல் மிகவும் கஷ்டம்; ஆதலால், களங்கமில்லாமல் உலகில் சஞ்சரிப்பது முடியாது. அதனல் ஒரு ஏகாந்தமான விடத்திலிருந்து நல்ல அனுஷ்டானத்தைச் செய்து ஞானத்தையும், பக்தியையும் அடைந்த பின்னர் உலகுக்குள் நுழைந்தால் களங்கமற் றிருக்கலாம்; பாலை ஒரு பாணியில் விட்டு உறைமோர் ஊற்றி அசையாமல் ஓரிடத்தில் வைத்தால் மர்த்திரந்தான் அதிலிருந்து தயி

ருண்டாகும்; அந்தப் பானையை ஆட்டினாலும் அல்லது மாற்றினாலும் தயிர் கெட்டுவிடும். அவ்வாறு கெடாமல் தயிரை உண்டாக்கிக் கொண்டபின் எவ்விடத்திலும் வைத்து உபயோகிக்கலாம். இதைப்போல, ஏகாந்தமான விடத்திலிருந்து நல்ல அனுஷ்டானத்தால் பரிசுத்தத் தன்மையை அடைந்த பிறகு உலகில் சஞ்சரித்தாலும் அத் தன்மை கெடாது; மனதில் பற்றற்ற தன்மை நிலைத்திருக்கும். ஜனகர் ஆரம்பத்தில் எத்தகைய பயங்கரமான தவங்களையும் அனுஷ்டிக்கவில்லை. எனினும், இயற்கையில் மனத்தை வசப்படுத்தத்தக்க மஹா தீரராயிருந்தார்; அவர் உலகிலிருந்தபடியே ஞானமாகிய கத்தியையும், கர்ம மாகிய கத்தியையும் கையாடி வந்தார். அதாவது ஞானயோகத்தையும், கர்ம யோகத்தையும் அனுஷ்டித்து வந்தார். அதனால் அவர் எவ்வளவும் பற்றின்றி ஜீவன்முத்தராய்க் காலங் கழித்தார். அதுபற்றியே அவருக்கு விதேகர் என்னும் பெயரு முண்டாயிற்று. ஆதலால் நீங்கள், அவரைப்போன்றிருக்க விரும்பினால் முதலில் கொஞ்சக் காலம் வரை ஏகாந்தமான விடத்திலிருந்து நல்ல அனுஷ்டானஞ் செய்து ஞானம் பக்திகளை அடைந்த பின்னர் உலகத்தில் நுழைந்து சஞ்சரியுங்கள்; அப்படிச் செய்தால் அவருடைய நிலைமை உங்களுக்குண்டாகும்" என்று சொன்னேன். இக[illegible] உலகத்திலிருந்தபடியே ஞானமார்க்கத்தை [illegible]லாமெனினும், எல்லோரும் அவ்வாறடைதல் [illegible]ல்லாது; சிலருக்கே அஃதியலும்; ஆதலின், மனிதர்கள் முதலில் ஏகாந்தமான விடத்திலிருந்து நல்லனுஷ்டானத்தால் ஞான

க்தியும் பக்தியையும் அடைந்த பின்னர் உலகத்தில் பிர வேசித்திருந்தால் தோஷம் வராதென்ப துணரப்படும்.

585. உலகத்தில் பற்றற் றிருக்கவேண்டுமானால் கொஞ்சக் காலமாவது ஈசுரனைத் தியானிக்க வேண்டு மென்பது:

உலகத்தில் பற்றற்றிருக்க விரும்பினால் சிறிது காலத் திற்காவது, அதாவது ஒரு வருஷம், அல்லது ஆறு மாதம், அல்லது ஒரு மாதம், அல்லது பதினைந்து நாட்களாயினும் ஏகாந்தமான விடத்திலிருந்து முதலில் ஈசுர பக்தியை அனுஷ்டிக்கவேண்டும். ஈசுர பக்தி யுண்டாக வேண்டு மென்று ஈசுரனைத் தியானிக்கவேண்டும்; பிரார்த்தனை புரிய வேண்டும். 'எனக்குச் சொந்தமான வஸ்து உலகில் ஒன்று மே யில்லை' என்று உறுதி கொள்ளவேண்டும்; 'சொந்த மென்று நினைப்பவர்க ளெல்லோரும் ஒரு சமயம் நீங்கி விடத்தக்கவர்களே; ஈசுரன்தான் உண்மையில் எப்பொழு தும் சொந்தமானவர்; எல்லாம் அவரே; அவரை எப்படி யடையலாம்?' என்னும் கவலையி லிருக்கவேண்டும். அப்படி யிருந்து ஈசுரானுக்கிரகத்தைப் பெற்றுக்கொண்டால்தான், பின்னர் உலகத்தில் பற்றற்று வசித்து முத்த ரைகலாம்.

586. ஜகன்மாதாவின் தியானத்தால் தீய எண்ணங்கள் நீங்கு மென்பது:

உன் மனதை உலக பந்தத்தில் இழுத்துவிடத்தக்க ஸ்திடத்திற்கு நீ போக நேரிடும் பக்ஷத்தில், உனது ஜகன் மாதாவை நினைத்துக்கொண்டே செல். அப்படிச் சென்றால்

அவள், உன் ஹிருதயத்திலே மறைந்திருக்கின்ற அநேக தீமைகளினின்றும் உன்னே நீக்கி இரக்ஷிப்பாள்.

587. பரமாத்துமஞானத்தைப் பெற்றுக்கொண்டு உலகத்திலிருந்தால் உலக பந்தங்கள் கட்டுப்படுத்தமாட்டா வென்பது:

கையில் முதலில் எண்ணெயைத் தடவிக்கொண்டு பின்னர் பலாப்பழத்தை அறுத்தால், அப் பழத்தின் பசையானது கையில் ஒட்டாது; அதனால் தொந்தரவில்லாமல் சுளைகளே அறுத்தெடுக்கலாம். அதைப்போல், நீ முதலில் பரமாத்மாவைப்பற்றி ஞானத்தை அடைந்து உன்னைப் பலப்படுத்திக்கொண்டு பின்னர் உலக பந்தப் பொருள்களின் மத்தியில் வசித்தாலும் அவை உன்னைப் பாதிக்கமாட்டா.

588. ஈசுரனை யடைந்தவனிடத்தில் உலக பந்தம் சேரா தென்பது:

சிறு பிள்ளைகள் கண்ணைக் கட்டி விளையாடும் கண்ணாம்பூச்சி யென்னும் ஒருவித விளையாட்டிலே, கண்ணைக் கட்டிவிடும் பாட்டியாரை ஒருவன் தொட்டுவிட்டால், பின்னர் கண்கட்டப்பட்டவனால் அவன் துரத்தி ஹிம்சிக்கப்படமாட்டான். அமைதியாகப் பாட்டியார் அருகில் இருந்துகொண்டிருப்பான். இதைப்போலவே, உலக வியவகாரங்களில் திரியும் ஒருவன் ஒருமுறை ஈசுரனைத் தரிசித்துவிட்டால், பின்னர் உலக பந்தங்களாலே பந்திக்கப்படமாட்டான். அவற்றைப்பற்றி அவனுக்குப் பயமே கிடையாது.

589. உலகத்திலிருந்துகொண்டு மோக்ஷத்தை யடைய விரும்புகிறவன் முதலில் உலக இயலுக்குத் தக்கபடி நடந்துகொள்ள வேண்டுமென்பது:

ஒரு மாந்திரீகன், பிரேத ஆத்மாவின் மூலமாகத் தனது தேவதையை அழைக்க முயற்சிக்கிறபோது, ஒரு புதிய மனுஷ்ய பிரேதத்தின்மீது உட்கார்ந்துகொண்டு அதனருகே ஆகாரத்தையும், சாராயத்தையும் வைத்துத் தான் நினைத்த தேவதையை நோக்கி ஜபம் செய்வான். அப்படி மந்திரத்தை ஜபித்துக்கொண்டிருக்கும்போது, எப்போதாவது அந்தப் பிரேதம், இடையிற் கிளம்பும். பேயின் தோற்றத்தால் சிறிது நேரம் உயிர் பெற்று வாயைத் திறக்கும். இடைவிடாமல் ஜபம் செய்துகொண்டிருப்பவன், அப்பொழுது அப் பிரேதத்தின் மூலமாகக் கிளம்பிய பேயைச் சாந்தி செய்யும் பொருட்டு அந்தப் பிரேதத்தின் வாயிலே சாராயத்தை ஊற்றி ஆகாரத்தைப் போடுவான். அப்படிச் செய்தால் அந்தப் பேய் அடங்கிவிடும். பின்னர் அவனுடைய ஜபம் பூர்த்தியடைந்து அவன் நினைத்த தேவதை அவனுக்கு முன்னே பிரசன்னமாகும். அப்படிச் செய்யாவிட்டாலோ, அந்தப் பேயினால் அவனுடைய ஜபம் தடைப்பட்டு, அவன் விரும்பிய தேவதையும் பிரத்தியக்ஷமாகாமற் போய்விடும். இதைப்போலவே நீயும், இவ் வுலகமாகிய பிணத்தின் மார்பிலே வசித்துக்கொண்டு மோக்ஷம் அடைய விரும்பினால், முதலில், உலக தர்மம் உன்னிடம் பெற விரும்புவதை யெல்லாம் அதற்கு நீ கொடு; அதாவது உலக வாழ்க்கைக்கு இன்றி யமையாதவைகளை யெல்லாம் நீ

செய்துவிடு. அதனால் உலக பந்தம் சாந்தி யடைந்துவிடும்; பின்னர், உன்னுடைய ஈசுரத்தியானம் பூர்த்திபெற்று உனக்கு மோக்ஷம் சித்திக்கும். நீ அவ்வாறு செய்யாமல்மோக்ஷத்தை நாடுவாயானால், உலகக் கவலைகளினாலும், தொல்லைகளினாலும், உன்னுடைய அனுஷ்டானங்கள் சிதைந்து, நீ கொண்ட எண்ணம் நிறைவேறாமற் போய்விடும்.

590. உலக விவகாரத்திலிருந்தாலும் ஈசுரனை மறக்கக் கூடாதென்பது:

தெருவிலே பாட்டுப்பாடிப் பிச்சை வாங்குகிறவன், ஒரு கையினாலே தம்பூரை மீட்டிக்கொண்டு, மற்றொரு கையினாலே மிருதங்கத்தை அடித்துக்கொண்டு, கண்டத்தினால் பாட்டையும், சுருதிதாளம் கெடாமல் பாடுகிறான். இவனுடைய கைகள் வேறு வேலைகளைச் செய்துகொண்டிருந்தபோதிலும், மனமானது பாட்டைப் பிசகாமல் பாடுவதில் மிக்க ஜாக்கிரதையாகச் சென்றுகொண்டிருக்கிறது. இதைப்போலவே, உலக பந்தத்துக் குட்பட்ட மனிதன், தன்னுடைய கைகளால் உலக தர்மங்களைச் செய்துகொண்டிருந்தாலும், தன்னுடைய மனத்தினால் ஈசுர நாமத்தை ஜபிப்பதை ஒருபொழுதும் மறந்துவிடக்கூடாது.

591. சிறுவயதிலேயே ஈசுர பக்தியைக் கைக் கோள்வதுதான் சிறப்பாகு மென்பது:

மனிதன் சிறு குழந்தையாயிருக்கும்போது அவனுடைய ஹிருதயத்திலே பகுக்கப்படாத முழு அன்பும்

நிறைந்திருக்கிறது. அவன் பருவமடைந்து விவாகஞ் செய்துகொண்டால், அவனுடைய அன்பில் பாதியை மனைவியிடம் செலுத்திவிடுகிறான். அதன்மேல் அவனுக்குக் குழந்தைகள் பிறந்துவிட்டால் அவன், அக் குழந்தைகளிடத்தில் கால்பங்கு அன்பைச் செலுத்திவிடுகிறான். இந்த இரண்டுவகையிலும் அவனுடைய அன்பில் முக்கால் பங்கு செலவாகிவிடுகின்றது. மீதி யிருப்பது கால் பாகமே. இந்தக் கால்பாகத்தையும் அவன், பிதாவுக்கும், மாதாவுக்கும், கீர்த்திக்கும், பெருமைக்கும், கர்வத்திற்கும், ஆடையாபரணங்கள் முதலியவற்றிற்கும் பங்கிட்டுக் கொடுத்து விடுகிறான். முடிவில் அவனிடத்தில், ஈசுரன்பால் செலுத்துதற்குச் சிறிதாவது அன்பு மிச்ச மில்லாமற் போய்விடுகிறது. ஆதலால், மனிதன், பகுக்கப்படாத பூரண அன்புடனிருக்கும் குழந்தைப் பருவத்திலேயே தன் அன்பை ஈசுரனிடத்தே செலுத்துவானுகில், அவரைச் சுலபமாகக் கண்டு அவரிடம் பக்தி செலுத்த முடியும். வயது முதிர்ந்தவர்கள் அவ்வாறு பக்தி செலுத்துதல் முடியாது.

592. உலகிலுள்ள ஞானிக்கும் அதைத் துறந்த ஞானிக்கும் உள்ள வித்தியாசம்:

உலகில் வசிக்கும் ஞானிகளையும், உலகைத் துறந்த ஞானிகளையும் பொதுவாக நோக்கும்பொழுது இருவகுப்பினர்க்கும் வித்தியாச மில்லை. இருவகுப்பாரிடத்தும் ஒரே ஞானம்தான் இருக்கிறது. எனினும் சிறப்பாக நோக்கும் போது சிறிது வித்தியாசம் காணப்படுகின்றது. என்ன

வெனில், உலகில் இருக்கும் ஞானிகளுக்குப் பய முண்டாவ தற்குக் காரணங்க ளுண்டு: சிற்றின்ப நுகர்ச்சிகளுக்கிடை யில் அவர்கள் வசிப்பதால், 'அவை நம்மை எங்கே இழுத் துக்கொள்ளுமோ?' என்னும் அச்சம் அவர்களின் மனதில் உண்டாய்க்கொண்டே யிருக்கும். கரி பிடித்த அறையிலே வசிக்கும் மனிதன், எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தாலும் ஒரு சமயத்தில் அவன்மீது அந்தக் கரி படிந்து கறைப்படு த்திவிடக் கூடும். அதைப்போல், உலகத்தில் வசிக்கும் ஞானி, எவ்வளவு ஜாக்கிரதையுட னிருந்தாலும், அவ்வுலக பந்தத்தால் பீடிக்கப்பட்டுவிடுவான். அதனாலேயே எப் பொழுதும் அவ்வகை ஞானிகளுக்கு அச்ச முண்டு.

593. ஜகன்மாதாவைக் கண்டபோது உலகபந்தம் நீங்கிவிடு மெனல்:

சிறு குழந்தைகள் தாயாரைவிட்டு நீங்கியிருக்கும்போ ழுது ஓர் அறையிலே தங்கள் இஷ்டப்படி யிருந்து பொம்மை களை வைத்து விளையாடிக்கொண்டிருக்கும். அப்படி விளை யாடிக்கொண் டிருக்கும்போது தாயார் அவ் வறைக்குள் வந்துவிட்டால், அவளைக் கண்ட மாத்திரத்தில் அக் குழ ந்தைகள், தாங்கள் வைத்து விளையாடிக் கொண்டிருந்த பொம்மைகளை யெல்லாம் எறிந்துவிட்டு 'அம்மா! அம்மா!!' என்று கூவிக்கொண்டு அவளிடத்தே ஓடிவிடும். இவர் களைப்போலவே நீயும், ஜகன்மாதாவைப் பிரிந்து உலக மாகிய அறைக்குள்ளிருந்து தனம், கீர்த்தி, கௌரவம் என்னும் பொம்மைகளைக் கைக்கொண்டு அவைகளுடன்

விளையாடிக்கொண்டிருக்கின்றாய். இத்தகைய விளையாட்டில் மூழ்கிக்கிடக்கும் நீ, ஜகன்மாதாவை ஒருமுறை தரிசித்து விட்டால் மேற் கூறியவற்றை யெல்லாம் நீக்கிவிட்டு அவளிடம் விரைந்தோடிச் சேர்ந்துகொள்வாய். பின்னர் நீ நிலையற்ற உலக சுகத்தை விரும்பமாட்டாய்.

594. உலகினரைத் தந்திரமாக ஈசுர பக்தியில் இழுக்கவேண்டு மென்பது:

"உலகபோகத்தை யெல்லாம் ஒழித்துவிட்டு, ஈசுரனுடைய பாதாரவிந்தங்களைச் சரணடைய வாருங்கள்" என்று உலகினரைக் கூப்பிட்டால், அவர்கள் ஒருபொழுதும் அவ் வழிக்கு வரமாட்டார்கள். ஆதலின், அவர்களுக்கு உலக சுகத்தை முதலிற் காட்டியே அதன் மூலம் பின்னர், தந்திரமாக அவர்களைப் பக்தி மார்க்கத்துக்கு இழுக்க வேண்டும். அப்படியே கௌர் என்பவரும், நிதை என்பவரும் 'உலகினரை எப்படி பக்திவழிக்கிழுத்து உய்விப்பது?' என்று தீர்க்காலோசனை செய்து அவர்களை நோக்கி, "எல்லோரும் வாருங்கள்; மாகூர் என்ற மீன்குழம்பைச் சாப்பிடுங்கள்; அழகிய கன்னிகையை அணைத்துக்கொள்ளுங்கள்; பிரபுவாகிய ஹரியின் நாமத்தைத் துதித்து உரக்கப் பாடுங்கள்" என்று கூப்பிட்டார்கள். இங்கே இவர்கள், மாகூர் என்ற மீன்குழம்பென்று சொன்னது, ஈசுர பக்தியினாலே உள்ளம் பூரித்துப் பொழிகின்ற ஆனந்தக் கண்ணீரே யாம்; அழகிய கன்னிகை யென்று சொன்னது, ஈசுரப் பிரமைகொண்டவன், ஞானேந்திய மிகுதியினாலே ஆன

ந்த ப்ரவசமாய், நிற்கமாட்டாமல் கீழே விழுந்து அணைத்துக்கொள்கின்ற பூமியேயாம். உலகினர் நல்லுணவை உண்பதிலும் ஸ்திரீகளைச் சேர்வதிலும் விருப்பமுடையவர்களாதலின், அவற்றின் பேரைச் சொல்லி அவர்களின் மனத்தை வசப்படுத்தக் கருதி, அப் பெரியோர், இந்தக் கெட்ட பொருள்களின் பெயர்களை அந்த நல்ல பொருள்களின் மேல் ஏற்றிக் கூறினர்கள். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே உலகினரில் பலர், "முதலில் நமக்குத் திருப்தியான மீன்குழம்பைச் சாப்பிட்டுக் கன்னிகளைச் சேர்ந்து சந்தோஷித்துப் பின்னர் ஹரிநாமத்தைப் பாடலாம்; இதில் நமக்கொன்றும் கஷ்டமில்லை" என்று தங்கள் சுகானுபவ விருப்பத்தினால் பக்தர்களைப்போன்று நடித்துக் கொண்டு ஈசுர நாமத்தை ஸ்தோத்திரம் செய்வதற்கு அவர்களிடம் ஓடினர்கள். அவர்கள் போய்ச் சேர்ந்தவுடன், அப் பெரியோர் இருவரும் முதலிற் கூறிய இரண்டின் உண்மைப் பொருள்களையும் விளக்கமாக அவர்களுக்குப் போதித்தார்கள். அவற்றை உணர்ந்தவுடன், அவர்கள் அப் பெரியாரின் வலைக்குள் அகப்பட்டுக்கொண்டு உண்மை மார்க்கத்தில் சென்றார்கள். மெல்லமெல்ல ஈசுர நாமமாகிய அமிர்தத்தின் சுவையை அவர்கள் உணர்ந்துகொண்டார்கள். அதன்மேல் ஈசுர பக்தியை அனுஷ்டிக்கத் தலைப்பட்டார்கள். இதைப்போலவே, உலகினருக்கு இதமான வார்த்தைகளைச் சொல்லி அவற்றின் மூலம் தந்திரமாக அவர்களைப் பக்தி மார்க்கத்துக்கு இழுத்தால் அவர்கள் எளிதில் வந்து அதனை அனுஷ்டித்துய்வார்கள்.

595. சன்னியாச ஆச்சிரமத்தின் கடின அனுஷ்டானங்களை அனுசரிப்பதற்கு முன் ஆத்மீக நிலைமையை உயர்த்திக்கொள்வதற்கு, கிருகஸ்த வாழ்க்கையிலிருக்கும்போழுதே வேண்டிய சௌகரியங்களைத் தேடிக்கொள்ள வேண்டுமென்பது:

போர்வீரர்கள் எதிரியுடன் சண்டைக்குப்போவதற்கு முந்தியே ஒரு கோட்டையிலே சௌகரியமாயிருந்துகொண்டு சண்டைத் தொழில்களைத் தெளிவாகக் கற்றுக்கொள்கிறார்கள். உண்மையாகச் சண்டை செய்யும்போது நேரிடும் கஷ்டங்கள் அங்கே அவர்களுக்கு உண்டாவதில்லை. அதனால் அவர்களுக்குச் சண்டைத்தொழிலில் நல்ல தேர்ச்சி யுண்டாகிவிடுகிறது. அத் தேர்ச்சியைக்கொண்டு அவர்கள் உண்மைச் சண்டைக்குச் செல்லுங்காலத்தில் வெற்றிபெறுகிறார்கள். அவர்களைப்போலவே, கிருகஸ்த தர்மத்திலிருந்துகொண்டு சன்னியாச ஆச்சிரமத்திற்குச் செல்ல விரும்புபவர்களும், அதிற் சென்று அந்தச் சன்னியாசத்தின் கடோரமாகிய விதிகளை அனுசரிப்பதற்குமுன், கிருகஸ்த வாழ்க்கையிலிருக்கும்போதே, சன்னியாச விதிகளை அனுஷ்டிப்பதற்குரிய ஒழுக்க வழக்கங்களைப் பழகி உனது ஆத்மீக நிலைமையை உயர்த்திக்கொள்ளவேண்டும்; அவ்வாறு செய்துகொள்வதில், கிருகஸ்தாச்சிரமத்தில் உனக்கு வேண்டிய சௌகரியங்கள் ஏற்படும். சன்னியாச நிலையிலேற்படும் கஷ்டம் இதில் ஏற்படாது. அவ்வாறு கிருகஸ்தாச்சிரமத்திலிருக்கும் போதே சன்னியாச ஆச்சிரமத்திற்கு வேண்டிய சௌ

கரியங்களைத் தேடிக்கொள்வாயானால், பின்னர், சன்னியாச சத்திற்குச் செல்லுங் காலத்தில் சுலபமாக அவ் விதிகளை அனுஷ்டித்து இலகுவில் உலக பந்தத்தை நீக்கி வெற்றியடைந்து மோக்ஷ சாம்பிராஜ்ஜியத்தைக் கைப்பற்றிக்கொள்வாய்.

596. கிருகஸ்த வாழ்க்கையிலிருந்தாலும் மனத்தை ஈசுரனிடத்தில் செலுத்திக்கொண்டிருக்கவேண்டுமென்பது:

மனிதர்களே! நீங்கள் கிருகஸ்த வாழ்க்கையிலிருந்தபோதிலும் உங்கள் மனத்தை ஈசுரனிடத்தே நிலைநிறுத்திக்கொண்டிருங்கள். ஒரு கையினாலே உலக சம்பந்தமான உங்கள் வேலையைச் செய்துகொண்டு மற்றொரு கையினாலே ஈசுரனுடைய பாதாரவிந்தத்தை ஸ்பரிசித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு உலக சம்பந்தமான வேலை இல்லாமற் போய்விட்டபொழுது இரண்டு கைகளாலுமே ஈசுரனுடைய பாதங்களைச் சேர்த்துப் பிடித்துக்கொண்டு உங்களுடைய முழு ஹிருதயத்தையும் அவரிடத்தே பதியவைத்துக்கொள்ளுங்கள்.

597. ஈசுரனை யடையும்பொருட்டுச் சிறிதுகாலமாவது உலகத்தை விட்டு நீங்கி ஏகாந்தத்தில் வசிக்கவேண்டுமென்பது:

கிருகஸ்தனுக்கும் ஈசுரனைத் தரிசிக்கும் பாக்கியம் உண்டு; பெரிய இராஜ ரிஷியாகிய ஜனகர், கிருகஸ்தாச்சிரமத்திலிருந்தபடியே தான் ஈசுரனைத் தரிசித்தார். ஆனால், அவர் திடீரென்று உயர்ந்த நிலையை அடைந்துவிடவில்லை.

உலகக் குழப்பத்தினின்றும், கூச்சலினின்றும் நீங்கி, ஏகாந்தத்தில் பக்தி யனுஷ்டானங்களைச் செய்துகொண்டு அநேக வருஷங்களைக் கழித்தார். அதன்மேல்தான் ஈசுர தரிசனம் செய்து உயர்ந்த நிலையை அடைந்தார். ஆதலால், மனிதர்களுக்கு ஈசுரனைத் தரிசிக்கும் பாக்கியமிருந்தபோதி யும், அவர்கள் திடீரென்று கிருகஸ்தாச்சிரமத்திலிருந்தபடி யே அதனை அடைந்துவிடல் முடியாது. ஈசுரனை அனுபவத் தில் தரிசிக்கும்பொருட்டுச் சேர்ந்தாப்போல், குறைந்த பக்ஷம் மூன்று நாட்களாவது உலகத்தை விட்டொதுங்கி ஏகாந்தத்திலிருந்து ஈசுரத்தியானம் செய்யவேண்டும். அப் படிச் செய்தால்தான் அவரைத் தரிசித்தல் முடியும்.

598. மனிதன் தியானம் செய்யத்தக்க ஒரு போதனை:

மனிதனே! நீ, "இந்த உலகமானது ஈசுரனுடை யது; என்னுடையதன்று; நான் அவருடைய ஆக்ஞையைச் செலுத்துவதற்கு வந்த பணியாளன்" என்று மனதில் தியானிப்பாயாக; இந்தத் தியானமானது உன்னை ஈசுர சமூகத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கும்.

35-வது அத்தியாயம்

உலக பந்தமும், ஆத்ம ஞானமும்

599. உலகப்பற்றை வைத்துக்கொண்டு ஈசுர பக்தி செய்வதால் பயனில்லை யென்பது:

ஒரு குடியானவனுடைய கரும்புத் தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்சும் வாய்க்காலில் ஆங்காங்கே எலிவளை

கள் பல் இருந்தன. அவன் அந்த வலைகளை மூடிக் கெட்டிப் படுத்தாமல் அந்த வாய்க்காலின் வழியே தண்ணீரை இறைத்துக் கரும்புத் தோட்டத்துக்குப் போக்கினான். அவன் போதுமான தண்ணீரை இறைத்துவிட்டுக் 'கரும்புத்தோட்ட முழுவதும் தண்ணீர் பாய்ந்திருக்கும்' என்று போய்ப் பார்த்தபொழுது, ஒருதுளி ஜலம்கூடக் கரும்புத் தோட்டத்துக்கு எட்டவில்லை. ஜலமெல்லாம் வாய்க்காலுக் கிடையிலிருந்த எலிவளைகளிற் பாய்ந்து பூமிக்குள் போய் விட்டது. அவனுடைய பிரயாசை யெல்லாம் வீணாய்ப் போய்விட்டதினால் அவன் மிகக் கவலை யடைந்தான். இவனைப்போலவே ஒருவன் தன் ஹிருதயத்திலே இராகியமாகக் கீர்த்தி, சுகம், சௌகரியம், பேராசை முதலிய வற்றின் எண்ணங்களாகிய ஓட்டைகளை வைத்துக்கொண்டு, ஈசுரனைப் பூஜிக்க ஆரம்பித்துத் தினந்தோறும் ஈசுரத்தியானம் செய்துவந்தாலும் அவனுடைய தியானமானது ஈசுரனிடத்தே எட்டாது இவனுடைய மனவுறுதியானது மேற்கூறிய பல வழிகளிலும் சிதைந்து விடும். அவன் ஒருபோதும் விருத்தியடையமாட்டான்; வாணாள் முழுவதும் மேற்கூறியபடி ஓட்டை ஹிருதயத்துடன் பக்தி செய்துவிட்டு முடிவில் பார்த்தால் முன்னிருந்த மனிதனாகவே பிரும்பான். அவன் செய்த பக்தியால் சிறிதும் மேன்மை யடைந்திருக்கமாட்டான். ஆதலால், ஒருவன், ஈசுர தரிசனத்தை அடையவேண்டுமானால் ஆசையாகிய எண்ணங்களை விடுத்துப் பரிசுத்த ஹிருதயத்துடன் ஈசுர பக்தி செய்யவேண்டும்.

600. உலகினரும், மஹாத்மாக்களும் ஈசுர பக்தி செய்யும் விதம்:

வீடுகளில் வசிக்கும் ஈயானது கெட்ட வஸ்துக்களே யே அதிகமாக விரும்பும் இயற்கை யுடையது. எனினும் அது சில சமயங்களில் நல்ல வஸ்துக்களையும் விரும்புவ துண்டு. அப்படி விரும்பினாலும் அவ் வஸ்துக்களிடம் சென்று அவற்றின் சுவையை துகர்ந்துகொண் டிருக்கும் போதே கெட்ட வஸ்துக்களைக் கண்டால் உடனே தன் இயற்கைப்படி அதனிடத்தே சென்று மொய்த்துக்கொள் ளும். எப்படியெனில், அது, மிட்டாய்க் கடைகளிலுள்ள நல்ல மிட்டாய்களைக் கண்டு ஒரு சமயத்தில் அவற்றில் மொய்த்துக்கொண் டிருக்கும். அப்படி யிருக்கும்போதே, குப்பை யெடுக்கிறவன், குப்பைக்கூடை கொண்டு போகக் கண்டால் உடனே மிட்டாய்களை விட்டுவிட்டுப் பறந்து அந்தக் குப்பைக் கூடையில் போய் மொய்த்துக்கொள் ளும். சோலைகளில் வசிக்கும் தேனீயோ, தேனை நுக ரும்பொருட்டு எப்பொழுதும் தேனுள்ள மலர்களில் வசிக்குமே யன்றிக் கெட்ட வஸ்துக்களிடம் சேராது. இவற்றைப் போலவே எப்பொழுதும் உலக போகங்களில் கருத்தைச் செலுத்திக்கொண்டிருக்கும் உலகினர், ஒரு சமயம் ஈசுர பக்தியை விரும்புவதுண்டு. அப்படி விரும்பி னாலும் அவர்களுடைய மனம் அதே நிலையில் உறுதி யாக நிற்கமாட்டாது. அவர்களுடைய இயற்கைப்படி அவர் கள் சிக்கிரத்தில் உலக போகங்களிலேயே மீண்டும் திரு ம்பிவிடுவார்கள். உண்மையான மஹாத்மாக்களாகிய பரம

ஹம்ஸர்களோ எப்பொழுதும் ஈசுர பக்தியையே அனுஷ்டித்து அதிலுள்ள சுகத்தை அனுபவித்துக்கொண்டிருப்பார்கள்.

601. பந்த ஜீவனின் இயற்கையும் முக்தாத்மாவின் இயற்கையும்:

உலக பந்தத்துக் குட்பட்ட ஜீவன், எப்பொழுதும் மலத்திலேயே வசித்து, மலத்திலேயே மாணமாகின்ற புழுவைப் போன்றதாகும். அத்தகைய ஜீவாத்மாவாகிய சாதாரண உலக மனிதன், சிறிது நேரம் சர்க்கரையிலிருந்தாலும், மலத்தைக் கண்டபோது அதனிடத்திலேயே பெரும்பான்மையும் சேர்ந்திருக்கின்ற ஈயைப்போல, சிறிது நேரம் ஈசுர பக்தியில் புத்தியைச் செலுத்திஞலும் உடனே மாறிப் பெரும்பான்மையும் உலக போகத்திலேயே மூழ்கிக் கிடப்பான். முக்தாத்மாவோ, எப்பொழுதும் தேனையே விரும்பி அதனிடத்திலேயே சேர்ந்திருக்கின்ற தேனீயைப் போலவே சதா சர்வகாலமும் ஈசுர பக்தியிலேயே மூழ்கியிருப்பான்.

602. உலகினன் உலகத்தை விட்டுப் பிரிந்து வசிக்க மாட்டா னென்பது:

குப்பை மேட்டிலுள்ள புழுவானது, எப்பொழுதும் அதனிடத்திலேயே வசிக்கப் பிரியப்படுகின்றது. அதனை, யாரேனும் அக் குப்பை மேட்டினின்று மெடுத்து, ஒரு தாமரைப் புஷ்பத்திலே போட்டுவிட்டால், அது, அந்தப் புஷ்பத்தின் வாசனையைத் தாங்கமாட்டாமல் சீக்கிரம் இற

ந்துவிடும். அதைப்போலவே, உலகினனும், உலக நினைப் புக்களும் ஆசைகளும் ஆகிய மாசுக்குள்ளேயே வசிக்கப் பிரியப்படுவான். அதை விட்டு வெளியேறி ஈசுர பக்தி யென்னும் பரிசுத்த ஸ்தானத்திலே நிமிஷ நேரமாவது வசிக்க அவன் மனம் இடங் கொடுக்காது.

603. அஞ்ஞான நிலையில் மரிப்பவனுடைய நிலையும், ஞானநிலையில் மரிப்பவனுடைய நிலையும்:

சுடப்படாத பானை யொன்று உடைந்துவிட்டால், அதன் துண்டுகளி லுள்ள மண்ணை, குயவன் மற்றொரு புதிய பானையைச் செய்வதற்கு உபயோகப்படுத்திக்கொள் வான். நன்றாகச் சுடப்பட்ட பானை உடைந்துவிட்டாலோ, குயவன், அதன் துண்டுகளை வேறொரு பானையைச் செய் தற்கு உபயோகப்படுத்த முடியாது. அதுபோலவே, ஒரு வன் அஞ்ஞான நிலையிலே மரித்துவிட்டால், அவனுடைய ஆன்ம தத்துவங்களைக் கொண்டு பிரமர் அவனை வேறொரு பிறப்பாகச் சிருஷ்டித்துவிடுகிறான். அவனே சத்திய ஞானத்தை யடைந்து மரிப்பானானால் அவனுடைய ஆன்ம தத்துவங்கள் அந்த ஞானக்கினியால் தகிக்கப்பட்டுவிடு கின்றன. அதனால் அவன் பிரம சிருஷ்டிக்கு உட்படுவ தில்லை; அதாவது மீண்டும் பிறப்பதில்லை.

604. மனிதன், ஈசுரனை அடைய மூயன்றலும் உலக பந்தங்கள் அவனை அவ் வழிக்கு விடா வென்பது:

கீரிப்பிள்ளையை வளர்க்கிறவன், ஒரு சுவரின்மேல் உயரமாக ஒரு பானையை வைத்து, அதற்குள் கீரிப்பிள்ளை

யை விட்டு அதன் கழுத்தில் ஒரு கயிற்றின் ஒரு முனையைக் கட்டி, மற்றொரு முனையில் கனமான கல்லையோ இருப்புக் குண்டையோ சேர்த்து முடிந்து பானைக்கு வெளியில் தொங்கவிட்டு விடுகிறான். அந்தக் குண்டின் பளுவானது கிரிப்பிள்ளையைப் பானையை விட்டு வெளியேறிக் கீழே யிறங்கும்படி இழுத்துக்கொண்டே யிருக்கிறது. அதனால் கிரிப்பிள்ளை பானைக்குள் இருக்க முடியாமல் அடிக்கடி கீழே யிறங்கி அங்கு மிங்கும் சுற்றிக்கொண்டே திரிகின்றது. அப்படித் திரியும்போது யாரேனும் வந்து அதனைப் பயமுறுத்தினால், அது, பலங்கொண்டு அந்தக் குண்டின் பளுவை இழுத்துக்கொண்டு சுவரின்மீ கேறிப் பானைக்குள் நுழைந்துகொள்கிறது. அப்படி நுழைந்துகொண்டாலும் சிறிதுநேரம்கூட அது பானைக்குள் இருக்க முடிகிறதில்லை. குண்டின் பாரமானது இழுத்துக்கொண் டிருப்பதால் உடனே கீழே யிறங்கிவிடுகிறது. இதைப்போலவே, உலகினனும், சம்சாரத் தொல்லைகளால் உண்டாகும் துன்பத்திற் கஞ்சி, உயர [illegible]

மூயன்றனும், உல
பூலோக வாழ்க்கை
யிழுத்துவிட்டு வே

605. தீய நினை
பரிசுத்தமன
சுத்தமான ட
தண்ணீர் கலக்கப்

பாலாக்குவதற்கு நெடுநேரம் செல்லும்; அதிகப் பிரயாசையும் எடுத்துக்கொள்ள வேண்டும். அதைப்போல், உலகினுடைய மனமானது, தீயவையும், அசுத்த முள்ளவையுமான நினைப்புக்களால் கலக்கப்பெற்றால் அதைச் சுத்தம் செய்து உண்மைப் பக்தனுடைய உறுதியையும், பரிசுத்தத்தையும் பெறச் செய்வதற்கு நெடுங்காலம் செல்லும், அதிகச் சிரம முண்டாகும்.

606. களங்கமுள்ள ஹிருதயத்தைக் கொண்டே தீய எண்ணங்களை விலக்கி, பக்தி யனுஷ்டானங்களைச் செய்ய முடியாதென்பது:

சுத்தமான கடுகு வித்துக்களை மந்திரித்துப் பேய் பிடித்தவன்மீது தூவினால் பேய் நீங்கிவிடும். ஆனால், அந்தக் கடுகுக் குள்ளும் பேய் துழைந்துகொண்டிருந்தால் அதனை எப்படிப் போக்க முடியும்? ஒருபோதும் முடியாது. அதைப்போல, களங்கமற்ற ஹிருதயத்தால் தீய எண்ணங்களை விலக்கி ஈசுவரனைத் தியானிக்க முயன்றால் அஃதெளிதில்முடியும்; அந்த ஹிருதயத்திலேயே மாசு படிந்திருந்தால் அதைக்கொண்டு ஒருபோதும் தீய எண்ணங்களை விலக்க முடியாது. ஈசுர பக்தியும் செய்ய வியலாது.

607. பாலியத்திலேயே ஈசுர பக்தி செய்யப் பழகிக் கொள்ளவேண்டுமென்பது:

இளியானது குஞ்சாயிருக்கும்போதே அதற்குப் பேச்சு பாட்டு முதலியவைகளைக் கற்றுக்கொடுத்தால் அவை

தெளிதாக அவற்றைக் கற்றுக்கொள்ளும். அது கிழமரகி, அதன் தொண்டையிலுள்ள தொனித்தோல் கடினமாய் விட்டபின்பு அதற்குப் பாட்டு பேச்சு முதலியவைகளைக் கற்றுக்கொடுத்தால் அவை எளிதில் பயிற்சிக்கு வரமட்டா. அதைப்போலவே, ஒரு மனிதன் இளமையா யிருக்கும் போதே ஈசுரனிடத்தில் மனதை நிலைநிறுத்தும் உபாயத்தைக் கற்றுக்கொள்ளத் தொடங்கினால் அவனால் எளிதில் கற்றுக்கொள்ள முடியும். முதிர்ந்த பருவத்தில் அதைக் கற்றுக்கொள்ள முயன்றாலோ, அது பழக்கத்திற்கு வருவது இலகுவில் முடியாது. ஆதலின், மனிதர், இளமையிலேயே ஈசுர பக்தி செய்யப் பழகிக்கொள்ளவேண்டும்.

608. உலக ஆசையிற் சிக்கிய மனத்தால் உயர்ந்த நிலையை அடைதல் முடியா தென்பது:

சுடப்படாத களிமண்ணைது, குயவன் பல்வேறு வகைப்பட்ட பாத்திர வடிவங்களை உண்டாக்குதற்குப் பயன்படுகின்றது. சுடப்பட்ட மண்ணை அவ்வகைத் தொழிலுக்கு உபயோகப்படுவதில்லை. அதைப்போலவே, உலக ஆசையாகிய நெருப்பினாலே சுடப்படாத, (அதாவது உலக ஆசையிற் சிக்காத) ஹிருதயத்தைக்கொண்டு மனிதன் ஈசுர பக்திமுதலிய உயர்ந்த செய்கைகளைச் செய்தல் இயலும். உலக ஆசையிற் சிக்கிய ஹிருதயமோ அவ்வகைக் காரியங்களுக்குப் பயன்படாது. அதைக்கொண்டு, உயர்ந்த ஆனந்தகரமான உருவங்களை மனிதனால் ஆக்குதல் முடியாது.

609. உலகினனுடைய மனத்தின் தன்மை:

ஈயானது, ஒரு சமயத்தில், மனுஷிய சரீரத்திலுள்ள புண்ணின்மீது உட்காருகிறது; மற்றொரு சமயத்தில் தெய்வங்களுக்கு அர்ப்பணஞ் செய்த நைவேத்தியங்களில் உட்காருகிறது. ஆகவே, இதனுடைய செய்கை எதிலும் நிலையற்றதாகும். இதைப்போலவே, உலகினனுடைய மனமும், ஒரு சமயத்தில் உலகப் பெண்ணின் சுகத்தினிடத்தும், பொன்னின் அனுபவத்தினிடத்திலும் அழுந்திக் கிடக்கிறது; மற்றொரு சமயத்தில் மத விஷயங்களிலே செல்கின்றது. ஆதலின், அவனுடைய மனம் எதிலும் நிலையற்றுத் திரியும் தன்மையுடையதாம்.

610. உண்மைப் பக்தனுடைய மனமும், உலகினனுடைய மனமும்:

தண்ணீரில் நனைந்த தீக்குச்சியை எவ்வளவு அழுத்தி உரைத்தாலும் அதில் நெருப்பு உண்டாகிறதில்லை. புகை கிளம்பி அமர்ந்துகொண்டே யிருக்கும். உலர்ந்த தீக்குச்சியை மிருதுவாக உரைத்தாலும் உடனே அதில் நெருப்புப் பிடித்துக்கொள்கின்றது. இவற்றைப் போலவே, பெண் போகம், பணத்தாசை முதலிய தண்ணீர்களால் நனைந்துள்ள உலகினனுடைய மனமானது, ஈசுர பக்தியில் அழுத்தமாகச் செலுத்தப்பட்டாலும் அதில் அந்த பக்தியாகிய நெருப்புத் தோற்றுதல் அரிதாகும். எத்தனை முறை ஈசுர பக்தியைப்பற்றி அவனுக்குப் போதித்தாலும் அவன் மனம் அதிற் செல்லாது. உலக பந்தங்களாகிற நீரில் படி-

யார்து உலர்ந்து பரிசுத்தமா யிருக்கின்ற உண்மைப் பக்த னுடைய உள்ளமானது, சாதாரணமாக ஈசுர பக்தியில் செலுத்தப்பட்டபொழுதிலும் உடனே பக்தியாகிய அக் கினி அதிற் பற்றிக் கொழுந்துவிட் டெரிகிறது. ஈசுர கர்ம த்தை மிருதுவாக அவனிடம் சொல்லிவிட்டாலும் அவ னுடைய ஹிருதயமானது இலகுவில் ஈசுர பக்தியைப் பற் றிக்கொள்கிறது.

611. மனம் களங்கமற் றிருக்கும்போதே அதை ஈசுரனுக்குச் சமர்ப்பித்துவிடவேண்டு மென்பது:

பழுதடையாமல் பழுத்த ஒரு பழமானது, ஈசுரனுக்கு அர்ப்பணம் செய்யவோ, ஒரு பிராமணனுக்குத் தானஞ் செய்யவோ, தின்னவோ உபயோகமாகும். ஆனால், அதை ஒரு காக்கையோ, அணிலோ கோதிப் பின்னப்படுத்தி விட்டால், அது, ஈசுரனுக்கு நைவேத்தியம் செய்வதற்கும் உபயோகப்படாது; பிராமணனுக்குத் தானம் கொடுக்கவும் உபயோக மாகாது; பரிசுத்த மானவர்கள் தின்பதற்கும் உதவாது. இதைப்போலவே, ஆண்மக்களும், பெண் மக்களும், தங்களுடைய ஹிருதயங்கள், உலக ஆசையாகிற அசுத்தத்தால் களங்கப்படுத்தாம லிருக்கும்போது அவற் றை ஈசுர ஸேவைக்காகச் சமர்ப்பித்துவிடலாம். அந்தக் களங்கமற்ற ஹிருதயங்கள்தாம் ஈசுரபக்தி செய்வதற் குரியனவாம். ஒரு மூறையேனும், அந்த ஹிருதயங்கள் உலக ஆசைகளால் பற்றப்பட்டாலும், சிற்றின்பமாகிய பேயின் சாயையால் பிடிக்கப்பட்டாலும் பிறகு அவை ஈசுர

பக்தி செய்வதற்கு உபயோகப்படமாட்டா. அத்தகைய ஹிருதயங்களை யுடையவர்களை, எப்பொழுதும் சத்திய மார்க்கத்தில் நடக்கச்செய்வது கடினமாக முடியும்.

612. பாலியர் ஹிருதயத்தை ஈசுரன்பால் செலுத்துவது சுலபமாக முடியு மென்பது:

இளமையான மூங்கில், வளைத்து ஒரு வேலிக்கு உபயோகப்படுத்துதற்கு இணங்கி வரும். முதிர்ந்த மூங்கிலோ அப்படி இளகி வரமாட்டாது. பலங்கொண்டு அதனை வளைக்க ஆரம்பித்தாலும் அது முறிந்துவிடுகிறது. இதைப் போலவே, பாலியருடைய ஹிருதயத்தை ஈசுரன் முகமாக இழுப்பது சுலபமாக முடியும். முதிர்ந்தவர்களுடைய ஹிருதயமோ ஈசுரன்பால் இழுத்தால் வராது. வலிதில் அதனை இழுக்க முயன்றாலும் அது நழுவி யோடிவிடும்.

613. உலகினர் உலக பந்தத்தில் அகப்பட்டுக் கொள்ளும் விதம்:

மூங்கிற் குச்சிகளாற் செய்யப்பட்ட பறியினூடே தண்ணீர் பளபளப்புடன் இரைச்சலிட்டுச் செல்வதைப் பார்த்தவுடன், மீன்கள் இங்கே நாம் உலாவுதற்கு நல்ல தண்ணீர் வருகிறதென்று நினைத்து, உற்சாகத்துடன் அந்தப் பறிக்குள் நுழைந்து பின்னர் திரும்பிவர முடியாமல் மாள்கின்றன. அவற்றைப் போலவே, மூட மனிதர்கள், உலக போகமாகிய பொய் மினுக்கிலே மயங்கி, அதை நிலைத்த இன்பமென்று நினைத்து உற்சாகத்துடன் உலக பந்தமாகிய வலைக்குள் நுழைந்து பின்னர் அதை விட்டு

வெளியேற முடியாமல் அதற்குள்ளேயே கிடந்து மாண்டொழிகிறார்கள்.

614. ஆத்மஞானம் அடையக்கூடாதவர்கள் இன்னவர்க ளென்பது:

தங்களுடைய கல்வித் திறமையைப்பற்றித் தாங்களே புகழ்ந்துகொள்கிறவர்களும், கர்வமுள்ளவர்களும், ஐசுவரியத்தினால் வீண்கர்வம் படைத்தவர்களும் ஆத்மஞானத்தை அடையமாட்டார்கள். ஓரிடத்தில் ஆத்மஞானத்தைப் போதிக்கும் சன்னியாசி யொருவர் இருக்கக்கண்ட மற்றொருவர், மேற் கூறிய கர்வங்கொண்டவர்களிடம், "சன்னியாசி யொருவர் வந்திருக்கிறார்; அவர் ஆத்மஞானத்தைப் போதிப்பார்; நீங்கள் அவரைத் தரிசிக்க வருகிறீர்களா?" என்று கேட்டால், அவர்கள், பலவிதமான சாக்குப் போக்குகளைச் சொல்லி "அங்கே வர முடியாது" என்று கூறிவிடுவார்கள். அவர்கள், "நாம் உயர்ந்த அந்தஸ்திலிருப்பவர்கள்; அத்தகைய நாம் ஏன் மற்றொருவரிடத்துக்குப் போகவேண்டும்?" என்று தற்பெருமை கொள்வதனாலேயே அவ்வாறு ஆத்மஞானம் போதிக்கும் சன்னியாசியிடம் செல்லத் தடை சொல்கிறார்கள். அதனாலேயே அவர்கள் ஆத்மஞானம் அடைவதில்லை.

615. மனித வர்க்கத்தாரை மூடியிருக்கும் மாயையினுடைய தன்மை:

இவ்வுலகத்திலே, தங்களைப் பந்தத்தில் இழுப்பதற்கு ஒன்றும் இல்லாவிட்டாலும், சில மனிதர்கள், தங்களை மூடி

யிருக்கும் மாயையால் ஏதேனும் ஒரு பற்றுதலைத் தங்களுக்குத் தாங்களே உண்டாக்கிக்கொண்டு பந்தத்தில் சிக்க முயற்சித்துக்கொண் டிருப்பார்கள். இவர்கள் முத்தியடைவதற்கு விரும்புவதில்லை. இவர்களுக்குப் பந்திப்பதற்குக் குடும்பம் இல்லாவிட்டாலும், பந்துக்கள் இல்லாவிட்டாலும், இவர்கள், ஒரு பூனையாவது, நாயையாவது, குரங்கையாவது, பக்ஷியையாவது வளர்த்து அதனிடமே செல்வமாகக் கருதி, அதனுடன் கொஞ்சி விளையாடித் தங்களுடைய உலக ஆசையைத் தீர்த்துக்கொள்வார்கள். மனுஷிய வர்க்கத்தாசை மூடி யிருக்கும் மாயையின் இரம்மியமான வலை அத் தன்மையது.

616. பிரமஞானம் பக்தனிடத்திற்ருன் பதியு மென்பது:

மென்மையான களிமண்ணில் ஒன்றைப் பதித்தால், அது சுலபமாகப் பதிந்துகொள்ளும். கல்லில் அவ்வாறு பதிவதில்லை. அதைப்போலவே, பிரமஞானமானது, பக்தனுடைய ஹிருதயத்திலே இலகுவில் பதிந்துகொள்ளும்; பந்தங்களில் அகப்பட்ட ஜீவனுடைய ஹிருதயத்தில் பதியமாட்டாது.

617. உலகினன் இன்னவ னென்பது:

மத சம்பந்தமான எல்லாக் காரியங்களிலும் வெறுப்படைபவன் எவனே அவனே உலகினனும். அவன், பரிசுத்தமான ஈசுர கீர்த்தனங்களைக் கேட்பதற்காவது, ஈசுரனுடைய பரிசுத்த நாமத்தை உரைப்பதற்காவது, பிரியப்

படமாட்டான். தான் அவ்வாறு பிரியப்படாம லிருப்ப தோடு, அக் காரியங்களைச் செய்யும் பிறரையும் செய்ய வொட்டாமல் தடுப்பான். மேலும், ஈசுர பிரார்த்தனைகளை நிந்தித்து, மத சம்பந்தமான மனிதர்களையும். சபைகளை யும் கலைத்துத் தன்னுடைய மூடக் கொள்கையால் ஏராள மான ஜனங்களைத் திரட்டுவான்.

618. உலகினனுக்கு மதவுணர்ச்சி நிலைக்கா தென்பது:

இரும்பானது. உலைக் களத்தில் வைத்துச் சூடேற்றப் பட்டுக்கொண் டிருக்கும்வரையில் பழுக்கக் காய்ந்ததா யிருக்கும்; அதைவிட்டு எடுக்கப்பட்ட வுடனே சூடாறிக் கறுப்பாகிவிடும். அதைப்போலவே, உலகினன் ஒரு கூடத்திரத்திலோ, அல்லது சாதுக்களுடைய சங்கத்தி லோ இருக்கிறவரையில் மத உணர்ச்சிகளிலேல தூண்டப் படுவான். எனினும், அவன் அப்போர்ப்பட்ட விடங்களில் நின்று நீங்கிவிடுவானுலல், அப்பொழுதே அவ் வுணர்ச்சிக ளெ யெல்லாம் இழந்துவிடுவான்.

619. உலகினர், எல்லாவற்றையும் துறந்து ஈசுரனிடம் செல்லாதிருப்பதற்குக் காரணம்:

'உலகினர், யாவற்றையும் துறந்துவிட்டு ஈசுரனிடம் ஏன் ஓட முடிகிறதில்லை' எனில், இவ் வுலகமானது, மனி தர்கள் பல வேடதாரிகளாகி, நடிக்கின்ற ஒரு நாடகசாலை போன் றிருக்கின்றது. ஆகையால், இதில் கொஞ்சக்காலம் விளையாடித் தீர்க்கிறவரையில் அவர்கள், தங்கள் வேடங் களை நீக்கிவிடப் பிரியப்படுகிறதில்லை. அவர்கள் விளையா

ட்டி முடிந்த பின்பு கொஞ்சகாலத்திற்கு மேல் தங்கள் வேஷங்களைத் தாங்களே கீழ்க்கொள்வார்கள்.

620. உலகினனுடைய உள்ளத்தில் மதபோதனை இலகுவில் நுழையா தென்பது:

முகலேக்குத் தடித்த தோலிருப்பதால் அதனுடம்பிற் குள் எந்த ஆயுதமும் இலகுவில் நுழைய முடியாது. அதைப்போல, உலகினனுடைய மனதை அஞ்ஞான இருள் மூடிக்கொண்டிருப்பதால் அவனுள்ளத்திலே, பெரியோர் செய்யும் மத போதனையானது, இலகுவில் நுழையாது.

621. உலகினனுடைய மனதில் மதபோதனை தங்கா தென்பது:

ஒரு பாலத்தினூடே தண்ணீரைப் பாய்ச்சினால்: அது ஒரு பக்கத்தில் நுழைந்து மற்றொரு பக்கத்தில் ஓடிவிடும். அந்தப் பாலத்தினிடையில் சிறிதேனும் தங்காது. அதைப் போலவே, ஓர் உலகினனிடத்தே பெரியோர் மதபோதனை யைச் செய்தாலும், அது அவனுடைய ஒரு செவிக்குள்ளே நுழைந்து, மனத்திற்குள் சிறிதேனும் பதியாமல் மறு செவியின் வழியே வெளியிற் சென்றுவிடும்.

622. உலகினன் தன்னுடைய மனத்தை ஈசுரன்பால் இலகுவில் திருப்பமாட்டா னென்பது:

உலக பந்தத்தில் அகப்பட்ட மனிதன், சம்சாரத் தொல்லைகளினால், இடைவிடாது துன்பமுறுத்தப்பட்ட போதிலும், பெண்ணாலும், பொன்னாலும் உண்டாகும்

மயக்கத்தைச் சுலபமாக நீக்கி, ஈசுரமுகமாகத் தனது மனத்தைத் திருப்பமாட்டான்.

623. ஒருவனுக்குச் சற்குரு கிடைத்தாலும், மனவுறுதி இல்லையெனில் பயனில்லை யென்பது:

ஒரு மனிதனுக்குச் சற்குரு தரிசனமும், மகாத்மாக்களுடைய சகவாசமும் ஏற்பட்டிருந்தபோதிலும், அவனுடைய மனமானது, உறுதியற்றதாயும், சலனமுள்ளதாயு மிருக்கும்பக்ஷத்தில் அவற்றால் அவனுக்கு ஒரு பயனும் உண்டாகமாட்டாது.

624. உலகினனுடைய மனம் உலக நினைப்புக்களாலேயே நிரப்பப்பட்டிருக்கு மென்பது:

புழுவின் கூண்டிலே, தானியங்கள் நிறைத்து வைக்கப்பட்டிருப்பதுபோல, உலகினனுடைய ஹிருதயத்திலே சொல்லாணித உலக நினைப்புக்களும் நிரம்பியிருக்கும். உலகினனோடு பேசிப் பார்த்தால் அவனுடைய வார்த்தைகளால், அவ்வாறு அவை நிரம்பியிருப்பதைப் பிரத்தியக்ஷமாகப் பார்க்கலாம்.

625. கோடியோனுடைய ஒழுங்கற்ற ஹிருதயத்தை நேராக்க முடியா தென்பது:

சுருண்ட தன்மையுள்ள உரோமத்தை நேராக்குவதற்குச் சீவிச் சீவி எவ்வளவுதான் முயற்சி பெடுத்தாலும் ஆச்சரியமாகவே முடியாது. அதைப்போலவே, பாபியினுடைய கொடிய ஹிருதயத்தை ஒழுங்குடைய தாக்கு

தற்கு எவ்வளவு பிரயாசை யெடுத்துக்கொண்டாலும், அது கோர்வை யுள்ளதாயும், பரிசுத்த முள்ளதாயும் இலக்குவில் ஆகமாட்டாது.

626. பேத்த ஜீவனிடத்தில் மதவுணர்ச்சி யுண்டாகா தெனல்:

கல்லுக்குள் தண்ணீரானது நுழைதல் முடியாது. அதைப்போல, ஒரு பெத்த ஜீவனிடத்திலே மதபோதனை யானது புகுத மாட்டாது.

627. சாதுக்களுடைய போதனை செல்லாத விடமும், செல்லு மிடமும்:

ஒரு கல்லிலே ஆணியை எவ்வளவு பலங்கொண்டடித்தபோதிலும், அஃததற்குள்ளே நுழையமாட்டாது. ஆனால், அந்த ஆணியை மண்ணின்மேல் வைத்தடித்தாலோ அஃததற்குள்ளே சுலபமாக இறங்கிவிடும். இவற்றைப் போலவே, சாதுக்களுடைய நற்போதனையானது பந்தத்திலகப்பட்டுள்ள ஜீவனிடம் செல்லவே மாட்டாது. ஈசுர நம்பிக்கையுள்ள மனிதனிடத்திலோ சுலபமாகச் சென்று அவனுடைய ஹிருதயத்தில் நுழைந்துவிடும்.

628. உலகினன், ஈசுர லயத்தால் உண்டாகும் ஆனந்தத்தை அறியமாட்டா னென்பது:

ஒரு பிறமையனுக்கோ, அல்லது பெண்ணுக்கோ, கலியாண சுகானுபவம் இன்னதென்று தெரியாது. இவர்களைப் போலவே, உலகினனும், ஈசுரனிடத்திலே லயமாவதால் உண்டாகும் ஆனந்தத்தை அறியமாட்டான்.

629. பரிசுத்த ஹிருதயத்தில் மாத்திரந்தான் ஈசுவர் பிரதிபலிப்பா ரென்பது:

அழுக்கடைந்த கண்ணாடியில், பார்ப்பவர்களுடைய முகம் பிரதிபலிக்க மாட்டாது. அக் கண்ணாடியிலுள்ள அழுக்கை நீக்கிவிட்டாலோ, அப்பொழுது பார்ப்பவர்களுடைய முகம் அதில் நன்றாகத் தெரியும். இதைப்போல, அசுத்தங்கள் நிறைந்த ஹிருதயத்திலே ஈசுவர் பிரதிபலிக்கமாட்டார்; அந்த ஹிருதயம் பரிசுத்த மடைந்துவிட்டாலோ, அதிலே ஈசுவர் தாமே தோற்றுவார்.

630. அனுபவமுள்ள குரு, உலகினனுக்கு உயர்ந்த உபதேசங்களைச் செய்யமாட்டா ரென்பது:

ஒருமுறை தயிர் தோய்க்கப் பெற்ற மண்பாண்டத்திலே, பாலை ஊற்றிவைத்தால், அது தயிராகிவிடுமோ என்ற அச்சத்தால் எவரும் அதில் பாலை ஊற்றிவைப்பதில்லை. இன்னும் 'அது நெருப்பிலேற்றப்பட்டால் உடைந்துவிடுமோ' என்ற சந்தேகத்தால் அதனை நெருப்பிலு மேற்றுவதில்லை, சமையற் காரியங்களுக்கும் உபயோகப் படுத்துவதில்லை. இவ்வாறு அது, எதற்கும் உபயோகப் படுத்தப்படாம லிருப்பதால் பயனற்றதாகவே யிருக்கும். இதைப்போலவே, அனுபவமுள்ள ஒரு நல்ல குருவானவர், "உலகினனுக்கு உயர்ந்த உபதேசங்களைச் செய்தால், அவன், தன்னுடைய இழிவான நோக்கங்களுக்குத் தக்கவாறு, தப்பர்த்தம் செய்து அவ் வுபதேசத்தைத் தப்பிதமான வழியிலே உபயோகப்படுத்துவான்; மேலும், குரு,

அவனுக்குச் சிறிது சோமம் கொடுக்கக் கூடிய வேலையைக் கொடுத்தால் அவன், அந்தக் குரு தனக்கு அநாவசியமாகச் சோமம் கொடுக்கிறார் என்று நினைத்துக்கொள்வான்," என்று அவர் அவனுக்குச் சிறந்த உபதேசங்களைச் செய்யவு மாட்டார்; சிறிது சோமம் தரக்கூடிய வேலைகளை அவனுக்குக் கொடுக்கவு மாட்டார். இவ்வாறு அவன் ஒரு வகைக்கும் உதவாதவனு யிருப்பதால் பயனற்ற மனிதனுவான்.

631. உலகினனுடைய சக்திகள் தப்பான வழியில் செலுத்தப்படு மென்பது:

ஓர் உலகினன், ஒரு ஞானியைப் போன்று அதிக அறிவுடையவனு யிருப்பான்; யோகியைப் போன்று கஷ்டங்களைத் தாங்கக் கூடியவனு யிருப்பான்; துறவியைப் போன்று பெரிய தியாகங்களைச் செய்யக் கூடியவனு யிருப்பான். ஆனால், அவனுடைய இச் செய்கைக ளெல்லாம் சுகுணை யடைதற் பொருட்டு நிகழ்வன வல்ல; இவ்வள கீகத்தைச் சார்ந்த கௌரவம், ஐசுவரியம் முதலியவற்றை அடைதற் பொருட்டு அவனுல் செய்யப்படுகின்றன. எப்படி யெனில், அவன் ஐசுவரியத்தையோ, கௌரவத்தையோ அடைதற் பொருட்டு மிகுந்த புத்திசாலித்தனமாக ஒரு தொழிலைச் செய்கிறன்; கஷ்ட நஷ்டங்களைச் சகித்துக் கொண்டு அந்தொழிலை நிறைவேற்றுகிறன்; அத் தொழிலை நிறைவேற்றும்பொருட்டு ஆகாரம் முதலியவற்றையும் தீக்கிச் சௌக்கியங்களை நாடாமல் மிகுந்த சோமத்தை அடைகிறன். இவை யெல்லாம் சுகுணை அடைதற் பொரு

குட்டிச் செய்யப்படுவன அல்ல வாதனைகளின், பயனற்றனவாம்.

632. உலகினன், சன்னியாசியாலும் பழைய எண்ணம் அவனை உலகில் இழுத்துவிடுமென்பது:

ஓரிடத்திலே சில சன்னியாசிகள் உட்கார்ந்து ஈசுவரத் தியானம் செய்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்கெதிரில் ஒரு பருவ மங்கை நடந்து சென்றாள். அச் சன்னியாசிகளில் ஒருவன் மாத்திரம் அவளைத் தனது கடைக்கண்ணால் பார்த்தான். அவனுடைய மனம், அந்த ஸ்திரீயிலே ஆகருஷிக்கப்பட்டுவிட்டது. இதற்குக் காரணமென்ன வெனில், அந்த மனிதன் முன்னே கிரகஸ்தனாயிருந்து பின்னர்ச் சன்னியாசியானான். அவன் சன்னியாசியாகும்போது அவனுக்கு மூன்று குழந்தைகளிருந்தன. அதனாலேயே முந்தின பழக்க வாசனையானது அவனுடைய மனத்தை அவன் அனுபவித்த ஸ்திரீ சுகத்தின்பால் இழுத்துவிட்டது. முற்பழக்க வாசனையின் தன்மையென்னே!

633. இலௌகீகத்திலுள்ளவன் பிரஹ்ம ஞானத்தை அடைய முடியாதென்பது:

இலௌகீகத்திலே ஆழ்ந்துள்ள மனிதன், பிரஹ்ம ஞானத்தை அடைதல் முடியாது; ஈசுவரனைத் தரிசிப்பதும் முடியாது. சேற்று நீரில் சூரியனையது, மேலுள்ள பிறவஸ்துக்களாவது பிரதிபலிக்கமாட்டா. அதைப்போல

வே, இவனுடைய களங்கமான உள்ளத்தில் ஈசுவரன் பிரதி பலிக்கமாட்டார்.

634. உலகினன் சம்சாரத்தில் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தபோதிலும், அதனை விடத்தக்க அறிவு அவனுக்குண்டாகா தேனல்;

ஒட்டகங்கள் மிகுதியும் முட்செடிகளையே தின்பதால் அவற்றின் வாய்களில் இரண முண்டாய் இரத்தம் பீறிடுகிறது. அப்படியிருந்தாலும் அவை முட்செடிகளைத் தின்பதை விடுவதில்லை. அதைப்போலவே, உலகத்தில் சம்சார பந்தத்தில் சிக்கியவர்கள், எவ்வளவு பயங்கரமான கஷ்டங்களை அனுபவித்தபோதிலும், அச் சம்சாரத்தை விடத் துணிவதில்லை. இப்படி அவர்கள் சம்சாரத்தில் அகப்பட்டுக்கொண்டு, ஒரு தலைமயிரைப் பிடித்த பாம்பானது அதை விழுங்கவும் முடியாமல், விடவும் முடியாமல் தவிப்பதுபோலச் சம்சார இன்பத்தைத் தொல்லையின்றி அனுபவிக்கவும் முடியாமல், அத் துன்பத்தை உதறித்தள்ளி அதை விடவும் முடியாமல் தவிப்பார்கள். கொட்டையும் தோலும் மாத்திரமே யுடையதாய் உள்ளே சதைப்பற்றில்லா திருக்கும் அம்ரா என்ற பழத்தைப் போல உலகமானது, இலேசான இன்பம் ஒன்று மில்லாததுமன்றி அதை அவர்கள் உணர்ந்து அதை விட்டு ஈசுவரனிடத்துத் தங்கள் மனத்தைச் செலுத்துகிற தில்லை. இன்னும் அவர்கள், உலக சகலாசங்களி லிருந்து நீக்கப் பெற்றுப் பரிசுத்த ஞானிகளின் மத்தியில் சேர்க்கப்பட்டாலும்

அவர்களுடைய ஹிருதயத்திலே ஒருபொழுதும் சாந்தியுண்டாகிறதில்லை. அப்பொழுதும் அவர்கள் கவலைகளில் உழன்றுகொண்டே யிருப்பார்கள்.

635. உலகினர்க்கு மதபோதனை பயன்படா தென்பது:

ஒரு கிளிக்கு நல்ல வார்த்தைகளைச் சொல்லி வைத்தால், அது, அப் பேச்சுக்களின் உண்மை அர்த்தங்களைத் தெரிந்துகொள்ளாமலே, அவற்றில் ஏதோ ஒரு அனுகூல மிருப்பதாக நினைத்துக்கொண்டு, "இராதா கிருஷ்ணை! இராதா கிருஷ்ணை!!" என்று அந்த வார்த்தைகளை ஓயாமல் கொல்லிக்கொண்டே யிருக்கும். பூனை வந்து தன்னைப் பிடித்துக்கொண்டாலோ, அச் சமயத்தில், 'பூனை வந்து என்னைப் பிடித்துக்கொண்டது; யாரேனும் வந்து என்னுடைய ஆபத்தை நீக்குங்கள்' என்று சொல்லித் தன்னுடைய பிராணபத்தை நீக்கிக்கொள்ள வகை யறியாமல் தன் ஜாதி இயற்கைப்படி, 'கா! கா,!!' என்று கத்தி உயிர்விடும். அதைப்போலவே, உலகினர்க்கு ஈசுரனை யடையும்பொருட்டு நல்ல மதானுஷ்டானங்களைப் பெரியோர் போதித்திருந்தாலும், அதனால் அவர்கள் ஈசுரனை யடைய வேண்டுமென்ற உண்மைக் கருத்தை உணராமல், 'வேறு தனம், தானியம், சந்ததி முதலிய உலக சம்பத்துக்களைப் பெறலாம்' என்று நினைத்து, அவற்றின் பொருட்டு அந்த ஜபதபங்களைச் செய்துகொண்டு வருவார்கள். அப்படி அவர்கள் செய்துகொண்டு வரும்பொழுதே, தரித்திரம், விசனம் முதலிய துன்பங்கள் வந்து தங்களைச் சூழ்ந்து

கொண்டாலோ, சுகச காமநிர்த்தனை செய்து அவற்றை நீக்கிக் கொண்டு சுகசனை யடையும் வழியைத் தெரிந்து செய்து கொள்ள முடியாமல், தங்கள் மயக்கம் பொருந்திய மனதின் இயற்கைப்படி விசனித்துழலுது, தாங்கள் செய்துகொண்டு வந்த ஜெபதபங்களையும் விட்டுவிடுவார்கள். ஆகையால், அத்தகையினர்க்குச் சேர்ப்பும் மதபோதனையானது பயனற்றதாய் முடியும். அப்போதனைகளை அவர்கள் மிகுதியாகக் கேட்டாலும் என்றும்போல உலகினர்களாகவே விருப்பார்களென்பது நிச்சயம்.

636. உலகினரின் மதசிந்தனை ஒரு நிலையில் நில்லாதென்பது:

ஒரு விஸ்மெத்தையின்மீது ஒருவர் உட்கார்ந்தால் அது கீழே பிதங்கும். உட்கார்ந்த மனிதர் எழுந்துவிட்டால் அம் மெத்தை நிமிர்ந்து முன்னிருந்த நிலைமைக்கு வந்துவிடும். அதைப்போலவே, உலகினர்களும் மதசம்பந்தமான சம்பாஷணைகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறவரையில் அவற்றில் சிந்தனையைச் செலுத்திக்கொண்டிருப்பார்கள். அந்தச் சம்பாஷணைகளைவிட்டுத் தங்கள் உலக வாழ்க்கையின் இனசரிக் காரியங்களில் தூண்டுதலுடன், மதசம்பந்தமான எண்ணங்களை மறந்து முன்போலவே களங்கமுள்ளவர்களாய் விடுவார்கள்.

637. உலகினர்க்கு மதசம்பந்தமான விஷயங்களைக் கேட்பதில் பொறுமை யிராதென்பது:

சில சமயங்களிலே, பரிசுத்தமான சுசன பக்தர்களுடனே சில உலகினர்களும் சேர்ந்து என்னிடம் வந்

திருக்கிறார்கள். அப்படி வந்தாலும் அவர்களுக்கு மதசம்பந்தமான சம்பாஷணை புரிவதில் விருப்பமே இடையாது. உண்மைப்பக்தர்கள், ஈசுர விஷயமாகவும், ஞான விஷயமாகவும் பிரியத்துடன் நெடுநேரம் பேசிக்கொண்டிருக்கும் போது அந்த உலகினர்கள் அமைதியாய் உட்கார்திருக்க மிகுந்த கஷ்டப்படுகிறார்கள். அடிக்கடி, அவர்கள், பக்தர்களிடத்தில், "எப்பொழுது இவ்விடத்தை விட்டு வருவீர்கள்? எவ்வளவு நேரம் இங்கே பேசிக்கொண்டிருக்கப் போகிறீர்கள்?" என்று மிருதுவாகக் கேட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். அப்போது அந்தப் பக்தர்கள், அவர்களிடத்தில், "கொஞ்சம் பொறுத்திருங்கள்; நாங்கள் இதோ வந்துவிடுகிறோம்" என்று கூறுகிறார்கள். உலகினர்க்கு அவர்களுடைய வார்த்தையில் திருப்தி யுண்டாவதில்லை. அதனால் அவர்கள், பக்தர்கள்மீது வெருப்புற்று அவர்களிடம், "அப்படியானால் நீங்கள் பேசிவிட்டு வாருங்கள்; நாங்கள் முன்னே சென்று படகேறுமிடத்தில் உங்கள் வருகைக் காகக் காத்திருக்கிறோம்" என்று கூறுகிறார்கள். இந்த உலகினர் வெளியே போய் வீணில் உட்கார்ந்திருக்கும் நேரத்தை நல்ல சம்பாஷணையில் செலவழிப்பதற்கு மனம் பொருந்துவதில்லை. இப்படி. இவர்கள் வீணே காலத்தைக் கழித்து உலகத்தில் உழல்வார்கள்.

638. மனிதர்கள் இருவகையினராவர் என்பது:

மானுஷர் என்றும், மான்-ஹான்ஷர் என்றும் மனிதர் இருவகைப்படுவர். இவர்களுள் மானுஷர் என்பவர்

ராமத்தில் மாத்திரம் மனிதர்கள் என்ற சாதாரண வர்க்கத்தார்; மான்-தன்மையர் என்பவர், சுசுரூஷை யடையவேண்டு மென்ற ஒரே குறைத்துடையவர்கள். பெயரில் மாத்திரம் மனிதர்களா யிருப்பவர்கள் அதாவது முன் கூறப்பட்டவர்கள் பெண்ணிடத்தும், பொன்னிடத்தும் மயக்கமுடையவர்களாவார்கள்.

36-வது அத்தியாயம்

சித்திகள்

639. சூக்ஷ்ம சக்திகள், பிரஹ்மத்தை யடைதற்கு இடையூறுகளே:

அற்புதங்கள் செய்பவர்களும், சித்திகள் காண்பிப்பவர்களும் சத்தியமார்க்கத்தினின்றும் தவறியவர்கள். இவர்களுடைய மனம் சூக்ஷ்ம சக்திகளாகிற வலைகளிலே அகப்பட்டுக்கொண்டிருக்கும். இந்தச் சூக்ஷ்ம சக்திகள், பிரஹ்மத்தை நோக்கிச் செல்லும் மார்க்கத்திலே இடையூறுகளா யிருக்கும். இந்தச் சக்திகளை விரும்பக்கூடாது. இவற்றால் ஆத்மாவுக்கு ஒரு பயனு மில்லை. ஆதலால், சித்திகள் காண்பிப்பவர்களை நாம் விரும்பக்கூடாது.

640. சித்தியாற் பயனில்லை யென்பதற்கோர் உதாரண கதை:

ஒருவன், ஏகாந்தமான காட்டிலிருந்து, பதினைந்து வருடங்கள்வரை கடுந்தவம் புரிந்து ஜலத்திலே நடக்கும்

சக்தியை அடைந்து சந்தோஷித்து, உடனே தன் குருவினிடம் சென்று, "குருதேவ! நான் ஜலத்தில் நடக்கும் சக்தியை அடைந்துவிட்டேன்" என்று தற்பெருமையாகக் கூறினான். அதைக் கேட்டவுடனே குருவானவர் வெறுப்படைந்து அவனை நோக்கி, "சே! சே!! நீ பதினைந்து வருஷங்கள் கடுந்தவம் புரிந்து உழைத்ததின் பயன் இதுதானா? இதனால் நீ காலணா பிரயோஜனத்தையே அடைந்திருக்கிறாய்; படகுக்காரனுக்குக் காலணாக் கொடுத்தால் அவன் படகின் மூலம் ஜலத்தின்மேல் சென்றுவிடலாம்; இப்பொழுது நீ அதிக நாள் தவஞ் செய்து சித்தியடைந்ததில் இந்தக் காலணாவை மீதிப்படுத்தியிருக்கின்றாய். உன் உழைப்பு வீண்; இதனால் நீ ஆத்மலாபத்தை அடையமாட்டாய்" என்று கூறினார். ஆதலால், சித்தியால் ஒன்றும் பயனில்லை.

641. சித்தியாற் பிரயோசனமில்லை யென்பதற்கு மற்றோர் உதாரண கதை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூற்று:

என்னுடைய பால்ய சிஷ்யன் ஒருவன், ஒரு சமயத்தில் பிறர் மனத்தி லுள்ளதை அறியும் சக்தியைப் பெற்றுச் சந்தோஷமடைந்து, அவ்வனுபவத்தைத் தற்பெருமையாக என்னிடம் கூறினான். அப்போது நான் அவனை நோக்கி, "புத்திசா! இவ்வெதாரு பெரிய மகிமை யென்று நினைத்து. இதனை நீ என்னிடம் தெரிவிக்கின்றாயே; இதைப்பற்றி உனக்கு வெட்கமில்லையா? இனி இதைப்போன்ற அற்ப விஷயங்களிலே உனது சக்திகளை வீண்செலவுசெய்யாதே"

என்று சொன்னேன். இதைக்கொண்டு சித்திகளைப் பெற விரும்புவதில் பயனில்லை யென்பதை உணர்ந்து கொள்ள லாம்.

642. இலாகிரி வஸ்துக்களை உபயோகிக்கும் சாதுவின் சகவாசத்தை ஒழிக்கவேண்டு மென்பது:

இலாகிரி வஸ்துக்களை உபயோகித்துக்கொண்டு, ஸ்யாதியஸ்தருக்கு ஔஷதங்களைக் கொடுக்கும் சாது, யோக்கியமான சாதுவாகமாட்டான். அத்தகைய சாதுவின் சகவாசத்தை அடியோடு ஒழித்துவிடவேண்டும். இவன் பல சித்துக்களைச் செய்தாலும், இவனுடைய மருந்துக ளால் வியாதிகள் தீர்வதாயிருந்தாலும் இவனை நம்ப லர்காது.

643. பயனற்ற சித்தியை அகற்றுவதற்கு ஸ்ரீ ராமகிருஷ் ணர் ஒருவர்க் குரைத்த கூற்று:

நான், பஞ்சவடியில், கடுமையான யோகசாதனையைச் செய்துகொண்டிருந்த காலத்தில், கிரிஜன் என்னும் பெய ருடைய ஒருவர் அங்கே வந்திருந்தார். அவர் மகா யோகி, பல சித்திகளையும் அடைந்திருந்தார். அப்படியிருக்கும் சமயத்தில் ஒருநாள் இருட்டிலே நான், என் அறைக்குவா விரும்பியபொழுது, அவர் என்னுடைய நோக்கத்தை உணர்ந்து எனக்குதவியாக வெளிச்சத்தை உண்டாக்கக் கருதித் தமது கைம்மூலத்தை மேலே தூக்கினார். அவ ருடைய சித்தியால் அதினின்று ஓர் பிரகாசமுண்டாய் இருளைப்போக்கி எங்கும் வெளிச்சத்தை உண்டாக்கிற்று.

நான் அதற்காகத் திருப்தியடையவில்லை. உடனே அவளை நோக்கி, "உம்முடைய சக்தியை இந்த வீண் விஷயத்தில் உபயோகித்தது நன்றன்று" என்று கூறினேன். அதிலிருந்து அவர் அந்தச் சித்தியில் புத்தியைச் செலுத்துவதை விட்டுவிட்டுச் சிரேஷ்டமான பிரஹ்மானுபூதியடைவதில் அவருடைய சக்தியைத் திருப்பிவிட்டார். அதனால், அவர் உண்மை ஞானத்தை அடைந்தார். ஆதலால், வேடிக்கையான சித்திகளில் புத்தியைச் செலுத்தாமல் ஆத்மஞானத்தில் செலுத்தி ஈசுரனை அடைதலே சிலாக்கியமாம்.

644. சித்தி, ஈசுரானுபூதிக்குத் தடையா மேனல். ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூற்று:

என்னுடைய சிஷ்யனிருவன், தூரதிருஷ்டி யென்னும் சித்தியை அடைந்து, என்னிடம் வந்து, "நான் திஷ்டையி லிருக்கும்பொழுது, தூரத்தில் நடந்த சில விஷயங்களையும், அப்பொழுது சில ஜனங்கள் செய்துகொண்டிருந்த விஷயங்களையும் உணர்ந்தேன்; பின்னர் அவை நடந்தது உண்மைதானு வென்று விசாரிக்கையில் அவை உண்மையாகவே நடந்திருந்தன" என்று ஆனந்தத்துடன் கூறினன். அப்பொழுது நான் அவனைப் பார்த்து "புத்திசாலி! இத்தகைய சித்திகள் யோகசாதனையில் உண்டாவது சகஜம்; இவற்றில் ஆத்மலாபமுண்டாகாது; ஈசுரானுபூதியை அடைதற்கு இவைகள் தடையானவைகள்; ஆதலின், இவற்றில் நீ உன் புத்தியைச் செலுத்தாதே; இவைகள் உண்டாகாமல் மறைந்துபோவதற்காக நீ சில தினங்கள்

வரை திஷ்டையை நிறுத்திவை; பின்னர் ஈசுவரனை யடைவதைக்குறித்து திஷ்டை செய்; அதனால் உனக்கு அனுகூலமுண்டாகும்'' என்று கூறினேன். அவன் அவ்வாறே செய்தான். ஆதலின், சித்திகளைப்பற்றித் திருப்தி யடையாமல் அவற்றை அகற்ற வழி தேடவேண்டும்.

645. சித்திகளை மலத்தைப்போல் நினைத்து நீக்கவேண்டு மெனல்:

சித்திகள் அல்லது அற்புத சக்திகள், இந்திரிய நிக்ரகத்தாலும், யோக சாதனங்களாலும், மதானுஷ்டானங்களினாலும் தாமே உண்டாவனவாம். எனினும், இவை மலம்போன்றனவாம். ஆதலின், இவற்றை, மலத்தை நீங்குவதுபோல நீக்கிவிடவேண்டும். அவ்வாறு நீக்காமல் இந்தச் சித்திகளிலே மனத்தைச் செலுத்துகிறவன், இவற்றுடனே ஒட்டிக்கொள்வான். அவனால் இவற்றை விட்டு மேற்படியாகிய பிரஹ்மானுபூதி நிலைக்குச் செல்ல முடியாது.

646. ஒருவன், சித்தியில் திருப்தி யடைந்ததால் தன்னுடைய மேலான சக்தியை இழந்துவிட்டா னென்பது:

சந்திரன் என்னும் பெயருடைய ஒரு மனிதன், குடிகாசித்தி என்னும் ஒருவகைச் சித்தியை அடைந்திருந்தான். குடிகாசித்தியாவது யாதெனில், ஒரு குடிகை (ரட்சையை) வைத்துக்கொண்டு அதன் மூலம், எவரும் உணராதபடி எந்த இடத்துக்குள்ளும் ஊடுருவிச்செல்லுதி

சக்தியை அடைதலாம். அவன் முதலில் ஈசுரனை அடைய வேண்டு மென்று மிகுந்த பக்தியைச் செய்துகொண்டு வந்தான். அப்படிச் செய்துகொண்டு வரும்போது அவனுக்கு நிஷ்டையின் முதிர்ச்சியால் மேற் கூறிய சக்தி யுண்டாயிற்று. அவ்வா றுண்டாகவே அவன், உலகத்தி லுண்டாகும் தாழ்ந்த இன்பத்தை விரும்பி அதனைத் தாழ்ந்த செய்கைகளில் உபயோகிக்க ஆரம்பித்துவிட் டான். "அப்படிச் செய்யக்கூடாது" என்று நான் அவனைத் தடுத்தேன். என்னுடைய சொல்லை அவன் சட்டைபண்ணா மல், ஒரு வீட்டிற்குள்ளே எவருக்கும் தெரியாமல் நுழை ந்து, அங்கிருந்த ஒரு சிறு பெண்ணுடனே இரகசியமாக உறவு செய்துகொண்டு வந்தான். அதனால் அவன், தன் னுடைய உயர்ந்த சக்திகளை யெல்லாம் இழந்து, உலக மாயா சமுத்திரத்தில் வீழ்ந்துவிட்டான். ஆதலின், நிஷ்டை யால் பெரிய சித்திகளை அடைந்தபோதிலும் அவற்றைக் கிறந்தனவாகக் கருதாமல் தள்ளி, ஈசுர தரிசனத்தை யடைய முயற்சி செய்யவேண்டும்.

647. சித்திகளிலிருந்தே, ஈசுரனை மறக்கச்செய்கின்ற அகங்கார முண்டாகிற தென்பது:

கிருஷ்ணன் ஒரு சமயம் அருச்சுனனை நோக்கி, "உன க்கு என்னை அடையவேண்டு மென்னும் விருப்ப மிருந் தால் நீ அஷ்ட சித்திகளில் ஒன்றையும் விரும்பாதிரு க்கவேண்டும்; அந்தச் சித்திகளில் ஒன்றேனும் உன்னிடம் இருக்கும்வரையில், என்னை யடைதல் உனக்குச் சாத்திய

மாகாது'' என்று கூறினார். ஏனெனில், அவ்வகைச் சித்தி களிலிருந்தே ஈசுரனை மறக்கச் செய்கின்ற அகங்காரம் முண்டாகிறது. அந்த அகங்காரத்தால் ஈசுர தரிசனம் கிட்டாமற் போகுமென்று நினைத்தே இவ்வாறு கூறினர். ஆதலின், ஈசுரனை அடைய விரும்புவோர் சித்திகளை விரும்பலாகாது.

648. சித்திகள் சில சமயங்களில் அபாயத்தை உண்டாக்கிவிடுமென்பது:

ஒரு சமயத்திலே ஒரு பெரிய சித்த புருஷர் சமுத்திரக்கரையில் உட்கார்ந்துகொண்டிருந்தார். அப்பொழுது ஒரு பெரும் புயற்காற்று அடித்தது. அவ்வாறு காற்றடித்ததைப்பற்றி தோத்தாபூரி என்னிடம் கூறினார். அத்தருணத்தில், அந்தக் காற்றின் ஆர்ப்பரிப்பைக் கேட்கச் சகிக்காது அந்தச் சித்த புருஷர், ''இந்தக் காற்று இப்பொழுதே நின்றுவிடக்கடவது'' என்று கூறினார். அவருடைய சித்தியின் பலத்தால், அவர் கூறியபடியே உடனே அக் காற்று நின்றுவிட்டது. அவ்வாறு அக்காற்று திடுமென நின்றுவிடவே, அப்பொழுது பாய் முழுவதும் விரிக்கப்பட்டுச் சமுத்திரத்தில் போய்க்கொண்டிருந்த கப்பலானது, காற்று ஸ்தம்பித்ததால், தனது வேகம் திடீரென்று தடைப்பட நீரில் மூழ்கிவிட்டது. அதிலிருந்த மனிதர்களெல்லோரும் சமுத்திரத்தில் மூழ்கி மரணமடைந்துவிட்டார்கள். அத்தனை பேருக்கும் மரணத்தை உண்டாக்கிய பாபமானது சித்த புருஷரைத் தொடர்ந்தது. அதனால்

அவர் தமது சித்திகளை யெல்லாம் இழந்து சரகத்தை அடைய ஏதுவுண்டாயிற்று. ஆதலின், சித்திகள் எவ் வகையிலும் கெடுதியையே தருவனவாம் என்று அவற் றைத் தள்ளி, ஈசுர தரிசனம் பெற முயற்சிக்கவேண்டும்.

37-வது அத்தியாயம்

கர்ம நியதி

649. ஜீவன் முடிவில் வைத்திருக்கும் எண்ணத்திற்குத் தக்கபடியே மறு ஜன்மத்தில் பிறக்கு மென்பது:

ஜீவனானது, இவ் வுலகத்தை விட்டுக் கடைசியாகப் பிரிந்து செல்கிறபொழுது எதை நினைத்துக்கொண்டிருக் கிறதோ அந்த நினைப்புடனேயே மறு ஜன்மத்தில் பிறக் கும். ஆதலின், மரணத்தை அடையுங் காலத்தில், ஈசுர பக்தி யனுஷ்டானங்களே மிக அவசியமான்வை என்ற தியானத்துடன் உயிர் விட்டால், உலக எண்ணமே மனதில் இளம்பாமல் ஈசுர எண்ணம் ஒன்றே ஆத்மாவில் நிரம்பி நிற்கும். அந்நிலைமையோடு செல்லும் ஜீவனானது மறுபடி பிறக்கும்போது ஒரு பக்தனாகவே பிறக்கும்.

650. முற்பழக்கம் எப்பொழுதும் மனத்தை இழுக்கு மென்பது:

ஒரு சமயத்தில் ஓரிடத்தில் விசையடிக்கப்பட்ட இரண்டு எருதுகள் நின்றுகொண்டிருக்க நான் கண்டேன்.

அப்போது அவற்றினிடையில் ஒரு பசு சென்றது. அதைப் பார்த்தவுடனே அவ்விரண்டு எருதுகளில் ஒன்றுக்குக் காதற் கிளர்ச்சி யுண்டாயிற்று. மற்றொன்றுக்கு அந்த எண்ணமே யுண்டாகவில்லை. நான் அந்த எருதுகளின் விநோதச் செய்கைகளைப் பார்த்து அதிசயித்து அவற்றின் சரித்திரங் களை விசாரிக்கத் தொடங்கினேன். அந்த விசாரணையில், பசுவைப்பார்த்துக் காதல்கொண்ட எருது, பருவகாலத்தில் பசுவுடன் சேர்ந்திருந்து கொஞ்சநாட்களுக்குப் பிறகு விரை யடிக்கப்பட்டதென்று தெரியவந்தது. மற்றொரு எருது பசுவுடன் கூடி அனுபவ மறியாதிருந்த சிறு பருவத்திலேயே விரை யடிக்கப்பட்டதென்று தெரியவந்தது. இதனால், மூன்றினெருது, பசுவுடன் கூடி அனுபவித்த மூன்று பழக்கத்தைக்கொண்டு, விரை யடிக்கப்பட்டிருந்த பொழுதும் காதல் எண்ணத்திற் குட்பட்டதென்றும், பிறிதொன்று அந்த அனுபவத்தையே அறியாதிருந்தபடியால் அதற்கு அந்த எண்ண முண்டாகவில்லை யென்றும் நான் தெரிந்துகொண்டேன். என்னே பழக்கத்தின் தன்மை! இவற்றைப்போலவே, சிற்றின்ப போகங்களை அனுபவிக்கா மல் உலகத்தைத் துறந்துவிட்ட சாதுக்களுக்கு ஸ்திரீகளின் சந்திப்பு எப்பட்டாலும் காதற் கிளர்ச்சி யுண்டாக மாட்டாது. உலக சுகங்களை அனுபவித்துவிட்டுத் தங்கள் விருத்தாப்பிய தசையிலே சன்னியாச உடை தரித்துக் கொள்கிறவர்களுக்கோ, ஸ்திரீகள் சந்திப்பு ஏற்பட்ட மாத்திரத்திலேயே சிற்றின்ப எண்ணம் உதித்துவிடும். அவர்கள் அநேக வருஷங்கள்வரை தன்னடக்கத்தில்

பயின்ற பொழுதிலும் எளிதில் அவ் வடக்கம் உண்டாக மாட்டாது. அடிக்கடி அவர்கள் உலக இன்ப வஸ்துக்களைப் பார்க்கும்பொழு தெல்லாம் அவர்களுடைய பழைய அனுபவ எண்ணங்கள் மனதிற் கிளம்பிக்கொண்டே யிருக்கும்.

651. ஒருவன் எந்த அவசரத்தில் ஈசுர நாமத்தை உச்சரித்தபோதிலும் அதன் புண்ணியத்தை அடைவா னென்பது:

ஒருவன், தானுகவே புண்ணிய நதிக்குச் சென்று ஸ்நானஞ் செய்தாலும், மற்றொருவனுல் அந்நதியால் தள்ளப்பட்டாலும், நன்றுயித் தூங்கிக்கொண் டிருக்கும்பொழுது வேறொருவனுல் அந்த ஜலத்தைக் கொண்டுவந்து தன்மேல் ஊற்றப்பெற்றாலும் அவன் அத்தீர்த்த ஸ்நான பலனுகிய புண்ணியத்தை அடைவான். இவனைப்போலவே, ஒருவன், ஈசுர நாமத்தை எந்த அவஸ்தையில் (அசாவது, தெரிந்தோ தெரியாமலோ, அறிவுடனே அறிவின்றியோ) உச்சரித்தாலும், அப்படி உச்சரித்ததனு லுண்டாம் புண்ணியத்தை அவன் அடைவான். இந்தப் பழக்கமானது அவனை உயர்ந்த கதியில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும்.

652. உலக பந்தத்துக்கு உட்பட்ட ஜீவர்கள் மரண காலத்திலும் உலக விஷயங்களையே பேசுவார்க ளென்பது:

தன்னுடைய ஜாதி இயற்கையை மறவாத கிளியானது எவ்வளவு பேச்சுக்களைக் கற்றுக்கொண்டிருக்கும்.

அவற்றால் அதற்கு எவ்வித பயனு மில்லை. ஒரு பூனை வந்து அதைப் பிடித்துக்கொண்டால் அப்போது அது, கீச்சு, கீச்சு என்று கத்துமே தவிர, இராதா கிருஷ்ணா என்னைக் காப்பாற்று என்று கூறமாட்டாது. இதைப்போலவே சிலர், உலக விஷயங்களில் பற்று வைத்துக்கொண்டு புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்வார்கள்; பரிசுத்த கங்கையிலே ஸ்நானஞ் செய்வார்கள்; துளசிமணிகளைக் கையிற் பிடித்தெண்ணி ஜெபம் செய்வார்கள்; உலகப்பற்றிருக்கும்வரையில் இவற்றால் அவர்களுக்கு ஒருவகைப் பயனு முண்டாகாது. அவர்கள் உலகப் பற்றை வைத்துக் கொண்டிருப்பதால் மரணங் குறுகிய காலத்தில் உலக பந்தத்திற்குத் தக்க பேச்சுக்களைப் பேசுவார்களே யன்றி ஈசுர நாம உச்சரிப்பையோ, வேறு புண்ணியமான விஷயங்களையோ பேசமாட்டார்கள். அதனால் அவர்களுக்குப் பந்தமான பிறப்பே மறு ஜன்மத்தில் உண்டாகும்.

653. தினந்தோறும் ஈசுர நாம உச்சரிப்பைச் செய்துவந்தால் அப் பழக்கம் மரணகாலத்திலும் உண்டாகு மென்பது:

ஒருவன், தன்னுடைய அந்திய காலத்திலே தனக்கு ஈசுர ஞான முண்டாகும்படியான உபாயங்களை முந்தியே அனுசரித்து வரவேண்டும்; அதாவது, இளமையிலிருந்தே ஈசுர பக்தியைத் தினந்தோறும் அனுஷ்டித்து வரவேண்டும்; அப்படிச் செய்துவந்தால் அந்தப் பழக்கத்தைக் கொண்டு, அவனுக்கு மரணஞ் சமீபித்த காலத்திலும் ஈசு

சத்தியான மூண்டாகும். அந்த எண்ணத்துடன் உயிர் விட்டால் அவன் மறு ஜன்மத்தில் ஈசுர பக்தனாகவே பிறந்து ஈசுரனை அடைந்துவிடுவான். அவ்வாறு செய்யாதவன் அநேக காலம் பிறந்திறந்து துன்ப முறுவான்.

38-வது அத்தியாயம்

மதங்களின் சமத்துவ நிலை

654. ஒரே வஸ்து பலரால் பல பெயர்களால் அழைக்கப் படுகிற தென்பது:

தண்ணீர் ஒரே பொருளாயிருந்தாலும், அதைச் சிலர் நீர் என்றும், சிலர் வாரி என்றும், சிலர் அக்குவா என்றும், சிலர் பாணி யென்றும், பலவிதமாக வழங்குகிறார்கள். அதைப் போலவே ஒரே வஸ்துவாகிய சச்சிதானந்தப் பொருள் சிலரால் ஈசுவர னென்னும், சிலரால் அல்லா வென்றும், சிலரால் ஹரி யென்றும், வேறு சிலரால் பிரமா வென்றும் கொண்டாடப்படுகின்றது.

655. எல்லா மார்க்கங்களும் ஈசுரனைப்பற்றியவை களே என்பது:

ஒரு குளத்திலே அநேகம் ஸ்நான கட்டங்கள் இருக்கின்றன. தண்ணீரில் ஸ்நானஞ் செய்வதற்கோ, தண்ணீர் மொள்ளுவதற்கோ விரும்புகிறவன் அந்தக் கட்டங்களில் எதன் வழியாக இறங்கினாலும் தண்ணீருக்குச் சமீபத்தி

போய்ச் சேருவான். ஒரே தண்ணீர்தான் எல்லாக் கட்டங்களிலும் இருக்கின்றன. இவற்றுள் ஒரு கட்டம் தாழ்ந்ததென்றும், மற்றொன்று உயர்ந்ததென்றும் சச்சரவு செய்து கொள்பவர் விவேகமற்ற மூடர்களாவார்கள். இதைப் போலவே, நித்தியானந்தமாகிய முத்தியை, அல்லது கடவுள் அடியை அடைவதற்குப் பல மார்க்கங்கள் இருக்கின்றன. பரிசுத்தமான இருதயத்துடனே எந்த மார்க்கத்தைப்பற்றிச் சென்றாலும் நித்தியானந்த பதவியை அடையலாம். ஆதலின், ஒரு மதத்தை உயர்வான தென்றும், மற்றொரு மதத்தைத் தாழ்வான தென்றும் கூறுவது மூடத்தனமாம். ஒரு மதத்தை விட்டு மற்றொரு மதத்தில் சேர்வதும் விவேகமற்ற செய்கையாம். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மதத்திலிருந்தபடியே உறுதியான மனதுடன் நிஷ்டை புரிந்துவந்தால் முத்தி யடைவது நிச்சயம். களங்கமான மனதுடன் சிறிதேனும் விவேகமின்றி மதச் சண்டை பிடித்துத் தெய்வ தூஷணை புரிந்து மதோத்தாபன சிங்கங்களெனச் செருக்குற்றுத் தற்பெருமை கூறி வேடதாரிகளாய்த் திரிவோர் நரகத்தை யடைவது திண்ணம்.

656. அவரவர் நினைப்புக்குத் தக்கபடி ஈசுரன் தோற்றுவா ரென்பது:

ஈசுரனுக்கு அநேகம் பெயர்கள் உண்டு; நாம் அவரை உணர்ந்துகொள்வதற் கனுகூலமாக அவருக்கு அநேகம் வடிவங்க ளுண்டு. ஓர் உண்மை பக்தன், அவரை எந்த மார்க்கத்தில் எந்த ரூபத்தில் தரிசிக்க விரும்புகிறானே அதே

நாமத்துடனும், அதே ரூபத்துடனும் அவர் அவனுக்குத் தோற்றுவார்.

657. ஈசுரன் காலதேசங்களுக்குத் தக்கபடி வேவ்வேறு வகையினரால் வெவ்வேறு வகையாகப் பூஜிக்கப்படுகிறார் என்பது.

ஒரு குயவனுடைய மட்கலக் கடையிலே, குடங்கள், ஜாடிகள், தட்டுக்கள் முதலிய பல மட்பாத்திரங்கள் இருக்கின்றன. அவை பல வடிவங்களை யுடையனவா யிருந்த போதிலும் ஒரே களிமண்ணில் ஆக்கப்பெற்றவையே. அதைப்போலவே, ஒரே தன்மையான ஈசுரன், வெவ்வேறு காலங்களிலும், வெவ்வேறு தேசங்களிலும், வெவ்வேறு மனிதர்களாலும், வெவ்வேறு நாமங்களையுடையவராகவும், வடிவங்களை யுடையவராகவும், வெவ்வேறு வகையாகப் பூஜிக்கப்படுகிறார்.

658. ஒரே ஜகன்மாதா, பல விடங்களிலும் பல விதமாகப் பூஜிக்கப்படுகிறார் என்பது:

ஒரே விதமான சர்க்கரையே, பக்ஷிகள் போலவும், மிருகங்கள் போலவும், ஸ்திரீகள் போலவும், ஆடவர் போலவும் பலவகை உருவங்களாக ஆக்கப்பட்டுப் பல வகை ஜனங்களால், பல வகைகளில் உபயோகிக்கப்பட்டு வருகின்றது. அதைப்போலவே, ஒரே ஜகன்மாதா, பல இடங்களிலும் பல காலங்களிலும், பல நாமங்களுடனும் வடிவங்களுடனும் பலராலும் பூஜிக்கப்பட்டு வருகிறாள்.

659. எல்லா மார்க்கங்களும் ஈசுரனிடம் இட்டுச் செல்பவைகளே யென்பது:

கல்கத்தாவுக் கருகிலுள்ள காளி கட்டத்திலிருக்கும் காளி மாதாவின் க்ஷேத்திரத்திற்குச் செல்லும் மார்க்கங்கள் பல விதங்களாகவும் வெவ்வேறாகவும் இருக்கின்றன. அவற்றுள் எந்த மார்க்கத்தைப்பற்றிச் சென்றாலும் காளி தேவியின் கோயிலுக்குப் போய்ச் சேரலாம். அவற்றைப் போலவே, ஈசரை அடைதற்குரிய மார்க்கங்கள் பலவாம், அவற்றுள் எந்த மார்க்கத்தைப் பற்றிச் சென்றாலும் ஈசரை யடையலாம். ஆதலின், மதங்களைத் தூஷிப்பவர்கள் மதியீனராவார்கள் உண்மை யுணராத அவிவேகிகளே அவ்விதம் தூஷிப்பார்கள்.

660. ஒரே ஈசுரன்தான் பல்வேறு கற்பனைகளில் பலவிதமாகப் பூஜிக்கப்படுகிறா ரென்பது:

பொன் ஒன்றே எனினும், அதனால், வெவ்வேறு நாமங்களுடனும், ரூபங்களுடனும் பற்பல ஆபரணங்கள் செய்யப்பட்டுப் பலவகை மனிதர்களாலும் உபயோகிக்கப் பட்டு வருகின்றன. இதைப்போலவே, ஈசரன் ஒருவரே யெனினும், வெவ்வேறு தேசங்களிலும், காலங்களிலும் வெவ்வேறு வகை மனிதர்களால், வெவ்வேறு நாமங்களுடனும், ரூபங்களுடனும், வெவ்வேறு வகைப்பட்ட தன்மைகளுடனும் பூஜிக்கப்படுகிறார். இவ்வாறு அவர் பூஜிக்கப்படும் பொழுது அவரைச் சிலர் பிதாவென்றும், வேறு சிலர் மாதாவென்றும், மற்றும் சிலர் நண்பரென்றும், இன்னும்

சிலர் காதலி யென்றும் கொண்டாடுகிறார்கள். இன்னும் சிலரோ, அவரைத் தங்கள் இருதயத்தினுள்ளே அடங்கியிருக்கும் நிதியெனக் கருதிப் பிரார்த்தனை செய்கிறார்கள். சிலர் அவரை அரிய குழந்தையாகவும் பாவித்துக் கொண்டாடுகின்றனர். இந்த எல்லாக் கற்பனைகளிலும் ஒரே ஈசன்தான் தோற்றிக்கொண்டிருக்கிறார்.

661. எல்லா மூர்த்திகளும ஒரே பிரஹ்மவஸ்துவின் தோற்றங்களே யென்பது:

ஒரு சமயம் பர்த்வான் மகாராஜா அவர்களுடைய சபையிலே கூடியிருந்த வித்வான்களுக்குள்ளே, மூர்த்திகளுள், 'சிவன் பெரியவரா? விஷ்ணு பெரியவரா?' என்னும் விஷயத்தைப் பற்றி ஒரு தர்க்கம் உண்டாயிற்று. சிலர் "சிவனே பெரியவர்" என்றும், சிலர், 'விஷ்ணுவே பெரியவர்' என்றும் அவர்கள் வாதாடிக்கொண்டிருந்தார்கள். அப்போது அறிவிற் சிறந்த ஒரு பெரியவர், அவர்களை நோக்கி, "நீங்கள் மூர்த்திகளின் தன்மைகளை உணராதவர்களாயிருந்தும், தெரிந்துகொண்டவர்களைப் போல் வீண் தர்க்கம் பேசுகின்றீர்கள்; நாம் சிவனையும் பார்த்ததில்லை, விஷ்ணுவையும் பார்த்ததில்லை; அப்படியிருக்க அவர்களில் பெரியவர் இன்னார்தா னென்பதை நம்மால் எப்படி அறிந்து சொல்லமுடியும்?" என்று கூறினர். ஆதலின், ஈசனுடைய உண்மைத் தத்துவத்தை உணர்ந்துகொள்ளாமல் அவர் பெரியவரென்றும் இவர் பெரியவரென்றும், மதியீனமாகத் தர்க்கம் செய்து கொள்ளுதல் தவருகும். ஒரு

பிரமவஸ்துவே எல்லா மூர்த்திகளாகவும் தோற்றிக்கொண்டிருக்கின்றது. அதனால் மூர்த்திகளுள் ஒருவர்க்கு உயர்வும், மற்றொருவர்க்குத் தாழ்வும் கற்பிக்க முடியாது. பிரியாசைப்பட்டு அந்த மூர்த்திகளில் ஒருவரையேனும் தரிசித்துவிட்டால், எல்லா மூர்த்திகளும், ஒரே பிரஹ்மவஸ்துவின் தோற்றங்களே என்ற உண்மை புலப்பட்டுவிடும். ஒருவருடைய தன்மையையும் உணராமல் மதங்கொண்டு வாய்த் தர்க்கமிடுவதால் ஒரு பயனு மில்லை.

662. ஈசுரன் பல மதங்களிலும் பல விதங்களாக ஏன் வர்ணிக்கப்பட்டிருக்கிறரென்பதற்கு விடை:

ஈசுரன் ஒருவரே எல்லா மதங்களிலும் தெய்வமாக விளங்குகிறரென்றால், ஒவ்வொரு மதத்தினராலும் வெவ்வேறு வகையாக வருணிக்கப்பட்டிருப்பதற்குக் காரணமென்னவெனில், அவரவர்களின் மனப் போக்கே காரணமாம். எப்படியெனில், ஒரு வீட்டிலுள்ள எஜமானரை, அங்கிருப்பவர்களில் ஒருவன் பிதாவாகக் கொள்ளுகிறான்; மற்றொருவன் சகோதரனாகக் கொள்ளுகிறான். ஒருத்தி புருஷனாகக் கொள்ளுகிறாள். இப்படியே ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் இயற்கைக்கும், மனப் போக்கிற்கும் தக்கபடி அவரிடம் பலவித உரிமைகளைக் கொண்டாடுகிறார்கள். இத்தன்மைபோலவே, ஒரே ஈசரை, பலவிதமான பக்தர்கள் தங்கள் மனப் போக்கிற்குத் தக்கபடி பற்பல விதங்களாக வருணித்துப் பூஜிக்கின்றார்கள்.

663. உலகில் உள்ள ஒவ்வொரு மதமும் ஈசுரனை யடையும் மார்க்கங்களுள் ஒன்றே யென்பது:

ஒரு வீட்டினுடைய உச்சியில் ஏறுவதற்கு ஓர் ஏணியும் உபயோகப்படுகின்றது; ஒரு மூங்கிலும் உபயோகப்படுகின்றது; ஒரு கயிறும் உபயோகமாகின்றது; ஒரு படிக்கட்டும் உதவியாகின்றது. இவற்றுள் எதன் உதவியைப் பற்றினாலும் அவ் வீட்டின் உச்சிக்கு ஏறிவிடலாம். இவற்றைப்போலவே, ஈசுரனை அடைதற்கும் அநேகம் மார்க்கங்களும் உபாயங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் தாம் மதங்களெனச் சொல்லப்படுபவைகள். அவற்றுள் எந்த மார்க்கத்தைப் பற்றினும் ஈசுரனை யடையலாம். மனவுறுதியுள்ளவர் எம்மார்க்கத்தி லிருப்பினும் அவர்களுக்கு ஈசுரனை யடைதல் சுலபமாக முடியும். மனவுறுதி யில்லாதார் எதிலிருப்பினும் ஈசுர தரிசனம் பெறமாட்டார்கள்.

664. அவரவர் இயற்கைக்குத் தக்கபடி ஈசுரன் தோற்றுவா ரென்பது:

ஒரு பாக்குமரத்தடியில் சென்ற இருவர், அதிலிருந்த ஒரு பச்சோந்தியைப் பார்த்தார்கள். அது, தன் இயற்கைப்படி அடிக்கடி வெவ்வேறு நிறங்களையுடையதாக அவர்களுக்குத் தோற்றிக்கொண் டிருந்தது. அதனால் அவர்களுள், அதன் சிவப்பு நிறத்தைப் பார்த்த ஒருவன், மற்றொருவனிடத்தில், 'அந்தக் கமுகமரத்திலுள்ள பச்சோந்தியைப் பார்த்தாயா? அது மிகுந்த சிவப்பு நிறமாகத் தோற்றுகின்றது' என்றான். மற்றவன் அதனுடைய நீல

நிறத்தைப் பார்த்தானுதலால், மூன் கூறியவனுடைய வார்த்தையைத் தடுத்து, 'அது சிவப்பு நிறமுடையதன்று; நீலநிறமானது என்று கூறினேன். அப்போது ஒருவனுடைய வார்த்தையை மற்றொருவன் நம்ப வேறு வில்லாதிருந்தபடியால், அவர்களுடைய தர்க்கம் ஓயவில்லை. அதனால் அவ்விருவரும் அம் மரத்தினடியிலேயே எப்பொழுதும் வசித்துக்கொண்டிருப்பவனைக் கண்டு, 'அவனிடம் சென்று நாம் தர்க்கத்தைக் கூறினால், நம்முடைய அபிப்பிராயங்களில் இன்னதுதான் சரியான தென்பதை அவன் கூறிவிடுவான்' என்று நிர்மானித்துக்கொண்டு அவனிடம் சென்றார்கள். அவ்வாறு சென்றதும், ஒருவன், சிவப்பு நிறமுள்ளதாகக் கண்டவன், அவனை நோக்கி, ''ஏன் ஐயா! இந்தப் பாக்கு மரத்திலுள்ள பச்சோந்தி சிவப்பு நிறமுள்ளதுதானே?'' என்று கேட்டான். அதற்கவன், ''ஆம்'' என்றான். அதைக் கேட்டதும், மற்றொருவன் நீலநிறமாகக் கண்டவன், அவனை நோக்கி, ''என்ன ஐயா! அது நீலநிறமுள்ளதாக வல்லவா இருக்கின்றது; அப்படியிருக்க நீர் எக் காரணத்தைக் கொண்டு சிவப்பு நிறமுள்ளதென்று கூறுகின்றீர்?'' என்று கேட்டான். அதற்கவன், ''நீ கூறுகிறபடி அது நீலநிற முடையதுதான்'' என்றான். அங்கே வசிப்பவன், அந்தப் பச்சோந்தி பல நிறங்களாகவும் தோற்றும் என்ற உண்மையை உணர்ந்தவனுதலால் அவ்விருவர் கண்ட நிறங்களையும் ஒப்புக்கொண்டு ஒவ்வொருவருடைய அபிப்பிராயத்தையும் சரியானதாகவே கூறிவிட்டான். அவன் அவ்வாறு கூறியதைக் கேட்ட இருவரும் ஏகத்து அவனை நோக்கி, ''என்ன

ஐயா! நீர், இருவர் மனத்திற்கும் இசையும்படி விடை கூறி விட்டீரே! உம்முடைய வார்த்தைகளில் எதை நாங்கள் உறுதியுடைய தென்று நம்புகிறது?" என்று கேட்டார்கள். அதற்கு அந்த மனிதன், "பச்சோந்தியில் பல நிறங்களும் தோற்றும்; அந்த உண்மை எனக்குத் தெரியும்; உங்களுக்குத் தெரியாது; அதனால் நீங்கள் எந்த நிறத்தைப் பார்த்தீர்களோ அந்த நிறத்தையே உடையது பச்சோந்தி என்று தீர்மானித்துவிட்டீர்கள்; நான் இரண்டு நிறங்களும் அதற்குள்ளன வென்பதை ஒப்புக்கொண்டு சொன்னேன்; பச்சோந்திக்குச் சிவப்பு நிறமு முண்டு; நீல நிறமு முண்டு; இன்னும் பல நிறங்களு முண்டு. இந்த உண்மையை இனி மேலாவது தெரிந்துகொள்ளுங்கள்" என்று சொன்னான்.

இதைப்போலவே, சச்சிதானந்த வஸ்துவாகிய ஈசுவரனுக்குப் பல வடிவங்கள் உண்டு. அவரை ஒரே வடிவத்தில் தரிசித்தவர்கள் அந்த ஒரு வடிவத்தை யுடையவ ரென்றே பேசுவார்கள். ஈசுவரன் பல வடிவங்களிலும் உள்ளவர் என்ற உண்மையை உணர்ந்தவர்கள் அவர் எல்லாத் தன்மையு முள்ளவ ரென்றே பேசுவார்கள். அந்த ஈசுவரன், இவ்வாறு ஒரு வடிவத்துடனும் இருக்கிறார்; பல வடிவங்களுடனும் இருக்கிறார்; ரூபத்துடனு மிருக்கிறார்; ரூபமில்லாமலு மிருக்கிறார்; இன்னும் எவராலும் அறியப்படாத அநேக வடிவங்களும் அவருக்குண்டு. சிறந்த ஞானிகளே இவ் வுண்மைகளை உணர்வார்கள். ஆதலால், மத தர்க்கம் செய்தல் மடமையாம்.

665. ஒவ்வொருவனும் தன் தன் மதத்தையே பின்பற்றவேண்டுமென்பது:

எல்லா மார்க்கங்களும் ஈசுவரனிடம் மனிதரைச் சேர்ப்பிக்கத் தக்கவைகளே. ஆதலின் மனிதர், மதமாறுதலடையவேண்டிய அவசியமில்லை. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மார்க்கங்களி லிருந்தபடியே மன வுறுதியுடன் பக்தி யனுஷ்டானங்களைச் செய்து ஈசுவரனை யடையலாம்; கிறிஸ்தவன் கிறிஸ்தவ மதத்தையே பின்பற்ற வேண்டும்; முகம்மதியன் முகம்மதிய மதத்தையே பின்பற்ற வேண்டும்; இந்துக்களுக்கு ஆர்ய ரிஷிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள பழைய மார்க்கமே சிறந்ததாம்.

666. பிற மதங்களிடத்தும் மரியாதை செலுத்தவேண்டுமென்பது:

உண்மையான மதப்பற்றுள்ளவன், 'மற்ற மதங்களும் சத்திய வஸ்துவினிடம் இட்டுச் செல்பவைகளே' என்று நினைக்கவேண்டும். எப்பொழுதும் பிற மதங்களிடத்தும் மரியாதை செலுத்தவேண்டும். இப்படிச் செய்பவனே உண்மை நெறியை உணர்ந்த உத்தமனுவான். மத துவேஷம் பாராட்டுகின்றவன், தெய்வத்துவத்தைச் சிறிதும் உணராமல், அதைக் கண்டவன்போல் நடித்துப் பாமர ஜனங்களை ஏமாற்றும் அஞ்ஞானியாகிய ஒரு பாபாத்துமாவாவான். இவனுக்குக் கிடைப்பது தூர்க்கதியே.

667. மதங்களிலுள்ள மூடப் பிடிவாதங்கள் நீக்கப்படவேண்டு மென்பது:

ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய மதங்களிலே உறுதியா யிருக்கவேண்டும். ஆனால், பிற மதங்களைத் தூஷித்தல் முதலாகிய மூடக் கொள்கைகளையும், பொறுமைக் குணங்களையும் அகற்றிவிடவேண்டும். (இந்த உபதேசத்தை ஸ்ரீ இராமகிருஷ்ணர் அடிக்கடி வற்புறுத்திப் பலருக்கும் கூறுவதுண்டு).

668. ஈசுரனிடத்தே சென்றுகொண்டிருக்கும் ஹிருதயத்தை யுடையவனிடத்தே கசுஷிபேதம் இரா தெனல்:

தால் என்பதற்கு வங்காளி பாஷையிலே, கசுஷி அல்லது வகுப்பு என்றும், போக்கின்றி நிற்கும் தண்ணீரிலே முளைக்கும் செடி கொடிகள் என்றும் இரண்டு பொருளுண்டு; இவ் விரண்டும் செம்மொழிச் சிலேடையாகிய ஒரே பெயரில் அமைந்தவைகள். இவை, பெயரால் ஒருதன்மையனவா யிருப்பதுபோலவே செயலாலும் ஒருதன்மையனவா யிருக்கின்றன. எப்படி யெனில், நிலை தண்ணீரில் முளைக்கும் செடி கொடிகள் என்னும் தால் ஆனது, போக்குத் தண்ணீரில் முளைக்காது; அதைப் போலவே, கசுஷி யென்னும் தால் ஆனது, ஈசுவர முகமாக ஓடிக்கொண்டிருக்கும் ஹிருதயத்தையுடைய பக்தனிடத்திலே உண்டாகாது. கீர்த்தியையும், கௌரவத்தையும் அடைய விரும்புகிறவனே கசுஷிபேதங்களை உண்டுபண்ணுவான்.

669. ஞானிகளுடைய போதனைகள் ஒரே மாதிரியானவைகளே என்பது:

ரிசிகளுடைய கூச்சல்கள் ஒரே மாதிரியானவைகளாகவே யிருக்கும். அவற்றைப்போலவே, ஞானிகளுடைய போதனைகளெல்லாம் ஒரே தன்மையுடையவைகளாகவே யிருக்கும்.

670. எவருடனும் தர்க்கம் செய்யக் கூடாதென்பது:

ஒரு மனிதன், தன்னுடைய மதத்தில் நம்பிக்கையும், நல்லபிப்பிராயமும் வைத்திருப்பதுபோல, மற்றவர்களும் தங்கள் தங்களுடைய மதங்களில் நம்பிக்கையும், நல்லபிப்பிராயமும் வைக்கும்படி அவர்களுக்கு ஸ்வதந்திரம் கொடுக்கவேண்டும். ஒரு மதக்காரனுடைய அபிப்பிராயத்தில் தப்பித மிருந்தபோதிலுங் கூட அத் தப்பிதத்தை அவனுக்கு எடுத்துக் காட்டி அவனை ஒப்புக்கொள்ளும்படி செய்வது முடியாத காரியம். அவன் தன் மதத்தில் நம்பிக்கை வைத்திருப்பதால் இலகுவில் அத் தப்பிதத்தை ஒப்புக் கொள்ளமாட்டான். அதைப்பற்றி அவனோடு தர்க்கஞ் செய்ய ஆரம்பித்தாலோ வீண் கலகத்திற் கிடமுண்டாகுமே தவிரப் பயனொன்றும் ஏற்படாது. தப்பான வழியில் இருப்பவன்மீது எந்தக் காலத்தில் ஈசுர கிருபை உண்டாகிறதோ அந்தக் காலத்தில் அவன் தானே தன் தப்பிதத்தை உணர்ந்துகொள்வான். ஆதலின், எவருடனும் மததர்க்கம் செய்வது கூடாது.

671. மதபோதகர் பலராயினும் ஞானப்பிரகாசம் ஒரே இடத்திலிருந்து உண்டாகிற தென்பது:

வாயுவின் சக்தியால் எரியும் விளக்குகள் பல விதங்களாகப் பல விடங்களிலும் பிரகாசித்தாலும், பொதுவாக ஒரே தொட்டியிலிருந்து உண்டாகும் வாயுதான் அவற்றையெல்லாம் அவ்வாறு எரியச் செய்கின்றது. அதைப்போலவே, பற்பல மத போதகர்கள், பற்பல விடங்களில் தோன்றி ஞானோபதேசஞ் செய்தபோதிலும், சர்வ சக்தி வாய்ந்த ஒரே வஸ்துவிலிருந்துதான் அவர்களிடத்திலெல்லாம் ஞானப்பிரகாசம் வீசுகின்றது.

672. ஜகன்மாதாவே எல்லா மதங்களிலும் வியாபகமாயிருக்கிறாளென்பது:

சில வருஷங்களுக்கு முன், ஹிந்துக்களும், பிராஹ்மோக்களும், தங்கள் தங்கள் மதங்களைச் சிலாகித்துப் பேசிவந்தார்கள். அப்பொழுது ஒருவர் என்னிடம் வந்து, "இரண்டு சுக்ஷியாரின் அபிப்பிராயங்களில் எது சிறந்தது?" என்று கேட்டார். அதற்கு நான், "எனது ஜகன்மாதாவே இரண்டு சுக்ஷியாரிடத்திலுமிருந்து தனது வேலையைச் செய்துகொண்டிருக்கிறாளென்பதை நான் உணர்கிறேன். ஆதலால், அவர்களுடைய அபிப்பிராயங்களில் இன்னதுதான் சிறந்ததென்பதை என்னால் கூற முடியாது" என்று சொன்னேன். இதனால், எல்லா மதங்களிலும் ஒரு ஜகன்மாதாவே இருந்து தொழில் செய்கிறாளென்பதை உணர்ந்துகொள்ளலாம்.

673. அஞ்ஞானியிடத்திலேயே ககூஷி பேதங்கள் உண்டென்பது:

மனிதர்கள், தங்கள் பூமிகளை அளந்து எல்லை வகுத்துப் பங்கிட்டுக்கொள்ளல் முடியும். ஆனால், ஆகாயத்தை அவர்களால் அவ்வாறு பாகப்படுத்திக்கொள்ள முடியாது. இதைப்போலவே, உலக அஞ்ஞான விஷயங்களை விகற்பப்படுத்தி மதங்களிற் புகுத்திக் ககூஷி பேதங்களை உண்டாக்கலாம். எங்கும் நிறைந்த சச்சிதானந்தமாகிய உண்மைப் பொருளில் அவ்வித பேதங்களை உண்டாக்க முடியாது. ஆதலால், அஞ்ஞானியானவன், தன்னுடைய அஞ்ஞானத்தன்மையினாலே தன்னுடைய மதமே உண்மையான தென்றும், சிறந்த தென்றும், கூறுவான். அவனுடைய ஹிருதயத்தில் உண்மை ஞானமாகிற ஒளி பிரகாசித்துவிட்டால், 'எல்லாவற்றிற்கும் மேலே அகண்ட சச்சிதானந்த வஸ்து ஒன்று இருக்கின்றது' என்பதையும், 'மத தர்க்கங்களாலும், ககூஷி பேதங்களாலும் ஒரு பயனு மில்லை' என்பதையும் அவன் உணர்ந்துகொள்வான்.

674. மனிதர் இயற்கைக்குத் தக்கபடி ஈசுரன் வேவ் வேறு மார்க்கங்களை யுண்டாக்கியிருக்கிறரென்பது:

ஒரு பெண், தன் குழந்தைகளுக்கு வியாதி பற்றியிருக்கும்போது அவரவர்களின் வியாதிக்கும், தேகத்திற்கும், இயற்கைக்கும் தக்கபடி பலவித ஆகாரங்களைக் கொடுக்கிறாள். எப்படியெனில், வியாதி நீங்கிச் சௌக்கிய முண்டாகும் பொருட்டு அவள் ஒரு குழந்தைக்குச் சேர்

னும் கறியும், மற்றொரு குழந்தைக்கு ஐவ்வரிசிக் கஞ்சி யும், இன்னுமொரு குழந்தைக்குக் கோதுமை சொட்டியை யும் வெண்ணெயையும் கொடுக்கிறாள். இவளைப்போல, உலகத்தார்களாகிய வியாதிக் குட்பட்டுக் கிடக்கும் மனி தர்கள் அவ் வியாதியினின்று நீங்கி ஆத்மஞானமாகிற சௌக்கியத்தை அடைதற்கு, அவரவர்களுடைய புத்திக் கும் இயற்கைக்கும் தக்கபடி ஈசுரன் அவர்களுக்கு வெவ் வேறு மதங்களை (மார்க்கங்களை) ஏற்படுத்தி யிருக்கிறார். இவ் வுண்மையை உணராமல் மதச் சண்டை யிடுவோர் மதியற்றவரே.

39-வது அத்தியாயம்

இக்காலத்திற் கேற்ற மார்க்கம்

675. ஈசுர நாமஜெபமே ஞானஞஷ்டான சாதன மென்பது:

மிக்க திருபாநிதியாகிய ஈசுரனுடைய நாமத்தை இடைவிடாமல் எப்பொழுதும் ஜபித்துக்கொண் டிருப்ப தே, இக் காலத்திற் கேற்ற உண்மையான ஞானஞஷ் டான சாதனமாம்.

676. ஈசுரனைப் பார்த்தற்குச் செய்யவேண்டியவை:

ஆத்மனே! நீ ஈசுரனைப் பார்க்கவேண்டுமானால், ஓரி நாமத்தை ஜெபஞ் செய்வதில் பயன் உண்டென்று உறுதி யான நம்பிக்கை கொண்டிரு; அநித்தியத்திலிருந்து நித்தி

யத்தைப் பிரித்துவிடு. இவைகளே அதற்குச் செய்யத் தக்கவைகளாம்.

677. பூர்வ சாஸ்திர விதிகளில் இக்காலத்துக்கு அவசிய மானவைகளையே எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது:

மீன் தின்பவர்கள், அதனுடைய பயனற்ற தலையையும், வாலையும் அறுத் தெறிந்துவிட்டு மிருதுவான மத்திய பாகத்தை விருப்பத்துடன் உபயோகிப்பார்கள். அவர்களைப்போலவே, நமது, பூர்வீக சாஸ்திரங்களிற் கூறப்பட்டுள்ள பழைய விதிகளிலும், ஆக்ஞைகளிலும், இக்காலத்திற்கு அனுவசியமாகத் தோற்றுகின்றவைகளைத் தள்ளிவிட்டு, அவசியமானவைகளை மாத்திரம் கைக்கொள்ளவேண்டும்.

678. இன்ன இன்ன காரியத்தில் இன்ன இன்னவர்களைப் போன் றிருக்கவேண்டுமென்பது:

ஒரு மனிதன், இரக்கங்காட்டும் விஷயத்திலே இறந்த வனைப்போன் றிருக்கவேண்டும்; வெளி வடிவங்களைக் கண் டனம் செய்யும் விஷயத்தில் முஹம்மதியனைப்போன் றிருக்கவேண்டும்; எல்லா ஜீவப்பிராணிகளிடத்திலும் பொதுவான தயை காண்பிக்கும் விஷயத்தில் ஹிந்துவா யிருக்கவேண்டும்.

679. ஹரிபஜனை செய்வதால் தீய எண்ணங்கள் அகன்றுவிடுமென்பது:

ஒரு மரத்தின் கீழே உட்கார்ந்திருக்கும்பொழுது, கைகளைத் தட்டினால், அம் மரக்கிளைகளி லிருக்கும் பக்ஷி

கள், நாலாபக்கங்களிலும் பறந்தோடிவிடும். அதைப்போல வே, ஹரி நாமத்தை ஸ்தோத்திரம் செய்துகொண்டு கை களால் தாளம் போட்டால், மனத்திலுள்ள தீய எண்ணங்க ளெல்லாம் பறந்தோடிவிடும். அம் மனத்தில் ஏகாக்கிரத் தன்மை யுண்டாய்விடும். ஆதலால், இந் நிலையை அடைய விரும்புவோர் வாயினல் ஹரிநாம ஸ்தோத்திரம் செய்து கொண்டு, கைகளைத் தட்டி அதற்கேற்பத் தாளம் போட வேண்டும்.

680. கலியுகத்திற்குப் பக்தியோகம் அவசிய மென்பது:

இந்தக் கலியுகத்திற்கு விசேஷமாகப் பக்தி யோகமே பொருந்தியதாம். பக்தியோகம் யாதெனில், ஈசுரனிடத்தே பக்தி செலுத்துவதினலும், அவரைச் சரணுகதியாக அடைவதினலும் அவர்பால் இலயமாகி விடுவதே பக்தி யோக மென்று சொல்லப்படும். இதுதான் கலியுக தர்மம். இது, கர்மத்தை மிகவும் குறைத்துவிடும். இடைவிடாமல் ஈசுரனிடத்தே செலுத்தும் பிரார்த்தனை அவசிய மென் பதை இது போதிக்கும்.

681. முதலில் பக்தியை அடைந்தால் மற்றவைகளை எளிதில் அடையலா மென்பது:

பக்தியே பிரதானமானது; அஃதேற்பட்ட பின்னர் தான் அதனேடு சேர்ந்து கர்மம் (கிரியை) ஏற்படும். அக் கர்மம் பக்தியை விட்டு நீங்கித் தனியாக நிற்க முடியாது. பக்தி யில்லாதவிடத்து அக் கர்மம் உபயோகமற்றதாகி

வாசனையாம்; அவித்தியா வாசனையானது உலகத்தன்மை யையும் பந்தத்தையும் நோக்கிச் செல்லும் வாசனையாம். மனிதன், இந்த இரண்டு வாசனைகளுடன் பிறக்கும்போது, அவை தராசின் இரண்டு தட்டுக்களையும் போன்று சமமா யிருக்கின்றன. உலகமானது அவித்யா தட்டிலே, தன் னுடைய போகங்களை வைக்கின்றது. ஆத்மாவானது, வித்தி யாதட்டிலே முக்திமார்க்கத்தை வைக்கின்றது. மனமானது உலக பந்தங்கள் வைக்கப்பட்டிருக்கும் அவித்யா தட் டில் ஏறினால் அஃது உலகத்தை நோக்கி இறங்கும்; முக்தி மார்க்கம் வைக்கப்பட்டிருக்கும் வித்யா தட்டில் பிரவேசித் தால் அஃது ஈசுவரனை நோக்கி இறங்கும். இதன் சுருங்கிய கருத்தாவது: மனிதன், சமத்துவமான உலக வாசனை, முக்திவாசனை ஆகிய இரண்டுடன் முதலில் பிறப்பான். பின்னர் அவன் தன் மனத்தை எதில் செலுத்துகிறானோ அதன் வழியிலேயே இறங்கிவிடுவான் என்பதாம்.

685. ஒருவனுக்குச் சரீரம் இருக்கும் வரையில் சிறிது மாயை இருக்கவேண்டுமென்:

தனித் தங்கத்தினாலே ஆபரணங்கள் செய்தல் முடி யாது. அதனுடன் சிறிது செம்பு சேர்த்தால்தான் அஃது ஆபரணத்திற்கு உபயோகப்படும். அதைப்போலவே, முக் தாத்மா, முக்திக்குரிய காரியங்களைச் சரீரத்தோடு கூடி நிறைவேற்றுமுன் மாயையை அடியோடு ஒழித்துவிடுவா னானால் அவனால் ஒன்றும் செய்ய முடியாது. மாயையை அடியோடு ஒழித்த மனிதன் இருபத்தொரு நாட்களுக்கு

மேல் ஜீவித்திருத்தல் முடியாது. முத்தியை அடைய விரும்புகிறவன், சரீரத்தோடு கூடிச் சில சாதனங்களைச் செய்யவேண்டும்; அதற்குச் சரீர மிருக்கவேண்டும்; அச் சரீர தர்மம் நடைபெறுதற்குச் சிறிது மாயையு மிருக்க வேண்டும். முத்தி யடைதற்குரிய காரியங்கள் நிறைவேறிய பின் மாயை தானே நீங்கிவிடும்.

686. திடமற்ற சன்னியாசத்தின் இயல்பு:

தன்னுடைய பிதாவினிடத்திலோ, மாதாவினிடத்திலோ, மனைவியினிடத்திலோ உள்ள மனஸ்தாபத்தினால் வெறுப்படைந்து சன்னியாசத்தைக் கைக்கொண்டவனுடைய துறவானது திடனற்றதாம்; அது சிறிது நேரத்திற்குத்தானிருக்கும். அவ்வாறே சன்னியாசத்தை யடைந்தவனுக்கு, மிக்க வருமானமுள்ள ஒரு உத்தியோகம் கிடைக்கும் பக்ஷத்தில் உடனே அவன் கொண்ட சன்னியாசத்தை விட்டுவிடுவான்.

687. அறிவின் சொரூபத்தைப்பற்றிச் சிந்திப்பதனால் மனிதனுடைய அறிவு கெடாதென்பது:

ஒரு சமயம் ஆத்ம சிந்தனையிலேயே இலயித்துப் பயிற்சியம் பிடித்தவர்போன்றிருந்த பரமஹம்ஸரைப் பார்த்த ஒரு பிராஹ்மோ பாதிரி, "பரமஹம்சர் பயிற்சியம் பிடித்தவர்; அவர் ஓரே விஷயத்தில் அதிக சிந்தனையைச் செலுத்திக்கொண்டிருந்ததால் அந்தச் சிந்தனையானது அவருடைய மனத்தைக் கலைத்துவிட்டது; ஐரோப்பாவிலுள்ள சில வித்வான்களுங்கூட இவ்வாறே ஓரே விஷயத்தில்

ஆழ்ந்த சிந்தனையைச் செலுத்திக்கொண்டிருந்தபடியால் பயித்தியம் பிடித்துப்போனார்கள்'' என்று கூறினர். அவர் அவ்வாறு கூறியதை யுணர்ந்த பகவான் பரமஹம்சர் அந்தப் பாதிரியைப் பார்த்து, ''நான் ஒரே விஷயத்தில் மிகுதியாகப் புத்தியைச் செலுத்திக்கொண்டிருந்தபடியால் பயித்தியம் பிடித்தவனாய்விட்டேன் என்றும், ஐசோப்பாவி லுள்ள சில வித்வான்களும் இச் செய்கையால் பித்துப் பிடித்தவராய்விட்டார்க ளென்றும் நீர் சொல்கின்றீர்; இவற்றுள், ஐசோப்பாவி லுள்ளவர்களுக்குப் பயித்தியம் பிடித்ததென்று சொல்வது சரி; எனக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதென்று கூறுவது தவறு; எனென்றால், அவர்கள் ஜட விஷயத்தில் புத்தியைச் செலுத்தக்கூடியவர்கள்; காரண, பிரபஞ்ச முழுவதையும் பிரகாசிக்கச் செய்கின்ற ஒளியையுடைய அந்த அறிவின் சொரூபத்தைப்பற்றிச் சிந்திப்பவன்; ஜடத்தைப்பற்றியே சிந்திக்கும் ஒருவன் பயித்தியம் பிடித்துப்போவது இயற்கை; எப்பொழுதும் அறிவின் சொரூபத்தைப்பற்றிச் சிந்திப்பவன் பயித்தியம் பிடித்தவனைப் போன்று நடிப்பானேயன்றி இயற்கையில் பயித்தியம் பிடித்தவனாகமாட்டான்; அவனுடைய அறிவானது எட்டுணையும் பேத மடையாது; நீர் கூறியது ஜடத்தைப் பற்றியதா? அறிவின் சொரூபத்தைப் பற்றியதா? ஜடத்தைப்பற்றியதானால் நீர் கூறியது சரிதான்; அறிவின் சொரூபத்தைப்பற்றியதானால் அது தவறாக முடியும். மேல் நாட்டுக்காரர்கள் ஜடத்தைப்பற்றிய சிந்தனைக்காக

ரானதால் அவர்களுக்குப் பயித்தியம் பிடித்திருக்கிறதென்று சொல்வது ஒப்புக்கொள்ளக் கூடியதுதான்; இங்குள்ளவர்கள் அறிவின் சொரூபத்தைப்பற்றிய சிற்றறிவுக்காரரானதால் இவர்களுக்குப் பயித்தியம் பிடித்திருக்கிறதென்று சொல்வது ஒப்புக்கொள்ளக் கூடாதது. இவற்றின் பேதங்களை உணர்ந்து நீர் பேசவேண்டும். உம்முடைய சாஸ்திரங்கள் இவ் விஷயங்களைப்பற்றி உமக்கு விளக்கமாகப் போதிக்கவில்லையா; அதனாலேயே நீர் இவ்வாறு பேதங்களைக் காணாது பேசுகின்றீர்'' என்று சொன்னார். இதனால் ஜட விஷயத்தில் ஆழ்ந்த சிற்றறிவுடையவனுக்கே பயித்தியம் பிடிக்குமென்பதும், அறிவின் சொரூபத்தைச் சிற்றவனுக்கு அறிவு கலங்காதென்பதும் உணரப்படும்.

688. அன்பின் பேதங்கள்:

அன்பில், சமர்த்தம், சமஞ்ஜஸம், சாதாரணம் என மூன்று வகையுண்டு. இவற்றுள் சமர்த்தமென்பது சுயநலமற்றதாம்; சமஞ்ஜஸம் என்பது அந்யோந்யமாம்; சாதாரணமென்பது சுயநலமுள்ளதாம். இம்மூன்றிலும் சுயநலமற்ற அன்பே மிகச் சிறந்ததாம். இந்த முதல் தரமான அன்பையுடையவன், அன்பு செலுத்தப்படும் வஸ்துவினுடைய நன்மையையே நாடுவான்; அதனால் துன்பங்களையும், துக்கங்களையும் அனுபவிக்க ஏது வண்டானாலும் அவன் அவற்றை இலட்சியம் பண்ணமாட்டான். இரண்டாவதான அந்யோந்ய அன்பையுடையவன், அன்பு செலுத்தப்படும் பொருளின் சுகத்தை மாத்திரம் நாடுவதில்லை; அதனோடு

தன்னுடைய சுகத்தையும் கவனித்துக்கொள்வான். மூன்றாவதான சுயநலமுள்ள அன்போ மிகத் தாழ்ந்தது. அந்தச் சுயநலமுள்ள அன்பையுடையவன், அன்பு செலுத்தப்படும் பொருளின் நன்மையைப்பற்றியாவது, நீமையைப் பற்றியாவது சிறிதுங் கவனியாமல், தனது சொந்தச் சுகத்தை மாத்திரம் கவனிப்பான்.

639. சுயசக்தி யின்றி ஒருவர் செய்வதைப்போலச் செய்ய நினைப்பது இழிவா மென்பது:

ஆதி சங்கராசாரியரிடத்திலே ஒரு சிஷ்யனிருந்தான். அவன், அவர் செய்வதை யெல்லாம் பார்த்து, அவரைப் போலவே எதையும் செய்யத் தொடங்கிவந்தான். அவர், 'சிவோகம்' என்று சொன்னால் அவனும் அதைச் சொல்வான். இத்தகைய மூடத்தனம் அவனுக்கிருப்பதைச் சங்கரர் பார்த்து அவனைத் திருத்த நினைத்து, ஒருநாள், ஒரு கொல்லனுடைய உலைக்கள வழியாகச் சென்றபொழுது, ஒரு குடம் நிறைய உருக்கி வைக்கப்பட்டிருந்த இரும்புக் குழம்பை யெடுத்துக் குடித்துவிட்டார். அப்போது அவருக்குப் பின்னே சென்ற அந்தச் சிஷ்யன், தன்னுடைய வழக்கம்போல் அவர் செய்த அந்த அற்புத காரியத்தைச் செய்ய முடியவில்லை. அதனால் அவன் அவமானமடைந்து அதுமுதல் அவரைப்போல் எதையும் செய்வதை விட்டு விட்டான். எப்பொழுதும் சாதாரணமான ஒருவன், பெரியோர் தங்கள் மகிமையால் செய்வதைப்போல் எதையும் செய்ய நினைப்பது மூடத்தனம். ஆனால், பெரியோர் எவ்வித

முயற்சியினால் உயர்ந்த நிலைமை அடைந்தார்க ளென்பதை யுணர்ந்து, அந்த முயற்சிகளைச் செய்து படிப்படியாக உயர் வடைதற்கு வழி தேடிக் கொள்ளலாம். அவ்வாறு அவர்க ளுடைய திருஷ்டாந்தங்களைப் பார்த்துத் தன்னைத் திருத்தி உயர்ந்த நிலைக்குக் கொண்டுபோக முயற்சி செய்யவேண்டு மே தவிர, தனக்கு ஒரு சக்தியு மில்லாதிருக்கும்போது அவர்களைப்போல எதையும் செய்ய ஆரம்பிக்கக் கூடாது.

690. எல்லோருமே உலகத்திலிருந்துகொண்டே ஆத்மஞானத்தை அடைய முடியா தென்பது:

உலகத்திலிருந்துகொண்டு எல்லோருமே ஆத்ம ஞான த்தை அடைய முடியாது. அவ்வாறு அடைந்தவர் ஜனகர் ஒருவரே. இவர் அப்படி உலகத்திலிருந்தபடியே ஆத்ம ஞான மடைந்ததைக்கொண்டு, 'மற்றையரும் அந்நிலைமை யை அடைந்துவிடலாம்' என்று சிலர் கூறி, இவ் விஷயத்தி ற்கு ஜனகரை உதாரணங் காட்டுகிறார்கள். ஜனகர் விஷயம் அருமையாக நிகழ்ந்தது. மனித வர்க்கத்தாரின் சரித்திரங் கள் முழுவதிலும் ஆராய்ந்து பார்த்தாலும், அந்நிலைமை யடைந்தவர் ஜனகர் ஒருவரை யன்றி வேறொருவரும் அகப் படமாட்டார். ஜனகர் மறைந்து அநேகம் நூற்றாண்டுக ளாகியும் அவரைப்போல் வேறொரு ஜனகரும் தோன்ற வில்லை. ஆதலின், அவருடைய உதாரணத்தைக்கொண்டு எல்லோரும் உலகத்திலிருந்தபடி ஆத்மஞானம் அடை வது அருமை. மனிதன், பொன்னையும், பெண்ணையும் துற ந்தா லொழிய ஆத்மஞானம் அடைதல் முடியாது.

691. மதபேதம் மூடக்கொள்கை யுடையவர்களிடத் திலேதான் உண்டாகு மென்பது:

கோசைப்புல்லானது, ஆழ்ந்த நீருள்ளவைகளுடம், பரி சுத்தமுள்ளவைகளுடமான குளங்களிலே முளைப்பதில்லை. பாசம் படர்ந்து நீர் குறைவாயிருக்கும் சிறு குட்டைகளிலே தான் முளைக்கும். அதைப்போலவே, மதபேதமானது, பரி சுத்தமானதும், விசால முள்ளதும், சுயநலமற்றதுமான நோக்கத்தை உடையவர்களிடத்தே உண்டாகமாட்டாது. சுயநலத்தையும், உண்மை யின்மையையும், மூடப் பிடி வாதத்தையும் சிறந்தனவாகக் கொண்டிருப்பவர்க ளிடத்தி லேயே அந்த மதவிகற்பந் தோன்றும்.

692. ஹிந்து மதத்துக்கும், பிராஹ்ம மதத்துக்கும் உள்ள வித்தியாசம்:

ஒரு பிராஹ்ம பக்தர், "ஹிந்து மதத்துக்கும், பிரா ஹ்ம மதத்துக்கும் உள்ள வித்தியாச மென்ன?" என்று ஒரு சமயம் என்னிடம் கேட்டார். அதற்கு நான், "தனித்த ஒரு இராகத்துக்கும், எல்லா இராகங்களும் சேர்ந்த பொ துச் சங்கீத வித்தைக்கும் என்ன வித்தியாச முண்டோ அந்த வித்தியாசந்தான் இவற்றி லுண்டு" என்று கூறி னேன். தனித்த ஓர் இராகமானது, தன்னுடைய ஜாதித் தன்மையில் தனித்த ஓர் இன்பத்தை யுண்டாக்குகின்றது. எல்லா இராகங்களுக்கும் பொதுவான சங்கீத வித்தை யானது அந்தத் தனி இராகத்தையும், மற்ற இராக தாளங் களையும், சுருதியையும் உள்ளடக்கிக்கொண்டு எல்லாவற்

நிற்கும் பொதுவான ஓர் இன்பத்தை உண்டாக்குகின்றது. இவற்றைப்போலவே பிரார்த்ம மதமானது பிரார்த்ம வஸ்து வைப்பற்றிய ஒரே தன்மையான ஆனந்தத்தை யுடையதாயிருக்கிறது. ஹிந்து மதமோ அதையும் மற்றவைகளையும் உள்ளடக்கிக்கொண்டு பொதுவான பேரின்பத்தைக் கொடுக்கக் கூடியதாயிருக்கிறது.

693. உள்ளுணர்ச்சியையும், வெளி வடிவத்தையும் கௌரவப்படுத்தவேண்டு மென்பது:

ஈசுரணைப்பற்றிய உள்ளுணர்ச்சியே அந்தரங்க சக்தி யாம்; அதற்கறிகுறியாக வெளியில் தோற்றும் தெய்வ ரூபமே வெளி வடிவமாம். இவ் விரண்டுமே மனிதனை ஈசு னன்பால் சேர்க்கத் தக்கன வாதலின், இந்த உள்ளுணர்ச்சி யையும் வெளி வடிவத்தையும் அவமதிக்க லாகாது; கௌர வப்படுத்தவேண்டும்.

694. மதஸ்தாபனத்திற்கும், வளர்ச்சிக்கும், சடங்கு களும், கிரியைகளும் இருக்கவேண்டு மென்பது:

ஒரு பயிரானது உற்பத்தியாகி வளர்ச்சி யடைவதற்கு விதையே பிரதானமாயிருக்கின்றது. எனினும், அந்த வித்தில் உமி யிருந்தால்தான் அது முளைக்கும்; உமி போய்விட்டா லோ வித்து முளைக்காது. இன்னும் உமி மேலே மூடப்பட் டிருந்தாலும், உள்ளே அரிசி பிடிக்காமல் சாவியாய்ப் போய் விட்ட தானியமாயிருந்தாலும் அது முளைக்காது. ஆகவே, உள்ளே அரிசி பிடிக்கப்பட்டதும், மேலே உமி மூடப்பட்

டதுமாகிய தானியமே பயிரை உண்டாக்குவதற்குரிய வித்தாகும். இத்தகைய தானியத்தை விதைக்கு உபயோகப்படுத்தும்போது உமியுடன் உபயோகப்படுத்தவேண்டும். பயிரின் விசையை யெடுத்து, அதன் பயனை அனுபவித்தலாகிய ஆகார முண்ணுதற்கு உபயோகிக்கும்போது அந்தத் தானியத்தின் உமியை நீக்கிவிடவேண்டும். இவற்றின் சுருங்கிய கருத்தென்னவெனில், தானியத்தை வித்துக்கு அதாவது பயிரை உண்டாக்குதற்கு உபயோகப்படுத்தும்போது உமி அவசியப்படுகின்றது; ஆகாரத்திற்கு உபயோகப்படுத்தும் போது உமி அவசியமில்லாமற் போகின்றது என்பதாம். இவற்றைப்போலவே, ஒரு மதத்தை உண்டாக்கி விருத்தி செய்வதற்கு, அந்த மதக் கொள்கையைச் சார்ந்த சடங்குகளும் கிரியைகளும் அவசியம் இருக்கவேண்டும். அவையில்லாவிடின் அம் மதக் கொள்கையிலிருந்து மதம் உற்பத்தியாகமாட்டாது. இன்னும் உறுதியான மதக் கொள்கையில்லாமல் மேலுக்கு மாத்திரம் அனுஷ்டிக்கப்படும் மதச் சடங்குகளாலும் கிரியைகளாலும் மதம் விருத்தியடையாது. ஆகவே மதம் விருத்தியடையவேண்டுமானால் உறுதியான மதக்கொள்கையோடு கூடிய சடங்குகளும் கிரியைகளும் வேண்டும். மதக் கொள்கையால் விருத்தியடையும் மதத்தின் பயனாகிய முத்தியின்பத்தை அனுபவிக்கும் நிலை வந்தபோது அம் மதக் கிரியைகள் அவசியமில்லை. ஆதலால், ஒவ்வொருவரும், மதத்தின் உண்மைத் தத்துவத்தை அடையும்வரையில் மதச் சடங்குகளையும், கிரியைகளையும் செய்துகொண்டிருக்கத்தான் வேண்டும்.

695. ஈசுராநாமத்தின் உதவியால் பலர் பலவிதமான காரியங்களைச் செய்கிறார்க ளென்பது:

விளக்கானது எப்பொழுதும் நல்ல பிரகாசத்தையே கொடுத்துக்கொண் டிருக்கிறது. அந்தப் பிரகாசத்தின் உதவியால் சிலர் ஆகாரம் சமைக்கிறார்கள்; சிலர் பத்திரத்திலே பொய்க் கையெழுத் திடுகிறார்கள்; சிலர் நல்ல சாஸ்திரங்களைப் படிக்கிறார்கள். இதைப்போலவே, எப்பொழுதும் ஈசுராநாமம் பரிசுத்தத் தன்மையோடு கூடியிருக்கின்றது. அதன் உதவியால் சிலர் மோக்ஷமடைய முயற்சி செய்கிறார்கள். சிலர், 'உலக போகங்கள் கிடைக்க வேண்டும்' என்று அதனை ஜெபித்துத் தீக்காரியங்களிற் பிரவேசிக்கிறார்கள்.

696. மதத் தேர்ச்சி யுள்ளவனுடைய தன்மையும், அத் தேர்ச்சி யில்லாதவனுடைய தன்மையும்:

அன்னிய பாஷையைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்துப் பூரணமாகப் படிக்காதவன், அந்தப் பாஷையில் தனக்குப் பழக்க முண்டென்பதைப் பலரிடத்தும் காட்டிக்கொள்ளும் பொருட்டுத் தான் பேசும்பொழுதெல்லாம் அந்த வார்த்தைகளைக் கலந்து கலந்து பேசிக்கொண்டே யிருப்பான். (இந்தப் பழக்கத்தை இப்பொழுது அரைகுறையாக ஆங்கிலம் கற்ற சிலரிடம் காணலாம்.) அந்தப் பாஷையைப் பூரணமாகக் கற்றவன் அதையே ஒரு பெருமையாகக் கலந்து பேசிக்கொண் டிருக்கமாட்டான்; தன்னுடைய சுய பாஷையிலேயே எதையும் பேசிப் பூர்வீக நிலைமை

யில் விகற்பப்படாம லிருப்பான். இவர்களைப்போலவே மத விஷயங்களில் ஆசம்பமாகச் சிலவற்றைத் தெரிந்துகொண்டவன் பிறர் மதிக்கவேண்டி, மற்ற காரியங்களைச் செய்யும் போதெல்லாம் மத விஷயங்களை இடை யிடையே கலந்து செய்து காட்டி நடித்துத் தற்பெருமைகொண் டலைவான். மத விஷயங்களைப் பூரணமாகத் தெரிந்துகொண்டவர்களோ எப்பொழுதும் இருந்தபோலவே தங்கள் இயற்கைப் படி நடந்துகொள்வார்கள். பெரிய மதபோதகர்க ளென அவ் விஷயத்தையே கண்ட கண்ட விடங்களிலெல்லாம் பேசிக்கொண்டு திரியமாட்டார்கள். அடக்கமாகவே யிருப் பார்கள்.

697. ஈசுரனைத் தரிசித்தவன் அடக்கமா யிருப்பா னென்பது:

வெறும் பாத்திரத்திலே ஜலத்தை ஊற்றும்போது ஒருவிதமான சத்த முண்டாகும். ஏதேனும் நிறைந்திருக் கும் பாத்திரத்தில் ஊற்றினால் சத்த முண்டாகாது. இதைப் போலவே, ஈசுர தத்துவங்களைப் பூரணமாக அறிந்தவன், வீண் தர்க்கங்கள் செய்யாமல் மௌனமாகவே யிருந்து பிரமானந்தத்தை அனுபவிப்பான். ஈசுர இலட்சணங்களை அறியாதவனே, அறிந்தவனைப்போன்று வீண் தர்க்கங்க ளும் ஆரவாரங்களும் செய்துகொண்டு ஒரு பயனு மடை யாமல் திரிவான்.

698. மனிதனிடத்தில் ஈசுரத்துவம் எவ்வளவு காலம் இருக்கு மென்பது:

இரும்பானது, நெருப்போடு கலந்திருக்கும்வரையில் சிவப்பு நிறத்தோடு கூடியதா யிருக்கும்; நெருப்பை விட்டு

நீங்கியவுடன் கருமை யடைந்துவிடும். இதைப்போலவே, மனிதன் ஈசுர சிந்தனையோடு யோகஞ் செய்துகொண்டிருக்கும் வரையில் ஈசுரத்துவம் நிறைந்தவனு மிருப்பான். அதை விட்டு நீங்கியவுடனே சாதாரண மனிதத் தன்மையை அடைந்துவிடுவான்.

699. பரிசுத்தர்கள் இன்னு ரென்பது:

கங்கா நதியின் தீரங்களிலே வசிப்பவர்கள் எவர்களோ அவர்கள் பரிசுத்தர்களாவர்.

700. ஒரு தார்க்கீகருடைய பயனற்ற கேள்விக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறிய விடை:

ஒரு சமயத்தில் ஒரு தார்க்கீகர் என்னிடம் வந்து, "ஞாதா, ஞாதுரு, ஞேயம் என்பன எவை?" என்று கேட்டார். அதற்கு நான் அவரை நோக்கி, "சத்புருஷரே! இவ்வகையான கல்வித் திறங்களை யெல்லாம் நான் அறியேன்; என்னிடத்திலுள்ள ஆத்மாவையும், ஜகன்மாதாவையும்தான் நான் அறிவேன்" என்று விடை கூறினேன். எப்பொழுதும் கல்வி சம்பந்தமான தர்க்கங்களால் பயனில்லை. ஆத்ம நிலையை உணர்தலே சிறந்ததாம்.

701. உண்மை மனிதன் இன்னு னென்பது:

சத்திய ஞானத்திலே உணர்ச்சி பெற்றவனே உண்மை மனிதன். மற்றவர்கள், பெயருக்கு மாத்திரம்தான் மனிதர்களாவார்கள்.

702. வீணே பிறந்திருப்பவன் இன்ன னென்பது:

பெறுதற்கரிய மானிட ஜென்மத்தைப் பெற்றும், இந்த ஜென்மத்திலேயே ஈசுவரனை அனுபவத்தில் அடைய முயற்சி செய்யாதவன் வீணே பிறந்தவனுவான்.

703. எப்பொழுதும் சிறு பையனைப்போலவே யிருப்பவன் பாக்கியவா னென்பது:

பசுவின் இளங் கன்றுனது, விசாரமற்றுச் சந்தோஷத்துடனும், உற்சாகத்துடனும் இருக்கிறது; நாள் முழுதும் துள்ளித் துள்ளி ஓடி விளையாடுகிறது. அது தன் தாயிடத்தில் பால் குடிக்கும்போதுதான் விளையாட்டை நிறுத்தி ஒரு நிலையில் நிற்கும். இப்படியிருக்கும் அந்தக் கன்றுக்குக் கழுத்தில் கயிறுபோட்டுக் கட்டும் பருவம் வந்தவுடனே அது கட்டுக்குள் அடங்கியிருக்கவேண்டியிருக்கிறது. அதனுல் அது இளைப்படைந்துவிடுகிறது. எக்கமும் விசனமும் அடைகிறது. எலும்பும் தோலுமாய் மெலிந்து போகிறது. இதைப்போலவே, ஒரு சிறு பையன், உலக விஷயங்களில் புகுந்திருக்கும்வரையில் சந்தோஷமாயும் உற்சாகமாயும் இருக்கிறன். அவன், விவாகஞ் செய்து கொண்டு குடும்ப காரியங்களில் கட்டுப்பட்டுவிட்டாலோ அவனுடைய சந்தோஷ மெல்லாம் ஒழிந்துவிடுகிறது. அவன் முகத்தில், எக்கம், கவலை துக்கம் முதலியவைகளெல்லாம் தோன்றிவிடுகின்றன. அவனுடைய கண்களில் சுகத்தைக் காட்டும் பளபளப்பு இல்லாமற் போய்

விடுகிறது; நெற்றியிலே மடிப்புக்கள் விழ ஆரம்பிக்கின்றன. காலைக் காற்றுப்போலக் கலப்பற்றவனும், அன்றலர்ந்த புஷ்பம்போலப் புதியவனும், பனித்துளிபோலப் பரிசுத்த மூடையவனும் இருக்கின்ற ஒரு சிறு பையனைப் போன்று வாழ்நாள் முழுதும் உலகக் கட்டில் அகப்படாதிருப்பவனே பாக்கியவந்தனுவான்.

704. மனிதன் உலகத்திற்கு வந்தவுடனே நிர்ப்பயமாக இருப்பதற்கு ஈசுரனிடத்தில் இடம் சம்பாதித்துக்கொள்ளவேண்டுமென்பது:

ஒரு நகரத்துக்குள் ஒரு அன்னிய ஊரான் புதிதாகப் போனால், முதலில் தங்குவதற்கு ஒரு சுகமான அறையைத் தேடிக்கொள்ளவேண்டும். அவ்வாறு தேடிக்கொண்ட பின், அவன், அதில் தன்னுடைய மூட்டைகளை வைத்துவிட்டுப் பின்னர் நகரத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். அப்படி முதலில் இடம் தேடிக்கொள்ளாவிடில், அவன் பல விதத்திலும் கஷ்டத்தை அடைவான். இதுபோலவே, ஒருவன் இவ்வுலகத்திற்கு வந்தவுடனே எப்பொழுதும் நிர்ப்பயமாகத் தங்குவதற்கு ஈசுரனிடத்தில் இடம் தேடிக்கொள்ளவேண்டும். அவ்வாறு தேடிக்கொண்டபின் அவன் இங்கே சற்றும் பயமின்றித் தனது தினசரி வேலையைச் செய்துகொண்டு திரியலாம். அப்படி ஈசுரனிடத்தில் இடம் தேடிக்கொள்ளாவிடில், மரணமாகிய இருள் சூழ்ந்த இரவு வரும் பொழுது அவன் அதிக கஷ்டங்களையும், கவலைகளையும் அடைதற் கேதுவுண்டாகும்.

705. ஆத்மஞானமடைந்தபின் உலக வாழ்க்கையி லிருந்தாலும் மன சமாதானம் நீங்கா தெனல்:

ஒருவன் முதலில் ஈசுர கிருபையைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும்; பின்னர் பணத்தைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். அவ்வாறு ஈசுர கிருபையைச் சம்பாதித்து ஆத்மஞான மடைந்தபின் பணத்தைச் சம்பாதித்து உலக வாழ்க்கை வாழ்ந்தாலும் மனச் சமாதானம் நீங்க மாட்டாது.

706. இன்னவிடத்தில் பைசாசம் நுழையா தென்பது:

எப்பொழுதும் ஹரிநாம ஸ்தோத்திரம் செய்யப்படு கின்ற விடத்தில் பைசாசம் ஒருபோதும் நுழையமாட் டாது.

707. ஹரி என்னும் நாமத்தின் பொருள்:

'ஹரி' என்பதற்கு, 'நமது இரிருதயத்தைக் கொள்ளை கொள்கிறவன்' என்பது பொருள். 'ஹரி பலம்' என்பத ற்கு, 'ஹரியே நமக்குப் பலம்' என்பது பொருள்.

708. அறிவீனர்களுடைய நிந்தைக்கு அஞ்சி மதானுஷ்டா னத்தைக் கைவிடலாகா தெனல்:

அறிவீனர்கள் குறை கூறுவதற்கு, அல்லது பரிகசிப் பதற்கு அஞ்சி மதானுஷ்டானத்தைக் கைவிட லாகாது. அப்படிப் பரிகசிக்கும் மனிதர்களே யெல்லாம் மனத்தாற் கவனிக்கத் தகாத சிறு சிறு பூச்சிக ளென்று அலட்சிய

மார்க நிஜனத்து, எவ்வித கூச்சமும் பின்றி மதத்தை அனுஷ்டிக்கவேண்டும்.

709. மனிதருடைய இகழ்ச்சியையோ புகழ்ச்சியையோ மதானுஷ்டான விஷயத்தில் கவனிக்கலாகா தெனல்:

மனிதர், ஒருவரை, விரைவில் ஸ்தோத்திரமும் செய்துவிடுவார்கள்; இகழ்ச்சியும் செய்துவிடுவார்கள். ஆதலின், அவர்களுடைய இகழ்ச்சியாலும், புகழ்ச்சியாலும் ஏற்படுவ தொன்றுமில்லை. அதனால் அவர்களுடைய எவ்வித அபிப்பிராயத்தையும் கவனிக்காமல் மதத்தை அனுஷ்டிப்பதே சிறந்ததாம்.

710. அநித்திய வஸ்துவைக்கொண்டே நித்திய வஸ்துவை அடையவேண்டு மெனல்:

நித்திய வஸ்துவானது, அநித்திய வஸ்துவினாலேயே அடையக் கூடியதாயிருக்கிறது. சத்திய வஸ்துவானது மித்தியா வஸ்துவின் உதவியினாலேயே அடையக்கூடியதாயிருக்கிறது; காட்சியில்லாத வஸ்துவானது காட்சி வஸ்துவின் உதவியால் அடையக்கூடியதாயிருக்கிறது. ஆதலின், அநித்தியமாகிய இத் தேகத்தைக்கொண்டே யோகம் முதலியன செய்து நித்திய வஸ்துவை அடையவேண்டும்.

711. உலகில் வசித்துக்கொண்டே மோக்ஷம் அடைய முயற்சிப்பது சிறந்ததெனல்:

உலகத்தில் வசித்துக்கொண்டே மோக்ஷத்தையடைய முயற்சிப்பவர்கள், கோட்டைக்குள் விருந்துகொண்டு எதிரி

களுடன் போர் புரிகின்ற போர் வீரர்களை நிகர்த்தவர்கள், உலகத்தைத் துறந்து ஈசுவரனை நோக்கித் தவஞ் செய்பவர்கள், பகிரங்கமான யுத்தகளத்திலே நின்று எதிரிகளுடன் போர்புரியும் வீரர்களைப் போன்றவர்கள்; எப்பொழுதும் கோட்டைக்குள்ளே யிருந்து சண்டை செய்வது மிகச் சௌகரியமானது. வெளியேறிச் சண்டை செய்வது அதிக கஷ்டமானது. ஆதலின், உலகத்தி லிருந்தபடியே மோக்ஷத்தையடைய முயற்சிப்பது, சௌகரியமான மார்க்கமாம்.

712. ஈசுரனைக் காணும் இரண்டுவித யுத்திகள்:

ஈசுரனைக் காணும் விஷயத்தில் எற்பட்ட யுத்திகள் இரண்டு விதமாம். அவை, அநுலோமம், விலோமம் என்று சொல்லப்படும். இவற்றுள் அநுலோமமாவது: மனிதனுடைய ஈசுரசிருஷ்டியைத் தியானிப்பதிலிருந்து, சிருஷ்டிகர்த்தாவாகிய ஈசுரனைத் தியானிப்பதாம். அதாவது, காரியத்தைத் தியானிப்பதிலிருந்து ஆதிகாரணத்தைத் தியானிப்பதாம். விலோமமாவது: மனிதன் முதலில் ஈசுரனைத் தெரிந்துகொண்டு; அவருடைய ஒவ்வொரு சிருஷ்டியிலும் அவர் இருக்கின்ற தென்பதைத் தெரிந்துகொள்ளுதலாம். இவற்றுள் முன் கூறப்பட்டது விபாகமுறை; பின்கூறப்பட்டது கூட்டுமுறை. முன்கூறப்பட்ட விபாகமுறையானது வாழைமரத்தினுள்ளே யிருக்கின்ற தண்டை அறிதற்கு, அதனைப் பார்க்கும் வரையில் மேலுள்ள மட்டைகளை ஒவ்வொன்றாக உரித்துப்போட்டுக்கொண்டேபோய் முடிவில் தண்டைக் காண்பது போன்றதாம். பின்கூறப்பட்ட கூட்டு

முறையோ, முதலில் தண்டைக் கண்டுகொண்டு அதன் மேல் மட்டைகளை அதைச் சேர்ந்தவையாகவே கருதி அதன் மேல் ஒவ்வொன்றாக வைத்து மூடிக்கொண்டே போவது போன்றதாம். அதாவது: முதல் முறை ஈசுர சிருஷ்டி ஒவ்வொன்றையும் அவரால் உண்டாக்கப்பட்ட தென்று ஆராய்ந்து தள்ளிக்கொண்டேபோய் ஈசுர சொரூபத்தைக் காணுதலாம்; இரண்டாவது முறை முதலில் ஈசுர சொரூபத்தைக் கண்டு, உலக சிருஷ்டிகளை யெல்லாம் அவருடைய சிருஷ்டிகளென்றே அவரோடு சம்பந்தப் படுத்திக்கொண்டே போவதாம்.

713. உபாசகர்களின் வகைகள்:

உபாசகர்களில், சாத்வீக உபாசகர்க ளென்றும், இராஜஸ உபாசகர்க ளென்றும், தாமச உபாசகர்க ளென்றும் மூன்று வகுப்பின ருண்டு. அவர்களுள் சாத்வீக உபாசகர்கள், சிறிதும் ஆடம்பர மில்லாமலும், வேட மில்லாமலும் கர்வ மில்லாமலும் ஈசுரரைப் பூஜிக்கின்றவர்க ளாவார்கள்; இராஜஸ உபாசகர்கள், ஈசுரோபாசனை செய்யுங் காலத்தில் வீட்டை அலங்கரித்து, ஆட்டத்தாலும் பாட்டாலும் தட புடல் செய்து, ஒரு சம்பிரமமான சமாராதனை நடத்த எண்ணிப் பெரும் பிரயத்தனங்கள் செய்பவர்களாவார்கள்; தாமஸ உபாசகர்கள், குற்றமற்ற ஆடு முதலியவைகளை தூற்றுக் கணக்காகப் பலிபீடத்திலே கொன்று, மதுமாமி சாதிகளை நைவேத்தியமாக வைத்து ஆடியும் பாடியும் தெய்வத்தை வணங்குபவர்களாவார்கள்.

714. உலகம் இத்தன்மைத் தென்பது:

இவ் வுலகமானது, எதைப்போன்றிருக்கின்றதெனில், உள்ளே சிறிதும் சதை யில்லாமல், தோலும் கொட்டையு மாத்திர முடையதாயும், வயிற்று வலியை உண்டாக்கக் கூடியதாயும் இருக்கின்ற அம்மாப்பழம் போன்று, நித்தி யானந்தமாகிய பயனற்றதாயும், பயனற்ற போகங்களை யுடையதாயு மிருக்கின்றது.

715. மாயையால் மனிதன் அளவு கடந்த ஆசையை மனத்தில் வைக்கின்ரு னென்பது:

அதி ஜ்வரத்துடனும், மிகுந்த தாபத்துடனும் அவஸ் தைப் படுகின்ற ஒரு நோயாளி, அந் நிலையில் ஒரு சமுத் திரஜல முழுவதையுமே குடித்துவிடலா மென்று நினைக் கிறான். ஆனல், அந்த ஜ்வரம் தணிந்து, அவன் சாதாரண நிலையை அடைந்துவிட்டால் ஒரு சிறிய கோப்பை ஜலமே அவனுக்குப் போதுமானதாய் விடுகிறது. அவனுடைய தாகமானது அந்தக் கோப்பை ஜலத்தில் சிறிது பாகத்தி னிலேயே தணிந்துவிடுகிறது. இதைப்போலவே, மாயை யால் பீடிக்கப்பட்டுத் தான், சிறியவனென்பதை மறந்திருக் கும் மனிதன், அகண்ட பிரமம் முழுவதையும், தனது ஹிருதயத்துக்குள்ளே அடக்கிக் கொள்ளக் கூடுமென்று நினைக்கிறான். ஆனல், அவனிடத்துள்ள அந்த மாயை நீங்கி விட்டாலோ, அந்த ஈசுவர சைதந்யத்தின் சிறிது கிரண மே அவனுக்குப் பிரமானந்தத்தைப் பெருக்கிவிடுதற்குப் போதுமானதா யிருக்கும்.

716. ஆசைக்கு முடிவே இல்லை யென்பது:

ஒரு சமயத்தில் ஒரு மனிதன், "என்னுடைய புத்திசாலியான ஹரீசன் என்பவன் வளர்ந்து பெரியவனாகப் பருவமடைந்தவுடனே நான் அவனுக்கு விவாகஞ் செய்து வைத்துப் பின்னர் குடும்பத்தை அவன் வசம் ஒப்புவித்துவிட்டு, உலகைத் துறந்து யோகாப்பியாசம் செய்வேன்" என்று ஸ்ரீ சாமகிருஷ்ணரிடம் கூறினான். இதைக் கேட்டதும் அவர், அவனை நோக்கி, "நீ சொல்லும் அபிப்பிராயத்தினால், ஈசுர பக்தியை அனுஷ்டிப்பதற்கு உனக்கு எப்பொழுதுமே சமயம் கிடைக்கமாட்டாதென்பது விளங்குகின்றது; நீ இப்பொழுது உன் மகன் ஹரீசன் பருவ மடைந்தபின் உலகத்தைத் துறந்துவிடப்போவதாகச் சொல்லுகிறாய்; இனி, அவன் பருவ மடைந்தபின், 'அந்த ஹரீசனுக்கும் ஒரு புத்திரன் பிறக்கட்டும்; அவன் பருவமடைந்து அவனுக்குக் கலியாணமாவதையும் பார்த்துவிட்டு அதன்மேல் உலகத்தைத் துறக்கிறேன்' என்று சொல்வாய்; இவ்விதமாக உன் ஆசைகளுக்கு முடிவே ஏற்படாது" என்று கூறினர். இதனால் உலக ஆசைக்கு முடிவில்லை யென்பதை உணர்ந்துகொள்ளலாம்.

717. தீயோர் தன்மை:

நல்லடையானது, பொடியான தானியங்களைப் போகவிட்டுத் தடித்த தானியங்களைத் தன்னிடத்தே வைத்துக் கொள்ளும். இதைப்போலவே தீயோர் நல்லதைத் தள்ளித் தீமையைக் கைக்கொள்வார்கள்.

718. ஈசுரன் எதையும் செய்ய வல்லவர் என்பது:

ஈசுரன் தமக் கிஷ்டமான எதையும் செய்ய வல்லவர். அவர் விரும்பினால், ஒரு யானையை, ஓர் ஊசித் துவாரத்தி லும் நுழையச் செய்வார்.

719. ஈசுரன் பொருட்டே தங்கள் மேலோர்களுக்குக் கீழ்ப்படியா திருந்தவர்கள்:

ஈசுரன்மேற் செலுத்திய பக்தியினால், எழுவர், தங் கள் மேலோர்களுக்குக் கீழ்ப்படியா திருந்தார்கள். அவர் கள் யாவரெனில்: பரசுராமர், பரதன், பிரஹ்லாதன், சுக தேவர், விபீஷணன், பலி, கோபிகாஸ்திரீகள் ஆகியவர்க ளாவர்.

720. மதம் கெடுவதற்குக் காரணம் இன்ன தென்பது:

மழை ஜலமானது இயற்கையில் பரிசுத்த முள்ளதா யிருப்பினும், பூமிக்கு வரும்போது தான் சேரும் இடத் திற்குத் தகுந்தபடி களங்கமுடையதாகி விடுகிறது. எப்படி யெனில், அது வீழ்ந்தோடிவரும் கூரைகளும், குழாய் களும், கால்வாய்களும் அழுக்குள்ளவையா யிருந்தால் அந்த ஜலமும் அழுக்கடைந்து விடுகிறது. அதுபோலவே, ஈசுரனைப் பற்றிய மதமானது இயற்கையில் பரிசுத்த மானதா யிருந்தாலும், தீய இடங்களின் மூலம் வெளிப் படுவதால் கெட்டதாகிவிடுகிறது. ஜலம் நல்ல இடத்திற் சார்ந்து வந்தால் பரிசுத்தமுள்ளதாகவே யிருக்கும். அதைப்போலவே, மதமும் நல்லிடத்திலிருந்து வெளிப் பட்டால் நல்லதாகவே யிருக்கும்.

721. மகாத்மாவினுலேயே மகாத்மாவை உணர்ந்து கோள்ளக் கூடுமென்பது:

நூல் வியாபாரத்தில் அனுபோகப்பட்டவனுக்கே நூல்களின் தன்மை நன்றாகத் தெரியும்; அதனுல் அவன், 'இன்ன நூல் இன்ன கம்பருள்ளது, இன்ன தன்மை யுடையது' என்று நூல்களின் தன்மைகளே யெல்லாம் உணர்ந்து சொல்லுவான். அவனைப்போலவே, பரமாத்ம நிலையை உணர்ந்த மகாத்மாவே, தன்னைப்போன்ற மற்றொரு மகாத்மாவின் தன்மைகளை உணர்வார்.

722. பாபம் இலகுவில் ஜீரணிக்கா தென்பது:

பாதரசமானது இலகுவில் ஜீரணிக்காது. அதைப் போலவே பாபமும் எளிதில் நசிக்கமாட்டாது.

723. மனத்திலுள்ளது வாயில் வரு மென்பது:

மூள்ளங்கியைத் தின்றவனுக்கு, மூள்ளங்கி நாற்ற மூள்ள ஏப்பமே வந்துகொண்டிருக்கும்; வெள்ளரிக்காய் தின்றவனுக்கு அதன் நாற்றம் படிந்த ஏப்பமே வரும். இவற்றைப்போலவே, ஒருவன், தன் இருதயத்தில் எதை நினைத்துக்கொண் டிருக்கின்றனே அதை அனுசரித்தே அவன் வாயில் பேச்சண்டாகும்.

724. சுய அறிவில்லாதவர்களின் தன்மை:

வண்ணுன், ஊராருடைய அழுக்குத் துணிகளே யெல்லாம் வாங்கித் தன் வீட்டில் பொதி சேர்த்து வைக்கிறுன். அவற்றில் ஒன்றேனும் அவனுக்குச் சொந்த மில்லை.

அவைக ளெல்லாம் வெளுக்கப்பட்ட உடனே சொந்தக் காரரிடம் போய்ச் சேர்ந்துவிடுகின்றன. வண்ணன் வீடு காலியாய்ப் போய்விடுகிறது. அதன்மேல் அவன் ஒரு துணியை எடுத்து ஒருவருக்குக் கொடுக்க முடியாது. இதைப்போலவே, பிறர் கற்றுக்கொடுத்தவைகளை மட்டும் வைத்துக்கொண்டு சுய அறிவால் வேறு விசேஷங்களை விருத்திசெய்துகொள்ள முடியாமலிருப்பவர்கள் ஓரிடத்தில் பிரசங்கம் செய்யவோ எழுதவோ நேர்ந்தபோது தாங்கள் கற்றுக்கொண்டவைகளை மாத்திரம் வெளிப்படுத்திவிட்டு மேலே எதையும் செய்ய முடியாமல் விருப்பார்கள். இவ்விதம் விருப்பது மிக இழிவான தன்மையாம். மனிதராயினர் சொந்த உணர்ச்சியால் விசேஷ ஞானத்தை விருத்திசெய்து கொள்ளவேண்டும்.

725. ஈசுரன் பேசும் இயல்பு:

ஈசுவரன், சில சமயங்களிலே பித்தர்கள், குடியர்கள், குழந்தைகள் ஆகிய இவர்களின் வாய்களின் மூலமாகப் பேசுகிறார்.

726. வீண் படிப்பால் பயனில்லை யென்பது:

திரந்தம் என்பதற்கு நன்மார்க்கங்களை உபதேசிக்கும் ஒரு பரிசுத்த புத்தக மென்றும், திரந்தி (அதாவது முடிச்சு) என்றும். இரண்டுவகைச் சிலேடைப் பொருள்க ளுண்டு. இப் பொருள்களுக்குத் தக்கபடியே இது, படிப்பவர்க்கு இரண்டு வகைப் பயன்களை அளிக்கின்றது. எப்படியெனில், ஒருவன் வீண் கர்வத்தை யெல்லாம்

விட்டுவிட்டு, சத்தியத்தை அறியவேண்டு மென்ற விருப்பத்துடனே அக் கிரந்தத்தை வாசித்தால் அவ் வுண்மையை உணர்ந்து, உலக சுகங்களையும் விடுத்து நற்கதியடைவான். இவ்வாறின்றி அவன், பிறர் தன்னைப் படிப்பாளி என்று மதிக்கவேண்டு மென்ற எண்ணத்துடன் இடம்பமாக வேறும் படிப்புப் படிப்பானுனால் அந்தனிடத்திலே, வீண் கர்வம், தற்பெருமை முதலியவற்றையுண்டாக்கி அவனுடைய மனத்திலே பல சிக்கல்களை யுற்படுத்திவிடும். ஆதலின், வேறும் படிப்பால் ஒரு பயனு மில்லை.

727. உண்மை ஞானம் இன்ன தென்பது:

ஹிருதயத்தைப் பரிசுத்தமாக்குகிற ஞான மெதுவோ, அதுவே உண்மை ஞானமாம்; மற்றவை யெல்லாம் அதற் கெதிரிடையான அஞ்ஞானமாம்.

728. மனிதர்க்குப் பொறுமை அவசிய மென்பது:

வங்காளி அக்ஷரங்களில் ஸ முதலிய மூன்று அக்ஷரங்கள் சப்தத்தில் ஒரே மாதிரியாய் அமைந்திருக்கின்றன. இந்த மூன்று அக்ஷரங்களின் பொருள் 'பொறுத்துக் கொள்' என்பதாம். இந்த அக்ஷரங்கள் மற்ற எழுத்துக்களோடு சேர்த்து மனிதவர்க்கத்தாருக்கு இளமையிலேயே சொல்லிவைக்கப்படுகின்றன. அப்படிச் சொல்லிவைக்கப் படுங் காலத்தில், மற்ற அக்ஷரங்களின் உச்சரிப்புக்களைக் காட்டிலும், இந்த மூன்று அக்ஷரங்களின் உச்சரிப்புக்களே அதிகமாக வரும். அவ்வாறு உச்சரிப்பதால், 'பொறுத்துக்

கொள்' 'பொறுத்துக் கொள்' என்ற உபதேசமே அந்த மூன்றெழுத்துக்களிலும் செய்யப்பட்டு வருகின்றது. இதனால் மனிதருக்குப் பொறுமை அதிகமாக வேண்டுமென்பதை நன்குணர்ந்துகொள்ளலாம். ஆதலின், மனிதராயினர், உயர் கதி யடையவேண்டுமாயின் பொறுமையை அவசியமாகக் கைக்கொள்ளவேண்டும்.

729. மனிதன், இன்ன சமயத்தில்தான் ஈசுரனை அடைவா னென்பது:

"இவை யெல்லாம் காணுகவே யிருக்கிறேன்" "இவை யெல்லாம் நீயாகவே யிருக்கிறாய்" "நீயே எஜமானன், நானே ஊழியன்" என்னும் இம் மூன்றுவிதப் பிரக்ஞா நிலைமைகளுள் எதேனு மொன்றை, மனிதன் பரிசுத்த மாகக் கூறும்படியான பக்குவத்தை எப்பொழுது அடைகின்றனே அப்பொழுதுதான் ஈசுரனை அடைவான்.

730. ஸ்திரீமார்க ளெல்லோரும் தாய்மாராகக் கருதப்படவேண்டு மென்பது:

உலகத்தில் உள்ள எல்லா ஸ்திரீகளும் பகவதி தேவியினுடைய அம்சங்களே யாவர். ஆதலின், அவர்கள், எல்லோராலும் தாய்மார்க ளென்றே கருதப்பட வேண்டும்.

731. பெரியோர் தரிசனைக்கு வெறுங்கையோடு செல்லலாகா தென்பது:

ஒரு கோயிற்பிரதிஷ்டையுள்ள மகாத்மாவையோ, பெரியோரையோ தரிசிக்கச் செல்லுங் காலத்தில் ஒருபொழு

தும் வெறுங் கையுடனே போகக்கூடாது. சொற்பமான ஒரு காணிக்கைப் பொருளாவது எடுத்துக்கொண்டு போய் அவர்கள் முன் காணிக்கையாக வைத்து அப் பெரி யோர்களைத் தரிசிக்கவேண்டும்.

732. ஒருவன், எதையும் தானே செய்தல் நல மென்பது:

ஒருவன், பிறரைக் கொண்டு செய்ய நினைக்கும் காரி யத்தைத் தானே செய்து கொள்வது நலம்.

733. ஜீவன் பிரிந்த தேகத்தை எவரும் கவனிக்க மாட்டா ரென்பது:

ஒரு கூண்டுக்குள்ளிருந்த பக்ஷியானது பறந்து போய் விட்டால், அதன்மேல் அந்தக் கூண்டை எவரும் கவ னிக்கமாட்டார்கள். அதைப்போலவே, ஒரு தேகத்தி லுள்ள ஜீவனானது நீங்கிவிட்டால், பிணமாகிய அத் தேக த்தை எவரும் கவனிக்கமாட்டார்கள். ஆதலின், தேகத் தோடு கூடியிருக்கும்போதே ஈசுரப்பிரீதியான காரியங் களைச் செய்துகொள்ள வேண்டும்.

734. இன்னிடத்தில் ஈசுரசக்தி அதிகமா யிருக்கு மென்பது:

ஒரு பெருங் கூட்டத்தார் கீழ்ப்படிந்து அவசால் கௌரவப்படுத்தப்பட்டவர்களிடத்தில், சாதாரண மனி தர்களிடத்தில் இருப்பதைக் காட்டிலும் அதிகமான ஈசுர சக்தி யிருக்கும்.

735. பரிசுத்தர்களிடத்தில் உண்டாகும் சிறிய குற்றமும் பெரிதாகத் தோற்று மெனல்:

ஒரு வெள்ளைத் துணியில் சிறிய கறுப்புக் கறை பட்டு விட்டாலும் அஃது அதிக அவலட்சணமாகவே தோற்றும். அதைப்போலவே, ஒரு பரிசுத்த புருஷரிடத்தில் மிகச் சிறிய குற்றம் ஏற்பட்டாலும் அது பிரமாதமாகத் தோற்றி அவர்க்கு மிக்க துக்கத்தை யுண்டுபண்ணும்.

736. மரியாதை பிரதிபலனை யளிக்காமற் போகாதென்பது:

மனிதனே! பிறர் தலை வணங்கும் இடத்திலே நீயும் தலை வணங்கு; மரியாதையானது எப்பொழுதும் பிரதி பலனை யளிக்காமற் போகாது.

737. மனிதன், உலக கஷ்டங்களை அனுபவித்த பிறகு தான் ஈசுரசன்னிதானத்தை அடைய முடியுமெனல்:

இரும்பை, கத்தி முதலிய கருவிகளாகச் செய்ய வேண்டுமானால், உலைக் களத்திலே வைத்து நன்றாகச் சூடேற்றிச் சம்மட்டியா லடித்து வேலைக்கு உபயோக முள்ளதாகச் செய்யவேண்டும். அவ்வாறு செய்த பிறகு தான் அது, எப்படி வளைக்கவேண்டுமானாலும் வளைக்கப் பட்டுக் கத்தி முதலிய ஆயுதங்களாகச் செய்தற்கு உப யோகப்படும். இதைப்போலவே, மனிதனுந் தேக கஷ்டங்க ளாகிற உலைக்கூடத்திலே பன்முறை சூடேற்றப்பட்டு, உலக துன்பங்களாகிற சம்மட்டியா லடிக்கப்படவேண் டும். (அதாவது, அவன், தேக சிரமத்தோடு உலக துன்

பங்களை யெல்லாம் அனுபவிக்கவேண்டும்). அப்படி அனுபவித்தால்தான் அவன் அகங்கார மொடுங்கித் தாழ்மையுடையவனாகி, ஒரு நல்ல சுத்தியடைந்து ஈசுர சன்னிதானத்திற் சேர்வான்.

738. சாஸ்திரம் படிப்பவர் பலர், ஈசுரனை யடைபவர் சிலரென்பது:

கல்கத்தாவிலே பெரிய கோடீசுவரராகிய ஜாதுநாத மல்லிக் போன்றவர்களுடைய ஐசுவரியத்தைப்பற்றியும் வீட்டைப்பற்றியும் விசாரிப்பவர்கள் அநேகர். ஆனல், அவர்களை நேரில் பார்த்துச் சிநேகிதம் செய்துகொள்பவர்கள் சிலரே. இவர்களைப்போலவே, மதத்தைப்பற்றிய சாஸ்திரங்களைப் படித்து அதைப் பேசுகின்றவர்கள் அநேகருண்டு. ஆனல், மதத்தின் உண்மையை உணர்ந்து ஈசுரனை யணுகுதற்குச் சிரமம் எடுத்துக்கொள்பவர் சிலரே.

739. ஈசுரபக்தனைப் பார்ப்பவர்க்கு ஈசுர நினைப்பும், பரலோக ஞாபகமும் உண்டாகு மென்பது:

ஒரு மனிதன் வக்கீலைப் பார்த்தவுடன், அவனுக்கு வழக்குகளைப்பற்றிய நினைவுகளும், நியாயஸ்தலங்களைப் பற்றிய எண்ணங்களும் உண்டாவது இயற்கை. இதைப் போலவே, ஒரு மனிதன், ஒரு பரிசுத்தராகிய ஈசுரபக்தரைப் பார்த்தமாத்திரத்தில் அவனுக்கு ஈசுரனைப்பற்றிய எண்ணமும், பரலோகத்தைப்பற்றிய ஞாபகமும் உண்டாகும்.

740. பிரமானந்தம் அடைந்தவனுடைய நிலை:

ஒருவன் பிரமானந்த மடைந்துவிட்டால் அதிலே லயித்து வெறி பிடித்தவன்போ லாய்விடுவான். அவன் சாராயங் குடிக்காமலே பெருங் குடிகாரனைப்போலத் தோற்றுவான்.

741. பரிசுத்தர்களுக்குச் செய்யும் சமாராதனை ஈசுரனுக்குச் செய்வது போன்ற தென்பது:

எல்லாப் பிராணிகளிடத்தும் ஈசான் ஜீவாக்கினி சொரூபமா யிருக்கின்றார். அதனால், மனிதர்க்குச் செய்யப் படும் சமாராதனையானது ஈசுசார்ப்பணமா யிருக்கின்றது. இதை உத்தேசித்தே பெரியோர், மத சம்பந்தமான விசேஷ காலங்களில் சம்பிரமமான சமாராதனையைச் சகல ருக்கும் செய்கின்றனர். ஆனால், சமாராதனையை ஏற்றுக் கொள்வோர் பரிசுத்தா யிருக்கவேண்டும். அப்படி யிருந் தால்தான் அவர்களுக் கிடப்படும் சமாராதனை ஈசுசார்ப் பணத்துக்குச் சமான முள்ளதாகும். காமிகளும், துன்மார்க் கருமாகிய தியோருக்குப் போஜனம் கொடுப்பதால் பய னில்லை. அவர்கள் உட்காரும் இடத்திற்குக் கீழே பூமிக் குள் அநேகம் அடி ஆழம் தீட்டாகத்தக்க அவ்வளவு பாவங்கள் அவர்களிடத்தில் நிறைந்திருக்கின்றன. ஆதலின், அத்தகைய பாபாத்மாக்களுக்குச் சமாராதனை செய்தல் கூடாது.

742. பாபிகளுக்குக் கொடுக்குந் தருமத்தால் பாபமே சேருமெனல்:

ஒரு சமயத்தில் மாமிசம் விற்பவன் ஒருவன், நெடுந் தூரஞ் சென்று ஒரு பசுவை வாங்கி அடிப்பதற்குக் கொ

லைக் கவனத்திற்கு ஓட்டிக்கொண்டு போனான். பசுவானது, வழியில் சரியாகச் செல்லாமல் மூர்க்கத்தனமாக அங்கு மிங்கும் ஓடி அவனை அவஸ்தைக் குள்ளாக்கியது. அதனால் அதை ஓட்டிக்கொண்டு செல்வது அவனுக்குக் கஷ்டமா யிருந்தது. அவன் அவ்வாறு கஷ்டப்பட்டுப் பகலெல்லாம் கழித்துச் சாயுங்கால நேரத்தில் ஒரு கிராமத்தில் சேர்ந்து மிகவும் கனத்திருந்தபடியால் ஒரு தருமசத்திரத்தில் சென்று அன்னம் வாங்கி யுண்டு இளைப்பாறித் தெளிந்த வுடன் உற்சாகத்துடன் பசுவை ஓட்டிக்கொண்டு போய் அடித்துக் கொன்று மாமிசத்தை விற்றான். அந்தப் பசு வைக் கொன்ற பாவத்தில் ஒரு பாகமானது, அவனுக்கு அந்தச் சத்திரத்தில் அன்னங் கொடுத்தவனுக்குச் சார்ந் தது. ஆதலால், எவரும் தருமங் கொடுக்கும்போது இப் வர்களுக்குக் கொடுக்க லாகாது.

743. மாயையானது, மனிதரைக் குருடராக்கி வைத்திருக்கின்ற தென்பது:

ஈசுரனை யடைதற்கு நேரான மார்க்கம் திறக்கப்பட் டிருந்தும், மனிதர், அதனை உணர்ந்துகொள்ளக் கூடாத படி மாயையானது அவர்களைக் குருடராக்கிவிட்டபடியால் அவர்கள் சம்சார பந்தத்திலிருந்து வெளியேற முடியாமல் அஞ்ஞானமாகிய பாதாளத்திலே மூழ்கி, ஒவ்வொன்றி லும் ஈசுரன் இருக்கின்ற தென்பதை உணராமல், "நான், என்னுடையது" என்ற பந்தத்தி லகப்பட்டு, இந்திரிய வஸ்துக்களிடத்தில் பற்றுதலுடையவர்களாய் அவஸ்தைப் படுகிறார்கள்.

744. மனிதனிடத்தில் உலகப்பற்றுக் குறைந்தபோது தான் மத போதனை ஏறு மென்பது:

ஜ்வரமானது கொசமா யிருக்கும்போது அதை நிறுத்துதற்குக் கொய்ஞ முதலிய மருந்துகளை உபயோகித்தால் யாதொரு பயனும் உண்டாகமாட்டாது. அதை நிறுத்தவேண்டுமானால், தானுகவே அந்த ஜ்வரம் கொஞ்சம் தணிந்தபின் மருந்து கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்தால் அந்த வியாதி சுலபமாக நீங்கிவிடும். இதைப் போலவே, மனிதன் இலௌகிகத்திலே அதிகமாக ஆழ்ந்திருக்கும்போது அவனுக்கு ஞானோபதேசஞ் செய்தால் அதனால் பயன் உண்டாகமாட்டாது. அவனுடைய உலகப் பற்றானது இலகுவில் அவனை விட்டு நீங்கமாட்டாது. அவனுக்கு உலக மாயை நீங்கி ஞானமுண்டாக வேண்டுமானால், அவனுக்குத் தானுகவே உலகப்பற்றுச் சிறிது குறைந்த சமயத்தில் மதபோதனை செய்யவேண்டும். அங்ஙனம் செய்தால், அவன் இலகுவில் உலக மாயையை நீக்கி உயர்ந்த ஞானத்தை அடைவான். இவ்வாறு அவனுக்குத் தானே உலகப்பற்று சிறிது நீங்காதவரையில் மதபோதனை செவிக் கேறமாட்டாது.

745. எல்லாக் கர்மங்களும் சமாதியில் நீங்கிவிடு மென்பது:

சந்தியாவந்தனமானது, காயத்திரியிலே கரைந்து விடும்; காயத்திரியானது பிரணவத்திலே கரைந்துவிடும்; பிரணவமானது கடைசியில் சமாதியிலே கரைந்துவிடும். இந்தச் சமாதி நிலையில் எல்லாக் கர்மங்களும் (அதாவது

சுத்தியர் வந்தனம் முதலிய ஜப தபங்களெல்லாம்) நசித்து ஞானம் கைகூடும்.

746. உண்மையான பரிபூரணத்துவ மடைந்தவர் இன்னு ரென்பது:

எவரிடத்திலே மூன்றும், ஹிருதயமும் பரிபூரண மாக அபிவிருத்தி செய்யப்பெற்றுச் சரிசமானமாக இருக் கின்றனவோ, அவரே உண்மையில் பாக்கியவந்தர். அவர் தாம் எந்த அவஸ்தையில் இருக்கும்படி நேரிட்டபோதி லும் அதில் பிறர் மெச்சும்படி நடந்துகொள்வார். எப்படி யெனில், அவர் ஈசுவரனிடத்திலே களங்கமற்ற பக்தியும் நம்பிக்கையும் நிறைந்தவரா யிருப்பார்; பிறருடன் சேர்ந்து காரியம் நடத்தும்பொழுதும் அதனைக் குறைவில்லாமல் செய்துவிடுவார்; உலக விஷயங்களிலே யிருக்கும்பொழுது பரிபூரண காரியஸ்தரா யிருப்பார்; வித்வான்களுடைய சபையிலே சிறந்த வித்வானாக விளங்குவார்; தர்க்க விஷ யங்களிலே அதிக சாமர்த்தியமான யுக்தி சக்திகளைக் காண்பிப்பார்; தமது பெற்றோரிடத்தில் கீழ்ப்படிதலுள் ளவராயும், அன்புள்ளவராயு மிருப்பார்; தமது பந்துக்க ளிடத்தும், நண்பர்களிடத்தும் அன்புடையவராயிருப்பார்; அயலாரிடத்திலே பிரியமுள்ளவராயும், அனுதாபமுடை யவராயும், எப்பொழுதும் அவர்களுக்கு நன்மையைச் செய்பவராயும் இருப்பார். இத்தகைய குணங்களைப் பெற்ற புருஷரே உண்மையில் பரிபூரணத்துவத்தை யடைந்தவ ராவார்.

747. சம்சாரம் அநித்திய மென்பது:

நன்முக ஆராயுமிடத்துச் சம்சாரமானது மிகப் பொய்யான தென்பது நன்கு விளங்கும். நாம் இருக்கின்ற வீட்டைப்பற்றியே சிறிது சிந்தித்துப் பார்ப்போம்; அதில் எத்தனையோ பேர்கள் பிறந்து இறந்துவிட்டார்கள். உலக விஷயங்கள் நமக்கு முன்னே ஒரு நிமிஷத்தில் தோன்றி மறைந்துவிடுகின்றன. நமக்குச் சொந்தமாக நாம் நினைத்திருப்பவர்களெல்லாம், நாம் மரண மடைந்த அந்த க்ஷணத்திலேயே சொந்த மில்லாமற் போய்விடுவார்கள். ஓர் உலகினனிடத்தில் உலகப் பற்று எவ்வளவோ பலமாயிருக்கிறது. எனினும், அவனிடத்தில் அவனுடைய குடும்பத்தாரே பூரணபற்றுத லுடையவர்களாயிருக்கமாட்டார்கள்; அவனுல் சகாயம் பெறுமட்டும் பற்றுதலுடையவர்போல் உடனிருந்து அவனுக்கு மரணங் குறுகிய காலத்தில் அவனைப் பிரிந்து மறந்துவிடுவார்கள். அவர்கள் இப்படியிருந்தாலும் அவன் மாத்திரம் தன் குடும்பத்தாரைப் பிரியும் விஷயத்தில் கவலையுள்ளவனுயிருக்கிறான். அவனுக்கு 'ஹரி' என்னும் ஒரு பேரனிருந்தால் சத் காரியங்களைச் செய்யப்போகுங் காலத்திலுங் கூட அவனை விட்டுப் பிரிய மனம் வருந்துகிறான். அவன் காசிக்குப் போக நினைத்தால் "என் பேரன் ஹரியை விட்டு எவ்வாறு நான் பிரிந்து செல்வேன்; அவ்வாறு சென்றுவிட்டால் அவன் கதி என்னவாகும்?" என்று கவலைப்படுகிறான். அக் கவலையால் அவன் காசிக்குப் போக முடிகிறதில்லை. இத் தகைய நினைப்புக்க

ளே உலகத்தில் அவனைப் பந்தப்படுத்தி விடுகின்றன. இவ் வாறு அவன் சம்சார பந்தத்தில் அகப்பட்டிருந்தாலும் அதை விட்டுச் செல்ல நல்ல ஞானமார்க்க மிருக்கிறது. அப்படி யிருந்தும் அவன் அதனை யுணர்ந்து, சம்சாரம் அநித்தியமென்று கண்ணுவதில்லை. மீன் பிடிக்கும் பறி யிலே வெளியேறிச் செல்வதற்கு மார்க்கம் திறந்திருந் தும் கூட அநிலகப்படும் மீன் அவ் வழியை உணர்ந்து வெளியேறிச் செல்லாமல் அதற்குள்ளேயே கிடந்து மரித் துவிடுவதைப் போலவும், கம்பிளிப் பூச்சியானது தன் னைத் தானே தன்னுடைய கூண்டில் அடைத்துக்கொண்டு மரித்துவிடுவது போலவும் அவன், அந்தச் சம்சாரத்தி லகப்பட்டு மடிகிறான். ஆதலின், அத்தகைய சம்சாரத்தை மித்தையென் றுணர்ந்து அதை விட்டு நீங்குவோமே மேற் கதிக்குச் செல்வார்.

748. ஒருவன் பிள்ளைகளைப் பெறுவதனல் மட்டும் கீர்த்தி யடைந்துவிடமாட்டா னென்பது:

ஒரு மனிதன், கூட்டமான குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதனலேயே கீர்த்தியுடையவனுய்விடமாட்டான். அதனலே அவனுடைய ஆண்மை விளங்கிவிட மாட்டாது. எனெனில், கேவலம் பன்றிகளும், நாய்களும் கூடப் பல குட்டிகளைப் பெற்று வளர்த்துவிடுகின்றன. பின்னர் எத னல் ஒருவனுடைய கீர்த்தியும், ஆண்மையும் விளங்கு மெனில், அவனுடைய சொந்த தர்மத்தைச் சிரேஷ்டமாக நடத்துவதனலேயே அவை விளங்கும். அர்ச்சுனன், அவ்

வாறு சொந்த தர்மத்திலேயே கீர்த்தியும் ஆண்மையும் அடைந்திருக்கின்றான்.

749. மனத்தின் முடிவான ஒடுக்க நிலை:

மனமானது வெளியுலகைப் பற்றியிருக்கும்பொழுது ஸ்தூல வஸ்துக்களைப் பார்த்துக்கொண்டு, அன்னமய கோசத்திலே (அதாவது, ஜீவனுடைய ஆகாரத்தை ஆதாரமாகக்கொண்டிருக்கின்ற ஜடக் கூண்டிலே) வசிக்கின்றது. உலகை விட்டு அந்தர்முகமாகத் திரும்பினாலோ, ஒரு வீட்டின் வெளிக் கதவை மூடித் தாளிட்டுக்கொண்டு உள்ளறைகளுக்குள் நுழைந்து ஒன்றைக் கடந்து ஒன்றுக்கு உட்பக்கமாகவே செல்வதுபோல, ஸ்தூலத்திலிருந்து சூக்ஷ்மத்திற்குச் சென்று, அதிலிருந்து காரணத்திற்குச் சென்று, கடைசியாக ஆதிகாரண ஸ்திதியை அடைகின்றது. அந்த ஸ்திதியிலே மனமானது அகண்டத்திலே லயமாய்விடுகிறது. அதற்குமேல் அதைப்பற்றி ஒன்றும் சொல்ல முடியாது.

750. ஈசுரனை யடைந்தோர் ஸ்தூல தேகத்தை லட்சியம் பண்ணமாட்டார்க ளென்பது:

ஒரு சமயத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் வியாதியுற்றிருக்கும்போது, பண்டிதர், 'சசாதரா' என்பவர், அவரைப் பார்த்து, "நீங்கள் ஏன் உங்களுடைய மனத்தை ஏகாக்கிரப்படுத்தி, சரீரத்தில் வியாதியால் பீடிக்கப்பட்ட பாகத்தில் செலுத்தி அவ் வியாதியை நீக்கிச் சௌக்கியப்படுத்

திக் கொள்ளவில்லை?'' என்று கேட்டார். அதற்கு ஸ்ரீராம கிருஷ்ணர், ''நான், ஈசுவரனுக்கு அர்ப்பணஞ் செய்து விட்ட என்னுடைய மனத்தை, தசையும் இரத்தமும் நிறைந்த இந்த இழிந்த கூடாகிய தேகத்தினிடத்து எப்படிச் செலுத்தக் கூடும்?'' என்று மறுமொழி கூறினர். அதன் மேலும் அவர், ஸ்ரீராமகிருஷ்ணரை நோக்கி, ''அது முடியாவிட்டாலும், தங்கள் வியாதி நீங்கி சொஸ்தமாக வேண்டுமென்று ஜகன்மாதாவை நோக்கியாவது பிரார்த்தனை செய்யக்கூடாதா?'' என்று கேட்டார். அதற்கு ஸ்ரீராமகிருஷ்ணர், ''என்னுடைய மாதாவைப்பற்றி நான் நினைக்கும்பொழுது, ஸ்தூலசரீரம் மறந்துபோகிறது; நான் அதை விட்டு வெளியே இருக்கிறேன்; ஆதலால், சரீரத்தைப்பற்றி, ஜகன்மாதாவினிடத்தில் பிரார்த்தனை செய்வது எனக்கு அசாத்தியமாயிருக்கிறது'' என்று கூறினர். இவற்றால் ஈசானிடத்தே மனத்தைச் செலுத்தியவர்களுக்கு ஸ்தூல தேகத்தில் ஞாபக மிராதென்பது உணரப்படும்.

751. வியாதி ஆத்மாவைச் சாராதேனல்:

ஒரு சமயம், ஸ்ரீராமகிருஷ்ணர், பேசுவதற்கும், எல்லிக ஆகாரத்தையும் விழுங்குவதற்கும், முடியாதபடி தொண்டை வியாதி கொண்டிருந்தார். எனினும், அவர் அந்த வியாதியைப்பற்றி இலட்சியம் பண்ணவில்லை. பரமாத்ம ஐக்கியநிலையி லிருந்துகொண்டு, ''நான் இப்பொழுது எத்தனையோ வாய்களின் மூலமாகப் பேசிக்கொண்

மும், உணவை உண்டுகொண்டு மிருக்கிறேன்; நான் எல்லா ஆத்மாக்களுக்கும் ஆத்மாவா யிருக்கிறேன்; நான் தொண்டையில் எங்கோ புண்ணையுடைய மனுஷ்யத் தோலி னுல் மூடப்பட்ட அகண்ட ஆத்மா; ஆதலின், இந்த வியாதி என்னை ஒன்றுஞ் செய்யமாட்டாது'' என்று கூறினர். எனெனில், நோவெல்லாம் சரீரத்திலே யுள்ளது; ஆத்மா வானது, நோவுவந்து சேரமுடியாதபடி அதீதம்மா யுள்ளது. இவர், தேகத்தில் சித்தை வைக்காமல் ஆத்மாவினிடத்தே முழு மனதையும் செலுத்தியவராதலின், இவரை அந்த வியாதி ஒன்றும் செய்யவில்லை. இதனால், வியாதியானது ஆத்மாவை ஒன்றுஞ் செய்யா தென்பதை உணர்ந்து கொள்ளலாம்.

152. தொண்டை நோவு வந்ததற்குரிய காரணத்தை ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுதல்:

இன்னும் ஸ்ரீ ராமகிருஷ்ணர், தொண்டை நோவு தமக்கு வந்ததைப்பற்றி, ''சரீரத்திலே மிகுந்த நோவு இருக்கும் பொழுதுகூட இன்ன விதமாக ஆத்மாவைப்பற்றிச் சிந்தி க்கவேண்டும்; இன்ன விதமாக ஈசுர பிரக்ஞையிலே இரு க்கவேண்டும் என்பவைகளை மனிதருக்குப் போதிப்பதற் காகவே, ஜகன்மாதா என்னிடத்தில் அந்த வியாதியைக் கொண்டுவந்துவிட்டிருக்கிறாள்; சரீரமானது பசியினாலும், நோவினாலும் வேதனைப்பட்டு மனுஷ்ய சக்தியிலே வலு வில்லாமற் போகும்போது கூட ஆத்மாவே சரீரத்துக்கு எஜமானன் என்பதையும், அப்படியிருந்தாலும் அத் தான்

பங்களை அனுபவிக்கா தென்பதையும், ஜகன்மாதா இதன் மூலம் எனக்குக் காண்பித்திருக்கிறாள்; ஆத்மாவானது ஈசுரத்துவமுடைய தென்றும், ஈசுவரப் பிரக்ஞை உண்மையானதே என்றும், ஒருவன் பரிபூரணத்துவம் அடைந்து விட்டால் அவனுக்குச் சர்வ பந்தங்களினின்றும் நிவிருத்தியுண்டாய்விடு மென்றும், சம்சயவாதிகளுக்கு ருசுப்படுத்துவதற்காகவே எனது ஜகன்மாதா இந்தச் சரீரத்திலே இவ் வியாதியைக் கொண்டுவந்து விட்டிருக்கிறாள்'' என்று அதற்குக் காரணங் கூறினர். இதனால், பிரமக் ஞானிகள் நோயுற்ற காலத்திலும் அந்த வருத்தத்தை அடையாதவர்களாகி ஈசுரப் பிரக்ஞையிலே ஆழ்ந்திருப்பார்களென்பதும், அவர்கள் சரீரத்துக்கு வியாதி உண்டென்று நினைத்தால் உண்டு, இல்லை யென்று நினைத்தால் இல்லை என்பதும் உணரப்படும்.

753. ஞானனந்தானுபவத்தால் சரீரத்துக்குச் சிரம முண்டாது மென்பது:

ஆத்மீக அபிவிருத்தியிலே அநேக படிகளைக் கடந்த 'கேசவர்' ஒரு சமயம் வியாதிகொண்டு வருந்தியபோது, ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரை நோக்கி, ''தாங்கள் இந்த வியாதிக்காக மிக வருந்துகிறீர்கள்; இதன் காரணத்தை நீங்கள் உணராமையினாலேயே உங்களுக்கு இத்தகைய வருத்தம் ஏற்பட்டிருக்கிறது. இதன் காரண மென்னவெனில், தாங்கள் ஆத்மீக அபிவிருத்தியிலே அநேகம் படிகளைக் கடந்திருக்கிறீர்கள். அவ்வாறு கடந்து நீங்கள்

அடைந்த ஞானனந்தானுபவத்தால் உங்களுடைய சரீரத்துக்குச் சிரம மூண்டாயிருக்கிறது. ஒரு பெரிய கப்பல் கங்கா நதியில் சென்றால் அதனுல் அலைக ளுண்டாய்க் கரையை மோதுகின்றன. கப்பல் எவ்வளவுக் கெவ்வளவு பெரியதா யிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அலைகளும் பலமுள்ளனவாயிருக்கும். சில சமயங்களில் அந்த அலை கள் கரைகளை உடைத்தும் விடுகின்றன. இன்னும் ஒரு பெரிய யானையானது ஒரு சிறு குடிசைக்குள் நுழைந்தால் அதனை அசைத்துப் பிடுங்கி யெறிந்துவிடுகின்றது. இவற் றைப்போலவே, ஞானனந்தானுபவம் பக்தனுடைய ஹிருதயத்தில் தோன்றும்போது, அதனு லுண்டாகும் சிர மம் தேகத்தில் தாக்குவதால் நோயுண்டாய் உடம்பிற்கு வருத்தமேற்படுவது சகஜம். ஆத்மீக அலைகள் கிளம்பும் போது சரீரப் பிரக்ஞை இல்லாமற் போய்விடும்; பின்னர் அந்த அலைகள் சரீரமாகிய கரையைப் பாதிக்கின்றன. இவ்வாறு சேரிட்ட பிறகு இன்னது நடக்கு மென்பது உங்களுக்கே தெரியும். வீட்டிலே நெருப்புப் பற்றிக் கொண்டால் அதிலுள்ள எல்லா வஸ்துக்களையும் எரித்துச் சாம்பலாக்கிவிடும். அதைப்போலவே, மேற் கூறியபடி ஞானனந்தானுபவம் உண்டாகிவிட்டால் அந்தப் பிரஹ்ம ஞானக்கினியானது காமக்குரோதாதி சத்துருக்களை யெல் லாம் எரித்துக் கடைசியில், "நான், என்னை, எனது" என்னும் பிரக்ஞையை அழித்துச் சரீரத்தையும் கசக்கிச் சிதற அடித்துவிடும். அதன்மேல் முத்தி சித்திக்கும். அத்தகைய நிலையை அடைந்த பின் சிறிதும் வாதனை

தோற்றாது; பிரஹ்மானந்தமே மேலிட்டிருக்கும். ஒருவனிடத்தே எல்லாம் நீங்கிவிட்டாலும், 'நான்' என்னும் அகங்காரம் சிறிதேனும் மிருந்தாலும் வேதனை அவனை விட்டு நீங்கமாட்டாது. ஒருவன் ஒரு ஆஸ்பத்திரியிலே, வியாதியை நீக்கிக்கொள்வதற்கு நுழைந்தால், வியாதி முழுவதும் நீங்குவதற்கு முன் அதிலிருந்து வெளியில் வர முடியாது. அதைப்போல, பந்தங்களை ஒழிக்க உலகத்தில் வந்து யோகத்தில் பிரவேசித்தவன், முழுப்பற்றுக்களையும் ஒழிக்காவிடில் அவ்வுலகத்தைவிட்டு நீங்கி முத்தியடைதல் முடியாது; ஆதலின், நீங்கள் இவற்றையெல்லாம் நன்காராய்ந்து தேகப்பற்று அனைத்தையும் ஒழித்துவிடுங்கள்; அப்போது உங்களுக்கு வேதனை சிறிதுமின்றி முத்தியாகிய பிரஹ்மானந்தம் உண்டாகும்" என்று கூறினர். இதனால், ஞானனந்தானுபவத்தில் விருப்பவர்க்குத் தேக சமம் உண்டாவது சகஜ மென்பதும், அதில் கவனஞ் செலுத்தாதவர்க்கு ஒருவித வாதனையு மின்றி நித்தியானந்தசுக முண்டாகு மென்பதும் உணரப்படும்.

754. ஸ்ரீராமகிருஷ்ணருடைய தத்துவ ஞானத்தைப்பற்றி ஹிருதயர் கூறியதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் காரணங் கூறுதல்:

நான் மிகவும் மெலிந்த சரீரத்தோடு சுசுரத் தியானம் செய்துகொண்டிருந்த சமயத்தில் ஹிருதயர் என்னுடைய தேக ஸ்திதியைப் பார்த்துவிட்டு, "இவ்வளவு பலஹீனமான ஒரு சரீரத்திலே, இத்தகைய தத்துவ ஞானமும்,

தேஜஸும் இருக்க நான் ஒருபொழுதும் பார்த்ததில்லை'' என்று கூறுவது வழக்கம். அதற்குக் காரணம்: எனது சரீரம் பலஹீனமா யிருந்தபோதிலும் நான் ஈசுவரனைப் பற்றிப் பேசுவதை ஒருபொழுதும் நிறுத்தினதில்லை. ஒரு சமயத்தில் நான் ஒரு எலும்புக் கூடுபோன்று அவ்வளவு மெலிவா யிருந்தேன். அப்போதுகூட நான் எனக்கொரு சரீரம் இருக்கின்றதென்னும் உணர்ச்சி யின்றிய அநேக மணி நேரம்வரை ஆத்மீக விஷயங்களைப்பற்றிச் சம்பாஷணை செய்துகொண்டே யிருந்தேன். ஆதலால், எப்போர்ப் பட்ட நிலையிலும் ஈசுரத் தியானத்தை மறக்கக்கூடாது.

755. ''பெண்களை எப்படிக் கருதவேண்டும்?'' என்று ஒரு சிஷ்யன் வினவியதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறிய விடை:

ஒரு சிஷ்யன், ஒரு சமயத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்தில், ''பெண்பாலரை நாம் எவ்விதமாகக் கருத வேண்டும்?'' என்று கேட்டான். அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர், ''சத்தியத்தை அனுபவத்தில் அடைந்தவர்களும், ஈசுவர தரிசனத்தினாலே பாக்கியவந்தரானவர்களும் அந்தப் பெண்களிடத்திலே எவ்வித பயமும் அடைவதில்லை. அவர்கள், அந்த ஸ்திரீகளை உண்மையில் உள்ளபடியே ஜகன் மாதாவின் பாகங்களாகவே பார்க்கிறார்கள். ஆகையால், அவர்கள் அந்த ஸ்திரீகளிடத்தில் மிக்க மரியாதை செலுத்துவது மாத்திரமின்றி, ஒரு புத்திரன் தனது மாதாவைப் பூஜிப்பதுபோல அவர்களைப் பூஜிப்பார்கள்'' என்று கூறி

னர். இதனால் பெண்களை இன்னவிதமாகக் கருதவேண்டு மென்பதை உணர்ந்துகொள்ளலாம்.

756. ஸ்திரீகளை இன்ன விதமாகக் கருதவேண்டு மென்பது:

பெண்கள் பரிசுத்த குணங்களுடன் பிறந்திருக்கா னும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அவர்களை எப்பொழு தும் சாக்ஷாத் சச்சிதானந்த சொரூபினியான ஜகன்மாதா வின் பிரதிபிம்பங்களாகவே கருதவேண்டும்.

757. மனிதன், வாழ்க்கையில் ஐயமடைய விரும்பினால் பௌருஷத்துடனிருக்கவேண்டு மென்பது:

குடித்தனக்காரர்கள், தங்கள் வேலைக்காக மாடுகளை வாங்கும்போது, அவற்றின் வாலைத் தொடுகிறார்கள். அப் போது சுறுசுறுப்பில்லாத மாடுகள் சும்மா நின்றுவிடு கின்றன, அல்லது சோம்பலுற்றுத் தரையில் படுத்துக் கொள்கின்றன. சுறுசுறுப்புள்ள மாடுகளோ, தங்கள் வாலைத் தொட்டதுபற்றிக் கோபித்துக்கொள்வதுபோல் அங்கு மிங்கும் குதிக்கின்றன. இந்தப் பரீக்ஷையால் அவர் கள் சோம்பலுள்ள மாடுகளையும் சுறுசுறுப்புள்ள மாடு களையும் நன்குணர்ந்து சுறுசுறுப்புள்ள மாடுகளை விலைக்கு வாங்கிக்கொள்கின்றனர். இந்தச் சுறுசுறுப்புள்ள மாடு களை வேலைக்கு மிகவும் உபயோகமானவை; சோம்பல் மாடுகள் வேலைக்கு உபயோகப்படமாட்டா. இவற்றைப் போலவே மனிதருள்ளும் இரண்டு வகையினர் உண்டு. இவர் பாலில் நனைக்கப்பட்ட அவல்போல மிருதுவாயும்,

வழுவழுப்பாயும் பொருளுமில்லாதிருப்பார்கள்; சிலர் மனிதருக்கு இருக்கவேண்டிய உண்மைப் பொருளுடன் கூடியிருப்பார்கள். இவர்களுள் உண்மைப் பொருளுடனிருப்பவர்களே மனித வாழ்க்கையில் ஜயமடைவார்கள், பொருளுமில்லாதவர்களோ உள்ளே பலமில்லாமலும், ஜிடாமுயற்சியுடன் வேலை செய்வதற்குச் சமர்த்தில்லாமலும், தங்கள் வாழ்க்கையில் ஜயமடையாதவர்களாவார்கள்.

158. ஐசுவரியம் ஜகன்மாதாவுக்குப் பெரிதல்ல வென்பதைப்பற்றி, ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவது:

ஐசுவரிய மிகுந்திருந்தவராகிய சம்பு முல்லிக் என்பவர் ஒரு சமயத்தில் என்னைப் பார்த்து, "சுவாமி! எனது ஐசுவரியத்தை யெல்லாம் ஜகன்மாதாவினுடைய பாதாரவிந்தங்களிலே வைத்துவிட்டு நான் மரிக்கும்படி எனக்கு அனுக்கிரகம் புரியவேண்டும்" என்று சொன்னார். அதற்கு நான், "ஐசுவரியம் உமக்குத்தான் ஒரு பொருளாகத் தெரியும். ஜகன்மாதாவுக்கு அது, உம்முடைய கால் தூசிக்குச் சமானமானதாகும்" என்று கூறினேன். இதனால், ஐசுவரியமானது, பெரியோசால் கொண்டாடப் படாமாட்டாதென்ப துணரப்படும்.

159. பொருள்களில் ஜகந்நாதன் இலட்சியம் வைக்க மாட்டா ரென்பதைப்பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவது:

ஒரு சமயம் தக்ஷிணேசுவரத்திலே இராணி இராசமணியினுடைய தோட்டத்திலிருந்த விஷ்ணு கோஷத்தைக்

திலேயுள்ள விக்கிரகங்களில் அணியப்பட்டிருந்த ஆபரணங்கள் களவுபோய்விட்டன. அப்போது, இராணி இரத்தினக்கு மருகரும், அந்த கோஷ்டத்தின் காரியஸ்தருமான மதுரர் என்பவரும், நானும் அந்தக் களவைப்பற்றி விசாரிப்பதற்கு அந்த கோஷ்டத்திற்குச் சென்றோம். அவ்வாறு சென்றதும், மதுரர் என்பவர் அந்தக் கோவிலிலுள்ள விக்கிரகத்தை நோக்கி, "கடவுளே! நீ இருந்து என்ன பிரயோசனம்! திருடர்கள் உன்னுடைய ஆபரணங்களையெல்லாம் திருடிக்கொண்டு போய்விட்டார்களே; அவர்கள் திருடாதபடி அவர்களைத் தடுப்பதற்கு உன்னால் முடியவில்லையே" என்று சொன்னார். அதைக் கேட்டதும் நான், அவரை நோக்கி, "நீர் என்ன! இப்படி மூடத்தனமாகப் பேசுகிறீர்; நீர் விக்கிரக மூலமாகப் பூஜிக்கின்ற ஜகந்நாதனுக்கு அந்த ஆபரணங்கள் களிமண் கட்டிகள் போன்றனவாம்; தனதேவதையாகிய இலக்குமி அவரிடத்திலிருந்தே தனக்குரிய பெருமைகளையெல்லாம் பெற்றுக்கொள்ளுகிறாள். அந்தப் பகவான் உலகப் பொருள்களை இலட்சியம் பண்ணமாட்டார்; இதை நன்றாக ஞாபகப்படுத்திக்கொண்டு இனி இவ்வாறு பேசுவதை விட்டுவிடும்" என்று கூறினேன். இதனால் கடவுளுக்கு நகைகள் அவசியமில்லை யென்பதை நன்குணரலாம்.

760. கடவுள், பக்தி வைராக்கியங்களையே விரும்புவாரென்பது:

மனிதனால் சமர்ப்பிக்கப்படும் பொருள்களையெல்லாம் ஈசுரன் இலட்சியம் பண்ணவேமாட்டார். எவன்,

அவரிடத்திலே அன்பையும் பக்தியையும் சமர்ப்பிக்கின்றனை அவனுக்கே அவருடைய கிருபை யுண்டாகும். அவர், மனிதர்கள் தம்மோருட்டுச் செய்கின்ற பக்தியையும், விவேகத்தையும், வைராக்கியத்தையுமே விரும்புவார்.

761. ஈசுரன் புண்ணிய ஸ்தலங்களிலேயே விசேஷமாக விளங்குவா ரென்பது:

பூமியைத் தோண்டினால் கீழே எவ்விடத்திலும் ஜலம் கிடைப்பது சகஜம்; எனினும் கிணறு, ஏரி, குளம் முதலியவைகளிலே, தோண்டும் பிரயாசையின்றிச் சுலபமாக விசேஷமான தண்ணீர் கிடைக்கின்றது. அவற்றில் எப்பொழுது வேண்டுமானாலும் தேவையான தண்ணீரை யெடுத்துக்கொண்டு அதனால் சௌக்கியத்தை அடையலாம். இதைப்போலவே, ஈசுரன் எங்கும் நிறைந்திருந்த போதிலும், புண்ணிய ஸ்தலங்களில் மாத்திரம் விசேஷமாகப் பிரத்யக்ஷமாயிருக்கின்றார். பண்டைக் காலத்திலிருந்தே எண்ணற்ற சாதுக்களும், பக்தர்களும், ஸ்வானுபவிகளும் ஈசுர தரிசனம் அடையும் பொருட்டு அந்தப் பரிசுத்த தீர்த்த ஸ்தலங்களுக்கு வந்து, உலக ஆசைகளை யெல்லாம் நீக்கிவிட்டு மனம் உருகி, அவரை நோக்கி, ஜபம், தவம், தியானம், உபாசனை முதலியவற்றைச் செய்து பிரார்த்தித்து வருகிறார்கள். அவர்களுடைய பக்தியினாலே அங்கே ஆத்மீக எண்ணங்கள் நிரம்பியிருக்கின்றன. அதனால் அங்கே ஈசுரப் பிரகாசம் மிகுதியாக உண்டாய்க்கொண்டிருக்கின்றது. ஆகையால், அவ்விடங்களில் மனிதன் சுலபமாக

ஞானோதய முண்டாகப் பெற்று ஈசுரனை அனுபூதியில் அடைவான்.

762. ஒரு புண்ணிய ஸ்தலத்தைத் தரிசித்தால் அங்குண்டாகும் பரிசுத்த எண்ணங்களை மனத்தில் அழுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டு மேனல்:

பசுக்கள், ஓரிடத்தில் வயிறு நிறையத் தின்ற புல்லை தாம் தங்குமிடத்திற்கு வந்தபின் அமைதியாகப் படுத்துக் கொண்டு, வாயில் கக்கிக் கக்கி மென்று அசையிட்டு ருசி பார்ப்பதுபோல, ஒரு பரிசுத்தமான ஸ்தலத்திற்குப் போய் ஈசுர தரிசனம் செய்து திரும்பியவர்கள், அவ்விடத்தி லுண்டான பரிசுத்த எண்ணங்களைப் பலமாக மனத்தில் எடுத்துக்கொண்டு, ஒரு ஏகாந்தமான இடத்திலே உட்கார்ந்து அவற்றைப்பற்றியே ஆழ்ந்த சிந்தனை செய்யவேண்டும். அவ் விடத்தை விட்டு நீங்கின பிறகு கூட, இந்திரிய வியாபாரங்களிலே தோய்ந்து அந்த எண்ணங்களை மறந்து விடக் கூடாது.

763. உண்மையான மதம் மனிதனுடைய ஹிருதயத்திலேயே இருக்கின்ற தென்பது:

பூமியின் நாலா பக்கங்களிலும் யாத்திரை செய்து பார்த்தாலும் எவ்விடத்தும் உண்மையான மத மொன்றையும் காண முடியாது. அந்த உண்மை, மனிதனுடைய ஹிருதயத்திலேயே இருக்கின்றது. ஒருவன் தன் மனத்தைக் கொண்டே ஆராய்ந்து பார்த்தால் உண்மையான மதம் இன்ன தென்பதை உணர்ந்து கொள்ளலாம்.

764. அகங்காரத்தை அழிப்பதற்கு இன்னது செய்ய வேண்டுமென்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவது:

ஜனங்கள் தானியத்தைப் பதர் நீக்கப் புடைக்கும் பொழுது, 'அந்தப் பதர் நீங்கிவிட்டதா?' என்று அடிக்கடி முறத்தைப் பார்ப்பார்கள். அப்படிப் பார்த்துப் புடைத்துப் பதர் ஒன்று மில்லாமல் நீக்கிவிடுவார்கள். இன்னும் சிலர், தட்பமான வஸ்துக்களைத் தராசில் வைத்து நிறுக்கும்போது அடிக்கடி தராசு முள்ளைப் பார்ப்பார்கள். அப்படிப் பார்த்து அந்த முள்ளைச் சரிப்படுத்திக்கொண்டு, அந்த வஸ்துக்களைச் சரியாக நிறுத்துவிடுவார்கள். இவர்களைப்போலவே நான் "என்னுடைய அகங்காரம் அடியோடு தொலைந்துவிட்டதா? சிறிது இருந்து கிளம்புகிறதா?" என்று பார்ப்பதற்காக, என்னையே வாயில் வந்தபடி திட்டிக்கொள்வது வழக்கம்; சில சமயங்களில் நான், என்னுடைய சரீரத்தைப் பார்த்து, "இந்தச் சரீரத்தைப் பார்; இது, எலும்பும் சதையும் சேர்ந்த ஒரு கூண்டுதானே; இதற்குமும், சீழும், இன்னும் சில அசுத்தப் பொருள்களும் தவிர இதில் வேறொன்று மில்லை. இதன் பொருட்டுக் கர்வத்தைப் பாராட்டுவது அதிசயம்" என்று சொல்வேன். இப்படிச் சொல்லிச் சொல்லி என்னிடத்திற் கிளம்பும் அகங்காரத்தையெல்லாம் சிறிது சிறிதாக ஒழித்துவிட்டேன். ஆதலின், அகங்காரத்தை அடக்க விரும்புவோர், அது கிளம்பாதிருப்பதற்கான செய்கைகளை அடிக்கடி செய்து, அது கிளம்பக் கிளம்ப அதனை அடக்கிக்கொள்ளவேண்டும்.

765. மனிதன் தனக்குத் தானே கிருபை காட்டிக் கொள்ளாவிட்டால், மற்ற கிருபைகளைப் பெறுவ தாலும் பயனில்லை யென்பது:

ஒரு மனிதனுக்கு, ஈசுவரன், குரு, சாது இவர்க ளுடைய கிருபை கிடைத்திருந்தபோதிலும், அவனுடைய இருதயமானது அவனிடத்தே கிருபை காட்டிக்கொள்ளா விட்டால் அதாவது அவனுக்குத் தன்னைத் தானே இரட் சித்துக்கொள்ளவேண்டு மென்ற ஆவல் இல்லாவிட்டால், மேற் கூறியவர்களுடைய கிருபையால் பிரயோசன மில்லை. அவனுடைய மனத்திலே தன்னை இரட்சித்துக்கொள்ள வேண்டு மென்ற கிருபை பிறந்தால்மாத்திரந்தான் அந் தக் கிருபைகளால் எப்படிம் பயனை அவன் அடையலாம்.

766. பக்தி சாதன முறைகள் மூன்றுவித மென்பது:

பக்தி சாதன முறைகள் மூன்று விதமாம். அவையா வன: பக்ஷிகளின் தன்மையுள்ளதும், குரங்கின் தன்மை யுள்ளதும், எறும்புகளின் தன்மையுள்ளதுமாம்.

பக்ஷியானது பறந்து வந்து அவ்சரமாக ஒரு மரத்தி லிருக்கும் பழத்தைக் கொத்தும்; அந்தப் பழம் அது கொத்தின அசைவால் மரத்திலிருந்து கீழே வீழ்ந்து விடும்; அப்படி வீழ்ந்த பழத்தை அந்தப் பக்ஷி அனுபவி க்க முடியாது. இதைப்போலவே சிலர், தங்கள் முயற்சி களைக் கெடுத்துவிடும்படியான கொரேத்துடனே வெகு தடபுடலாகப் பக்தி யனுஷ்டானங்களைச் செய்வார்கள். அந்தத் தடபுடல்களால் அவர்களுடைய அனுஷ்டானந்

கள் நழுவிவிடும்; அப்படி நழுவிவிட்டால் அவர்கள் அதனால் அடையவேண்டிய பயனை அடையமாட்டார்கள். இதுதான் பக்தியின் தன்மை போன்ற சாதனம்.

குரங்கானது ஒரு பழத்தை வாயில் வைத்துக்கொண்டு மரக் கிளைகளில் தாவிக்கொண்டே திரியும். அப்படித் தாவும்பொழுது அந்தப் பழமானது அதன் வாயிலிருந்து நழுவிவிடும். அப்படி நழுவிவிட்டால் அது அந்தப் பழத்தின் சுவையை அனுபவிக்க முடியாது. இதைப் போலவே, சிலர் பக்தியனுஷ்டானங்களைக்கொண்டு, உலக வாழ்க்கைக் குரிய காரியங்களிலே மாறி மாறிச் சென்று கொண்டிருப்பார்கள். அதனால் அவர்கள் கொண்ட அனுஷ்டானங்கள் நழுவிவிடும். அப்படி நழுவிவிட்டால், அவற்றால் அடையவேண்டிய பயனை அவர்கள் அடையமாட்டார்கள். இதுதான் குரங்கின் தன்மையுள்ள சாதனை.

எறும்பானது ஒரே எண்ணத்துடன் தனக்கு வேண்டிய ஆகாரத்தை நோக்கி மெல்ல மெல்ல ஊர்ந்து சென்று அதனை யெடுத்துக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு போய்த் தன்னுடைய வளையில் சேர்த்துவிடும். அவ்வாறு சேர்த்த பின்பு அஃது அமைதியாக உட்கார்ந்துகொண்டு அவ் வாகாரத்தை உண்டு அதன் பயனை அடைந்துகொண்டிருக்கும். இதுபோலவே சிலர், ஒரே மனதுடன் அவசரப்படாமல் பக்தியனுஷ்டானங்களை வெகு ஜாக்கிரதையுடன் மெல்ல மெல்லச் செய்து முடிவுக்குக் கொண்டுவந்துவிடுவார்கள். அப்படி அவை நிறைவேறிய பின் அமைதியாக

இருந்துகொண்டு அதன் பயனுகிய ஈசுவரானுக்கிரகத்தை அடைவார்கள். இதுதான் எறும்பின் தன்மையுள்ள சாதனை. மற்ற இரண்டினும் இதுவே சிறந்தது.

767. ஒருவன் எவ்வளவு பாபங்களைச் செய்துகொண்டிருந்த போதிலும் கடைசியில் ஈசுரன் அவனுக்கு நிவிர்த்தி மார்க்கத்தைக் காண்பிப்பா ரென்பது:

குழந்தைகள் அடிக்கடி தங்கள் தேகத்தை அழுக் காக்கிக்கொண்டே யிருக்கும். அப்படி அழுக்காக்கிக்கொண்டாலும் அக் குழந்தைகளின் தாயார் அவைகளை அழுக்குடன் இருக்க விடுவதில்லை. அடிக்கடி குளிப்பாட்டிச் சுத்தமாக்கிவிடுவாள். இச் செய்கையைப்போலவே, ஒருவன் எவ்வளவு பாபங்களைச் செய்துகொண்டிருந்தபோதிலும் கடைசியில் ஈசுரன் அவனுக்குப் பாப நிவிர்த்தி மார்க்கத்தைக் காண்பிப்பா ரென்பது நிச்சயம்.

768. ஈசுரன், ஒவ்வொருவருடைய இயற்கைக்கும் தக்கபடி அவர்களுக்குப் பிரத்தியக்ஷமாவா ரென்பது:

ஒரு இருட்டறையில், உள்ள சிறு வெடிப்பின் மூல மாக வெளியிலிருந்து ஒரு பிரகாசம் அதனுள் நுழையு மானால் அங்கே இருக்கும் மனிதனுக்கு அந்த வெடிப்பள விற்குத் தக்கபடி சிறிது வெளிச்சமே தோற்றப்படும். அந்த அறையிலுள்ள கதவுகளிலும், சன்னல்களிலும் அதிக வெடிப்புக்களும் துவாரங்களும் ஏற்பட்டிருந்தால் அவற்றிற்குத் தக்கபடி அதிக வெளிச்சம் தோற்றும். அந்தக் கதவுகளும் சன்னல்களும் தாராளமாகத் திறந்திருந்

காலோ இன்னும் அதிக வெளிச்சம் தோற்றும். அந்த மனிதன் அந்த அறையை விட்டு வெளியேறி, அந்தப் பிரகாசமுள்ள வெளி நிலத்திலே நின்றால் எங்கும் வியாபகமான முழு வெளிச்சத்தையும் பார்ப்பான். இத் தன்மைகளைப் போலவே, ஈசுர பக்தர்கள் தங்கள் தங்களிடத்தே தோன்றும் அறிவுக்குத் தக்கபடியும், முயற்சிக்குத் தக்கபடியும், சாமர்த்தியத்திற்குத் தக்கபடியும் ஈசுர தரிசனையைக் கொஞ்சமாகவும், அதிகமாகவும், பூரணமாகவும் அடைவார்கள்.

769. ஈசுரனைச் சமீபிப்பவன் முடிவில் அவரிடத்திலே லயமாகிவிடுவா னென்பது:

ஒரு மனிதன், விராட் புருஷனிடத்தே எவ்வளவுக் கெவ்வளவு சமீபிக்கின்றானோ அவ்வளவுக் கவ்வளவு ஈசுரனுடைய அகண்டத் தன்மையின் பிரத்தியக்ஷ நிரூபங்களை அதிகமாகவும் புதியனவாகவும் காண்கின்றான். அதனால் அவன் ஞானத்தை அடைந்து முடிவில் அவரிடத்தில் லயமாகி விடுவான்.

770. ஈசுர தரிசனத்தால் ஆத்மாவுக்கு நலமுண்டாகுமே தவிர தேகத்திற்குண்டாகா தெனல்:

ஒருவனுக்கு ஈசுர தரிசனை யுண்டானால், அவனுடைய ஆத்மா பரிசுத்த ஞானத்தை யடைந்து உயர் கதி பெறும்; அதனால் அவனுடைய தேகத்துக்கு ஒன்று மில்லை. தேகத்தினுடைய நன்மையையோ தீமையையோ பற்றி அவனுக்கு கவலையில்லை. இதனைத் தேவகியின் சரிதையால் உணர

லாம். தேவகி சிறையி லிருக்கும்பொழுது, கிருஷ்ணன், தண்ணிடத்திலே தோன்றப் பெற்று அவருடைய தரிசனத்தை யடைந்தான். அதனால் அவருடைய ஆத்மா பரிசுத்த மடைந்ததே யன்றி அவளடைந்த தேக சம்பந்தமான சிறைவாசம் நீங்கவில்லை. ஆதலால், மனிதன் ஆத்ம லாபம் பெற ஈசுரனைப் பிரார்த்திக்கவேண்டுமே யன்றித் தேக சௌக்கியத்தையாவது உலக சுகத்தையாவது பெறக் கருதிப் பிரார்த்தனை செய்யக் கூடாது.

771. புண்ணிய தீர்த்த ஸ்நானத்தால் ஜீவனைப்பற்றிய பாபம் நீங்குமேயன்றித் தேகத்திலுள்ள குறைவு நீங்கா தெனல்:

ஒருவன் புண்ணிய ஸ்தல யாத்திரை செய்வதனாலும், புண்ணிய தீர்த்தத்தில் மூழ்குவதனாலும் அவனுடைய ஆத்மாவைப்பற்றிய பாவங்கள் நீங்கிப் பரிசுத்த முண்டாகுமே யன்றித் தேகத்திலுள்ள அங்கஹீனம் முதலிய குறைவுகள் நீங்கமாட்டா. இதற்கு உதாரணமாக: ஒரு குருட்டு மனிதன் பரிசுத்தமாகிய கங்கா தீர்த்தத்திலே மூழ்கினான். அதனால் அவனுடைய பாபங்களெல்லாம் நீங்கிவிட்டன. ஆயினும், அவனது குருட்டுத் தன்மை மாத்திரம் நீங்கவில்லை. இதைக்கொண்டே மேற்கூறிய உண்மையை உணர்ந்து கொள்ளலாம்.

772. உண்மைப் பக்தன் சரீர துன்பங்களைக் கவனிக்க மாட்டா னென்பது:

சரீரத்தைப்பற்றிய சுகங்களோ துன்பங்களோ எப்படியிருந்தாலும் உண்மையான ஈசுர பக்தன் அவற்றைப்

பற்றிக் கவனிக்கமாட்டான். ஆனால், ஞானம், ஈசுர பக்தி இவற்றினுடைய சக்திகளையும் பெருமைகளையும் எந்த நிலையிலும் தவறவிடமாட்டான். அந்தப் பெருமைகள் எப் பொழுதும் அவனிடத்தே மங்கமாட்டா. பாண்டவர்கள் எவ்வளவோ கடோரமான கஷ்டங்களை யெல்லாம் தாங்கினார்கள். அப்படித் தாங்கியும்கூட அவர்கள் அவற்றை இலட்சியம் செய்யவில்லை. தங்கள் ஞான ஒளியையே எப் பொழுதும் இடை விடாமற் பற்றியிருந்தார்கள். இதனாலேயே மேற் கூறிய உண்மையை உணர்ந்துகொள்ளலாம்.

773. வியாதி வந்தாலும் அதைக் கவனிக்காமல் மனம் ஆனந்த நிலையையே பற்றியிருக்கவேண்டு மென்பது:

வியாதியானது சரீரத்தைப்பற்றித் தனது வேலையைச் செய்துகொண்டிருந்தாலும், சரீரமானது அதனை உணர்ந்து கொண்டிருந்தாலும், மனமானது எப்போதும் ஈசுர தியானத்தைச் செய்து ஆனந்தத்திலேயே இருக்கவேண்டும்.

774. ஜகன்மாதா சொரூபமான ஸ்திரீ இன்னவ ளென்பது:

தனது புருஷனுடன் கூடி வசிக்கும்பொழுதுங் கூட காதலை நீக்கியிருக்கின்ற ஸ்திரீயே உண்மையில் ஜகன் மாதா ஆவள்,

775. எல்லாவற்றையும் பர வஸ்துவினுடைய வெவ்வேறு தோற்றங்களாகக் கொள்ள வேண்டு மென்பது:

பிரக்ஞானமானவையும், பிரக்ஞை யுள்ளவையு மான ஸ்வப்பனம், ஆழ்ந்த நித்திரை, பிரஹ்மம், ஜீவன்,

கிருஷ்டி, நான் என்னும் இவைகளே யெல்லாம் பரவஸ்துவி னுடைய வெவ்வேறு நிலைமைகளாக அல்லது தோற்றங்க ளாக ஒப்புக்கொள்ளவேண்டும். இல்லையேல் பூரணத் துக்குக் குறைவு கேர்ந்துவிடும்.

776. ஒருவன் ஜகன்மாதாவின் கிருபையைப் பெற்று லுங் கூடத் தொழிலைச் செய்துதான் ஜீவிக்கவேண்டு மென்பது:

ஒரு காலத்திலே ஜகன்மாதாவினிடத்தில் மிகுந்த பக்தியுள்ள ஒரு விறகுவெட்டியானவன், அந்த ஜகன் மாதாவினுடைய தரிசனம் கிடைக்கப்பெற்று அவருடைய கிருபைக்குப் பாத்திரமானான். ஆயினும், அவனுடைய விறகு வெட்டும் தொழிலானது அவனை விட்டு நீங்கவில்லை. அவன் அத் தொழிலைக் கொண்டே ஜீவித்து வந்தான். இதனால், ஈசுர கிருபையைப் பெற்றவர்களும் கூடத் தங்கள் ஜீவனத்தின் பொருட்டு ஒரு தொழிலைச் செய்து கொண் டிருக்கவேண்டு மென்ப துணரப்படும்.

777. ஈசுரனைக் காண்பதற்கு முதலில் விக்கிரக ஆராதனை அவசிய மென்பது:

ஒரு கட்டிடத்தைக் கட்டி முடிப்பதற்கு முதலில் சாரம் அவசியப்படுகின்றது. அந்தக் கட்டிடம் கட்டி முடி ந்த பின்பு அந்தச் சாரம் அவசியமில்லாமற் போய்விடுகின் றது. இதைப்போலவே ஈசுரனைக்காண முயற்சித்துப் பக்தி செலுத்துபவர்க்கு முதலில் விக்கிரக ஆராதனை அவசிய மாம். ஈசுர தரிசனை யுண்டான பிறகு அஃதவசியமில்லை.

778. கோபம் விவேகத்தை அழித்துவிடு மென்பது:

கோபமானது தமோகுணத்தின் அடையாளமாகக் கிளம்புவது; அது மனிதனுடைய விவேகத்தையும் அழித்துவிடும். அனுமான் மிகுந்த கோபங்கொண்டு இலங்கையில் கெருப்பிடுங் காலத்தில், அந்தக் கோபாவேசத்தினால் தாம் வைக்கும் கெருப்பு, 'சீதையிருக்கு மிடத்தையும் எரித்துவிடுமே' என்ற யோசனையே யின்றி கெருப்பைக் கொளுத்திவிட்டார். இந்த நிலையில் அவர் விவேகத்தையும் இழந்துவிட்டார். இதைக்கொண்டே கோபம் அறிவையும் கெடுத்துவிடு மென்பதை நன்குணர்ந்துகொள்ளலாம்.

779. ஈசுரனைச் சரணடைந்தவனுக்குப் பக்தி மார்க்கத்தில் இடையூறு நேராதெனல்:

ஈசுரனிடத்திலே சரணாகதி அடைந்தவன், செல்லும்போது அவனுடைய அடிகள் ஒருபோழுதும் இடறமாட்டாது. அதாவது, அம் மார்க்கத்தில் அவனுக்கு இடையூறு உண்டாகமாட்டாது.

780. சூக்ஷ்ம உண்மைகளைக் காணக் கூடியவர்கள் சிலரே என்பது:

சூக்ஷ்மத்தின் உண்மைப் பொருளைக் கண்டுபிடிக்கக் கூடியவர்கள் சிலரே. அவர்களுக்குள்ளும் உலகத்தோரால் தீயோர் என்று கூறப்படுகின்ற சிலரும் இருத்தல்கூடும்.

781. ஈசுரனை அடையவேண்டு மென்ற விருப்புடையவர்கள் ஒரு முறையாவது அந்த ஈசுரனுகிய சமுத்திரத்திலே மூழ்கித் தீரவேண்டு மென்பது:

உலகினர் கடவுளை எப்படி மதிக்கிறார்களென்றால், குழந்தைகள், சிறு பருவத்தில் விளையாடித் திரியும்போது

மதிப்பதுபோல் மதிக்கிறார்கள்: எப்படியெனில், குழந்தைகள் விளையாடுங் காலத்தில் எதேனுமொரு காரியத்தை உறுதிப்படுத்திச் சொல்லும் பொருட்டு சகசத் தன்மை இன்னதென் றுணராமலே, "சகசன்மீது ஆணைப்படிக்கு" என்று கூறிச் சத்தியம் பண்ணுகிறார்கள். இதைத் அவர்களுடைய பெரியோர்கள் சொல்லக் காங்கள் கேட்டபாடப்படி சொல்லுகின்றார்களே யன்றி இதன் உண்மை அறிந்து சொல்லவில்லை. இவர்களைப் போலவே, சகசத் தன்மையை உணராத ஓர் உலகினனும், மெத்த ஆடம்பரத்துடன் சில சோம்பேறிகளுடன் கூடி ஒரு தோட்டத்திற்குட் புகுந்து, தன்னுடைய பாணத்தடியைச் சுழற்றி உல்லாசமாகக் கூச்சலிட்டு அங்குள்ள ஒரு புஷ்பத்தைப் பறித்துக் கையில் வைத்துப் பார்த்து, "ஆ! சகசர் எவ்விதமான அழகில் இந்தப் புஷ்பத்தைச் சிருஷ்டித்திருக்கிறார்!" என்று கூறுகிறான். உலகத்தில் பலரும் சகஜமாக இப்படிச் சொல்வதைக் கேட்டு இவனும் இதைச் சொல்கின்றானே யன்றி, சகசன் தன்மையை உணர்ந்து சொல்லவில்லை. இது, நன்றாய்ப் பழுக்கக் காய்ச்சிய ஒரு இரும்புத் துண்டில் ஒரு துளி கண்ணீர் விழுந்து அப்பொழுதே அதன் அம்சம் சிறிதுமின்றி மறைந்துபோவது போல அந்த நிமிஷத்தில் அவனுடைய வாக்கிலே தோன்றி மறைந்துபோகக் கூடிய குணமாம். இதனால் ஒருபயனும் ஏற்படமாட்டாது. சகசரிடை அடையவேண்டு மென்ற விருப்ப மிருந்தால், அந்த சகஜகிய சமுத்திரத்திலே ஒரு முறையாவது அமிழ்ந்திக் தீரவேண்டும். அதாவது, மன

முழுவதையும் அவர்பாற் செலுத்தித் தன்னை மறந்து அவரைச் சிந்திக்கவேண்டும். அவ்வாறு செய்தாற்றான் ஈசுவரனுக்கிரகம் முண்டாகும்.

782. ஆத்மாவை வர்ணிக்கும் பொருட்டுக் கொள்ளும் கர்வத்தால் தோஷமில்லை யென்பதும், ஆத்மாவைத் தாழ்மைப்படுத்துவது தாழ்மையாகா தென்பதும்:

ஆத்மாவின் மகிமையைப் பற்றி வர்ணிக்கும் விஷயத்தில் கொள்ளும் கர்வமானது கர்வமாகாது. ஆத்மாவைத் தாழ்மைப்படுத்துவதால் அஃதொரு தாழ்மை யாகாது.

783. பிச்சை இழிவென்பது:

மனிதன் பிச்சை யெடுத்தலினாலே சிறியவ னாய்விடுவான். விஷ்ணுமூர்த்தியே, பலிச் சக்கரவர்த்தியினிடத்தில் பிச்சை யெடுக்கச் சென்ற காலத்தில் அத் தொழிலுக்குத் தக்கபடி தம்முடைய வடிவத்தைச் சுருக்கி வாமன ரூபத்துடன் சென்றார். இதனாலேயே அவர், பிச்சைத் தொழிலானது, அதனை யுடையாரைச் சிறியவ ராக்கி விடு மென்பதை விளக்கிக் காட்டியிருக்கின்றார். ஆதலின், மனிதர்க்குப் பிச்சைத் தொழில் இழிவா மென்பதை இதன் மூலம் உணர்ந்துகொள்ளலாம்.

784. சிவாம்சம், விஷ்ணுவாம்சம் ஆகியவற்றைப் பெற்றுப் பிறக்கும் மனிதரின் இயற்கைகள்:

ஒரு மனிதன் சிவாம்சம் பெற்றுப் பிறப்பானாலும், ஞானியாய் விடுவான். அவனுடைய இடைவிடாத வாசனை

யானது "பிரஹ்மைவ சத்தியம், ஜகன் மித்தியா" என்ற ஞானத்தினிடமாகவே யிருக்கும். அந்த மனிதன் விஷ்ணு லாம்சம் பெற்றுப் பிறந்தாலோ, அவனிடத்தே பக்தியும் சிரத்தையும் ஒருபொழுதும் குறையாமல் பெருகியிருக்கும். அந்தகைய அவன்பால் யுக்தி அல்லது தார்க்கிக ஞானம் பலமாகப் பெருகிச் சொற்பக் காலத்துக்குப் பக்தியும் சிரத்தையும் குறைவுபட்டிருந்தாலும், ஒரு காலத்தில் குறைந்திருந்த கோரைப் புல்லானது மற்றொரு காலத்தில் விருத்தி யடைவதுபோல, காலக்கிரமத்தில் எளாளமாகப் பெருகி விருத்தி யடைந்துவிடும்.

785. ஆத்மாவுக்குப் பந்த மில்லை யென்பது:

"ஆத்மாவுக்கு அணுவளவும் பந்த மில்லை" என்று வேதாந்திகள் கூறுகின்றார்கள். புகையினால் சுவரைத்தான் அழுக்காக்க முடியும்; ஆகாயத்தை ஒன்றும் செய்ய முடியாது. இதைப்போலவே, ஆத்மாவானது எப்பொழுதும் பாபத்தினாலாவது, புண்ணியத்தினாலாவது துக்கத்தினாலாவது, சுகத்தினாலாவது பாதிக்கப்படுவதில்லை. இவைகளால், சரீரத்திற்கே இன்ப துன்பங்களுண்டாம். ஆதலால், சரீரத்தில் பற்றுள்ளவர்களே இவற்றை அனுபவிப்பார்கள்.

786. குழந்தைகளின் நம்பிக்கை போன்ற நம்பிக்கையை ஈசுரனிடம் வைத்தால்தான் அவரை அடைய முடியு மென்பது:

தாயானவள், பிள்ளைக்கு ஒருவனைச் சுட்டிக் காட்டி, "இவன் உனது சகோதரன்" என்று சொன்னால், அக்

குழந்தை, அவனைச் சகோதரன்தானென்று நம்பிக்கொள்ளும். இன்னும் அவன், அக் குழந்தைக்கு ஓரிடத்தைச் சுட்டிக் காட்டி, "அங்கே பூச்சாண்டி யிருக்கிறான்; ஆதலால், நீ அவ்விடத்திற்குப் போகாதே" என்று சொன்னால் அக் குழந்தை அதை நிச்சயமாக நம்பிக்கொள்கிறது. இத்தகைய நம்பிக்கையை, மனிதர் ஈசுவரன்பால் வைக்கவேண்டும். பெரியோர்களாவது, சாஸ்திரங்களாவது ஈசுவர லக்ஷணங் களைப்பற்றிக் கூறினால், அவற்றை உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும். இத்தகைய நம்பிக்கை கொள்ளாத பக்ஷத்தில் ஈசுவரனை அனுபவத்தில் அடைதல் முடியாது. இத்தகைய நம்பிக்கை யுடையவர்களிடத்திற்றான் ஈசுவரனுக்கு இரக்கமுண்டாகும். எடுத்ததற்கெல்லாம் கணக்கிடும் உலக மனத்தை வைத்துக்கொண்டு எவரும் ஈசுவரனை அடைதல் முடியாது.

787. அத்வைத ஞானத்தை அடையும் மார்க்கம்:

உலகத்தில் அத்வைத ஞானமே மிகச் சிறந்தது. இதனை ஒருவன் அடையவேண்டு மானால், "நான் பூஜகன், ஈசுவரன் பூஜ்யன்" (அதாவது: நான் பூஜிக்கின்றவன், ஈசுவரன் என்னால் பூஜிக்கப்படும் வஸ்து) என்ற எண்ணத்துடனே ஈசுவரபக்தி யனுஷ்டானத்தை ஆரம்பித்துச் செய்து வரவேண்டும். இத்தகைய பக்தியை அனுஷ்டித்து வந்தால் பின்னர் அவன், அத்வைத ஞானத்தைச் சுலபமாக அடைந்து விடுவான்.

788. ஜீவன்முத்தர்களிடத்தும் சிறிது மாயை இருக்கு மென்பது:

ஜீவன்முக்தர்களிடத்திலும் சிறிது மாயை இருந்து கொண்டுதானிருக்கும். அவர்கள் பரிபூரணமாகப் பிர

ஏற்மானுபூதியை அடைந்துவிட்டால் அவர்களுடைய சரீர மானது இருபத்தொரு நாட்களுக்குப் பிறகு விழுந்து விடும். அதன்மேல்தான் மாயை பூரணமாக நீங்கும்.

789. மனத்தின் ஏழு ஸ்தானங்களும் அவற்றின் செய்கைகளும்:

"சரீரத்தில் மனமானது வசிப்பதற்கு ஏழு ஸ்தானங்கள் உண்டு" என்றும், "அவற்றில் முறையே அந்த மனம் வசிக்கும்" என்றும், "அந்த அந்த ஸ்தானங்களுக்குத் தக்கபடி மனத்தின் செய்கை வேறுபடும்" என்றும் வேதங்கள் கூறுகின்றன: மனமானது வசிக்கும் அந்த இடங்களில், 1-வது இலிங்கம், 2-வது குஹ்யம், 3-வது நாபி. மனமானது உலக விஷயங்களைப்பற்றிச் சிந்திக்கும்பொழுது இந்த மூன்றிடங்களிலும் வசிக்கும். இந்த நிலைகளில் அந்த மனம், தன்னுடைய உயர்ந்த பார்வைகளையெல்லாம் இழந்து விடும்; பெண்ணிடத்தும் பொன்னிடத்தும் உள்ள ஆசைகளிலே அதிகமாக மூழ்கிக் கிடக்கும்.

4-வது ஸ்தானம் இருதயமாம். மனமானது இந்த ஸ்தானத்துக்குக் கிளம்பிவிட்டால் சித்தின் பங்களிடத்து ஒருபொழுதும் இறங்கமாட்டாது. அப்பொழுது மனிதனுக்கு ஆத்ம ஜாக்கிரதை யுண்டாகும். மனிதன் ஒருவிதமான திவ்ய ஜோதியை எங்கும் பார்த்து அதனிடத்தே பயமும் பக்தியும் அடைந்தவனாகிறான்.

5-வது ஸ்தானம் கந்தம் (கழுத்தடி) ஆகும். மனமானது இந்த ஸ்தானத்துக்கு வந்துவிட்டால் அஞ்ஞான

மெல்லாம் ஒழிந்துவிடும். அப்பொழுது மனிதன் ஈசுவர னைத் தவிர வேறெதையும்பற்றிக் கேட்கவோ பேசவோ பிரியப்படமாட்டான். அவன், எவனேனும் ஈசுவரனை விட்டு இதர விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண் டிருக்கக் கண் டால், உடனே அவர்களை விட்டு நீங்கிவிடுவான்.

6-வது ஸ்தானம் நெற்றியாம். மனமானது இந்த ஸ்தானத்தை அடைந்தால், மனிதன் அல்லும் பகலும் ஈசுவரனுடைய திவ்ய தரிசனத்தையே பார்ப்பான். அப் போது 'நான்' என்னும் பிரக்ஞை சிறிது இருக்கும். அந்த விசேஷமான தோற்றத்தைக் கண்டு அவன், ஆனந் தப் பித்துப் பிடித்து, அவ் வானந்தத்தை அடைதற்கு வேகமாகச் செல்வான். அப்படிச் சென்றாலும் அதைப் பூரணமாக அடைய முடியாது. ஒருவன் கண்ணாடிக்குள் விருக்கும் வெளிச்சத்தை அதற்கு வெளியில் தொடுவது போல, அவன் அந்த ஆனந்தத்தை முழுவதும் அடையா மல் சற்று தூரத்தில் நின்று அடைகிறான். பூரணமாக அடைவதற்கு இடையில் ஒரு தடை யிருக்கின்றது. அது மாயை: மனமானது அடுத்த ஸ்தானத்திற்குச் சென்றால் அந்த மாயை நீங்கிப் பிரஹ்மானந்த முழுதும் கித்திக்கும்.

7-வது ஸ்தானம் சிரசாம். மனமானது அந்த ஸ்தான த்தை அடைந்தவுடனே மனிதன் சமாதியிற் கூடிவிடுவான். அப்போது அந்த ஞானி பிரஹ்மத்தை அனுபூதியில் அடைவான். அவன் எப்பொழுதும் பிரக்ஞையற்றவனாக வே யிருப்பான். அவனால், எதையும் உண்ண முடியாது;

அவன் வாயில் பாலை ஊற்றினால் அது வெளியில் வந்து விடும். இந்த நிலையிலே அவனுடைய சரீரமானது நெடு நாள் இருக்கமாட்டாது; இருபத்தைந்து நாட்களுக்குப் பிறகு அச் சரீரம் அழிந்துவிடும்.

790. சமாதிநிலை அடைந்தபின் கர்மங்கள் கழிந்துவிடுகின்றனவென்பது:

ஈசுரனைப்பற்றி மனிதர் பக்தி செய்யுங் காலத்தில் பகிரங்க உபாசனைகளைச் செய்துகொண்டும், தூபஞ் மணிகளை எண்ணி ஜபம் முதலியவைகளைச் செய்துகொண்டும் ஆரம்பத்தில் பெருங் கோஷ்டமாக அதற்குரிய காரியங்களைச் செய்து வருவார்கள். பக்திச் சுபை கூடும்போது, ஈசுரனுடைய பெயர்கள், சாமார்த்தியங்கள், குணங்கள் முதலியவற்றைப்பற்றிப் பேசி, "இதோ இவ்வாத பாடி வருகிறார்" என்று சந்தோஷமாகக் கூவுவார்கள். ஈசுரன் அவர்களுக்குள்ளே வந்துவிடுவாரானால் அந்தப் பேச்சுக்களெல்லாம் நின்றுவிடும்; அவர்கள் எவ்வளவுக் கெவ்வளவு ஈசுரனைச் சமீபிக்கின்றார்களோ அவ்வளவுக் கவ்வளவு அவர்களுடைய கோஷ்டமும் குறைந்துவிடும். அப்படி அவர்கள் ஈசுரனைச் சமீபித்துச் சமாதி நிலையை அடைந்து விடுவார்களானால் அவர்களிடத்தே மகிமை பொருந்திய ஈசுர காமத்தை ஸ்தோத்திரம் செய்தல் முதலியவைகளும் கூட நின்றுவிடும். இவ்வளவுகாலத் தொழில்கள் முதலிய மற்ற கர்மங்களும் ஒழிந்துபோம். முடிவில் அவர்கள் ஈசுரனோடு இலயப்பட்டு விடுவார்கள்.

791. அகங்காரமுள்ள விடத்தில் ஈசுரன் தோன்ற மாட்டா ரென்பது:

ஒருவன் ஒரு காரியத்தைப்பற்றி எவ்வளவு முயற்சித்தாலும் ஈசுர கிருபை யில்லாவிட்டால் அதில் வெற்றி பெற முடியாது; ஈசுரனையும் அடைய முடியாது. ஆதலால், எதற்கும் ஈசுரனுடைய கிருபையை முதலில் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். ஆனால், அவருடைய கிருபை அவ்வளவு சுலபமாக உண்டாகமாட்டாது. மனிதன் தன்னுடைய ஹிருதயத்திலிருந்து அகங்காரத்தை அடியோடு ஒழித்துவிடவேண்டும். அப்படிச் செய்தாற்றான் ஈசுர கிருபை யுண்டாகும். 'நான் கர்த்தா' என்னும் அகங்காரம் இருந்தால் ஈசுரனை ஒருபொழுதும் பார்க்க முடியாது. ஓர் உக்கிராண அறையில் ஒரு வேலைக்காரன் ஏற்பட்டிருந்தால் அதன் சொந்தக்காரன் அங்குப் போய்க் காரியம் பார்க்கவேண்டிய அவசியம் அவனுக்கு உண்டாகாது. அதனால் ஒருவன், அந்தச் சொந்தக்காரனிடம் சென்று உக்கிராண அறையில் உள்ள எதையாவது பெற விரும்பினால், அந்தச் சொந்தக்காரன், "உக்கிராணத்தில் காரியஸ்தர் ஒருவர் இருக்கிறார்; அவரிடத்தில் போய் அதைப் பெற்றுக் கொள்; நான் அங்கே வரவேண்டிய அவசிய மில்லை," என்று சொல்லிவிடுவான். இதைப்போலவே, தானே கர்த்தர் என்னும் அகங்காரம் இருக்கும் ஹிருதயத்திற்கு ஈசுரன் எழுந்தருளமாட்டார்; அவ்விருதயத்தையுடையவனுக்குக் கிருபை செய்யவு மாட்டார்.

792. ஈசுவரன், அவருடைய கிருபையினுலேயே மனிதர்க்குப் பிரத்தியக்ஷமாவா ரென்பது:

ஈசுவரன், தம்முடைய கிருபையினுலேயே மனிதர்க்குப் பிரத்தியக்ஷ மாகிறார். அவரே ஞான சூரியன். அவருடைய ஜோதியின் ஒரே கிரணம் இவ் வுலகத்தைச் சின்மயமாக்கி யிருக்கின்றது; அதனுலேதான் மனிதர் ஒருவரை யொருவர் உணர்ந்துகொண்டு பலவித அறிவுகளை அடைந்திருக்கின்றார்கள். அவர், தம்முடைய ஒளியைத் தமது முகத்தின்மீது திருப்பிக்கொண்டால்தான் மனிதர் அவரைத் தரிசிக்க முடியும்.

793. ஈசுரனுடைய ஞான வொளியினுலேயே அவரைப் பார்க்க முடியு மென்பது:

இரவிலே போலீஸ்காரன், தன்னுடைய போலீஸ் லாந்தருடனே நகர் முழுதும் சுற்றிவருகிறன். அப்படிச் சுற்றி வந்தாலும் எவரும் அவனைப் பார்க்க முடியாது. ஆனல், அந்தப் போலீஸ்காரன், தன்னுடைய கை வெளிச்சத்தினல் எல்லோரையும் பார்க்க முடியும்; பின்னும், மற்ற மனிதர்கள் அவ் வெளிச்சத்தின் உதவிகொண்டு ஒருவரை யொருவர் பார்த்துக்கொள்ளவும் முடியும். அந்தப் போலீஸ்காரனுடைய முகத்தை எவரேனும் பார்க்க விரும்பினல், அவனே நோக்கி, "ஐயா! நான் தங்களுடைய முகத்தைப் பார்க்கவேண்டும்; ஆதலால், தங்கள் கை வெளிச்சத்தைத் தங்களுடைய முகத்துக்கு நேரே திருப்பிக் காட்டுங்கள்" என்று கேட்கவேண்டும். அவன் அப்படியே

காட்டுவான். அதனால் அவனுடைய முகத்தைப் பார்த்துக் கொள்ளலாம். இதைப்போலவே, ஈசுவரன் இந்த மாயை சூழ்ந்த உலகில் ஞான வொளியாகிய தம்முடைய கை விளக்குடன் எங்கும் வியாபகமாயிருந்து அந்தப் பிரகாசத்தால் சகலரையும் பார்த்துக்கொள்கிறார். ஆனல், மனிதர்கள் அவரைப் பார்க்கவேண்டுமானல், அவரை நோக்கி, "ஏ ஈசுவரா! நாங்கள் உன்னைப் பார்க்க விரும்புகிறோம்; ஆதலால், உன் ஞான வொளியை உன்மீதே திருப்பி உன்னுடைய உண்மைச் சொரூபத்தை எங்களுக்குக் காட்டுவாயாக" என்று பிரார்த்தனை செய்யவேண்டும்; அவ்வாறு செய்தால் அவர் மனதிரங்கி, தம்முடைய ஞானப் பிரகாசத்தைத் தம்மீது திருப்பிக் காட்டுவார்; அதன் மூலம் அவரைத் தரிசிக்கலாம்.

794. மனிதன், தன்னுடைய ஹிருதயத்திலே ஞான விளக்கை ஏற்றிக்கொள்ளவேண்டுமென்பது:

ஒரு வீட்டிலே விளக்கில்லாவிட்டால், அது வறுமைக்கு ஓர் அறிகுறியாகும். அதைப்போலவே, மனிதனுடைய ஹிருதயத்திலே ஞானப் பிரகாசம் இல்லாவிடில் அது விவேகசூனியத்திற்கு ஓர் அறிகுறியாகும். ஆதலின், விவேகத்தோடு கூடிப் பிரமானந்தத்தை அடைய விரும்புகிறவன், ஹிருதயத்தில் ஞானமாகிய விளக்கை ஏற்றிக் கொள்ளவேண்டும். அவ்வாறு ஏற்றிக்கொண்டு பிரஹ்ம மாயியின் முகத்தைப் பார்க்கவேண்டும்.

795. பொய் வேடம் தீமை பயக்கு மென்பது:

பொய்யான எந்தக் காரியமும் தீதே; பொய்யுடை அணிதலும் தீதே. சாதுவின் உடையைத் தரித்துக்கொண்ட ஒருவனுக்கு அதற் கேற்ற பரிசுத்த மனம் இருக்க வேண்டும். அங்ஙனமில்லாவிடின் அந்தப் பொய் வேடமானது அவனை அழித்துவிடும். இப்படி இது தீங்குடையதாயிருந்தும் சிலர் பொய் வேடதாரிகளாய் நடிக்கிறார்கள்; அவர்கள் அத்தகைய பொய் விஷயத்தைச் செய்வதற்கும், பொய் கூறுவதற்கும் அஞ்சுவதில்லை. அவர்கள் தீங்கடைவது நிச்சயம்.

796. யோகமாயை இன்ன தென்பது:

ஒரு பக்தன், "ஜகன்மாதா என் யோகமாயை யென்று சொல்லப்படுகிறாள்?" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வினவினான். அதற்கவர், "யோகமாயை என்பதற்கு ஆதி புருஷனுடையவும் பிரகிருதியுடையவும் சேர்க்கை என்று பொருள்; நீ பார்ப்பதெல்லாம் அவ் விரண்டினுடைய சேர்க்கையே; காளி சிவன்மீது ஏறி நின்றுகொண்டிருக்கும் உருவமாகிய சிவகாளி விக்கிரகத்தை நீ பார்த்திருப்பாய்; அந்த உருவத்தில் சிவன் ஒரு பிணம்போலக் கீழே வீழ்ந்து கிடக்கிறார்; காளி சிவன்மீது ஏக திருஷ்டி செலுத்தி நின்றுகொண்டிருக்கிறாள். இந்தத் தோற்றம் மேற்கூறிய புருஷ பிரகிருதியின் சேர்க்கைக் கதிகுறியாம். புருஷர் சலனமற்றவர்; அதனால்தான் சிவன் பிணம்போல அசேதனமாய் வீழ்ந்து கிடக்கிறார். பிரகிருதி அவருடன்

சேர்ந்து சிருஷ்டி, திதி, சம்ஹாராதி சகல தொழில்களை யும் செய்துகொண்டிருக்கிறது. இராதையும், கிருஷ்ண னும் ஒன்றுகச் சேர்ந்திருக்கும் உருவமாக விளங்கும் விக்கிரகமும் இந்தத் தாத்பரியத்தைக் கொண்டதுதான்" என்று கூறினர். இதனல் யோகமாயையின் தன்மை இன்னதென் றுணரலாம்.

797. மாயை இன்ன தென்பதும், தயை இன்ன தென்பதும்:

மாதா, பிதா, சகோதரன், சகோதரி, மனைவி, குழ ந்தை, ஆகிய பந்துக்களிடத்தே மனிதனுக்குள்ள பற்று தலே மாயையாம்; மனிதன், ஜீவப் பிராணிகள் எல்லா வற்றையும் சமமாகப் பாவித்து அவற்றினிடத்து அன்பு செலுத்தலே தயை யென்று சொல்லப்படும்.

798. மனிதனுக்குச் சத்தியத்தில் சிரத்தை யுண்டா னுல் அவன், ஈசுரனை அனுபவத்தில் அடைவது நிச்சய மென்பது:

மனிதனுக்குச் சத்தியத்தினிடத்திலே மிகுந்த சிரத் தை யுண்டானுல், அவன் ஈசுரனை அனுபவத்தில் அடை வது நிச்சயம். அவனுக்கு அந்த உண்மையினிடத்தில் மதிப்பில்லாவிட்டால் அவனைச் சார்ந்த ஒவ்வொன்றும் மெல்ல மெல்ல அழிக்கப்பட்டுவிடும்.

799. சத்தியமே ஒருவனுக்கு எப்போதும் சொந்த மான தென்பது; ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூற்று:

நான் சத்தியத்தை உறுதியாகப்பற்றி, ஈசுவரரு தியை அடைந்த பின்னர், கையில் புஷ்பங்களை யெடுத்

துக்கொண்டு ஜகன்மாதாவை நோக்கி, "ஏ தாயே! இதோ என்னிடமுள்ள உன்னுடைய ஞானத்தையும் அஞ்ஞானத்தையும், பரிசுத்தத்தையும் அசுத்தத்தையும், நன்மையையும் தீமையையும், புண்ணியத்தையும் பாவத்தையும், திரும்ப எடுத்துக்கொள்; பரிசுத்தமான பக்தியை மாத்திரம் எனக்குக் கொடு" என்று கூறினேன். ஆனால், 'உன்னுடைய சத்தியத்தை எடுத்துக்கொள்' என்று கூற என்னால் முடியவில்லை. எனென்றால், மற்றவைகளையெல்லாம் என்னால் அவளிடம் கொடுத்துவிட முடிந்தது; சத்தியத்தை மாத்திரம் கொடுக்க முடியவில்லை. இதனால் ஒருவனுக்குச் சத்தியமே எப்பொழுதும் கைவிடாத உறுதிப்பொருளென்பது விளங்கும்.

800. ஈசுரானுபூதியடைந்ததற்குள்ள முக்கிய அடையாளம்:

மகா வாயுவானது, திடீரென்று விளம்பிச் சிரசுக்குப் போகிறதோ, ஈசுரானுபூதியடைந்ததற்குள்ள அடையாளங்களுள் முக்கியமானதாம். இந்தநிலையை உண்டானபொழுது மனிதன், சமாதியடைந்து ஈசுவரசாயுஜ்யம் பெறுகிறான்.

801. "ஈசுரனே எல்லாமாயிருந்தால் பாபமும் இல்லை, புண்ணியமும் இல்லையே?" என்ற கேள்விக்குத் தக்க விடை:

ஒருவர், ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்தில், "ஈசுரனே எல்லாமாயிருந்தால் பாபமும் இல்லை, புண்ணியமும் இல்லையே?" என்று வினவினர். அதற்கவர், "அப்படி அல்ல

இல்லாமற் போகும் காலமும் உண்டு, இருக்கும் காலமும் உண்டு. இவற்றைப் பகுத்துணர்ந்து எதையும் பேசவேண்டும்; எண்மூடித்தனமாகப் பேசக் கூடாது. அந்த ஈசுவன் நம்மிடத்தில் அகங்காரத்தை வைத்திருக்கும்பொழுது, இறைவு உண்டு என்ற எண்ணத்தையும், பாப புண்ணியங் களைப்பற்றிய பிரக்ஞையையும் வைத்திருக்கிறார். அகங் காரத்தை அடியோடு அழித்துவிட்டபொழுது நாம் நன் மை தீமை ஆகிய எல்லாவற்றையும் கடந்து சென்றுவிடு கின்றோம். அந் நிலையில்தான் பாபமும் இல்லை, புண்ணியமும் இல்லை. நம்மிட முழுவதும் ஈசுரத்துவமே விளங்கிக்கொண் டிருக்கும். இவ்வாறு ஒரு மனிதன்; 'நான்' என்ற அகங் காரம் நீங்கி ஈசுரனை அனுபவத்தில் அடையாதவரையில் அவனிடத்தில், துவைத திருஷ்டியும், நன்மை தீமை யென்ற எண்ணமும் இருப்பது நிச்சயம். நீ அகங்காரத்தை அடியோடு நீக்கிவிட்டதாகவும், நன்மை தீமைகளைச் சமத் தலமாகப் பார்ப்பதாகவும், ஈசுரன் ஆக்ஞாபித்ததையே செய்வதாகவும் நீ வாயினால் மாத்திரம் சொல்வாய்; இத் தகைய குணங்கள் உன்னிடத்தில் இருப்பது மாத்திரம் நிச்சயமில்லை. நீ இரகசியமாகச் சில தீய செய்கைகளைச் செய்துகொண் டிருப்பாய்; அப்பொழுது உன்னுடைய மனச் சாட்சி உன்னைக் குத்த ஆரம்பிக்கும். நீ இத்தகைய நிலையி லிருந்துகொண்டு, "எல்லாம் ஈசுரனே" என்றும், "பாப புண்ணியங்களில்லை" என்றும் பேசுவது கூடாது; உண்மையாக உன்னிடத்தே அகங்காரம் நீங்கி ஈசுரானுக் கிரகம் உண்டாகும்போது சமத்துவநிலை உண்டாகும்"

என்று கூறினர். இதனால், இன்ன நிலையில்தான் பாப புண்ணியங்கள் இல்லை யென்பதையும், இன்ன நிலையில் உண்டென்பதையும் உணர்ந்து கொள்ளலாம்.

802. எல்லோரிடத்தும் அன்பு செலுத்தவேண்டு மென்பது:

உண்மையான ஆனந்தத்தை அடைய விரும்பிய மனிதன், ஜனங்களுடனே கலந்துகொள்வதற்கு வெளியிற் சென்றால் எல்லோரிடத்தும் அன்பு செலுத்தவேண்டும்; அவர்களுடன் ஒன்றுகித் தாராளமாகக் கலந்து கொள்ள வேண்டும். வேறு மார்க்கத்தை யுடையவர்களைப் பார்த்து, முகத்தைச் சுளித்துக்கொண்டு, "ஓ இவர்கள், ஈசனை வடிவமுடையவரென்று நம்புகிறார்கள். அவருடைய நிர்க்குணத் தன்மையிலே இவர்களுக்கு நம்பிக்கை யில்லை. இவர்கள் கிறிஸ்தவர்கள்; இவர்கள் முஹம்மதியர்; இவர்கள் இந்துக்கள்" என்று கூறி வெறுக்கக் கூடாது. ஈசுவரன் தம்மைப்பற்றி எவ்வளவு தூரம் அறியும்படி ஒவ்வொருவனையும் ஏற்படுத்தி யிருக்கின்றாரோ அவ்வளவு தூரம்தான் ஒவ்வொருவனும் அவருடைய தன்மையை உணர்வான்; ஒவ்வொருவனும் தன் தன் அறிவுக் கெட்டிய வரையில் ஈசனை அறிந்திருக்கின்றான் என்று பலரையும் பார்க்கும்போது தன் மனதைச் சமாதானப்படுத்திக்கொண்டு எவரிடத்தும் சிநேகத்துவமே பாராட்டவேண்டும். இன்னும் மனிதர்கள் வெவ்வேறு வாசனை யுடையவர்களென்பதையும் உணர்ந்து அவர்களிடத்தே துவேஷம் பாராட்டாது கலந்துகொள்ளவேண்டும். இப்படி யிருக்

தால் அவன் தன் ஹிருதயத்தில் உண்மையான ஆத்மா வைச் சந்தித்துக்கொண்டு அமைதியுடனும் ஆனந்தத்துட னும் இருப்பான்; அங்ஙனமின்றிப் பலருடனும் குரோதம் பாராட்டிவாழ்ந்தால் அதனால் மனவாதனை யடைந்து உண் மை ஞானத்தை யிழந்து ஆத்ம நிலையை உணராமல் அல் லற்படுவான்.

803. ஈசுராநுபூதி யடைதற்கு முயற்சி அவசியமா மென்பது:

ஹல்தர் குளத்திலே ஒரு குடியானவன், நீரின்மேல் மட்டத்திலிருந்து பாசத்தை ஒதுக்கிவிட்டுத் தண்ணீரைக் கையி லெடுத்தெடுத்துப் பார்க்க நான் கண்டேன். அவன், பாசத்தை நீக்கினாலொழியச் சுத்தமான தண்ணீரைப் பார்க்க முடியாதென்றே அவ்வாறு செய்தான். மனிதன் பக்தி யடைவதற்கு வேலை செய்தாலொழிய அதனை அடைய முடியா தென்பதை உணர்ந்துகொள்ளும்பொருட்டே அதற் குதாரணமாக இச் செய்கையை ஈசுரன் எனக்குக் காட்டி யிருக்கின்றார். ஆதலின், ஈசுராநுபூதி யடைதற்கு ஈசுர நாமத்தை ஜபித்துக்கொண்டே தூளசிமணியை எண்ணுதல், அவருடைய மஹிமைகளையும் ஸ்தோத்திரங்களையும் பாடு தல், தர்மம் செய்தல், எக்ஞம் செய்தல் முதலிய கர்மங் களைச் செய்யவேண்டும். இவை ஈசுரனிடம் இட்டுச் செல் லும் பரிசுத்த கர்மங்களாம்.

804. ராக பக்தி யுண்டானால் வைதிக கர்மங்கள் செய்ய வேண்டிய அவசியமில்லை யென்பது:

பக்தி வகைகளில், வைதிக பக்தி, ராக பக்தி என இரண்டு வகை யுண்டு. சாஸ்திரங்களிலே பக்திக்கென

விதிக்கப்பட்டிருக்கும் கர்மங்களை யுணர்ந்து, 'இவற்றை நான், சாஸ்திரங்களில் கூறியபடி செய்கிறேன்' என்ற மனப்போக்குடன் செய்வது வைதிக பக்தியாம். பிரஹ்லாதனிடத்தில் உண்டானதுபோல அத்தியந்த அன்பால் ஈசுவரன்மீது உண்டாகும் பக்தி ராக பக்தியாம். இந்த ராக பக்தியுண்டானால் வைதிக கர்மங்கள் செய்யவேண்டிய அவசியமேயில்லை.

805. மனிதன் எண்ணுமிடத்தில் ஈசுரன் இருப்பானென்பது:

ஈசுரன் எல்லாவற்றினுள்ளும் இருக்கிறார். அவனைத் தேடுகிறவன், எவ்விடத்தில் அவர் இருப்பதாக மதிக்கின்றானோ அதே இடத்தில் அவனைச் சந்திப்பான். மனிதன் உண்மை ஞானத்தை அடைந்துவிட்டால் ஈசுரனை எங்கோ வெகு தூரத்திலுள்ள ஒரு பொருளாகக் கருதுவதில்லை. இன்னும் அவனைத் தூரத்திலுள்ள பொருளாக நினைத்து 'அது, அது' என்று சுட்டிப் பேசுவதுமில்லை. அவன், தன்னுடைய ஆத்மாவுக்குள்ளே சமீபத்தில் உள்ள பொருளாகவே அவனை நினைத்து, 'இது, இது' என்று சுட்டிப் பேசுவான். ஈசுரன், தனக்குள்ளே இருக்கின்ற பொருளாக அவனால் உணரப்படுகிறார்.

806. மனிதன் ஞான மடைந்ததை அறியும் விதம்:

ஒரு பக்தன், ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்தில், "இருகஸ்த வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கும்போதே ஒரு மனிதன் ஞான மடைந்துவிட்டால், அவ்வாறடைந்ததை எப்

படி அறிய முடியும்?'' என்று கேட்டான். அதற்கவர், ''ஈசுவரநாமத்தைக் கேட்டமாத்திரத்திலேயே அவனுடைய கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரியும்படி, அவனுடைய உரோமம் சிலிர்க்கும். இந்தச் செய்கைகளைக் கொண்டு அவன் ஞான மடைந்துவிட்டா னென்பதை உணர்ந்து கொள்ளலாம்'' என்று கூறினர். இதனால் குடும்ப ஞானியின் தன்மை இத்தன்மைத் தென்பதை உணர்ந்துகொள்ளலாம்.

807. மனிதன் துன்புறுவதற்குக் காரணம்:

மனிதன், தனக்கு ஈசுவரனிடத்திலே நம்பிக்கையில்லாக் காரணத்தினாலேயே துன்பத்தை அடைகிறான்.

808. வேதாந்தத்தைப்பற்றி ஸ்ரீ சங்கரரும் ஸ்ரீ ராமானுஜரும் கூறுபவை உண்மையானவைகளென்பது:

வேதாந்தத்தைப்பற்றி ஸ்ரீ சங்காசாரியர் செய்துள்ள வியாக்கியானமும், ஸ்ரீ ராமானுஜர் கூறும் விசிஷ்டாத்துவித ஞானமும் உண்மையானவைகளே.

809. மனிதனுடைய தீவிர சக்தியால்மாத்திரம் ஈசுரனை யடைய முடியு மென்பது:

மனிதன், தன்னிடத்திலுள்ள தீவிர சக்தியை எழுப்பினால் மாத்திரந்தான் ஈசுவரனை அறிய முடியும்.

810. ஞானங்களின் வகையைப்பற்றி ஸ்ரீ ராம கிருஷ்ணர் கூறுவது:

யுக்தியினாலுண்டாகின்ற ஞானமானது ஒருவிதமான தென்றும், நிஷ்டையினாலுண்டாகின்ற ஞானமானது வேறு

விதமான தென்றும், கருதியினால் உதயமாகின்றது இன்னொருவிதமான தென்றும் நான் உணர்ந்திருக்கிறேன். ஆதலின், இவற்றின் பிரபாசங்களை அறிவாளிகள் உணர்ந்துகொள்ளலாம்.

811. சுத்த சத்துவ குணத்தின் தன்மையும், இராஜஸச் சேர்க்கையுடன் கூடிய சத்துவகுணத் தன்மையும்:

சுத்த சத்துவ குணமானது ஒரு மனிதனிடத்தே பிரதானம் பெற்றிருந்தால் அவன் சகஜமாகவே நியாயித்துக்கொண்டிருப்பான்; வேறெந்த வேலையினாலும் சுகங் காணமாட்டான். அந்த மனிதனிடத்தில் இராஜஸச் சேர்க்கையுடன் கூடிய சத்துவகுண மிருந்தால் அவனுடைய மனமானது மெல்லப் பல வழிகளிலும் செல்ல ஆரம்பிக்கும்; அப்பொழுது அவனிடத்தில், "நான் உலகுக்கு நன்மை செய்வேன்" என்ற அகங்காரமும் உண்டாகிவிடும். அவனைப்போன்ற சாதாரண ஜீவர்கள் உலகுக்கு நன்மை செய்ய முயற்சிப்பது மிகவும் அபாயகரமானதாம். ஆனால், ஒருவன், தனக்கென்று எந்தப் பலனையும் கருதாது பிறருடைய நன்மையை மாத்திரம் கருதி அதைச் செய்தால் அது நன்மை பயக்கும்; அதில் அபாய மில்லை. அத்தகைய கர்மங்களைச் செய்வது நிஷ்காம கர்மமென்று சொல்லப்படும். அந்தக் கர்மங்களைச் செய்வது மிகவும் விரும்பத் தக்கது. ஆனால், எல்லோரும் அவற்றைச் செய்தல் இயலாது. அது மிகவும் கஷ்டமானது. மனிதன் நிஷ்காம கர்மத்தைச் செய்துகொண்டேவந்தால் சுத்த சத்துவ

குணத்தை விருத்தி செய்துகொள்ளக் கூடும். அந்த நிஷ்காம கர்மத்தால் இராஜஸ சுத்துவமானது அந்த இராஜஸம் நீங்கிச் சுத்த சத்துவ மாகிவிடுகிறது. சிலர், தமது பிராரப்த கர்மங் காரணமாகச் சுத்த சத்துவ குணத்துடனேயே பிறந்திருக்கிறார்கள். மற்ற எல்லோரும கர்மஞ் செய்யக் கூடியவர்களாகவே யிருக்கிறார்கள். சாதாரண ஜனங்கள் சுத்த சத்துவகுணத் தன்மையை அறிதல் முடியாது.

812. சரீரங்களின் வகைகள்:

சரீரங்கள்: ஸ்தூலம், சூக்ஷ்மம், காரணம் என மூன்று வகையாம். அவற்றுள் பஞ்ச பூதங்களால் ஆக்கப் பெற்ற இந்தச் சரீரமானது ஸ்தூல சரீரமாம்; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக்கரணங்கள் நான்கும் அடங்கியது சூக்ஷ்ம சரீரமாம்; ஈசுவர தரிசனத்தினு லுண்டாகும் ஆனந்தத்தை அனுபூதியில் அடைந்து மனிதன், ஈசுவரனோடு ஒற்றுமையை அனுபவிக்கக் கூடியது காரண சரீரமாம். தந்த்ர சாஸ்திரங்களிலே அது 'பகவதீ தநு' என்று சொல்லப்படுகிறது. எல்லாவற்றுக்கும் அப்பால் மஹா காரணம், அதாவது மூலத் காரணம் இருக்கின்றது.

813. ஈசுரானுபூதி யடைந்த பின்புதான் பிரேமை உண்டாது மென்பது:

ஈசுரானுபூதி யடைவதற்கு முந்திப் பிரேமை யுண்டாகமாட்டாது.

814. ஈசுராநுபூதி அடைபவரின் இலக்ஷணம்:

ஒருவரிடத்தில் ஈசுரபக்தி யுண்டாவதே அவர் ஈசுராநுபூதி அடைவதற்குரிய இலக்ஷணமாம். அத்தகைய பக்தி யுடையவர்கள், ஈசுரனே அநுபூதியில் அடைந்து அநிதற்குத் தாமதமே யிராது.

815. பக்தியானது இன்ன இன்னவைகளால் பக்குவமடையு மென்பது:

நியாயமான விவேகம், நியாகம், சமஸ்த பிராணிகளிடத்தும் தயை, பரிசுத்த புருஷர்களுக்குப் பணிவிடை செய்தல், பக்தர்களுடைய சகவாசம், ஈசுர ஸ்தோத்திர கீர்த்தனைகளைப் பாடுதல், சத்தியம் ஆகிய இவற்றாலும், இவைபோன்ற மற்ற குணங்களாலும் பக்தியானது பக்குவமடைகின்றது.

816. புலன்களை அடக்கும் விஷயத்தைப்பற்றி நேர்ந்த ஓர் விளவிடை:

ஒரு பக்தன் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்தில், "சுவாமி! மனிதன் முதலில் விசார ஞானத்தினாலே தன்னுடைய புலன்களை அடக்கி விடவேண்டியது அவசியந்தானே?" என்று வினவினான். அதற்கு அவர், "அஃதவசியந்தான்; அது விசாரமார்க்கமென்று சொல்லப்படும். பக்தி மார்க்கத்திலும் அவற்றின் அடக்கம் ஏற்பட்டிருக்கிறது; அஃதோ இதைக்காட்டிலும் மிகச் சுலபமாக உண்டாய்விடும். பெற்றோர், தங்கள் குழந்தையை இழந்த தினத்தில் எப்படித் தங்கள் சிற்றின்பத்தை நினைக்காமல் ஒழித்துவிடுகிறார்க

னோ அப்படியே, மனிதனுக்கு ஈசுவரனிடத்திலே பக்தி எவ்வளவுக் கெவ்வளவு அதிகரிக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு அவன் இந்திரிய சுகத்தை வெறுத்து நீக்கிவிடுவான். இந்தப் பக்தி மார்க்கத்தில் இந்திரிய அடக்கம் தானே உண்டாய்விடும்" என்று கூறினர். இதனால் பக்தி மார்க்கத்தில் புலன்களை அடக்குதல் சுலபமாக முடியுமென்ப தூணரப்படும்.

817. பக்தியினால் தீக்குணங்கள் ஒழிந்துவிடுமென்பது:

ஒரு கவி ஈசுவரனிடத்துச் செலுத்தப்படும் பக்தியை ஒரு புலிக்கு உவமையாகக் கூறியிருக்கின்றார். ஏனெனில், புலியானது மிருகங்களை விழுங்கிவிடுவதுபோல, பக்தியும் மனிதனுடைய சத்துருக்களாகிய காமக் குரோதாதிகளை யெல்லாம் விழுங்கிவிடுகிறது. ஈசுவர பக்தி ஒருவனிடம் பரிபூரணமாக உண்டாகிவிட்டால் காமக் குரோதாதி தீக்குணங்க ளெல்லாம் அடியோடு நசித்துவிடுகின்றன. பிருந்தாவனத்துக் கோபிகா ஸ்திரீகள், ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் தங்களுக் கிருந்த பலமான பக்தியினாலே அத்தகைய தீக்குணங்கள் நீங்கப் பெற்றுப் பரிசுத்த நிலையை அடைந்தார்கள். அதனாலே அந்தக் கவி மேற் கூறியபடி பக்தியைப் புலிக்கு நிகராகக் கூறினர்.

818. பக்தி அஞ்சனம்போன்ற தென்பது:

இன்னும் பக்தியானது, அஞ்சனத்துக்கு உவமையாகக் கூறப்பட்டிருக்கிறது. ஏனெனில், அஞ்சனமானது மறைவிலுள்ள பொருள்களைக் காட்டுகின்றது; அதைப்

போல பக்தியும் மறைவிலுள்ள ஈசுரனைக் காட்டிவிடுகின்றது. ஒரு சமயத்தில் ஸ்ரீமதி ராதையானவள், தனது பக்தியினால் கிருஷ்ணன் எங்கும் தோற்றக் கண்டு தன் தோழிகளிடத்தில், "தோகைகாளே! நான் எனது கிருஷ்ணனை எங்கும் பார்க்கின்றேன்" என்று கூறினாள். அதற்கு அவளுடைய தோழிகளாகிய கோபிகைகள் "நீ கிருஷ்ணன்மீதுள்ள அன்பாகிற அஞ்சனத்தை உனது கண்களில் இட்டுக்கொண்டிருக்கிறாய். அதனால்தான் உனக்குக் கிருஷ்ணன் அவ்வாறு தோற்றுகின்றார்" என்று கூறினார்கள். இதனாலேயே பக்தியானது அஞ்சனம் போன்ற தென்பதை உணர்ந்துகொள்ளலாம்.

819. இரண்டுவித சித்தர்கள்:

சித்தர்களில், சாதன சித்தர்க ளென்றும், கிருபா சித்தர்க ளென்றும் இரண்டுவகை யுண்டு: ஐசுவரிய மில்லாத ஒருவன் நல்ல வினைவை அடையவேண்டி நிலத்தை உழுது சீர்ப்படுத்திக் கிணறு தோண்டித் தண்ணீர் இறைத்துப் பயிருண்டாக்கி மிக்க பிரயாசையின்மீது பலனடைவதுபோல, சாதன சித்தர்கள், மாயா பந்தங்களினின்றும் நிவிருத்தியடைதற்குப் பக்தியனுஷ்டானங்களை விடாமல் செய்துகொண்டிருப்பார்கள். பாக்கியவந்தர்கள் எவ்வித பிரயாசையு மின்றி இருந்தவிடத்தி லிருந்தபடியே சௌக்கியத்தை அடைவதுபோல கிருபாசித்தர்கள், மேற்கூறிய தொந்தரவுகளை அனுபவிக்காமலே ஈசுர கிருபையினால் பரிபூரணத்துவம் அடைந்துவிடுவார்கள். அவர்களின் தொகை மிகச் சொற்பமே.

820. கலப்பற்ற பக்தியும், கலப்புள்ள பக்தியும்:

பக்தியில் கலப்பற்ற பக்தி யென்றும், கலப்புள்ள பக்தி யென்றும் இரண்டு வகை யுண்டு. அவற்றுள் கலப்பற்ற பக்தியானது பிரேமா பக்தி யென்றும், அத்தியந்த பக்தி யென்றும் சொல்லப்படும். இஃதொன்றை மாத்திரம் உறுதியாகப் பற்றியிருப்பது. அதாவது, கடவுளை கிருஷ்ணன், அல்லது சிவன் மாத்திரமாகக் கொள்வது. கலப்புள்ள பக்தியானது வேறொன்றுடன் கலந்த பக்தி யென்று சொல்லப்படும். இது ஞானத்துடனே கலப்புற்றிருப்பது; அதாவது, கடவுள் ஒருவரே பல வடிவங்களாகப் பலவிடங்களிலும் விளங்குகிறாரென்று கொள்வது. அது கிருஷ்ணரே எல்லாமாயிருக்கிறார்; அவரே பரப்பிரஹ்மம், அவரே இராமன், அவரே சிவன், அவரே ஈசுவர சக்தி என்று கொள்ளும் உணர்ச்சிபோன்றது. இந்த ஞானமானது பிரேமா பக்தியுடன் கலந்திருந்தாலும் பிரேமா பக்தியுடையவர்கள் இதைக் காணமாட்டார்கள். மேற்கூறிய இரண்டு பக்திகளுள் பிரேமா பக்தியானது கோபிகைகளிடத்திலும், ஹநுமான்னிடத்திலும், விபீஷணரிடத்திலுமிருந்தது. அவர்கள், தாங்கள் தாங்கள் உணர்ந்த தெய்வ வடிவங்களையே உறுதியாகப் பற்றியவர்களாதலின், கோபிகைகள் கிருஷ்ணனை யன்றி வேறெவரையும் மனத்திற் கொள்ளா திருந்தார்கள்; அனுமார் அயோத்தைக்கு வந்தபோது, தாம் சீதையையும் இராமரையும் மாத்திரம் பார்க்க விரும்புவதாகக் கூறினர். அதன் பொருட்டு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி இராமர் வடிவெடுத்துக்கொண்டு, ருக்

மணியைச் சிதைவடிவ மெடுக்கும்படி செய்து அவருக்குத் தரிசனை கொடுத்தார்; பாண்டவர்கள் இராஜசூய யாகஞ் செய்யும்போது, யுதிஷ்டிரருக்கு அரசர்க ளெல்லாரும் வணக்கம் செய்த காலத்தில் விபீஷணர், தாம் கிருஷ்ணருக் கன்றி மற்றெவருக்கும் முடி தாழ்த்தி வணங்குவதில்லை யென்று கூறினர். அதன்பொருட்டு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி, தாமே யுதிஷ்டிரருக்கு வணக்கம் புரிந்தார். அதைப் பார்த்த பின் விபீஷணரும் அவ்வாறே யுதிஷ்டிரரை வணங்கினர். இந்த மூன்று வகையாருடைய செய்கைகளால் பிரேமா பக்தியின் தன்மையை யெளிதற அறிந்து கொள்ளலாம்.

821. பிரேமா பக்தியில் இரண்டு வகை யுண்டென்பது:

பிரேமா பக்தியில் இரண்டு வகை யுண்டு. அவையாவன: "ஈசுவரனுக்கு நானே உரியவன்" என்பதும், "ஈசுவரன் எனக் குரியவனே" என்பதுமாம். யசோதையானவள், கோபாலனுக்குத் தானே உரியவ னென்றும், தான் தவிர கோபாலனுடைய செளக்கியத்தை வேறெவரும் கவனித்தல் முடியா தென்றும், தான் கவனிக்காவிட்டால் கோபாலன் வியாதியால் பீடிக்கப்படுவா னென்றும், நினைத்துக் கொள்வது வழக்கம். இதுதான், "ஈசுவரனுக்கு நானே உரியவன்" என்று கருதும் பிரேமா பக்தி. யசோதையானவள், "கிருஷ்ணன் எனக்கே சொந்தமானவன்; எனக் குரிய பொருள் அவனே" என்று கருதுவது வழக்கம். அதனால் அவள், கிருஷ்ணனை ஒருபொழுதும் ஈசுவரனுகக்

கருதுவதற்குப் பிரியப்படுவதில்லை. இந்த எண்ணத்தினாலேயே ஒரு சமயம், உத்தவர், யசோதையை நோக்கி, "தாயே! உன்னுடைய கிருஷ்ணன் ஈசுவரனே யாவர்; அவர் பிரபஞ்ச முழுவதுக்கும் சிந்தாமணி யாவர்; அவர் ஒரு சாதாரண மனிதரல்லர்" என்று கூறினார். அதற்கு யசோதையானவள், "இல்லை, இல்லை; கோபாலன் சிந்தாமணியுமல்ல, ஈசுவரனுமல்ல; என்னுடைய செல்வப் புதல்வனே" என்று சொன்னாள். இதுதான், ஈசனை, 'என்னுடைய சொந்தப் பொருள்' என்று சொல்லும் பிரேமா பக்தி.

822. ஏகாக்கிர நிஷ்டை:

ஏகாக்கிர நிஷ்டையில் கோபிகைகள் மிகச் சிறந்தவர்கள்; இளமையில் கோபிகைகளோடு விளையாடிக்கொண்டிருந்த கிருஷ்ணன், பின்னர் மதுராபுரியிலே இராஜரீகம் பெற்றிருந்தபொழுது அந்தக் கோபிகைகள் ஒரு சமயம் கிருஷ்ணனைப் பார்க்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு போய்க் காவற்காரர்களின் அனுமதி பெற்றுக் கிருஷ்ணனுடைய கொலு மண்டபத்திற்குள் நுழைந்தார்கள். அப்போது கிருஷ்ணமூர்த்தி, தலைப்பாகை தரித்து இராஜரீக உடை உடுத்திக்கொண்டிருந்தார். கோபிகைகள் அவருடைய அந்தத் தோற்றத்தைப் பார்த்தவுடன், அவரைத் தங்களுடைய பழைய கிருஷ்ணன் அல்லவென்று நினைத்துத் தலையைத் தாழ்த்திக்கொண்டு, "தலைப்பாகை தரித்த இந்த மனிதன் யார்? மஞ்சள் உடை தரித்து, மயிற்பீலி யணிந்திருக்கும் நம்முடைய கோபால கிருஷ்ணன் எங்கே?

நாம் இங்கே அமர்ந்திருக்கும் மனிதரிடையே பேசக்கூடாது; அப்படிப் பேசினால் கிருஷ்ணனிடத்தில் நமக்கு விசுவாசம் இல்லையென்ற குற்றம் ஏற்படும்'' என்று ஒருவரோடொருவர் மெல்லிய குரலால் பேசிக்கொண்டார்கள். இவர்கள் ஆதியில் கிருஷ்ணரை எந்த உருவத்தில் பார்த்தார்களோ அந்த உருவத்தை ஏகாக்கிர சித்தத்துடன் மனதிற் பதித்துக்கொண்டார்கள். அதனாலேயே இப்பொழுது கிருஷ்ணனுடைய உருவம் மாறுபட்டிருந்தவுடன் அவரைத் தங்களுடைய பழைய கிருஷ்ணரை அவர்கள் கருதவில்லை. 'பழைய கிருஷ்ணன் எங்கே யிருக்கிறார்?' என்று தேடினார்கள். இவர்களுடைய இந்தத் தன்மைதான் ஏகாக்கிர நிஷ்டை யென்பது.

823. விசுவாச மில்லாதவர்களோத் தெரிந்து கொள்ளும் விதம்:

விசுவாசம் இருப்பவர்களையும், இல்லாதவர்களையும், தேகத்திலுள்ள சில குறிகளால் தெரிந்துகொள்ளலாம். தேகம் எலும்பும் தோலுமாய் மெலிந்திருப்பவர்கள், குழிந்த கண்களுள்ளவர்கள், வக்கிர திருஷ்டியுடையவர்கள் ஆகிய இவர்கள் விசுவாசமற்றவர்களாயிருப்பார்கள். இவர்களுக்கு ஈசுரனிடத்திலோ, பெரியோர்களிடத்திலோ, சாஸ்திரங்களிலோ நம்பிக்கையுண்டாக மாட்டாது.

824. மனம் இன்ன வகையில் வீண் செலவாகு மென்பது:

மனமானது உலக வியாபாரங்களிலே யிருக்கும்போது வீண் செலவு பண்ணப்பட்டுவிடுகிறது. அப்படிச் செல

வானதற்கு ஈடு பண்ணிக்கொள்ளவேண்டுமானால் சன்னியாசத்தைக் கைக்கொள்ளவேண்டும். சன்னியாசத்தில் மனம் வீண் செலவாகாமல் நல் விஷயத்தில் விருத்தியடையும்.

825. மனிதனுக்கு மூன்றுவகைப் பிறப்புண்டென்பது:

மனிதனுக்கு மூன்றுவகைப் பிறப்புண்டு. அவையாவன: 1-வது பிதாவினிடமிருந்து உண்டாவது; 2-வது உபநயனம் பெற்றுக்கொள்வது; 3-வது சன்னியாசமடைவது.

826. ஞானியின் தன்மையும், பக்தன் தன்மையும்:

ஞானியானவன், ஈசுவரனைக் குறிப்பிட்டு, "நான் அவரே; நான் அந்தப் பரிசுத்த ஆத்மாவே" என்று கூறுவான். பக்தனானவன், "உலகத்திலுள்ள எல்லாம் அவருடைய பெருமையே" என்று கூறுவான்.

827. மனம் அசைவற்றிருந்தாலொழிய யோகம் சித்திக்காதென்பது:

ஈசுவரானுபூதியடைதற்கு எந்த மார்க்கத்தைப்பற்றிச் சென்றாலும் மனமானது அடியோடு நிச்சலனமாயிருக்கவேண்டும். அப்படியிருந்தால்மாத்திரந்தான் யோகஞ் சித்திக்கும். மனமானது எப்பொழுதும் யோகியின் ஆட்சியின் கீழ் இருக்கவேண்டும். யோகியானவன் மனதின் ஆட்சிக் குட்பட்டிருக்கக் கூடாது.

828. கும்பகம் உண்டாகும் விதம்:

மனத்திலுள்ள ஆசைகளெல்லாம் அடங்கிவிட்டால், சுவாசம் தானே அடங்கிவிடும்; அதாவது, கும்பகம் உண்

டர்கும். பக்தி யோகத்தின் மூலமாகவும் அதாவது, அத்தியந்த பக்தியின் மூலமாகவும் முக்தகம் (சுவாச பந்தனம்) உண்டாய்விடும்.

829. மூன்று வகைப் பக்திகளில் இன்னவை நல்லன வென்பது:

ஒரு சமயம் நரேந்திரர் (ஸ்ரீ விவேகானந்தர்), ஸ்ரீராம கிருஷ்ணரை நோக்கி, "சுவாமி! தந்திர சாஸ்திரங்களிலே கூறப்பட்டுள்ளபடி ஸ்திரீகளின் கூட்டத்தில் செய்யப்படுகின்ற பக்தி யனுஷ்டானங்களின் தன்மைகளைப்பற்றித் தங்களுடைய அபிப்பிராய மென்ன?" என்று வினவினார். அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர், "அவை மிகவும் கடினமானவை; அவற்றில் அடிக்கடி தழுவுதல்கள் உண்டாகிவிடும். தந்திர சாஸ்திரங்களில் பக்தியை அனுஷ்டிப்பதற்கு மூன்றுவித மார்க்கங்கள் கூறப்பட்டிருக்கின்றன. 1-வது, ஒரு வீரனைப்போல பெண் தன்மையை வெறுத்து ஜகன் மாதாவினிடத்தில் பக்தி செலுத்துவது; 2-வது, ஜகன் மாதாவினிடத்தில் பணிப்பெண்ணைப்போல பக்தி செலுத்துவது; 3-வது, ஜகன்மாதாவுக்குப் புத்திரனைப் போல பக்தி செலுத்துவது. இவற்றுள் வீரனைப்போல நினைத்துச் செய்வது மிகவும் அபாயகரமானது; பணிப் பெண்ணைப்போல நினைத்துச் செய்வது நல்லது; புத்திரனைப் போல நினைத்துச் செய்வது மிகவும் பரிசுத்தமானது. ஆகவே, மூன்றுங் கஷ்டமானதே. ஸ்திரீகள் கூட்டத்தை விட்டு விலகிச் செய்யும் பக்தி யனுஷ்டானமே அபாயமற்ற

தாகும். என்னுடைய பக்தி, ஈசுவரனை மாதாவாகக் கருதிச் செய்யும் பக்தியாம்'' என்று கூறினர். இதனால் பக்தி யனுஷ்டானங்களில் இன்னதுதான் சிறந்த தென்பதை உணர்ந்துகொள்ளலாம்.

830. ஈசுரபக்தி யுடையவர்களுக்கு எல்லோரும் வசமாய்விடுவார்க ளென்பது:

ஒரு பக்தன் ஒரு சமயம் ஸ்ரீ ராமகிருஷ்ணரை நோக்கி, ''சுவாமி! பக்திமார்க்கத்திலிருக்கும் ஒருவனுடைய மனைவி அவனது பக்திக் கிடையூறாக, ''நீ என்னைச் சரிவரக் கவனிக்காவிட்டால் நான் தற்கொலை பண்ணிக்கொள்வேன்'' என்று சொன்னால் அப்பொழுது அந்தப் புருஷன் செய்யவேண்டிய தென்ன?'' என்று வினவினன். அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர், ''ஈசுவர மார்க்கத்திலே அவ்வாறு இடையூறுகளை ஏற்படுத்துகின்ற மனைவி அவித்யா மனைவியாவாள்; அவள், தற்கொலை செய்துகொண்டாலும் சரி, செய்யாமலிருந்தாலும் சரி; அவளை விட்டுவிடவேண்டும். உண்மையான பக்தி யுடையவனுக்கு அத்தகைய மனைவி யேற்பட்டிருந்தாலும், அவளைக் கவனிக்காமல் விட்டுவிட்டால் அவளும் மெல்ல மெல்ல ஈசுர முகமாகத் திரும்பி விடுவாள். ஈசுவரனிடத்திலே உண்மையான பக்தி யுடையவர்களுக்கு அரசன், கொடியோர், மனைவி ஆகியவர்களைப் போன்றவர்கள் எல்லோரும் வசமாய்விடுவார்கள். ஒருவன் ஈசுவர கிருபையிலே நல்லவனாய்விட்டால் அவனுடைய மனைவியும் நல்லவளாய்விடுவா ளென்பது சாத்திய

மான காரியமே" என்று கூறினார். இதனால் பக்தர்களுக்கு எல்லோரும் வசமாய்விடுவார்க ளென்ப தனைப்படும்.

831. மனிதனிடத்திலேதான் ஈசுவரனுடைய தோற்ற முள்ளதென்பது:

மனிதன், ஈசுவராராதனை யடைந்த பின்னர், ஈசுவரனை எங்கும் எல்லாவற்றிலும் பார்க்கிறான். மனிதனிடத்திலேதான் அந்த ஈசுவரனுடைய மிகப் பெரிதான தோற்ற முள்ளது. இன்னும், பெண்ணிடத்தும், பொன்னிடத்தும், அணுவளவும் ஆசை யில்லாத, சத்துவ குணமுள்ள பக்தர்களிடத்திலே அவருடைய தோற்றமானது எல்லாவற்றிலும் பெரிதா யிருக்கிறது.

832. "சித்தம் ஸ்வதந்திர முள்ளதா? இல்லாததா?" என்பதற்கு விடை:

ஒரு பக்தன் ஸ்ரீராமகிருஷ்ணரை நோக்கி ஒரு சமயம், "சுவாமி! எனக்கொரு சந்தேகம் இருக்கின்றது: "நமது சித்தம் ஸ்வதந்திர முள்ளது" என்றும், "நன்மையோ தீமையோ நமக் கிஷ்டமானதை நாமே செய்துகொள்ளக் கூடும்" என்றும் ஜனங்கள் கூறுகிறார்களே: அஃது உண்மை தானே?" என்று வினவினன். அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர், "நமது சித்தம் ஸ்வதந்திரமுடையதன்று; எல்லாம் ஈசுவரனுடைய சித்தத்தைச் சார்ந்திருக்கின்றன. எல்லாம் அவருடைய லீலையாகும். அவர் பெரியனவும், சிறியனவும், பலவீனமானவையும், பல முள்ளவையுமான பல விஷயங்களை, நன்மை தீமை ஆகிய பல விதங்களி

லும் செய்யும்படி நம்மை ஏவிக்கொண்டிருக்கிறார். நல்லோர் தீயோர் என்பவர்க ளெல்லோரும் அவருடைய மாயையிலு லேற்பட்டவர்களே. எல்லாம் அவருடைய லீலையே. உதாரணமாக, அவரால் உண்டாக்கப்பட்ட ஒரு தோட்டத்திலுள்ள விருக்ஷங்களெல்லாம் உயரத்திலோ, அழகிலோ, சிறப்பிலோ சரிசமானமா யிருக்கிறதில்லை. இதுபோலவே, அவர், மனிதர்களிலும் பேதங்களை அமைத்திருக்கின்றார். ஆனால், மனிதன், ஈசுவரனை அனுபவத்தில் அடையும் வரையில், அவனுக்குத்தான் ஸ்வதந்திரன் என்ற நினைப்பிருக்கும். மனிதனிடத்தில் இந்தப் பிரமையை வைத்திருப்பது ஈசுவரனே. இந்தப் பிரமை இல்லாவிட்டால் மனிதர்கள் தீமை செய்யப் பயப்படமாட்டார்கள்; 'எல்லாம் ஈசுவரனே செய்கிறார்' என்று சொல்லிக்கொண்டு இஷ்டம்போல் தீமைகளைச் செய்ய ஆரம்பித்துவிடுவார்கள். அதனால் பாபங்கள் ஏராளமாகப் பெருகிவிடும். குற்றத்துக்கோ, அல்லது பாபத்துக்கோ எவ்வித தண்டனையுமில்லாமற் போய்விடும். இதற்காகவே ஈசுவரன், மனிதசித்தத்துக்கு ஸ்வதந்திர மில்லாதிருந்தும், அஃதிருப்பது போல் அவரிடத்தே ஒரு மாயை ஏற்படுத்தி யிருக்கின்றார். ஆதலின், மனிதர்கள் அந்தப் பிரமையுடனிருந்து நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து, தீமைகளை விலக்கி நன்மைகளைத் தங்கள் ஸ்வதந்திரத்தால் செய்வதாகவே பாவித்துச் செய்யவேண்டும். அவ்வாறு செய்துகொண்டுவந்தால் அவர்கள் ஈசுவரனை அறிவார்கள். அதன்மேல் தங்களுக்கு ஸ்வதந்திரமில்லை யென்பதையும், எல்லாம் ஈசுவரச்

செயலே என்பதையும் தாங்களே உணர்ந்துகொள்வார்கள். அந்த நிலையில்தான் தங்களுக்கு ஸ்வதந்திரமில்லையென்ற தன்மை யேற்படும். அவ்வாறு ஈசனின் அனுபூதியில் அடைந்தவன், ஈசனை நோக்கி, 'நான் பந்தம்; நீயே ஓட்டுபவன்; நான் வீடு, நீயே அதில் வசிப்பவன்; நான் இதம், நீயே சாதி; நீ என்னை ஆட்டுவிப்பதுபோல நான் ஆடுகிறேன்; நீ என்னைப் பேசுவிப்பதுபோல நான் பேசுகிறேன்' என்று சொல்வான். இதுதான் மனிதனுக்கு ஸ்வதந்திரம் அற்ற நிலை; இது வருவதற்கு முன் ஒருவன், தன்னுடைய சித்தத்துக்கு ஸ்வதந்திரமில்லையென்று அபிப்பிராயப் படுவானுனால் கெட்ட வழியிற் பிரவேசித்து ஈசுவரானுபூதியை அடையமாட்டான்" என்று சொன்னார். இதனால், மனித சித்தத்துக்கு இன்ன காலத்தில்தான் ஸ்வதந்திரமுண்டு, இன்ன காலத்தில் இல்லையென்பதை உணர்ந்துகொள்ளலாம்.

833. ஸ்ரீ சைதந்யர் அடையும் மூன்றுவித ஸ்திதிகள்:

ஸ்ரீ சைதந்தியர் மூன்று விதஸ்திதிகளை அடைவது வழக்கம். அவையாவன:—1-வது, மனமானது ஸ்தூலத்திலும், சூக்ஷ்மத்திலும் வசிக்கின்றபொழுது உண்டாகின்ற பிரக்ஞா ஸ்திதி; 2-வது, மனமானது காரண சரீரத்தை யடைந்து, காரணானந்தத்தை யுணர்கின்ற அர்த்தப் பிரக்ஞா ஸ்திதி; 3வது, மனமானது சம்பூர்ணமாக மகாகாரணத்திலே அதாவது ஆதிப் பெருங் காரணத்திலே லயமடைகின்றதும், அகமுகமாகத் திருப்பப்பட்டதுமான

பிரக்ஞையின் ஸ்திதி, அதாவது பிரக்ஞாதீத ஸ்திதி. இவற்றிற்கும் வேதாந்தத்திலுள்ள பஞ்சகோசங்களுக்கும் ஒரே தன்மை யுண்டு; எப்படியெனில், ஸ்தூல சரீரம் அன்னமய பிராணமய கோசங்களாம்; சூக்ஷ்ம சரீரம் மனோமய விஞ்ஞானமய கோசங்களாம்; காரண சரீரம் ஆனந்தமய கோசமாம். முதற்காரணமானது இந்தக் கோசங்களுக் கெல்லாம் அப்பா லுள்ளது. மனமானது இந்த முதற் காரணத்திலே லயமடையும்போது சமாதிநிலை உண்டாகும். இது, நிர்விகற்ப சமாதி, அல்லது ஜடசமாதி யென்று சொல்லப்படும்.

834. மனிதன் துறவடைய விரும்பினாலும் பிராரப்தம் முதலியவற்றால் துறக்க முடியா தெனல்:

மனிதனுக்கு உலகைத் துறந்துவிடப் பிரிய மிருந்தாலும் அவனால் அவ்வாறு துறக்க முடியாது. ஏனெனில், பிராரப்தம், சம்ஸ்காரம் முதலியவை அவ் விருப்பத்துக்கு இடையூறு செய்யச் சித்தமா யிருக்கின்றன. அதனால் அவன் துறவுக் கிடையூறுண்டாகும். இதற்கு உதாரணமாக ஒரு கதை யுண்டு: அதாவது, "ஒரு காலத்திலே ஒரு யோகியிடம் ஓர் அரசன் சென்றான். அந்த யோகி, அவ்வரசனை நோக்கித் தமதருகில் உட்கார்ந்து ஈசுவரனைத் தியானிக்கும்படி கூறினார். அப்போது அரசன் அவரைப் பார்த்து, "சுவாமி! அதென்னால் முடியாது; தங்கள் அருகில் வேண்டுமானால் இருக்க முடியும்; அப்படியிருந்தாலும் எனக்குப் போகத்தினிடத்திலே ஆசை

யிருக்கின்றபடியால் உலகைத் துறப்பதற்கு மாத்திரம் என்னால் முடியாது. நான் இன்னும் போக மனுபவிப்பதற்கு எனக்கு விதி ஏற்பட்டிருக்கின்றபடியால் என் அனுபவத்திற்காக ஒரு சமயம் இக் காட்டினுள்ளும் ஓர் இராஜ்ஜியம் உண்டாகுமும் உண்டாகக் கூடும்'' என்று மறுமொழி கூறினன். இதனால் மனிதர் துறவடைதல் இலகுவில் முடியா தென்பது உணரப்படும்.

835. அநாஹத சப்த முண்டாகும் விதம்:

அநாஹத சப்த மென்பது பிரணவ (ஓங்கார) சப்தமாம். இஃது எப்பொழுதும் தானே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பரப்பிரஹ்மத்தினிட மிருந்து உண்டாகிறது. இது யோகிகளுக்கே கேட்கும்.' இச்சப்தமானது ஒரு பக்கத்தில் சாபிப் பிரதேசத்திலிருந்தும், மற்றொரு பக்கத்தில் பரப்பிரஹ்மத்திலிருந்தும் உண்டாகிறது. இதன் விவரத்தை யோகிகள் உணர்ந்துகொள்வார்கள்.

836. பக்தர்கள் ஈசுரனைத் தரிசிக்கும் விதம்:

புராணங்களிற் கூறுகிறபடி, பக்தன் ஈசுவரனிடத்திலிருந்து வேறுயிருக்கிறான். அவன், ஈசுவரனை நோக்கி, ''நான் ஒரு தனிப் பொருள்; நீ வேறு தனிப் பொருள்; என்னுடைய இச்சரீரமானது ஒரு பாத்திரம்போன்றது; மனமும், புத்தியும், அகங்காரமும் அப் பாத்திரத்திலுள்ள தண்ணீர்போன்றிருக்கின்றன. பரப்பிரஹ்மமாகிய நீ சூரியன்போன்று அத் தண்ணீரில் பிரதி பலிக்

இன்றுய்'' என்று பர்வணி செய்து, ஈசுரனைப் பலவிதமான சொரூபங்களில் தரிசிக்கிறான்.

837. பிரஹ்மம் ஒன்றே சத்தியமான பொருளென்பது:

வேதாந்தத்தில் கூறியபடி பிரஹ்மம் ஒன்றே சத்தியமான பொருளாம். மற்றவை யெல்லாம் மாயையாம்; சொப்பனம்போன்று உண்மை யல்லாதனவாம். பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்றே; பரப்பிரஹ்ம சொரூபமே. இந்தப் பரப்பிரஹ்மமாகிய சமுத்திரத்தின் மேல் மட்டத்திலே 'நான்' என்னும் அகங்கார மாயையாகிய குச்சி கிடக்கின்றது; இது கிடக்கும்வரையில் அந்தப் பிரஹ்ம சமுத்திரத்தை இரண்டு பிரிவாக்கிக் காட்டிக்கொண்டிருக்கிறது. அதாவது 'நான்' என்னும் அகங்காரமானது பரமாத்மாவையும் ஜீவாத்மாவையும் வேறு பிரித்துக் காட்டிக்கொண்டிருக்கின்றது. அந்தப் பரப்பிரஹ்ம சமுத்திரத்திலுள்ள, 'நான்' என்னும் குச்சியை எடுத்துவிட்டால் பிரிவுபடாத ஒரே பரப்பிரஹ்ம சமுத்திர நீர்ப் பரப்புத்தான் இருக்கும். அதாவது 'நான்' என்னும் மாயையை நீக்கிவிட்டால் பரமாத்ம ஜீவாத்ம பேத மில்லாமல் ஒரே பரப்பிரஹ்ம சொரூபமே விளங்கும். இந்த நிலைமை எப்பொழுது விளங்குகிறதென்றால், மனிதன் சமாதிநிலையை அடைந்துவிட்டபொழுது 'நான்' என்னும் அகங்காரமானது அடியோடழிந்து பிரஹ்ம ஞானம் உதயமாகி அச் சமயத்தில் இந்த அபேதம் தோற்றும். வேதாந்தத்தின்படி ஜாக்கிரவஸ்தையும் உண்மையானதன்று.

838. பெற்றோர் கடன்களைத் தீர்க்காதவரையில் எக் காரியத்திலும் ஜெயமடைய முடியா தென்பது:

உலகத்தில் பிறந்த மனிதர்கள் செலுத்தவேண்டிய கடமைகள் பலவாம். அவை: தேவர் கடன், இருடியர் கடன், மனிஷி கடன், பெற்றோர் கடன் முதலியனவாம். இவற்றுள் பெற்றோர் கடன் மிகவும் முக்கியமானது. மனிதர், அவர்களைச் சந்தோஷப்படுத்தாத வரையில் அவர்தம் பக்தி யனுஷ்டானங்கள் முதலிய எவையும் பயன்பட மாட்டா. சைதன்யர், ஈசுவர பக்தியிலே பித்துப் பிடித்திருந்த காலத்திலும் கூட மாதா பிதாக்களைச் சந்தோஷப்படுத்த எவ்வளவோ பிரயாசைப்பட்டிருக்கின்றார். அவர் சன்னியாச ஆச்சிரமத்தை எடுத்துக்கொள்வதற்கு முன், அதற்கு மனமிசையாதிருந்த தமது மாதாவைத் தேற்றுதற்கு எவ்வளவோ சிரமம் எடுத்துக்கொண்டிருக்கிறார்; அக் காலத்தில் அவர், மாதாவை நோக்கி, "தாயே! நீ வினைப்படாதே; நான் அடிக்கடி வந்து உன்னைப் பார்ப்பேன்" என்று தேறுதலான வார்த்தைகளைக் கூறினர். இதைக்கொண்டே, பக்தி யனுஷ்டானங்களை அடைய விரும்புவோரும், சன்னியாசம் பெற விரும்புவோரும் முக்கியமாகத் தாய் தந்தையர்க்குச் செய்யவேண்டிய கடன்களை இயற்றி அவர்களைச் சந்தோஷப்படுத்தவேண்டுமென்பதையும், அப்படிச் செய்தால் மாத்திரந்தான் தாங்கள் பிரவேசித்த காரியங்களில் ஜெயம் பெறலா மென்பதையும் உணர்ந்துகொள்ளலாம்.

839. மனிதன் சிலவிடத்திலே ஜாக்கிரதையாயிருக்க வேண்டுமென்பது:

தனவந்தர்களிடத்திலும், காமினிடத்திலும், எருதினிடத்திலும், குடிகாரனிடத்திலும் மனிதன் மிக்க ஜாக்கிரதையாகப் பழகவேண்டும்.

1-வது: தனவந்தர்களுக்குப் பணமும், ஏவலாட்களும், மற்ற சக்திகளும் இருப்பதனால் மிக்க அகங்கார முடையவர்களாயிருப்பார்கள். அதனால் அவர்கள் நல்லதைச் செய்தாலும் கெட்டதைச் செய்தாலும், தாங்கள் செய்வதுதான் சிறந்ததென்று நினைத்துத் தற்பெருமை கொண்டிருப்பார்கள். ஆதலால், அவர்கள் செய்வதற்கு மாறாக எதையும் பேசினால் அவர்களுக்குக் கோபம் வந்துவிடும். பிறர் சொல்லும் நல்ல வார்த்தைகளையும் கேட்கும் சுபாவம் அவர்களிடத்தில் இல்லை. அதனால் அவர்கள், தங்கள் சொல்லைத் தடுத்துப் பேசுகின்றவர்களுக்கு எத்தகைய தீங்கையும் மனந் துணிந்து செய்துவிடுவார்கள். பிறருக்கு எத்தகைய பெரிய தீங்கையும் விளைவிப்பதற்கு அவர்களுக்குச் சக்தியுண்டு. ஆகையால், அவர்களிடத்தில் பழகும் மனிதன், 'அவர்கள் எக்கேடு கெட்டாலும் கெட்டும்' என்று அவர்களுடைய பேச்சுக்குக் குறுக்கே பேசாமல் அவர்கள் நோக்கம்போல் தலையசைத்து வெகு ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும்.

2-வது: நாய், தனக்குப் பழக்கமில்லாதவரைக் கடிக்கும் மூர்க்க சுபாவமானதால், அறிதாரு மனிதனைக் கண்டு ரோஷத்தோடு குலைக்கும்போது அவன் அதனிடம்

னதிர்க்கக் கூடாது; இதமான ஜாடை செய்து 'தோ! தோ!' என்று கூப்பிட்டு, அதைச் சாந்தப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் அது கீழ்த்துவிடும்.

3-வது: எருது, பழக்க மில்லாதவர்களைக் குத்தும் சுபாவமுடையது. ஆதலால், அது எதிர்ப்பட்டுக் குத்த வரும்போது அதனை டெதிர்க்காமல், சாந்தமான சப்த மிட்டு அதனைச் சமாதானப்படுத்திக் கொள்ளவேண்டும்.

4-வது: குடிகாரன், மது மயக்கத்தால் மதி மயங்கி, தூஷணையாகப் பேசித் துஷ்ட காரியங்களைச் செய்யக் கூடியவனுதலின், அவனுடைய வார்த்தைக்கு மாறுக எதையும் பேசக்கூடாது. அவன் நோக்கத்திற் கிணங்கிப் பேசி, அவனை நோக்கி, "மாமா! இங்கே வாருங்கள்; இப்படி உட்காருங்கள்; நீங்கள் க்ஷேமமாயிருக்கிறீர்களா?" என்று அன்புடன் விசாரித்து அருகில் உட்காரவைத்தால் அவன் மிக்க சந்தோஷமடைவான்; சமீபத்தில் உட்கார்ந்து சுருட்டுப் பிடித்துக்கொண்டு உற்சாகமான வார்த்தைகளைப் பேசுவான். அவனை டெதிர்த்துப் பேசினாலோ, அவன் வாய்க்கு வந்தபடி திட்டி எதிர்த்தவனை அடிக்கத் தொடங்குவான். ஆதலின், இந்த நான்கிடங்களிலும் ஜாக்கிரதையாக நடந்துகொள்பவன் துன்ப மடையமாட்டான்.

840. சர்ப்ப சுபாவ முள்ளவர்களிடத்தில் ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமென்பது:

உலகத்தில் சர்ப்பத்தின் குணமுடைய சிலர் உண்டு. அவர்கள் சாதாரண மனிதர்களைப்போலவே யிருந்துகொண்

ண்டு, சர்ப்பம் தன்னிடத்தில் நெருங்குவோரைக் கடித்தூத் தன் விஷத்தால் உபத்திரவஞ் செய்வதுபோல, தம்மிடம் நெருங்குவோரைத் தம்முடைய துர்ச்செய்கையால் துன் பப்படுத்திக்கொண் டிருப்பார்கள். அவர்களுடைய விஷச் செய்கையை இலகுவில் தெரிந்துகொள்ளுதல் முடியாது. ஆதலால், அவர்களுடைய இயற்கையை உணர்ந்து கொடுஞ் செயலுக்கு உட்படாதிருக்கும் விஷயத்தில், மனிதன் மிக்க பிரயாசை யெடுத்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால், அவர்களுடைய கொடுமைக்கு உட்பட்டு, அவர்களோடு விரோதங் கொண்டு, அவர்களிடம் பழிக்குப் பழி வாங்க வேண்டு மென்னும் ஆத்திரத்திற் குள்ளாகி அவஸ்தைப் பட ஏது வுண்டாகும்.

841. ஒருவனுடைய சகவாசத்துக்குத் தக்கபடி குணமும், குணத்துக்குத் தக்கபடி சகவாசமும் அவனுக்கு ஏற்படு மென்பது:

ஒருவன், செய்கின்ற சகவாசத்துக்குத் தக்கபடியே அவனுக்குக் குணங்கள் ஏற்படும். அதாவது, அவன் கெட்ட மனிதரோடு சேர்ந்தால் கெட்ட குணங்களை யுடையவனு யும், நல்லவர்களோடு சேர்ந்தால் நல்ல குணங்களை யுடையவனுயு மிருப்பான். இன்னும் ஒருவன் குணங்க ளுக்குத் தக்கபடி அவனுக்குச் சகவாசம் ஏற்படும். அதா வது, அவன், நல்ல குணங்களையுடையவனு யிருந்தால் நல்லவர்களோடு சேர்வான்; கெட்ட குணங்களை யுடைய வனு யிருந்தால் கெட்டவர்களோடு சேர்வான்.

842. வீரன் இன்னவ னென்பது:

பெண்களின் மத்தியில் வசித்தாலும் அவர்களிடம் சிந்தனை செலுத்தாம லிருப்பவனே வீரன்.

843. தியாசபிக்கல் சங்கத்தாரின் அபிப்பிராயத்தைப்பற்றிய வினவிடை: பக்தியிலுலேயே ஈசுரனை யடையலா மென்பது:

ஒரு பண்டிதர், ஒரு சமயம் ஸ்ரீ ராமகிருஷ்ணரை நோக்கி, "சுவாமி! தியாசபிக்கல் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், தங்களில் மகாத்மாக்கள் உண்டென்றும், நக்ஷத்திர மண்டலம், தேவ மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம் முதலிய மண்டலங்களிலும், வெவ்வேறு உலகங்களிலும் உண்டென்றும், மனிதனுடைய சூக்ஷ்ம சரீரமானது அந்த எல்லா இடங்களுக்கும் செல்லக்கூடு மென்றும், இன்னும் இவை போன்ற பல விஷயங்களையும் கூறுகின்றார்கள். அவர்களுடைய கொள்கைகளைப்பற்றிங் தங்களுடைய அபிப்பிராய மென்ன?" என்று வினவினர். அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர், "பக்தி யொன்றே மனிதனுக்குப் பிரதானமானது; அவர்கள் அத்தியந்த ஆசையோடு ஈசுவரனிடத்தே பக்தி செலுத்தி, ஈசுவரானுபூதியையும் நோக்கத்தைக் கொண்டிருந்தால் அது நல்லதாகும். சூரிய மண்டலம், சந்திர மண்டலம், நக்ஷத்திர மண்டலம் முதலிய அற்ப விஷயங்களிலே அழுந்தி யிருப்பது, ஈசுரனை அடைதற்கான உண்மை யாராய்ச்சி யாகாது. இவற்றை யடையார் மகாத்மாக்க ளாகமாட்டார். ஈசுர

னுடைய பாதாரவிந்தங்களிலே பக்தி யுண்டாகுமாறு மனிதன் சாதனம் செய்யவேண்டும்; அதாவது, ஹிருதயத்திலே அத்தியந்த அவாவுடனே மனிதன் ஈசுரனை நோக்கி அழுது கரையவேண்டும்; வெவ்வேறு வஸ்துக்களிடத்தே செல்கின்ற மனதை ஒன்று சேர்த்து ஏகாக்கிரப்படுத்தி ஈசுவரன்மீது மாத்திரம் செலுத்தவேண்டும். மனித னுடைய ஹிருதயமானது ஈசுரனை யடையவேண்டு மென்ற ஆசையைக் கொண்டால் மாத்திரந்தான் அவனை அவனுல் காணுதல் முடியும். அந்த ஆசை மனிதனிடத்து இல்லாத பக்ஷத்தில் அவனுல் ஈசுரனை வேதங்களிலும் பார்த்தல் முடியாது; வேதாந்தத்திலும் பார்த்தல் முடியாது; வேறெந்தச் சாஸ்திரங்களிலும் பார்க்க முடியாது. பக்தி சாதனம் ஒன்றினுல் மாத்திரந்தான் அவனைக் காணலாமே யன்றி வேறு மார்க்கத்தில் அவ்வளவு சுலபமாக அடைய முடியாது'' என்று கூறினர். இதனுல் ஈசுரனை அடையும் மார்க்கம் இன்னதுதானென்று தெரிந்துகொள்ளலாம்.

844. மனிதன் ஆத்மானுபூதி யடையும் விதம்:

மனிதன், காட்சிப் பொருள்களை யெல்லாம், 'உண்மை வஸ்து இதுவல்ல, இதுவல்ல' என்று தள்ளிச் சமாதிநிலை யை அடைந்தால், ஆத்மாவை அனுபவத்தில் அறிவான். அவ்வாறு ஆத்மானுபூதி யடைவதே ஞானமாகும். இத் தகைய ஞானத்தில், அஞ்ஞானமென்றும், ஞானமென்றும், விஞ்ஞானமென்றும் மூன்று வகை யுண்டு. அவற்றுள் சிலர் பாலிப்பற்றிக் கேட்டுமாத்திர மிருப்பது போல

ஆத்மானுபூதியைப்பற்றிக் கேள்விப்பட்டு மாத்திரமிருப்பது அஞ்ஞானமாம்; சிலர், பாலைப் பார்த்து மிருப்பதுபோல ஆத்மானுபூதி நிலையைப் பார்த்திருப்பது ஞானமாம்; சிலர், பாலை ருசி பார்த்திருப்பதுபோல ஆத்மானுபூதியை யிகத் தெளிவாகவும், பரிபூரணமாகவும் அறிந்து அனுபவிக்தல் விஞ்ஞானமாம். இவ்வாறே சுகசரீரப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பவன் அஞ்ஞானி; அவரைப் பார்த்திருப்பவன் ஞானி; அவரைப் பிரத்தியக்ஷமாகக் கண்டி, சொந்தமானவராகவும், பரம பந்துவாகவும் கருதி, அவருடன் அந்தரங்க சம்பந்தம் வைத்துக்கொள்பவன் விஞ்ஞானி.

845. பிரஹ்மமே ஜகத்தா யிருக்கிற தென்பது:

ஒரு மானிகையின் மேல் மாடியும், அதற்கேறிச் செல்லும் படிக்கட்டுகளும் சுண்ணாம்பு, மணல் முதலிய ஒரே தன்மையனவான வஸ்துக்களாலேயே ஆக்கப்பட்டிருக்கின்றன. எனினும் மேல்மாடி உன்னத ஸ்தானமா யிருக்கின்றது; படிகளோ அதனிடம் போய்ச் சேருதற்குச் சாதகமா யிருக்கின்றன. அப்படி யிருந்தாலும் அவை உயர்ந்தனவாகக் கொள்ளப்படுவதில்லை. ஒவ்வொன்றாக ஏறி 'மேல் மாடி இது வல்ல, இது வல்ல' என்று தள்ளிக் கொண்டே போய் மேல் மாடியை அடைந்தவுடன் 'எல்லாப் படிகளும் தாழ்ந்தவை' என்று கிழ்ப்படுத்தத் தக்கவைகளாம். இவற்றைப்போலவே, பிரஹ்மம் என்று சொல்லப்படுவதே இருபத்துநான்கு தத்துவங்களையும் அடை-

ந்து ஜீவர்களாயும், ஜகத்தாயு மிருக்கின்றது; பஞ்ச பூதங்க ளாயு மிருக்கின்றது. ஆனால், இவைக ளெல்லாம் ஈசுரனே அடைதற்குப் படிகளா யிருக்கின்றன. ஈசுரன் இவற்றிற்கு மேற்பட்டவரா யிருக்கின்றார். ஒருவன், பிரஹ்மமாகிய ஈசுரனே அடையவேண்டுமாயின், "அவர் இந்தப் பஞ்ச பூதங்களல்லர்; சரீரமும் அல்லர்; இந்திரியங்களும் அல்லர்; மனமும் அல்லர்; புத்தியும் அல்லர்; அகங்காரமும் அல்லர்; தத்துவங்க ளெல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவர்" என்று ஜகத்துப் பொருள்களே யெல்லாம் தள்ளிக்கொண்டே போய் முடிவில் உன்னத ஸ்தானத்தி லிருக்கின்ற அவரை அடையவேண்டும். அவ்வா றடைந்துவிட்டால் மற்றப் பொருள்க ளெல்லாம் காழ்ந்தனவாக வீளங்கும். சிலர், 'பூமி, ஆத்மாவினிடமிருந்து உண்டாகியிருந்தால் ஏன் இவ்வளவு பெரிதாய்த் தடித்திருக்கின்றது?' என்று கேட்கக் கூடும். ஈசுரனுடைய இச்சையினாலே இத்தகைய அற்புத செய்கைகள் நிகழ்கின்றன. சதையும் எலும்பும் இரத்தத்திலிருந்தும், சுக்கிலத்திலிருந்தும் அவரால் உண்டாக்கப்படுகின்றன; சமுத்திரத்தின் நுரை கடினமாக்கப்பட்டு விடுகின்றது. இத்தகைய ஈசுரச் செயல்களே யெல்லாம் மனிதரால் அளவிடல் முடியாது.

846. ஈசுவரானுபூதி யடைந்தவனுக்கு எல்லாம் அவர் மயமாகவே தோற்று மெனல்:

ஈசுவரானுபூதி யடைந்தவனுக்கு உலகம் ஒருபொழுதும் சூனியமாகத் தோற்றாது. ஈசுவரானுபூதி யடைந்த

வன், ஈசுவரனே ஜீவனுயும், ஜகத்தாயும், பிரபஞ்சமாயும், அதன் பிராணிகளாயும், மற்ற எல்லாமாயும் ஆகியிருக்கிறான்று உணர்வான். அத்தகைய மனிதன், தனது குழந்தைகளுக்கு ஆகார மூட்டுகிறபொழுது, கோபாலனுக்கே ஆகார மூட்டுகிறதாக நினைப்பான்; தனது பெற்றோர்களை ஈசுவரனுகவும், ஈசுவரியாகவும் கருதுவான். மனிதன், ஈசுவரானுபூதி யடைந்த பின்னர், உலகிலிருந்து கிருகஸ்த வாழ்க்கை வாழும்படி நேரிட்டால் அவன், தனது மனைவியுடன் எவ்விதமான ஸ்தூலச் சேர்க்கையும் வைத்துக் கொள்ளமாட்டான். அவனும், அவன் மனைவியும் ஈசுவரபக்தர்களாகித் தங்கள் வாழ்க்கையை ஜப தபங்களிலே கழிப்பார்கள். 'ஈசுவரன் எல்லா வஸ்துக்களிலும் இருக்கிறார்' என்று நினைப்பதனுலே அவர்கள் எல்லாப் பிராணிகட்கும் பணிவிடை செய்து, எல்லாவற்றிலும் ஈசுவரனைப் பூஜிக்கிறார்கள்.

847. உண்மையான சாதுவினுடைய போது லக்ஷணங்கள்:

ஒருவர், ஒரு சமயம், ஸ்ரீ ராமகிருஷ்ணரை நோக்கி, "சுவாமி! நாம் ஒருவனை உண்மையான சாதுவென்று எப்படி அறிந்துகொள்ளக் கூடும்?" என்று வினவினர். அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர், "எவனுடைய இருதயமும் ஆத்மாவும் ஈசுவரனுக்குப் பரிபூரணமாய் அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கின்றனவோ அவனே உண்மையான சாது; பெண்ணையும் பொன்னையும் துறந்தவன் எவனே

அவனே உண்மையான சாது; உண்மையான சாதுவா யிருப்பவன் பெண்களை எப்பொழுதும் சாதாரண உலகப் பார்வையிலே பார்க்கமாட்டான். அவன் எக்காலத்திலும் அவர்களுக்குத் தூரத்திலேயே இருப்பான்; அவர்கள் சமீபத்தில் வரும்படி நேர்ந்துவிட்டால், அவன், அவர்களைத் தனது மாதாவாகக் கருதி அவர்களுக்கு மரியாதை செய்வான். இன்னும் உண்மையான சாதுவானவன் இடைவிடாமல் ஈசுவரனையே தியானித்து, அவர் எல்லாவற்றிலும் இருக்கிறார் என்பதை அறிந்துகொண்டு எல்லாப் பிராணிகட்கும் ஊழியம் செய்வான். இவைகளே உண்மையான சாதுவினுடைய பொது லக்ஷணங்களாம்; இவற்றைக் கொண்டு உண்மையான சாதுவைத் தெரிந்துகொள்ளலாம்'' என்று கூறினார். இதனால், உண்மைச் சாதுவின் இலக்ஷணங்களை அறிந்துகொள்ளுதல் கூடும்.

848. சரீரத்துக்கும் ஆத்மாவுக்கு முள்ள சம்பந்தம்:

ஆத்மாவோடு கூடிச் சரீரம் வந்திருக்கின்றது. மறுபடியும் சரீரம் பிரிந்து போய்விடும். ஆனால், ஆத்மாவுக்கு அழிவில்லை. சரீரத்துக்கும் ஆத்மாவுக்கும் உள்ள சம்பந்தமானது பாக்குக்கும் அதன் மேல் மூடிக்கும் உள்ள சம்பந்தம் போன்றது: பாக்கு, பச்சையாயிருக்கும்போது மேல் தோலோடு ஒட்டிக்கொண்டிருக்கிறது. பழுத்தபோது மேல்மூடியிலிருந்தும் வேறுபட்டுவிடுகிறது. இதைப் போலவே, மனிதன் ஈசுவரானுபூதி அடையாதபோது சரீரத்தோடு சம்பந்தப்பட்டிருப்பதாக நினைத்துக்கொண்

டிருப்பான். சகவாசை அனுபூதியில் அடைந்துவிட்டால் ஆத்மா, சரீரத்தினின்றும் வேறானது என்ற அறிவு அவனுக்கு உதயமாகிவிடும்.

849. ஏகாக்கிர தியானத்தில் வேறே உலக சிந்தனை தோற்று தேனல்:

ஒருவன், ஈசுரத் தியானத்திலே ஆழ்ந்து ஏகாக்கிரத் தன்மை படைத்துவிட்டால் அப்பொழுது அவனும் வேறு ஒன்றையும் பார்க்க முடிகிறதில்லை; கேட்கவும் முடிகிற தில்லை. அவனுக்கு உணர்ச்சிகூடப் போய்விடுகிறது. அவன் மீது அப்போது சர்ப்பம் ஊறினாலும் அதை அவன் உணர மாட்டான். சர்ப்பமும் அவனை மனிதனென்று உணராமாட் டாது. அவ்வாறு அதுவும் உணர்ந்தபடி அவன் கட்டை போல் ஸ்தம்பித்துவிடுவான்.

850. ஆழ்ந்த நிஷ்டையில் இந்திரியங்களின் தொழில்கள் நின்றுவிடுமென்:

மனிதனுக்கு ஆழ்ந்த நிஷ்டையிலே, இந்திரியங்களின் தொழில்க ளெல்லாம் நின்றுவிடுகின்றன. ஒரு வீட்டின் வெளி யறையின் வாசல் மூடப்படுவதுபோல மனத்தின் வெளியோட்டம் அடியோடு நின்றுவிடுகிறது. சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் இந்திரிய விஷ யங்களெல்லாம் வெளியே உணரப்படாமல் நடக்கின்றன. தியானத்தின் ஆரம்ப காலத்திலே இந்திரிய விஷயங்க ளின் காட்சியானது மனத்தின்முன் தோன்றும். எனி னும், நிஷ்டை பூர்த்தியாய்விட்டால் அவை ஒருபொழு

தும் இளம்புகிறதில்லை; வெளியே தள்ளப்பட்டுக் கிடக்கின்றன.

851. தாழ்ந்த வாசனைக ளுள்ளவர்களின் தன்மையும், உண்மைப் பக்தர்களின் தன்மையும்:

தாழ்ந்த வாசனைகளை யுடையவர்கள், வியாதிகளை நீக்குதல், வழக்குகளை ஜெயித்தல், நீர்மேல் நடத்தல் முதலிய சித்திகளையும், இவைபோன்ற மற்ற சக்திகளையும் நாடுவார்கள். உண்மையான ஈசுர பக்தர்கள், ஈசுவர னுடைய பாதார விந்தங்கள் தவிர வேறொன்றையும் நாட மாட்டார்கள்.

852. ஈசுரப் பிரக்ஞை முதலில் சரீரத் துன்பத்தை உண்டாக்கிப் பின்னர் ஆத்மாவுக்கு இன்பத்தை உண்டாக்கு மேனல்:

ஒரு பெரிய யானையானது, ஒரு சிறு குடிசைக்குள்ளே நுழைந்தால் அதனை அபாரமாக அசைத்துவிடும்; சில சமயங்களில் அதைச் சிதைத்துவிடுதலும் கூடும். இதைப் போலவே, மனிதனிடத்து உத்தமமான ஈசுரப் பிரக்ஞை உண்டானால் அது, சரீரத்துக்கும், மனத்துக்கும் ஒரு பயங்கரமான சலனத்தை உண்டாக்கிவிடும். அஃது ஆரம்ப காலத்தில் அவ்வாறு துன்பத்தை உண்டாக்கினாலும், அப் பொழுது எவ்வளவு துன்பத்தை உண்டாக்கிறதோ அவ் வளவு இன்பத்தை அந்த ஈசுரப்பிரக்ஞை நிலை பூர்த்தியான பின் உண்டாக்கிவிடும்.

முன், அப்போது என் சரீரத்தில் ஒட்டியிருந்த மண்ணு னாலி கருவினிட்டது. இன்னும் எனக்கு அந்த நிலைமை யுண் டானபோது, ஒரு பெரிய சுட்டி என் முதுகெலும்பி னோடு பாய்ந்துபோன்ற ஓர் உணர்ச்சி யுண்டாகும். அது னால் நான் பயந்துவிட்டேனென்று சில சமயங்களில் கூவு வதுமுண்டு. அந்த உணர்ச்சி எப்போதுதும் என்னைப் பின் தொடர்ந்துகொண்டே வந்தது. அதனாலேயே நான் சுகசீவிச் சிக்கப் பெற்றேன்.

854. மேதாசுாடியால் எல்லாவற்றையும் அறிந்துகொள்ள முடியு மென்பது:

மனிதன், பன்னிரண்டு வருஷங்கள் வரை, சேதனை அடக்கியிருப்பானேயால், அவன் மகா சக்திகளை அடைவான். அவன், அவ்வாறு சேதனை அடக்குவதனால் உள்ளே குருவாடி திருஷ்டிக்கப்படுகிறது; அது மேதாசுாடி எனப் படும். அந்த சாடி வளர்ந்தால் மனிதன் எல்லாவற்றை யும் நாடகப்படுத்திக்கொள்ள முடியும்; யாவற்றையும் அறிந்துகொள்ளவும் முடியும்.

855. ரேதஸ் நஷ்டத்தால் சக்தி நஷ்டம் உண்டாது மென்பது:

மனிதன், சேதனை நஷ்டப்படுத்துதலால் அவனுக் கேற்பட்ட சக்தியில் நஷ்டமுண்டாகும். சேதஸ் அவ்வா யுரியோனால் வெளியாகுதல் அதிகம் தோஷம் ஏற்படாது; ஆனால் ஆகார விசேஷத்தைப் பொறுத்ததாகியிருக்கின் றது. பொதுவாக சேதனை நஷ்டப்படுத்தாதிருக்க வேண்டு

மானால் உண்மையான ஆத்மஞானி, ஸ்திரீ சிந்தனை யற்றிருத்தல்வேண்டும்.

856. பிரஹ்மசர்யத்தால்தான் ஆத்மஞானத்தின் உண்மையை உணரக்கூடுமேனல்:

மனிதன், சுத்தப் பிரஹ்மசர்யத்தை அனுஷ்டித்தால் மாத்திரந்தான், ஆத்மஞானத்தைப்பற்றிய சூக்ஷ்மமான உண்மைகளை அறிதல் முடியும். இல்லையேல் அவற்றை உணர்தல் இயலாது.

857. உலகத்தைத் துறந்தவன் இன்னவனேன்பது:

ஸ்திரீ போகத்தை யொழித்தவனே உண்மையில் உலகத்தைத் துறந்தவனாவான். ஈசுவரன், அவனுக்கு மிகவும் சமீபத்திலிருக்கிறார்.

858. பக்தன், தெய்வீக விஷயங்களில் மிக ஜாக்கிரதையாயிருப்பானேன்பது:

உண்மையான சாதுவினுடைய மனத்தில் முக்கால் பங்கு ஈசுவரனுக்கு அளிக்கப்பட்டிருக்கும்; மீதியுள்ள காற்பங்கே உலகின்மீது செல்லும். சர்ப்பத்திற்கு வேறெந்தப் பாகங்களைக்காட்டினும் வாலில் உணர்ச்சி அதிகம். அதனால், அந்த வால் நசுக்கப்பெற்றால் அந்தச் சர்ப்பம் மிகுந்த கோபங் கொள்ளும். அதற்காக அது வாலில் அதிக ஜாக்கிரதை யுள்ளதாயிருக்கும். அதைப்போலவே, பக்தன் ஈசுரன்பால் செலுத்தப்படும் மனத்தின் பாகத்திற்கு இடையூறு நேராமல் அதிக ஜாக்கிரதையாயிருப்பான்.

தெய்வீக விஷயங்களில் கெடுதி சேர்ந்தால் அவனுக்கு மீக்க ஆத்திரமுண்டாகும்.

859. பரமஹம்ஸனுடைய நிலைமை ஒரு குழந்தையின் நிலைமைபோன்ற தென்பது:

ஒரு பரமஹம்ஸனுடைய நிலைமையானது ஒரு குழந்தையினுடைய நிலைமைபோன்றது. அவன் இன்று வரை ஸ்திரீகளுக்குக் குழந்தைபோன்று ஆடவருக்கும் ஸ்திரீகளுக்கும் நித்தியாசம் உணராமலிருந்தான். ஆயினும், உலகத்தில், மற்றவர்கள் ஸ்திரீகளின் விஷயத்தில் ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமென்பதை உணர்த்தும்பொருட்டு ஓர் உதாரணமாக அவன் ஸ்திரீகளின் விஷயத்திலே ஜாக்கிரதையாயிருந்து வரவேண்டும். அதாவது, ஸ்திரீகள் கூட்டத்திற் சாரா திருக்கவேண்டும்.

860. கபடற்றவனுக்கு ஈசுர தரிசனம் சுலபமாகக் கிட்டு மென்பது:

கபடற்ற ஒரு மனிதனே, அக் கபடற்ற தன்மையினாலே, ஈசுவரனிடத்தே சுலபமாக இட்டிச்செல்லும். கல்லில்லாததும், கன்றுகள் உழுது பிருதுவாக்கப்பட்டதுமான பூமியிலே விதைக்கும் விதையானது, சுலபமாக முளைத்துச் செழிப்பதிலே பலனளிப்பதற்கு வளர்வதைப் போல, கபடில்லாதவனிடத்திலே குரோபதேசங்கள் சுலபமாகப் படிந்து வளர்ந்து ஈசுவரானுபூதியடைதற்குத் தக்க பக்குவத்தைப் பெற்றுப் பழுத்து முதிர்ந்துவிடும். அதனால் அவனுக்கு ஈசுர தரிசனம் சுலபமாகக் கிடைக்கும்.

861. இலௌகீக மனத்தினருடைய பக்தி யனுஷ்டானங்கள் நிலைபேறு வென்பது:

இலௌகீக மனத்தினருடைய பக்தி யனுஷ்டானங்கள் அப்போதைக் கப்போது தோன்றி மறைந்துவிடும். அவை மனத்திலே நித்தியமாகப் பதிவதில்லை. ஈசுவரனிடத்திலேயே ஞாபகமுள்ள உண்மைப் பக்தர்களோ, தாங்கள் விடுகின்ற ஒவ்வொரு சுவாசத்துடனும் ஈசுவரனுடைய நாமத்தை ஜபிப்பார்கள்; இன்னும் அவர்களுட் சிலர், "ஓம் சாம் ஓம்" என்று தங்களுக்குள்ளேயே உச்சரித்துக்கொள்வார்கள்; ஞான மார்க்க துரந்தரர்களும் "ஸோஹம்" என்று கூறிக்கொண்டிருப்பார்கள். இன்னும் சில உண்மைப் பக்தர்கள், இடைவிடாமல் நாவை அசைத்து ஸ்தோத்திரம் கூறுவார்கள், அல்லது ஏதாவது மந்திரத்தை ஜபிப்பார்கள்.

862. நிஷ்டையும் மனனமும் அவசியமானவை யென்பது:

மனிதனுக்கு, மனத்தை ஏகாக்கிரப்படுத்தி ஈசுவரனிடத்தே நிலைக்கச் செய்கின்ற நிஷ்டையும், ஈசுவரநாம ஜபத்தை மனனஞ் செய்வதும் எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கவேண்டும்.

863. ஞான மடைவதற்கு அதிகாரமுள்ளவர்கள் மிகச் சிலரே யென்பது:

உலகத்தில் ஞானமடைவதற்கு அதிகாரமுள்ளவர்கள் மிகச் சிலரேயாவர். இதை அனுசரித்து, "ஆயிரத்தில் ஒருவர்தாம் ஈசனை அறிய விரும்புகிறார். அப்படி

அறிவு விரும்புபவர்களில் ஆயிரம் பேர்களுக்கு ஒருவரே ஈசனை அடைவர். இவ்வுபாசனைத் தவிப்பது இலகுவில் வெளர்ப்பும் இயலும் காரியமன்று; உலகத்திலே மனிதனுக்குப் பொன்னிடத்தும் பெண்ணிடத்தும் உள்ள ஆசையானது எவ்வளவுக் கெவ்வளவு குறைகின்றதோ, அவ்வளவுக் கவ்வளவு ஞானம் அதிகரிக்கும். அந்த ஞானம் அதிகரிப்பதற்குக் கடைபடி மனிதன் ஈசனை அடைவான்.

864. பணத்தைப்பற்றி அதிகமாகச் சிந்தனை செய்யக்கூடாதென்பது.

இவ்வுலகில் வாழ்க்கையில் விருப்பவர்களுக்குப் பணம் அவசியமாக வேண்டியிருக்கிறது. என்றாலும் அவர்கள் அதைப்பற்றி அதிகமாகச் சிந்தனை செய்யக்கூடாது. பணம் தானே எவ்வளவு கிடைக்கின்றதோ அவ்வளவில் திருப்தியடையவேண்டும். அதுவே சிறந்த மனப் பான்மையாம். பணம் சேர்ப்பதிலேயே கவலையாயிருக்கக் கூடாது. அப்படி விருப்பவர்கள் இவ்வுலகத்தில் விருந்தாளும் ஈசுவராநுக்கிரகத்தை அடைதல் கூடும். ஈசுவரனிடத்திலே தங்கள் வாழ்க்கை முழுவதையும், ஆத்மாவையும் சமர்ப்பித்து, அவரிடந்திலே சரணாகதியடைந்த பக்தர்கள், உலக விஷயங்களைப்பற்றியும், பணத்தைப்பற்றியும், ஒரு பொழுதும் சிந்திக்கமாட்டார்கள். அவர்களுக்கு வரும் பணம் செலவுக்கும் செலவுக்கும் சரியாயிருக்கும்; ஒரு பக்கத்திலிருந்து பணம் தானே வரும்; மற்றொரு பக்கத்திலே செலவழிக்கப்பட்டுவிடும்.

865. பரிபூரணத்துவம் அடைந்தவனை ஒவ்வொரு மதத்தினரும் ஒவ்வொரு விதமாகச் சொல்வார்க ளென்பது:

பரிபூரணத்துவம் அடைந்த புருஷனை, சர்த்தேயர் கள், கௌலன் என்று சொல்வார்கள்; வேதாந்திகள் பரம ஹம்ஸன் என்று சொல்வார்கள்; வைஷ்ணவர்கள் சம்பி என்று சொல்வார்கள்.

866. மாலை நேரம் ஈசுரத் தியானத்திற்கு மிக உரிய தென்பது:

மாலை நேரத்தில் ஒவ்வொருவருக்கும், "சிறிது நேரத் துக்கு முன் உலகத் தோற்றங்களெல்லாம் நம் பார்வைக் குத் தெரிந்தன; இப்பொழுதோ அவை யெல்லாம் அந்த காரத்தில் மூழ்கி நமது பார்வைக்குத் தெரியாமற் போய் விட்டன. இவை யெல்லாம் நிலையற்ற பொருள்கள்; ஈசுரன் ஒருவனே நிலைத்த பொருள். இப்பொழுது இந்த இருளை யுண்டாக்கி அவற்றை யெல்லாம் மறைத்து அவற்றின் நிலையற்ற தன்மையை ஈசுரனே நமக்கு உணர்த்தியிருக் கின்றார்; ஆதலின், உண்மைப் பொருளாகிய அவனை நாம் தியானிக்கவேண்டும்" என்பனபோன்ற பல நற்சிந்தனை களுண்டாகும். ஆதலின், மாலை நேரமே ஈசுரனைத் தியா னிப்பதற் குரியதாம். அந்த மாலை நேரத்தில் எல்லா வேலைகளையும் விட்டு ஈசுரனைத் தியானிக்கவேண்டும். இந்த நேரத்தில் தெய்வசிந்தனை செய்வதில் முஹம்மதி யர்கள் மிகச் சிறந்தவர்கள். அவர்கள் அவ்வாறு செய்வ தை ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டும்.

867. ஈசுவரனுக்கு ஸமர்ப்பிப்பது, பன்மடங்காகத் திருப்பிக் கொடுக்கப்படுகிற தென்பது:

மனிதன், ஈசுவரனுக்கு எதை ஸமர்ப்பித்தாலும் அஃது அவனுக்கு ஆயிரம் மடங்காக ஈசுவரனால் திருப்பிக் கொடுக்கப்படும். இதுபற்றியே எல்லா எக்ஞங்களின் கடைசியிலும், விவேகிகள், தங்கள் கர்ம பலனைக் கிருஷ்ணனுக்கு ஸமர்ப்பித்து ஒரு கை ஜலத்தை யெடுத்துத் தாரை வார்க்கிறார்கள். ஒரு காலத்தில் யுதிஷ்டிரர், தாம் செய்த பாபங்களையும் கிருஷ்ணனுக்கு ஸமர்ப்பிக்கக் கருதினர். அப்போது பீமசேனன் அவரை நோக்கி, "தாங்கள் அப்படிச் செய்யக்கூடாது; கிருஷ்ணனுக்குத் தாங்கள் எதை ஸமர்ப்பித்தாலும் அது தங்களிடமே ஆயிரம் மடங்காகத் திரும்பி வரும்" என்று கூறினன். இதனாலேயே ஈசுவரனுக்கு ஸமர்ப்பிக்கும் எதுவும் பன்மடங் கதிகமாகத் திரும்பிவரு மென்பதை உணர்ந்துகொள்ளலாம்.

868. பக்தி யனுஷ்டானங்களை மறைத்துவைத்தல் நல்ல தென்பது:

மனிதன், தனது பக்தி யனுஷ்டானங்களைப் பிறருக்குத் தெரியாமல் எவ்வளவுக் கெவ்வளவு மறைத்து வைத்திருக்கின்றானோ அவ்வளவுக் கவ்வளவு அவனுக்கு நல்ல தாம்.

869. ஈசுவரன் பலவிதங்களாகத் தோன்றுகிறா ரென்பது:

ஈசுவரன், சில சமயங்களில் மானிட வடிவத்திலும், சில சமயங்களில் சின்மய ரூபத்திலும் தோன்றுகிறார்.

ஆதலின், மனிதனுக்கு எந்த ஈசுவர சொரூபத்திலும் நம்பிக்கை யிருக்கவேண்டும்.

870. யந்திர பூஜையின் உயர்வு:

யந்திர பூஜை மிகவும் சிறந்த தாகும். கிருஷ்ணன் கூட ராதா யந்திரத்தை வைத்துக்கொண்டு அபாரமான சாதனம் செய்தார். யந்திரமாவது பிரஹ்மயோனியாம்; சாதனமாவது, அதைப் பூஜிப்பதும் தியானிப்பதுமாம். இந்த பிரஹ்மயோனியிலிருந்தே இலட்சக்கணக்கான உலகங்கள் உண்டாகின்றன.

871. சமாதிநிலை உண்டாகும் விதம்:

குண்டலினி சக்தி இளப்பப்பட்டா லொழிய ஞானே தயம் ஒருபொழுதும் உண்டாகாது. அந்தச் சக்தியானது மூலாதாரத்திலே அடங்கிக் கிடக்கின்றது. அதைத்தூண்டப் பெற்றால், சுஷும்ணைக்குள் நுழைந்து, சுவாதிஷ்டானம், மணிபூரகம் முதலிய மற்ற ஆதாரங்களின் மூலமாகச் சென்று கடைசியில் பிரஹ்மரந்திரத்தை அடையும். அப் பொழுது சமாதிநிலைமை யுண்டாகும். நான் இவற்றை யெல்லாம் பிரத்தியக்ஷமாகக் கண்டேன்.

872. ஈசுரநாம ஜபத்தால் அவரை அடையலா மென்பது:

ஜபம் என்பது, ஈசுவர நாமத்தை, ஓர் அமைதியான இடத்தில் உட்கார்ந்துகொண்டு, மௌனமாய்க் கூறுவ தாம். மனிதன், இவ்வாறு ஈசுவர நாமத்தை ஏகாக்கிர பக்தியுடனே ஜபித்துக்கொண்டே யிருப்பானேனால் அவன்,

கடைசியாகத் திவ்ய தரிசனங்களை யடையும் பாக்கியவந்தனாவான்; ஈசுவரானுபூதியையும் அடைவது நிச்சயம். சுவரில் அமிழ்ந்து கிடக்கும் ஒரு பெருங் கட்டைபின் முனையிலை கரையிலிருந்தபடியே ஒரு சங்கிலியை மாட்டி விட்டுப் பின்னர் அந்தச் சங்கிலியின் ஒவ்வொரு வளையத்தையும் பற்றிப்பற்றிச் சென்றால் கடைசியில் அந்தக் கட்டையை அடைந்துவிடலாம். அதைப்போலவே மனிதன், தன்னுடைய சிந்தனையை ஈசுவரனிடத்தே பற்றச் செய்துவிட்டு அவருடைய நாமத்தை ஜபித்துக்கொண்டே சென்றால் படிப்படியாக நெருங்கி முடிவில் அனுபவத்தில் அவரை யறிந்து அவரிடம் சார்ந்துவிடலாம்.

41-வது அத்தியாயம்

உதாரணக் கதைகள்

873. அறிவீனர்க்குச் செய்யும் ஞானோபதேசம் விபரீதத்தை விளைவிக்கு மென்பது:

அறிவற்றவர்களுக்கு ஞானோபதேசஞ் செய்தால் அவர்கள் அதை இன்னவிதமாகத்தான் அனுசரிப்ப தென்பது தெரியாமல், மூடமான வழியிலெல்லாம் உபயோகிப்பார்கள். இதற்கு உதாரணமாக ஒரு கதை யுண்டு: "ஒரு காலத்தில் ஓர் அரசனுக்கு அவனுடைய குருவானவர், 'பிரபஞ்ச மூழுவதும் பிரஹ்ம சொரூபமே' என்ற அத்வைத ஞானத்தின் பரிசுத்தமான கொள்கையைப் போதித்

தார். அரசன் இந்த உபதேசத்தைக் கேட்டவுடனே மிகவும் திருப்தியடைந்து, 'இனி நாம் உலகத்தில் எல்லாவற்றையும் சமமாகப் பாவிக்கவேண்டும்' என்று நிர்மானித்துக்கொண்டு அந்தப்புரத்துக்குப் போய்த் தன் மனைவியை அழைத்து, உனக்கும் உன்னுடைய பணிப்பெண்ணுக்கும் வித்தியாசமில்லை; இந்த உண்மையை அத்துவைதம் கூறுகின்றது: ஆதலின், இனிமேல் பணிப்பெண் என்னுடைய மனைவியா யிருப்பாள்' என்று அவளிடம் கூறினான். இராணி இதைக் கேட்டதும் திடுக்கிட்டு, 'இந்தப் பைத்தியக்காரத்தனம் குரு இவருக்குச் செய்த அத்துவைத உபதேசத்தினால் வந்திருக்கக்கூடும்' என்று தெரிந்துகொண்டு உடனே குருவை வரவழைத்து அவரிடத்தில், பரிதாபமான குரலுடனே, 'சுவாமி! என் நாதருக்கு நீங்கள் செய்த போதனையால் விபரீதம் விளைந்திருக்கின்றது' என்று அரசன் செய்தியைக் கூறினாள். குரு, 'அரசன் மந்த மதியால் இவ்விதம் கருதியிருக்கின்றான்; அவனுக்குப் புத்தி வரும்படி செய்யலாம்' என்று அவளுக்குத் தேறுதல் கூறிவிட்டு, 'இன்று அரசனுக்குப் போஜனம் பரிமாறும்பொழுது நீ சோற்றுக்குப் பதிலாக ஒரு சட்டி பசுவின் சாணத்தைப் பரிமாறிவிடு; அதன்மேல் ஆகவேண்டிய காரியத்தை நான் பார்த்துக்கொள்கிறேன்' என்றார். பின், போஜனகாலம் வந்தது; அரசனும் குருவும் போஜனம் உண்பதற்கு ஒரே பந்தியில் உட்கார்ந்தார்கள். அப்போது இராணி, அரசனுடைய இலையில் பசுவின் சாணத்தைப் பரிமாறினாள். அதைக் கண்டதும் அரசன்

ஆடங்காக் கோபம் கொண்டு, 'என்னடி பாவி! இவ்விதம் செய்கின்றாய்' என்று மனைவிமேல் புலிபோற் பாய்ந்தான். அப்போ ஒரு அவனைத் தடுத்து, 'ஐயா! நீர் அத்துவைத ஞானத்தில் தேர்ச்சி யடைந்திருந்தும் சோற்றுக்கும் சாணத்திற்கும் வித்தியாசம் பாராட்டலாமா?' என்றார். அரசன், 'அத்துவைத ஞானம் படித்தாலும் செய்யத் தகாத தைத எப்படிச் செய்யமுடியும்? ஐயோ! சாணத்தை யார் சாப்பிடுகிறது?' என்றான். குரு, 'பணிப் பெண்ணுக்கும் இராணிக்கும் வித்தியாசம் பாராட்டாம லிருக்கும்போது, சோற்றுக்கும் சாணத்துக்கும் வித்தியாசம் பாராட்டாமல் ஏன் இருக்கக்கூடாது?' என்றார். அரசன், 'அவர்களில் வித்தியாசம் பாராட்டாம லிருக்கலாம்; சோற்றுக்கும் சாணத்துக்கும் வித்தியாசம் பாராட்டாமல் எப்படி யிருக்க முடியும்? அப்படி யிருக்க முடியுமானால் அத்துவைதத்திற் இறந்த நீர் அந்தச் சாணத்தைச் சாப்பிட்டுவிடும் பார்க்கலாம்' என்றான். குரு, 'அப்படியே நான் சாப்பிடுகிறேன் பார்' என்று உடனே ஒரு பன்றி போல மெடுத்துக்கொண்டு அந்தச் சாணத்தை அதிக ஆவலுடனே விழுங்கிவிட்டு மீண்டும் தமது மானிட வடிவத்தை யெடுத்துக்கொண்டார். அரசன் மிகவும் வெட்கத்தை யடைந்து, 'எல்லாவற்றையும் சமத்துவமாகப் பாவிக்கும் நிலை இத்தகைய மகான்களுக்கே தகும்; நாம் பக்குவ மடையுமுன் அதைச் செய்ய ஆரம்பித்தது மதியீனம்; மேலும், வித்தியாசம் பாராட்டாமல் எல்லாம் ஒன்றென்று கருதும் தன்மை, எவ்விடத்தும் சமரசா வியாபகத்தைச் சிந்திப்பதாகும்; இலௌகிக தருமத்

தில் உலக இயலைத் தழுவி நடக்கவேண்டும்; இல்லாவிட்டால் விபரீத முடிவாய்விடும்; எல்லாவற்றையும் ஒன்றெனக் கருதும் பரிபூரணத் தன்மை அடைந்தபோது வேண்டுமானால் அவ் வித்தியாசங்களை விட்டுவிடலாம்; அந்த நிலையில் எதையும் சாதித்துவிட முடியும்' என்று உண்மை ஞானத்தை உணர்ந்து, அதுமுதல், தனது பைத்தியக்காரக் கொள்கையை விட்டுவிட்டான்."

இக் கதையினால், அவிவேகிகளுக்கு ஞானோபதேசஞ் செய்தால் அவர்கள் ஞான மூடத்தில் பிரவேசித்து அவஸ்தைப்படுவார்க ளென்ப துணரப்படும். ஞான மூடமாவது, ஞானத்தை மூடக் கொள்கைகளில் திருப்பிவிடுவது.

874. ஸ்ரீ ராமகிருஷ்ணர் கிருகஸ்த வாழ்க்கையை நீக்கியதற்குக் காரணமாகக் கூறிய கார்த்திகேயர் கதை:

ஒரு சமயத்தில் ஒருவர், ஸ்ரீராமகிருஷ்ணரை நோக்கி, "நீங்கள் மனைவியுடனே கூடி இல்வாழ்க்கையை ஏன் நடத்தவில்லை?" என்று கேட்டார். அதற்கு ஸ்ரீராமகிருஷ்ணர், "ஒரு நாள் கார்த்திகேய தேவர், வெளியில் சென்றிருக்கும்போது ஒரு பூனையைப் பிடித்து அதன் கன்னத்தில் தமது நகத்தினாலே கீறி விட்டுவிட்டு வீட்டிற்குச் சென்று அவருடைய மாதாவைப் பார்த்தார். அப்போது, அவர் பூனையின் கன்னத்தில் கீறிய குறிபோன்ற கீறல் அந்த அம்மாளுடைய கன்னத்தி லிருந்தது. அதைப் பார்த்ததும் அவர், மாதாவை நோக்கி, 'அம்மா! இந்த அவலக்ஷணமான கீறல் உமது கன்னத்தில் எப்படி யுண்

டாயிற்று?' என்று கேட்டார். அதற்கு ஜகன்மாதாவாகிய அந்த அம்மையார், அவரை நோக்கி, 'இந்த உன்னுடைய ஈசுத்தின் கிறலே' என்று சொன்னார். கார்த்திகேயர், அதைக் கேட்டதும் பிரமித்து, 'தாயே! நான் கிற லில்லையே! தாங்கள் இவ்வாறு கூறுதற்குக் காரண மென்ன?' என்றார். அதைக் கேட்டுத் தாயார், 'என் அருமைக் குழந்தாய்! நீ இன்று காலையில் ஒரு பூனையின் கன்னத்தில் கிறலில்லையா?' என்று கேட்டார். அவர், 'ஆம்' என்றார். அன்னையார் 'அந்தக் கிறல்தான் என் கன்னத்திலிருக்கின்றது' என்றார். கார்த்திகேயர், 'அந்தக் கிறல் உமது கன்னத்தில் எப்படி வந்தது?' என்றார். அதற்கு மாதா, 'என் அருமைப் புதல்வா! என்னைத் தவிர இவ் வுலகில் ஒன்றுமே யில்லை; நானே எல்லாச் சிருஷ்டிகளாயு மிருக்கின்றேன்; அதனால், எந்தப் பிராணியிடத்தும் நிகழும் செய்கை என்னிடத்தும் நிகழும்; அதுபற்றியே நீ பூனைக்குச் செய்த கிறல் என் கன்னத்திலு முண்டாய் விட்டது; நீ யாருக்கேனும் துன்பம் செய்தால் அத் துன் பத்தை எனக்கே செய்தவனாகின்றாய்' என்று மறுமொழி கூறினர். இதைக் கேட்டவுடனே கார்த்திகேய தேவருக்கு அதிக ஆச்சரிய முண்டாயிற்று. மேலும், தம் தாயாரே உலகத்தில் எல்லா ஸ்திரீகளுமாயிருக்கிறார்; அதனால் சகல மாதர்களும் நமக்குத் தாயே' என்ற உணர்ச்சியு முண்டாயிற்று. அந்த உணர்ச்சியினால் அவர், 'நாம் எந்தப் பெண்ணையும் மனைவியாக்கிக்கொள்ளக் கூடாது' என்று விவாகத்தை வெறுத்துவிட்டார். அவருடைய இந்தக்

கொள்கையை நான் கண்டதால் நானும் அவரைப்போலவே ஒவ்வொரு ஸ்திரீயையும் ஜகன்மாதாவாகவே கருதிவிட்டேன்; அதனாலேயே நான் இல்வாழ்க்கையை விரும்பவில்லை'' என்று கூறினார்.

இக் கதையினால், பெண்களெல்லோரையும் ஜகன்மாதாவாகக் கருதவேண்டுமென்னும் ஓர் பெரிய உணர்ச்சியுண்டாகும். இத்தகைய நல்ல விஷயங்களில் எல்லோரையும், எல்லா வஸ்துக்களையும், ஜகன்மாதாவின் அம்சமாகவும், ஈசுராம்சமாகவும் கருதுதல் சிறந்த கொள்கையாம்.

875. உலகில் ஒருவர்க்கோருவர் பற்றில்லை யென்பதற்கு உதாரணக் கதை:

ஒரு பிராமணன், ஒரு சமயத்தில் ஒரு சன்னியாசியைச் சந்தித்து, அவருடனே ஆத்மார்த்த விஷயமாகவும், இலௌகீக விஷயமாகவும் பேசிக்கொண்டிருந்தான். அப்போது சன்னியாசி அந்தப் பிராமணனை நோக்கி, ''சுழந்தாய்! இவ்வுலகில் ஒருவர்மீ தொருவர் பற்றுடையவர்களாயிருக்கமாட்டார்கள்'' என்று சொன்னார். பிராமணன் அந்த வார்த்தையை நம்பவில்லை. ஏனெனில், அவனுடைய பந்துக்கள் அவன்மீது மிக்க விசுவாச முடையவர்களைப் போல நடந்துவந்தார்கள். அப்படி விசுவாசமுடையவர்களாய் இரவும் பகலுமாகத் தனக்காகப் பாடுபட்டுவந்த அவர்களைத் தன்மீது விசுவாச மில்லாதவர்களென்று சொன்னால் அதை அவன் எவ்வாறு நம்புவான்? அவ்வாறு நம்பாததால் அவன் சன்னியாசியை நோக்கி, ''ஐயா!

எனக்கு ஒரு பிரிய தலை கோவு வந்து நான் இன்புற்று மும், என்னுடைய நோயைத் தீர்த்து என்னைச் சௌக்கிய முடையவனாயிருக்கச் செய்யும் விஷயத்தில் என் தாயா ரும், மனைவியும், பிள்ளைகளும் எவ்வளவோ சிரம மெடுத் துக்கொள்கிறார்கள்; இன்னும், எனக்காக அவர்கள் உயி ரைக் கொடுக்கவும் துணிவார்கள். அத்தகைய பற்றுத லுடையவர்களே, விசுவாச மில்லாதவர்க ளென்று நீர் சொல்வது நம்பிக்கையில்லாத விஷயம்'' என்றான். அதற்குச் சன்னியாசி, அவர்கள், தங்களுடைய சொந்த சுகத் தைக் கருதி உன்மீது விசுவாச முடையவர்களைப்போல நடிக்கிறார்கள்; அவர்கள் நடிப்பை நீ மெய்யென்று நினைக் கின்றாய்; அவர்கள் உனக்காக உயிரைக் கொடுப்பார்க ளென்பதை நீ அணுவளவும் நம்பாதே; நீ, நான் சொல் கிறபடி பரிசோதித்துப் பார்த்தால் அவர்களுடைய மனோ நிலையைத் தெரிந்துகொள்வாய்; நீ வீட்டிற்குப் போய் உன க்கு மிகுந்த வயிற்றுநோ வண்டாயிருப்பதாக அவர்களுக் குமுன்னே அழுதுகொண்டிரு; அப்போது நான் அங்கே வந்து அவர்களுக்கு உன்மீது பூரண விசுவாச மில்லை யென்பதை ஐந்து நிமிஷத்தில் வெளிப்படுத்திவிடு கின்றேன்'' என்று சொன்னார்.

பிராமணன் அப்படியே வீட்டிற்குச் சென்று வயிற்று நோய் வந்ததாகப் பாசாங்கு செய்து, படுத்துப் புரண்டு கொண்டிருந்தான். அப்போது அவனுடைய தாயார் முத லியவர்கள், அவன்மீது மிக்க விசுவாசமுடையவர்களைப்

போல வைத்தியரை அழைத்து வந்து அவரால் அவனுக்குச் சிகிச்சை செய்வித்தார்கள். மனநோய்க்கு மருந்தேது! அவன் நோய்கொண்டதுபோல் கடித்துக்கொண் டிருந்த படியால் அவன் வியாதியை அவரால் தீர்க்க முடியவில்லை. அப்போது அவனுடைய தாய், மனைவி முதலியவர்கள், அவனுக்காக இரங்குபவர்களைப்போலப் பரிதபித்துக் கண் ணீர்விட் டழுதுகொண்டிருந்தார்கள்.

அத்தருணத்தில் மேற் கூறிய சன்னியாசி அங்கே போய் அந்தப் பிராமணனுடைய கையைப் பிடித்துப் பார் த்துவிட்டு, "இந்த வியாதி மிகவும் பெரியது; இவனுக்காக வேறெவராவது தம்முடைய உயிரைக் கொடுத்தால் மாத் திரந்தான் இவன் பிழைப்பான்" என்று சொன்னார். இந்த வார்த்தையைக் கேட்டதும் அங்கிருந்தவர்க ளெல்லோ ரும் இதென்ன தொல்லையான விஷயமா யிருக்கிறதே! உலகத்தில் ஒருவருக்காக மற்றொருவர் உயிரைக் கொடு க்க முடியுமோ? வேறெதையானாலும் செய்துவிடலாம்; இதற்கு யார் உடன்படுவார்?" என்று நினைத்து மனங் குழம்பிக்கொண்டிருந்தார்கள்; சன்னியாசி அக் குறிப்பை உணர்ந்துகொண்டு முதலில் அந்தப் பிராமணனுடைய கிழப் பருவமுள்ள தாயாரை நோக்கி, "நீயோ விருத்தாப்பிய தசையை அடைந்துவிட்டாய்; இன்னும் கொஞ்ச நாளில் இறந்துபோவாய்; இனி உன்னால் இங்கே எவருக்கும் உதவி யில்லை; உன் மகனை, உங்கள் குடும்பத்தைச் சார்ந்த வர்களுக் கெல்லாம் சம்பாதித்துப் போடக்கூடியவனு

யிருக்கின்றன்; அப்போர்ப்பட்டவனுக்காக நீ உன்னுயி ரைக் கொடுத்து அவனை இச் சமயத்தில் காப்பாற்றினால் அச்செய்கை பலருக்கும் உபகாரமாம்; மேலும், அவன்மீது மிகுந்த பக்தியுடைய நீயன்றி வேறெவர் அவன் பொருட்டு உயிர் கொடுக்க இசைவர்? ஆதலால், உன் மகனுக்காக நீ உன் உயிரைக் கொடு" என்று கூறினர். இதைக் கேட்டவுடன் அவர் "அடே அப்பா! இஃதென்ன! பெரிய இடி நம் தலைமீது விழப்பார்க்கிறதே" என்று பயந்து கண்ணீர் விட்டழுதுகொண்டு அந்தச் சன்னியாசியை நோக்கி, "சுவாமி! என் புத்திரன் பிழைக்கும்பொருட்டுத் தாங்கள் செய்யச் சொல்லும் எதையும் செய்ய நான் கடமைப் பட்டவளே; எனினும், எனக்கு இன்னும் இரண்டு சிறு குழந்தைகள் இருக்கின்றார்கள்; நான் இறந்துவிட்டால் என்னுடைய எக்கத்தால் அவர்கள் இறந்துவிடுவார்கள்; இந்த ஒரு விஷயம்தான் என்னைத் தடுக்கின்றது; என்ன செய்கிறது; இதனால் இத் தருணத்தில் என்னுடைய பெரிய பிள்ளைக்கு உதவிசெய்யக் கூடாதவளா யிருக்கின்றேன்" என்று ஒரு சாக்குச் சொல்லி அதற் குடன்படாமல் நழுவி விட்டாள்.

இந்தச் சம்பாஷணை நடந்துகொண்டிருக்கும்போதே பிராமணனுடைய மனைவி, "நம் மாமியாரோ உயிர் கொடுக்க இசையமாட்டே னென்கிறாள்; இனிச் சாமியார் நம்பக்கம் திரும்பினாலும் திரும்புவார்; அதற்குள் நாம் தப்பிக்கும் மார்க்கத்தைத் தேடிக்கொள்ள வேண்டும்" என்று தனக்

குள் தீர்மானித்துத் தன் தாய் தந்தையர் பொருட்டுத் தான் உயிர் கொடுக்க முடியாதவளாயிருப்பதாக நடித்து எல்லோருக்கும் கேட்கும்படி, "ஐயோ! தாய் தந்தையர்களே! நீங்கள் விருத்தாப்பியர்களாயிருக்கின்றீர்களே; நானில்லாவிடின் உங்களை ஆதரிப்பவ ரெவருமில்லையே; இதனால் நான் என் அருமைக் கணவருக்காக உயிர் கொடுக்க முடியாதவளாயிருக்கின்றேனே; ஐயோ! இந்தச் சமயத்தில் நீங்கள் இருந்தல்லவா, என் புருஷர் உயிரை நான் காப்பாற்றுதற்கு இடையூறு செய்துவிட்டீர்கள்" என்று நாயகன்மீது அதிக விசுவாசமுடையவள்போல விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தாள். அவளுடைய கபடச் செய்கையைப் பார்த்தவுடனே சாமியார் அவள் பக்கம் திரும்பி, "அம்மா! உன் மாமி தான் தன்மகன் பொருட்டு உயிர் கொடுக்க மறுத்துவிட்டாள். நீயாவது உன் கணவனுக்கு உயிர் கொடுக்கத் துணிகின்றாயா? ஸ்திரீகளுக்குப் புருஷனைக் காட்டிலும் உரியவர்கள் வேறெ யாரிருக்கின்றார்கள்? ஆதலால், நீ அவனுக்காக ஆவியை அளிக்கலாம்" என்று கூறினர்.

இவள் முந்தியே தான் தப்பித்துக்கொள்ள அடிப்போட்டவளாதலால், இந்த வார்த்தைகள் செவியில் நுழைவதற்கு முந்தியே, "ஐயோ! சாமி! நான் புருஷனுக்கு உதவாத நிர்ப்பாக்கியவதி; நான் இறந்துபோய்விட்டால் என் தாய் தந்தையர் ஆதரிப்பாரின்றிக் கஷ்டப்படுவார்கள்; ஒரு சமயம் அவர்களை எவராவது காப்

பாற்றினாலும் அவர்கள் என்மீது மிக்க வாஞ்சையுடைய வர்க ளாதலால், நான் இறந்தவுடன் புத்திரி சோகத்தால் அவர்களும் இறந்துவிடுவார்கள்; இதை உத்தேசித்துத் தான் நான் இச்சமயம் உயிர்கொடுக்கக் கூடாதவளா யிருக் கின்றேன்; இஃதில்லாவிட்டால் என் கணவனை யிழந்து நான் அநுதினியாயிருக்க இசைவேனா; நானே முதலில் உயிர் கொடுக்க முன் வந்திருப்பேனே! என் தாய் தந்தைய ரின் பொருட்டுத்தான் 'நான் அமங்கலியா யிருந்தாலும் தோஷமில்லை' என்று அதற்கும் மனம் பொருந்தியிருக் கின்றேன்; ஆதலால், சுவாமி! என்னை இவ் விஷயத்தில் கட்டாயப்படுத்தக் கூடாது" என்று கண்ணைக் கசக்கிக் கொண்டு நழுவிவிட்டாள்.

அதன்மேல் சன்னியாசி, அந்தப் பிராமணனுடைய பிள்ளைகளைப் பார்த்து, "நீங்களாவது உங்கள் தந்தைக்காக உயிர் கொடுக்கின்றீர்களா?" என்று வினவினார். அதற்கு அவர்கள், "சுவாமி! எங்களுடைய தந்தையோ உலகத்தில் நெடுநாட்கள் இருந்து உலக போகங்களை யெல்லாம் அனு பவித்தவர்; இனி அவர் இறந்துவிட்டாலும் பாதக மில்லை; நாங்களோ இப்பொழுதுதான் யௌவன தசையை அடைந் திருக்கின்றோம்; இனிமேல்தான் நாங்கள் உலக போ கங்களை அனுபவிக்கவேண்டும்; அதற்குள் உயிர்விடுவ தென் றால் எங்களுக்கு மனம் சம்மதிக்குமா? நாங்கள் தந்தை மீது மிக்க விசுவாச முடையவர்கள்தாம்; இருந்தாலும் இந்த ஒரு விஷயந்தான் எங்களைத் தடுக்கிறது; நாங்கள்

அவரைப்போல் கொஞ்சமாவது போகங்களை அனுபவித்திருந்தால் இப்போது எல்லோருக்கும் முந்தி நாங்களே உயிரைக் கொடுக்க உடன்பட்டிருப்போம்; என்ன செய்கிறது; சமயத்தில் தந்தைக் குதவாத தனையர்களாய்விட்டோம்'' என்று விசேஷ பிரசங்கம் செய்து விலகிக்கொண்டார்கள்.

இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு சாக்குச் சொல்லித் தப்பித்துக்கொள்ளவே, சாமியார் பிராமணனை நோக்கி, ''இப்போது உனக்காக உயிர் கொடுக்க முன் வருபவர் ஒருவரு மில்லை பார்த்தாயா? நான் சொன்னதின் உண்மை தெரிந்ததா?'' என்று கேட்டார். உடனே வேதியன், ''சுவாமி! நான் உலக இயல் தெரியாமல் மௌட்டிகத் தன்மையில் மூழ்கியிருந்ததால் இவ் வுண்மையை உணராமற் போயினேன்; இப்பொழுது உங்களோடு பழகியதால் 'இவ் வுலகத்தில் ஒருவர்க்கு மற்றவர் சுதமில்லை' என்பதைத் தெரிந்துகொண்டேன்; இனி, எவ்விதத்தும் உதவி யில்லாத இத்தகைய பொய்த் தோற்றமாகிய உலக பந்தத்தில் நான் ஒரு நிமிஷமும் கட்டுப்படமாட்டேன்'' என்று துறவு பூண்டு அந்தச் சன்னியாசியுடன் சென்று விட்டான். இக் கதையினால் உலகத்தில் ஒருவர்க் கொருவர் தொடர்பில்லை யென்பதை நன் குணர்ந்துகொள்ளலாம்.

876. எந்த அனுபவமும் மனோ நிலையைப் பொறுத்ததா யிருக்கின்ற தென்பதற்கு உதாரணக் கதை:

ஒருவன், ஆத்ம லாபத்தை அடைவதும், பாபத்தை அடைவதும் அவனுடைய மனோ நிலையைப் பொறுத்தனவே

யிருக்கின்றன. அவை அவனுடைய இருதயத்திலிருந்தே உண்டாகின்றன; அவனுடைய பிரத்தியக்ஷ செயல்களால் அவை உண்டாவதில்லை. அவன் எந்தத் தொழிலைச் செய்துகொண்டிருந்தாலும் அவனுடைய மனம் எதை நாடியிருக்கின்றதோ அதன் அனுபவப் பயன்தான் சித்திக்கும். இதற்கு உதாரணமாக ஒரு கதை யுண்டு:

இரண்டு நண்பர்கள் வெளியே சுற்றி உல்லாசமாகப் பொழுதுபோக்கிவரப் புறப்பட்டார்கள். அப்படி அவர்கள் புறப்பட்டுப் பல தெருக்களையும் சுற்றிக்கொண்டு வரும்போது ஓரிடத்தில் பாகவதப் பிரசங்கம் நடந்துகொண்டிருந்தது. அதைக் கண்டவுடன் அந் நண்பர்களில் ஒருவன், மற்றவனைப் பார்த்து, "நண்பா! இங்கே பாகவத பாராயணம் நடக்கின்றது; இதில் ஹரியின் கீர்த்திப் பிரதாபங்கள் பாகவதரால் சொல்லப்படும்; ஆதலால், நாம் இங்கே கொஞ்ச நேரமிருந்து இந்தப் பிரசங்கத்தைக் கேட்டுவிட்டுச் செல்லலாம்" என்றான். உடனே மற்றொரு நிநேகிதன், "இது, மனத்திற்குச் சந்தோஷத்தைக் கொடுக்காது; நாம் தாசிவீட்டிற்குப் போனால் சந்தோஷமாகப் பொழுது போக்கலாம்" என்றான். இதற்கு முன்னவன் இணங்கவில்லை. அதனால் பின்னவன், அவனை நோக்கி, "நீ வேண்டுமானால் இந்தப் பாகவதத்தைக் கேட்டுக்கொண்டு இங்கேயே இரு; நான் தாசிவீட்டுக்குப் போய் வருகிறேன்" என்று பக்கத்துத் தெருவிலிருந்த பரத்தையின் வீட்டிற்குப் போய்விட்டான். முன்னவன் அவ்விடத்திற் முனேயிருந்து பாகவதம் கேட்டான்.

இப்படி இருவரும், தங்கள் தங்களுக் கிஷ்டமான ஒவ்வொரு காரியத்திற் பிரவேசித்த பிறகு தாசிவீட்டிற் குச் சென்றவனுக்கு அங்கே நடந்த இழிவான செய்கைக ளால் சந்தோஷ முண்டாகவில்லை; மிக்க அருவருப்பே உண்டாயிற்று; பாகவத சிரவணம் இனிமையா யிருக்கு மென்று தோற்றிற்று. அதனால் அவன், "அந்தோ! நான் ஏன் இந்தக் கேவலமான தாசிவீட்டிற்கு வந்தேன்; இப் போது என் நண்பன், பாகவத பிரசங்கத்தால் ஹரியின் திருநாமங்களையும், மகிமைகளையும் பிரமானந்தமாகக் கேட்டுக்கொண்டிருப்பான்; நானும் அங்கே இருந்தால் அந்த ஆனந்தத்தை அனுபவிப்பேனே" என்று தனக் குள் சிந்தித்துக்கொண்டே யிருந்தான். அந்தச் சிந்தனை யானது சிறிது நேரமாவது அவனுடைய மனத்தைவிட் டகலவில்லை. அதனால், அவன், இழிவான தாசிவீட்டி லிருந்தும் ஹரி தியானத்திலே மூழ்கிக் கிடந்தான்.

அவன் செய்கை இப்படியிருக்க, பாகவதம் கேட்டவ னுடைய நிலைமை எவ்வாறுயிற் றெனில், இவன், பாகவ தத்தைக் கேட்டுக்கொண்டிருந்தும், இவனுடைய மனம், நண்பன் சென்ற தாசி வீட்டிலேயே சென்றுகொண்டிருந் தது. 'இப்போது நம் நண்பன் தாசியுடனே விலாயாடி ஆனந்தத்தை அனுபவித்துக்கொண்டிருப்பான்,' என்று இவன் நினைத்தான். அதனால், இவனுக்குப் பாகவத பிரசங் கத்தில் இனிமை ஏற்படவேயில்லை. அவ்வாறுகவே இவன், "ஐயோ! நாம் ஏன் நண்பன் கூடச் செல்லாமல்

இங்கே யிருந்தோம்; தாஷிவீட்டிற்குச் சென்றிருந்தாலும் மிக்க ஆனந்தத்தை அடைந்திருக்கலாம்'' என்று சிந்தித்துக்கொண்டே யிருந்தான். சிறிது நேரமாவது இந்தச் சிந்தனை இவனுடைய மனத்தைவிட்டு அகலவில்லை. ஆதலால் இவன், பாகவதப் பிரசங்கத்திலிருந்தும் வேகிப் பிரியஞ்செய்விட்டான்.

இப்படி இவர்கள் செய்தபடியால், தாஷிவீட்டிற்குச் சென்றவனுக்குப் பாகவத சிரவணபலன் கிடைத்தது; பாகவதம் கேட்டவனுக்குத் தாஷி கமனத்தாலுண்டாம் பாபம் கிடைத்தது. இக் கதையினால் மனிதரின் மன நினைவைப் பொறுத்துத்தான் அனுபவமும் பயனும் ஏற்படுமென்பதும், மன சம்பந்தமின்றி எந்தச் செய்கை நிகழ்ந்தாலும் அதில் அனுபவமும் பயனும் ஏற்படாவென்பதும் உணரப்படும். இக் காலத்தில் அன்னியநாட்டு ஆசாரங்களையும், வேற்றுத் தேய நூல்களையும் கற்ற சிலர், 'ஒரு நீச்செயலை நினைப்பதாற் பாதகமில்லை, செய்தால் மட்டுந்தான் பாவம்' என்று கூறுவதைப் பலரும் கேட்டிருக்கலாம். இவர்கள், இத்தகைய மகான்களுடைய நிதிவாக்கியங்களையும் உண்மைக் கருத்துக்களையும் உய்த்துணர்வார்களாயின், இவ்வகையான தூர் அபிப்பிராயங்களுக்குத் தங்கள் மனத்தில் இடங் கொடுக்கமாட்டார்கள். எதோ காலக் கொடுமையினால், ஞானத்திற் சிறந்த நம் நாட்டினருள்ளும் சிலர், இத்தகைய விபரீத புத்தியுடையவர்களாய் வெளிப்பட்டுவிடுகின்றனர். இவர்கள் இத்

இகைய உபதேசங்களை அவசியம் கவனித்து இவற்றின் படி நடப்பின், நிச்சயமாக நற்கதி யடைவார்கள்.

877. ஆயுள் நிலையற்ற தாதலால் எதையும் உறுதியாகப் பேசலாகா தென்பதற் குரிய கதை:

பிராணிகளுள் ஆடுகளுக்குப் பல வகையிலும் அடிக்கடி ஆபத்துக்கள் நேருவது இயற்கை. அப்படி யிருந்தும் ஜூன் மாதத்திலே ஒரு தினம், தன் தாயிடம் விளையாடிக்கொண் டிருந்த ஓர் ஆண் ஆட்டுக்குட்டியானது, உற்சாகமாகத் துள்விக்கொண்டு தாயை நோக்கி, "நான் இரசபுஷ்பங்களை யெல்லாம் சேர்த்து நம் இனத்தவர்க்கு ஒரு விருந்து செய்யப்போகின்றேன்" என்று கூறிற்று. அதற்குத் தாய், "என் அரிய குழந்தாய்! அது, நீ நினைப்பது போலச் சுலபமாக நிறைவேறக் கூடிய காரியமன்று; நீ அங்ஙகைய விருந்திடுவதற்கு முன் உனக்கு எத்தனையோ ஆபத்துக்கள் தலைமேல் விருக்கின்றன; வரப்போகின்ற செப்டம்பர் மாதத்துக்கும், அக்டோபர் மாதத்துக்கும் இடையிலுள்ள நாட்கள் உனக்கு ஆபத்தைத் தரக்கூடியவைகள்; அந்த நாட்களில் எவரேனும் தூர்க்காதேவிக்குப் பலியிட உன்னைக் கொண்டுபோய்விடக்கூடும்; அதற்குப் பின் காளி பூஜை காலத்திலும் உன் கழுத்திற்குக் கத்தி வந்தாலும் வரக்கூடும்; இக் காலங்களில் உன் அதிர்ஷ்ட வசத்தால் நீ தப்பித்துக்கொண்டாலும் கூடப் பின்னர், ஜகதாத்ரி பூஜை வருகின்றது; அக்காலத்தில் நம் வகுப்பில் ஆண்களெல்லாம் பெரும்பாலும் வதை செய்யப்பட்டுவிடு

ன்றன; அதில் நீ அகப்பட்டுக்கொள்ளக் கூடும்; இந்த ஆபத்துக்களி லெல்லாம் நீ அகப்பட்டுக்கொள்ளாதிருந் தால் சுவம்பர் மாதம் ஆரம்பத்திலே அந்த விருந்தை நட த்தலாம்'' என்று கூறிற்று. இஃதொரு கட்டுக்கதையா யிருந்தாலும், இதில் ஆட்டினங்களுக்கு ஓர் பெரிய ஆடு கூறியவற்றைப்போன்ற ஆபத்துக்கள் மனிதர்க்கும் உண் டென்பதையும், அவ்வகை இடையூறுகளுள்ள மனித வாழ் க்கையில் மனம் விருப்பமான எந்தக் காரியத்தையும் உறு திப்படுத்திச் சொல்லக்கூடா தென்பதையும் இக் கதையின் உதாரணத்தால் உணர்ந்து கொள்ளலாம். இதைக்கொ ண்டு, நாம், நமது வாழ் நாட்களிலே கடக்கவேண்டிய அநேகம் ஆபத்துக்களை ஞாபகத்தில் வைத்து, நமது பாலிய த்தி லுண்டாகின்ற ஆசைகளுக்கு இடங் கொடுக்காமல் நிலைத்த வாழ்வை அடைதற்கான மார்க்கத்தைத் தேடிக் கொள்ளவேண்டும்.

878. மனித தேகத்தின் இழிந்த தன்மைக்கு உதாரண மான ஓர் கதை:

ஆத்ம தத்துவத்தை யுணராமல், கஷ்டப்பட்டுத் தேகத்தையே தானென்றும், அத்தகைய தன்னுடைய நிலைமை மிகத் தாழ்ந்த தென்றும் கருதி யிருந்த ஒருவன் தன்னை உயர்த்திக்கொள்ள விரும்பி ஒருநாள், ஒரு சாது விடம் சென்று, ''சுவாமி! நான் மிகவும் இழிந்தவன்; நான் மேன்மை யடையும் உபாயத்தை எனக்குக் கூறி யருளவேண்டும்'' என்று சொன்னன். சாதுவானவர்,

அவனுடைய உள்ளக் கருத்தை நன்கு தெரிந்துகொண்டு, "இவன் தன்னுடைய ஆத்மாவின் உயர்ந்த தன்மையை உணராமையால் இழிந்த தேகத்தையே தானென்று நினைத்துத் தான் இழிவடைந்திருப்பதாகக் கூறுகின்றான். ஆகலால், இவனுக்கு ஆத்மாவாகிய தான் வேறு தேகம் வேறு என்பதும், ஆத்மா உயர்ந்தது தேகமே மிக இழிந்தது என்பதும், தேகாபிமானத்தை விடுத்து ஆத்ம நிலையை அடைந்தால் மேன்மை யடையலா மென்பதும் தானே விளங்கும்படி ஒரு தந்திரம் செய்யவேண்டும்" என்று நினைத்து, அவனை நோக்கி, "நீ போய் உன்னைக் காட்டிலும் இழிந்த ஒரு வஸ்துவைத் தேடி யெடுத்துக்கொண்டு வா; அதன்மேல் நீ உயர்வடையும் மார்க்கத்தை நான் உனக்குக் காட்டுகிறேன்" என்றார். அவன் வெளியே சென்று நாலா பக்கங்களிலும் சுற்றித் தன்னைக் காட்டிலும் இழிந்த பொருளைத் தேடிப் பார்த்தான். அத்தகைய பொருள் ஒன்றும் அகப்படவில்லை. அதன்மேல் அவன், முதல் நாள் சாப்பிட்ட இனிமையான பலகாரத்திலிருந்து வெளிப்பட்ட தன்னுடைய மலத்தை ஓரிடத்திற் கண்டு, "இதுதான் நம்மிலும் இழிந்தது" என்று சாதுவினிடம் கொண்டு போவதற்கு அதை எடுப்பதற்குத் தன்னுடைய கையை நீட்டினான். அப்போது அதற்குள்ளிருந்து, "ஏ பாபி! நீ என்னைத் தொடாதே; நான் நேற்றுத் தேவர்களும் விரும்பத்தக்க இனிமையான அப்பமாயிருந்தேன்; என்னைப் பார்த்தவர்களெல்லாம் என்மீது விருப்பமுடையவர்களாயிருந்தார்கள். அப்படியிருந்த நான் என்னுடைய தூசிநீ

ஷ்ட வசத்தால் உன்னிடம் சேர்ந்தேன்; நீ விருப்பத்துடன் என்னை வாயிற் போட்டு மென்று தின்றாய்; ஆபாசமாகிய உன் குடலுக்குள் நான் போய்ச் சேர்ந்தேன்; அவ்வாறு சேர்ந்ததுதான் தாமதம், எவரும் பார்த்து அருவருக்கத் தக்க தன்மையை அடைந்து இத்தகைய மலமாய் வெளிப் பட்டுவிட்டேன்; உன்னோடு நான் சிறிது நேரம் சேர்ந் திருந்த தோஷமானது, என்னை இப்போர்ப்பட்ட இழிந்த நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டது. இப்போது என்னைப் பார்த்த மனிதர்க ளெல்லோரும் அருவருப்புக் கொண்டு மூகத்தைச் சுளித்துக்கொண்டும், மூக்கில் கைக்குட்டையை வைத்து மூடிக்கொண்டும் ஓடுகிறார்கள். இப்படி என்னை நீயே கெடித்ததுமன்றி இப்போது உன்னைக் காட்டிலும் தாழ்ந்த பொருளொன்றும் கருதி எடுக்க வந்திருக்கின்றாய்; நான் முன்னே உன்னோடு சிறிது நேரம் சம்பந்தப்பட்ட தனால் இத்தகைய ஆபாச நிலைமையை அடைந்தேன்; இன் னும் உன் கையால் என்னைத் தொட்டால் நான் என்ன கதி அடைவேனோ! ஆதலால், நீ என்னை விட்டு விலகிப்போய் விடு'' என்று ஒரு சப்த முண்டாயிற்று.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே அவனுக்குத் தன்னுடைய தேகத்தின் இயற்கையான ஆபாசம் வெளிப் பட்டது. அதனால் அவன், ''நம்முடைய தேகம் எப் பொழுதும் இழிந்ததே; ஆத்மா பரிசுத்தமானது; ஆத்மா வேறு, தேகம் வேறு; ஆத்மாவானது தேகத்தோடு கூடி யிருக்கின்றது; நாம் தேகாபிமானத்தை விடுத்து ஆத்மாவை

வேறுபடுத்தி ஈசுரத் தியானத்தில் மனதைச் செலுத்தினால் மேலான பதவியை அடையலாம்; இவ்வகை ஞான மின்றித் தேகத்தையே நாமென்று நினைத்துக்கொண்டிருந்தபடியால் நாம் இழிந்த தன்மையிலிருக்கின்றோம் என்ற அபிப்பிராயம் நமக்கு ஏற்பட்டிருந்தது; இப்பொழுது இந்த மலத்தினால் நம்முடைய தேகத்தின் ஆபாசமும் நிலையாமையும், ஆத்மாவின் பரிசுத்தமும் நித்தியமும் விளங்கிவிட்டன; இந்த உபதேசமே நமக்குப் போதும்; ஆதலால், இனி நாம், இந்த ஆபாசமான தேகாபிமானத்தை விடுத்து, ஆத்மலாபத்தை அடைதற்கான முயற்சியைத் தேடவேண்டும்'' என்று ஞான மார்க்கத்தில் பிரவேசித்து; மிகவும் சிரேஷ்டமான பரிபூரணத்துவத்தை நிச்சயமாக அடைந்தான். இக் கதையினால் மானிட யாக்கையின் இழிவையும் ஆத்மாவின் உயர்வையும் உணர்ந்துகொள்ளலாம்.

879. மனதில் எதை அதிகமாகத் தியானிக்கிறோமோ அதுவே சித்தியாகிவிடு மென்பதை விளக்கும் கதை:

மிகுந்த கடனுக்குள்ளான ஒருவன், கடன்காரர்களுடைய தொந்தரவுகளினின்றும் தப்பித்துக்கொள்வதற்காகப் பைத்தியம் பிடித்தவனைப் போல நடித்துவந்தான். அவனைச் சார்ந்தவர்கள், 'மெய்யாகவே அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது' என்று வைத்தியம் செய்யத் தொடங்கினார்கள். அவன் மேனும் மேனும் அதிகமாக நடிக்கத் தொடங்கியபடியால் வைத்தியத்தால்

அவனுடைய நடிப்புப் பைத்தியம் தீரவேயில்லை. அவனுக்கு மெய்யாக வியாதியிருந்தாலன்றே தீரும். இப்படி அவன் இடைவிடாது பைத்தியத்தையே சிந்தித்து நடித்துவரத் தலைப்பட்டபடியால், அந்தச் சிந்தனை முதிர்ந்து பொய்யான அவனுடைய நடிப்பு மெய்யாகவே பைத்தியமாக மாறிவிட ஆரம்பித்துவிட்டது. கடைசியாகப் புத்திசாலித் தனமுள்ள வைத்தியனொருவன், அவன் நடிப்புச் செய்துகொண்டிருந்ததையும், முடிவில் அது மெய்யாகவே பைத்தியமாக மாற ஆரம்பித்திருப்பதையும் உணர்ந்து அவனைத் தனியிடத்திற் கழைத்துச் சென்று, அவனை நோக்கி, "ஐயா! நீர் பைத்தியம்பிடித்தவர் போன்று முதலில் நடித்துவந்தீர்; அந்த நடிப்பு இப்போது மெய்யான பைத்தியமாக மாற ஆரம்பித்திருக்கிறது; உம்மிடத்தில் உண்மைப் பைத்தியத்திற்கான சில குறிகள் காணப்படுகின்றன; இன்னும் சில தினங்கள் சென்றால் உமக்கு மெய்யாகவே அதிகமான பைத்தியம் பிடித்துவிடும்; இதுமுதல் நீர் மிகுந்த ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்; பைத்தியக்காரர்போல் நடிப்பதை இனி விட்டுவிடவேண்டும்" என்று கடிந்து கூறினன். அதன்மேல் அவன் பயந்து அந்த மூடத்தனமான நடிப்பை விட்டுவிட்டான். அதுமுதல் அவனுக்கு நல்ல புத்தி வந்தது. இக் கதையினால் மனிதன் எதை அதிகமாக நினைக்கின்றானோ அதை அடைவானென்பது உணரப்படும். ஆதலின், ஒவ்வொருவரும் ஈசுரத் தியானம் செய்தால் அவரை எளிதில் அடையலாம்.

880. வீண் கர்வத்தால் கேவேரு மென்பதற்கு உதாரணமான கதை:

ஒரு தனவந்தனிடத்தில் ஒரு காரியஸ்தன் இருந்தான். அந்த எஜமானனுடைய சொத்துக்கள் எல்லாவற்றையும் மேல் பார்த்து வருவது அந்தக் காரியஸ்தனுடைய வேலை. இப்படி அவன் வேலை செய்து வரும்போது எஜமானனுடைய சொத்துக்களை யெல்லாம் தனக்குச் சொந்தமானவை யென்று வீண் எண்ணங் கொண்டு அகங்கரித்திருந்தான். அதனால் அந்த எஜமானனுடைய சொத்துக்களை எவரேனும் பார்த்து, "இவைக ளெல்லாம் யாருடையவைகள்?" என்று அந்தக் காரியஸ்தனிடம் கேட்டால் அவன், கர்வத்தோடு, "இவை யெல்லாம் எனக்குச் சொந்தமானவையே" என்று சொல்வது வழக்கம். அவன் இப்படி வீண் கர்வத்தில் மூழ்கியிருக்கும்போது ஒரு சமயம் அவனுடைய எஜமானன், தன்னுடைய உத்தியான வனத்திலிருந்த சிறு குளத்தில் உள்ள மீனைப் பிடிக்கக்கூடாது என்று அவனுக்குக் கட்டளையிட்டிருந்தான். இந்தக் கட்டளை பிறந்திருந்தும், ஒருநாள் அவன் அந்த உத்தியான வனத்திற் போய் உலாவும்போது, தனக்கேற்பட்டிருந்த செருக்கால், தன் எஜமானனுடைய கட்டளையையும் சட்டை பண்ணாமல் அந்தக் குளத்திலுள்ள மீனைப் பிடித்தான். அத்தருணத்தில் அவனுடைய துரதிர்ஷ்டத்தால் எஜமானன் அங்கே வந்து அவன், கட்டளையை மீறிச் செய்த அகங்காரமான செய்கையை நேரில் கண்டுகொண்டான். அவ்வாறு பார்த்ததும், "இவன் விசுவாசமற்றவன்;

செருக்கால் நமது கட்டளையையும் மீறிவிட்டான்; ஆதலால், இவனை நாம் இனி அரை நிமிஷமும் வேலைக்கு வைத்துக்கொள்ள லாசாது'' என்று அவனுடைய சொந்தச் சம்பாத்தியங்களையும் பிடுங்கிக்கொண்டு அவனைத் தண்டித்து அவமானப்படுத்தி வேலையிலிருந்தும் விலக்கித் துரத்திவிட்டான். அந்தக் கர்வம் பிடித்த காரியஸ்தன், தன்னுடைய வீண் இடம்பமான காரியத்தால் உத்தியோகத்தையும் கைப்பொருளையு மிழந்து வறுமை யடைந்து துன்பப்பட்டான். இதனால், வீண் இடம்பத்தை மேற்கொள்பவர்க்குத் துன்பம்வரு மென்பதை உணர்ந்து கொள்ளலாம்.

881. தேகம், தன்னுடைய செய்கைகளுக்குத் தக்கபடி நன்மை தீமைகளை அனுபவிக்கு மென்பதற்கும், ஆத்மாவும் மனத்தினுடைய செய்கைகளுக்குத் தக்கபடி நற்பயனையும் தீப்பயனையும் அடையு மென்பதற்கும் உதாரணமாகிய கதை:

ஒரு கோவிலினருகே ஒரு சன்னியாசி வசித்துவந்தார். அவருடைய வாச ஸ்தலத்துக் கெதிரில் ஒரு தாசி வீடிருந்தது. அந்த வியபிசாரியினுடைய வீட்டிற்குத் தினந்தோறும் அநேகம் தூர்த்தர்கள் போய் வந்துகொண்டிருந்தார்கள். அந்தத் தாசியினுடைய துர்ச்செய்கை, எதிரிலிருந்த சன்னியாசிக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவர், அவளுக்கு நற்புத்தி போதிக்கக் கருதி ஒருநாள் அவளைக் கூப்பிட்டு அவளிடத்தில், ''நீ ஒரு மகா பாபியா

யிருக்கின்றாய்; இரவும் பகலும் ஓயாமல் வியபிசாரமாகிய பாப கிருத்தியத்தையே செய்துகொண்டிருக்கிறாய்; இதற்குத் தக்க தண்டனை உனக்குக் கிடைக்காமற் போகாதே; நீ பின்னால் எவ்வளவோ துன்பங்களை அனுபவிக்கப் போகிறாய்; நீ இதைவிட்டு வேறு நல்ல காரியங்களைச் செய்யலாகாதா?'' என்று கண்டித்தார். உடனே அவளுக்குத் தன்னுடைய தொழில் கெட்டதென்று தெரிந்தது. அதனால் அவள், 'அந்த வியபிசாரத் தொழிலைவிட்டிவிடலாமா' என்று யோசித்தாள். அவன் மிகுந்த ஏழையாயிருந்தபடியாலும், அவளுக்கு வேறு வரும்படி வர வழியில்லாமை விருந்தபடியாலும், அத் தொழிலை விட்டால் அவளுடைய ஜீவனம் நடப்பதற்கு மார்க்கமில்லாதிருந்தது. அதனால் அவள் அந்த அயோக்கியத் தொழிலை விட்டுவிட முடியாமல், ஈசனை நோக்கி, ''கடவுளே! என் ஜீவனம் நடப்பதற்கு வேறு வழி யில்லாமையால் நான் இந்தக் கெட்ட தொழிலை விடக்கூடாதவளாயிருக்கின்றேன்; இதனால், நான் பாவியாயிருக்கின்றேன்; இதில் எனக்குச் சிறிதும் விருப்பமில்லை; ஆதலால், என் ஜன்மம் கடைத்தேறும்படி நீ எனக்கு வேறு நல்ல மார்க்கத்தைக் காட்டியருளவேண்டும்'' என்று இடைவிடாது ஈசனை ஸ்தோத்திரம் செய்துகொண்டே தன் ஜாதித் தொழிலை நடத்திவந்தாள். அத் தொழிலுக்கு அவளுடைய மாம்ச தேகம் இசைந்திருந்தமேத தவிர மனம் இசையவில்லை. அதனால் அவள் தேகம் அப் பாபத் தொழிலுக் கிசையும் போதெல்லாம் அவளுடைய மனம் ஈசனை நோக்கி,

"பகவானே! என் தேகம் பாபத் தொழிலுக் கிசைந்திருக் கின்றது; என் மனம் இதில் சம்பந்தப்படாததால் நீ என்னை மன்னித்தருளவேண்டும்; எனக்கு நற்கதி யளிக்கவேண் டும்" என்று பிரார்த்திப்பது வழக்கம்.

சன்னியாசி தனக்கு நற்போதனை செய்தும், இவள் இவ்வாறு தன்னுடைய தொழிலை விடாமல் கடைத்திவந்த தைக் குருநாள் அந்தச் சன்னியாசி பார்த்துவிட்டு, "இந் தப் பாவிக்கு நாம் நல்லுபதேசம் செய்தும், இவள் தன் னுடைய சுபாவத்தை விடவில்லை; இனி இவளுக்குப் புத்தி கூறுவதாலும் பயனில்லை; இவள் எப்படியாவது தொலை யட்டும்; நாம், இவளுடைய ஆயுள்காலம்வரையில் இவள் எவ்வளவு பாபத்தைச் செய்கிறா ளென்பதை இன்றுமுதல் எண்ணி அளவிட்டுப் பார்க்கவேண்டும்" என்று முடிவு செய்துகொண்டு அன்றுமுதல், அவள் வீட்டுக்கு ஒவ் வொரு மனிதனும் போய் வரும்போதெல்லாம் ஒவ்வொரு சிறு கல்லை யெடுத்துத் தமக்கெதிரில் போட்டுக் கணக்கிட் டுக்கொண்டு வந்தார். இப்படியே அவர் செய்துவரச் சில தினங்களுக்குள்ளேயே அந்தக் கற்கள் மலைபோற் குவி த்துவிட்டன. அதன்மேல் அவர் அந்தத் தாசியைக் கூப் பிட்டு அவளுக்கு அந்தக் கற்குவியலைக் காட்டி, "பெண் ணே! நான் முன்னொரு நாள் உன்னுடைய பாபத்தொழிலை விட்டுவிடும்படி உனக்குக் கூறியும் நீ விடவில்லை. அதனால் சில தினங்களுக்கு முன்னிருந்து உன்னுடைய பாபங்களைக் கணக்கிடும்பொருட்டு, உன் வீட்டிற்கு ஒவ்வொரு புரு

ஷன் வந்து போகும்போதெல்லாம் ஒவ்வொரு கல்லை எடுத்துப் போட்டுக்கொண்டு வந்தேன்; அந்தக் கற்களெல்லாம் நிரண்டு இந்தக் குவியலாகி யிருக்கின்றன; இந்தக் குவியலைக்கொண்டு உனக்கு நான் நல்லுபதேசம் செய்த தற்குப் பிறகு இதுவரை இவ்வளவு பாபங்கள் சேர்ந்திருக் கின்றன வென்பதை நீ தெரிந்துகொள்ளலாம்; இப்பொழு தும் நான் சொல்கிறேன்; இனிமேலாவது உன்னுடைய பாபத் தொழிலை நீ விட்டுவிடு" என்று கூறினர். அவள் அந்தக் கற்குவியலைப் பார்த்தவுடனே வீட்டிற்குப் போய் "அந்தோ! என் தேகம் இவ்வளவு பாபங்களைச் செய்திருக் கின்றதே; இத்தகைய தேகத்தோடு கூடிய ஜன்மத்தை நான் வைத்துக்கொண் டிருக்கலாமா; ஏ ஈசுரா! என்னை இந்தத் துக்ககரமான வாழ்க்கையினின்றும் விலக்கிவிடக் கூடாதா? என் ஜன்மத்தை ஒழித்துவிடக் கூடாதா?" என்று முன்னிலும் தீவிரமாகப் பயந்து ஈசுரனை நோக்கிப் பிரார்த்தனை செய்தாள்.

இவள் செய்கை இவ்வாறு கெட்டதாயிருந்தும், மனம் நாளுக்குநாள் ஈசுர தியானத்தில் எல்லையற்று அழுந்திப் போய்விட்டது. சாமியார் வெளிச் செய்கையும் ஆசாரமும் சன்னியாச ஆச்சிரமத்திலிருந்தும் மனம் அந்தத் தாசியின் தூர்ச் செய்கைகளைக் கணக்கிடும் விஷயத்தில் நாளுக்குநாள் அதிமாக அழுந்திவிட்டது. அதனால், தாசி ஈசுரத்தியானத் தை இடைவிடாமற் செய்யும் சன்னியாசியின் பரிபூரணத் தன்மையை அடைந்துவிட்டாள்; சன்னியாசி இடைவிடா

மல் துர்ச் செய்கைகளைச் சிந்திக்கும் தாசியின் தன்மையை அடைந்துவிட்டார்.

மேற்கூறியபடி அந்தத் தாசி முடிவில், தீவிரமாக ஈசுவரத் தியானம் செய்யவே, ஈசுவர சங்கற்பத்தால் அவள் அப்போதே உயிர் துறந்தாள். சன்னியாசியும் அத்தருணத்திலேயே இறந்துவிட்டார். உடனே விஷ்ணு தூதர்கள் வந்து அந்தத் தாசியினுடைய சூக்ஷ்மதேகத்தை வைகுண்டத்துக்குக் கொண்டு சென்றார்கள்; எமதூதர்கள் வந்து அந்தச் சன்னியாசியின் ஜீவனைக் கட்டிப் பாதாள லோகத்திலுள்ள நரகத்திற்குக் கொண்டு சென்றார்கள். அப்போது சன்னியாசி, "ஐயோ! இஃதென்ன! ஈசுவரனுடைய நீதி அற்புதமாயிருக்கின்றது! நான் என்னுடைய ஆயுட் காலமெல்லாம் தவத்திலிருந்தும் நரகத்துக்குக் கொண்டுபோகப்படுகின்றேன்; அந்த வியபிசாரி செய்த பாபங்கள் மலைபோற் குவிந்திருந்தும் அவள் வைகுண்டத்திற்குக் கொண்டுபோகப்படுகின்றாள்" என்று கதறினார். அத் தருணத்தில் பூமியில் அந்தச் சன்னியாசியினுடைய தேகம் நற்கருமங்களையேசெய்து கொண்டிருந்தபடியால் பூலோகத்தார் அதைப் புஷ்பங்களாலும் மாலைகளாலும் அலங்கரித்து எடுத்துப் பரிசுத்த நதியில் போடுவதற்கு மேள தாளங்களுடன் வெகு மரியாதையாக எடுத்துச் சென்றார்கள். தாசியின் தேகம் பாபகருமங்களைச் செய்துகொண்டிருந்தபடியால் அதை அவர்கள் எடுத்துக் கழுகுகளுக்கும் நரிகளுக்கும் முன்னே போட்டார்கள். அவைகள் அச்சரீரத்தைத் துண்டு துண்டு

ளாகக் கழித்துக்கொண்டிருந்தன. மேற் கூறியபடி சன்னியாசி கதறியபோது, ஸ்ரீவிஷ்ணு தூதர்கள் அவரை நோக்கி, "ஈசுவரனுடைய ஆக்ஞை எப்பொழுதும் நியாயமானதாகவே இருக்கும்; நீ உன்னைப் பரிசுத்தனாகவும், தாசியைத் துராத்மாவாகவும் கருதி இவ்வாறு கதறுகின்றாய்; உங்களுடைய செய்கைகளில் சூக்ஷ்மம் வேறே யிருக்கின்றது; நீ சன்னியாசி வேடந் தாங்கிக் கீர்த்தியையும் தற்பெருமையையும் விரும்பித் தாசியின் விஷயத்தில் மனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தாயே அன்றி ஈசுவரத் தியானத்தில் செலுத்தவில்லை; அந்தத் தாசி தன் தேகத்தால் பாபச் செய்கைகளைச் செய்துகொண்டிருந்தாலும் தான் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும்பொருட்டு இடைவிடாமல் எண்ணத்தை ஈசுவரன்பால் செலுத்திக்கொண்டேயிருந்தாள். அதனால் அவள் வைகுண்டத்திற்குக் கொண்டு போகப்படுகிறாள்; நீ நாகத்திற்குக் கொண்டுபோகப்படுகிறாய்; உன் தேகம் பாபச் செய்கைகளைச் செய்யாதிருந்தபடியால் பூலோகத்தில் அது கௌரவமாகப் புண்ணியநதியிற் போடக்கொண்டுபோகப்படுகிறது; தாசியின் தேகம் பாபச் செய்கைகளைச் செய்துகொண்டிருந்தபடியால் அது கழுகுகளுக்கும் நாய் நரிகளுக்கும் இரையாக எறியப்பட்டிருக்கிறது. மனத்தின் செய்கைக்குத் தக்க பலனை ஜீவன் அடையும்; தேகத்தின் செய்கைக்குத் தக்க பலனை அச்சரீரம் அனுபவிக்கும்; இவைகளெல்லாம் ஈசுவரனுடைய நியாயமான கட்டளைகளால் நடப்பவைகள்; இவ் விஷயங்களை உணராமல் நீயேன் வீணாகக் கதறுகின்றாய்" என்று

கூறினர்கள். இவற்றை யெல்லாம் கேட்ட பின் சன்னியாசி, தம்முடைய அறிவற்ற செய்கைக்காக மிக்க வாதனை படைந்தார்.

இந்தக் கதையினால், வீண் விஷயங்களில் மனத்தைச் செலுத்துவோர் துர்க்கதி யடைவ ரென்பதையும், நல்ல விஷயங்களில் மனத்தைச் செலுத்துவோர் நற்கதி யடைவ ரென்பதையும், தேகத்தின் செய்கைக் குரிய பயனைச் சரீரமே அடையு மென்பதையும், மனத்தின் செய்கைக் குரிய பயனை ஜீவன் அடையு மென்பதையும் உணர்ந்துகொள்ளலாம்.

882. மனிதர் செய்த குற்றத்திற்கு அவர்களே பாத்தியப் படவேண்டு மென்பதையும், பிற காரணங் கூறுவது மதியீன மென்பதையும் விளக்கிக் காட்டும் கதை:

ஒரு நகரத்தில் ஒரு பிராமணன், ஒரு தோட்டத்தை உண்டாக்கி, அதிலுள்ள வேலைகளைச் செய்வதற்கு வேலைக் காரன் ஒருவனையும் நியமித்து இரவும் பகலும் அத் தோட்டத்தையே கவனித்து வந்தான். ஒருநாள் ஒரு பசு, அத் தோட்டத்திற்குள் நுழைந்து அந்தப் பிராமணன் மிகப் பிரியமாய் வளர்த்து வந்த மாஞ்செடி யொன்றைத் தின்றுவிட்டது. அதைக் கண்டவுடனே பிராமணன் மிக்க கோபங் கொண்டு அந்தப் பசுவைத் தடியால் ஓங்கி ஓங்கி அடித்தான். அந்த அடியினால் அப் பசு இறந்துபோய்விட்டது. அந்தக் கொலைச் செய்தி ஊரெங்கும் பரவிவிட்டது.

அவ் வேதியன் உயர்ந்த வேதாந்தியா யிருந்தான். அப் படி யிருந்தும் அவன், கோவதை செய்ததால் அவ் வூரார் அவனை மிகவும் நிந்திக்கத் தலைப்பட்டார்கள். அப்போது அவனை நோக்கி, "நீர் வேதாந்தத் தற்ற வேதியராயிருந்தும் இவ்வாறு பசுவைக் கொல்லலாமா?" என்று பலர் கேட்கத் தலைப்பட்டனர். அப்படி அவர்கள் கேட்கும்போதெல் லாம், அவன், "நான் பசுவைக் கொல்லவில்லை; அதைக் கொன்றது என்னுடைய கையாகும்; அந்தக் கைக்கு இந் திரனே அதிஷ்டான தேவதை; அதனால், அந்தக் கை கோவதை செய்த பாபம் அவ் விந்திரனையே சாரும்; என் னைச் சாராது" என்று அவர்களுக்குச் சமாதானங் கூறி வந்தான்.

தேவேந்திரன் அந்தப் பிராமணனுடைய தந்திரச் செய்கையை உணர்ந்து அவனுக்குப் புத்தி வரும்படி செய்வ தற்கு ஒரு விருத்தப் பிராமணன் வடிவ மெடுத்துக்கொ ண்டு அவனிடம வந்து, அந்தத் தோட்டத்தை அவனுக் குச் சுட்டிக் காட்டி, "ஐயா! இந்த தோட்டம் யாருடை யது?" என்று கேட்டான். அதற்கு வேதியன், "இஃதென் னுடையதே" என்றான். இந்திரன், "உன்னுடைய தோட்ட வேலைக்காரன் மிகவும் கெட்டிக்காரன்; அவன், விருக்ஷங் களை மிக நேர்த்தியாக உற்பத்தி செய்திருக்கின்றான்; அதனாலேயே இத் தோட்டம் மிக்க அழகா யிருக்கின் றது" என்றான். உடனே பிராஹ்மணன் "ஐயா! தோட்டக் காரன் என்னுடைய கட்டளைப்படியும் விருப்பப்படியும்

நான் இங்குள்ள வேலைகளைச் செய்கிறேன்; ஆதலால் இங்குக் காணப்படும் சிறப்புக்க ளெல்லாம் என்னுடைய முயற்சியினால் ஏற்பட்டவைகளே'' என்று சொன்னான். அதன் மேல் இந்திரன் அங்குள்ள ஒரு பாதையை அவனுக்குச் சுட்டிக் காட்டி, அவனைப் பார்த்து, ''ஐயா! உம்மூடைய வேலைகள் மிகவும் சாமர்த்தியமானவைகள்தாம்; இந்தப் பாதையை ஏற்படுத்தினவர் எவர்? இது மிகவும் நேர்த்தியாயிருக்கின்றது; இதைச் செய்த வேலைக்காரனும் கெட்டிக்காரன்தான்'' என்றான். அதற்கும் பிராஹ்மணன், ''என்னுடைய யுத்தியைக் கேட்டே இதையும் எனது வேலைக்காரன் செய்தான்; ஆதலால், இதுவும் என்னுடைய கெட்டிக்காரத்தனத்தால் உண்டானதே'' என்றான்.

இவற்றை யெல்லாம் கேட்டுக்கொண்ட பின் இந்திரன் இரண்டு கைகளையுங் குவித்துக்கொண்டு அந்தப் பிராஹ்மணனை நோக்கி, ''ஐயா! இங்கு வேலைக்காரனால் செய்யப்பட்டிருக்கும் சாமர்த்தியமான காரியங்க ளெல்லாம் உம்மாலேயே நிறைவேறியதாகச் சொல்லி நீர் பெருமை யடைகின்றீர்; அது வாஸ்தவந்தான்; நீர் எவுதற் கருத்தாவாயிருந்து, வேலைக்காரனை இயற்றுதற் கருத்தாவாகவும் கருவியாகவும் வைத்துக்கொண்டு இவ் வேலைகளை நிறைவேற்றி யிருக்கின்றீர்; அதனால், இச் செய்கைக ளெல்லாம் உம்மூடையனவே; இப்படியே நீர் உமது கையை இயற்றுதற் கருத்தாவாகவும் கருவியாகவும் வைத்துக் கொண்டு பசுவைக் கொலை செய்திருக்கின்றீர்; அதனால்,

அந்தச் செய்கை உம்முடையதே ஆகும்; கைக்கு இந்திரன் அதிஷ்டான தேவதையாயிருந்தாலும் அதற்குக் கர்த்தா நீரே ஆகையினால் அது செய்த பாவமும் உம்மையே சாரும்; அப்படியிருக்க, அந்தப் பாவத்தை இந்திரன் மீது எப்படிச் சுமத்தலாம்? வேலைக்காரன் செய்த கல்ல காரியங்களுக் கெல்லாம் நீர் சம்பந்தப்பட்டவர்; உம்முடைய கையே செய்த பாபத்திற்கு மாத்திரம் இந்திரன் சம்பந்தப்பட்டவனு! நீர் இப்படி உம்முடைய குற்றத்தை இந்திரன்மீது சுமத்தியது மிகவும் அயோக்கியத்தன மல்லவா?'' என்று சொன்னன். அதற்கு பிராஹ்மணன் சமாதானம் கூற முடியவில்லை. அதனால் அவன் அக் குற்றத்தைத் தான் செய்ததாகவே ஒப்புக்கொண்டு அதற்குத் தக்க பரிகாரத்தைத் தேடிக்கொண்டான். இக் கதை, மனமாசக் குற்றத்தைச் செய்துவிட்டு அதற்குப் பொருந்தாத காரணங்களைக் கூறிக்கொண்டு திரியும் அவிவேகிகளுக்கு அறிவுறுத்தும்.

883. தற்கால கிருகஸ்தர்களின், களங்கமற்ற தன்மை, ஒருவகை மூடம் நிறைந்த தென்பதற்கு உதாரணமாகிய கதை:

ஒழுங்கற்றவைகளையும் ஒழுங்குள்ளனவாகப் பேர்த்திக்கும் இக்காலக் கல்வி கற்ற ஒருவர், சிலர் இல்லற தர்மங்களில் எதையும் கவனிக்காமல் குடும்பக் காரியங்கள் எல்லாவற்றையும் பெண்களிடம் ஒப்படைத்துவிட்டுப் புருஷத்துவம் சிறிது மின்றி ஏதேனுமொரு வேலைக்கு மாத்தி

சம் இடம்பமாகப் போய் வந்து சோம்பேறித்தனமாய் விட்டிற் படுத்துக்கொள்வதையே பற்றற்ற தன்மை யென்று தம்முடைய இரண்டின் கெட்ட கல்விக் கேற்றவாறு முடிவு செய்துகொண்டு அந்த அபிப்பிராயத்தை ஒட்டி, "இக் காலத்துக் கிருகஸ்தர்கள், உலக பந்தமென்னும் அழுக்கினாலே கறைப்படுத்தப்படாமல் இருந்துவிட முடியும்" என்று, ஸ்ரீ ராமகிருஷ்ணருடனே வாதஞ் செய்து கொண்டிருந்தார். அவருடைய மெளட்டீகக் கொள்கை யை உணர்ந்துகொண்ட ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரை நோக்கி, "இக் காலத்தில் உலக பாசத்தால் களங்கமுறுத கிருகஸ்தர் கள் இருக்கிறார்களென்று உம்மால் கூறப்படுபவர் இத் தனைய சென்பது எனக்குத் தெரியும்; அவர்கள் எப்பேர்ப் பட்டவர்க ளென்றால், குடும்பக் காரியங்களே யெல்லாம் மனைவியினிடம் ஒப்பித்துவிட்டுப் புருஷத்துவத்தை யிழந்து பேடிகளைப்போல் அடங்கி யிருந்துகொண்டு, அப்படி யிருப்பதையே, தாங்கள் உலக விஷயங்களால் கறைப்படுத் தப்படாம லிருப்பதாகக் கருதிக்கொண் டிருப்பவர்கள். அவர்களிடத்திலே ஓர் ஏழை வந்து ஏதாவது கொடுக்கும் படி இரந்தால், அவர்கள் மேற்கூறிய வகைப்படி தாங்கள் உலக விஷயங்களால் கறைப்படுத்தப்படாத கிருகஸ்தர் யிருப்பதனாலும், பண விஷயங்களிலே சம்பந்தப்படாத வர்களா யிருப்பதனாலும், அவர்களுடைய மனைவியே குடும்பக் காரியங்க ளெல்லாவற்றையும் தாங்கிக்கொண் டிருப்பதனாலும், தங்களுக்குக் காரியங்களே நடத்த எவ்வித அதிகாரமு மில்லா திருப்பதனாலும், தங்களிடம் பிச்சை

கேட்டு வந்தவனை நோக்கி, 'ஐயா! நான் பணத்தைக் கையினால் தொடுகிறதில்லை; ஆதலால், நீர் வேறு யாரிடத்திலாவது சென்று பிச்சை கேளும்' என்று சொல்வார்கள்; அந்த யாசகன் விடாக்கண்டனாயிருந்தால், அவர்கள் சங்கடப்பட்டு, 'இவன் நம்மை விடாதவனாயிருக்கின்றான்; இவனுக்கு ஏதாவது கொடுத்துத்தான் தொலைக்கவேண்டும்' என்று சங்கடப்பட்டு அவனை நோக்கி, 'ஐயா! நீர் நாளைக்கு வாரும்; நான் உமக்கு ஏதாவது கொடுக்க முடியுமா என்று யோசித்துப் பார்க்கிறேன்' என்று கூறுவார்கள். இவர்களுடைய செய்கைக் குதாரணமாகக் கதையொன்று கூறுகின்றேன் கேளும்:

உம்முடைய அபிப்பிராயப்படி அமைந்த கிருகஸ்தனாயிருந்தான். அவனிடத்தில் ஓர் ஏழைப் பிராமணன் சென்று தனக்கு ஏதாவது பணம் கொடுக்கவேண்டுமென்று பிச்சை கேட்டான். அந்தக் கிருகஸ்தன், யாசகனை நோக்கி, "நான் உலக சம்பந்தத்தை விட்டவன்; எல்லாப் பொறுப்பும் என் மனைவிக்கே உண்டு; எனக்குப் பண விஷயத்திலோ மற்ற விஷயங்களிலோ ஒன்றும் தெரியாது; நீ இங்கே வீணாகக் காத்துக்கொண்டிராமல் வேறு யாரிடத்திலாவது போய்ப் பணம் வாங்கிக்கொள்" என்றான். பிராமணன் விடாக்கண்டனாயிருந்தபடியால், போகாமல், மீண்டும் அவனை நோக்கி, 'ஐயா! நீர் ஏதாவது கொடுக்கத்தான் வேண்டும்' என்று பிடிவாதம் செய்தான். அந்தக் கிருகஸ்தன், யாசகன் தன்னைச் சும்மா விடமாட்டான்

னென்பது தெரிந்து, 'இவ்வேதனு தொந்தரவா யிருக்கிறதே; இவன் நம்மை விடாதவனு யிருக்கின்றானே; இவனுக்கு ஏதாவது கொடுத்துத்தான் தீரவேண்டும்' என்று முகத்தைச் சுளித்துக்கொண்டு, பிச்சைக்காரனை நோக்கி, 'நீ பிடிவாதக்காரனு யிருக்கின்றாய்; என்னுடைய தன்மையைச் சொல்லியும் நீ போகாமல் நின்று வம்பு செய்கிறாய்; அதை உத்தேசித்து வேண்டுமானால், உனக் கேதாவது கொடுக்கும்படி என் மனைவியிடம் சொல்லிப் பார்க்கின்றேன்; நீ நாளைக்கு வா; தெய்வச் செயலால் உன் காரியம் பலித்தால் நீ ஏதாவது கிடைப்பதைப் பெற்றுக் கொண்டு போகலாம்' என்றான். பிராமணன், 'அப்படியே நாளைக்கு வருகின்றேன்' என்று சொல்லிப் போய்விட்டான். அதன்மேல் அந்தக் கிருகஸ்தன், தன்னுடைய மனைவியிடம் சென்று, மிகுந்த பயபக்தியுடனே, "எனது கண்ணே! ஓர் ஏழைப் பிராமணன் சாப்பாட்டுக்கு மிகுந்த கஷ்டப்பட்டு என்னிடம் வந்து 'ஏதாவது கொடுக்கவேண்டும்' என்று கெஞ்சிக் கேட்டான்; நான் அவனை நாளைக்கு வரும்படி கூறியிருக்கின்றேன்; அவனுக்கு நாம் ஒரு ரூபாயாவது கொடுக்கவேண்டும்" என்று சொன்னான். ரூபாய் என்ற வார்த்தையைக் கேட்டவுடனே அவன் மனைவி கோபித்துத் துடிதுடித்துக் கடகடத்த முகத்துடன் அவனைப் பார்த்து, 'ஆ! நீ என்ன கஷ்டந் தெரியாத மனிதனு யிருக்கின்றாய்; ரூபாயென்றால் உனக்குக் கற்களும், ஓடுகளும், சருகுகளும் போன்றிருக்கின்றதே; ரூபாயு மில்லை; கீபாயு மில்லை; நீ

கெட்ட கேட்டிற்குத் தானம் செய்யவும் வேண்டுமோ' என்று சொன்னாள்.

அதன்மேல், புருஷத்துவ மிழந்த அந்தக் கிருகஸ்தன், தான் பிராமணனுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டுமேயென்று சங்கடப்பட்டு மிகத் தாழ்மையாக மீண்டும் அவளை நோக்கி, 'என் கண்மணி! கோபிக்காதே; தயவு செய்; அந்தப் பிராமணனுடைய நிலைமை மிகப் பரிதாபமாயிருக்கிறது; உனக்குத் தெரியாத தொன்றுமில்லை; அவனுக்கு ஒரு ரூபாயாவது கொடுத்தால்தான் அவனுடைய கஷ்டம் தீரும்' என்று கெஞ்சினான். அதன்மேல் அவள், சிறிது மனந்திரங்கி, 'இஃதேது தொந்தரவா யிருக்கிறது; ஏதாவது கொடுத்துத் தொலைக்கிறேன்; ஆனால், அவ்வளவு அதிகமாக ஒரு ரூபா கொடுக்கமாட்டேன்; இரண்டணாதான் கொடுப்பேன்' என்று அரைக்கால் ரூபாயை எடுத்து அவன் கையில் கொடுத்தாள். அவன் அதற்குமேல் ஒன்றும் பேச முடியவில்லை. 'இது கிடைத்ததே தெய்வச்செயல்' என்று அதை வாங்கி வைத்திருந்து மறுநாள் அந்த யாசகன் வந்தவுடன் அவனுக்குக் கொடுத்தான்.

நீர் கூறும், உலக களங்க மற்ற கிருகஸ்தர்கள் இவரைப் போன்றவர்களே. இவர்க ளெல்லோரும் பெண்சாதி சொற்படி நடப்பவர்கள்; இவர்கள் இத்தகைய இழி தன்மை யுடையவர்களா யிருந்தாலும், தாங்கள் உலகப்பொறுப்புக்களை யெல்லாம் மனைவியிடம் உதறித் தள்ளிவிட்டதாகவும், அதனால் பரிசுத்தர்களா

யிருப்பதாகவும், நிஜாத்துப் பெருமை பேசிக்கொண்டு திரிவார்கள்; இவர்கள் உண்மையில் களங்கமற்றவராகமாட்டார்கள்; பெண்வழிச்சேர்ந்த பேடிகளாவர். நீர் உம்மூடைய விவேகக் குறைவினால் மெளட்டிகக் கல்வி கற்றுவிட்டு, இத்தகைய பேதைகளுடைய மூடக் கொள்கையைப் பார்த்துக் களங்கமற்ற தன்மை என்று கருதி யிருக்கின்றீர்; இனி இந்த அபிப்பிராயத்தை விட்டுவிடும். உண்மையில் உலக களங்கமற்றவர்கள், தங்களுக்குரிய இலௌகீக தர்மங்களை ஏற்றுக்கொண்டு தாங்களே நடத்தி அவற்றில் பற்றின்றி ஈசுவரபக்தியில் மனத்தைச் செலுத்திக்கொண் டிருப்பார்கள். குடும்பத்தி லிருந்தாலும் தாமரையிலைத் தண்ணீர் போல் ஒட்டா திருப்பார்கள். இவர்கள்தாம் உலக பந்தத்தால் கறைப்படுத்தப் படாதவர்கள்; இக்காலத்தில் இத்தகையரைக் காண்பது மிகவும் அரிதாகும்; ஆதலின், இனி நீர் இத்தகைய களங்கமற்றவர்களை ஆராய்ந்தறிந்து கொள்ளும்" என்று கூறினார். அதன்மேல் அவர் அந்தத் தப்பபிப்பிராயத்தை விட்டொழித்து உண்மைத் துறவினை உணர்ந்துகொண்டார்.

இக் காலத்தில், மிகுதியும் கம்மத சாஸ்திர உணர்ச்சியின்மையால் அன்னிய ஆசாரங்களைக் கைக்கொண்டு தப்பான வழிகளில் பிரவேசித்து இத்தகைய மெளட்டிகக் கொள்கைகளை உயர்ந்தனவாக மதிப்பவர்களே மிகுதியும் காணப்படுகின்றனர். அவர்கள், இத்தகைய மாகான்களுடைய உபதேசங்களை உண்மையாக உணர்வார்களாயின் நல்வழிப்பட் டுய்வார்கள்.

884. சிற்றறி வுடையவர்கள் தங்களுக்குத் தெரிந்ததையே பெரிதாக நினைப்பார்கள் என்பதற்கு உதாரணமான கதை:

ஒரு கிணற்றில் ஒரு சிறிய தவளை வசித்துவந்தது. அஃது அங்கேயே பிறந்து வளர்ந்தது. அதற்கு அக்கிணற்றைத் தவிர வெளி விவகாரம் ஒன்றும் தெரியாது. அஃது அப்படி வாழ்ந்து வருங்காலத்தில், ஒரு சமயம் சமுத்திரத்தில் வாழ்ந்த தவளை ஆற்று வெள்ளத்தில் ஏறிவந்து தவறி அக் கிணற்றிற்குள் வீழ்ந்தது. முன்னமே கிணற்றில் வசித்துக்கொண்டிருந்த தவளை, புதிதாக வந்த தவளையை நோக்கி, "நீ எங்கிருந்து வந்தாய்?" என்று வினவிற்று. அதற்குக் கடல் தவளை, "நான் சமுத்திரத்திலிருந்து வருகிறேன்" என்று சொல்லிற்று. கிணற்றுத் தவளை, "கடலா! அஃதெவ்வளவு பெரிது?" என்று கேட்டது. கடல் தவளை, "அது மிகப் பெரிது" என்றது. கிணற்றுத் தவளை தன்னுடைய இரண்டு கால்களையும் நீட்டி வளைத்துக்கொண்டு அவ் வளைவுக்குள் ஏற்பட்ட இடத்தைச் சுட்டிக் காட்டி, "அந்தக் கடல் இவ்வளவு அகல மிருக்குமா?" என்று கேட்டது. கடல் தவளை, "அஃதின்னும் மிகப் பெரியது" என்றது. அதன்மேல் கிணற்றுத் தவளை கிணற்றின் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குத் தாவித் தான் பாய்ந்த நீட்டளவை அதற்குச் சுட்டிக் காட்டி, "அத்தக் கடல் இவ்வளவு நீளமும் அகலமும் கொண்டதாயிருக்குமா?" என்று கேட்டது. கடல் தவளை கிணற்

றுத் தவளையை நோக்கி, "எனது நண்பனே! கடலே இந்தச் சிறிய கிணற்றின் அளவுக்கு ஒப்பிடுவது மதியீனம்; அதை அளவிட முடியாத விஸ்தீரணமும் ஆழமும் உடையது" என்று கூறிற்று. உடனே கிணற்றுத் தவளைக்குக் கோப மூண்டாய்விட்டது; அது, தன்னுடைய இடத்தைத் தாழ்வாகக் கூறுகின்றது என்ற அபிப்பிராயம் ஏற்பட்டுவிட்டது. அதனால் அந்தக் கிணற்றுத் தவளை, கடல் தவளையை நோக்கி, "என்னுடைய கிணற்றினும் பெரிதாக உலகத்தில் வேறொன்று மிராது; அப்படியிருந்தும் நீ பாரபக்ஷமாக உன்னுடைய கடலே உயர்த்தியும் என்னுடைய கிணற்றைத் தாழ்த்தியும் கூறுகின்றாய்; நீ மகா பொய்யன்; ஆதலால், இங்கே அரை நிமிஷமும் இருக்கக் கூடாது; வெளியிற் போய்விடு" என்று வெகு மூர்க்காகப் பேசி அதைத் துரத்திவிட்டது.

சிற்றறிவுடையவர்கள் இந்தக் கிணற்றுத் தவளையைப் போன்றவர்கள்; பேரறிவுடையவர்கள் கடல் தவளையைப் போன்றவர்கள். இவற்றைப்போலவே தாங்கள் கண்டதை மாத்திரம் பெரிதென்று நினைத்துக்கொண்டிருக்கும் சிற்றறிவுடையவர்களிடத்தில் அநேகம் பெரிய விஷயங்களைக் கண்ட பேரறிவாளர் சென்று, தாங்கள் கண்ட அற்புதங்களையும், அறிவுள்ள விஷயங்களையும் கூறினால், அந்தச் சிற்றறிஞர் அவற்றை ஒப்புக்கொள்ளமாட்டார்கள்; தாங்கள் கண்டதையே பெரிதாகப் பேசுவார்கள். அவர்களுடைய வார்த்தையைப் பேரறிவாளர் தடுத்துப் பேசினால்

அவர்கள் அந்தப் பேரறிஞரைக் கடிந்து துரத்திவிடுவார்கள். இத்தகைய மூடர்கள், உலகத்தில் எத்தனையோ பேர்கள் இருக்கின்றார்கள். கல்வி கற்ற வகுப்பாருள்ளும் இத்தகையர் பலருண்டு. இவர்களுக்கு அறிவுறுத்துதல் எவராலும் இயலாது. இவர்களைக் குறிப்பிட்டே "கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் தெரியாது" என்னும் பழமொழியும் வழங்குகின்றது.

885. நல்விஷயத்தில் நடிக்கும் நடிப்பும் ஒரு சமயம் நற்பயனை அளித்துவிடு மென்பதற்கு உதாரணமாகிய கதை:

நடுச்சாமத்திலே ஒரு திருடன், ஓர் அரசனுடைய அரண்மனையிற் புகுந்து திருடுவதற்கு அந்தப் புரத்திலே ஒரு மறைவிடத்திற் பதுங்கியிருந்தான். அப்போது இராணியினிடத்திலே பேசிக்கொண்டிருந்த அரசன், "நான் நமது பெண்ணை, நம் நகர்க்கருகி லிருக்கின்ற நதிதீரத்தில் வசிக்கும் சாதுக்களுள் ஒருவருக்குக் கொடுத்துவிட உத்தேசித்திருக்கின்றேன்" என்று கூறினன். திருடன் இந்த வார்த்தையைக் கேட்டதும், "நாம் சாதுவேடந் தரித்து அந்த நதிதீரத்திலுள்ள சாதுக்களுடன் போயிருந்தால் ஒரு சமயம் இவ்வரசன் மகள் நமக்குக் கிடைத்தாலும் கிடைத்துவிடுவாள்; அப்படிக் கிடைத்துவிட்டால் நமக்கு அதைக்காட்டிலும் வேறே பாக்கியம் தேவையில்லை; நாம் இப்போது நாடி வந்த திருட்டையும் விட்டுவிட்டு விரைவிற் சென்று சாதுவேடந் தரிக்கவேண்டும்",

என்று அப்பொழுதே சந்தடி செய்யாமல் ஜாக்கிரதையாக வெளியேறிச் சென்று, சன்னியாசி வேடம் தாங்கி அந்த நகரத்திலுள்ள சாதுக்களுடன் கலந்திருந்தான்.

மறுநாளே அரசன் தான் பேசிக்கொண்டிருந்தபடி, சாதுக்களுள் தன் மகளுக்கு மாப்பிள்ளை யாவதற்குச் சம்மதிப்பவரை விசாரித்துத் தெரிந்துகொண்டு வரும்படி உத்தியோகஸ்தர்களுக்குக் கட்டளை யிட்டான். அவர்கள் அக் கட்டளைப்படி சென்று சாதுக்களிடம், "எங்கள் இராஜ குமாரத்தியை மணந்துகொள்வதற்கு உங்களில் யாருக்கேனும் இஷ்டமுண்டோ?" என்று வினவினார்கள். அவர்களில் யாரும் அதற்குச் சம்மதிக்கவில்லை. முடிவில் உத்தியோகஸ்தர்கள் அந்தத் திருட்டுச் சன்னியாசியினிடம் சென்று, "சுவாமி! நீங்களாவது எங்கள் இராஜ குமாரத்தியை மணஞ் செய்துகொள்ளுகிறீர்களா?" என்று கேட்டார்கள். அவன், "மௌனமாயிருப்பதே மாறு விருப்பம்" என்பதற் கிணங்கத் தான் சம்மதிப்பட்டது ஒருவாறு விளங்கும்படி ஒன்றும் பதில் சொல்லாமல் மௌனமாயிருந்தான். அந்தச் சாது அதற்கென்றே வந்த திருடனுடைய தனக்கு அவ் விஷயத்தில் அளவற்ற விருப்பமிருந்தும் தான் அவசரப்பட்டு, 'அவளைக் கலியாணம் செய்துகொள்கிறேன்' என்று சொன்னால் உத்தியோகஸ்தர்கள் சந்தேகப்பட்டாலும் படக்கூடுமென்றே அவ்வாறு ஒரு வகையில் சம்மதியில்லாதவன் போன்றும், மற்றொருவகையில் சம்மதித்தவன் போன்றும் இரண்டு கருத்தும் விளங்

கும்படி மௌனமுற்றிருந்தான். மௌனமா யிருப்பது பெரும்பான்மையும் சம்மதத்தையும், சிறுபான்மை சம்மதி யில்லாததையும் காட்டும். அதனால் அந்த உத்தியோகஸ்தர்கள் அவனுக்குப் பெரும்பான்மையும் சம்மதி யிருக்கிறதென்று தெரிந்துகொண்டு, உடனே அரசனிடம் சென்று, "அங்குள்ள சன்னியாசிகள் கல்யாணத்திற் கிணங்கவில்லை. ஆனால் ஒருவர் மாத்திரம் கொஞ்சம் சம்மத முடையவர்போல் மௌனமுற்றிருக்கின்றார்; அவரை வற்புறுத்தினால் அதற் கிசைவார்" என்று அரசனை அழைத்துக் கொண்டுபோய் அவனுக்கு அத் திருட்டுச் சாதுவைக் காட்டினார்கள். அரசன், அவனிடம் வணக்கத்தோடு, "தாங்கள் என் சுமாரத்தியை விவாகம் செய்து கொள்ளவேண்டும்" என்று மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்; அப்போது அத் திருடனுக்கு, "அடடா! நாம் கேவலம்! திருடனாயிருந்தும் சகலரும் வணங்கத் தக்க அரசன் நமக்குப் பணிவுடையவனாய் இவ்வாறு நம்மைக் கொண்டாடுகின்றானே; இது எதனால் ஏற்பட்டது? நாம் கொண்ட இந்தச் சாது வேடத்தினால்லவோ ஏற்பட்டது; இந்த வேடத்திற்கே இவ்வளவு மகிமை இருந்தால் உண்மையான சாதுவுக்கு எவ்வளவு மகிமை ஏற்படும்! சாதுத் தன்மையே உலகத்தில் சிறந்ததாகும்; ஆதலால், நாம் இனி உண்மைச் சாதுவாகி விடவேண்டும்; கேவலம்! நிஜமற்ற பெண்ணாசையையும், மற்ற வஞ்சகச் செயல்களையும் விரும்பலாகாது" என்ற ஓர் பெரிய உணர்ச்சி யுண்டாகிவிட்டது. அந்த உணர்ச்சி முதிர்ச்சி யடைந்து

விட்டது. அதனால் அவன், அரசனிடம் விவாகத்தை மறுத்துவிட்டு அன்றுமுதல் தன்னுடைய கெட்ட குணங்களைச் சீர்திருத்திக்கொள்ள ஆரம்பித்து, உண்மைச் சாதுவாக வேண்டிய முயற்சியெடுத்துச் சில நாட்களுக்குள்ளே மிகப் பரிசுத்தமான துறவிகளில் ஒருவனாகிவிட்டான். இக் கதையினால் நல்விஷயத்திற் செய்யும் போலித்தனமும் ஒரு சமயம் நற்பயனைத் தந்துவிடும் என்பது அனுமானிக்கப்படும்.

886. ஜகன்மாதா கிருபையுண்டானால் எதுவும் விரைவில் நிறைவேறுமென்பதற்குதாரணமாகிய கதை:

ஒரு நகரத்திலே ஜவுளி வியாபாரி ஒருவனிருந்தான். அவன் மிகுந்த பணக்காரன்; பணக்காரனாயிருந்தாலும் மிகுந்த லோபி. அவனுக்கு ஓர் ஏழைப் பிராமணன் உபதேச குருவாயிருந்தான். அந்தப் பிராமணனுக்குத் தன்னுடைய புஸ்தகத்தைக் கட்டிவைப்பதற்கு ஒரு சிறு துணி வேண்டியிருந்தது. அதனால் அவன் ஒருநாள், தன்னுடைய சிஷ்யனாகிய ஜவுளி வியாபாரியிடம் சென்று, "புத்தகம் கட்ட ஒரு துணி வேண்டும்' என்று கேட்டான். அதற்கு வியாபாரி, "சுவாமி! சிறிது நேரத்துக்கு முன்னே அதைக் கேட்கக்கூடாதா? முன்னாலே கேட்டிருந்தால் நான் அதைக் கொடுத்திருப்பேனே; தங்கள் காரியத்துக்குபயோகமான சிறு துணியொன்றும் இப்பொழுதென்னிடத்தில்லையே; இதைப்பற்றி நான் விசனிக்கின்றேன்; ஆயினும், தாங்கள் கேட்டதை நான் மறக்கமாட்டேன்;

நீங்கள் அதைப்பற்றி என்னிடம் அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொண்டிருங்கள்; சிறு தூணித்துண்டு விழும் சமயத்தில் நான் கொடுத்துவிடுவேன்'' என்று கூறினன். அந்தப் பிராமணன், தான் விரும்பியதைத் தன் சிஷ்யன் கொடுக்க மறுத்துவிட்டதைப்பற்றி வருத்தத்துடன் திரும்பிச் சென்றான்.

இவ் விருவரும் பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் ஐவுளிக் கடைக்காரன் மனைவி, மறைவில் நின்று இவர்களுடைய சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்தாள். அதனால், அவள், அந்தப் பிராமணன் தூணி கிடைக்காமல் மனம் வருந்திச் செல்வதை யுணர்ந்து, அவனுடைய விசனத்தை யொழிக்கக் கருதி, ஓர் ஆளை அனுப்பி அந்தப் பிராமணனை அழைத்துவரச் செய்து, அவன் சமீபத்தில் வந்தவுடன் அவனை நோக்கி, ''சுவாமி! தாங்கள் என் நாயகரிடத்தில் என்ன கேட்டுக்கொண்டிருந்தீர்கள்?'' என்று வினவினாள். பிராமணன் நடந்ததைக் கூறினன். அதன்மேல் அவள் அந்த வேதியனை நோக்கி ''சுவாமி! நீங்கள் மனவருத்தப்படாமல் வீட்டிற்குச் செல்லுங்கள்; நாளைக் காலையில் உங்களுக்குத் தூணி கிடைக்கும்'' என்று கூறி அவனை அனுப்பிவிட்டாள். பிறகு வியாபாரி, அன்றிரவு வியாபாரம் முடிந்தவுடன் கடையை மூடிக்கொண்டு மனைவியிடம் சென்றான். அவள் அவனைக் கண்டதும், ''கடை மூடியாய்விட்டதோ?'' என்றாள். அவன் ''ஆம்; என்ன விசேஷம்?'' என்றான். மனைவி, ''நீர் உடனே

கடைக்குச் சென்று நல்ல துணிகள் இரண்டு கொண்டுவர வேண்டும்'' என்று கூறினாள். அவன், ''என்ன அவசரம்! நாளைக் காலையில் நீ வேண்டிய துணிகளைக் கொண்டுவந்து கொடுக்கிறேன்'' என்றான். மனைவி, ''நாளை எனக்கு அவைகள் அவசிய மில்லை; இப்பொழுதே நீர் அவற்றைக் கொண்டுவர வேண்டும்'' என்று ஓரே பிடிவாதமாகக் கூறினாள். ஐயோ! அவன் என்ன செய்வான் பாவம்! தனக்கு வேத மந்திரங்களை உபதேசிக்கும் குருவுக்குச் சாக்குப் போக்குகள் சொல்லி அவனை அனுப்பிவிடத் தன்னால் முடிந்தது; தலையனை மந்திரோபதேசம் செய்யும் குருவாகிய மனைவியின் வார்த்தையைத் தட்ட முடியவில்லை. அவன் அதைத் தட்டினாலோ வீடு அமர்க்களமாகிவிடும். அதற்காகப் பயந்து அந்த ஜவுளி வியாபாரி, அந்த இரவிலேயே சென்று கடையைத் திறந்து துணிகளை யெடுத்துக் கொண்டு வந்து மனைவியிடம் கொடுத்தான். மறுநாள் காலையிலேயே அவள் அத் துணிகளை அக் குருவின் வீட்டிற் கனுப்பினது மன்றி, பின்னர் ஏதாவது வேண்டியிருந்தால் தன்னிடம் வந்து கேட்டுப் பெற்றுக்கொள்ளும்படிக்கும் அந்தப் பிராமணனுக்குச் சமாச்சாரமும் சொல்லியனுப்பினாள். பிராமணன் அவ்வாறே செய்துகொண்டிருந்தான். இந்தப் பெண் ஜகன்மாதாவின் அம்ச மாதலினாலே இவருடைய கிருபை கிடைத்த மாத்திரத்திலேயே பிரம்மனுடைய காரியம் நிறைவேறிற்று. ஆடவர்களால் ஆகாத காரியம் பெண்களால் எளிதில் நிறைவேறிவிடும். ஆதலால், சர்வஜீவ தயாபரியாகிய ஜகன்மாதாவி

னிடத்திலே அன்பர்கள் செய்யும் பிரார்த்தனை; ஈசுரனிடத்தில் செய்யும் பிரார்த்தனைகளைக் காட்டிலும் சீக்கிரம் கவனிக்கப்பட்டுப் பலனளிக்கும். இக் கதையினால், ஜகன்மாதாவாகிய சத்தியின் பெருமை இன்னதென விளங்கும்.

887. மேற்போக்கான சாஸ்திரப் படிப்பால் பயனில்லை யென்பதற் குதாரணமாகிய கதை:

ஒரு நகரத்தில் மிக்க சாஸ்திர ஆராய்ச்சியுடைய ஓர் அரசனிருந்தான். உட்கருத்துக்களை நன்று யுணராமல் மேற் போக்காக வேதம் படித்த பிராமணன் ஒருவன், அவ்வரசனிடத்திற் சென்று, "அரசனே! நான் வேதங்களிலே மிகுந்த விற்பத்தி யுள்ளவன்; பாகவதத்தில் எனக்கு நல்ல தேர்ச்சி யுண்டு; ஆகையால், உனக்கதை உபதேசிக்கக் கருதுகின்றேன்" என்று கூறினன். மிகுந்த புத்திசாலியாகிய அவ் வரசன், உட்கருத்துக்களோடு உண்மையில் பாகவதத்தைப் படித்துணர்ந்தவன், இராஜ சபையிலே அதைச் சொல்லிக் கௌரவத்தையும், ஐசுவரியத்தையும் அடைய விரும்பமாட்டா னென்பதையும், ஆத்மாவை யறிவதற்கே முயற்சி செய்வா னென்பதையும் உணர்ந்திருந்தானதலின், அந்தப் பிராமணன், அவ்வாறு அரசனிடத்தில் சிறப்படையலா மென்ற விருப்பத்தை மனத்தில் வைத்துக்கொண்டு பாகவதம் உபதேசிப்பதாகச் சொல்லவே, அவன் பாகவதத்தின் உட்கருத்தை நன்று யுணரவில்லை யென்று தெரிந்துகொண்டு அவனை நோக்கி, "ஏ பிராமணு! அந்தக் கிரந்தத்தை நீயே நன்றாய்ப் படித்துணரவில்லை

யென்பது எனக்குத் தெரிகின்றது; ஆதலால், நீ முதலில் அதனை நன்றாகப் படித்துக்கொண்டு வந்தால் அதன் மேல் உன்னை நான் உபாத்தியாய ராக்கிக்கொள்கின்றேன்" என்று சொன்னான். பிராமணன், "நாம் எத்தனையோ வருஷங்களாக எத்தனையோ முறை பாகவதத்தைப் படித்துணர்ந்திருக்கின்றோம்; அப்படியிருந்தும், அரசன் அறியாமையால் நாம் சரியாகப் படிக்கவில்லை யென்று உளறுகிறான்" என்று தனக்குள் நினைத்துக்கொண்டு வந்த வழியே திரும்பிப் போய்விட்டான்.

அவ்வாறு சென்றவன், சில தினங்கள் சென்று, 'எதற்கும் இன்னு மொருமுறை பாகவதத்தை நன்றாகப் படித்துக்கொண்டு அவ்வரசனிடமே சென்று பார்ப்போம்' என்றெண்ணி அவ்வாறே ஜாக்கிரதையாகப் படித்துக்கொண்டு அவனிடம் போய், "நான் இப்பொழுது அந்தக் கிரந்தத்தைச் சரியாகப் படித்துக்கொண்டு வந்திருக்கின்றேன்; இப்பொழுதாவது அதை நீ என்னிடம் கேட்டுக்கொள்" என்று கூறினான். அப்போதும் அரசன் தான் கொண்ட எண்ணத்திற்குத் தக்கபடி முன் கூறியது போலவே கூறிவிட்டான். பிராமணன் மிகவும் வருத்தமடைந்து திரும்பிச் சென்றுவிட்டான். அவ்வாறு சென்றவன், "அரசன் ஏன் அவ்வாறு கூறினான்? அதற்கு ஏதேனும் காரணமிருக்க வேண்டும்; இல்லாவிடில் இரண்டு முறையும் அப்படிக் கூறியிருக்கமாட்டான்; நாம் எதற்கும் இன்னு மொருமுறை பாகவதத்தை நன்றாக ஆராய்ச்சிசெய்து பார்க்கவேண்டும்"

என்று முடிவு செய்துகொண்டு ஓர் அறை வீட்டிற்குள்ளே சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டு அந்தச் சிரந்தத்தை முன்னிலும் நன்றாக ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தான். அந்த ஆராய்ச்சியில் கொஞ்சம் கொஞ்சமாக மறைபொருள்கள் அவனுடைய புத்தியில் விளங்கிக்கொண்டு வந்தன. அவ்வாறு அவை விளங்க விளங்க, அஞ்ஞான விருள் நீங்கிய அவனுடைய பார்வையிலே, பெயரும், பெருமையும், கீர்த்தியும், கௌரவமும், ஐசுவரியமும், அரச சபையும் அற்பமானவைகளெனத் தோற்றின. அவற்றின் விருப்பமெல்லாம் மறைந்துவிட்டது. அதனால், அன்றுமுதல் அவன், ஈசுரோபாசனைசெய்து பரிபூரணத்துவ மடைவதிலேயே புத்தியைச் செலுத்திவிட்டான். அரசனிடம் மீண்டும் செல்லவே யில்லை. நாளுக்கு நாள் ஆத்ம சிந்தனையில் மூழ்கி யோகம் முதலியவற்றைச் செய்துகொண்டிருந்தான். சில வருஷங்கள் சென்ற பின்பு, அரசன் அந்தப் பிராமணனை, நினைத்து, "அவன் என்ன செய்துகொண்டிருக்கின்றானோ? நெடுநாட்களாக நம்மிடம் வரவில்லை; ஒரு சமயம் அவனுக்குப் பாகவத ஆராய்ச்சியினால் உண்மைப் பொருள் விளங்கி அவன் யோக மார்க்கத்தை அடைந்திருந்தாலும் இருக்கக்கூடும்; நாம் சென்று அவன் எப்படியிருக்கின்றனென்பதைப் பார்த்து வரவேண்டும்" என்று தீர்மானித்து அவனுடைய வீட்டிற்குச் சென்றான். அவ்வாறு சென்று பார்க்கும்போது, அந்தப் பிராமணன், பிரஹ்ம ஜோதியிற் கலந்து விளங்கினான். அந்நிலைமையைப் பார்த்தவுடனே அரசன், "இவர் நம்முடைய வார்த்தை

யைக் கவனித்து, இங்குத் திரும்பி வந்தபின் பாகவதத்தை நன்முக ஆராய்ச்சி செய்து, அதன் உண்மைக் கருத்துக்களை யுணர்ந்து ஆத்ம ஞானத்தை யடைந்து யோகாப்பியாசம் செய்து பிரஹ்ம ஜோதியிற் கலந்திருக்கின்றார்; இப்போதுதான், நம் கருத்தின்படி இவருடைய பாகவதப் படிப்பு இவருக்கு நற்பயனை அளித்திருக்கின்றது; இனி இவரை நாம் குருவாகக் கொள்ளலாம்'' என்று அந்தப் பிராமணனுடைய பாதங்களில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கி, எழுந்து நின்று அவரை நோக்கி, ''சுவாமி! பாகவதம் முதலிய சாஸ்திரங்களின் உண்மைப் பொருள்களை நீங்கள் இப்பொழுது அனுபவத்தில் அறிந்திருக்கின்றீர்கள்; இவற்றைத்தான் நீங்கள் அறியவில்லை யென்று நான் முன்னே கூறினேன்; இனி நீங்கள் என்னை உங்களுக்குச் சிஷ்யனாக அங்கீகரிக்க வேண்டும்; நான் தங்களுக்கு அடிமையாகத் தயாரிருக்கின்றேன்'' என்று கூறினான். அந்த யோகி அதன்மேல் அவ்வரசனைத் தனக்குச் சிஷ்யனாக ஏற்றுக்கொண்டான். பின்னர், அரசனும் அந்தப் பிராமணனுடைய ஞானோபதேசத்தால் ஞானமார்க்கத்தை யனுசரித்து நற்கதி யடைந்தான். இக்கதையினால், சாஸ்திரங்களை மேற்போக்காகப் படிப்பதால் பயனில்லை யென்பதையும், அவற்றின் உண்மைக் கருத்துக்களை உள்ளபடி உணர்வதால் ஆத்மலாப முண்டென்பதையும் உணரலாம்.

888. மூடப் பிடிவாதத்தால் உபத்திரவ முண்டாகு மென்பதற்கு உதாரணமாகிய கதை:

ஒருவன், மூடப் பிடிவாதத்தால் சிவனை மாத்திரம் உபாசித்து, இதர தெய்வங்களெல்லாவற்றையும் வெறுத்

துக்கொண் டிருந்தான். அப்படி யிருக்கும்போது ஒருநாள் சிவபெருமான் அவன்முன் தோன்றி, "நீ இதர தேவதை களே வெறுத்துக்கொண் டிருக்கிறவரையில், உன்மீது எனக்கு ஒருபொழுதும் திருப்தி யுண்டாகாது" என்று கூறினார். அதன்மேலும் அவன் தன்னுடைய மூடத் கொள் கையை விடவில்லை. சில தினங்கள் சென்ற பின் சிவபெருமான் 'எல்லாத் தெய்வங்களும் ஒன்றே' என்பதை அவனுக்குத் தெரிவிப்பதற்காக, ஒரு பாதி சிவனாகவும், மற்றொரு பாதி விஷ்ணுவாகவும் தோற்றும் ஹரி ஹர வடிவங் கொண்டு மறுபடியும் அவனெதிரில் தோன்றினார். அப்போது அந்த மனிதன், சிவ வடிவத்தில் சந்தோஷமும், விஷ்ணு வடிவத்தில் அதிருப்தியுங் கொண்டு, சிவ வடிவத் திற்கு முன்னே நைவேத்தியங்களை வைத்துப் பூஜை புரிந் தான். சிவபெருமான் அதைக் கண்டு அவனை நோக்கி, "நீ இந்த மூடப் பிடிவாதத்தால் துன்பப்படுவாய்; எல்லாத் தேவர்களும், தேவிகளும் ஒரே வஸ்துவின் பலவிதத் தன்மைகளா மென்பதை உனக் குணர்த்தும்பொருட்டே நான் இந்தத் துவைதத் தன்மையை அடைந்து உன்னெதிரில் தோன்றினேன்; அவ்வாறு செய்தும் நீ உண்மையை உணர்ந்துகொள்ளவில்லை; இனி, உன்னுடைய மூடத்தனத் தால் உனக்கு வருவதை நீ தெரிந்துகொள்வாய்" என்று கூறிச்சென்றார். அதன்மேல் அவன் மிக்க விஷ்ணு துவேஷி யாய் அவருடைய பெயரைக் காதினாலும் கேட்கக்கூடா தென்னும் பிடிவாதத்தைக் கொண்டு ஒரு கிராமத்தில் வசி த்துவந்தான்; அப்படித் தங்கியிருக்குங் காலத்தில் யாரே

னும். அவனுடைய காதுக்குக் கேட்கும்படி விஷ்ணுவென்று சொல்லிவிட்டால் அவன், அவர்களைத் திட்டி அடித்தாவது துரத்தும் வழக்கத்தை மேற்கொண்டான். ஒரு விஷயத்தில் அதிகமாகப் புத்தியைச் செலுத்திச் சதா சர்வகாலமும் அதே ஞாபகமாகப் பிதற்றிக்கொண்டு திரிபவனை ஜனங்கள் பைத்தியக்காரனென்று நினைத்துப் பரிகசிப்பது உலக சுபாவமாதலால், அந்த மனிதன், அவ் வழக்கத்தை மேற்கொண்டவுடனே அவ் வூரிலுள்ள குழந்தைகளெல்லாம் கூடி, அவனைப் பைத்தியக்காரனென்று நினைத்து வேடிக்கை செய்து விளையாட ஆரம்பித்து, அவனுடைய செவிகளுக்குக் கேட்கும்படி விஷ்ணு நாமத்தை யுரைத்து அவனை ஓயாமல் தொந்தரவுக்குள்ளாக்கிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அவ்வாறு விஷ்ணு நாமத்தைச் சொல்லும்போதெல்லாம் அவன் அவர்களைக் கோபித்துத் துரத்திக்கொண்டே வந்தான். அவன் அவ்வாறு செய்யச் செய்யக் குழந்தைகள் உற்சாகத்தை அடைந்ததால் விஷ்ணு நாமத்தைச் சொல்வது அதிகப்பட்டுக்கொண்டே வந்தது. அதனால் அவனுக்குக் குழந்தைகளைத் துரத்தும் வேலை ஓயாமலிருந்தது. விஷ்ணு நாம உச்சரிப்போ குழந்தைகளிடம் நின்றபாடில்லை. அதனால், அவன் மிகவும் சங்கடப்பட்டு, அந்தத் தொந்தரவை நீக்கிக்கொள்ளும் பொருட்டும், விஷ்ணு சப்தம் காதில் விழாதிருக்கும்பொருட்டும் தன் இரண்டு காதுகளிலும் இரண்டு மணிகளைக் கட்டித் தொங்கவிட்டுச் சிறுவர்கள், 'விஷ்ணு விஷ்ணு' என்று கூவும்போதெல்லாம் அந்த மணிகளை ஆட்டிக்கொண்

டே திரிந்தான். அதுமுதல் அவனுக்குக் 'கண்டா கர்ணன், (மணிக்காதன்)' என்ற பெயர் வழங்கலாயிற்று. அவன் இந்த வீண் விஷயத்தில் புத்தியைச் செலுத்திக்கொண்டு தெய்வ சிந்தனையின்றித் திரிந்தலைந்தபடியால் முடிவில் தீக்கதிக்காளாயினன். இக் கதையினால், மத சுவேஷத்தால் மூடப் பிடிவாதங் கொள்பவர்களுக்குத் துன்ப முண்டாகு மென்பதை உணர்ந்துகொள்ளலாம்.

889. உலக வாழ்வைக் கனவுபோல் நினைப்பவன் உலக சுகத் தையாவது துக்கத்தையாவது உணரமாட்டா னெனபதற்கு உதாரணமான கதை:

உலக வாழ்வைக் கனவுபோல் நினைக்கும் ஒரு மனி தன், ஒரு தொழிலு மில்லாம லிருந்துவந்தான். அவன் அப்படி யிருப்பதைப் பார்த்து அவனுடைய மனைவி, ஏதே னும் ஒரு வேலை சம்பாதித்துக்கொள்ளும்படி அவனைப் பல நாளும் தொந்தரவு செய்துகொண்டு வந்தாள். அப்படி யிருக்கும்போது அவனுடைய புத்திரன் ஒருகால் அபாய கரமான வியாதிக் குள்ளானான். அவனைப் பார்த்த வைத்தி யர்களும், 'இனி இவன் பிழைப்பதரிது' என்று கூறிவிட் டார்கள். இந் நிலைமையில், அவனுடைய தகப்பனாகிய மேற் கூறிய மனிதன், ''வேலை சம்பாதித்து வருகிறேன்'' என்று மனைவியிடம் சொல்லிவிட்டு வெளியேறிப் போய்விட்டான். அவன் போனபின்பு, அவனுடைய புத்திரன் இறந்துவிட் டான். அவனுடைய சுற்றத்தார் அவனைத் தேடினார்கள். அவன் எங்கும் அகப்படவில்லை. அவன் ஓரிடத்திற் போய்ப்

படுத்துறங்கி, தான் ஓர் அரசனுக்கு ஏழு புத்திரர்களைப் பெற்று அவர்களோடு சுகமாகக் காலம் கழித்ததாகக் கனவுகண்டு விழித்து, 'ஓகோ! இது சொப்பனம்' என்று தேறி மாலையில் வீட்டிற்குத் திரும்பி வந்தான். அவனைக் கண்டதும் அவனுடைய மனைவி, தனது புத்திரன் இறக்குந்தறுவாயில் விருந்தபொழுது அவன் வெளியேறிப் போய்விட்ட அவனது இரக்கமற்ற செய்கைக்காக மிகவும் கடிந்துகொண்டாள். அவன் சிறிதும் விசனமுறாமல் சிரித்துக்கொண்டு அவளை நோக்கி, "நான் அரசனுக்கு ஏழு புத்திரர்களைப் பெற்றுச் சுகத்துடன் வாழ்ந்ததாகத் தூக்கத்தில் ஒரு கனவு கண்டேன்; விழித்தபின் என்னுடைய புத்திரர்களும் அரசாட்சியும் காணப்படவில்லை. இப்பொழுது நான் அந்த ஏழு புத்திரர்களைக் கனவில் கண்டு பிரிந்ததற்காக விசனப்படுகிறதா? இந்த ஒரு புத்திரன் பிரிந்ததற்காக விசனப்படுகிறதா? இந்த உலக வாழ்வு இந்தக் கனவின் தோற்றம் போன்றதுதான்; நாம் தூக்கத்தி லிருக்கும்வரை கனவை மெய்யென்று நினைத்துக்கொண் டிருக்கின்றோம்; விழித்தபின் அதனைப் பொய்யென் றுணர்கின்றோம். அதேபோல் உலக பந்தமாகிய மாயையில் மூழ்கியிருக்கும் வரையில் உலக வாழ்வை மெய்யென்று நினைத்துக்கொண் டிருக்கின்றோம்; அந்த மாயை நீங்கியபோது மனைவி மக்கள் ஐசுவரியம் எல்லாம் பொய்த் தோற்றங்களாகிவிடுகின்றன; ஆதலின், நம் புத்திரன் இறந்ததற்கு விசனப்படவேண்டியதில்லை. இது கனவின் நிகழ்ச்சி யென்றே கருதி முத்தியாகிய நிலைத்த வாழ்வை யடைதற்கு முயற்சி செய்யு

வேண்டும்'' என்று கூறினன். இக் கதையினால், உலகத்தைக் கனவுபோல் நினைப்பவர்கள், உலக பந்தங்களால் ஏற்படும் சுகத்தையேனும் துக்கத்தையேனும் கவனிக்கமாட்டார்களென்பது விளங்கும்.

890. மனிதர், தங்கள் செய்கை உயர்ந்ததா யிருந்தாலும் அதைப்பற்றிக் கர்வம் கொள்ளலாகா தென் பதற்கு உதாரணமாகிய கதை:

ஒரு சமயத்தில் அர்ஜுனன், தன்னுடைய பிரபுவும், நண்பருமாகிய ஸ்ரீ கிருஷ்ணரிடத்திலே, பக்தியும் அன்பும் செலுத்துவதில், தனக்கு எவரும் நிகரானமாட்டார்கள் என்று கர்வங்கொண்டிருந்தான். சர்வக்ஞராகிய ஸ்ரீ கிருஷ்ணர், அவனுடைய நினைப்பை யுணர்ந்து, அவனுக்கு மேற்பட்ட பக்திமானெருவனை அவனுக்குக் காட்டி அவனுடைய கர்வத்தை அடக்கவேண்டுமென்று நினைவுகொண்டு, தம்மீது மிகுந்த பக்தி செலுத்திக்கொண்டிருந்த ஒருவனிடம் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டுமென்னும் நோக்கத்துடன் ஒருநாள் அவனை வெளியில் அழைத்துச் சென்றார். அவ்விருவரும் சிறிது தூரம் சென்றவுடன், ஸ்ரீ கிருஷ்ணர் தமக்குச் சிறந்த பக்தனைக் காட்டிய அந்த மனிதன் ஓரிடத்தில் இருந்தான். அவன் பிராஹ்மணன்; அவனுடைய நடத்தை மிக்க விநோதமா யிருந்தது; அந்தப் பிராஹ்மணனுடைய இடுப்பில் கூர்மையான கத்தி யொன்று கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது. அவன் உலர்ந்த புல்லையே ஆகாரமாகத் தின்றுகொண்

டிருந்தான். எந்தப் பிராணிகளுக்கும் ஹிம்சை செய்யக் கூடாதென்பது அவனுடைய மூக்கிய கொள்கையாயிருந்தது. அதனாலேயே, பச்சைப் புல்லுக்கும் உயிர் இருப்பதால் அதைத் தின்றாலும் ஜீவ ஹிம்சையாகுமென்று கருதி அவன் உலர்ந்த புல்லைத் தின்றுகொண்டு வந்தான். இத்தகைய ஜீவகாருண்யக் கொள்கை விஷ்ணு பக்தர்களிடத்திலேயே இருப்பதை சுகஜமாதலின், அந்தப் பிராமணனிடமிருந்த இந்தக் கொள்கையைப் பார்த்தவுடன் அர்ஜுனன், அவனை, சிறந்த விஷ்ணு பக்தர்களுள் ஒருவனென்று நினைத்து, அவன், விஷ்ணுபக்தர்களுக்குரிய ஜீவகாருண்யத்தைக் கொண்டிருந்தும், அதற்கு நேர் விரோதமாகக் கத்தியொன்றை இடுப்பில் கட்டித் தொங்கவிட்டிருப்பதைப்பற்றிச் சந்தேகித்து அதற்குக் காரணம் அறியாதவனாய், அதைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியை நோக்கி, "சுவாமி! ஜீவ ஹிம்சை செய்யக் கூடாதென்று உலர்ந்த புல்லைத் தின்றுகொண்டிருக்கும் இந்த மனிதன், கொலைக் கருவியாகிய கத்தியை வைத்துக் கொண்டிருக்கின்றானே! இதற்குக் காரணமென்ன?" என்று வினவினான். அதற்கு ஸ்ரீ கிருஷ்ணர், "நீ அதன் காரணத்தை அந்த மனிதனிடமே வினவித் தெரிந்துகொள்" என்று சொன்னார்.

அதன்மேல் அர்ஜுனன் அந்தப் பிராஹ்மணனிடம் சென்று, "சுவாமி! தாங்கள் ஜீவகாருண்யக் கொள்கையை மேற்கொண்டிருந்தும், கொலை செய்யக்கூடிய இந்தக் கத்தி

யை என் வைத்திருக்கின்றீர்கள்?'' என்று கேட்டான். அதற்கந்தப் பிராஹ்மணன், ''எனக்குக் கொடிய விரோதிகள் நான்கு பேர்கள் இருக்கின்றார்கள்; அவர்கள் ஒரு சமயம் எதிர்ப்படின் அவர்களைத் தண்டிக்கும்பொருட்டு நான் இதனை வைத்துக்கொண் டிருக்கின்றேன்'' என்றான். அர்ஜுனன், ''அவர்கள் யாவர்?'' என்றான். பிராஹ்மணன், 'அவர்களுள் முதலாவது விரோதி நாரதன்' என்றான். அர்ஜுனன், 'அவர் என்ன குற்றம் செய்தார்?' என்றான். பிராஹ்மணன், 'அந்தப் பையனுடைய கர்வத்தை நான் என்னென்று சொல்வேன்! அவன், எனது நாதனுகிய விஷ்ணுமூர்த்தி எப்பொழுதும் விழித்துக்கொண் டிருக்கும்படி பாட்டுக்களைப் பாடி அவருக்குத் தொந்தரவை யுண்டாக்கிக்கொண்டிருக்கிறான்; அவருடைய சரீர சுகத்தைப்பற்றி அவன் சிறிதும் கவனிப்பதேயில்லை; இரவினும் பகலினும், காலமல்லாத காலத்திற்கூட, கீர்த்தனங்களினாலும் ஸ்தோத்திரங்களினாலும் அவருடைய மனச் சமாதானத்தைக் கலைத்துக்கொண்டே யிருக்கின்றான்; இவ்வாறு என்னுடைய நாதருக்கு அவன் இடைவிடாது துன்பத்தை உண்டாக்கிக்கொண் டிருப்பதால் நான் அவன் மீது விரோதங்கொண்டு அவனைத் தண்டிக்கக் கருதியிருக்கின்றேன்' என்றான். பின்னர் அர்ஜுனன், 'இரண்டாவது விரோதி யார்?' என்று கேட்டான். பிராஹ்மணன், 'அந்தக் கடின சித்தமும் மூர்க்கச் சுபாவமுள்ள திதிஷபதி' என்றான். அர்ஜுனன், 'அவள் என்ன குற்றஞ் செய்தாள்?' என்றான். பிராஹ்மணன், 'அந்த

ஸ்திரீயினுடைய கர்வம் மிகவும் கெட்டது; அவள், துர்வாசருடைய சாபத்தினின்றும் பாண்டவர்களைத் தப்புவிப்பதற்காக, என் நாதராகிய ஸ்ரீ கிருஷ்ணர் ஆகார முண்ண உட்காரும் சமயத்தில் அவரைத் தன்னிடம் வரும்படி தியானித்தாள்; அவர், உணவுண்பதையும் விடுத்து திரௌபதியும் பாண்டவர்களு மிருந்த காம்ய வனம் சென்றார். அவ்வாறு சென்று துர்வாசருக்கு உணவை உண்டாக்கும் பொருட்டு, திரௌபதி பாண்டவர் முதலியவர்கள் உண்டு மீதியிருந்த உச்சிஷ்டத்தை உண்டார். இவ்வாறு அவர் உணவுண்ணப் போனதையுங் கெடுத்து, அசுத்தமாகிய உச்சிஷ்டத்தை உண்ணச் செய்த அவளுடைய கர்வத்தை நினைக்கும் போது என் மனம் கொதிக்கின்றது' என்றான். பிறகு அர்ஜுனன், 'மூன்றாவது விரோதி யாவர்?' என்று வினவினான். அதற்குப் பிராஹ்மணன், 'அந்த இரக்கமற்ற பிராகலாதன் எனக்கு மூன்றாவது விரோதி; அவன், எனது விஷ்ணு மூர்த்தியைத் தன் பொருட்டுக் கொதிக்கின்ற எண்ணெய்க் கொப்பரைக்குள் தூழைத்து தன்னைக் காப்பாற்றும்படிக் கும், யானையின் பாதங்களினடியிலே மிதிபட்டுத் தன்னுடைய துன்பத்தை விலக்கும்படிக்கும், ஒரு கடினமான வைரத் தூணைப் பிளந்துகொண்டு வெளிவரும்படிக்கும் செய்தான்; இரணியன், அவனைப் பலவாறு துன்பப்படுத்திய காலத்தில் அவன் அத் துன்பங்களை நீக்கும்படி என்னுடைய பகவானை ஸ்தோத்திரஞ் செய்த படியால் அவர் அவனுக்காக மேற் கூறிய சரமங்களை

யெல்லாம் ஏற்றுக்கொண்டார். பகவானுக்கு இத்தகைய சிரமங்களை உண்டாக்கிய அவன் மகா கொடியவன்' என்று சொன்னான். அப்பால் அர்ஜுனன், 'நான்காவது விசோதியார்?' என்று கேட்டான். உடனே பிராஹ்மணன், 'அந்தப் பாதகனுகிய அர்ஜுனனே' என்றான். அதற்கு அர்ஜுனன், 'அவன் என்ன குற்றம் செய்தான்?' என்று வினவினான். பிராஹ்மணன், 'மற்றவர்கள் செய்த குற்றங்களைக் காட்டினும் அந்த அர்ஜுனன் செய்த குற்றந்தான் மிகப் பெரிது; அவனுடைய போக்கிரித்தனத்தை என்னென்று சொல்வேன்! குரு க்ஷேத்திர மகா யுத்தத்திலே அவன், என்னுடைய பகவானுகிய ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவைத் தன்னுடைய இரதத்தில் சாரதியா யிருக்கும்படி செய்தான்; இந்த இழிந்த உத்தியோகத்தை என் நாதர் வகிக்கும்படி செய்த அவனுடைய கர்வம் எப்பேர்ப்பட்டதென்பதை நீ யோசித்துப் பார்; ஆதலின், இந்த நான்கு பேர்களையும் தண்டிக்காமல் விடலாமா?' என்று சொன்னான்.

இவ்வாறு அந்தப் பிராஹ்மணன், ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் தனக் கேற்பட்டிருந்த முதிர்ந்த பக்தியினுலே, நாரதர் முதலியவர்கள் அவரை ஸ்தோத்திரம் பண்ணித் தங்களுக்காகச் சில அன்பான செய்கைகள் இயற்றும்படி செய்ததை அவருக்குச் சிரம முண்டுபண்ணினதாகவும், அவர் அந்தப் பக்தர்களின் பொருட்டுச் செய்த பஞ்சமான செய்கைகளினுல் அவர் சிரமப்பட்டதாகவும்

கருதி, அவர்களைத் தனக்கு விசோதிகளாகப் பார்வித்துக் கூறிய மொழிகளைக் கேட்டவுடன், அர்ஜுனன், ''இந்தப் பிராஹ்மணனுடைய கிருஷ்ண பக்திக்கு நம்முடைய பக்தி இணையாகமாட்டாது; இவனைப்போல் நம்மினும் மேற்பட்ட பக்தியுடையவர்கள் இன்னும் உலகத்தில் எத்தனையோ பேர்கள் இருப்பார்கள்; ஆதலால், நாம், நம்மினும் சிறந்த பக்தியுடையவர்கள் இருக்கமாட்டார்களென்று நினைப்பது மதியீனம்'' என்று தன்னுடைய அகங்காரத்தை விட்டு அந்தப் பிராமணனைப் புகழ்ந்துகொண்டு கிருஷ்ண மூர்த்தியுடன் திரும்பி வந்துவிட்டான். இக் கதையினால் எத்தகைய பெரிய செய்கைகளைச் செய்பவர்களும், அகங்காரம் கொள்ளலாகாதென்பதும், அவ்வாறு கொண்டால் ஒரு சமயம் அவர்களுக்கு மேற்பட்டவர்கள் ஏற்பட்டு அவர்களுக்கு அவமானத்தை உண்டாக்கிவிடுவார்களென்பதும் விளங்கும்.

891. வைராக்கிய முள்ளவன், உதாரணங் காட்டுவதன் மூலமாகவும் மெய்த்துறவடைந்துவிடுவோன் என்பதற் குதாரணமாகிய கதை:

ஒருநகரத்தில் ஒரு மனிதன், தனது மனைவியோடு கூடி இல்லறம் நடத்தி வந்தான். அக் காலத்தில் அந்த மனிதனுடைய மனைவிக்குச் சகோதரன், துறவியாகிவிடப் போவதாகப் பிரஸ்தாபித்துக்கொண்டு திரிந்தான். அதை யுணர்ந்த அந்தப் பெண், தன் புருஷனிடத்தில், ''நாதரே! என் சகோதரன், சென்ற வாரத்திலிருந்து துறவியாய்விடப்

போவதாகப் பிரஸ்தாபித்து அதற்கு வேண்டிய பிரயத்தனங்களும் செய்துகொண்டிருக்கிறான்; மெல்ல மெல்லத் தன்னுடைய ஆசைகளெல்லாவற்றையும் குறைத்துக்கொண்டே வருகிறான்; அதைப்பற்றி எனக்கு மிகுந்த சுவலியாயிருக்கிறது" என்று சொன்னாள். அதற்கு அவளுடைய நாயகன், அவளை நோக்கி, "என் காதலி! நீ உன் சகோதரனைப்பற்றிச் சிறிதும் கவலையடையவேண்டாம்; அவனைப் போல் துறவியாகப் போகிறேனென்று தற்பெருமையாகப் பிரஸ்தாபித்துக்கொண்டு திரிபவன் ஒருபோதும் துறவியாகமாட்டான்." என்று சொன்னான். அதைக் கேட்ட அவன் மனைவி, "அப்படியானால் மனிதன் சன்னியாசியாகிறதெப்படி?" என்று கேட்டாள். உடனே அவள் கணவன், தன்னுடைய ஆடையைக் கிழித்து ஒரு கந்தைத் துண்டை இடுப்பில் சுற்றிக் கட்டிக்கொண்டு அவளை நோக்கி, "இன்று முதல் நீயும் மற்றப் பெண்களும் எனக்குத் தாய்மார்கள்; எனக்கினி இல்லறசுக மொன்றும் வேண்டியதில்லை; நான் இதோ துறவு பூண்டு வீட்டைவிட்டு வெளியேறிப் போய்விடுகிறேன்; உண்மைத் துறவு பூண்பவர்கள் இப்படித்தான் இருக்கவேண்டுமென்று வெளிப்பட்டுவிடுவார்கள்" என்று சொல்லித் தான் உதாரணத்துக்காகக் காட்டிய அத்துறவையே உறுதிப்படுத்தி மெய்த்துறவு பூண்டு வெளியிற் போய்விட்டான். போனவன் திரும்பி வரவேயில்லை. இக் கதையினால், வைராக்கிய முள்ளவர்கள், உதாரணங் காட்டுவதன் மூலமாகவும் உண்மைத் துறவைடைந்துவிடுவார்களென்பதும், வைராக்கிய மில்லாதவர்கள் பலநாளும் துறவுடையைப்

போவதாகப் பேசிக்கொண் டிருந்தாலும் அதனை யடைய மாட்டார்க ளென்பதும், மனவுறுதி யில்லாதவர்கள் தாம் அப்படிப் பேசிக்கொண் டிருப்பார்க ளென்பதும் உணரப் படும்.

592. ஆத்மீக விஷயங்களிலே தன்னம்பிக்கை யுடையவன் தன்மைக்கும், ஈசுரனிடத்திலே சரணாகதி யடைந்த வன் தன்மைக்கும் உதாரணமான கதை:

ஒரு மனிதன், தன்னுடைய இரண்டு புத்திரர்க ளுடன் ஒரு வயலின் வழியாகச் சென்றுகொண்டிருந்தான். அப்போது ஒரு புத்திரன் அவனுடைய கைகளால் தூக்கிக் கொண்டு போகப்பட்டான். மற்றொரு புத்திரன் அத் தந்தையினுடைய கையைப் பற்றிக்கொண்டு நடந்து சென் றான். அவர்களுக் கெதிரில் ஆகாயத்தில் ஒரு காற்றாடி பறந்துகொண்டிருந்தது. அதைக் கண்டவுடனே நடந்து சென்றுகொண்டிருந்த பையன், தந்தையின் கையை விட்டு விட்டு, "அப்பா! அதோ பார் ஒரு காற்றாடி பறக்கின்றது" என்று சந்தோஷத்தோடு கூவினான். அவ்வாறு கூவும் போது அவன் தந்தையின் கைப்பிடியை விட்டபடியால் இடறி வீழ்ந்து காய மடைந்தான். தந்தையால் தூக்கிக் கொண்டு போகப்பட்ட பையனும் அந்தக் காற்றாடியைக் கண்டவுடன சந்தோஷித்து, "அப்பா! அதோ காற்றாடி! காற்றாடி!" என்று இரண்டு கைகளையும் தட்டி ஆர்ப்பரித் தான். அவன் அவ்வாறு செய்தும், தந்தையால் கெட்டி யாகப் பிடித்துக்கொள்ளப்பட் டிருந்தபடியினாலே விழ

வில்லை. தந்தையின் உதவியால் அபாயமின்றி யிருந்து ஆனந்தத்தை யடைந்தான். இந்த இரண்டு பையன்களிலும் முதலாவது பையனுடைய செய்கை, ஆத்மீக விஷயங்களிலே தன்னம்பிக்கையுள்ள, (அதாவது தம் சொந்தச் செய்கையினுலே பிரயத்தனப்படுகின்ற) மனிதருடைய தன்மைக்கு நிகராகும்; இரண்டாவது பையனுடைய செய்கை, ஈசுரனைச் சரணகதி யடைந்தவர்கள், ஆத்மலாபத்தை அடைய முயற்சிக்கும் தன்மைக்கு நிகராகும். தன்னம்பிக்கையைக் கொண்டு (அதாவது, தங்கள் சொந்தச் செய்கையின் நம்பிக்கையைக் கொண்டு), ஆத்மீக விஷயங்களிலே புத்தியைச் செலுத்துவோர் சற்று சிரமத்தை யடைந்து ஆத்மலாபத்தைப் பெறுவர்; அதேபோல் முதல் பையன், தந்தை கையைவிட்டுக் காற்றடியின் ஆனந்தத்தை யடையச் சொந்தச் செய்கையால் பிரவேசித்தபடியால் இடறி வீழ்ந்து காயமடைந்து அதனை அனுபவித்தான். ஈசுரனைச் சரணகதியாக அடைந்துவிட்டவன், பிரஹ்மானந்தத்தை யடைய முயற்சிக்கும்போது தன்னை அவருடைய ஆதரவுக் குட்படுத்திவிட்டுப் பிரவேசிப்பதால் ஈசுரனுடைய ஆதரவால் எவ்விதச் சிரமமு மின்றி அதனை அடைவான். அதேபோல் இரண்டாவது பையன், தந்தையின் ஆதரவைப் பற்றிக்கொண்டு காற்றடியின் ஆனந்தத்தை அடைய முயற்சித்ததால் சிரம மின்றி அதனை அடைந்தான். இக் கதையினுல், மேற்கூறிய இருவகையார்களின் இயற்கைகளையும் நன்குணர்ந்துகொள்ளலாம்.

893. நம்பிக்கைக் குறைவால் நற்பயன் கிடைக்கா தென்பதற் குதாரணமான கதை:

ஒருவன் ஒரு கிணறு வெட்ட ஆரம்பித்தான். அவ் வாறு ஆரம்பித்து இருபதடி ஆழம் தோண்டியும் தண்ணீர் ஊற்று இருக்கும் அறிகுறி யொன்றும் ஏற்படவில்லை. அதனால் அவன், அவ்விடத்தை விட்டு வேறொரிடத் தில் வெட்ட ஆரம்பித்து முன்னிலும் அதிக ஆழம் தோண்டினான். அங்கும் ஊற்றுக் காணப்படவில்லை. அதன்மேல் அவன் அதையும் விட்டுவிட்டு மூன்றாவ தாக வேறொரிடத்தில், முன்னிலும் அதிக ஆழமாகத் தோண்டினான். அதிலும் பய னுண்டாகவில்லை. அவ்வா றாகவே அவன் மனம் சலித்துப் பின்னர் கிணறு வெட்ட வேண்டு மென்னும் எண்ணத்தையே விட்டுவிட்டான். இவன் இந்த மூன்றிடங்களிலும் வெட்டிய ஆழத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் மொத்தத்தில் நூறு அடிக்கும் கொஞ்சம் குறைந்தே யிருந்தது. இவன், மனவுறுதி கெட்டு இடம் விட்டு இடம் மாற்றுமல் ஒரே இடத்தில் ஊக்கத்துடன், மேற்கூறிய மூன்றிடங்களிலும் எடுத்த சிரமத்தில் பாதி யெடுத்திருந்தாலும் ஜல ஊற்றைக் கண்டு பல னடைந்திருப்பான். அவ்வாறின்றி இவனுக்கு நம்பிக் கைக் குறைவு ஏற்பட்டதினாலேயே இவன் சிறிதும் பயன் பெறுமற் போயினன். இவனைப்போலவே, ஈசுரனே யடை யும் விஷயத்தில் மனவுறுதி கெட்டு, அடிக்கடி தங்க ளுடைய கொள்கைகளை மாற்றிக்கொள்பவர் அவனை எளி

தில் அடையமர்ட்டார்கள். மனவுறுதியுடன் தாங்கள் கொண்ட பக்தியனுஷ்டானத்தை ஒருவிதமாகச் சாதித்து வருபவர்கள் நிச்சயமாக நித்திய சுகத்தை அடைவார்கள்.

894. உண்மைத் துறவை உணர்த்தும் கதை:

ஒரு மனிதனும், அவனுடைய மனைவியும் உலகைத் துறந்து, பற்பல பரிசுத்த க்ஷேத்திரங்கட்கு யாத்திரை சென்றார்கள். அவ்வாறு சென்ற அவ்விருவரும், ஒரு மார்க்கத்தில் செல்லும்போது, புருஷன் மனைவிக்கு முன்னே சற்றுத் தூரத்தில் சென்றுகொண்டிருந்தான். மனைவி அவனுக்குப் பின்னே சற்றுத் தூரத்தில் சென்றாள். அப்போது, புருஷன் ஒரு வைரக்கல்லைக் கண்டெடுத்தான். அவ்வாறு எடுத்தவுடன் அவன், "நம் மனைவி இந்தக் கல்லைப் பார்த்தால், ஆசையினால் பீடிக்கப்பட்டு, தான் துறவடைந்ததால் பெற்ற புண்ணியத்தை யிழந்துவிடுவாள்; ஆதலால், அவ ளறியாதபடி இதை மறைத்துவிட வேண்டும்" என்று சிந்தித்து, அந்த வைரக்கல்லைப் புதைப்பதற்குப் பூமியைத் தோண்ட ஆரம்பித்தான். அப்போது மனைவி அவன் சமீபத்திற் போய் அவன் செய்கையைப் பார்த்துவிட்டு அவனை நோக்கி, "நீ இங்கே என்ன செய்கிறாய்?" என்று கேட்டாள். அவன் தன் செய்கையை மறைக்கும்பொருட்டுத் தாழ்ந்த குரலுடன் ஏதோ ஒரு பொய்க் காரணம் கூறினான். அப்போது மனைவி, அவன் கையிலிருந்த வைரத்தைப் பார்த்துக்கொண்டதோடு அவனுள்ளக் கருத்தையும் உணர்ந்துகொண்டு அவனை நோக்கி,

"நான் வைரக்கல்லின்மீது ஆசை வைத்துத் தூறவைக் கைவிட்டுப் புண்ணியத்தை இழந்துவிடுவே னென்று நினைத்து நீ இதைப் புகழ்க்க ஆரம்பித்திருக்கின்றாய்; இதனால் நீ உண்மைத் துறவடைந்துவிட்டதாகவும், நான் இன்னும் அந் நிலைமையை அடையவில்லை யென்றும் நீ கருதியிருக்கின்ற யென்பது விளங்குகின்றது. உன்னுடைய கருத்தின்படி நான் துறவை விடமாட்டேன்; உண்மைத்துறவை அடைந்திருக்கின்றேன்; உன்னுடைய செய்கையினால் நீயே உண்மைத் துறவை அடையாதிருக்கின்ற யென்பது விளங்குகின்றது. எப்படி யெனில், வைரக்கல்லுக்கும் மண்ணுக்கும் வித்தியாசமில்லை யென்னும் தன்மை இன்னும் உன் மனத்தில் தோன்றாதிருக்கின்றது. இந்த வித்தியாசத் தன்மை உன் மனத்திலிருக்கும் வரையில் நீ உண்மைத் துறவி யாகமாட்டாய்; இத்தகைய நீ ஏன் உலகைத் துறந்து விட்டதாகப் பாவனை செய்துகொண்டு என்னுடன் வெளியேறி வந்தாய்; இது மிக வெட்கக் கேடான விஷயம்" என்று பரிகசித்தாள். அதன்மேல் புருஷன் அத்தகைய குணத்தைவிட்டு உண்மைத் துறவடைந்தான்.

895. ஒவ்வொருவரின் உணர்ச்சிக்குத் தக்கபடி ஈசுர சொரூபம் காணப்படு மென்பதற்கு உதாரணமான கதை:

ஒரு சமயத்தில், நான்கு குருடர்கள், யானையின் உருவத்தை அறிந்துகொள்ள விரும்பி யானை நின்றவிடத்திற்குச் சென்று, அதனைத் தடவிப் பார்த்தார்கள். அவ்வாறு பார்

த்ததில், அவர்களுள் ஒருவன் யானையின் காலைத் தடவிப் பார்த்தான்; மற்றொருவன், துதிக்கையைத் தொட்டுப் பார்த்தான்; பின்னொருவன் வயிற்றைத் தடவிப் பார்த்தான்; பின்னொருவன் செவிகளைத் தொட்டுப் பார்த்தான். அதன்மேல் அந்தக் குருடர் நால்வரும் ஓரிடத்தில் வந்து உட்கார்ந்து, தாங்கள் கண்ட யானையின் வடிவத்தைப்பற்றிப் பேசத் தொடங்கினர்கள். அவர்களில் காலைத் தொட்டுப் பார்த்தவன், "யானை ஒரு கம்பம்போன் றிருக்கின்றது" என்றான். துதிக்கையைத் தொட்டுப் பார்த்தவன், "யானை ஒரு கனத்த தடிபோன் றிருக்கின்றது" என்றான். வயிற்றைத் தடவிப் பார்த்தவன், "யானை ஒரு பெரிய ஜாடிபோன் றிருக்கின்றது" என்றான். செவிகளைத் தடவிப் பார்த்தவன், "யானை ஒரு பெரிய முறம்போன் றிருக்கின்றது" என்றான். அவர்களுள், ஒவ்வொருவர் சொல்லும் இவ்வாறு வெவ்வேறு விதமாயிருந்தபடியால், ஒருவர் பேச்சை ஒருவர் எடுத்துக்கொள்ளாமல், அவர்கள், தாங்கள் தாங்கள் கண்டதையே உறுதிப்படுத்திக் கூறித் தர்க்கம் செய்துகொண் டிருந்தார்கள். வழியிற் சென்றுகொண்டிருந்த ஒரு மனிதன், அந்தக் குருடர்களுடைய வாய்ச் சச்சரவைக் கேட்டுவிட்டு அவர்கள் சமீபத்திற் சென்று, அவர்களை நோக்கி, "நீங்கள் எதைப்பற்றி இவ்வாறு வாய்ச் சண்டை போட்டுக்கொள்கிறீர்கள்?" என்று கேட்டான். அதற்கந்தக் குருடர்கள், தங்களுடைய தர்க்கத்தின் காரணத்தைக் கூறி, அவனிடத்தில், "ஐயா! நீர் எங்க

ருடைய அபிப்பிராயங்களை யெல்லாம் ஆலோசித்து, அவற்றுள் இன்னதுதான் சரியான தென்பதை எங்களுக்குக் கூறிவிடும்'' என்று சொன்னார்கள். அப்போது வழிப்போக்கன் சிரித்து, அந்தக் குருடர்களைப் பார்த்து, ''உங்களில் எவரும் யானையின் பூரண சொரூபத்தையும் உணரவில்லை. நீங்கள் குருடர்களாதலால், அதன் ஒவ்வொரு அவயவத்தையும் ஒவ்வொருவரும் தொட்டுப் பார்த்துவிட்டு, தாங்கள் தாங்கள் கண்டதையே யானை யென்று உறுதிப்படுத்திக்கொண்டிருக்கின்றீர்கள்; உங்களில் ஒருவன் தொட்டது யானையின் கால்; மற்றொருவன் தொட்டது தும்பிக்கை; இன்னொருவன் தொட்டது வயிறு; பின்னொருவன் தொட்டவை செவிகள். காலைத் தொட்டவன், 'யானை கம்பம் போன்றிருக்கின்றது' என்கிறான்; துதிக்கையைத் தொட்டவன், 'யானை கனத்த தடிபோன்றிருக்கின்றது' என்கிறான். வயிற்றைத் தொட்டவன், 'யானை ஜாடி போன்றது' என்கிறான்; செவிகளைத் தொட்டவன், 'யானை முறம் போன்றது' என்கிறான். யானையின் கால் கம்பம் போன்றது; துதிக்கை கனத்த தடிபோன்றது; வயிறு ஜாடி போன்றது; செவிகள் முறம்போன்றன; இந்த அவயவங்களெல்லாம் சேர்ந்த ஒரு பெரிய வடிவம் யானையினது சொரூபமாகும்'' என்று சொல்லிச் சென்றான். அதன் மேல் அந்தக் குருடர்கள், தங்களுடைய மூடத்தனமான தர்க்கத்தை விட்டொழித்து, யானையின் உண்மைச் சொரூபத்தை ஒருவாறு உணர்ந்தார்கள்.

இவ்விதமாகவே, ஈசாஅுடைய உண்மைச் சொரூப முழுவதையும் காணுமல், அதில் ஏதேனுமோர் அம்சத்தைக் கண்டவர்கள், அதுதான் ஈசா சொரூபம் என்று உறுதிப்படுத்திக் கூறிக் கண்டவர்களிடத்தில் எல்லாம் தர்க்கம் பேசிக்கொண்டு திரிவர். இத்தகைய பேதைகளின் அவிவேகமானது, உண்மை ஞானிகளின் உபதேசத்தைக் கேட்ட பின்புதான் தெளிவடையும். உண்மை யுணர்ச்சி சிறிது மின்றித் தாங்கள் கண்டதையே பெரிதென்று பேசும் மூடக்கொள்கையுடையார், இக் கதையைப் படித்து ணர்வார்க ளாயின் அவர்களுக்கு நல்லறிவு உண்டாகும்.

896. தீய பழக்கமுள்ளவர்களுக்கு எப்பொழுதும் அதுவே சிறந்ததாகத் தோற்று மென்பதற்கு உதாரணமான கதை:

ஒரு நாள், அநேகம் வலேச்சிகள் சேர்ந்து, தங்களிடமிருந்த மீன்களைக் கூடைகளில் எடுத்துக்கொண்டு, நெடுந்தூரத்திலுள்ள ஒரு சந்தைக்குச் சென்று விற்றுவிட்டுத் தங்களூருக்குத் திரும்பி வந்தார்கள். அப்படி வரும்போது நடு வழியில் சூரியன் அஸ்தமிக்க இருள் சூழ்ந்துகொண்டது; மழையும் பிடித்துக்கொண்டது. அந்த வலேச்சிகள், அந்த இருளிலும் மழையிலும் பிரயாணம் செய்ய முடியாமல், அந்த வழியின் பக்கத்தில் ஓரிடத்திலிருந்த புஷ்பவியாபாரியாகிய ஒரு பண்டாரத்தின் குடிசையில் ஒதுங்கினர்கள். அந்தப் பண்டாரம் மிகவும் நல்லவனாதலின், அவர்களை ஓர் அறையில் படுத்துக்கொள்ளும்படி செய்

தான். அந்த அறையில், மறுநாள் விடிந்த பின் விற்பதற் காக அவனுல் பல கூடைகளில் புஷ்பங்கள் நிரப்பி வைக் கப்பட்டிருந்தன. அவற்றின் பரிமளமானது அந்த அறை முழுதும் பரவி எங்கும் சுகந்தமா யிருந்தது. அந்த நல்ல வாசனையானது வலேச்சிகளுக்குப் பிடிக்கவில்லே; அவர்கள் இடைவிடாது மீனின் துர்நாற்றத்தையே அனுபவித்துக் கொண்டிருப்பவர்க ளாதலின், புஷ்ப வாசனே அவர்களுக் குக் கெட்ட வாசனேயாகத் தோற்றிற்று. அதனுல் அவர் களுக்கு உறக்கம் வரவில்லே. எல்லோரும் சங்கடப்பட்டார் கள். அப்போது அவர்களில், பல தந்திரங்களே உணர்ந்த கிழவி யொருத்தி, மற்றவர்களே நோக்கி, "இந்தப் புஷ்ப வாசனே நம்மைத் தூங்கவிடமாட்டாது; இதை மாற்றினுல் தான் நாம் தூங்கலாம்; அதற்கோ ருபாய மிருக்கின்றது; நம்முடைய மீன் கூடைகளே நமது முகங்களுக்கு முன்னே வைத்துக்கொண்டால், அவற்றிலுள்ள மீன் வாசனேயே நம்முடைய நாசிகளில் துழைந்துகொண்டிருக்கும்; அத ற்கு முன் பூ வாசனே செல்லாது; அந்த மீன் வாசனேயைப் பிடித்துக்கொண்டே நாம் உறங்கிவிடலாம்" என்று கூறி னுள். உடனே 'இது நல்ல யுத்திதான்' என்று எல்லோரும் தங்கள் தங்கள் மீன் கூடைகளே முகத்துக்கு முன்னே வைத்துக்கொண்டார்கள். மீன் கூடையின் துர்நாற்றத்தால் அந்த வலேச்சிகளுக்கு நல்ல நித்திரை வந்துவிட்டது. எல் லோரும் பிரமானந்தமாக உறங்கினர்கள். இப்படியே ஒவ் வொரு மனிதரும், எதில் அதிகமாகப் பழகுகிறார்களோ அதிலேயே திருப்தியுடையவர்களா யிருப்பார்கள்.

897. மனிதர்கள், தங்கள் தங்கள் இயற்கைக்குத் தக்கபடி மகாத்மாக்களே மதிப்பார்க ளென்பதற்கு உதாரணமான கதை:

ஒரு சமயம் ஒரு மகாத்மா, ஒரு பாதை யோரத்திலே ஆழ்ந்த சமாதியில் அமர்ந்திருந்தார். அவ்வழியே ஒரு திருடன் சென்றான். அவன் அந்த மகாத்மாவைப் பார்த்ததும், 'திருடனுக்குத் திருட்டு புத்தி' என்பதற் கிணங்க, அவரையும் தன்னைப்போன்ற திருட னென்றே நினைத்து, "இங்கு உட்கார்ந்தபடியே நித்திரை செய்யும் இவன் ஒரு பக்காத் திருடன்; நேற்றிரவு பல வீடுகளில் கன்னம் வைத்துத் திருடிக்கொண்டு திரிந்திருப்பான்; அதனால் தூக்கமின்றிக் களைத்து இப்பொழு திங்கே உட்கார்ந்தபடியே தூங்குகிறான்; இவனைக் கண்டால் போலீஸார் பிடித்துக்கொள்வார்கள்; நாம் இங்கே சிறிது நேரம் தாமதிப்போமானால், இவனைப் பிடிக்க வரும் போலீஸார் நம்மையும் சேர்த்துப் பிடித்துக்கொள்வார்கள்; ஆதலால் நாம் சீக்கிரம் இவ்விடத்தை விட்டு ஓடிவிடவேண்டும்" என்று உடனே அங்கு நில்லாமல் ஓடிவிட்டான். அதன்மேல் அவ் வழியிற் சென்ற குடிகாரன் ஒருவன் அந்த மகானைப் பார்த்தான். அவ்வாறு பார்த்ததும் அவன், அவரைத் தன்னைப்போன்ற குடிகார னென்று நினைத்து, "ஆ! ஆ!! இவன் ஒரு குடுவை அதிகமாகக் குடித்துவிட்டு, அதிகமாக வெறிகொண்டு அதனைத் தாங்க முடியாமல் சாக்கடை யோரத்தில் சாய்ந்து கிடக்கின்றான்; நான் இவனைப்போலவே அதிகமாகக் குடித்தும் தள்ளாடாமல் நிருக்கின்றேன்; நான் இவனைப்போல் உறுதி

யற்றுக் கீழே விழுந்துவிடமாட்டேன்'' என்று சொல்லி, அவரைப் பரிகசித்துக்கொண்டே போய்விட்டான். முடிவில், ஒரு மகாத்மா அவ்வழியிற் சென்று அந்த யோகியைப் பார்த்தார்; அவ்வாறு பார்த்ததும் அவருடைய இயற்கைக்குத் தக்கபடி அங்கிருந்தவர் மகா யோகி யென்பது அவருக்கு விளங்கிற்று. அதனால் அவர், அந்த யோகியின் பாதங்களைத் தொட்டு வணங்கி, அவரிடம் நல்லருளைப் பெற்றுக் கொண்டார். இதனால், மனிதர் எந்த வஸ்துவையும் தங்கள் தங்கள் இயற்கைக்குத் தக்கபடி மதித்துக்கொள்வார்களென்பது விளங்கும்.

898. ஈசுர பிரக்ஞையை அடைந்தவன் சகலரையும், சகலத்தையும் சமமாகப் பாவிப்பா னென்ப தற்கு உதாரணமான கதை:

ஒரு கிராமத்திலே ஹிந்துக்களுடைய மடமொன்றிருந்தது. அதில் பல சன்னியாசிகள் வசித்து வந்தார்கள். அவர்கள் தினந்தோறும் பிச்சை யோடெடுத்துக்கொண்டு பிச்சைக்குச் செல்வது வழக்கம். அந்த வழக்கப்படியே அவர்களுள் ஒரு சன்னியாசி ஒரு நாள் ஆகாரம் சேர்க்கும் பொருட்டுப் பிச்சை யோட்டுடன் வெளியேறி ஒரு தெருவில் போய்க்கொண் டிருந்தார். அப்போது அத் தெருவிலிருந்த ஒரு ஜமீன்தார், ஒரு ஏழையைப் பலமாக அடித்துக்கொண்டிருந்தான். சன்னியாசி மிகுந்த இரக்கச் சித்தமுடையவராதலால், அவ்வாறு அந்த ஜமீன்தார் அந்த ஏழையை அடிப்பதைப் பார்த்து மனமுருகி, உட-

னே அந்த ஜமீன்தாரிடத்திற் சென்று, "ஐயா! இந்த ஏழையை அடிக்கவேண்டாம்" என்று கெஞ்சினர். ஜமீன்தார் அக்கிரமத்திற்கென்றே பிறந்தவனுதலின், சன்னியாசியைக் கோபத்துடன் நோக்கி, "உனக்கு இந்த ஏழையின் விஷயத்தில் இரக்கமா யிருந்தால், அவன் தாங்கிக்கொள்ள வேண்டிய அடியை நீயே தாங்கிக்கொள்" என்று அந்தச் சாதுவை அடிமேல் அடியாக அடித்தான். சன்னியாசி அடிகளின் வேதனையைப் பொறுக்க முடியாமல் பிரக்ஞையற்றுக் கீழே வீழ்ந்துவிட்டார். அவருடைய பரிதாப நிலைமையைப் பார்த்த ஒரு மனிதன், மடத்துக்குச் சென்று அங்குள்ள மற்ற சன்னியாசிகளிடம் தெரிவித்தான். உடனே அங்கிருந்த சன்னியாசிகளெல்லோரும் வருத்தத்துடன் விரைந்தோடி, அடிபட்ட சாமியாரைத் தூக்கிக்கொண்டு வந்து மடத்தின் ஓர் அறையிலே படுக்க வைத்தார்கள். அவருக்கு நெடுநேரம்வரை பிரக்ஞை வரவேயில்லை. அதனுல் மற்ற சாமியார்களெல்லோரும், விசனமும் கவலையும்மிகுந்தவர்களாகி, அந்தசன்னியாசியின் முகத்தை, குளிர்ந்த ஜலத்தால் கழுவி, அதன்மேல் விசிறியால் விசிறி, வாயிலே பாலை ஊற்றி, அவருக்குப் பிரக்ஞை உண்டாக்க முயற்சி செய்தார்கள். அதன்மேல் அவருக்குச் சிறிது சிறிதாகப் பிரக்ஞை யுண்டாயிற்று. அவர் கண்களைத் திறந்து மற்ற சன்னியாசிகளைப் பார்த்தார். அப்போது, அவர், அங்கிருக்கும் சன்னியாசிகளை இன்னார் இன்னரென்று தெரிந்து கொள்கின்றரா என்பதை அறிய விரும்பி, அவருக்குப் பாதஅட்டிக்கொண்டிருந்த சன்னியாசி யொருவர்,

அவர் முகத்தை நோக்கி, "சுவாமி! தங்களுக்குப் பாலூட்டுகின்றவன் இன்னனென்பது தங்களுக்குத் தெரிகின்றதா?" என்று கேட்டார். அதற்கவர் மெல்லிய குரலில் "சகோதரனே! என்னை அடித்தவனே இப்பொழுது எனக்குப் பாலூட்டிக்கொண்டிருக்கிறான்" என்று மறுமொழி கூறினர். இவர் ஈசுவரப்பிரக்ஞையடைந்த மகாபரிசுத்த புருஷராதலின், இவருக்கு விரோதியையும் சிநேகனையும் ஒரே தன்மையராக நினைக்கும் சமத்துவநிலை ஏற்பட்டிருந்தது. அதனால், இவர், தம்மை யடித்தவனும், தாழும், தம் சிநேகிதரும் ஒருவரே என்று நினைத்து இவ்வாறு விடை கூறினர்.

இந் நிலைமையை அடைதல் எளிதன்று; மனிதன் ஈசுவரப் பிரக்ஞையை அடைந்து, நன்மைக்கும் தீமைக்கும் அப்பால், புண்ணியத்தையும் பாபத்தையும் கடந்து சென்றொழிய, இந்த ஆத்மீக ஒற்றுமையை அனுபவத்தில் அடைதல் முடியாது.

899. பெரியோர் வாக்கியத்தைக் கடைப்பிடித்து அதன்படி நடந்து மேலும் மேலும் அவ் வுபதேசத்தை விருத்தி செய்துகொள்வோர்க்கு மேலும் மேலும் நன்மைகளே உண்டாமென்பதற்கு உதாரணமாகிய கதை:

ஓர் ஏழை மனிதன், தினந்தோறும் காட்டிற்குச் சென்று, தான் சுமக்கத்தக்க விறகுகளை வெட்டிக் கட்டிச் சுமந்துகொண்டு வந்து, தானிருக்கும் ஊரில் விற்று, அந

னுல் கிடைக்கும் சிறிது வரும்படியைக் கொண்டு ஜீவனம் செய்துகொண்டுவந்தான். அவனுடைய வாழ்க்கையானது மிகவும் துக்ககரமாகவே நடந்துவந்தது. இப்படி அவன் ஜீவனம் செய்துகொண்டுவந்த காலத்தில், ஒருநாள், தன னுடைய வழக்கம்போலக் காட்டிற்குச் சென்று விறகு வெட்டிக்கொண் டிருந்தான். அப்போது அவ் வழியே சென்றுகொண்டிருந்த சன்னியாசி யொருவர், அவ னுடைய கஷ்டமான நிலைமையைப் பார்த்து மனமிர ங்கி, அவனுடைய வறுமை நீங்குதற்கான மார்க்கத் தை அவனுக்குக் காட்டக் கருதினர். அந்தக் காட்டில் மேலே சிறிது தூரம் சென்றால் இலாபம் கிடைக்கத் தக்க வது விருந்தது. அதனை அச் சன்னியாசி உணர்ந்திருந்தார். அதனுல் அவர் அவனை நோக்கி, "நீ இந்தக் காட்டினுள்ளே இன்னும் மேலே சென்றால், உனக்கு மிகுந்த இலாபம் கிடைக்கும்" என்று கூறிவிட்டுச் சென்றார். அந்த ஏழை மனிதன், சாமியார் சொல்லில் நம்பிக்கை வைத்து அந் தக் காட்டிற்குள் சிறிது தூரம் மேலே சென்றான். அங்கே ஒரு சந்தன மரம் அவனுக்கு அகப்பட்டது. அதைக் கண்டவுடன் அவன் சந்தோஷித்துத் தன்னுல் சுமக்கத் தக்க சந்தனக் கட்டைகளை வெட்டிக் கட்டி எடுத்துக் கொண்டுபோய் ஊரில் விற்று மிகுந்த இலாபத்தை அடைந் தான்.

அதன்மேல் அவன், சன்னியாசியின் வார்த்தையைப் பற்றி ஆலோசிக்கத் தொடங்கினன். அவ்வாறு சிந்தித்

கத் தொடங்கிய அவன், ''சாமியார் சொற்படி நாம் காட்டிற்குள் மேலே சென்றதால் சந்தன மரத்தைக் கண்டு மிகுந்த இலாபத்தை அடைந்தோம்; இன்னும் மேலே சென்றால் இதினும் மேற்பட்ட இலாபத்தை அடைந்தாலும் அடையக்கூடும். அவர், 'காட்டிற்குள் இன்னும் மேலே சென்றால் இலாபம் கிடைக்கும்' என்று சொன்னாரே தவிர, 'இன்ன இடத்திற்குச் சென்றால் இன்னது கிடைக்கும்' என்று விவரமாக ஒன்றும் கூறவில்லை. அதனால் அவர் சொற்படி காட்டிற்குள் மேலே செல்லச் செல்ல இலாபம் அதிகரித்துக்கொண்டே யிருக்குமென்ற நம்பிக்கை யுண்டாகிறது; பெரியோர்கள் பெரிய கருத்துக்களை ஒரு சிறிய வாக்கியத்தில் அடக்கிச் சொல்லிவிட்டுப்போவது அவர்களின் இயற்கை; ஆதலின், நாம் இன்னும் காட்டில் மேலே சென்று பார்க்கவேண்டும்'' என்று தீர்மானித்து, மறுநாள் காட்டிற்குள் நுழைந்து, சந்தன விருக்ஷத்தைக் கண்ட இடத்திற்கும் அப்பால் சிறிது தூரம் மேலே சென்றான். அங்கே ஓரிடத்தில் தாம்பிரக்கனி இருந்தது. அதைக் கண்டதும் அவன் முன்னிலும் மிக்க மகிழ்ச்சி யடைந்து, தன்னால் சுமக்கத்தக்க தாம்பிரங்களைத் தோண்டி யெடுத்துக்கொண்டு போய் ஊரிலே விற்று அதிகப் பணம் சம்பாதித்தான். மறுநாள் அவன், சாமியார் சொல்லில் இன்னும் அதிக நம்பிக்கை வைத்துக் காட்டிற்குப் போய்த் தாம்பிரக்கனி யிருந்தவிடத்தையும் தாண்டி மேலே சிறிது தூரம் சென்றான். அங்கே ஓரிடத்தில், வெள்ளிக்கனி யிருந்தது. அதைப் பார்த்ததும் அவன்

மேலும் களிப்படைந்து தன்னுல் சுமக்கத்தக்க வெள்ளிக் கட்டிகளைத் தோண்டி யெடுத்துக்கொண்டு போய் ஊரில் விற்று முன்னிலும் பதின்மடங்கதிகமான பணம் சம்பாதித்தான். அவ்வாறு சம்பாதித்தும் அவன் அம்மட்டோடு நின்றுவிடாமல் அதன்மேலும் ஒவ்வொரு நாளிலும் அந்தக் காட்டிற்குள் மேன்மேலும் அதிக தூரம் சென்று, தங்கக் கனிகளையும், இரத்தினக் கனிகளையுங் கண்டு அளவற்ற தங்கக்கட்டிகளையும், இரத்தினங்களையும் வாரிக்கொண்டு போய் விற்றுக் கணக்கிலடங்காத பணம் சம்பாதித்து மிகுந்த ஐசுவரியமுள்ளவ னுய்விட்டான். இவனைப்போலவே உண்மை ஞானத்தில் ஆசை யுள்ளவன், குருவினிடம் உபதேசம் பெற்று ஞானமார்க்கத்தில் பிரவேசித்து ஆச்சரியமான சக்திகளை யடைந்து, அவற்றோடு நின்றுவிடாமல் குரு உபதேசத்தின்படி மேலும் மேலும் சன்மார்க்கத்தை அனுஷ்டித்து முடிவில் நித்தியானந்தமாகிய முத்திப் பேற்றினை அடைவான்.

900. பேராசை பெரு நஷ்டத்தை உண்டாக்கிவிடு மென்பதற்கு உதாரணமான கதை:

ஒரு நகரத்தில் பேராசையுள்ள அம்பட்டனொருவனிருந்தான். அவன், அந் நகரத் தரசனுக்கும் சௌரம் செய்வான்; இதர ஜனங்களுக்கும் சௌரம் செய்வான். அவனுக்கு அரசனிடத்தில் சம்பளமும், இதர மனிதர்களிடத்தில் கூலி வரும்படியு மூண்டு. இந்த இரண்டு வரும்படியினலும் அவனுடைய ஜீவனம் சுகமாக நடந்துவந்தது.

அக் காலத்தில் அந் நகரத்திற்கு வெளியிலுள்ள ஒரு மரத்தில் ஓர் எகிப்து தேவதை தங்கியிருந்துகொண்டு, அந்த மரத்தினடியில் செல்லும் பொராசைக்காரர்களிடத்தில், 'தங்கம் நிறைந்த ஏழு ஜாடிகளை உங்களுக்கு நான் தருகிறேன்; நீங்கள் எடுத்துக்கொள்ளுகிறீர்களா?' என்று கேட்டு அவர்களை சம்மதித்தவுடன், ஏழு தங்க ஜாடிகளை அவர்கள் வீட்டிற் கனுப்பி, அவற்றுள் ஒன்றைத் தங்கம் குறைவுள்ளதாகச் செய்து, 'அதை திரப்பிவிடவேண்டும்' என்னும் எண்ணத்தை அவர்களுக்கு உண்டாக்கி, அவர்கள் தங்கள் பொருள்களை யெல்லாம் அதிற் போடப்போட அது நிறையாதிருக்கும்படி ஓர் உபாயத்தை உண்டாக்கி, அதன்மூலம் அவர்களுடைய கைப்பொருள்களை யெல்லாம் அபகரித்து அவர்களைத் தரித்திரர்களாக்கும் ஓர் வழக்கத்தை மேற்கொண்டிருந்தது. அப்படியிருக்கும்போது ஒரு நாள் மேற்கூறிய பேராசைக்காரனாகிய அம்பட்டன், அந்த எகிப்து தேவதை யிருந்த மரத்தினடியிற் சென்றுவிட்டான். அப்பொழுது அத் தேவதை மறைவிலிருந்துகொண்டு அந்த அம்பட்டனுக்குக் கேட்கும்படி, "என்னிடத்தில் பொன்நிறைந்த ஏழு ஜாடிகளிருக்கின்றன; அவற்றை நான் உனக்குத் தருகின்றேன்; நீ ஏற்றுக்கொள்கின்றாயா?" என்று கூவிற்று. அந்தச் சப்தத்தைக் கேட்டவுடன் நாவிதன், 'இங்கே யார் இப்படிக் கூறுகிறவர்?' என்று நான்கு பக்கங்களிலும் சுற்றிச் சுற்றிப் பார்த்தான்; அவன் கண்களுக்கு எவரும் தென்படவில்லை. அப்படிக் காணாதிருந்தும், அந்த அம்பட்டனுக்கு, 'ஏழு பொன் ஜாடிகள் தருவேன்'

என்று இளம்பிய வார்த்தையில் அளவற்ற பேராசை யுண்டாகிவிட்டது. அதனால் அவன், ''இங்கே கூவினது ஒரு தேவதையா யிருக்கவேண்டும்; அது நம்மீது தயவு வைத்து அந்த ஜாடிகளை நமக்குத் தருவதாகக் கூறுகின்றது; ஆதலின், நாம் அவற்றை ஏற்றுக்கொள்வதாகக் கூறவேண்டும்'' என்று தீர்மானித்து, ''நான் அந்த ஏழு தங்க ஜாடிகளையும் எடுத்துக்கொள்கிறேன்'' என்று உரக்கக் கூவினான். உடனே அந்த எக்ஷி தேவதை, ''நான் அந்த ஜாடிகளை உன்னுடைய வீட்டிற் கொண்டுபோய் வைத்து விட்டேன்; நீ அங்கே சென்று அவற்றைப் பார்த்து எடுத்துக்கொள்'' என்று கூறிற்று.

அம்பட்டன் ஆச்சரியமுற்று, ''இந்த வார்த்தையின் உண்மையைக் கண்டறியவேண்டும்'' என்று வீட்டிற்கு விரைந்தோடி 'அங்கே ஜாடிகள் இருக்கின்றனவா?' என்று பார்த்தான். அவை அங்கே இருந்தன. அவற்றைக் கண்டவுடன் அம்பட்டன் அளவற்ற ஆனந்தங்கொண்டு, திறந்து பார்த்தான். எல்லாவற்றிலும் தங்கம் இருந்தது; ஆனால், ஒரு ஜாடியில் மாத்திரம் பாதிவரைதான் தங்கம் இருந்தது. அப்படியிருந்தது அம்பட்டனுக்குத் திருப்தியாயில்லை. அதனால் அவன், 'அந்த ஜாடியிலும் பொன்னைப் பூரணமாக நிரப்பி வைத்துக்கொள்ளவேண்டும்' என்று நினைத்துத் தன்னிட மிருந்த பொன் ஆபரணங்களையும், வெள்ளி ஆபரணங்களையும் விற்றுப் பொன் நாணயங்களாக மாற்றி அந்த ஜாடிக்குள்ளே போட்டான். எக்ஷி

தேவதையின் சூதினால் அந்த ஜாடியானது நிறையாமல் முன்போலவே யிருந்தது. அதனால், அம்பட்டன், 'எப்படியாவது அதனை நிரப்பிவிடவேண்டும்' என்று ஆத்திரங் கொண்டு, அரை வயிறு கால் வயிறு ஆகாரம் சாப்பிட்டும், பட்டினி கிடந்தும், வருகிற வரும்படியை மீதிப்படுத்தி அதைக்கொண்டு பொன் நாணயங்கள் சேகரித்து அந்த ஜாடியில் போட்டுவந்தான். அப்படிச் செய்தும் அந்த ஜாடி நிறையவில்லை. அதன் மேலும் அம்பட்டன், தன்னுடைய பிடிவாதத்தை விடாமல் அந்த ஜாடியை நிரப்பும் நோக்கங்கொண்டு, தன்னுடைய அரசனிடத்தில், தன் வரும்படி, கால க்ஷேபத்துக்குப் போதவில்லை யென்றும், அதனால் தனக்குச் சம்பளத்தை அதிகப்படுத்த வேண்டு மென்றும் கேட்டுக்கொண்டான். அரசன் அந்த நாவிதனிடத்திலே விசுவாசமுடையவ னுதலின், அவனுடைய வேண்டுகோளின்படியே, அவன் சம்பளத்தை இரட்டிப்பாக உயர்த்தினன். அம்பட்டன், அந்தச் சம்பளம், மேல் வரும்படி எல்லாவற்றையும் அந்த ஜாடியை நிரப்பும் விஷயத்திலே உபயோகப்படுத்திப் பார்த்தான்; அப்போதும் அந்தப் பேய் ஜாடி நிறையவேயில்லை. கடைசியில் நாவிதன் பிச்சையெடுக்க ஆரம்பித்து அதில் கிடைக்கும் வரும்படியையும் சேர்த்துப் பொற்காசாக்கி ஜாடிக்குள் போட்டுப் பார்த்தான். அந்த ஜாடி நிறையவேயில்லை. இந்த முயற்சியால் அம்பட்டனுக்குத் தாங்க முடியாத கஷ்டமும் துக்கமும் அதிகரித்தன. இந்தக் கஷ்டமான நிலைமையோடு அவனுக்குப் பல மாதங்கள் கழிந்

தன அவனுடைய துக்கம் எல்லிதத்தும் நீங்கினபா டில்லை.

இப்படியிருக்கும் காலத்தில் அரசன், அந்த அம்பட்டனுடைய விசனகரமான முகக் குறியைப் பல தினங்களாகக் கவனித்து வந்து, அந்த எகஷி தேவதையின் மாயவலைக்குள் அகப்பட்டவர்களே அப்படி யாவார்களென்னும் விஷயத்தை உணர்ந்திருந்தானதலால், "இந்த அம்பட்டன் பெருங் கஷ்டத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறான், இதற்குக் காரணம் அந்த எகஷி தேவதையின் மாயச் செயலாகத்தானிருக்கும்; இவனிடம் உண்மையை விசாரிக்க வேண்டும்" என்று ஆலோசித்து ஒருநாள் அம்பட்டனை நோக்கி, "அடா! நீ இப்போது நம்மிடம் வாங்கும் சம்பளத்தில் பாதி வாங்கிக்கொண்டிருந்த காலத்தில் சுகதேகியும், உற்சாகத்துடனும் வாழ்ந்துவந்தாய்; உனக்கு இரட்டிப்புச் சம்பளம் கிடைக்கும் இக் காலத்தில் நீ மிகுந்த கவலையுள்ளவனையும், விசனமுடையவனையும் காணப்படுகின்றாய்; நீ இவ்வாறு துக்கத்திற்கு உள்ளானதற்குக் காரணமியாது? நீ எகஷி தேவதையிடம் வழி பொன் ஜாடிகளைப் பெற்றிருக்கின்றாயோ?" என்று கேட்டான். அம்பட்டன் இதைக் கேட்டவுடனே, 'ஐயோ! இந்த இரகசியம் அரசருக்கு எப்படித் தெரிந்தது!' என்று திகிலடைந்து, அவ் வரசனை நோக்கி, "மன்னர் பெருமானே! எகஷி தேவதையின் விஷயத்தைத் தங்களுக்குக் கூறினவர் செவர்? நான் அந்த ஜாடிகளைப் பெற்றுக்கொண்டுதான் அவஸ்தைப் படுகிறேன்.

இந்த இரகசியத்தை நீங்கள் எப்படி உணர்ந்தீர்கள்?'' என்று வினவினான். அதற்கு அரசன் ''அந்த எஷி தேவதையிடம் ஏழு ஜாடிகளைப் பெற்றவர்கள்தாம் பேராசையினால் தூண்டப்பட்டு உன்னைப்போல் துன்பப்படுவார்களென்பது எனக்குத் தெரியும்; அந்தக் குறிகள் உன்னிடம் விளங்கியபடியால் நான் உன்னுடைய இரகசியத்தைத் தெரிந்துகொண்டேன்; நீ அந்த ஜாடிகளை வைத்திருக்கும் வரையில் அளவில்லாத அவஸ்தைப்பட்டுக் கெட்டுப்போய் விடுவாய்; ஆதலின், 'இவ்வளவு துன்பமடைந்தது போதும்' என்று உடனே அந்த ஜாடிகளை அத் தேவதையினிடம் சேர்த்துவிடு; அவ்வாறு செய்தாற்றான் இத் துன்பம் உன்னை விட்டு நீங்கும்'' என்றான். இதைக் கேட்டவுடனே அம்பட்டனுக்குப் புத்தி வந்தபடியால் அவன் விரைந்தோடி அந்தத் தேவதையிருந்த மரத்தினடியிற் சேர்ந்து, ''ஓ எஷி தேவதையே! உனது பொன் ஜாடிகளை நீயே எடுத்துக்கொள்; அவைகள் எனக்குத் தேவையில்லை'' என்று கூவினான். அந்தத் தேவதை, ''அப்படியே நான் அவற்றைத் திரும்ப எடுத்துக்கொள்கிறேன்'' என்று சொல்லிற்று. அம்பட்டன் உடனே வீட்டிற்குத் திரும்பிப்போய் 'அங்கே அந்த ஜாடிகள் இருக்கின்றனவா' என்று பார்த்தான்; அவைகள் அங்கே இல்லை. எஷி தேவதை மூன்று அவற்றை மாயமாய் அங்கே கொண்டு போய்ச் சேர்த்தது போலவே திரும்ப எடுத்துக்கொண்டு போய் விட்டது. அவை அங்கே இல்லாமற்போகவே அம்பட்டன், ''அப்பா! சனியன் தொலைந்தது'' என்று திருப்தி

யடைந்தான். எனினும், அவனுடைய கைப்பொருள்களை யெல்லாம் அந்த ஜாடி இழுத்துக்கொண்டு போய்விட்டபடி யால், அவன் நெடுநாட்கள் வரை கஷ்ட ஜீவனமே செய்து கொண்டிருந்தான். இவனைப்போலவே உலகத்தில் பேராசை கொண்டவர்கள், மயக்கமான வழிகளிற் பிரவேசித்துக் கைப்பொருளை யிழந்து கஷ்டப்படுவதோடு ஆத்ம ஞானத்தையும் இழந்து மோக்ஷ மடைதற் கேதுவில்லாமல் அலைச்சற் படுவார்கள்.

901. மோகத்தை ஒழிக்கும் உபாயத்தை விளக்குதற்கு உதாரணமான கதை:

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்களுள் ஒருவர், ஒரு சமயம் அவரை நோக்கி, "சுவாமி! நான் தியான நிஷ்டை களிலே எனது வாழ்நாளை நடத்திவந்த போதிலும் என்னுடைய மனத்திலே அடிக்கடி தீய நினைப்புக்கள் உண்டாகின்றனவாதலால், மோகத்தை ஜயிக்க என்னால் முடிய வில்லை; அதனை எவ்வாறு ஜயிக்கலாம்?" என்று கேட்டார்.

அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர், "ஒரு மனிதன், ஒரு நாயை மிக்க பிரியமாக வளர்த்துவந்தான்; அவன், அதன் முகத்தில் முத்தமிட்டு அதனோடு கொஞ்சி விளையாடித் தான் போகுமிடங்களுக் கெல்லாம் அதனை யெடுத்துச் செல்வது வழக்கம். அவனுடைய இந்த மூடச் செய்கையைப் பார்த்த ஓர் அறிவாளி ஒரு சமயம் அவனிடத்தில், 'நீ கேவலமான நாய்க்கு இவ்வளவு இடம் கொடுக்கக் கூடாது; எப்படி யிருந்தபோதிலும் இஃதொரு அறிவற்ற

மிருகம்; ஆதலால், நீ இதனைக் கொஞ்சம்போது இது உன் முகத்தில் கடித்துவிட்டாலும் கடித்துவிடும்; நீ இத னைச் சமீபத்தில் சேர்க்காமல் துரத்துவது நலம்'' என்று கூறினான். நாய்க்குச் சொந்தக்காரன், அந்த வார்த்தை களை ஏற்றுக்கொண்டு அப்போது தன் மடியில் வைத் திருந்த அந்த நாயை விரட்டிவிட்டு, 'இனிமேல் எப்பொழு தும் இந்த நாயினிடத்தில் கொஞ்சி விளையாடுவதில்லை' என்றும் தீர்மானம் செய்துகொண்டான். அவன் அவ் வாறு செய்தும் அந்த நாய்க்கு அவனுடைய நோக்கத்தை உணர்ந்துகொள்ளும் சக்தி யில்லாதபடியால் அது முந் தின வழக்கம்போல் அவனிடத்தே விளையாடுதற்கு ஓடிக் கொண்டே யிருந்தது. அப்படி அந்த நாய் அவனிடத் தில் நெருங்கும்போ தெல்லாம் அவன் நிர்த்தாக்ஷணிய மாக அதனை அடித்துத் துரத்திக்கொண்டே வந்தான். அந்த நாய் பலமுறை தன்னுடைய எஜமானன் தன்னை அடித்துத் துரத்துவதைப் பார்த்துவிட்டு 'நம் எஜமான னுக்கு நம்மீது விருப்பமில்லை; நாம் அடிக்கடி அவரிடம் சென்று அவருக்குத் தொந்தரவு கொடுப்பதால் நமக்கு மேலும் மேலும் அடிதான் கிடைக்கும்; ஆதலால், இனி நாம் எஜமானனிடம் விளையாடச் செல்வதை நிறுத்திக் கொள்ளவேண்டும்' என்று தீர்மானித்து முடிவில் தன் எஜமானனிடம் சென்று தொந்தரவு செய்வதை நிறுத்திக் கொண்டது. நீயும் அந்த நாய்க்கு எஜமானனைப் போன் றிருந்தால் மோகத்தை நீக்கிவிடலாம்; நீ பல நாட்களாக அனுபவித்து வந்த உலக அனுபவங்களை நீ விட்டுவிட

முயற்சி செய்தாலும் அவை உன்னை இலகுவில் விட மாட்டா; ஆயினும், அவை உன்னிடத்தில் வரும்போ தெல் லாம் நீ அவற்றோடு உறவாட நினைக்காமல் வெறுத்து அவற்றை அடித்துத் துரத்திவிடு; அவ்வாறு பன்முறை யும் செய்துவர, அவை காலடைவில் உன்னிடம் வருவதி னின்றும் விலகிக்கொள்ளும்; முடிவில் நீ அவற்றின் தொந்தரவுகளினின்றும் நிவிருத்தி யடைவாய்'' என்று கூறினர். அந்தச் சிஷ்யர் அவ்வாறே செய்து அத் தொந் தவுகளை நீக்கிக்கொண்டார். இக் கதையினால் மோகத்தை நீக்கும் உபாயத்தை உணர்ந்துகொள்ளலாம்.

902. ஈசுரனிடத்திலே பூரண நம்பிக்கை வைத்துள்ளவர்கள் எதையும் சுலபமாகச் செய்துவிடுவோர்க ளென்பதற்கு உதாரணமான கதை:

பால்காரி யொருத்தி, வைதீகப் பிராமணர் ஒருவ ருக்குத் தினந்தோறும் வீட்டுக்குப் பால் கொடுத்துக் கொண்டு வரும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தாள். அவள் இருக்கு மிடத்திற்கும், அந்தப் பிராமணர் இருக்கு மிடத்திற்கும் நடுவில், குறுக்கே நதியொன்று ஓடிக்கொண் டிருந்தது. அவள் தினந்தோறும் படகிலேறி அந்த நதி யைக் கடந்துதான் அந்தப் பிராஹ்மணர் வீட்டிற்குச் செல்லவேண்டும். இப்படி அவள் அந்தப் பிராமணருக்குப் பால் ஊற்றிக்கொண்டு வருங் காலத்தில், சில தினங்கள் படகுப் போக்கு வரவு ஒழுங்காய் நடைபெறாமற் போன படியால், அவளால் குறித்த நேரத்தில் அந்தப் பிராமணர்

வீட்டிற்குப் போய்ப் பால் கொடுப்பதற்கு முடியாமல் தாமத மாகிக்கொண்டு வந்தது. அவள் அவ்வாறு தாமதமாகச் செல்வதைப்பற்றி ஒரு சமயம் அந்தப் பிராமணர் அவளைக் கடிந்துகொண்டார். அதற்கு அந்த ஏழைப் பெண், "சுவாமி! என்மீது குற்றமில்லை; நான் தினந்தோறும் அதி காலையிலேயே வீட்டை விட்டுப் புறப்பட்டுவிடுகிறேன்; நதியைக் கடக்கும் விஷயத்தில் தாமத மாகிவிடுகிறது; படகுக்காரன் தாமதித்து வருகின்றான்; அப்படி வந்தும், பிரயாணிகள் சேரும் வரை படகை விடாமல் தாமதித்துக்கொண் டிருக்கின்றான்; அவன் எப்பொழுது படகை விடுகின்றானோ அப்போதுதான் நான் அதில் ஏறி வரவேண்டி யிருக்கின்றது" என்று சொன்னாள். அதற்குப் பிராமணர் அவளை நோக்கி வேடிக்கையாக, "பெண்ணே! உலகத்திலுள்ள பல பக்திமான்கள் ஈசுர நாமத்தை ஜபித் துக்கொண்டே அதன் பலத்தால், பெரிய சமுசார சாகரத் தைக் கடந்துவிடுகின்றார்கள்; அப்படியிருந்தும் நீ இந்தச் சிறிய ஆற்றைச் சுலபமாகக் கடக்க மார்க்கந் தெரியாமல் திரமப்படுகின்றாய்" என்று சொன்னார்.

கபடற்ற அந்த ஸ்திரீ, பிராமணர் கூறிய வார்த்தை களைக் கேட்டவுடனே, "ஓகோ! ஈசுவரநாம ஜெபம் பெரிய சமுத்திரங்களையும், நதிகளையும், கடப்பதற்குத் துணையா யிருப்பதுபோ லிருக்கின்றது; அதைக்கொண்டு நாம் இந்த ஆற்றை எளிதிற் கடந்துவிடலாம்; நாம் இதுவரையில் இந்த உண்மை தெரியாமல் திரமப்பட்டிருக்கின்றோம்;

இனி அவ்வாறு சிரமப்படவேண்டியதில்லை'' என்று மனதில் தீர்மானஞ் செய்துகொண்டு அந்தப் பிராமணரிடத்தில் விடை பெற்றுத் திரும்பி நதிக்கரைக்குச் சென்று படகை எதிர் பாராமல், 'ஈசுர நாமத்தை ஜெபித்துக்கொண்டு நான் இந்த நதியின் ஜலத்தின்மேல் நடந்தால் இதில் மூழ்கினிடாமல் அக் கரைக்குப் போய்விடுவேன்' என்று உறுதியாக நினைத்துக்கொண்டு முழு நம்பிக்கையுடன் ஈசுர நாமத்தைத் தியானித்து நதியில் இறங்கினாள். அவளுடைய திடமான ஈசுரத் தியானத்தால் அவளின் பாதங்கள் ஜலத்திற்குள் அழுந்தவில்லை. அதனால் அவள், கரையில் நடப்பதுபோலவே ஜலத்தின்மேல் நடந்து அந்த நதியைக் கடந்து வீட்டிற்குப் போய்விட்டாள். அதன்மேல் அவள் இப்படியே ஈசுர நாமத்தைத் தியானஞ் செய்துகொண்டு தினந்தோறும் அந் நதிஜலத்தின்மேல் நடந்து சென்று பிராமணருக்குக் குறித்த காலத்தில தவறாமல் பாலூற்றி வந்தாள்.

அவள், அப்படித் தாமதமின்றிப் பாலூற்றி வருவதைக் கண்ட அப் பிராமணர், ஒருநாள் அந்தப் பால்காரியை நோக்கி, ''பெண்ணே! நீ சில தினங்களாகத் தாமதமின்றிக் குறித்த காலத்தில் வந்து பாலூற்றிச் செல்கின்றாயே; இதற்குக் காரணமென்ன? இப்போது படகினால் தாமதமாவதில்லையோ?'' என்று கேட்டார். அதற்கு அவள் ''சுவாமி! நீங்கள் முன்னொரு தினம், 'பக்தர்கள் ஈசுர நாமத்தைக் கூறிக்கொண்டே சமுசார சாகரத்தைக் கடக்

கின்றார்கள்' என்று சொன்னதைக் கொண்டு நான் ஈசுர நாமத்தின் உதவியால் இந்த நதியை இலகுவில் கடக்கலாமென்று உறுதிகொண்டு அவ்வாறே ஈசுர நாமத்தைத் தியானித்துக்கொண்டு நதியில் இறங்கினேன்; என் பாதங்கள் நீரில் அழுந்தவில்லை; அதனால் ஜலத்தின்மேல் நடந்து நதியைக் கடந்தேன்; அதிமுதல் நான் படகுக்காரனுடைய உதவியை நாடாமல் நதியைக் கடந்து வந்து குறித்த நேரத்தில் உங்களுக்குப் பாடஞ்சொல்லிப் போய்க்கொண்டிருக்கின்றேன்" என்றான். பிராமணர் அதிசயித்து அதனை நம்பாமல், அவனை நோக்கி, "பெண்ணே! நீ சொல்வதில் எனக்கு நம்பிக்கையில்லை; நீ நதிஜலத்தின்மேல் நடப்பதை நான் நேரில் பார்த்தால் மாத்திரந்தான் நம்புவேன்" என்று சொன்னார். உடனே பால்காரி பிராமணரிடத்தில், "அப்படியானால் நீங்கள் என் பின்னே வந்து நான் நதியில் நடந்து செல்வதைப் பாருங்கள்" என்று சொல்லி அவரை அழைத்துக்கொண்டு போய் நதி ஜலத்தின்மேல் ஈசுர நாமத்தை ஜபித்துக்கொண்டே நடந்து சென்றாள். அதைப் பார்த்தவுடனே பிராமணர் அளவற்ற அதிசயமடைந்து, "நாமும் ஈசுர நாமத்தை ஜபித்துக்கொண்டு இந்த நதி ஜலத்தில் நடப்போம்" என்று வாயினால் ஈசுர நாமத்தைப் பலமாக உச்சரித்துக்கொண்டு நதியில் இறங்கினார். அவருடைய வாய் ஈசுர நாமத்தைப் பலமாக உச்சரித்தாலும் மனத்தில் முழு நம்பிக்கை யில்லாமல், 'ஒரு சமயம் நாம் ஜலத்தில் முழுகிவிடுவோமோ' என்ற சந்தேகமும் உதித்த படியால் அவர் நதியில் இறங்கியவுடனே அவருடைய கால்

கள் ஜலத்திற்குள் அமுக்கிவிட்டன. அதனால் அவர் இடிப்பு வஸ்திரத்தை மேலே தூக்கிக்கொண்டு வாயினால் ஈசுவரநாமத்தை உச்சரித்தபடியே சிறிது தூரம் சென்று அதற்கு மேல் சென்றால் அபாயம் வருமென்று நின்றுவிட்டார். முன்னே சென்ற பால்காரி "அப்பாரின் தன்மை எப்படியிருக்கிறது பார்ப்போம்" என்று திரும்பிப் பார்த்துப் பிராமணருடைய ஏகைப்புக்கிடமாகிய செய்கையைக் கண்டு, "ஓகோ! இவர் நமக்கு ஈசுவரநாமத்தின் உயர்வைச் சொல்லியும், இவருக்கு அதில் திடமான பற்றில்லை; அதனாலேயே இவர் ஜலத்தின்மேல் நடக்க முடியாமல் தவிக்கின்றார்" என்று தெரிந்துகொண்டு அவரை நோக்கி, "சுவாமி! நீங்கள் எனக்கு ஈசுவரநாமத்தின் மகிமையை உபதேசம் செய்தும் உங்களுக்கு அதில் திடமான நம்பிக்கையில்லாமற் போய்விட்டது; உங்கள் வாய்மாத்திரம் திடமாக ஈசுவரநாமத்தை உச்சரித்தாலும் கை, ஆடையை மேலே தூக்குகின்றது; இதனாலேயே நீங்கள் முழு மனதையும் ஈசுவரனுக்கு அர்ப்பணஞ் செய்துவிடாமல் நம்பிக்கையற்றுச் சந்தேகத்திற் புகுந்திவிட்டிருக்கிறீர்க ளென்பது விளங்குகின்றது; இவ்வாறு திடசித்தத்தோடு கூடிய ஈசுவரபக்தியில்லாமையினாலேயே ஜலத்தின்மேல் நடக்க முடியாமல் நின்றுவிட்டீர்கள்; உங்கள் செய்கை மிகவும் பரிகாசத்திற்கிடமானது" என்று கூறிப் போய்விட்டாள். பிராமணர், "அடடா! இந்தப் பெண்ணுக்கு ஈசுவரனிடத்தில் ஏற்பட்ட திடசித்தமும் நமக்கேற்படாமற் போய்விட்டதே" என்று வெட்கத்தோடு வீட்டிற்குத் திரும்பிச் சென்றார். இக்

கதையினால், திடமான பக்தி யுடையவர்களுக்கே ஈசுவரன் தரிசனமளிப்பா ரென்பதையும், திடமான ஈசுவர பக்தி யுடையவர்கள் எத்தகைய பெரிய செயல்களையும் எளிதிற் செய்து முடிப்பார்க ளென்பதையும் நன்குணர்ந்து கொள்ளலாம்.

903. உலகில் வசிக்கும் மஹான்கள், பிறர்க்கு இம்சைசெய்யாமலும், தாங்கள் பிறரால் துன்பப்படாமலும் வாழ்வதற்கான உபாயத்தை விளக்கும் கதை:

ஒரு சர்ப்பமானது ஒரு வனையிலே வசித்துக்கொண்டு அந்த வழியாகச் செல்பவர்களைக் கடித்து ஹிம்சை செய்துகொண் டிருந்தது. அதனால், அந்த வழியில் எவரும் செல்வதற்கு அஞ்சி யிருந்தார்கள். அப்படி யிருக்கும்போது ஒரு சமயத்தில் ஒரு மஹாத்மா அந்த வழியாகச் சென்றார். அப்போது அந்தச் சர்ப்பமானது அவரைக் கடிக்க நினைத்து அவர் சமீபத்தில் சென்றது. அப்படிச் சென்றவுடனே அந்த யோகியின் சக்தியினாலே அந்தச் சர்ப்பத்திற்குத் தீயகுணம் நீங்கிச் சாந்த குணம் ஏற்பட்டு விட்டது. அதனால் அஃதடங்கி நின்றது. அப்போது அம் மஹான் அந்தச் சர்ப்பத்தைப் பார்த்து, "நண்பனே! நீ என்னைக் கடிக்க நினைத்து வந்தாயா?" என்று கேட்டார். பாம்பு வெட்கமுற்றுப் பதில் சொல்லாதிருந்தது. அதன் மேல் அம் மகான், அந்தப் பாம்பைப் பார்த்து, "நண்பனே! நீ இனிமேல் எவரையும் ஹிம்சிக்காதே!" என்று கூறினர். சர்ப்பம் தலை வணங்கி அவ் வுபதேசத்தை ஏற்

துக்கொண்டு தன் வனைக்குத் திரும்பிப் போய்விட்டது. மகானும், அவர் செல்லவேண்டிய இடத்துக்குப் போய் விட்டார்.

அதன்மேல் அந்தச் சர்ப்பமானது எவரையும் கடிக்காது வருத்தாமல், வெகு சாந்தமாக அந்த வனையில் வசித்து வந்தது. அதனுடைய தன்மையைப் பார்த்தவுடனே ஜனங்கள், "இப்போது இந்தப் பாம்பு தன்னுடைய விஷத்தை யெல்லாம் இழந்துவிட்டது; மனிதரைக் கடிக்கும் சக்தி இதற்கில்லை; இனி இதன் சமீபத்தில் நெருங்கினும் இது மனிதரை ஒன்றும் செய்யாது; ஆதலால், இது முந்தி நமக்குச் செய்த கொடுமைகளுக் கீடாக இப்போது இதனை நாம் தண்டித்து வருத்தவேண்டும்" என்று முடிவு செய்துகொண்டு அதைத் தொந்தரவுக்குள்ளாக்க வினைத்து அவர்களிற் சிலர் அதன்மீது கல்லெடுத் தெறிந்து அதைத் துன்பப்படுத்தி வந்தார்கள்; சிலர் அதன் வாலைப்பிடித்திழுத்து அதை வருத்திவந்தார்கள். இப்படியே பல மனிதர்களால் அதற்கு அளவில்லாத துன்ப முண்டாயிற்று. இந்தத் துன்பங்களால் அது மிகக் கனைத்துப் போய்விட்டது. இப்படியிருக்கும்போது அந்த மகாத்மா ஒரு தினம் மறுபடியும் அவ்வழியே சென்றார். அப்போது அந்தச் சர்ப்பம் ஜனங்கள் அடிந்த அடியினால் வருந்தி மெலிந்து அந்த வனையின் ஓரத்தில் கிடந்தது. அதைப் பார்த்தவுடன் அந்த மகான் மனதிரங்கி, "உனக்கிந்த வருத்தம் சேர்ந்ததற்குக் காரணமென்ன?" என்று அதனிடம் வினவினார். அதற்குச்

சர்ப்பம், "சுவாமி! நான் தங்களுடைய உபதேசத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் எவரையும் ஹிம்சை செய்யாமலிருந்துவருகிறேன்; அவ்வாறு நான் சாதுத்தன்மையைக் கொண்ட பிறகு ஜனங்கள் என்னிடம் நிர்ப்பயமாய் நெருங்கி எனக்குத் துன்பம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்; நான் சாதுத்தன்மையை மேற்கொண்டதுவே என் துன்பத்திற்குக் காரணமாக முடிந்தது" என்று கூறிற்று. இதைக் கேட்டவுடன் அந்த மகான் சர்ப்பத்தை நோக்கி, "என் அரிய நண்பனே! நீ உலக இயலை அறியாமையினால் இவ்வாறு துன்பத்தை அடைந்திருக்கின்றாய்; இந்த உலகத்திலுள்ளவர்கள், சாதுவாயிருப்பவர்களை மிகக் கேவலமாக நினைத்துப் பரிகசித்து அவர்களுக்குப் பல தொந்தரவுகளைச் செய்வது அவர்களின் இயற்கை; ஆதலின், உலகத்தில் சாதுவாயிருக்க விரும்புகிறவர்கள், பிறர்க்கு ஹிம்சை செய்யாமல் சாதுத்தன்மையை மேற்கொள்வதோடு, பிறர் தம்மிடம் நெருங்கித் தொந்தரவை யுண்டாக்கா திருக்கும்படி அவர்களுக்கு ஏதேனுமோ ரூபாயத்தால் ஒருவித அச்சத்தை யுண்டாக்கிக்கொண்டு மிருக்கவேண்டும்; அதாவது, அவர்களுக்கு முன்னே பயங்கரமான சில செய்கைகளைக் காட்டிக்கொண்டிருக்கவேண்டும்; அவ்வாறு செய்தால் எவரும் சமீபத்தில் நெருங்கவே மாட்டார்கள். நீ அந்த முறையை அனுசரிக்காததால் துன்பமடைந்திருக்கின்றாய். நீ என் உபதேசப்படி மனிதர்களைக் கடிக்காமல் மூச்சை மிருந்துகொண்டு, அவர்கள் சமீபத்தில் வரும்போது சிறி அவர்களுக்குப் பயங்காட்டி யிருப்பாயானால்,

அவர்கள் உன்னிடம் நெருங்கி யிருக்கவேமாட்டார்கள்; உனக்கு இத்தகைய துன்பம் நேர்ந்திருக்கவும்மாட்டாது; இதை உத்தேசித்துத்தான் நான் உனக்கு முன்னே, 'பிறரைக் கடித்து வருத்தாதே' என்று மாத்திரம் சொன்னேன். இந்த உபதேசத்தால் நீ பிறரைக் கடிக்காமல் மாத்திர மிருந்துகொண்டு உன்னுடைய பாதுகாப்புக்கான விஷயங்களைச் செய்துகொள்வா யென்று நான் நினைத்தேன்; நீ அப்படிச் செய்யாமல் எல்லா வகையிலும் சாதுத் தன்மையை மேற்கொண் டிருக்கின்றாய்; நீ இப்படியிருப்பதற்கு 'எல்லா வகையிலும் அடக்கமாயிரு' என்று நான் கூறவில்லையே; 'பிறரைக் கடிக்காதே' என்று மாத்திரந்தானே சொன்னேன். நீ இந்த உபதேசத்தை மாத்திரந்தானே அனுசரிக்கவேண்டும்; இனியாவது உன் தேகப் பாதுகாப்பு விஷயத்தில் ஜாக்கிரதையா யிருந்துகொள்; எவரும் உன் சமீபத்தில் நெருங்கும்போது கோபித்துச் சீறி அவர்களுக்குப் பயங்காட்டு; அவர்கள் உன் சமீபத்தில் நெருங்காமல் ஓடிவிடுவார்கள்; உனக்கெவ்வித துன்பமு மாகாது'' என்று கூறிச் சென்றார். அதன்மேல் சர்ப்பம் அவ்வாறே செய்து மனிதர் செய்யும் துன்பத்தினின்றும் நீங்கிக்கொண்டது. உலகத்தில் வசிக்கும் ஞானிகளும் இந்த முறையை அனுசரிக்கவேண்டும்; அவர்கள் எவர்க்கும் துன்பஞ் செய்யாமல் சாதுத் தன்மையை மேற்கொண்டாலும், பிறர் தம்மைக் கேவலமாக மதித்துப் பரிகசித்துத் தமக்குத் துன்பஞ் செய்யாமல், சில அற்புதச் செயல்களையும், பயங்காமான செயல்

களையும் மனிதர்க்கு மூன்னே செய்து காட்டிப் பயத்தை யுண்டாக்கவேண்டும்; அப்படிச் செய்தாற்றான் உலகத்து ஜனங்கள் அவர்களைப் பார்த்தவுடன், 'இவர் பெரிய மகான்; நாம் இவர் சமீபத்திற் சென்று ஏதேனும் துஷ்டச் செய்கை செய்தால் கெட்டே போய்விடுவோம்' என்று அஞ்சித் தூரத்திலிருந்தபடியே அவர்களை வணங்கிச் செல்வார்கள்; அப்படிப் பயங் காட்டாவிடிலோ எவரும் அவர்களைக் கேவலமாகக் கருதி, அவர்கள் சமீபத்திற் சென்று, 'இவன் ஒரு பைத்தியக்காரன்' என்று காதைப் பிடித்திழுத்தும், மண்ணை வாரி யெறிந்தும் அவர்களுக்குப் பல தொந்தரவுகளை உண்டாக்குவார்கள்.

904. பகுத்தறிவில்லாதவர்களுக்குப் பேரியோர்கள் நல்லுபதேசஞ் செய்தாலும், அவர்கள் அதை மூடத்தனமையாக அனுசரித்து அவஸ்தைப் படுவார்கள் என்பதற்கு உதாரணமான கதை:

ஒரு குரு ஒரு சமயத்தில், தம்முடைய சிஷ்யனிடத்தில், "எங்கும் ஈசனே யிருக்கின்றார்" என்று உபதேசம் செய்தார். அந்த உபதேசத்தைக் கொண்டு அவன், "உலகத்தில் எங்கும் ஈசனைத் தவிர வேறொன்று மில்லை ஆதலால், இனி நாம் எதைக் கண்டாலும் ஈசனுகவே பாவிக்கவேண்டும்" என்று நிச்சயப்படுத்திக்கொண்டான்; அவ் வுபதேசத்திலுள்ள உண்மைப் பொருளை அவன் உணர்ந்துகொள்ளவில்லை. இப்படி யிருக்கும்போது, அவன் ஒருநாள் ஒரு தெருவிலே சென்றுகொண் டிருந்

தான். அப்போது ஒரு மதங்கொண்ட யானை அவனுக்கெதிரில் வந்தது. பாகன் அதன்மேலிருந்து அதை அடக்குதற்குப் பிரயாசைப்பட்டுக்கொண்டு வந்தான். மேற்கூறிய சிஷ்யன் எதிர்ப்பட்டவுடனே யானைமேலிருந்த பாகன் அவனைப் பார்த்து, "யானை மதங்கொண்டு வருகிறது; நீ விலகி ஓடிப்போ! ஓடிப்போ!!" என்று உரக்கக் கூவினான். ஞானமுடன்கொண்ட சிஷ்யன் பாகனுடைய கூக்குரலுக்கு அஞ்சவில்லை. தன்னுடைய குரு வாக்கியப்படி அவன், 'எல்லாம் ஈசனே' என்று சுருதியிருந்தவனதனால், 'எங்கும் ஈசன் இருந்தபோதிலும் ஒவ்வொரு பிராணியிடத்திலும், அதனதன் இயற்கைக்குத் தக்க செய்கை நிகழும்' என்ற பகுத்தறிவற்றவனாய், "நான் என் ஓடவேண்டும்? நான் ஈசுவரன்; யானையும் ஈசுவரன்; ஈசுவரனுக்கு ஈசுவரனிடத்திலே என்ன பயம்!" என்று தனக்குள் நினைத்துக்கொண்டு ஓடாமல் நின்றான். யானை நெருங்கியதும், அவனைத் துதிக்கையால் பிடித்துத் தூக்கித் தூரத்தில் எறிந்துவிட்டது. அவன் மிகுந்த காய மடைந்தான். அதனால், அவன் வருந்தி, "குருவின் உபதேசத்துக்கு மாறான செய்கை நடந்ததற்குக் காரணமென்ன? குருவினிடம் சென்று கேட்கவேண்டும்" என்று மனவேதனையுடனே குருவினிடம் போய்த் தான் அவருடைய உபதேசப்படி நடந்ததையும், அதனால் தனக்குத் துன்பம் விளைந்ததையும் கூறி, 'இதற்குக் காரணமென்ன?' என்று வினவினான்.

இதைக்கேட்டவுடன் குரு சிரித்துக்கொண்டு அவனை நோக்கி, "அட பகுத்தறிவில்லாத பேதாய்! ஈசன்

எங்கு மிருப்பது உண்மையே எனினும் உலக இயல் தெரிந்து ஒவ்வொன்றின் இயற்கைக்குத் தக்கபடி நடந்து கொள்ளவேண்டாமா? எல்லா ஜீவராசிகளிடத்திலும், எல்லாப் பொருள்களிடத்திலும் ஈசுரன் ஒருவரே யிருந்தாலும் ஒவ்வொன்றின் இயற்கைக்குத் தக்கபடி ஒவ்வொன்றையும் நடத்திக்கொண் டிருப்பார்; அதனால் ஒவ்வொன்றின் இயற்கைக்குத் தக்கபடி ஒவ்வொன்றினிடத்தும் செய்கை நிகழும்; மிருகத்தினிடத்தில் அதன் செய்கையே உண்டாகும்; மனிதனிடத்தில் அவன் செய்கையே நடக்கும். பகுத்தறிவுள்ள மனிதன் இந்தப் பாகுபாட்டையெல்லாம் உணர்ந்து, எல்லாவிடத்திலும் ஈசுரன் இருக்கின்றார் என்ற ஞாபகத்தை மாத்திரம் மனத்தில் வைத்துக்கொண்டு, ஒவ்வொன்றினிடத்திலும் அதனதன் இயற்கைக்குத் தக்கபடி சந்தர்ப்பம் நோக்கி நடந்து கொள்ளவேண்டும்; இந்த உண்மையை உணராமல் மெளட்டீகத்தனமாக நடப்பவர்க்குத் துன்பமே உண்டாகும்; யானையினிடத்தில் இருந்த ஈசுரன் அதன் சுபாவத்தைக் காட்டிக்கொண்டிருந்தார்; பாகனிடத்தில் இருந்த ஈசுரன் அதன் துஷ்டச் செய்கையைப்பற்றி உனக்கு முன்னமே எச்சரிக்கும் நிலைமையிலிருந்தார்; உன்னிடத்திலிருந்த ஈசுரன், அந்த எச்சரிக்கையைக் கவனித்து யானையை விட்டு விலகியோடும் நிலைமையி லிருந்தார். அப்படியிருந்தும் நீ அந்த ஈசுரச் செயலை மீறி உன்னுடைய மூடமதியின் போக்கில் மிருகத்துக்கும் மனிதனுக்கும் வித்தியாசம் பாராட்டாமல் நடந்துகொண்டபடியால்

துன்ப மடைந்தாய்; மனிதத் தன்மையிலிருக்கும் நாம் எவ்வளவு ஞானத்தை உணர்ந்தபோதிலும் உலக இயலைத் தழுவி நடக்கவேண்டும்; மனிதத் தன்மை நீங்கி ஈசுர னுடு கலந்து ஏகபாவனை செய்யும் நிலையில் மாத்திரம் 'எல்லாம் ஈசுரனே' என்று பாவனை செய்து எதனிடத்தும் பேதங் கருதாமல் நடந்துகொள்ளலாம். அந் நிலையில் எப்படியிருந்தபோதிலும் எதனாலும் துன்பம் நேராது; உலகப்பற்று நீங்காது கீழ்ப்படியிலிருக்கும்போது அந்த அபேத நிலையை அனுஷ்டிக்க ஆரம்பித்தால் இவ்வாறு அவஸ்தைதான் உண்டாகும்; இனி உன்னுடைய ஞான மூடத்தை விட்டு இங்குக் கூறியவற்றை யெல்லாம் பகுத்தறிந்து நீ நடந்துகொள்" என்று விளக்கமான உபதேசஞ் செய்தார். அதன்மேல் அந்தச் சிஷ்யன், அவருடைய இந்த உபதேசப்படியே நடந்து உண்மை ஞானத்தைத் தெரிந்துகொண்டான். விசேஷ ஞான மில்லாதவர்கள், பெரியோரிடத்தில் நல்லுபதேசம் பெற்றாலும் இப்படியே அதன் உண்மைக் கருத்தை உணராமல், அதனை விபரீதப்படுத்திக்கொண்டு மூடமான வழிகளிற் பிரவேசித்துத் துன்ப மடைவார்கள்.

905. இலௌகீகத்திலிருந்துகொண்டு சில சமயங்களில் மாத்திரம் ஈசுரனை நினைத்தாலும் அதுவே சிறந்த பக்தியாகு மென்பதற்கு உதாரணமான கதை:

ஒரு சமயத்திலே நாரதர், 'நம்மைக்காட்டிலும் ஈசுர பக்தியிற் சிறந்தவர்கள் உலகத்திலிருக்கமாட்டார்கள்',

என்று நினைத்துக் கர்வம் கொண்டிருந்தார். ஈசுவரன் அவருடைய எண்ணத்தை உணர்ந்துகொண்டு அவர் கொண்ட கர்வத்தை அடக்கக் கருதித் தம்மிடத்தே அரிய பக்தி செலுத்திவந்த ஒரு மனிதனை அவருக்குத் தெரிவித்து அவரிடத்தில், "நாரதரே! அந்த மனிதன் என்னுடைய சிறந்த பக்தன்; அவனிடத்தில் நீர் பழக்கம் செய்துகொள்ளும்" என்று சொன்னர். அவ்வாறே நாரதர் அந்த மனிதனிடம் சென்று அவனுடைய செய்கையைக் கவனித்தார். அவன் அதிகாலையில் எழுந்து, ஒருமுறை ஹரி நாமத்தைக் கூறிவிட்டு, கலப்பையை எடுத்துத் தோளில் வைத்துக்கொண்டு, உழ வெருதுகளுடன் தன் நிலத்திற்குச் சென்று ஏரைப்பூட்டி உழுது சூரியன் அஸ்தமிக்கும் வரையில் பயிர்த்தொழிலில் பாடுபட்டுவிட்டு இரவானவுடன் வீட்டிற்குச் சென்று அங்குச் செய்யவேண்டிய வேலைகளையும் முடித்து ஆகாரமுண்டு படுக்கைக்குச் செல்லும்போது பின்னொரு முறை ஹரி நாமத்தை உச்சரித்துவிட்டுப் படுத்துக்கொண்டான்.

இவனுடைய செய்கையைப் பார்த்த நாரதர், "இவனே நாள் முழுதும் ஓய்வொழிவின்றிப் பயிர்த் தொழிலில் உழைக்கக்கூடிய குடித்தனக்காரனாயிருக்கின்றான்; இத்தகைய கஷ்டமான தொழிலைச் செய்துகொண்டு, காலையிலும் இராத்திரியிலும் ஒருநாளைக்கு இரண்டு முறை மாத்திரம் ஹரி நாமத்தைச் சொல்கின்றான்; எனினும் இவனிடத்தில் ஈசுர பக்தனுக்குரிய இலக்ஷணங்களில்

ஒன்றும் காணப்படவில்லை. இவனை எதனால் சிறந்த பக்தனென்று ஈசுரன் கூறினார்!'' என்று அதிசயித்து ஈசுரனிடத்தில் திரும்பிச் சென்று, அந்தப் பக்தனுடைய செய்கைகளையும், அவனைப்பற்றித் தாம் கொண்ட அபிப்பிராயத்தையும் கூறி, ''அவன் எப்படி உமக்குச் சிறந்த பக்தனாய்விடுவான்?'' என்று கேட்டார். அப்போது ஈசுரன் ஒரு கோப்பை நிறையத் ததும்பும்படி எண்ணெயை ஊற்றி அதனை நாரதரிடம் கொடுத்து, ''நீர் இந்தக் கோப்பையை உள்ளங்கையில் வைத்துக்கொண்டு ஒரு துளி எண்ணெயாவது கீழே விழாதபடி அதி ஜாக்கிரதையாக இந்நகரத்தைச் சுற்றிக்கொண்டு என்னிடம் வந்து சேரும்; அதன்மேல் உம்முடைய கேள்விக்கு நான் விடை பகருகின்றேன்'' என்றார். நாரதர் அப்படியே செய்யத் துணிந்து எண்ணெய் சிந்தி விடக்கூடாதென்னும் எண்ணத்தினால், அந்த எண்ணெய்க் கோப்பையிலேயே மன முழுவதையும் பதியவைத்து, வெகு ஜாக்கிரதையாக வேறெதுவும் சிந்தனையும் இன்றி நகரத்தைச் சுற்றிக்கொண்டு வந்து ஈசுரனிடம் சேர்த்தார். அப்போது கடவுள் அவரை நோக்கி, ''நாரதரே! நீர் எண்ணெய்க் கோப்பையைத் தாங்கி நகரத்தைச் சுற்றி வரும்போது எத்தனை முறை என்னை நினைத்தீர்?'' என்று கேட்டார். அதற்கு நாரதர் ''சுவாமி! ஒருமுறைகூடத் தங்களை நான் நினைக்கவில்லை; இந்தக் கோப்பை நிறைய எண்ணெய் ததும்பிக்கொண்டிருந்தபடியால், தங்கள் கட்டளைப்படி 'எண்ணெயைச் சிந்தவிடக் கூடாதே' என்று என் சிந்தனை முழுவதையும் அதிலேயே செலுத்திக்கொண்டு வந்தேன்;

என் மனம் வேறொரு பக்கம் அசையவேயில்லை. அதனால் தங்களைச் சந்திக்க எதுவில்லாமற் போயிற்று'' என்று கூறினர். உடனே கடவுள் நாரதரை நோக்கி, ''கேவலம்! இந்தச் சிறிய எண்ணெய்க் கோப்பையைத் தாங்கி வரும் ஒரே வேலையைச் செய்வதை முன்னிட்டு நீர் அடியோடு என்னை மறந்துவிட்டீர்; அந்தக் குடித்தனக்காரனை எத்தனையோ குடும்பபாரத் தொல்லைகளை யெல்லாம் தாங்கிக் கொண்டு என்னை ஒரு நாளைக்கு இரண்டு முறையாவது சிந்தித்துவிடுகிறான்; சும்மா இருக்கும்போது ஓயாமல் என்னை ஸ்தோத்திரஞ் செய்வது பெரிதல்ல; பல தொல்லைகளில் இருக்கும்போது ஒரு முறையாவது என்னை நினைப்பதுதான் சிரேஷ்டமானது; நீர் சும்மா இருக்குங் காலத்தில் ஓயாமல் என்னைச் சிந்திக்கின்றீர்; அதனால் உமக்கு மிஞ்சிய பக்தர் இல்லையென்று கர்வமுங் கொண்டிருக்கின்றீர்; அந்தக் கர்வத்தால் உண்மைப் பக்தனான அந்தக் குடித்தனக்காரனும் பக்தனில்லையென்று கருதிவிட்டீர்; இது பைத்தியக்காரத்தனமான அபிப்பிராயம்; நீர் சாதாரண காலத்தில் நம்மீது எவ்வளவோ பக்தியைச் செலுத்தியும் ஒரு சின்ன வேலையைச் செய்யுங் காலத்தில் நம்மைச் சிந்திக்க உமக்குச் சக்தியில்லாமற் போயிற்று. ஆதலால், உம்மைக் காட்டினும் அந்தக் குடித்தனக்காரனே ஈசுர பக்தியிற் சிறந்தவனுவான்; உம்முடைய கர்வம் வீணானதே'' என்று கூறினர். இவற்றைக் கேட்டதும் நாரதர் வெட்கத்தை யடைந்து அதுமுதல் தம்முடைய கர்வத்தை ஒழித்துவிட்டார். இக் கதையினால் பல தொல்லைகளிலிரு

ந்துகொண்டு கடவுளிடத்தில் பக்தி செலுத்துதலில் சிறந்த தாகு மென்பதை உணர்ந்துகொள்ளலாம்.

906. மாயையானது தன்னுடைய இயற்கை வெளிப்பட்ட வுடனே ஓடிவிடு மென்பதற்கு உதாரணமான கதை:

ஒரு வைதிகப் பிராமணர், ஒரு சமயம் தம்முடைய சிஷ்யர்களுள் ஒருவர் இருந்த ஊருக்குச் சென்றார். அப் போது அவருடைய வேலைக்காரன், தன்னுடைய சொந்தக் காரியத்தின் பொருட்டு அவரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு வேற்றூர்க்குச் சென்றிருந்தபடியால், அவர் வேலைக்காரனின்றித் தனியாகச் சென்றுகொண்டிருந்தார். அப்படிப் போகும்போது நடுவழியில் ஒரு சக்கிலியனைச் சந்தித்தார். அவன் தோற்றத்தால் நல்லவனைப்போன் றிருந்தான். அவனைக் கண்டதும் அந்தப் பிராமணர், "நமக்கு வேலைக்கார னில்லாமிட்டால் தொந்தரவா யிருக் கும்; இந்தச் சக்கிலியன் நல்லவனைத் தெரிகின்றான்; ஆதலின், இவனை நமக்கு வேலைக்காரனைச் சேர்த்துக் கொண்டு சென்றால் போகுமிடத்தில் சௌகரியமா யிருக் கும்" என்று அந்தச் சக்கிலியனைப் பார்த்து, "அப்பா! நீ நல்லவன் போன்று விளங்குகின்றாய்; அதனால் உன்னை எனக்கு வேலைக்காரனைச் சேர்த்துகொண்டு நான் போகு மிடத்திற்கு அழைத்துச் செல்ல விரும்புகின்றேன்; நீ என்னுடன் வந்தால் உனக்கு நல்ல சாப்பாடு கிடைக்கும்; நல்ல சௌக்கிய முண்டாகும்; ஆதலால், நீ என்னுடன் வேலைக்காரனை வருகின்றாயா?" என்று கேட்டார். அதற்

குச் சக்கிலியன், "சுவாமி! நான் இழிந்த ஜாதிக்காரனு யிருக்கின்றேன்; அப்படி யிருப்பதால் தங்களிடம் எவ் வாறு வேலைக்காரனு யிருத்தல் முடியும்?" என்று சொன் னான். வைதீகப் பிராமணர் "நீ இன்ன ஜாதியானென்பது வெளிப்பட்டால் மாத்திரந்தானே சங்கட முண்டாகும்; அது வெளிப்படாதிருக்கும்வண்ணம் நாமிருவரும் ஜாக் கிரதையா யிருப்போம்; நான் எவ்வித காரணத்தைக் கொண்டும் உன் ஜாதியை வெளிப்படுத்த மாட்டேன்; நீயும் உன் ஜாதியை எவரிடத்திலும் கூறாதே; எவரோடும் வாய்ப்பேச்சு வைத்துக்கொள்ளாதே; எவரிடத்திலும் சிநேகங் கொள்ளாதே; அப்படி யிருந்தால் நாம் போகு மிடத்தில் சௌகரியமா யிருந்துவிட்டுத் திரும்பி வந்து விடலாம்" என்று கூறினர். அதன்மேல் சக்கிலியன் அவ ருடைய சொற்படியே நடந்துகொள்வதாகச் சொல்லி அவ ரிடம் வேலைக்காரனுக அமர்ந்தான்.

பின்னர் அந்தப் பிராமணர் சக்கிலியனை அழைத்துக் கொண்டு தம்முடைய சிஷ்யர் இருக்கும் ஊர் போய்ச் சேர்ந்து அவருடைய வீட்டில் தங்கி யிருந்தார். அப்படி யிருக்கும்போது ஒருநாள் மாலை நேரத்தில் அவர் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து சந்தியாவந்தனம் செய்துகொண் டிருந்தார். அவருடைய வேலைக்காரனுகிய சக்கிலியன் மற்றொரு பக்கத்தில் நின்றுகொண்டிருந்தான். அப்போது அங்கே மற்றொரு வைதீகப் பிராமணர் வந்து உட்கார்ந்தார். அவர், தம்முடைய செருப்புக்களை வெளியிற்போட்டுவிட்டு

வர்திருந்தாசார்தனின், அவற்றைத் தம்முடைய சமீபத்தில் கொண்டுவந்து வைத்துக்கொள்ளக் கருதி, அங்கே நின்ற சக்கிலியனுடைய வேலைக்காரனைப் பார்த்ததும், அவனை நோக்கி, "அடே! என்னுடைய செருப்புக்கள் வெளியில் கிடக்கின்றன; நீ போய் அவற்றை இங்கே எடுத்துக்கொண்டு வா!" என்று சொன்னார். அவனுக்கு ஸ்ஜமானராகிய பிராமணர் எவருடனும் பேசக்கூடாதென்றும், உறவாடக் கூடாதென்றும் உபதேசித்ததை அவன் நினைத்துக்கொண்டு அதன்படியே நடக்கக் கருதி, அந்த வேதியர் கூறியதற்குப் பதில் சொல்லாமலும், அவர் சொன்னதைச் செய்யாமலு மிருந்தான். அந்தப் பிராமணர் இரண்டாவது முறை முன் சொன்னதை அவனிடம் சொன்னார். அப்பொழுதும் அவன் பேசாமலிருந்தான். பிராமணன் மேலும் மேலும் பன்முறைகள் தன்னுடைய செருப்புக்களை எடுத்துக்கொண்டு வரும்படி அவனை நோக்கிக் கூறினார். அவர் அப்படி எத்தனையோ முறைகள் சொல்லியும் அந்தச் சக்கிலியன் அவ்விடத்தை விட்டு அசையவுமில்லை, ஒரு வார்த்தையேனும் பேசவு மில்லை. அவனுடைய செய்கையைப் பார்த்தவுடனே அந்தப் பிராமணர் மிக்க கோபமடைந்து, "இவன் என் இப்படி யிருக்கின்றான்; சக்கிலியன் போன்ற இழிந்த ஜாதிக்காரனுயிருப்பவன்தான் இப்படி யிருப்பான்" என்று அவன் விஷயத்தில் சந்தேகமும், வெறுப்பும் கொண்டு அவனை நோக்கி, "அடே! ஒரு பிராமணனுடைய ஆக்ஞைக்கு நீ கீழ்ப்படியா திருக்கின்றாய்; உனக்கென்ன தைரியம்! நீ உயர்ந்த குலத்தைச் சார்ந்தவனுயிருந்

தால் இப்படியிருக்கமாட்டாய்; தாழ்ந்த ஜாதிக்காரனுயிருப் பாய்; அதனுலேதான் இப்படி என் சொல்லே அவமதித் திருக்கின்றாய்; நீ சக்கிலியனுயிருப்பாயோ! உன்னுடைய பெயரென்ன?'' என்று வினவினர். அவர் இவ்வாறு சந்தே கப்பட்டு வினவியதைக் கேட்டவுடனே அந்தச் சக்கிலியன், ''ஓகோ! நம்முடைய இரகசியத்தை இவர் தெரிந்து கொண்டார்'' என்று பயந்து நடுநடுங்கித், தன்னுடைய எஜமானனாகிய வைதீகப் பிராமணரிடம்விரைந்து சென்று, பரிதாபகரமான முகத்தோடு அவரைப் பார்த்து, ''சுவாமி! நான் எவ்வளவோ ஜாக்கிரதையாயிருந்தும் என்னுடைய ஜாதி கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது; இனி நான் இங்கிருந் தால் எனக்கபாய முண்டாகும்; ஆதலால், இவ்விடத்தை விட்டு ஓடிப்போகிறேன்'' என்று சொல்லிவிட்டு வெளியில் விரைந்தோடிவிட்டான். இந்தச் செய்கைபோலவே, மனி தன், தன் மதியீனத்தால் மாயையின் கெடுதியை உணரா மல் அதனேடு கூடியிருந்தாலும், விவேகந்தோன்றி அந்த மாயையின் தன்மையை வெளிப்படுத்திய வுடனே அம் மாயையானது அவனிடத்தே தங்காமல் பயந்து தானே வெளிப்பட்டு ஓடிவிடும்.

907. தீவிரதரமான வைராக்கிய மில்லாவிட்டால் ஈசுரதரிசன மாகிய ஆனந்தத்தை இலகுவில் அடைய முடியா தென்பதற்கு உதாரணமான கதை:

ஒரு காலத்திலே ஒரு நாட்டில் மழை யில்லாமற் போய்விட்டது. அதனல் அந் நாட்டிலுள்ள குடியானவர்க

லெல்லோரும் ஆற்றிலிருந்து கால்வாய்கள் வெட்டி அவற்றின் மூலம் தண்ணீர் கொண்டுவந்து தங்கள் வயல்களுக்குப் பாய்ச்சும் விஷயத்தில் மிக்க சுறுசுறுப்பாயிருந்தார்கள். அவர்களில் வைராக்கிய சித்தமுடைய ஒருவன், ஒரு நாள், தன் வயலிலிருந்து கால்வாயைத் தோண்ட ஆரம்பித்து, "இந்தக் கால்வாயை ஆற்றில் தண்ணீர்ச் சுரப்புள்ள விடத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துத் தண்ணீர் வயலுக்கு வரும்படி செய்துவிட்டுத்தான் வேறு காரியம் பார்க்க வேண்டும்" என்று உறுதி செய்துகொண்டு கால்வாயை வெட்டிக்கொண்டேபோனான். அவ்வாறு வெட்டிக்கொண்டு போகும்போது அவன் ஸ்நானஞ் செய்யும் நேரம் வந்துவிட்டது; அதனால் அவனுடைய மனைவி, அவன் ஸ்நானம் செய்யும்பொருட்டுத் தனது பெண் குழந்தையினிடம் எண்ணெயும் சிகைக்காயும் கொடுத்து அவனுக்கனுப்பினாள். அந்தக் குழந்தை அவற்றைக் கொண்டுபோய்த் தன் தகப்பனிடம் வைத்து, "அப்பா! மத்தியான மாய்விட்டது; இந்த எண்ணெய் சிகைக்காயைத் தேய்த்துக்கொண்டு ஸ்நானஞ் செய்யுங்கள்" என்று கூறிற்று. அதற்கந்த மணிதான், "எனக்கின்னும் வேலை யிருக்கின்றது; வேலை முடிந்தபின் நான் ஸ்நானஞ் செய்கின்றேன்; நீ அவற்றை இங்கே வைத்துவிட்டுப்போ!" என்றான். குழந்தை அவ்வாறே எண்ணெய் சிகைக்காயை வைத்துவிட்டுப் போய்விட்டது. அதன்மேல் அவன் சுறுசுறுப்பாக வேலை செய்தான். அப்படி வேலை செய்தும் மணி இரண்டாகியும் அவனுடைய வேலை தீரவில்லை. அதனால் அவன், 'அந்த வேலையை முடித்

தே தீரவேண்டும்' என்னும் வைராக்கியத்துடன், ஸ்நானத்தையும் சாப்பாட்டையும்கூடக் கவனியாமல் மிகக் கடினமாகக் கால்வாயை வெட்டிக்கொண்டே போனான். இரண்டுமணிக்கு மேலாகவே அவனுடைய மனைவி, 'புருஷன் ஆசார முண்ணுமற்கூட வேலை செய்கிறானே' என்னும் விசாரத்தினால், அவன் வேலை செய்யுமிடத்திற்கு வந்து, அவனை நோக்கி, "ஐயோ! இன்னும் ஸ்நானமுஞ் செய்யாமல் ஆகாரமும் சாப்பிடாமல் வேலை செய்துகொண்டிருக்கிறீர்களே! மணியோ மூன்றுக்கு மேலாகிறதே; சோறு ஆறிப்போகிறதே; நீங்கள் எப்பொழுது வேலை செய்ய ஆரம்பித்தாலும் இப்படித்தான் செய்து வருகின்றீர்கள்; இனியாவது வந்து ஸ்நானஞ் செய்துவிட்டு உணவு உண்ணுங்கள்; மீதியிருக்கும் வேலையை, ஆகார முண்டபின்னுவது, அல்லது நாளைக்காவது செய்யலாம்" என்று கூறினாள். அவளுடைய வார்த்தைகள் அந்த மனிதனுடைய எண்ணத்திற்கு விரோதமாயிருந்தபடியால் அவற்றைக் கேட்டவுடனே அவனுக்கு மிகுந்த கோபமுண்டாய்விட்டது. அதனால் அவன் அவளை நோக்கி, "அடி பைத்தியக்காரி! நம் வயலிலுள்ள பயிர் வாடிப்போகிறது; அது விளைந்தால்தானே நாமெல்லோரும் கஷ்டமின்றி ஜீவிக்கலாம்; அது காய்ந்துவிட்டால் நம் வயிறு காய்ந்து போய்விடுமே; இப்பொழுது நான் ஆகார முண்பதைப் பெரிதாக நினைத்தால் வயலுக்குத் தண்ணீர் பாயாமல் நாமெல்லோரும் வருஷ முழுவதும் பட்டினி கிடந்து வருந்துவோமே; இப்பொழுது நேரும் சிறிது கஷ்டத்தைக்

கவனியாமல் இந்த வேலையை முடித்துவிட்டால் பின்னர் நானும் சுகம் பெறலாம்; நீயும் குழந்தையும் சௌக்கிய மடையலாம்; இவற்றையெல்லாம் நீ ஆலோசியாமல், என் சாப்பாட்டைப் பெரிதாக நினைத்து இப்போது வந்து என் வேலையைக் கெடுக்கின்றாயே; சீ! சீ!! இங்கே நில்லாதே; வீட்டிற்கு விரைந்தோடிப் போ'' என்று துரத்தினான். அவள் தன்னுடைய புருஷனின் கோபத்திற் கஞ்சி வீட்டிற்கு ஓடிவிட்டாள். அதன்மேல் அவன் வெகு சிரமமெடுத்து இராத்திரியாகி வெகுநேரத்துக்குப் பின் கால் வாயை நீருள்ளவிடத்திற் கொண்டுபோய்ச் சேர்த்து ஆற்று ஜலத்தை அந்தக் கால்வாயில் திருப்பிவிட்டான். ஜலமானது கால்வாயின் வழியாகச் சென்று அவனுடைய வயலில் வேகமாக இரைச்சலிட்டுக்கொண்டு பாய்ந்தது. அதைக் கண்டவுடனே அவன் அடைந்த ஆனந்தத்திற் களவில்லை. பின்னர் அவன் மிக்க சந்தோஷத்துடனே வீட்டிற்குப் போய், மனைவியோடு முகமலர்ந்து பேசி, எண்ணெய் ஸ்நானஞ் செய்து ஆகாரம் சாப்பிட்டு இனிப்பாறி நன்றாக நித்திரை செய்தான். அவன் இப்படி வைராக்கிய மாக நிறைவேற்றிய வேலையால் வயலிலுள்ள பயிரும் விளைந்து நல்ல பயனைக் கொடுத்தது. அதனால் அவனும், அவனுடைய குடும்பத்தாரும் சுகமாக ஜீவித்து வந்தார்கள்.

அதே காலத்தில் மற்றொரு குடியானவன், மேற் கூறியவனைப்போலவே தன் வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சுக் கால்வாய் வெட்டிக்கொண்டிருந்தான். சாப்பாட்டு நேர

மானவுடனே அவனுடைய மனைவி வந்து ஆகார முண்ப தற்கு அவனை அழைத்தாள். அவன், குறித்ததை முடிக் கும் திடசித்த மில்லாதவ னுதலாலும், பெண்டாட்டி சொல்லைத் தட்டாதவ னுதலாலும், அவள் கூப்பிட்டவுட னே மறு வார்த்தை யொன்றும் பேசாமல் மண்வெட்டி யைத் தோளில் போட்டுக்கொண்டு அவளை நோக்கி, நீயே என்னைக் கூப்பிட வந்திருப்பதால் நான் தடை சொல்லா மல் உன்னுடன் வரத்தான் வேண்டும்'' என்று அவளுக் குச் சந்தோஷமான வார்த்தை கூறி அவளுடன் வீட்டிற் குச் சென்று விலாப்புடைக்க ஆகார முண்டு படுத்துக்கொ ண்டான். இப்படியே அவன் சில தினங்கள் வேலை செய்த படியால், அவனுல் தக்க காலத்தில் தன் வயலுக்குத் தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. அதனுல் அவனுடைய பயிர் காய்ந்துபோய்விட்டது. பின்னர் அவன் குடும்பத் தோடு ஜீவனத்திற்குக் கஷ்டப்பட்டான்.

இவ் விருவருள் முன்னவன், தீவிரதர வைராக்கிய முடையவன்; பின்னவன் மந்ததர வைராக்கிய முள்ளவன். தீவிரதர வைராக்கிய முடையவன் 'இதைச் செய்து முடிப் பேன்' என்று ஒரு காரியத்தைத் தீர்மானப்படுத்திக் கொண்டால் அவ்வாறே அதனை ஒரே பிடிவாதமாயிருந்து செய்து முடித்தேவிடுவான். மந்த வைராக்கிய முள்ள வனை ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பிக்கும்போது, 'இன்றிப்போழுது என்னுற் செய்யப்படும்; இன்று ஆரம் பிக்கப்படப் போகிறது; இன்ன தப்படிச் செய்யப்படும், இப்ப

டிச் செய்யப்படும்' என்று பல விதமாகப் பேசிக்கொண்டு அதைக் கொஞ்சம் செய்தும், இடையில் விட்டும், மறுபடியும் வேறொரு விதமாகச் செய்தும் அதனை முடிவுக்குக் கொண்டு வராமல் அவஸ்தைப்படுவான். ஈசுரனை அடையும் விஷயத்திலும் இவர்கள் தன்மை இப்படியே யிருக்கும். எவனிடத்திலே தீவிரதர வைராக்கியமானது உண்டாகின்றதோ, எவனுடைய ஹிருதயத்திலே தியாகமாகிய பெரு கெருப்புப் பற்றி யெரிகிறதோ, ஒரு தாயினுடைய ஹிருதயமானது குழந்தையை நாடுவதுபோல எவனுடைய ஹிருதயமானது ஈசுரனை யடையவேண்டுமென்று அல்லும் பகலும் சிந்திக்கின்றதோ அவனுக்கு ஈசுர தரிசனம் எளிதிற் சித்திக்கும்; ஈசுவரன் தவிர அவனுக்கு வேறொன்றுமே தேவையில்லை; அவனுடைய பார்வையில் உலகமானது ஓர் அபாயகரமான கிணற்றைப் போலத் தோற்றும்; 'அந்தக் கிணற்றில் தவறி வீழ்ந்து விடுவோமோ' (அதாவது, உலக மாயையில் மூழ்கிவிடுவோமோ) என்று அவன் அதில் வீழ்ந்துவிடாமல் அதிக ஜாக்கிரதையாக இருப்பான். "முதலாவது என் குடும்ப விஷயங்களெல்லாம் ஒழுங்காகட்டும்; பின்னர் ஈசுரனைத் தியானிக்கும் விஷயத்தில் நான் பிரவேசிப்பேன்" என்று நினைக்கும் மந்த வைராக்கிய மூள்ளவர்களைப்போல அவன் நினைக்க மாட்டான்; "ஈசுரனையே அடைவேன்" என்னும் உறுதியே அவனிடத்தில் நிலைத்திருக்கும். இத்தகைய அவாவில்லாத மந்தவைராக்கிய மூள்ளவன் ஈசுர தரிசனமாகிய ஆனந்த நிலைமையை அடைதல் முடியாது.

908. நான் என்பதன் தன்மையை விளக்கும் கதை:

ஒரு சமயத்திலே ஒரு சாதுவானவர், தமது சிஷ்யனுக்கு நான் என்பதன் தன்மையைப்பற்றி விளக்கிக் காட்டக் கருதி அவனை ஓர் அழகிய தோட்டத்திற் கொண்டுபோய் வைத்துவிட்டுப் போய்விட்டார். அப்படிப் போனவர், சில தினங்கள் சென்று அங்கே திரும்பி வந்து தமது சிஷ்யனைப் பார்த்து, "எனது புத்திரா! உனக்கு ஏதேனும் தேவையாயிருக்கின்றதா?" என்று கேட்டார். அவன், "எனக்குச் சௌகரியத்தை உண்டாக்குதற்கு வதேனும் வேண்டியது அவசியந்தான்" என்று கூறினான். உடனே அந்தச் சாது 'ஸ்யாமா' என்னும் பெயருள்ள ஓர் அழகிய ஸ்திரீயை அந்தச் சிஷ்யனுடன் வைத்து, அவளோடு சேர்ந்து மச்சம் மாம்சாதிகளைத் தாராளமாக உபயோகிக்கும்படி அவனுக்குப் போதித்துச் சென்றார். அவ்வாறே அவன் அவற்றைத் தின்றுகொண்டு அந்தப் பெண்ணுடன் சந்தோஷமாகக் காலங் கழித்து வந்தான். நெடுங்காலத்திற்குப் பிறகு அந்தச் சாது மறுபடியும் தமது சிஷ்யனிடத்திற் சென்று, "இன்னும் உனக்கு ஏதாவது தேவையா?" என்று கேட்டார். அப்போது சிஷ்யன், "நான் இப்போது மிகுந்த சௌக்கியத்துடனிருக்கின்றேன்; எனக்கினி வேறெண்றும் தேவையில்லை" என்று சொன்னான். அதன்மேல் அந்தச் சாது அவனையும், அவனுடனிருந்த பெண்ணையும் தம தருகில் அழைத்து உட்காரவைத்துக்கொண்டு அந்த 'ஸ்யாமா' என்னும் பெண்ணினுடைய கைகளைச் சிஷ்ய

னுக்குச் சுட்டிக் காட்டி அவனிடத்தில், ''இவை என்ன?'' என்று கேட்டார். அவன் ''ஸ்யாமாவினுடைய கைகள்'' என்றான். பின்னர் அவர் அவனிடத்தில் அவளுடைய மூக்கைக் காட்டி, ''இஃதென்ன?'' என்று வினவினார். அவன், ''ஸ்யாமாவினுடைய மூக்கு'' என்றான். அதன் மேல் அவர் அவளுடைய கண்களைக் காட்டி அவனிடம், ''இவை என்ன?'' என்றார். அவன், ''ஸ்யாமாவினுடைய கண்கள்'' என்றான். இப்படியே அவர் அவளுடைய ஒவ்வொரு அவயவத்தையும் தனித்தனியாகக் கேட்டுக் கொண்டே போனார்; அவனும் ஒவ்வொன்றையும் இன்னது இன்னது என்று கூறிக்கொண்டே போனான். அப்படிச் சொல்லிக்கொண்டு போகும்போதே அவனுக்கு, ''நாம் இந்த ஸ்யாமாவினுடைய ஒவ்வொரு அங்கத்தையும் தனித்தனியாகக் கூறிக்கொண்டே போகின்றோம்; எல்லாவற்றையும் கூறிவிட்ட பிறகு பார்த்தால் ஒன்றுமில்லாமற் போகும்; அப்படியானால் இவற்றையெல்லாம் உடையவளாக நாம் கருதியிருக்கும் ஸ்யாமா என்பவளார்?'' என்று ஒரு சந்தேக முண்டாயிற்று. அதனால் அவன் பிரமித்துத் தன் குருவை நோக்கி, ''சுவாமி! இந்தப் பெண்ணினுடைய அவயவங்களை ஒவ்வொன்றாகப் பிரித்துப் பார்க்கும்போது முடிவில் ஒன்றுமில்லாமற் போகின்றது; அப்படியானால் இவற்றையெல்லாம் உடையவளாக நான் கருதியிருக்கும் 'ஸ்யாமா' என்பவள் யார்?'' என்று வினவினான்.

அதன்மேல் சாதுவர்னவர் 'அவனுக்கு உண்மையை உபதேசிக்கத் தகுந்த பக்குவம் வந்துவிட்டது' என்றுணர்ந்து அவனை நோக்கி, ''ஸ்யாமா யார் என்பதை நீ அறிய விரும்பினால் இங்குள்ளவற்றை யெல்லாம் வெறுத்துவிட்டு என்னுடன் வா; நான் அவ் விவரத்தைக் கூறுகின்றேன்'' என்றார். அவன் அதற் கிசைந்தான். பின்னர் அவர் அவனைத் தனியிடத்திற் கழைத்துச் சென்று அவனை நோக்கி, ''புத்திரா! மனிதர்கள், அவயவங்கள் சேர்ந்த உடம்பையும், மற்ற தத்துவங்களையும் சேர்த்து 'நான்' என்று கருதிக்கொண்டிருக்கின்றார்கள்; வெங்காயத்தை ஒவ்வொரு இதழாக உரித்துக்கொண்டே போனால் முடிவில் ஒன்றுமில்லாமற் போவதுபோலத் தேக தத்துவங்களைத் தனித் தனியாகப் பிரித்துப் பார்த்துக்கொண்டே போனால் முடிவில் 'நான்' என்னும் தன்மை யில்லாமற் போய்விடும்; கடைசியாகப் பார்க்கும்போது அகண்டமாகிய ஈசுரத்துவம் ஒன்றைத் தவிர வேறொன்று மிராது; தேகமும் நான் என்பதும், மற்ற உலக அனுபவப் பொருள்களும் அநித்திய வஸ்துக்கள்; ஈசுரன் ஒருவனே நித்திய வஸ்து; உலக அனுபவங்களை அனுபவித்துக்கொண்டு வரும்போதே புத்திமான்கள் இந்த உண்மையை உணர்ந்து நித்தியப் பொருளாகிய ஈசுரனை யடைய முயற்சி செய்வார்கள்; மந்த மதியினர் உலகப் பொருள்களை நிலையுள்ளனவென்று நினைத்துக் கெடுவார்கள்; உண்மையை உணர்ந்த புத்திமான்களும் உலக சாரியங்களில் கலந்து ஆராய்ந்தால் மாத்திரந்தான் மெய்ஞ்ஞானத்தை உணர்

வார்கள்; அதற்காகத்தான் உனக்கு 'ஸ்யாமா' என்னும் ஸ்திரீ சுகத்தையும் மற்ற அனுபவங்களையும் ஏற்படுத்தி நீ உலக சுகத்தைத் திருப்தியாக அனுபவிக்கும்படி செய்தேன். அப்படியே நீ அனுபவித்த பிறகு உனக்கு அவற்றில் சந்தேகமும், உண்மை யுணர்ச்சியும் உதித்தன. மேற்கூறியபடி 'ஸ்யாமா' என்பவளையும் பிரித்துப் பார்த்தால் முடிவில் அவள் இல்லாமலே போய்விடுவாள்; உன்னைப் பற்றி ஆராய்ந்தாலும் நீயும் அப்படியே 'நான்' என்ற தன்மையற்றுப் போவாய். ஆதலால், நீ இனி இவற்றையெல்லாம் ஆலோசித்து அநித்தியப் பொருள்களைத் தள்ளி நித்திய வஸ்துவாகிய ஈசுரனை யடைய முயற்சி செய்வாயாக'' என்று போதித்தார். இந்த உபதேசத்தால் அந்தச் சிஷ்யன் உண்மை ஞானத்தை அடைந்து ஈசுரானுக்கிரகம் பெற்றான்.

909. கோடியவர்களும், தெய்வீகமுள்ளவர்களிடத்தில் மேலுக்கு விரோதங்கொண் டிருந்தாலும் அந்த ரங்கத்தில் பக்தியுடையவர்களா யிருப்பார்க ளென்பதற்கு உதாரணமான கதை:

சீதா தேவியை அசோக வனத்தில் கொண்டுபோய் வைத்த இராவணன், அவளைத் தன்வசப்படுத்த முடியாமல் கவலை கொண்டிருந்த காலத்தில் அவனுடைய மனைவியாகிய மண்டோதரி அவனை நோக்கி, ''நீர் ஏன் இவ்வளவு கவலைப்படுகிறீர்; உம்முடைய மாயா சக்திகளினாலே நீர் இராமனைப்போல் வடிவெடுத்துச் சீதையினிடம் சென்

ரூல் அவளை இலகுவில் மனைவியாக்கிக் கொள்ளலாமே'' என்று கூறினான். அதற்கு இராவணன், ''நான் மோகவசப் பட்டு இந்தச் சீதையைக் கொண்டுவந் திருக்கின்றேன்; அப்படியிருந்தாலும் இராமருடைய உத்தம குணங்களில் எனக்கு மிக்க மதிப்புண்டு; அவருடைய வடிவமோ மிகப் பரிசுத்தமானது; அந்த வடிவத்தை யெடுத்துக்கொண்டு இந்தக் கெட்ட காரியத்தில் நான் பிரவேசிக்கமாட்டேன்; அவருடைய வடிவத்தை யெடுக்க வேண்டுமென்று நினைத்தாற்கூட எனக்கு அளவற்ற ஆனந்த முண்டாகிறது. அப்படி ஆனந்தத்தை விளைவிக்கக் கூடிய உருவத்தை நல்ல காரியங்களைச் செய்வதற்கு வேண்டுமானால் எடுக்கலாம்; கொடுங் காரியத்திற்கு உபயோகித்தல் மகா பாதகமாம்'' என்று கூறினான். இக் கதையினால், பெரியோர்களின் பரிசுத்த வடிவமானது, தீயவர்களுக்கும் நல்ல விவேகத்தை உண்டாக்குமென்ப துணரப்படும்.

910. ஆத்ம ஞானத்தைக் கைவிட்டால் பெரியோர்களும் ஒரு சமயத்தில் அவமானமடைவ ரென்பதற்கு உதாரணமான கதை:

ஒரு பறையன், மாமிசக் காவடியைத் தோளிற் சுமந்துகொண்டு ஒரு தெருவில் போய்க்கொண் டிருந்தான். அப்போது சங்கராசாரியார் கங்கா ஸ்நானம் செய்து விட்டுப் பரிசுத்தமாக அந்தப் பறையன் சென்ற வழியில் திரும்பி வந்தார். அப்படி வரும்போது அவர் அந்தப் பறையனைத் தீண்டும்படி நேர்ந்துவிட்டது. அவ்வாறு தீண்ட

வே சங்கரர் கோபித்து, அந்தப் பறையனைப் பார்த்து, "அடே! நீ சிறிதும் புத்தியில்லாமல் என்னைத் தொட்டு விட்டாயே" என்று சொன்னர். அவர் ஆத்ம ஞானத்தை உணர்ந்தவரா யிருந்தும், அப்போது தாம் அனுஷ்டித்த வெளித் தோற்ற விதத்தை அனுசரித்துத் தேக சம்பந்தமான இந்த வார்த்தையைக் கூற நேர்ந்தது. ஆத்ம ஞானத்தை அவர் சிந்திக்கவில்லை. அந்தப் பறையன், ஆத்ம ஞானத்தில் சிறிது உணர்ந்திருந்தா னதலால் சங்கரர் அவ்வாறு கூறியவுடனே அவன், "பரிசுத்தமான ஆத்மா எதனாலும் அசுத்த மாக்கப்பட மாட்டாது; அப்படி யிருந்தும் இவர் அந்த ஆத்மாவைப்பற்றிய சிந்தனையின்றித் தேகத்தையே தானென்று நினைத்து நாம் அதைத் தொட்டதால் அதற்குத் தீண்ட லுண்டாகிவிட்டதாகச் சாமானிய உலகினர் கருதுவதுபோல் கருதி இவ்வாறு பேசுகின்றார்; இவர் ஆத்ம ஞானத்தை யுணர்ந்தவராயிருந்தும் இக் கருணத்தில் மறந்துவிட்டார்; ஆதலால், நாம் அந்த ஞாபகம் வரும்படி விடை கூறவேண்டும்; அவ்வாறு கூறினால் இவர் இந்த மயக்கமான கொள்கையை விட்டு ஆத்ம ஞானத்தைச் சிந்தித்து இதனால் தோஷமில்லை யென்பதைத் தெரிந்துகொள்வார்" என்று தனக்குள் நிர்மானித்து, அவரை நோக்கி, "சுவாமி! நீங்களும் நானும் ஆத்ம சொரூபமாய்ச் சரீரத்தை விட்டு வேறு யிருக்கின்றோம்; தங்களுடைய ஆத்மாவும் என்னுடைய ஆத்மாவும் ஒரே தன்மையன; பரிசுத்த மூள்ளவை; இவை எவற்றினும்

கறைப்படுத்தப்படமாட்டா; சாத்விகம், இராஜஸம், தாமஸம் என்னும் முக்குணங்களும் இவற்றைப் பற்றமாட்டா; இக் குணங்கள் தேக சம்பந்தமானவை; தேக சம்பந்தமான எதுவும் நிலையற்றதாகும்; பொய்த் தோற்றமாகும்; இப்போது என் தேகம் தங்களுடைய தேகத்தைத் தீண்டிற்றே யன்றி நான் உங்களைத் தொடவு மில்லை, நீங்கள் என்னைத் தொடவு மில்லை; அப்படியிருந்தும் நான் தங்களைத் தொட்டதாகவும், அதனால் தங்களுக்குத் தோஷமுண்டாகிவிட்டதாகவும் நீங்கள் இப்போது சொன்னீர்களே; உங்களைத் தேக மென்று நினைத்துக்கொண்டு இவ்வாறு நீங்கள் பேசினீர்களா? ஆத்மா வென்று நினைத்துப் பேசினீர்களா; உங்களுடைய உண்மையான ஆத்மா, சரீரமா? அல்லது மனமா? அல்லது புத்தியா? தங்களுடைய உண்மையான ஆத்மாவின் தன்மை இத்தகைய தென்பதை எனக்குக் கூறுங்கள்'' என்று கேட்டான். இவற்றைக் கேட்டதும் சங்கரர் ஆத்ம ஞானத்தைச் சிந்தனை செய்து, ''நாம் உண்மை ஞானத்தை மறந்து இவனிடம் இவ்வாறு பிசகுஞ்ச மயக்க சம்பந்தமான பேச்சைப் பேசியது தவறு; இவனுக்கு ஆத்ம ஞானத்தில் இருக்கும் உறுதியான பற்று நமக்கு இச் சமயத்தில் இல்லாமற் போயிற்று'' என்று வெட்கத்தை யடைந்து ஞானோதயம் பெற்றார். இக் கதையினால், ஆத்மஞான முணர்ந்த பெரியோர்களும் அதை மறந்து பேச ஆரம்பித்தால் அவமானமடைவ தென்பது தினசரிப்படும்.

911. பிரமத்தை யுணர்ந்த தன்மை இன்னதுதான் என்பதை விளக்கும் கதை:

ஒருவருக்கு இரண்டு புத்திரர்கள் இருந்தார்கள். அவர் அந்தப் புத்திரர்களைப் பிரமசாரி யாசிரமத்திற் புருவித்து ஒரு குருவினிடம் வேதங்கள் கற்றுக்கொள்ளும்படி ஏற்பாடு செய்தார். அப் புதல்வர்கள் வேதங்களை ஓதி யுணர்ந்து பல நாட்கள் கழிந்தபின் வீட்டிற்குத் திரும்பி வந்தார்கள். அப்போது பிதா அவர்களை நோக்கி, "வேதாந்தம் படித்திருக்கிறீர்களா?" என்று கேட்டார். அவர்கள், "ஆம்" என்றார்கள். அதன்மேல் அவர், "பிரஹ்மம் என்றால் என்ன? நீங்கள் அதன் விவரத்தைக் கூறுங்கள்" என்று சொன்னார்.

அதைக் கேட்டவுடன் மூத்த புத்திரன், "அப்பா! அது வார்த்தைகளினால் கூறத் தக்கதன்று; மனத்தினாலும் அறியத் தக்கதன்று; அதை நான் அறிவேன்" என்று சொல்லித் தன்னுடைய அபிப்பிராயத்தை ஸ்தாபிக்கும் பொருட்டு வேதங்களிலிருந்தும், மற்ற சாஸ்திரங்களிலிருந்தும் ஆதாரங்களும், வேதாந்த மேற்கோள்களும் எடுத்துக் கூறினான். அவனுடைய வார்த்தைகளைக் கேட்டதும் பிதாவானவர், அவனை நோக்கி, "நீ உண்மையில் பிரஹ்மத்தை யுணர்ந்துவிட்டாய்; இனி நீ உனது அபிப்பிராயப்படியே நடக்கலாம்" என்று கூறிவிட்டு இளைய புத்திரனிடத்தில் அதே கேள்வியைக் கேட்டார்.

அவன் ஒன்றும் கூறாமல் மௌனமாயிருந்தான். அவனுடைய வாயிலிருந்து அதைப்பற்றி ஒரு வார்த்தை கூட வரவில்லை; அவன் பேசுவதற்கு முயற்சி செய்யவுமில்லை. அவன் பிரஹ்மத்தைப்பற்றி நன்று யுணர்ந்தவனதலின், அதை இன்னதென்று காட்டவும் சொல்லவும் முடியாது; ஆதலால், அதைப்பற்றி உதாரணங் காட்டிப் பேசுவது வீணாகும் என்பதற் கறிகுறியாக அவன் அவ்வாறு பேசாமலிருந்தான். அப்படியிருந்த அவனுடைய அபிப்பிராயத்தைப் பிதா தெரிந்துகொண்டார். அதனால் அவர், மூத்தவனுடைய பிரஹ்ம உணர்ச்சியைக் காட்டினும் இவனுடைய உணர்ச்சியே சிறந்ததாகு மென்று கருதி அவனை நோக்கி, "புத்திரா! உன்னுடைய பிரஹ்ம உணர்ச்சியே சிறந்ததாகும்; அகண்டமாயும், பரிபூரணமாயும் உள்ள பிரஹ்மத்தை இன்ன விதமான தென்று கூற முடியாது; அப்படிப் பேச ஆரம்பித்தால், அகண்ட வஸ்துவாகிய அந்தப் பிரஹ்மத்தைக் கண்டமான பதங்களினாலேயும், பரிபூரணமான அந்த வஸ்துவைக் குறைவான பதங்களினாலேயும், எல்லையற்ற அந்த வஸ்துவை எல்லையுள்ள பதங்களினாலேயும் கூறவேண்டும். ஆதலால், அப்படிப் பேசுவது தோஷமாகும்; அதைக் காட்டினும் பேசாமலிருப்பதே அதனை நன்று யுணர்ந்ததற்குத் தக்க அடையாளமாம். உன்னுடைய தமையன், அது பேசவும் காட்டவும் முடியாத வஸ்து வென்பதைப்பற்றி எத்தனையோ உதாரணங்கள் காட்டிப் பேசினான். அதனால் அவன் பிரஹ்மத்தை உணர்ந்திருக்கின்று னென்பது வெளியாகையும், அவன்

பேச்சு பிரஹ்ம லக்ஷணத்திற்கு விரோதமானது; அதீனத் தெளிவாகக் காட்டக் கூடாதது, அவனைப்போல் நாறு உதாரண சுலோகங்கள உரைப்பதினும், நூறு மேற் கோள்கள் எடுத்துக் காட்டுவதினும் உன்னுடைய மௌனம் தெள்ளிதில் பிரஹ்ம லக்ஷணத்தை எடுத்துரைக்கக் கூடிய பெரிய பறையோசையா யிருக்கின்றது'' என்று அவனைக் கொண்டாடினர். இக் கதையினால் பிரஹ்ம லக்ஷணத்தை உணர்ந்ததற் கடையாளம் இன்னதுதா னென்பதை நன்குணர்ந்து கொள்ளலாம்.

912. மனிதன் எவ்வளவு ஐசுவரியமுள்ளவனு யிருந்தாலும்
ஆசையினால் மேலும் யாசிக்கக் கூடியவனுகவே
யிருப்பான்; கடவுள் ஒருவரே சகலர்க்கும்
வேண்வேன நல்கும் பிரபுத்துவமுண்டய
வர் என்பதை விளக்கும் கதை:

அக்பர் அரசாட்சி புரிந்த காலத்திலே, டில்லிக்குச் சமீபமாயிருந்த ஒரு காட்டில் ஒரு பக்கிரி ஒரு குடிசை கட்டி அதில் வசித்து வந்தார். அவரிடத்தில் நல்லுப தேசம் பெறுவதற்கு அநேக ஜனங்கள் அங்கே சென்று கொண் டிருந்தார்கள். அந்தப் பக்கிரிடம் பண மில்லா திருந்தபடியால், அங்கே வருபவர்களுக்கு ஆகார முதலி யன உதவி அவர்களை உபசரிப்பதற்கு அவருக்குச் சௌ கரிய மில்லாதிருந்தது. அதனால் அவர், அக்பரிடம் பணம் பெற்றுக்கொள்ளலா மென்று அவனிருக்கு மிடத்தை நாடிச் சென்றார். அப்போது அக்பர் தொழுகை யறையில்

டவுளைத் தொழுது அவரை நோக்கிப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தான். அங்கே சென்ற பக்கீர், அவனுடைய பிரார்த்தனை முடிந்த பிறகு அவனோடு பேசலாமென்று ஒரு பக்கத்தில் உட்கார்ந்திருந்தார். அப்போது அவன் செய்த பிரார்த்தனையில், "ஏ கடவுளே! எனக்கு இன்னும் அதிக மான ஐசுவரியத்தையும், அதிகமான அதிகாரத்தையும், அதிக தேசங்களையும் கொடுத் தருளவேண்டும்" என்று சொல்லிக்கொண்டிருந்தான். இந்தப் பிரார்த்தனையைக் கேட்டதும் பக்கீர் அவன்மீது அருவருப்புக்கொண்டு உடனே எழுந்து அவ்விடத்தை விட்டு வெளியிற் போகப் புறப்பட்டார். அப்பர், பக்கீர்களின்மீது மிக்க விசுவாச முடையவனதலின், அவர் புறப்பட்டதைப் பார்த்து மனக் கவலை கொண்டு அவரை நோக்கி, "தயவுசெய்து சற்று நேரம் உட்காருங்கள்; நான் பிரார்த்தனையை முடித்ததும் தங்களுடன் பேசுகிறேன்" என்று ஜாடை காட்டினான். அவர், அவனுடைய வேண்டுகைக் கிணங்கி மீண்டும் உட்கார்ந்தார்.

அதன்மேல் அப்பர், பிரார்த்தனையை முடித்துவிட்டுப் பக்கீரை நோக்கி, "நீங்கள் என்னைப் பார்க்க வந்தும், நான் பிரார்த்தனை முடிந்து வருவதற்குள் மத்தியில் எழுந்து புறப்பட்டதற்குக் காரணமென்ன?" என்று வினவினான். அதற்குப் பக்கீர், "நான் தங்களிடம் ஓர் உதவியைப் பெற நாடி வந்தேன்; இங்கே வந்து சிறிது நேரம் உட்கார்ந் திருந்தபோது அதைப்பற்றித் தங்களுக்குத்

தொந்தரவு கொடுப்பது தகுதியன் றென்பது எனக்கு விளங்கிற்று; அதனாலேயே நான் இவ்விடத்தை விட்டுப் புறப்படத் துணிந்தேன்'' என்றார். அதன்மேல் அவர் நாடி வந்த காரியம் இன்ன தென்பதைக் கூறும்படி அவரிடம் அவன் மன்றாடிக் கேட்டுக்கொண்டான். பக்கீர், அவனிடம் பண உதவி பெற விரும்பி வந்ததைக் கூறினார். அதைக் கேட்டதும் அக்பர், ''அப்படியானால் தாங்கள் இங்கே வந்ததும் என்னிடம் பணம் கேட்பது எனக்குத் தொந்தரவாகும் என்று கருதிப்போகத் துணிந்ததற்குக் காரண மென்ன?'' என்று அவரிடம் கேட்டான். அதற்குப் பக்கீர், ''நீங்கள் கடவுளிடம் பிரார்த்தனை செய்யும் போது மேலும் செல்வம் முதலியவற்றை யாசித்துக் கொண் டிருந்தீர்கள்; உங்களுடைய பிச்சைக்காரத் தொழிலை நான் பார்த்தவுடனே, ''ஓகோ! இவரே பிச்சைக்காரரா யிருக்கின்றார்; இவரிடம் நாம் பிச்சை கேட்பது இவருக்குத் தொந்தரவாயிருக்கும்; உலகத்தில் எப்போர்ப்பட்டவர்களும் கடவுளிடம் யாசிக்கக் கூடியவர்களாகவே யிருக்கின்றார்கள்; கடவுள் ஒருவரே சகலர்க்கும் விரும்பியதைக் கொடுக்கத் தக்க பிரபுவா யிருக்கின்றார்; ஆதலின், நாம் அவரிடமே பணப் பிச்சை கேட்டு வாங்கிக் கொள்ளவேண்டும் என்று உம்மைவிட்டுச் செல்ல எழுந்தேன்'' என்று கூறிப் போய்விட்டார். அக்பர் தான் கடவுளிடம் நிலைத்த பொருளாக் கேளாமல் நிலையற்ற பொருள்களை விரும்பிக் கேட்டதைப்பற்றியும் தன்னுடைய பேராசைக் குணத்தைப்பற்றியும் வெட்கத்தை யடைந்து அது

முதல் நன்மார்க்கத்தை நாடினான். இக் கதையினால் கடவுள் ஒருவரே பிரபுத்துவமுடையவ ரென்பதையும், யாசகர்கள் எப்பேர்ப்பட்டவர்களா யிருந்தாலும் இழிந்தவர்களே யென்பதையும் உணர்ந்துகொள்ளலாம்.

913. ஈசுவர கிருபை யிருந்தால் ஆகாத காரியங்களும் நிறைவேறிவிடு மென்பதற்கு உதாரணமான கதை:

ஓர் ஊரிலிருந்த ஒரு மனிதனுடைய புத்திரன் நோய் கொண்டு மரணத்தறுவாயி லிருந்தான். அவன் பிழைப்பதற்கு வழியில்லாமலிருந்தது. அப்போது ஒரு சாது வந்து அவனுடைய தந்தையினிடத்திலே "சுவாதி நக்ஷத்திரத்திரத்திலே பெய்த மழை ஜலத்தில் கொஞ்சமும், கிருஷ்ண சர்ப்பத்தினுடைய விஷமும் ஒரு மனிதனுடைய மண்டையோட்டிலே கொண்டு வந்தால் உன்னுடைய புத்திரன் பிழைப்பான்" என்று கூறினார். உடனே அந்த மனிதன் பஞ்சாங்கத்தை யெடுத்துப் பார்த்தான். அதில் சுவாதி நக்ஷத்திரம் மறுநாள் உச்சமாவதாகக் கண்டிருந்தது. உடனே அந்த மனிதன், "நாளைச் சுவாதி நக்ஷத்திரம் உச்சமாகும்போது மற்ற இரண்டு வஸ்துக்களும் எப்படிக் கிடைக்கும்? அவை கிடைத்தாலன்றோ நம் புத்திரன் பிழைப்பான்; அவை மனித முயற்சியால்கிடைக்கத் தக்கன வல்ல; ஈசுவர கிருபையினாலேயே கிடைக்கவேண்டும்; ஆதலின், நாம் ஈசுவரனை ஸ்தோத்திரம் செய்வோம்; அவர் எப்படியும் அவை கிடைக்கும்படி செய்வார்" என்று மனதிலுறுதியுடனே ஈசுவரனை நோக்கி, "ஈசுவரா! சாது கூறிய

வற்றை யெல்லாம் சுவாதி நக்ஷத்திரம் உச்சமாகும்போது எனக்குக் கிடைக்கும்படி செய்து என் புத்திரனுடைய உயிரைக் காப்பாற்றி யருளவேண்டும்'' என்று பிரார்த்தனை செய்துகொண்டே யிருந்து, மறுநாள் சுவாதி நக்ஷத்திரம் உச்சமானபோது புறப்பட்டு ஸ்மசானத்திற் சென்று மனிதனுடைய மண்டையோட்டைத் தேடினான். ஈசுர கிருபையால் ஒரு மரத்தினடியிலே அவ்வோடு அவனுக்கு அகப்பட்டது. அதைக் கண்டவுடனே அவன் திருப்தியடைந்து ஈசுரனை நோக்கி, ''ஈசுரா! இந்த ஓட்டில் மழை ஜலம் விழும்படி செய்யவேண்டும்'' என்று பிரார்த்தனை செய்தான். ஈசுர கிருபையால் திடீரென்று ஒரு மழை பெய்தது. அவ்வோடு மல்லாந்திருந்தபடியால் அதில் சிறிது மழை ஜலம் வீழ்ந்தது. அதன்மேல் அந்த மனிதன் மிக்க சந்தோஷமடைந்து, ஈசுரனை நோக்கி, ''கடவுளே! உன்னுடைய கிருபையால் இரண்டு வஸ்துக்கள் கிடைத்துவிட்டன; இனிக் கிருஷ்ண சர்ப்பத்தின் விஷமும் கிடைக்கும்படி கிருபை பாலிக்கவேண்டும்'' என்று மிருந்த ஆத்திரத்துடனே ஸ்தோத்திரம் பண்ணினான். உடனே ஈசுர கிருபையால் அந்த மண்டை யோட்டிற் கருகில் ஒரு தவளை தாவிவந்து உட்கார்ந்தது. அதன் பக்கத்தி லிருந்த புல்லின் கூட்டத்திற்குள் பதித்திருந்த கிருஷ்ண சர்ப்பம் அத் தவளையைப் பிடிப்பதற்கு அதன்மேற் பாய்ந்தது. தவளை அதன் பாய்ச்சலுக்குத் தவறி அந்த மண்டை யோட்டிற்கப்பால் தாவிற்று. பாம்பு 'மறுபடியும் அதைப் பிடிக்கவேண்டும்' என்னும் ஆத்திரத்துடன் வாயைத் திற

ந்துகொண்டு அந்த மண்டை யோட்டின் மேல் தலையை விசையாக மோட்டிற்று. அது பாய்ந்த வேகத்தால் அதன் விஷத்திற் சிறிது மண்டை யோட்டிற்குள் வீழ்ந்தது. தவளை உயிர் தப்பி யோடிவிட்டது; பாம்பும் திரும்பித் தன்னிருப்பிடம் சென்றுவிட்டது.

இவ்வாறு எல்லாம் எகாலத்திற் கிடைக்கவே அந்த மனிதனுக்குண்டான சந்தோஷத்திற்கு அளவே யில்லை; அவன் ஈசுர கிருபையைப்பற்றிக் கொண்டாடத் தொடங்கி, "ஏ ஈசுவரா! உன்னுடைய கிருபையினாலே இடைத்தற் கரிய வஸ்துக்க ளெல்லாம் இடைத்துவிட்டன; என்னுடைய புத்திரன் இனிப் பிழைத்துக்கொள்வா னென்பதிற் சந்தேக மில்லை; உன்னுடைய கிருபையின் மகிமையை எவ ரறியவல்லார்!" என்று பலவாறு ஈசுரனை ஸ்தோத்திரம் செய்து உடனே அந்த வஸ்துக்களைச் சாதுவினிடம் கொண்டுபோய்ச் சேர்த்தான். அவற்றைக்கொண்டு அவர், அந்த மனிதனுடைய புத்திரனைப் பிழைக்கும்படி செய் தார். இக் கதையினால், ஈசுர கிருபையைப் பெற்றுக் கொள்பவர்கள், மனிதனால் செய்ய முடியாத காரியத்தை யும் செய்து முடித்துவிடலா மென்ப துணரப்படும்.

914. தம்மிடத்தே உண்மையான நம்பிக்கை வைப்ப வர்களின் மனம்போல் ஈசுரன் நடப்பா ரென்பதற்கு உதாரணமான கதை:

ஒரு வைதிகப் பிராமணன் ஒரு வீட்டைச் சேர்ந் திருந்த சிறு கோவிலிலே பூஜகனா யிருந்தான். அப்படி

யிருக்கும்போது அவனுக்கு வெளியூருக்குப் போகவேண்டிய காரியம் நேர்ந்தது. அத் தருணத்தில் அவன் தன் புத்திரனிடத்தில் அக் கோவில் பூஜா காரியங்களைப் பார்த்துக்கொள்ளும்படி சொன்னதோடு அவன் சிறு பிள்ளையாயிருந்தபடியால் அவனுக்கு வேடிக்கையாயிருக்கும் பொருட்டு, ''தினந்தோறும் ஈசுரன் முன்வைக்கும் நைவேத்தியங்களை அவர் சரியாகத் தின்கிறாரா என்று பார்த்துக்கொள்'' என்றும் சொல்லிவிட்டுச் சென்றான். அவன் அவ்வாறு வேடிக்கையார்த்தமாகச் சொன்னதை அவனுடைய புத்திரன் மெய்யென்றே நினைத்துக்கொண்டான். அப் புதல்வன் ''நம் தந்தை தினந்தோறும் வைக்கும் நைவேத்தியங்களை ஈசுரன் தின்பது வழக்கம்போலிருக்கின்றது'' என்று உறுதி செய்துகொண்டான்.

அதன்மேல் பூஜை நேரம் வந்தபோது அவன் அந்தக் கோவிலிலுள்ள விக்கிரகத்தின் முன் நைவேத்தியப் பொருள்களெல்லாம் வைத்துப் பூஜை செய்துவிட்டு 'ஈசுரன் அவற்றைத் தின்கிறாரா' என்று பார்த்துக்கொண்டிருந்தான். அந்த விக்கிரகம் பேசவுமில்லை, தின்னவுமில்லை. 'ஈசுரன் விக்கிரகத்திலிருந்து வெளியே வந்து நைவேத்தியங்களின் முன் உட்கார்ந்து அவற்றைத் தின்பார்' என்று அவனுக்குத் திடமான நம்பிக்கையிருந்தபடியால், அவன் அதன்மேலும் நெடுநேரம்வரை 'அவர் வந்து அவற்றைத் தின்கிறாரா' என்று கவனித்துக் காத்துக்கொண்டிருந்தான். அப்படிக் காத்திருந்தும் அவர் வர

வில்லை. அதனால், அவன் மனம் வருந்தி அந்த விக்கிரகத்தை நோக்கி, "ஏ ஈசுரா! நீ வந்து நைவேத்தியங்களைச் சாப்பிடு; நேரமாகிறது; இனிமேலும் என்னால் காத்திருக்க முடியாது" என்று பிரார்த்தனை செய்தான். அப்போதும் ஈசுரன் பேசவேயில்லை. பின்னரும் அவன் ஈசுரனை நோக்கி, "ஈசுரா! நீ வந்து நைவேத்தியத்தைச் சாப்பிடுவாயென்றும், அப்படிச் சாப்பிடுவதைக் கவனித்து வரும்படிக்கும் என் தந்தை என்னிடம் கூறிச் சென்றார். அப்படியிருக்க நீ ஏன் என் முன் வரமாட்டேனென்கிறாய்? நீ என் பிதாவினிடத்தில் மாத்திரம் வந்து தினந்தோறும் அவரால் வைக்கப்படும் நைவேத்தியங்களைத் தின்று கொண்டிருந்தாயே; என்னிடம் வந்து சாப்பிடாமலிருப்பதற்குக் காரணமென்ன? நான் என்ன குற்றம் செய்தேன்?" என்று கூவி அழ ஆரம்பித்தான். அப்படியே நெடு நேரம்வரை அழுதுகொண்டேயிருந்தான். அதன் மேலும் ஈசுரனால் மௌனஞ் சாதிக்க முடியவில்லை. அவர், அவனுடைய அழுகைக் கிரங்கி, மனுஷ்ய வடிவமெடுத்து அவ் விக்கிரகத்தினின்றும் வெளியேறி நைவேத்தியங்களை உண்டார். அப்படி உண்பதைப் பையன் கண்டான்; கண்டவுடன் அளவற்ற ஆனந்தங் கொண்டான். அதன் மேல் அவன் வீட்டிற்குச் சென்று அங்குள்ளவர்களிடத்தில் "ஈசுர பூஜை முடிந்துவிட்டது" என்று சொன்னான். அவர்கள் அவனை நோக்கி, "பூஜை முடிந்துவிட்டால் நைவேத்தியப் பொருள்களை ஏன் கொண்டுவரவில்லை? நீ போய் அவற்றை யெடுத்துக்கொண்டுவா!" என்று கூறி

ஞர்கள். அதற் கந்தப் பையன், "அவற்றை யெல்லாம் ஈசுசன் தின்றுவிட்டார்" என்றான். அவர்கள் அந்த வார்த்தையை நம்பாமல், "இஃதென்ன அதிசயமாயிருக்கின்றதே!" என்று கோவிலுக்குப் போய் நைவேத்தியத் தட்டுக்களைப் பார்த்தார்கள். அவைகளெல்லாம் காலியாயிருந்தன. அவர்கள் பிரமித்து, "ஈசுசன் எதனால் வந்து இவற்றை இப்படி உண்டார்?" என்று அவனிடம் கேட்டார்கள். அவன் நடந்தவற்றைக் கூறினான். அதன்மேல் அவர்கள், "ஈசுசன் உண்மையான பக்தருக்காக எதையும் செய்வார்" என்று அவரையும், அந்தச் சிறுவனையும் கொண்டாடிச் சென்றார்கள்.

915. உலகம், மூக்குணங்கள், ஜீவன், ஆத்ம ஞானம் இவற்றின் தன்மைகளை விளக்குதற்கு உதாரணமான கதை:

ஒரு மனிதன் ஒரு காட்டிலூடே சென்றுகொண்டிருந்தான். அவன் அக் காட்டிற்கு நடுவிற் செல்லும்போது மூன்று திருடர்கள் அவனைப் பிடித்து அவனிடமிருந்த எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டார்கள். அவ்வாறு பறித்துக்கொண்ட பின் அத் திருடர்களில் ஒருவன் அந்த மனிதனைப் பார்த்து, "இவனை உயிருடன் விடக்கூடாது" என்று தன்னுடைய கத்தியை ஓங்கிக்கொண்டு அவனை வெட்டிக் கொல்லப்போனான். அப்போது மற்றொரு திருடன் "ஐயோ! இவனைக் கொல்வதால் யாது பயன்? உயிருடனே கட்டிப்போட்டுவிட்டுச் செல்லலாம்" என்று வெட்

டப் போனவனைத் தடுத்து அந்த மனிதனுடைய கைகளையும் கால்களையும் கட்டி அவனைப் பாதை யோரத்திலே போட்டுவிட்டான். பின்னர் மூன்று திருடர்களும் அவ்விடத்தைவிட்டுப் போனார்கள். அப்படி அவர்கள் போகும் போது சிறிது தூரம் சென்றவுடனே மற்றொரு திருடன், அந்த மனிதனை வெட்டப் போனவனையும் கட்டிப்போட்டவனையும் விட்டுப் பிரிந்து, அந்த மனிதன்பேரில் இரக்கம் கொண்டு தனியாகத் திரும்பி வந்து கட்டப்பட்டுக் கிடந்த அந்த மனிதனைப் பார்த்து, "ஆ! நீ காய மடைந்தாயோ? நான் உனது கட்டுக்களை அவிழ்த்துவிட்டு நீ உன்னுடைய ஊரில்போய்ச் சேரும்படி உனக்கு நல்ல வழியையும் காட்டுகிறேன்" என்று அவனுடைய கட்டுக்களை அவிழ்த்துவிட்டு அவனைச் சிறிது தூரம் அழைத்துச் சென்று அவனுடைய ஊருக்குச் சமீபத்திற் சேர்ந்தவுடனே, அவ்வூரை 'அதோ பார் உன்னுடைய ஊர் தெரிகிறது' என்று அவனுக்குச் சுட்டிக் காட்டி, அவ்வூருக்குச் செல்லும் வழியையுங் காண்பித்து, "நீ இந்த வழியைப்பற்றிச் சென்றால் உன்னுடைய ஊருக்குப் போய்ச் சேருவாய்" என்று சொன்னான். அந்த மனிதன், திருடர் கூட்டத்திற் சேர்ந்தவன் தனக்கு அவ்வளவு உபகாரஞ் செய்ததைப்பற்றி மன மகிழ்ந்து அத் திருடனை நோக்கி, "நண்பனே! நீ எனக்குச் செய்த நன்றிக்காக நான் உன்பேரில் மிக்க விசுவாசம் செலுத்தக் கடமைப்பட்டவனாயிருக்கின்றேன்; நீ தயவு செய்து என் வீட்டிற்கு வரவேண்டும்" என்று அழைத்தான். அதற்கு அத் திருடன், "நான் அங்கே

வருதல் கூடாது; வந்தால் என்னைப் போலீஸ்காரர்கள் பிடித்துக்கொள்வார்கள்'' என்று சொல்லிப் போய்விட்டான்.

இக் கதையில் வரும் விஷயங்களைப் போலவே இவ் வுலகத்தின் தன்மையும், முக்குணங்களின் தன்மையும், ஜீவனின் தன்மையும், ஆத்ம ஞானத்தின் தன்மையும் அமைந்திருக்கின்றன. இவ் வுலகம் அந்தக் காடு போன்றது; பிரகிருதியினுடைய சத்துவம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்று குணங்களும் அங்கே வந்த மூன்று திருடர்களுக்கு நிகரானவையாம்; ஜீவன் அந்த காட்டிற் சென்ற பிரயாணிக்கு நிகராம்; அதனிடத்திலிருந்த ஆத்மஞானம் அந்தப் பிரயாணியின் சொத்துக்கு உபமானமாம். மேற் கூறிய முக் குணங்களில் இராஜத குணமானது அந்தப் பிரயாணியை வெட்டப்போன திருடனுக்கு நிகராம்; தமோகுணமானது அவனைக் கட்டிப்போட்ட திருடனுக்கு நிகராம்; சத்துவகுணமானது அவனைக் கட்டினின்றும் விடுவித்து ஊருக்கனுப்பிய திருடனுக்கு நிகராம். இக் கதையில் வந்த விஷயங்களைப் போலவே பிரயாணிக்கு நிகராகிய ஜீவன், ஒரு ஜன்மத்தை யெடுத்துக் காட்டிற்கு நிகராகிய இவ் வுலகத்திற் புகுந்தவுடனே, திருடர்களுக்கு நிகராகிய முக்குணங்களும் எதிர்ப்பட்டு அவனிடத்தே உள்ள சொத்துக்கு நிகராகிய ஆத்ம ஞானத்தை அபகரிக்கும். அவ்வாறு கைப்பற்றிக்கொண்டவுடனே, அந்தப் பிரயாணியைக் கொல்லப்போன திருடனுக்கு நிகராகிய

இராஜதகுணம், அவன் மோக்ஷ விருப்பை யிழந்து தானம், தவம், வீரம் முதலியவற்றைச் செய்து பிறவியிற் புகுந்து அழுமாறு அவனை விரைவில் ஒழித்துவிடப் பார்க்கும்; பிரயாணியைக் கட்டிப்போட்ட திருடனுக்கு நிகராகிய தமோகுணமானது அந்த ஜீவனை உலக பந்தத்திற் கட்டுப்படுத்தி உயிருடன் நெடுநாளிருந்து பாவங்களைத் தேடிப் பின்னல் வருந்துமாறு செய்யும். அந்தப் பிரயாணியின் கட்டை விடுவித்து அவனை ஊருக்கனுப்பிய திருடனுக்கு நிகராகிய சத்துவகுணமானது, ஜீவனை மரணத்தினின்றும், உலக பந்தத்தினின்றும் விடுவித்து மோக்ஷ வீட்டிற்குச் செல்லும் மார்க்கத்தை அவனுக்குக் காட்டிவிட்டுத் தான் விலகி நின்றுவிடும்.

இதனுடைய கருத்தாவது உலகத்தில் தோன்றும் மனிதனிடத்தே, பிரகிருதியினுடைய சத்துவம், ரஜஸ், தமஸ் என்னும் மூக்குணங்களும் தோன்றும். அவற்றுள் இராஜதகுணமானது அவனுடைய மோக்ஷ ஞானத்தைக் கெடுத்து, அவனை வீரமான காரியங்களிற் புகுத்தி, தவம் முதலிய எத்தகைய காரியங்களையும் அஞ்சாமற் செய்து விரைவில் அழிந்து பிறவிக்காளாகும்படி செய்யும்; தாமத குணமானது அவனுடைய ஆத்மஞானத்தை அழித்து, காமக்குரோதாதி மாயையில் அவனைக் கட்டுப்படுத்தி விடும்; சத்துவகுணமானது, அவனிடத்தே யிருந்த ஆத்ம ஞானத்தைத் தான் பற்றி விருத்தி செய்து, மற்ற இரண்டு குணங்களின் செய்கைகளிலிருந்தும் அவனை விலக்கி

மோக்ஷ ஸ்தானத்திற் கழைத்துக்கொண்டுபோய் அவனுக் கதனைக் காட்டிவிட்டு மறைந்துவிடுகிறது; அஃது அப்படிக் காட்டினாலும், அகண்ட ஸ்தானத்தினருகே செல்லுதற்கு அதனால் முடியாது. (சத்துவ குணமும் நசித்தவிடமே மோக்ஷமாம்) என்பதாம்.

916. உண்மைப் பக்தனின் தன்மையை விளக்குதற்கு உதாரணமான கதை:

ஒரு காலத்திலே இரண்டு பக்தர்கள், 'ஈசுரனைத் தரிசிக்கவேண்டும்' என்னும் நோக்கத்துடனே ஓரிடத்திற் சென்று தவஞ் செய்துகொண்டிருந்தார்கள். அப்படியிருக்கும்போது ஒருநாள் தேவரிஷியாகிய நாரதர் அவர்களுடைய ஆச்சிரமத்தின் வழியே சென்றார். அவர்கள் அவரைப் பார்த்தவுடனும், "தாங்கள் பிரஹ்மலோகத்தி லிருந்து வருகிறீர்களோ?" என்று வினவினார்கள். நாரதர், "ஆம்" என்றார். அதன்மேல் அவர்கள், "அங்கே ஈசுரன் என்ன செய்துகொண்டிருக்கின்றார்?" என்று அவரிடம் கேட்டார்கள். அவர், ஈசுரன் எல்லாம் செய்ய வல்லவர் என்பதை விளக்கும்பொருட்டும், வேடிக்கையார்த்தமாகவும் அவர்களுடைய ஈசுர பக்தியைச் சோதிக்கும் பொருட்டும் "ஈசுரன், ஒட்டகங்களையும், யானைகளையும் ஓர் ஊசித் துவாரத்தினூடே நுழையவிட்டு விளையாடிக்கொண்டிருக்கின்றார்" என்று கூறினார். அவர்களில் ஒருவன், நாரதர் கூறியதைக் கேட்டவுடன், அதில் நம்பிக்கை வைத்து, "இதில் ஆச்சரிய மொன்று மில்லை; ஈசுரனால் ஆகாத

காரியமும் உளதோ? அவர் இதையும் செய்வார்; இதினும் மேற்பட்ட காரியத்தையும் செய்வார்'' என்று சொன்னான். மற்றொருவனுக்கு அதில் நம்பிக்கை யில்லாததால் அவன், நாரதரை நோக்கி, ''நீ கூறியதை நம்புவது முழு மூடத்தனம்; அஃது எவருக்கும் அசாத்தியமான காரியம்; அது முழுப் பொய்; நீ ஈசுவரனைத் தரிசித்திருக்கவும் மாட்டாய், அவர் அச் செய்கையைச் செய்யப் பார்த்திருக்கவு மாட்டாய்; நீ கூறிய பொய்யான வார்த்தையே ஈசுரனிடம் சென்றிருக்கமாட்டா யென்பதை விளக்குகின்றது'' என்றான். நாரதர் அவ் விருவருடைய ஈசுர பக்தியையும் இதன் மூலம் தெரிந்துகொண்டு போய்விட்டார்.

மேற்கூறிய இருவருள் நாரதர் வார்த்தையை நம்பியவனே சிறந்த பக்தன்; நம்பாதவன் பக்தியே யில்லாதவன். உண்மையான ஈசுர பக்தர்கள், அவரைப்பற்றிப் பெரியோர் கூறும் எதையும் நம்பிக்கொள்வார்கள்; பக்தியற்றவர்கள், அவரைப்பற்றி உயர்ந்தோர் கூறும் எதிலும் சந்தேகங் கொள்வார்கள். இக் கதையினால் உண்மையான ஈசுர பக்தனுடைய தன்மையையும் போலிப் பக்தனுடைய தன்மையையும் உணர்ந்துகொள்ளலாம்.

917. எல்லாப் போற்றுப்புக்களையும் ஈசுரனிடத்தே ஒப்பித்துவிடுபவர்க்கு எவ்வித துன்பமும் மனுகா தென்பதற்கு உதாரணமான கதை:

ஒரு கிராமத்திலே ஒரு நெசவுத் தொழிற்காரனிருந்தான். அவன் மிகுந்த ஞான நோக்க முள்ளவன்; இராம

ருடைய நாமத்தைச் சொல்லிக்கொண்டே எதுவும் அவருடைய விருப்பப்படி நிறைவேறுவதாகப் பாவனை செய்து எதையும் உண்மையாகச் செய்யக் கூடியவன்; பொய் கூறுகவன். அவன் இத்தகைய நற்குணங்களோடு கூடியவனு யிருந்தபடியால், அவ் ஊரிலுள்ள எல்லோருக்கும் அவனிடத்திலே நம்பிக்கையும் அன்பு முண்டு. அவன், தன்னுடைய தூணியை விற்பதற்குச் சந்தைக்குச் சென்று எவரேனும் அதன் விலையைக் கேட்டால், "இராமருடைய விருப்பப்படி இந்தத் தூணிக்குச் சென்றிருக்கும் நூலின் விலை ஒரு ரூபா; இராமருடைய இச்சைப்படி இத் தூணியின் நெசவு வேலைக்கேற்பட்ட கூலி நான்கணு; இராமருடைய இச்சைப்படி இதற்கு வைத்திருக்கும் இலாபம் இரண்டணு; இராமருடைய விருப்பப்படி இம்மூன்று வகையிலும் கூடிய தொகை ஒரு ரூபாவும் ஆறணாவுமாகும்; இராமருடைய இச்சைப்படி இதற்கேற்பட்ட விலை இதுவேயாகும்" என்று அதன் உண்மையான விலையைக் கூறுவான். எவரும் அவனுடைய வார்த்தையில் நம்பிக்கை வைத்து அவன் சொன்ன தொகையைக் கொடுத்து அத் தூணியை விலைக்கு வாங்கிக்கொள்வார்கள். அவ்வூர் மனிதர்களுக்கு அவனிடத்திலே அவ்வளவு நம்பிக்கை யுண்டு. இன்னும் அவன் ஈசுரனிடத்தில் உண்மைப் பக்தனாகவு மிருந்தபடியால், இராப் போஜனம் உண்ட பிறகு ஓரிடத்தில் உட்கார்ந்து நெடுநேரம்வரை ஈசுவரனைத் தியானித்து அவருடைய நாமத்தை ஜபித்துக்கொண் டிருப்பான்.

இப்படி யிருக்கும்போது அவன் ஒருநாள் இரவிலே நெடுநேரம் வரை தனக்குத் தூக்கம் வராதபடியால் வாசலி னருகே முற்றத்தில் உட்கார்ந்து சுருட்டுப் பிடி, துக் கொண் டிருந்தான். அப்போது பல திருடர்கள் கூட்டமாக அவ் வழியே சென்றுகொண் டிருந்தார்கள். அவர்களுக் குத் திருட்டுச் சொத்துக்களைச் சுமந்து செல்வதற்கு ஒரு ஆள் வேண்டியது அவசியமா யிருந்தது. அதனால் அவர் கள் மேற் கூறிய நெசவுக்காரனைப் பார்த்துத் தங்களுடன் பிடித்திழுத்துக்கொண்டு போனார்கள். அவ்வாறு சென்ற வர்கள் ஒரு வீட்டிலே கன்னமிட்டு அநேகம் பொருள்க ளைத் திருடி அவற்றை யெல்லாம் ஒரே மூட்டையாகக் கட்டித் தாங்கள் இழுத்துச் சென்ற நெசவுக்காரனுடைய தலையில் வைத்து அவனை நோக்கி, "இதைச் சுமந்து கொண்டு எங்களுடன் வா" என்று சொன்னார்கள். நெச வுக்காரன் 'இதுவும் இராமருடைய விருப்பப்படிதான் நடக்கிறதுபோ லிருக்கின்றது' என்று அதைத் தலையில் வைத்துக்கொண்டான். அத் தருணத்தில் நகரத்தின் காவற்காரன் அங்கே வந்துவிட்டான். அவனைக் கண்டதும் திருடர்கள் பயந்தோடிவிட்டார்கள். நெசவுக்காரன் உள் ளத்திற் களங்கமற்றவனுதலின் ஓடாமல் நின்றான். திருட் டுப் பொருள்களோடு அவன் அவ்வாறு நிற்கவே, காவற் காரன் அவனைத் திருட னென்றே நிச்சயித்துப் பிடித்துச் சிறைக் கூடத்தில் அடைத்துவைத்திருந்து மறுநாள் நியா யாதிபதியிடம் சேர்த்துத் திருட்டுச் சொத்துடன் அவன் அகப்பட்டதைக் கூறினான். நியாயாதிபதி அவனுடைய

விஷயத்தை விசாரிக்கத் தொடங்கினர். அப்போது சகாத்து ஜனங்கள் அவ் விஷயத்தைக் கேள்விப்பட்டு, நேசவுக்காரன் மகா சத்தியவந்த னென்பதைத் தெரிந்தவர்க ளாதலால் நியாயாதிபதியிடம் ஓடிவந்து, எல்லோரும் ஏகோபித்தமான குரலாக, "நீதி யதிபதியவர்களே! இவன் திருடவேமாட்டான்; இவ்வது ஏதோ ஒரு காரணத்தால் கேர்க்கப்பட்டிருக்கின்றது; இதைப்பற்றி நீங்கள் நன்றாக விசாரித்து உண்மையைத் தெரிந்து தீர்ப்புச் செய்யவேண்டும்" என்று கூறினர்கள். நியாயாதிபதி நடந்தவற்றை உண்மையாகக் கூறும்படி நேசவுக்காரனிடம் கேட்டார்.

அவன் தன்னுடைய வழக்கப்படியே எல்லாம் இராமர் விருப்பத்தால் நடந்தன வென்று தீர்மானித்துக்கொண்டு நியாயாதிபதியை நோக்கி, "தர்மப் பிரபுவே! இராமருடைய இச்சைப்படியே நான் நேற்றிரவு என் வீட்டின் முற்றத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தேன்; இராமருடைய இச்சைப்படி நடுராத்திரி யாகிவிட்டது. அந்நேரத்தில் நான் இராமருடைய விருப்பப்படி உறக்கம் வராமையால், சகுனமறிந்து தியானித்து அவருடைய நாமத்தை ஜபித்துக்கொண்டிருந்தேன். அப்போது இராமருடைய விருப்பப்படி அவ் வழியாகப் பல திருடர்கள் கூட்டமாக வந்தார்கள்; இராமர் இச்சைப்படி அவர்கள் என்னைக் கண்டு தங்களுடன் இழுத்துக்கொண்டு போனார்கள். அதன்மேல் அவர்கள், இராமருடைய விருப்பப்படி ஒரு வீட்டில் கன்னமிட்டுப் பல பொருள்களைத் திருடிக்கொண்டு வந்து

மூட்டையாகக் கட்டி என் தலையில் வைத்தார்கள். அதி தருணத்தில் இராமருடைய இச்சைப்படி காவற்காரன் அங்கே வந்தான். அவனைக் கண்டதும் இராமருடைய விருப்பப்படி திருடர்கள் ஓடிவிட்டார்கள்; இராமருடைய இச்சைப்படி நான் மாத்திரம் அங்கே நின்றேன்; காவற் காரன் இராமருடைய இச்சைப்படி திருட்டுப் பொரு ளுடன் நின்ற என்னைக் கண்டதும் திருடனென்றே தீர்மா னித்துப் பிடித்துக்கொண்டு வந்து சிறைச்சாலையில் அடை த்துவிட்டான். இராமருடைய இச்சையினாலே இப்பொ ழுது நான் தங்கள் முன் விசாரணைக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறேன்'' என்று சொன்னான். நியாயாதிபதி அந்த மனிதனுடைய நிஷ்களங்கமான தன்மையையும், ஆத்மஞானத்தையும், தெய்வ பக்தியையும் பார்த்து, அவன் திருடனல்ல வென்பதைத் தெரிந்துகொண்டு அவனை உடனே விடுதலை செய்துவிட்டார். அவன் வெளியே வந்து அங்குக் கூடி நின்ற ஜனங்களை நோக்கி, ''நண்பர்களே! இராமருடைய இச்சைப்படி நான் விடுதலை யடைந்தேன்'' என்று கூறிவிட்டு வீட்டிற்குச் சென்றான்.

இவனைப்போலவே மனிதர் உலகத்தில் விருந்தாலும் அதனைத் துறந்திருந்தாலும் எல்லாச் செய்கைகளையும் ஈசுவரார்ப்பணமாகச் செய்து மனதிற் களங்கமின்றி யிருந் தால் அவர்களுக்கு எவ்வித தீங்கும் நேராது; ஆபத்து நேரினும் தானே அகன்றுவிடும். முடிவில் அவர்கள் ஈசுவர ஸாக்ஷாத்காரத்தால் முக்தி யின்பத்தை எய்துவர்.

918. அத்தியந்த அவாவும் நம்பிக்கையுமே ஈசுவர தரிசனத்துக்குச் சிறந்த மார்க்கங்களா மென்பதற்கு உதாரணமான கதை:

ஓர் ஊரில் 'ஜடிலன்' என்ற பெயருடைய் ஒரு பையன் இருந்தான். அவன், தினந்தோறும் காட்டின் வழியாகத் தனியே பள்ளிக்கூடத்திற்குச் செல்வது வழக்கம். அதனால் அவன் அந்தக் காட்டிற்குள் செல்லும்போ தெல்லாம் அச்சத்துடனே செல்லுவான். அப்படி அவன் அச்சத்துடனே பள்ளிக்கூடத்துக்குப் போய்வரும்போது ஒருநாள் தனக்குண்டாகும் பயத்தைத் தன் தாயாரிடம் சொன்னான். அவள் கிருஷ்ணனிடத்தில் விசுவாசமுடை யவளாதலின், தன் பிள்ளை அவரை நினைத்தால் அவனுக்கு அச்ச முண்டாகா தென்று உறுதி செய்துகொண்டு, மேற் கூறியபடி சொன்ன மகனை நோக்கி, "குழந்தாய்! நீ ஏன் பயப்படுகிறாய்? உனக்கு அச்ச முண்டாகும்போது கிருஷ் ணனை நினை; அவர் வந்து உன் பயத்தை நீக்கிவிடுவார்" என்று கூறினாள். அப் புதல்வன் அதைக் கேட்டதும் அவளை நோக்கி, "அம்மா! கிருஷ்ணன் யார்?" என்று வினவினான். அதற் கவள் "உன்னுடைய சகோதரன்" என்றாள்.

இவ்வாறு அவள், தன் பிள்ளைக்குத் தெறுத லுண்டா கும்படிக்கும், கிருஷ்ணனை நினைத்தால் அவனுக்கு அச்ச முண்டாகா தென்றும் நினைத்து மெய்போலச் சொன்ன உபாய வார்த்தைகளை அவன் உண்மை யென்றே நினைத்துக்

கொண்டான்; அச்ச முண்டாகும்போது கிருஷ்ணனைக் கூப்பிட்டால் அவர் வந்து தனக் குதவிசெய்வா ரென்று உறுதிப்படுத்திக்கொண்டான். இவ்வகை உறுதியுடன் அவன் மறுநாள் பள்ளிக்கூடத்திற்குச் சென்றான். அந்தக் காட்டிற்குள் செல்லும்போது அவனுக்கு அச்ச முண்டாயிற்று. அப்போ தவன், "அண்ணை கிருஷ்ணை!" என்று உரத்த சப்தமிட்டுக் கிருஷ்ணனைக் கூப்பிட்டான். அவர் வரவுமில்லை, பேசவு மில்லை. அந்தச் சிறுவன் மறுபடியும், "அண்ணை கிருஷ்ணை!" நீ எங்கே யிருக்கிறாய்? இப்பொழுது வந்து என்னைக் காப்பாற்று; எனக்குப் பயமாயிருக்கிறது" என்று கூவினான். கிருஷ்ணன், தம்மிடத்தே நம்பிக்கையும் விசுவாசமு முள்ள அந்தப் பையனுடைய குரலைக் கேட்டு அதன் மேலும் வராமலிருக்க அவரால் முடியவில்லை. உடனே அவர், ஒரு சிறு பையன் வடிவ மெடுத்துக்கொண்டு அந்தப் பள்ளிக்கூடத்துச் சிறுவனுக் கெதிரில் தோன்றி, "இதோ உன் அண்ணனாகிய கிருஷ்ணன் வந்துவிட்டேன்; நீ இனிப் பயப்படவேண்டாம்; என்னுடனே வா; உன்னை நான் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துக்கொண்டு செல்கின்றேன்" என்று சொல்லி அவனை அழைத்துக்கொண்டு போய்ப் பள்ளிக்கூடத்தருகில் விட்டு மேலும் அவனை நோக்கி, "தம்பி! உனக்குப் பயமுண்டானபோதெல்லாம் நீ என்னைக் கூப்பிடு; நான் வந்து உன்னுடைய பயத்தை நீக்கி உனக்கு உதவி செய்வேன்" என்று சொல்லிப் போய்விட்டார். இவனைப்போல் ஈசனிடத்தில் எவர்கள் உண்மை

யான நம்பிக்கையும், அவாவும் வைப்பார்களோர் அவர்களுக்கு ஈசுரன் பிரத்தியகூமாகி உதவி செய்வார்.

919. ஆத்மஞானத்தில் பரிபூரண நம்பிக்கை யுடையவர்கள், ஞான சாதனங்களில் சிறிது அப்பியாசஞ் செய்தாலும் அதனை அடைவார்க ளென்பதற்கு உதாரணமான கதை:

வியாசர் ஒரு சமயம் ஒரு காரியார்த்தமாக யமுனாநதியைக் கடந்து செல்லவேண்டி அதன் கரை யோரத்திலே போய் நின்றார். அப்போது அதே நோக்கத்துடன் கோபிகைகளும் அங்கே வந்து சேர்ந்தார்கள். இவர்களுக்கு யமுனையைக் கடப்பதற்குப் படகு கிடைக்கவில்லை. அதனால் கோபிகைகள் வியாசரை நோக்கி, "சுவாமி! நாங்களோ யமுனையைக் கடந்து செல்லவேண்டும்; படகு கிடைக்கவில்லையே; இதற் கென்ன செய்யலாம்?" என்று கூறினார்கள். அதைக் கேட்டவுடன் வியாசர் அவர்களைப் பார்த்து, "எனக்குப் பசியாயிருக்கின்றது; நீங்கள் ஏதாவது எனக்கு ஆகாரங் கொடுப்பீர்களானால் அதை நான் உண்டு பசி தணித்துக்கொண்டு உங்களை யமுனை யாற்றிற் கப்பால் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுவேன்" என்றார். உடனே கோபிகைகள், தங்களிடத்திலிருந்த கொஞ்சம் பாலையும், வெண்ணெயையும் அவருக்குக் கொடுத்தார்கள். அவர் ஆத்மஞானத்தில் திட நம்பிக்கை யுள்ளவ ராதலாலும், எதையும் தமக்கென்று நினையாமல் ஈசுரார்ப்பணமாகச் செய்யக்கூடிய வராதலாலும், அந்த வெண்ணெயையும், பாலையும் தாம் பசிக்கு உண்பதாக நினையாமல் 'ஈசனை

பதியைத் தணிக்க உண்கிறார்' என்று உறுதி செய்துகொண்டு உண்டு, தாம் உபவாச மிருப்பதாகவே நிர்மானித்துக் கொண்டார். கோபிகைகள் மாத்திரம் இந்த உண்மையை உணராதவர்க ளாதலால் 'அவர் அவற்றை உண்டு பசி தணித்துக்கொண்டார்' என்று நினைத்துக்கொண்டார்கள். அதன்மேல் அவர்கள் வியாசரை நோக்கி, "இனி நதியைக் கடப்பதற்கு மார்க்கம் தேடுங்கள்" என்று சொன்னார்கள்.

அப்போது வியாசர் யமுனைக்கரையில் நின்றபடியே அதனை நோக்கி, "ஏ யமுனையே! நான் இன்று உபவாச மிருப்பது உண்மையானால் நாங்கள் உன்மேல் கடந்து அக்கரை சேருமாறு தண்ணீரை விலக்கிக்கொண்டு எங்களுக்கு வழிவிடு" என்று பிரார்த்தனை செய்தார். அவர் ஆத்மஞான த்தை அடைந்திருந்த நாதலின், அதன் மகிமையினாலே அவர் அப்படிச் சொல்லி வாய்மூடுவதற்கு முன்பே யமுனை யின் குறுக்கே தண்ணீர் நடுவில் இடம் விட்டு இரண்டு பக்கத்திலும் விலகிக்கொண்டது; நடுவில் தெரிந்த பூமி யானது நீர்மட்டத்துக்குமேல் உயர்ந்தது. அதைக் கண்ட வுடனே கோபிகைகள் மேற்சூரியபடி அவர் ஆகாரமுண்டா ரென்று நிர்மானித்தவர்க ளாதலின், ஆச்சரியமுற்று, "ஐயோ! இவர் இப்பொழுதுதானே நம்மிடம் பாதி வெண்ணெயையும் வாங்கி யுண்டார்; அப்படி யுண்டும் உபவாச மிருந்ததாகச் சத்தியம் கூறினார்; அவ்வாறு கூறி பிரார்த்தனை செய்ததற்காக இந்த நதியும் வழி கொடுத்தது; இஃதென்ன மாயா விநோதமான சங்கதியாயி

இன்றதே'' என்று பேசிக்கொண்டார்கள். அவர்கள் இந்தச் செய்கை வியாசருடைய ஆத்மஞானத்தின் பரிபூரண நம்பிகைக்கு ஒரு அத்தாக்ஷியான தென்பதையும், அவருக்குள் இருந்த ஈசுரனே அந்த வெண்ணெயையும் பாலையும் உட்கொண்டார், அவர் உட்கொள்ளவில்லை யென்பதையும் அறிந்துகொள்ளவில்லை. பின்னர் எல்லோரும் யமுனையைக் கடந்து சென்றார்கள். இக் கதையால் ஆத்ம ஞானத்தில் திடமான நம்பிக்கை யுள்ளவர்கள், சொற்ப ஞான சாதனத்தினாலும் அதனை யடைந்துவிடுவார்க ளென்பதையும், அந்த சக்தியைப் பெற்றவர்களுக்கு எதுவும் சுலபமாக முடிய மென்பதையும், சிற்றறிவுடையார் அந்த உண்மைகளை அறியமாட்டார்க ளென்பதையும் நன்குணர்ந்து கொள்ளலாம். சுபம்!

ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச ரத்தினங்கள்

சம்பூர்ணம்.

வெ
ஆத்
எஸ்
செ
பாஷ் EDITION] [1000 COPIES

ரிப்பன் புஸ்தகசாலை, 87, தம்புசெட்டி வீதி, சென்னை

ஸ்ரீ விவேகாநந்த விஜயம்: ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் திவ்விய சரித்திரமும், அவர் செய்த அற்புதமான பிரசங்கத் திரட்டும்: விலை ரூபா 1-12-0

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்: ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் குருமூர்த்தியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் திவ்விய சரித்திரமும், கதாமிர்தமும், உபதேச வாக்கியங்களும்: ரூபா 1-4-0

ஸ்ரீ சங்கர விஜயம்: ஆதி சங்கராசாரியர் திவ்விய சரித்திரம்: (ஸ்ரீ சங்கர், ஸ்ரீ சாரதாம்பாள் படங்களுடன்) ரூபா 1-4-0

ஸ்ரீ ராமாநுஜ விஜயம்: விசிஷ்டாத்வைத மத ஸ்தாபகராகிய ஸ்ரீ ராமாநுஜாசார்யரின் விரிவான சரித்திரம்: விலை ரூபா 2

ஸ்ரீ ராமகிருஷ்ணர் விரிவான சரித்திரம்: ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜனனமுதல் மஹா சமாதி வரையில் உள்ள விரிவான சரித்திரம்: விலை ரூபா 2

ஸ்ரீ விவேகாநந்தர் விரிவான சரித்திரம்: ஸ்வாமிகளைப்பற்றி இதுவரையில் தமிழில் வெளிவராத அநேக அற்புத சம்பவங்கள் சாட்டப்பட்டுள்ளன: விலை ரூபா 2

திவ்விய தேச யாத்திரையின் சரித்திரம்: ஆரிய தேசமாகிய நமது இந்தியாவிலுள்ள திவ்விய ஸ்தல, திவ்விய தீர்த்த, திவ்விய பர்வதாதிகளின் மஹிமையும் விசேஷங்களும்: முதல் பாகம் (வட தேசங்கள்) விலை ரூபா 2

தக்ஷிண இந்தியா சரித்திரம்: டிஷ 2-ம் பாகம்(தென் தேசங்கள்) விலை ரூபா 5

மஹாதேவ மாலை, சற்குருமணி மாலை, முத்தி உபாயம், ஸ்துதி மஞ்சரி: (சிதம்பரம் இராமலிங்க ஸ்வாமிகள் இயற்றி யருளிய திருவருட்பாவில் அடங்கிய அரிய பாடல்கள்): விலை அணு 2

அரிச்சந்திர புராண வசனம்: அரிச்சந்திர புராண மூலத்தை அநுசரித்துத் தமிழில் நூதனமாக வசனப்படுத்தப்பட்ட அரிய நூல்; இனிய நடையில் கலை விரிவாக அமைந்தது: நூபா 1-8-0